DIGITIZED

T.N.L.C Debates

Official Report

Vol: 226 No 1, 2, 3

1986

D
V211,32'N86
N86:226:1-3
143557

948/87.

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

சனிக்கிழமை மே 10, 1986-தொகுதி 226 எண். 1

Saturday 10th May, 1986-Volume 226 No. 1

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.00]

தமிழ்நாடு ... செப்பக நூலகம்
14357
சென்னை-600 009.

D
V 21/32 1986
N86 . 226 . 1-3

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

சனிக்கிழமை, 1986 மே 10.

சித்திரை 27, அட்சய திருவள்ளுவராண்டு—2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிடாத வினாக்கள்.

#### பொது நூலகத்துறைக்கு நூல்கள்.

12. வினா திரு. அ. ப. சிவராமன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

1984-85 ஆம் ஆண்டு, பொது நூலகத்துறைக்கு நூல்கள் வாங்குவதற்கு மட்டும் அரசால் ஒதுக்கப்பட்டு, செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை:

அரசால் 1984-85-ம் ஆண்டு நூல்கள் வாங்க ரூபாய் 11 இலட்சம் அனுமதிக்கப்பட்டது. அதில் ரூ. 10.97 இலட்சம் ரூபாய் அளவுக்கு நூல்கள் வாங்க செலவழிக்கப்பட்டிருக்கிறது.

#### தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் சிறையிலுள்ளவர்கள்.

13. வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

29—7—1985 அன்றுள்ளபடி, தடுப்புக்காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, தமிழக சிறைச்சாலைகளில் எத்தனை பேர் அடைக்கப்பட்டிருந்தனர்?

விடை .

29—7—1985 அன்றுள்ளபடி, 564 நபர்கள் தடுப்புக்காவல் சட்டங்களின் படி கைது செய்யப்பட்டு, தமிழக சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

**வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்தும் வேலையில்லாமலிருப்போர்.**

14. வினா—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மறுவாழ்வு-வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

1—10—1985 அன்றுள்ளபடி, தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வேலையில்லாமலிருக்கும், முதுநிலைப் பட்டதாரிகள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், பல்தொழிற் பயிற்சி சான்று பெற்றவர்கள், நிலை வாரியாக எத்தனை பேர்?

விடை :

1—10—1985 அன்றுள்ளபடி, தமிழ் நாட்டில் வேலை வாய்ப்பகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வேலைக்காகக் காத்திருப்பவர்கள் :—

| | |
|---|---|
| முதுநிலைப் பட்டதாரிகள் | 31,523 |
| பட்டதாரிகள் | 1,26,576 |
| முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் | 2,031 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 14,153 |
| இடைநிலை ஆசிரியர்கள் | 6,757 |
| இளநிலை ஆசிரியர்கள் | 271 |
| அனைத்து மொழி ஆசிரியர்கள் | 3,436 |
| உடற்பயிற்சி ஆசிரியர்கள் | 2,022 |
| இசை ஆசிரியர்கள் | 246 |
| மற்ற ஆசிரியர்கள் (உடல் ஊனமுற்றோருக்கான ஆசிரியர்கள் ஓவிய ஆசிரியர்கள் முதலியோர்) | 689 |
| கைவினைஞர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 5,222 |
| பலதொழில் பயிற்சிச்சான்று பெற்றவர்கள் (என்.டி.சி. மற்றும் என்.ஏ.சி.) | 54,882 |
| மொத்தம் | 2,47,808 |

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒழுங்குப் பிரச்சினை.

**வானொலிச் செய்தியில் சட்ட மன்ற நிகழ்ச்சிகள் தவறாக ஒலி பரப்பப்படுவது குறித்து,-வானொலி நிலைய இயக்குநரின் விளக்கம் பற்றி.**

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மேலவையில் 3—4—1986, 4—4—1986 மற்றும் 17—4—1986 ஆகிய நாட்களில் மேலவை நிகழ்ச்சிகள் வானொலியில் தவறான தகவல்களுடன் விமர்சிக்கப்பட்டன எனவும், மேலவைத் தலைவர் அவையில் 16—4—1986 அன்று தலைமை ஏற்று நடத்த அவைக்கு வராதது போலவும் ஒலிபரப்பப்பட்டது எனவும் திரு. ஆர். டி. சீத்தாபதியும், திரு. க. மீனாட்சிசுந்தரமும் மற்றும் பல உறுப்பினர்களும் ஒழுங்குப் பிரச்சினைகளை அவையில் எழுப்பினர். அதன் மீது சென்னை வானொலி நிலைய இயக்குநருக்கு எழுதி, அவரது விளக்கம் கேட்டும், இயக்குநரை நேரடியாக அழைத்து விளக்கம் கேட்டும், எனது தீர்ப்பினை வழங்குவதாக 17—4—1986 அன்று தெரிவித்தேன்.

அதன்படி, சென்னை வானொலி நிலைய இயக்குநருக்குக் கடிதம் எழுதியதில் அவர், அவருடைய 19—4—1986 தேதியிட்ட தமது பதில் கடிதத்தில், தற்காலிகமாக இப்பணியை மேற்கொண்ட இரு பத்திரிக்கை நிருபர்கள் அவையில் நிகழ்ந்ததைக் குறித்து இரு செய்திகள் எழுதித் தந்ததாகவும், அவற்றில் இத்தவறுகள் ஏற்பட்டதாகவும், தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்தும் மாண்புமிகு தலைவர் அவர்களிடமும், மாண்புமிகு மேலவை உறுப்பினர்களிடமும் தங்களுக்கு அளவிடற்கரிய மதிப்பும் மரியாதையும் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்வதாகவும், மாநிலச் செய்தி நிலையத்தில் பணிபுரிபவர்களிடம் தற்காலிக ஒப்படைப்பின் கீழ் எழுதித் தரும் விமரிசனங்களை சரியான முறையில் ஆய்ந்தறிய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், இனிமேல் வானொலி நிலையம் தனது சொந்த செய்தி சேகரிப்பாளர் ஒருவரையும் மேலவைக்கு அனுப்பி இது போன்று தவறுகள் இனிவரும் காலங்களில் நிகழாவண்ணம் தடுக்கப்படும் எனவும் மாண்புமிகு தலைவர் அவர்கள் இம்முறை நிகழ்ந்த பிழையினை பொறுத்தருள வேண்டுகிறேன் எனவும் கூறியிருந்தார்.

சென்னை வானொலி நிலைய இயக்குநர் என்னை 25—4—1986 அன்று நேரிலும் சந்தித்து மேற்கூறிய நிலைமையை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்கூறி, ஏற்பட்ட நிகழ்வுகளுக்கு வருந்துவதாகவும் தெரிவித்தார். மேலும், தற்போது சென்னை வானொலி நிலையம் தனது சொந்தப்

[மாண்புமிகு மேலவைத் தலைவர்]　　[1986 மே 10

பொறுப்பில் ஒரு நிருபரை அனுப்பி மேலவைச் செய்திகளை சேகரிப்பதாகவும் மேலதிகாரிகளையும் அப்போதைக்கப்போது அனுப்பி கண்காணிக்கும்படியும் ஏற்பாடு செய்துள்ளதாகவும் விளக்கமளித்தார்.

எனவே, இப்பிரச்சினையை இத்துடன் முடித்துவிடலாமென எண்ணுகிறேன். இனியும் இதுபோன்ற நிகழ்வுகள் ஏதும் நடைபெறாமல் வானொலி நிலையத்தார் நடந்து கொள்வர் என நம்புகிறேன்.

## 3. அறிவிப்புகள்.

### (1). அலுவல் ஆய்வுக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவை விதி 166-ன் படி, 1986-87 ஆம் ஆண்டுக்கான அலுவல் ஆய்வுக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :

1. மாண்புமிகு மேலவைத் தலைவர் (தலைவர்).
2. மாண்புமிகு மேலவை முன்னவர்.
3. மாண்புமிகு துணைத் தலைவர்.
4. திரு ஜேப்பியார், அரசுக் கொறடா.
5. டாக்டர் மு. கருணாநிதி.
6. திரு. எம். பி. சுப்பிரமணியம்.
7. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.
8. திரு. ப. மாணிக்கம்.
9. திரு. வி. வி. ஸ்ரீ. ஆனந்தம்.

மாண்புமிகு முதல் அமைச்சர், மாண்புமிகு நிதி அமைச்சர் ஆகியோர் நிரந்தர அழைப்பாளர்களாக இக்குழுவில் அங்கம் வகிப்பர்.

### (2) விதிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மேலவை விதி 192-ன் படி 1986-87 ஆம் ஆண்டுக்கான விதிக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :

1. மாண்புமிகு மேலவைத் தலைவர் (தலைவர்).
2. மாண்புமிகு திரு. இராம. வீரப்பன், செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் (மேலவை முன்னவர்).
3. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



1986 மே 10]　　[மாண்புமிகு மேலவைத் தலைவர்]

4. மாண்புமிகு திரு. ஜி. சுவாமிநாதன், மேலவைத் துணைத் தலைவர்.
5. திரு. ஜேப்பியார், அரசுக் கொறடா.
6. டாக்டர் மு. கருணாநிதி.
7. திரு. எம். பி. சுப்பிரமணியம்.
8. திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.
9. திரு. ப. மாணிக்கம்.
10. திரு. என். சி. இராகவாச்சாரி.
11. திரு. எஸ். இராகவானந்தம்.
12. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
13. திருமதி வி. ஜெயலட்சுமி.
14. திரு. அ. மயில்சாமி.

### (3) ஆளுநரிடமிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: ஆளுநர் அவர்கள் தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### (4) பேரவையிலிருந்து செய்தி.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்டு, சட்டமன்ற மேலவையின் இசைவிற்காக மாண்புமிகு பேரவைத் தலைவரால் கையொப்பமிட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவின் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986) பிரதிகளை மாண்புமிகு பேரவைத் தலைவரிடமிருந்து பெற்றுள்ளேன்.

(முற்பகல் 10.05)

## 4. கவன ஈர்ப்பு.

**சேலம் நகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்களிடம் பணப் பிடித்தம் செய்யப்பட்ட ஆயுள் காப்பீட்டுறுதி பணத்தை 1985 மே மாதம் ஆயுள் காப்பீட்டுறுதிக் கழகத்தில் செலுத்தாதது குறித்து.**

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :—

"சேலம் நகராட்சியில் பணிபுரியும் ஆசிரியர்களிடம் பணப் பிடித்தம் செய்யப்பட்ட ஆயுள் காப்பீட்டுறுதி பணத்தை 1985 மே மாதம் முதல் ஆயுள் காப்பீட்டுறுதிக் கழகத்தில் செலுத்தாதது குறித்து."

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஒரு விளக்கமான அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, குடும்ப நலப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஆசிரியர்கள், அலுவலர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படுகின்ற தொகையிலே செப்டம்பர் முதல் மார்ச் வரையில் ரூ. 58,903.25 காசுகள் ஆயுள் காப்பீட்டுறுதிக் கழகத்தில் கட்டவில்லை என்பது ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொகை 2—5—1986-ல் செலுத்தப்பட்டு விடுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர்களோ, அலுவலர்களோ 3 ரூபாய் வீதம் அந்த குடும்பப் பாதுகாப்பு நலத் திட்டத்திற்கு செலுத்துகின்ற தொகை காலத்திலே செலுத்தப்படவில்லை என்று சொன்னால், அப்படிச் செலுத்தாத காலத்திலே அவர்கள் இறந்துவிட்டார்கள் என்று சொன்னால், 20 ஆயிரம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்குக் கிடைக்காது என்பதை அரசு அறியும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அந்தப் பணத்தைத் தவறாகப் பயன்படுத்தியவர்கள் யார்? இதுவரை கட்டாததற்குரிய காரணம் என்ன? அவர்கள் கட்டாததற்குக் காரணம் அலுவலர்கள் கேட்கவில்லை என்று சொன்னால், இவர்கள் செலுத்தக் கடமைப்பட்டவர்களே. ஆகவே அதைத் தவறாகப் பயன்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா அல்லது எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, விவர அறிக்கையில் முழு விபரமும் தரப்பட்டிருக்கிறது. ஆயுள் காப்பீட்டுக் கழக கேட்புப் பட்டியல் பெறப்படாத ஒரு நிலை இருந்து வந்தது. பட்டியல்

@ 131 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



சரிவர இல்லாததால், அது திருத்தப்படாமல் தாமதம் ஏற்பட்டது. அந்த முழுத் தொகையும் 58,903. 25 ரூபாய் 8—5—1986 அன்று செலுத்தியாகி விட்டது. எனவே அந்தப் பிரச்சினைக்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, இந்த ஆயுள் காப்பீட்டுறுதிக் கழகத்தில் குடும்பப் பாதுகாப்பு நலத் திட்டத்திற்கு உள்ள அந்தத் தொகை மட்டுமல்ல, ஆசிரியர்களுடைய பணத்திலே எல்.ஐ.சி.க்காகத் தனியாகச் செலுத்துகின்ற அவர்களுடைய உயிர்களுக்குப் பாதுகாப்புத் தருகின்ற தனித் திட்டம் இருக்கிறது. அதற்காகவும் பணம் பிடித்தம் செய்து கட்டப்படுகிறது. அப்படிப்பட்ட பணமும் பிடித்தம் செய்யப்பட்டதா, செலுத்தப்பட்டதா என்ற விவரம் இதில் இல்லை. இதுபோல் மற்ற நகராட்சிகளிலேயும் தவறுகள் நடைபெற்றிருக்கின்றனவா என்று அரசு ஆய்ந்து எல்லா வகையிலும் எந்த நகராட்சியிலும் இப்படிப்பட்ட தவறுகள் நிகழாவண்ணம், தவறுகள் நிகழ்ந்திருந்தால் அதைக் களையும் வண்ணம் உரிய நடவடிக்கையை உரிய காலத்தில் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** துணைத் தலைவரவர்களே, 1—6—1986 லிருந்து ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக ஆகப் போகிற காரணத்தால், இந்தப் பிரச்சினையை ஆய்வதற்கும், ஆராய்வதற்கும் அவசியமில்லாமல் போய்விட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசின் தீர்மானங்கள்.

(1) உரிமைக் குழுவிற்கு ஒன்பது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** துணைத் தலைவரவர்களே,

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156-வது விதியின்படி 1986-87 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை :

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 156 வது விதியின்படி 1986-87 ஆம் நிதியாண்டிற்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஒன்பது உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 1986-87 ஆம் நிதியாண்டுக் குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக 9 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை தலைவரவர்கள் வரையறுத்துள்ளார்கள்.

வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும் நேரமும்—13—5—1986 நண்பகல் 12-00 மணி.

வேட்பு மனுக்களைச் சரி பார்ப்பதற்கான நாளும் நேரமும்—13—5—1986, பிற்பகல் 1 மணி.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும்—13—5—1986, மாலை 5-30 மணி.

வேட்புமனுக்களை செயலாளர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படவிருக்கும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 9 பேர்களுக்கு மேற்படுமாயின் தேர்தல் நடைபெறும். தேர்தல் எதுவுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(2) அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** துணைத் தலைவரவர்களே, "தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173-வது விதியின்படி 1986-87 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்'''' ' " என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"தமிழ் நாடு சட்டமன்ற மேலவை விதிகளைச் சேர்ந்த 173 வது விதியின்படி 1986-87 ஆம் நிதியாண்டிற்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி ஆறு உறுப்பினர்களை மாண்புமிகு மேலவைத் தலைவர் நிச்சயிக்கக்கூடிய நாளன்று இந்த அவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** 1986-87 ஆம் நிதியாண்டிற் குரிய அவைக் குழுவிற்கு ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலுக்கு கீழ்க்காணும் நிகழ்ச்சி நிரலை தலைவரவர்கள் வரையறுத்துள்ளார்கள்.

வேட்பு மனுக்கள் வரப்பெறுவதற்கான நாளும், நேரமும்—13—5—1986, நண்பகல் 12 மணி.



வேட்பு மனுக்கள் சரி பார்ப்பதற்கான நாளும், நேரமும்—13—5—1986 பிற்பகல் 1 மணி.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான நாளும், நேரமும்—13—5—1986, மாலை 5-30 மணி.

வேட்புமனுக்களை, செயலாளர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். நியமனம் செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 6 பேர்களுக்கு மேற்படுமாயின் தேர்தல் நடைபெறும். தேர்தல் எதுவுமிருப்பின் வாக்குப் பதிவு நடைபெறும் நாளும், நேரமும் பின்னர் அறிவிக்கப்படும்.

(முற்பகல் 10-10)

6. தகவல் கோரல்.

தமிழ்நாட்டில் சட்டமன்ற மேலவை ஒழிப்பு பற்றி.

**திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றப் பேரவையில் சட்டமன்ற மேலவை ஒழிப்பு உண்டா இல்லையா என்பதைப்பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதில் கூறியிருந்தாலும்கூட, இன்று காலை பத்திரிகை களில் 13 ஆம் தேதி அப்படிப்பட்ட "மசோதா" சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று செய்தி வந்திருப்பதை அடுத்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேலும் ஏதாவது விளக்கம் தர முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் அது எழுப்பப்பட்டபோதே திட்ட வட்டமான செயற்குறிப்பு, நேற்று அந்த நோக்கில் அந்த நிலையில் இல்லை என்று தெளிவாகவே நான் குறிப்பிட்டேன். கொள்கை அளவில் அதுபற்றிய ஒரு எண்ணம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய செயற்குறிப்பு முன் வருமானால், இரண்டொரு நாளில் அதுபற்றிய முடிவு ஏற்படும். முடிவு ஏற்பட்ட பிறகுதான், அதுபற்றிய உறுதியான தன்மைகள் ஏற்படும். ஆகவே, அப்படி வந்த பிறகு நிலைமைகள் தெளிவாக்கப்படும்.

5. அரசின் தீர்மானங்கள்.

(3) தமிழ் நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

---

@-132—223 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1986 மே 10

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமைபற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

கொள்கை விளக்கக் குறிப்பின்மீது நடக்க வேண்டிய விவாதத்திற்கு என்று இரண்டு மணி நேரமும் நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது நடக்க இருக்கும் விவாதத்திற்கு ஒரு மணி நேரமும் ஒதுக்கப்படும் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, இதற்கு ஏற்ப ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் தொழிலாளர்களுடைய நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது சில கருத்துக்களை நான் சொல்லுவதற்கு தங்களுடைய அனுமதியோடு அவையின் முன் நிற்கிறேன் . . .

## 7. கவி இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 125-வது பிறந்த நாள் விழாவினையொட்டி பாராட்டு.

**திரு. சி. இராமலிங்கம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 125 ஆம் ஆண்டு நிறைவு விழாவினையொட்டி நேற்று நாடு முழுவதும் அவரைப் பற்றி சிறப்பான முறையில் கொண்டாடி, நினைவாஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். நம்முடைய மேலவையிலும் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தி அவர் இந்த நாட்டுக்கு ஆற்றிய பணிகள் குறித்தும், சீர்திருத்தக் கவிதைகள் குறித்தும், சுதந்திர வேட்கையை உண்டாக்குவதற்கான முறையில் பாடல்களை உருவாக்கித் தந்தமை குறித்தும் நன்றி தெரிவிக்கும் வகையில் இன்றைய நிகழ்ச்சியில் இடம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய 20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் கவிஞரான இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 125-வது



1986 மே 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பிறந்த நாள் விழா நேற்றையதினம் நாடெங்கும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது. இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் தனது கவிதைத் திறமையால் உலகத்தில் இருக்கிற பேரறிஞர்கள் பலருடைய பாராட்டுதல்களையும் போற்றுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகத் திகழ்ந்தார்கள் என்பது மட்டுமல்ல, இலக்கியத்திற்காக என்றே தனியாக, நோபல் பரிசு பெறத் தக்க அளவுக்கு தமது கவிதைத் திறமையைக் காட்டினார்கள். அவர் எழுதிய கீதாஞ்சலி என்ற இலக்கியத்திற்காகத்தான் அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. அவருக்குப் பிறகு இலக்கியத்திற்கு என்ற வகையில் நோபல் பரிசை இந்தியாவைச் சார்ந்தவர்கள் யாரும் இதுவரை பெறவில்லை. அவர்கள் எழுதிய பாடல்தான் இந்தியாவின் நாட்டுப் பண்ணாகத் திகழ்கிறது.

(முற்பகல் 10-15)

'ஜனகணமன' என்ற அந்த நாட்டுப் பண் என்றென்றும் இந்திய மக்களுக்கு உற்சாகம் ஊட்டக்கூடிய வகையில், பெருமை தரக்கூடிய வகையில் அமைந்த ஒன்றாகும். அவரை அண்ணல் காந்தியடிகளும் மிகச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். உலகத்திலே இருந்த சிறந்த பெரும் கவிஞர்கள் மற்றவர்களோடு தொடர்பு கொண்டவர். பல முறை உலக நாடுகளுக்கெல்லாம் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சிறந்த முறையில் வரவேற்பையும், பாராட்டையும் பெற்றவர். இயற்கை சூழ்நிலை அடிப்படையில் இந்த நாட்டுக் கல்விமுறை அமைய வேண்டும் என்பதற்காக பெரு முயற்சி எடுத்து 'சாந்தி நிகேதன்' என்ற ஓர் இயற்கை அமைப்பை உருவாக்கி அதனைச் சிறப்பாக நடத்தியவர். மேநாட்டில் உள்ள கல்வி முறைக்கு வேறுபட்ட கல்வி முறையை உருவாக்குவதன் மூலம்தான் உண்மையான ஆற்றல் மிக்கவர்களை உருவாக்க முடியும் என்ற வகையில் முயன்று சிறந்த வெற்றி கண்டவர். இப்படி பல்வேறு சிறப்புகளுக்கு உரிமையாக விளங்கியவரின் 125-வது பிறந்த நாள் விழாவை நாடே கொண்டாடுவதில் நாம் பெருமகிழ்ச்சியுற்றோம். அந்த முறையில் சட்டமன்றப் பேரவை தன்னுடைய அஞ்சலியை மிகச் சிறப்பாகத் தெரிவித்தது அந்த வகையிலே சட்டமன்ற மேலவையும் தன் வணக்கத்தையும், அஞ்சலியையும் தெரிவிக்கிற வகையில் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் இந்த அவையின் சார்பாக ஒரு குறிப்பை எடுத்துச் சொல்வது எல்லா வகையிலும் பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** மறைந்த பெரியவர், உலகப் புகழ் பெற்ற கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 125-வது பிறந்த நாளை இன்றைய தினம் உலகம் கொண்டாடுகிற நேரத்தில் இந்த மேலவை தன்னுடைய வணக்கத்தையும், அஞ்சலியையும் செலுத்திக் கொள்கிறது.

5. அரசின் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

## தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றி கொள்கை விளக்கக் குறிப்பு—தொடர்ச்சி.

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது சில கருத்துக் களைச் சொல்ல முன்வருகிறேன். தொழிலாளர் நலன் துறையின் தலையாய பொறுப்பு இங்கு தொழில் அமைதி சூழ்நிலை நிலைபெறச் செய்வதாகும் என்று இந்தக் குறிப்பிலே காணப்படுகிறது. இவ்வரசு தொழிலாளர் நலன் காக்கும், தொழிலாளர் மீது கனிவு காட்டும் கொள்கையைப் பின்பற்றி வந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஓர் அரசாங்கம் இப்படித் தான் இருக்கவேண்டும். இப்படித்தான் செயல்பட வேண்டும் என்பது நம் அனைவருடைய விழைவாகும். ஆனால் இந்த ஏட்டிலே உள்ள வாசகத்திற்கு மாறாக, இந்த அரசு நடைமுறையில் தொழிலாளர் விரோதப் போக்கைப் பின்பற்றி, இயற்றப்பட்டுள்ள சட்டத்தை அமுல்படுத்தாத சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை மெத்த வருத்தத்துடன் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். தொழிலாளர் நலன் என்று பேசுவது வாய் அளவிலே மட்டும் இல்லாமல், செயல் அளவிலே இருக்க வேண்டும். சட்டத்தை இயற்றி னால் மட்டும் போதாது. சட்டத்தை விளம்பரப்படுத்துவதால் மட்டும் தொழிலாளர்கள் திருப்தி அடைந்துவிட முடியாது. அதை நடைமுறைப் படுத்தினால்தான் பயன் அடைய முடியும் என்பதற்காக ஒரு உதாரணத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அரசு, 'இன்டஸ்ட்ரியல் எஸ்டாபிலிஷ்மெண்ட் ஆக்ட் ஆஃப் 1981' என்ற ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. அதாவது, 'கன்பெர்மென்ட் ஆப் பெர்மெனென்ட் ஸ்டேடஸ் பார் ஒர்க்ஸ்மென்' என்று ஒரு சட்டத்தை நிறை வேற்றியது. அதன் படி ஒரு தொழிலாளி 24 மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்திருந்தால் . . .. .

**திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவர் அவர்களே, 'ஒர்க்ஸ் மென்' என்ற வார்த்தை கிடையாது: 'கன்பெர்மென்ட் ஆப் ஒர்க்ஸ்மென்' என்று வார்த்தை வராது. ஆகவே அது சரியல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அது என்ன வார்த்தை என்றும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.



**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஓர் உறுப்பினர் பேசும் போது மற்றொரு உறுப்பினர் அமர வேண்டும். இரண்டு பேரும் நிற்பது சரியல்ல. அவர் அமைச்சரல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இதற்கென்று அமைச்சர் இருக்கிறார். அவர் பதில் சொல்வார். அவர் அமைச்சர் என்ற நினைப்பிலேதான் கேட்கிறார்.

**திரு. எஸ். இராகவானந்தம்:** 'ஒர்க்ஸ்மென்' என்ற வார்த்தை அல்ல. சரியான வார்த்தையைப் புரிந்துகொண்டு பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அவருக்குப் புரியவில்லை என்றால், அனை வருக்கும் புரியும் என்று கருதுகிறேன். ஆகவே 24 மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்தால் போதும். அவர் அந்த வேலையில் நிரந்தரப்படுத்தப்பட்டு அந்த வேலைக்குரிய ஊதியத்தைப் பெற வேண்டும். இதுதான் அந்தச் சட்டத்தின் ஷரத்து. இந்த அரசு இதய சுத்தியோடு இதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறதா என்றால், இல்லை.

போக்குவரத்துத் துறை இருக்கிறது. அதிலே ஓட்டுநர்கள், நடத்துநர்கள் இருக்கிறார்கள். பல ஆண்டுக்காலமாக தினக்கூலிகளாக அங்கே இருக் கிறார்கள். அவர்கள் 24 மாதங்களில் 480 நாட்கள் வேலை செய்தால் போதும். அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.

(முற்பகல் 10-20)

இது சட்டம். ஆனால் அரசே நடத்துகின்ற போக்குவரத்துத் துறையில் ஓட்டுநர், நடத்துனர் பல ஆண்டுகளாக நிலை. அதில் 'அப்பிரண்டிஸ்' ஆகவே தொகுப்பூதியம் 'கன்சாலிடேட்டட் பே' என்று வாங்கிக்கொண்டு கொத்தடி மைகளாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அரசு தான் விதிக்கின்ற சட்டத்திற்குத் தானே மதிப்பளிக்கின்றதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலே பணியாற்றும் பயிற்சிப் பட்டியல் எழுத்தர்கள் இந்த நிறுவனத்தில் ஓராண்டுக் காலம் ஆன பின்னாலே அவர்கள் நிரந்தரப்படுத்தப்படுவார்கள் என்று குறிப்பில் இருக் கின்றது. ஆனால் அவர்கள் ஆறாண்டுக்காலம் பணியாற்றிய பின்னரும் ரூ. 200 தொகுப்பு ஊதியம், 'கசாலிடேட்டட் பே' என்று வாங்கிக்கொண்டு, பணி யாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் நிரந்தரம் செய்யப்படவில்லையே. இந்த அரசு இயற்றிய சட்டம் என்ன ஆயிற்று? கடைசியிலே சட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டார்களா?

கடைக் குமாஸ்தாக்களுக்குக் கூட குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு ரூ. 210 முதல் ரூ. 240 வரையில் வழங்க வேண்டும் என்று சொல்லி, அரசு சட்டமியற்றி இருக்கின்றது. அப்படி இருந்தும், அந்த அரசுத் துறையிலே பணியாற்று கின்ற இவர்களுக்கு ரூ. 200 மட்டுமே தரப்படுகின்றது. ஆகவே அந்தச் சட்டம் என்ன ஆயிற்று என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது, நவீன அரிசி ஆலைகள். அந்த அரிசி ஆலைகளிலே அவைகள் நிறுவப்பட்ட காலத்திலிருந்து, 10 அல்லது 12 ஆண்டுக்காலமாகப் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள் கொத்தடிமைகளைப்போல நடத்தப்படுகின்றார்கள். கோடைக்கானலில் உள்ள கொத்தடிமைகளுக்குக்கூட நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் கொத்தடிமைகளாக வைக்கப் பட்டு கட்டுப்படுத்தப்படுகின்றார்கள். 10, 12 ஆண்டுகளாக அவர்கள் வேலையில் சேர்ந்த காலத்திலேயிருந்தே கொத்தடிமைகளைப்போல பணியாற்றிக்கொண் டிருக்கின்றார்கள். தொழிற் சங்கத் தலைவர்கள் இந்தச் சட்டத்தைக் காட்டி, 480 நாட்கள் வேலை செய்தால், அரசின் சட்டப்படி பணி நிரந்தரம் செய்து கொடுக்கப்படும் என்பதைக் காட்டி அதை நிறைவேற்றக் கேட்கின்றார் கள். ஆனால் அரசாங்க ஆணையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். வந்தவுடன் நிரந்தரப்படுத்துகிறோம் என்பதுதான் நிர்வாகத்தினர் தந்து கொண்டிருக்கின்ற பதிலாக இருக்கின்றது. அவர்களை நிரந்தரம் செய்யக் கூடிய அளவுக்கு இந்த ஆணையை இந்த அரசு பிறப்பிக்காததற்குக் காரணம் என்ன என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அதிகாரிகள் மெத்தனம்தான் காரணமா? அல்லது அமைச்சர்களுடைய உறக்கம் காரணமா என்பதைப்பற்றி விளக்கம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பினை அரசு மேற் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இருக்கின்றது. அதற்கு சட்டங்கள் இருக்கின்றன. அப்படி இருந்தும் அவர்கள் என்ன செய்ய முடியும்? இவ்வாறு சட்டமே இல்லாத ஆசிரியர்கள், ஊழியர்கள் என்ன செய்ய முடியும்? இந்த நாட்டிலே முதுநிலை ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் முறையே எட்டு ஆண்டுகள், ஆறு ஆண்டுகள், பல ஆண்டு கள் காலமாக பணி நிரந்தரம் செய்யப்படாமல் தற்காலிகமாகவே இருந்து வருகின்றார்கள். அரசுத் துறையிலேயே அரசுச் சட்டத்திற்கு மதிப்பு அளிக் காத நிலைமையில் தனியார் துறையிலே இருப்பவர்களை இச்சட்டத்தை நிறை





வேற்றுமாறு வற்புறுத்த அரசுக்கு என்ன உரிமை இருக்கின்றது என்பதைக் கேட்க விரும்புகிறேன். தொழிலாளர்கள் நலன்களுக்காக என்று சட்டங்கள் இருந்தும் அவர்கள் பழி வாங்கப்படுவதைப் பார்த்தும் ஏனைய துறைகளிலே கூட பழி வாங்குவது தொடர்கிறது. போராடிய மன்ற ஆசிரியர்களுக்கு 21 நாட்களுக்கு ஊதியம் இல்லை. பட்டதாரி ஆசிரியர்கள் போராடிய காலத்தில் 13 நாட்களுக்கு ஊதியம் இல்லை. அரசு ஊழியர்கள் 530 பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றார்கள். செயலக ஊழியர்கள் 35 பேர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளும், எல்லோரும் சேர்ந்து விண்ணப்பங்கள் தந்தும், எடுத்துச் சொல்லியும்கூட, வேண்டியும்கூட, இது வரையிலே அவர்கள் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே தொழி லாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரோடு விரோத மனப் பான்மையோடு இந்த அரசு நடந்து கொண்டிருக்கின்றது என்பதற்கு இதெல்லாம் எடுத்துக்காட்டு என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லி இனியாவது திருத்திக் கொள்ளுங்கள் என்று எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன்.

எங்களிடத்திலே தொழில் வரி வசூலிக்கப்படுகிறது. ஆனால் தொழிற் சங்கங்களுக்கு உரிமை உண்டா என்றால் இல்லை. ஆகவே "தொழிற் சங்க உரிமையை எங்களுக்குத் தாருங்கள்" என்று ஆசிரியப் பெருமக்களுக்காகக் கேட்டுக்கொள்கிறேன். அமைப்பு ரீதியாக உருவாகப்படாத அன் ஆர்கனைஸ்ட் லேபரர்ஸ்க்காக சட்டங்களை இந்த அரசு உருவாக்கியிருக்கின்றது. அதை நான் வரவேற்கிறேன். யாருக்காக அது உருவாக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், தோல் பதனிடு தொழிலாளர்கள், ஓட்டல் தொழிலாளர்கள், பாரம் தூக்கும் தொழிலாளர்கள், தனியார்த் துறை போக்குவரத்துத் தொழிலாளர்கள் போன்றவர்களைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு குறைந்தபட்ச ஊதியம் அவ்வப்போது நிர்ணயிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அச்சட்டங்கள் அமல்படுத்தப்பட்டிருக்கின்றனவா? அதுதான் என்னுடைய கேள்வி. சட்டங்கள் போட்டு பத்திரிகையிலே விளம்பரம் செய்வதோடு சரி. இந்த அரசு மிகப் பெரிய விளம்பரங்கள் போடுகிறதே தவிர, அந்த விளம்பரங் களின் அடிப்படையிலே காரியங்கள் செய்கிறதா என்றால், இல்லை. அரசு இப்படியெல்லாம் சட்டம் செய்கிறோம் என்று பீற்றிக்கொண்டிருக்கிறதே தவிர. . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** தொழிலாளர் நலம் பற்றிப் பேச 2 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் ரொம்ப நேரமாகப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அதனால்தான் வேகமாகப் பேசிக்கொண் டிருக்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: எவ்வளவு நேரம் பேசப் போகின்றார்கள்? இன்னும் 8 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். அப்புறம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல இருக்கின்றார்கள். இருப்பது 105 நிமிடங்கள். ஆகவே இனி பேச இருக்கும் 7 உறுப்பினர்கள் ஆளுக்கு 10 நிமிடங்கள் பேசினால், அதற்கு மேலே அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல நேரம் சரியாக இருக்கும். அதற்கு மேலே அதிக நேரம் பேசினால், நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

(முற்பகல் 10-25)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: துணைத் தலைவரவர்களே, அதற்காகத்தான் வேகமாகப் பேசுகிறேன். ஆக சட்டங்களை அமுல்படுத்தாவிட்டால், சட்டங்கள் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்களுக்குத் தெரியும். குறளிலே ஒரு வரி 'அவியினும் வாழினும் என்' என்பது. அதுபோல அந்தச் சட்டம் வாழ்ந்தால் என்ன, அழிந்தால் என்ன என்றுதான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. தொழிலாளர்களிடையே, தொழிற் சங்கங்களிடையே இந்த அரசு பாரபட்சமாக நடக்கிறது. தொழிற் துறையில் பல்வேறு குழுக்கள் இருக்கின்றன. மிகப் பெரிய அமைப்புகளுக்கு, இயக்கங்களுக்கு, சங்கங்களுக்கு, யூனியன்களுக்கு அதிலே இடம் அளிக்கப்படுகிறதா என்றால் இல்லை. குறுகிய நோக்கத்தோடு, விருப்பு வெறுப்புக்கு இலக்காகி, ஆளுங் கட்சி உறுப்பினர்களுக்கு எல்லாக் குழுக்களிலும் இடம் அளிக்கப்படுகிறது. தோழமைக் கட்சிகளுக்கும்கூட இடமளிப்பதில்லை, ஒன்றிரண்டைத் தவிர. தொழிலாளர் நலத் துறையில் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. காக்காய் பிடிப்பவர்கள், ஆமாம் சாமி போடுபவர்களுக்குத்தான் குழுக்களிலே இடம் என்றால், இந்த அரசு பாரபட்சத்தோடு நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது. 1971-லே தொழிலாளர் நல வாரியம் என்று, தொழிலாளர் நலன்களைப் பாதுகாக்கவும், அவர்கள் நலன்களை உயர்த்தவும் அமைத்தார்கள். அப்போது எல்லாத் தொழிற் சங்கங்களுக்கும் அதிலே இடம் தரப்பட்டது. பின்னர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது, அந்த வாரியத்தை 'ரீகான்ஸ்டிடியூட்' செய்ய வேண்டும். அப்படிச் செய்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தைச்



சேர்ந்த, மிகப் பெரிய, எல்லாத் துறைகளிலும் நிறைய உறுப்பினர்களைக் கொண்ட, அந்த யூனியனுக்கு இடம் அளிக்கப்படவில்லை. மற்ற யூனியன்களுக்கு இடம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். தொழிலாளர் சங்கங்களிடையே பேதம் காட்டுகிறார்கள். எல்லோருக்கும் அதிலே இடம் கொடுக்கிறார்களா என்றால் இல்லை. நேற்றைய முன்தினம் அது மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது. அதை 'ரீகான்ஸ்டிடியூட்' செய்திருக்கிறார்கள். அதிலே அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் 2 பேர்; இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஒருவர்; அ.தி.மு.கவைச் சேர்ந்தவர்கள், வெளியே இருக்கிறவர்கள் 3 பேர், அதிமுக தொழிற் சங்கம், ஐ.என்.டி.யு.சி, ஏ.ஐ.டி.யு.சி., சி.ஐ.டி.யு., டி.எ.டி.யு.சி., இத்தனை சங்கங்களுக்கும் இடமுண்டு. ஆனால் மிகப் பெரும்பான்மையான அங்கத்தினர்கள் கொண்ட, மிகப் பெரிய யூனியனாக இயங்கி வரும், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கு—தொ.மு.ச.வுக்கு இடமில்லை. ஆக, குறுகிய நோக்கத்தோடு அரசு நடந்து கொள்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இதனால் அவர்கள் நலன் குறைந்துவிடப் போவதில்லை. அவர்களுக்கு, உறுப்பினர்களுடைய வலு இருக்கிறது. எதனால் இதைச் சொல்கிறேன் என்றால், குழுக்களுக்கு இது ஒரு இடையூறு. அந்தக் குழு நல்ல முறையில் செயல்பட முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே அதிலே கட்சியைப் பார்க்காதீர்கள். கட்சிக் கண்ணோட்டமின்றி நடந்துகொள்ள வேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து, சிம்சன் தொழிற்சாலைபற்றி எல்லோருக்கும் தெரியும். அது மூடிக் கிடக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அங்கே 12 பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். மேலும் பல கோரிக்கைகளை வைத்து, அவர்கள் போராடுகிறார்கள். எல்லாத் தொழிற்சங்கங்களும் ஆதரவு தந்து, போராட்டம் நடத்தினார்கள். கடைசியில் முதல்வரவர்கள் முடிவுக்கு விடுவது என்பதை இரண்டு தரப்பினரும் ஒத்துக்கொண்டுவிட்டார்கள். மாண்புமிகு கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது, அங்கே போராட்டம் வந்து, அப்போதும் அது முதல்வர் முடிவுக்கு விடப்பட்டது. 360-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டதோடு, கிரிமினல் குற்றங்கள் சாட்டப்பட்டவர்களுக்குக்கூட, அவர்கள் மீது இருந்த வழக்குகள்கூட ரத்து செய்யப்பட்டு, மீண்டும் அவர்களுக்கு வேலை அளிக்கப்பட்டது. ஆனால் இப்போது இதனை மாண்புமிகு முதல்வரவர்களிடம் ஒப்படைத்து எவ்வளவு காலமாகிறது? இது [illegible] முடிவை அறிவிக்கவில்லை, முதல்வரவர்கள் ஒன்றும் தெரிவிக்கவில்லை,

தொழிலாளர் நலனில் இந்த அரசுக்கு அக்கறை இருக்கிறதா? அவர்கள் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வழி வகுத்திருக்கிறார்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன். தொழிலாளர் நலனில் இந்த அரசுக்கு அக்கறை இல்லை என்பதற்காக இதைச் சொல்லுகிறேன். மேலும் தொழிலாளர் பிரச்சினையில் காவல் துறை தலையீடு இருக்கிறது. வேலை நிறுத்தம் செய்ய தொழிற் சங்கங்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த நேரத்திலே லாயல் ஒர்க்கர்ஸ் இருந்தால், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது காவல் துறையின் கடமை. ஆனால் அந்த வேலை நிறுத்தத்தை உடைக்கவும், வேலை நிறுத்தம் செய்பவர்களை மிரட்டவும், சங்கத் தலைவர்களை அச்சுறுத்தவும் போன்ற பணிகளில் காவல் துறை ஈடுபடுகிறது. அரசு தொழிலாளர்களுக்குச் சாதகமாக இல்லை. முதலாளிகளுக்குச் சாதகமாக இருக்கிறது என்பதால், அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். திண்டிவனம் அருகேயுள்ள ஆரோபுட் நிறுவனத்தில் தொழிற் சங்கத் தலைவர் சந்தேகத்திற்கு உரிய முறையில் கொலை செய்யப் பட்டிருக்கிறார். அவர் இறந்திருக்கிறார்.

(முற்பகல் 10-30)

அதுமட்டுமல்லாமல் அங்கே இப்படிப்பட்ட தலையீடுகள், முறைகேடுகள் அதிகமாக இருக்கின்றன. காவல் துறையினர் தொழிலாளர்களுடைய நலனுக்கு விரோதமாக நடக்கும் வகையிலே அரசே இப்படிப்பட்ட நிலைமைகளைத் தோற்றுவிக்கிறது. அதுபோல ஹோசூரிலே இப்படிப்பட்ட தொழிலாளர் நலனுக்கு ஆதரவாக இந்த அரசு இல்லை.

இன்றைக்கு தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பைத் தயாரித்தது அப்போதிருந்த அமைச்சர். இப்பொழுது விடையளிக்க இருப்பது நிதியமைச்சர். அவர் கூட பதவியிலிருந்து ஏன் விலகக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்றால், நான் தெரிந்து கொண்ட வகையில், நான் தகவல் சேகரித்த வகையில் ஒன்றைச் சொல்கிறேன், அவர் முதலாளிகளுக்கு ஆதரவாக பி. & சி. மில் பிரச்சினையில் நடந்து கொள்ளவில்லை. டாட்டாவுக்கு பினாமியாக உள்ள அந்த மில்லில் ஏற்பட்ட தகராறிலே நிர்வாகத்திற்கு ஆதரவாக, அவர்கள் சொன்னதற்கு ஆதரவாக இல்லாமல், இவருக்குத் தெரிந்தவரையில், தொழிலாளர்களுக்காக சாதகமாக சில ஆணைகளைப் பிறப்பித்தார். அதனால் நிர்வாகத்தினர் தலையீடு வந்தது. முதல்வர் அவர்கள் டெல்லிக்குச் சென்றபோது, அவர்கள் முதலாளிடம்





'ரிப்ரசெண்ட்' பண்ணியதால், முதலாளிகளின் வேண்டுகோளை ஏற்று, முதல்வர் தொலைபேசியில் பேசி, அதன் அடிப்படையில் அமைச்சரிடமிருந்து இலாகா நீக்கப்பட்டது என்கிற தகவல் வந்தது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உறுப்பினர் யூகத்தைக் கொண்டு பேசுவது சரியல்ல. முதலமைச்சர் அல்லது விலகிய அமைச்சர் அதுபற்றிச் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் உறுப்பினர் யூகத்தைக் கொண்டு இங்கே பேசுவதாகச் சொன்னால், அது எப்படி சரியாகும்? பொறுப்புள்ள உறுப்பினர் இவ்வாறு பேசுவது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: அதை இத்துடன் விட்டு விடுகிறேன். அடுத்து, மே தினம் கொண்டாடுகிறோம். மே தினம் கொண்டாடுவது மட்டும் போதாது.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: டெல்லிக்கு முதல்வர் போனார். டெல்லிக்குப் போய்ப் பேசினார்கள், முதலாளிகள் போனில் பேசினார்கள் என்பதற்கெல்லாம் என்ன ஆதாரம்? அமைச்சராவது முதலமைச்சராவது அதுபற்றிச் சொல்லியிருக்க வேண்டும். ஆகவே, ஆதாரம் இல்லாமல் உறுப்பினர் இங்கே ஒன்றும் சொல்லக் கூடாது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மே தினத்தன்று விடுமுறை விட முதன் முதலில் அண்ணா காலத்தில் ஏற்பாடு செய்தார்கள். ஆனால் நேஷனல் ஹாலிடேசில் ஒரு நாளை அவ்விடுமுறையாக ஏற்க ஏற்பாடு செய்தார்கள். பிறகு எங்கள் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது மே தினத்திற்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறையை தொழிலாளர்களுக்குத் தந்தார்கள். மேலும் நேஷனல் ஹாலிடேசிலிருந்து ஒரு கல்வி விடுமுறையைக் கழிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சொன்னார்கள். அது தொழிலாளர்கள் நெஞ்சில் பால் வார்த்தது. அப்படி தொழிலாளர்கள் நெஞ்சில் நிலைத்திருக்கக் கூடிய அளவில் இந்த அரசு இதுவரை என்ன செய்திருக்கிறது? இந்த நாடு பூராவும் உள்ள தொழிலாளர்களுக்கும் ஊதியத்துடன் மே தினத்தன்று விடுமுறை அளிக்க வேண்டும், என்கிற வகையில் மத்திய அரசை வற்புறுத்தும் பணியை இந்த அரசு செய்ய வேண்டும்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 மே 10

அதிக நேரம் பணியாற்றிக்கொண்டிருந்த தொழிலாளர்கள், முதலில் 10 மணி நேரமாகக் குறைக்க வேண்டுமென்று போராடினார்கள். பிறகு 10 மணியை 8 மணி நேரமாகக் குறைக்க வேண்டுமென்று சிகாகோவில் தொழிலாளர்கள் போராடினார்கள் என்றெல்லாம் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். என்னைப் பொறுத்தவரையில், இப்பொழுது இருக்கிற நிலைமையில் 8 மணி நேரத்தை 6 மணி நேரம் என்று குறைக்க வேண்டும். இன்றைக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிற நிலையில், விஞ்ஞான யுகத்தில் ஏராளமான இயந்திரங்களை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்திருக்கிறோம். தொழில் நுட்பம் சிறப்பாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. உற்பத்தித் திறனும் சிறப்பாக இருக்கிறது. இதனால் அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு எளிதில் களைப்பு ஏற்படுகிறது. வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. இதன் காரணமாக ஆட்குறைப்பு மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு ஏற்பட்டிருக்கிறது. வேலை நேரத்தை 6 மணி நேரமாக மாற்றினால், ஆட்குறைப்பு என்கிற நிலைமாறி ஓரளவுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுவதாகவும் அமையும். காரணம் மொத்தம் 24 மணி நேரத்தில் வேலை நேரம் 6 மணி என்று மாற்றினால், 4 ஷிப்ட் பணியாற்றலாம். அந்த வகையில் தொழிலில் முன்னேற்றம் ஏற்படுவதுடன், தொழிலாளர்களுக்கு இடையூறு இல்லாமல் அவர்கள் பயனடையக்கூடிய சூழ்நிலையும் உருவாகும். தொழிற்சாலைக்கும் பயன் ஏற்படும். வேலை வாய்ப்பும் பெருகும். வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்யும் நிலையில், அவர்கள் பணி ஆற்றும் பணி நேரத்தையும் கடைப்பிடிக்க முயல வேண்டும். இன்றைக்கு ஜப்பானில் 4 மணி நேரமே பணி! ரஷ்யாவில் 6 மணி நேரம் என்று மாற்றியிருக்கிறார்கள். ஆனால் நாம் 8 மணி நேரம் என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். அதை மாற்றி 6 மணி நேரமாக ஆக்க வேண்டும். இன்றைக்கு தொழிற்சங்க அங்கீகாரத்திற்கென ஒரு சட்டம் தேவை. மகாராஷ்டிராவில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுபோல் என்று சொல்ல மாட்டேன், அதைவிட சிறப்பான ஒரு சட்டம் இங்கேயும் தேவை. எதிர்க்கட்சிக்காரன் சொல்கிறான் என்று கருதக்கூடாது. ஏனெனில் உங்கட்கு எதிர்க்கட்சி என்றாலே 'அலர்ஜி'. எங்கள் தலைவர் இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக வருவதைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருப்பவர்கள் மேலவையையே கலைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாகக்

(முற்பகல் 10-35)

கேள்விப்படுகிறோம். அவ்வாறெல்லாம் செயல்படாதீர்கள். இந்த அவையிலிருந்து ஓய்வு பெறப்போகும் உறுப்பினர்களுக்கு 12 ஆம் தேதி



1986 மே 10] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

பார்ட்டி வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது அவர்களுக்கு மட்டும்தானா, அல்லது அவையில் உள்ள அனைவருக்குமா, அவை முழுவதுமா என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எதிர்க் கட்சியே இருக்கக் கூடாது என்ற நிலைக்கு வந்திருக்கிற அரசு எங்கள் தலைவர் எதிர்க் கட்சித் தலைவராக இருப்பதையே பொறுத்துக்கொள்ள முடியாத நீங்கள் ......

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்த அவையில் எதிர்க் கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஆளுங்கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்கள். அப்படி கலைப்பதாக இருந்தால், அது எல்லோருக்கும்தான். எதிர்க் கட்சி மட்டும் இருக்காது, ஆளுங்கட்சி இருக்கும் என்பது அல்ல. எதிர்க் கட்சி இருக்கக்கூடாது என்பதற்காகவே இந்த அவையைக் கலைக்கப் போவதாகப் பேசுவது சரியல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** எனவே பார்ட்டி நடத்துவது உங்களுக்கும் சேர்த்துதானா என்றுதான் கேட்டேன். இந்த அவையைக் கலைத்தால் டாக்டர் கலைஞருக்கு அரசியல் வாழ்வு கிடையாதா என்ன? இங்கே இல்லையென்றால், அங்கே பேரவைக்கு வந்துவிட்டுப் போகிறோம். அதைக் கலைக்க முடியாதே! அப்படிக் கலைத்தால் நீங்களும் போய்விடுவீர்களே! ஆகவே எதிர்க் கட்சிக்காரர்கள் சொன்னார்களே என்பதற்காகவே இந்தக் கோரிக்கைகளை ஏற்க வேண்டாம் என்று கருதவேண்டாம் என்று சொல்லி,

பலர் வாடிட சிலர் வாழ்ந்திடும் கொடுமையைத் தகர்ப்போம்,
பார் முழுதும் பாட்டாளி ஆட்சிகள் மலர்ந்திட வழியினை வகுப்போம்,
தொழிலாளர்கட்கு 6 மணி நேர வேலையாகக் குறைப்போம்,

அமைப்பு ரீதியாக இயங்க முடியாத அனைத்துப் பிரிவு தொழிலாளர்கட்கும் குறைந்த பட்ச ஊதியம் கிடைத்திட அறப்போர் தொடுப்போம்,

இந்தியா முழுவதும் ஊதியத்தோடு மே தின விடுமுறை விடப் பாடுபடுவோம்.

என்று எங்கள் தலைவர் மே தின நாளிலே தந்துள்ள ஐந்து முழக்கங்களை நினைவுபடுத்தி, இந்தக் கொள்கைக் குறிப்பின் மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமைகிறேன்.

**திரு. க. சுப்பு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு பற்றி, ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

[திரு. க. சுப்பு] [1986 மே 10

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பேட்டில் இந்தத் துறையின் தலையாய பொறுப்பு, தொழில் அமைதி நிலவச்செய்வது என்று சில வரைமுறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான பொது நன்மையைக் கருதி, தொழிலாளர்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் இடையே சுமுகமான நல்லுறவு நிலைநிறுத்தப் பாடுபடுவதையே துறை தனது நடவடிக்கைகளிலும் பணிகளிலும் வழிகாட்டும் அடிப்படை நெறியாக மேற்கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

அதேபோல், இரண்டாவது பக்கத்தில் தொழிலாளர் நலக்கொள்கை பற்றிச் சொல்லும்போது, பல்வேறு தகவல்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூறிய சில அடிப்படைக் கருத்துக்கள் எல்லோருக்கும் தொடர்பானவையாக இருக்கின்றன. எல்லோருக்கும் உடன்பாடானதுதான். அதிலே வித்தியாசம் இல்லை, சங்கங்களை அங்கீகரிப்பது, அதற்கு முத்தரப்புக் குழுக்களில் அங்கம் வகிக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுப்பது போன்றவைகள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடியவைதான். சங்கங்களை அங்கீகரிக்கிறதைப் பொறுத்த வரையில், சில மாநிலங்களில் தொழிற் சங்கங்களை அங்கீகரிப்பதற்கு சட்டம் இருக்கிறது. நம்மைப் பொறுத்த வரையில், அப்படியொரு சட்டமில்லை. அப்படி ஒரு சட்டம் இருக்க வேண்டும். அப்படி இல்லாததால், அங்கே பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. தேர்தலில்கூட அப்படி பிரச்சினைகள் வருகின்றன. தொழிலாளர்கள் சுரண்டப்படுவது நிர்வாகத்தினால் என்பது ஒரு காலத்தில் இருந்தது. இப்போது தொழிற் சங்கத் தலைவர்கள் என்று மாறியிருக்கிறது. பல இடங்களில் தொழிற் சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களைத் தவறான வழியில் அழைத்துச் செல்கிறார்கள். அதிலும் சில பேர் தொழிற் சங்கத்தையே தங்கள் தொழிலாக வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு வேறு தொழில் கிடையாது. அப்படியானால் எப்படியாவது தாங்கள் தலைமை தாங்க வேண்டுமென்று அந்த இடத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக தவறான அடிப்படையில் அவர்கள் வழி காட்டுகிறார்கள். அதனால் பல இடங்களில் பல தொழிற்சாலைகள் மூடப் படுகிற ஒரு வேதனையான நிலைமை ஏற்படுவதை நாம் காண்கிறோம். ஒரு தொழிற்சாலையை மூடுவது அல்லது வேலை நிறுத்தம் நடத்துவது என்பது எந்த அடிப்படையில் ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து பார்த்தால், அதிலே



1986 மே 10] [திரு. க. சுப்பு]

பெரும்பகுதி பல தொழிற்சங்கத் தலைவர்கள் சேர்ந்திருப்பதைக் காணலாம். எப்படியாவது தலைவராக வரவேண்டும், அதுதான் அவர்களுக்கு வேண்டியது. தலைவராக வந்து என்ன செய்தார்கள் என்பது யாருக்கும் தெரியாது. அது ரகசியமானது. வருகிறவரை ஜனநாயகம், வந்தபிறகு வேறு நாயகம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போதெல்லாம், "மாடர்ன் மேனேஜ்மெண்ட்" வந்துவிட்டது. இந்த மேனேஜ்மெண்ட்டில் இருப்பவர்கள் ரொம்ப விபரம் தெரிந்தவர்கள். அரசாங்கத்தை எப்படிக் கைக்குள் போடுகிறார்களோ அதேபோல், எப்படியும் தொழிற் சங்கத் தலைவர்களையும் கைக்குள் போட்டுக்கொண்டுவிடுகிறார்கள். அவர்களைக் கைக்குள் போட்டுக்கொள்வது என்பதில் சிரமமே இல்லை. ஆகவேதான், இப்போது லஞ்சம், ஊழல் பற்றிப் பேசும்போது, முதலில் அரசியல்வாதி பெயர் மட்டும் இருந்தது. இப்போது அதை மாற்றி, தொழிற் சங்கத் தலைவர்களையும் அதிலே கட்டாயம் சேர்க்க வேண்டிய நிலைமை இன்றைக்கு வந்துவிட்டது.

தொழிற் சங்கத் தலைவர்களோ, நிர்வாகமோ அதிகாரிகளை ஏமாற்றுவ தால், எப்படி உற்பத்தி பாதிக்கப்படுகிறது, எப்படி அரசாங்கத்தின் வருமானம் பாதிக்கப்படுகிறது, எப்படி வேலை வாய்ப்புக்கள் இழக்கப்படுகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் காரணமாக இருப்பவர்கள் எப்படி சொத்துக்களைச் சேர்க்கிறார்கள், எப்படி அவைகளைச் சேர்க்கிறார்கள் என்பது வேறு விஷயம். வரிப் பணத்தை எப்படி ஏமாற்றுகிறார்கள், அதை எப்படி சொத்துக்களாக மாற்றுகிறார்கள் என்றும் பார்க்க வேண்டும். இது நடந்துகொண்டே இருக்கிறது. இதுபோன்றவர்கள் தொழிற் சங்கத் தலைவர்களாக வருவது சுயேச்சை என்ற பெயரில்தான் இருக்கும். அதாவது 'சுய இச்சை' என்று இருக்கும். அவர்களைத்தான் நிர்வாகத்தில் இருப்பவர் களும் பிடித்துக்கொள்கிறார்கள். எதையாவது சொல்லி காலதாமதம் செய்தோ, அடியாட்களை வைத்துக்கொண்டோ, காரியங்களை சாதித்துக் கொள்கிறார்கள். பல தொழிற் சங்கத் தலைவர்கள் பெங்களூரில் சொத்துக்கள் வாங்கியிருக்கிறார்கள். கன்னட மொழியில் பத்திரங்கள் பதிவு செய்து கொள்கிறார்கள். அவர்களுக்கு மொழி ஒரு பிரச்சினையல்ல. வரிதான் பிரச்சினை. இங்கே தொழிற் சங்கத் தலைவராக இருந்தவர்கள் அங்கே தொழில் முதலாளிகளாக மாறிவிடுகிறார்கள். ஆகவே அவர்களுடைய போக்குகளும் காரணங்களும் மாறத்தான் செய்யும். இதற்கெல்லாம் ஒரு வழி செய்யவேண்டுமானால், தொழிற் சங்கங்களை முறைப்படுத்த வேண்டும். நம்முடைய நாட்டில் இருக்கிற அத்தனை தொழிற் சங்கங்களையும் அமைத்து

[திரு. க. சுப்பு] [1986 மே 10

பேசி, எப்படி தொழிற் சங்கத் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற வழிமுறையைச் சொல்லியாக வேண்டும். நிர்வாகம் ஒன்றுதான். அதேபோன்று தொழிற் சங்கமும் ஒன்றுதான், பல தரப்பு இல்லை. அதேமாதிரி ஒரே

(முற்பகல் 10-40)

தொழில் சங்கம் தொழிலாளர்களுக்கு இருக்க வேண்டும். தொழிலாளர்கள் விரும்புகிறவர்கள் தலைவர்களாக வர வேண்டும். அதற்கு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதெல்லாம் ஒரு தொழிற்சாலையில் ஏழு பேர் இருந்தால், அவர்கள் ஒரு தொழிற் சங்கம் வைத்துக்கொள்ளலாம் என்றிருக்கிறது. யார் வேண்டுமானாலும் தொழிற் சங்கம் பதிவு செய்து கொள்ளலாம். இப்படியெல்லாம் இருக்கிற காரணத்தினால்தான், அதிகமான அளவில் தொழிற் சங்கங்கள் தோன்றி, தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை இல்லாமல் சிதையுண்டு போகிற நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தத் தொழிற் சங்கங்களில் ஏதேனுமொரு தொழிற் சங்கத்தை அங்கீகரிப்பதென்பதும் மிகவும் சிரமமாகி விட்டது. ஆகவேதான், ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம் என்றும் அந்தத் தொழிற் சங்கத்தை அத்தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் மூலம் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான சட்டங்களைப் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது உள்ளாட்சித் துறைக்குத் தேர்தல் நடத்தினோம். சட்டமன்றப் பேரவைக்குத் தேர்தல் நடத்தினோம். அதேபோல் தொழிற் சங்கங்களுக்கும் தேர்தல் நடத்த வேண்டும். தொழிற் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கு சட்டபூர்வமாக ஓர் அமைப்பு ஏற்படுத்த வேண்டும்.

நான் எனக்கு ஏற்பட்டுள்ள கசப்பான அனுபவங்களிலிருந்து சொல்கிறேன். நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தபோது, பல தொழிற் சங்கங்களில் தலைவராக இருந்திருக்கிறேன். பி. அண்டு சி. மில்லில் தொழிற் சங்கத் தலைவராக இருந்திருக்கிறேன்; டன்லப் கம்பெனியில் இருந்திருக்கிறேன்; மின்வாரியத் தொழிலாளர்களுடன் தொடர்பு உண்டு. போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடன் தொடர்பு உண்டு. இவ்வாறு பல இடங்களிலும் தொடர்பு உண்டு. அப்போது ஏற்பட்ட அனுபவங்களிலிருந்து சொல்கிறேன். தொழிற் சங்கங்களில் தேர்தல்களை நடத்துவதற்கு ஒரு முறை இருக்க வேண்டும். அவ்வாறு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் சங்கம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.



1986 மே 10] [திரு. க. சுப்பு]

இப்போது தொழிற் சங்கங்களை அங்கீகரிக்கும் உரிமை யாருக்கு இருக்கிறது? முதலாளிகளுக்கும் நிர்வாகத்தினருக்கும் இருக்கிறது. அவர்கள் யாரை அங்கீகரிப்பார்கள்? யார் அவர்களுடைய பேச்சைக் கேட்கிறார்களோ அவர்களைத்தான் அங்கீகரிப்பார்கள். அவர்களுக்குத்தான் சலுகைகளைக் கொடுப்பார்கள். அவர்களுக்குத்தான் நிர்வாகத்தினரோடு பேசுவதற்கு இடம் கிடைக்கும். அப்படியானால் தொழிலாளர்கள் தலைவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் நாணயமற்ற முறையில் நடப்பதற்கு ஊக்குவிக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்கள் நிச்சயம் தொழிலாளர்களுக்கு நாணயமாக இருக்கமாட்டார்கள். முதலாளிகள் சொல்வதைக் கேட்டால்தான், அவர்களுக்கு வழி பிறக்கும். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிற காரணத்தினால்தான், தொழிற் சங்கங்கள் இன்றைக்குச் சரியாக இயங்க முடியவில்லை. இவ்வாறு தொழிற் சங்கங்கள் இயங்காததால், தொழிற் சாலைகளிலும் அவற்றின் பிரதிபலிப்பு இருக்கத்தான் செய்யும். எனவே தொழிற் சங்கங்களை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் மூலம் தொழிலாளர்களின் உணர்வுகளை முறைப்படுத்தி, ஜனநாயக ரீதியாகக் கோரிக்கைகளை முன்வைத்து, வாதிடுவதற்கு சட்டபூர்வ அங்கீகாரம் இருக்க வேண்டியது அவசியம்; எனவேதான் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற் சங்கம் ஒன்று கட்டாயமாக இருக்க வேண்டியது அவசியம். அப்படிப்பட்ட தொழிற் சங்கங்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு, ஒரு சுயேச்சையான அமைப்பு இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தொழிலாளர் நலத் துறை செய்ய வேண்டும். அவ்வாறு நடத்தும் தேர்தல் மாநிலம் முழுவதும் ஒரேமாதிரி இருக்க வேண்டும். ஒரே மாதிரி uniformity இருக்க வேண்டும். ஒரு இடத்தில் தொழிலாளர்களே நேரடியாகத் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது, மற்றோரிடத்தில் தலைவர்களை நியமன முறையில் ஏற்படுத்துவது. இதுபோன்ற நிலைமைகள் நிச்சயம் இருக்கக் கூடாது. பல இடங்களில் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை மிகவும் கேவலமாக இருக்கின்றது. தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு பல விதமான போட்டிகளே இருக்கின்றன. மேலே இருக்கும் பெரும் தலைவர்களுக்கு பணமும் கொடுக்கிறார்கள். வசூல் முறைதான் எங்கும் நடந்து கொண்டிருக்கிறது. இதுவெல்லாம் மிகவும் ஆரோக்கியமற்ற போக்குகளாகும், "Unhealthy practices." இவற்றையெல்லாம் ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் இதிலே எவ்வளவு பணம் போட்டாலும், தொழில் உறவு நிச்சயமாக நல்லவிதத்தில் இருக்க முடியாதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுதான் இன்றைக்குள்ள கசப்பான நிலை.

[திரு. க. சுப்பு] [1986 மே 10

இங்கிருக்கின்ற யதார்த்தமான நிலைமை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எல்லாத் தொழிற்சாலைகளிலும் தொழிற் சங்கங்கள் இருக்கின்றனவா என்று உறுதிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் எவ்வளவு இருக்கின்றனவென்று புள்ளிவிவரம் இருக்கிறது. ஆனால் தொழிற் சங்கங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று புள்ளிவிவரம் கொடுக்கப்படவில்லை. அநேகமாக மூன்றில் ஒரு பங்கு தொழிற் சங்கங்கள் இல்லை. எனவேதான், எல்லாத் தொழிற்சாலைகளிலும் தொழிற் சங்கங்கள் இருப்பதை சட்டபூர்வமாக ஆக்க வேண்டும். அந்தத் தொழிற் சங்கங்களுக்கும் தேர்தல்களை நான் முன்பே கூறியதுபோல ஒரு அமைப்பின் மூலமாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்தேர்தல்களின் மூலம் வெற்றிபெற்று வரக்கூடிய சங்கங்களை அங்கீகரித்து அதைச் சட்டரீதியாக ஆக்க வேண்டும். நிர்வாகம் இந்தத் தேர்ந்தெடுக்கப் பட்ட தொழிற்சங்கத்தோடுதான் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும்.

அதே மாதிரி, தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு ஏற்பது குறித்துச் சொல்லப்படுகிறது. நிர்வாகத்தில் பங்கு என்றால், திருடுவதில் அல்ல. தொழிலாளர்களை டைரக்டர் ஆகப் போட்டால், 'ஷேர்' கிடைக்கும். தொழிலாளர்கள் பிரதிநிதிகள் என்று அவ்வாறு போடுகிறவர்களுக்குத் தொழிற் சாலை எப்படி நடத்துவது என்று தெரிய வேண்டாமா? தொழிற்சாலை விதிமுறைகள் என்ன? அவை எப்படி அமல்படுத்தப்படுகின்றன? இவையெல்லாம் அவர்களுக்குத் தெரிய வேண்டுமானால், நிச்சயமாக அவர்களுக்கு நிர்வாகத்தில் குறிப்பிட்ட அளவுக்குப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். முன்பு ஒரு முறை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது, முயற்சி மேற்கொள்ளப் பட்டது. அது வரவேற்கக் கூடியது. போக்குவரத்துக் கழகங்களில் சில டைரக்டர்களைப் போட்டார்கள். ஆனால் அவர்கள் தேர்தல் மூலம் போடப் படவில்லை. தேர்தல் மூலம் கொண்டுவந்திருந்தால், அவர் தொழிலாளர் பிரதிநிதியாக இருந்திருப்பார். அவரை அரசாங்கமே நியமனம் செய்ததால், அவர் வேறு ஆட்களின் பிரதிநிதியாக வந்துவிட்டார். அதனால் திருடுபவர் களின் பிரதிநிதியாக மாறிவிட்டார். அது அவர்கள்மேல் உள்ள தவறு இல்லை. திருடர்களுடன் சேர்ந்தால் நாமும்தான் திருடுவோம். எனவே இவ்வாறு நியமிக்கப்படுபவர்கள் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.



1986 மே 10] [திரு. க. சுப்பு]

இன்றைக்கும் கூட மத்திய அரசு கட்டுப்பாட்டில் உள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தில் தொழிலாளர்களின் பிரதிநிதியாக ஒருவரை நியமனம் செய்திருக்கிறார்கள். தொழிலாளர் பிரதிநிதி ஒருவரை டைரக்டராகப் போட்டிருக்கிறார்கள். அவர் தொழிற் சங்கத்தலைவராகவும் இருக்கிறார், நிர்வாகத்தின் டைரக்டர்களில் ஒருவராகவும் இருக்கிறார். அவர் தான் Chief negotiator தொழிலாளர் சார்பில் பேசக்கூடியவரே நிர்வாகத்தின் சார்பிலும் இருக்கிறார். ஒரு பக்கம் டைரக்டர், மற்றொரு பக்கம் தொழிற் சங்கத் தலைவர். ஒருவரே இரண்டு பக்கமும் எப்படி இருக்க முடியும்? இது எப்படி ஏற்புடையதாக இருக்க முடியும்?

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு தர வேண்டுமென்று மாநில அரசும், மைய அரசும் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் சார்பில் ஒருவரை டைரக்டராகப் போடுவதை எப்படி தவறு என்கிற வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் எழுப்புகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு:** தொழிலாளர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டும். ஆனால் அவரையே தொழிலாளர் சார்பாகவும் பேசுவதற்குச் சொல்லக்கூடாது. அவரே தொழிற் சங்கம் சார்பாகவும் வருகிறார். அவரே நிர்வாகத்தினுடைய டைரக்டர் பதவியையும் பயன்படுத்துகிறார்.

(முற்பகல் 10-45)

அந்தச் சங்கங்களை உருவாக்குவதற்கு அரசும் பயன்படுகிறது. தொழிலாளர் மத்தியில் ஒரு அவநம்பிக்கை ஏற்படுகிறது. எல்லாத் தொழிலாளிகளுக்கும் பிரதிநிதியாகச் செயல்படவேண்டிய ஒருவர், ஒரு குறிப்பிட்ட தொழிற் சங்கத்தை வளர்ப்பதற்காக, பொதுத் துறை நிறுவனத்தின் இயக்குநர் என்ற ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தவறாகச் செயல்படுகிறார் என்ற எண்ணம் வரும். தொழிற் சங்கத் தலைவர் மீது தனிப்பட்ட முறையில் வெறுப்பு கிடையாது. ஆனால் தேசியத் தலைவர்கள், கண்ணியத்திற்கும், மரியாதைக்கும் உரியவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கும் செயலைத்தான் நாம் ஏற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது. அவர்களின் போக்கை மாற்றி....

**திரு. எஸ் இராகவானந்தம்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னார்கள். இப்போது "Participation in management" என்பதை மத்திய அரசு ஒத்துக்கொள்ளவில்லை. தொழிலாளர்களுக்கு "Participation in nanagement at all levels" என்பதற்கு மத்திய அரசு இன்னும் ஒத்துவரவில்லை.

**திரு. க. சுப்பு:** துணைத் தலைவர் அவர்களே, அது சரியானதுதான். எல்லா லெவலிலும் நமக்கு வேண்டும். எல்லா இடங்களிலும் பங்கு ஏற்று நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் நடத்துவது என்பது, சந்தேகமாக இருக்கிறது. 'பேலன்ஸ் ஷீட்' தயார் பண்ணுவது மேனேஜ்மெண்டோடு நின்று போகிறது. யார் அந்த வரவு செலவுக் கணக்கைக் கேட்பது, எப்படி போனஸ் கணக்கிடுவது, எப்படி ஊதிய உயர்வைக் கேட்பது என்பதற்குக் கொடுக்கக்கூடிய அந்த ஆதாரம் யார் என்று கேட்கிறார்கள். நாம் 'செட்டில்' பண்ண முடியுமா? கோர்ட்டில் கூட 'செட்டில்' பண்ண முடியாது. அப்படிப்பட்ட நிலையிருக்கும்போது தொழிலாளர்கள் பங்கு ஏற்பதற்கு இடமில்லாமல் போய்விடுமானால், அது வருந்தத்தக்கது. அது மாற வேண்டும். தொழிலாளர்களுக்கு பங்கு இருக்கவேண்டும். பி அண்ட் சி மில் பற்றி திரு. மீனாட்சி சுந்தரம் பேசினார். டாட்டாவைப் பற்றிச் சொன்னார்கள். அது தப்பு. அது பிர்லாவினுடைய குரூப்பைச் சேர்ந்தது. பினாமி என்று சொல்வதற்கில்லை. பிர்லா குரூப்பைச் சேர்ந்த ஹாடா என்பவர் தொழிலாளர்களுக்கு ஹார்டாக இருக்கிறார். அவர் அதைச் சொந்தமாக்கும் முயற்சியைக்கூட எடுத்துவிட்டார். அந்த நிறுவனத்தைப் பொறுத்தவரை என்ன தவறு நடக்கிறதோ அதைப் போக்குவதற்கு உறுப்பினர்கள் ஆலோசனை சொல்ல வேண்டும். ஆனால் உறுப்பினர் அவர்கள் நிறுவனத்தைப்பற்றியும், அமைச்சர்களைப்பற்றியும் சேர்த்துச் சொல்கிறார். அங்கு தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பி அண்டு சி மில்லைப் பொறுத்தவரையில், மற்ற பஞ்சாலைத் தொழிலாளர்களையும் சேர்த்து அரசு 10 (பி) ல் 'ரெபர்' செய்யவில்லை. ஊதிய உயர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினையை அரசு ட்ரிபியூனலுக்கு அனுப்பியிருக்கிறது. முதலில் பி அண்டு சி அனுப்பவில்லை. அரசு அனுப்ப வேண்டுமென்று கேட்டது. உடனே அனுப்பியாகிவிட்டது. அதை அனுப்பும்போது எந்தத் தேதியிலிருந்து, இடைக்கால நிவாரணம் ரூ. 75-ஐக் கொடுக்க வேண்டுமென்று வரும்போது, 1985 ஜூன் மாதத்திலிருந்து கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அனுப்பியிருக்கும் 'ரெபரென்ஸ்', 1986 மே மாதத்திலிருந்து இடைக்கால நிவாரணம் கொடுத்தால் போதுமென்று இருக்கிறது. அப்படியானால் ஒவ்வொரு தொழிலாளிக்கும் 600 ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. 8 ஆயிரம் தொழிலாளிகளுக்கு 48 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. இந்த இழப்பை எந்தத் தொழிற் சங்கத் தலைவர்கள் சிபாரிசு செய்தார்கள் என்பது தெரியவில்லை. அவர்கள் ஒப்புக்கொண்டு தான் அதெல்லாம் போடப்பட்டது. அரசாங்கத்தின் மீதோ, அமைச்சரின் மீதோ பழியைப் போடுவது பாவம். அந்தத் தொழிலாளர்களுக்கு, தொழிற் சங்கத் தலைவர்கள் அதைப்பற்றிச் சொல்லவில்லை





அவர்கள் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் சொல்லவில்லை. அதைப்பற்றிச் சொல்லாதது ஒரு பரம ரகசியம். திரு. ஹாடா அவர்களுக்கு, தொழிற் சங்கத் தலைவர் அவர்களோடு இருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஒரே அடியில் அந்த 48 லட்ச ரூபாய் இழப்பு தொழிலாளர்களுக்குத் தெரிய வந்தால், இந்த அரசாங்கத்தின் மீது வெறுப்புணர்ச்சி ஏற்பட்டு, போராட்டம் நடத்துவதற்கு வழிவகை ஏற்படுமா, ஏற்படாதா? அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசியமா, இல்லையா? அந்த அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டிருக்கிறார்கள். இதை வரவேற்க வேண்டும். ஆனால் உறுப்பினர் அவர்கள் பிர்லாவுக்கும், டாட்டாவுக்கும் வித்தியாசம் தெரியாமல் சொன்னார். அவர்மீது தப்பில்லை. அவர் ஆசிரியர் பிரச்சினையில் தெளிவாகப் பேசுவார். ஆனால் தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரை, அவர் இன்னும் அந்த நிலைக்கு வரவில்லை. அதிலே அவர் சொன்ன தவறான தகவல் என்னவென்றால், தொழிலாளர்களுக்கு 48 லட்சம் ஓட்டு இழப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக அந்த உத்தரவு மறுபரிசீலனை செய்யப்படுகிறதா என்று சொன்னார். பல தொழிற் சங்கத் தலைவர்கள் பல மந்திரிகளைப் பார்த்திருக்கிறார்கள். மந்திரிகள் இன்றைக்கு வருவார்கள், நாளைக்கு மாறுவார்கள். ஆனால் தொழிற் சங்கத் தலைவர்கள் நிரந்தரமாக இருப்பார்கள். இதில் இல்லையென்றால் அதிலும், அதில் இல்லையென்றால் இதிலும் அவர்கள் இருப்பார்கள். அவர்கள் இப்படியே இருந்துகொண்டிருப்பார்கள். அதுவும் அவர்கள் இருக்கும் சங்கம் ஒரு கட்சியைச் சார்ந்ததும் கிடையாது. கட்சிக்கு அப்பாற்பட்ட, கட்டுப்பாடற்ற நபர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்ன வேண்டுமென்றாலும் செய்வார்கள். தொழிலாளர்களை ஏமாற்றுவார்கள். மே தினத்தன்று சம்பளத்தோடு கூடிய விடுமுறை விட வேண்டுமென்று சொல்லி தமிழ் நாட்டில் அது அமுலில் இருக்கிறது. அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. ஆனால் பி அண்டு சி மில்லில் 'நேஷனல் பெஸ்டிவல் ஹாலிடேஸ்' எதுவுமே கிடையாது. தொழிலாளர்கள் வேலை பார்க்கச் செல்கிறார்கள். தொழிற் சங்கத் தலைவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அதில் ஒரு ஈடுபாடுதான் காரணம். அவர்கள் தொழிலாளர்களை மே தினத்தில் வந்து வேலை பார்க்கச் சொல்கிறார்கள். தொழிலாளர்கள் லீவு நாளில் வேலை பார்த்தால், 'டபுள் வேஜஸ்' கிடையாது. பண்டிகை நாளில் வேலை பார்த்தால் 'டபுள் வேஜஸ்' கொடுக்க வேண்டும். பி அண்டு சி மில்லில் இரட்டைச் சம்பளம் கிடையாது; ஒத்தைச் சம்பளம்தான். அதிலும் கணக்குகள் கேட்பதில்லை. தொழிலாளர்களுக்குள்ள சம்பளத்தை தனியாகக் கையில் வைத்துக்கொண்டு, அவர்கள் வேலை முடிந்து போகும்போது 30

ரூபாய் கொடுத்துவிடுவார்கள். 30 ரூபாய்க்கு மட்டும் அவர்கள் வேலை செய்வார்கள். மீதமுள்ள ரூபாயை சம்பளத்தோடு சேர்ப்பார்களா என்றால், இல்லை; கணக்கிலும் வராது. இதுமாதிரி சட்ட விதிகள் எவ்வளவு மோசமாக மீறப்படுகின்றன என்பது ரொம்ப வேதனைக்குரியது.

அதுமாதிரி 'பேமென்ட் ஆஃப் வேஜஸ் ஆக்ட்டில்' பணத்தைப் பிடிக்க வேண்டும். இதில் தொழிற் சங்கத் தலைவர் கோர்ட்டிற்குப் போவதற்கு ஒன்றுமில்லை. டிரிபியூனலுக்கு தங்களையும் சேர்க்க வேண்டுமென்று முன்பே 'கேஸ்' போட்டார்கள். அந்த 'கேஸ்' சுப்ரீம் கோர்ட்டில் இருக்கிறது. அந்த கேஸை வாபஸ் வாங்கிவிட்டு, தனியாக அதை 'செட்டில்' பண்ணுகிறோமென்று சொல்வதற்கு தொழிற் சங்கத் தலைவர் இங்கேயிருந்து டில்லிக்குப் போகிறார். அதற்காக அவர்கள் தொழிலாளர் மத்தியில் எவ்வளவு பணத்தைப் பிடிக்கிறார்கள் தெரியுமா? ஒரு தொழிலாளிக்கு ரூ. 5 வீதம் 8,000 தொழிலாளிகளுக்கு 40 ஆயிரம் ரூபாய் பிடிக்கிறார்கள். ரூ. 40,000 பிடிக்கிற

(மூற்பகல் 10-50)

போது தொழிலாளர்களுக்குச் சம்மதம் இருக்கிறதா இல்லையா என்று கேட்க வேண்டாமா? அதற்குக் கமிட்டியின் தீர்மானம் வேண்டாமா? அதிலும் வேடிக்கை என்னவென்றால், இந்தத் தொகையை யார் பிடிக்கிறார்கள் தெரியுமா? நிர்வாகமே பிடித்துக் கொடுக்கிறது. எல்லாமே சட்ட விரோதமாகச் செய்யப்படுகிறது. பிறகு தொழிலாளர்களில் ஒரு 4000 பேருக்கு மேல் கையெழுத்துப் போட்டு எங்கள் சம்பளத்தில் பிடித்ததைத் திருப்பிக் கொடு என்று கேட்கிறார்கள். நிர்வாகம் கொடுக்க மாட்டேன் என்கிறது. ஆனால் அதே நிர்வாகம் அதற்குப் பிறகு ஒரு 4 மணி நேரம் அவகாசம் கொடுத்து, மறுபடியும் புதிதாக "எங்கள் பணத்தைப் பிடிக்கக் கூடாது" என்று எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறது. அதைக் கேட்டுக்கொண்டு, ஒரு 2,000 அல்லது 3,000 பேர் அவசர அவசரமாக அப்படி எழுதிக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் அந்த நிர்வாகம் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறது. இப்படி தொழிற் சங்கமும் நிர்வாகமும் சேர்ந்து ஒரு நாடகம் ஆடுகிறார்கள். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், எவ்வளவு மோசமான நிலைமை இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டாமா? தொழிலாளர்களின் நிலைமை பற்றிச் சொன்னால், இன்னும் வேடிக்கையாக இருக்கும். முதலில் வேலைக்குப் "பதிலி" என்று போடுகிறார்கள். அதற்குப் பிறகு 2, 3 கிரேடு வைத்திருக்கிறார்கள். அதாவது பழைய காலத்தில் இருந்து வந்தவர்கள் ஒரு கிரேடு. வேலை செய்து சர்வீஸ் ஆகி பிறகு ரிசைன் பண்ணிப் போனவர்கள் திரும்பி வந்தால் அதற்கு



ஒரு கிரேடு. பிறகு புதிதாக வருகிற இளைஞர்கள் ஒரு கிரேடு. வேலைக்கு எடுக்கும்போதே என்ன கண்டிஷன்? முதல் 24 மாதத்திற்கு தினம் ரூ. 7.50 கூலி. வேறு எந்தச் சலுகையும் கிடையாது. மறுபடியும் ஒரு 24 மாதத்திற்கு ரூ. 10 வீதம் வேலை பார்க்கச் சொல்கிறார்கள். சரி, அப்படி 48 மாதத்திற்குப் பிறகு 'ஆக்குபேஷன் வேஜ்' கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தமே இருக்கிறது. ஆனால் அந்த ஒப்பந்தம் அமுல்படுத்தப் படுவதில்லை. ஏன்? தொழிற் சங்கத் தலைவர்களும் கேட்க மாட்டார்கள். காரணம் அவர்கள் ஒப்பந்தம் தனி. எழுதப்படாத ஒப்பந்தம் அவர்கள் ஒப்பந்தம். இப்படித் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள், ஏமாற்றப் படுகிறார்கள் என்றால், இதிலே அரசாங்கத்திற்கு அக்கறை இருக்க வேண்டுமா இல்லையா? இதிலே அரசாங்கம் தலையிட வேண்டாமா? ஒரு தொழிற் சங்கத் தலைவரே தவறாக வழிகாட்டுகிறார் என்றால், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டாமா? எனவேதான் சொல்லுகிறேன். தொழிற் சங்கத்தை முறைப்படுத்த வேண்டும். இப்படி எதையாவது கேட்டால் உடனே நடவடிக்கை. முன்னாலே தொழிற் சங்கத்தில் இருந்த தலைவர்களையெல்லாம் சட்ட விரோதமாக மாற்றுவது. அதாவது ரோவரில் வேலை பார்த்து வந்த கன்பர்ம் ஆன தொழிலாளியைக் கொண்டுபோய் ஸ்வீப்பராகப் போடுவது அல்லது பல்ஜாராகப் போடுவது. காரணம் கேட்டால், "நீ போன தொழிற் சங்கத்தின் நிர்வாகத்தில் தலைவராக இருந்தாய் அல்லது உறுப்பினராக இருந்தாய் என்பது. இதற்கு நிர்வாகம் ஒத்துக் கொள்கிறது. ஒரே ஒரு மில்லைப்பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பி அண்டு சி மில்லைப் பொறுத்த வரையில், நாம் பல்வேறு சலுகைகளைக் கொடுக்கிறோம். அது ஒரு 'சிக் மில்' என்ற அடிப்படையில், பல சலுகைகளைக் கொடுத்து வருகிறோம். மின்சாரம் வழங்குவதிலேயிருந்து தண்ணீர் வழங்குவது, மற்றும் கடன் கொடுப்பது என்று எல்லாவற்றிலும் சலுகைகள் பலவற்றை நாம் வழங்கி வருகிறோம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுவையாக நிறைய விஷயம் பேசிக் கொண்டிருக்கிறார். ஏற்கெனவே 15, 16 நிமிடங்களுக்கு மேலேயே பேசிவிட்டார் என்பதை நானே மறந்து விட்டேன். எனவே சீக்கிரத்தில் முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: பி. அண்ட் சி. மில்லை முடித்துவிட்டு மற்ற சில விஷயங்களையும் பேசி முடித்துவிட இருக்கிறேன். இப்படி பல்வேறு சலுகைகளைக் கொடுக்கிறோம். காரணம் தொழிலாளர்களுக்கு இதன் மூலம் நன்மை கிடைக்க வேண்டும் என்பதற்காக. ஆனால் அந்தத் தொழிற்

சாலைக்குள் வெளியே இருக்கிற துணியை உள்ளே கொண்டு வருகிறார்கள். தறியிலிருந்து வருகிற கச்சாத் துணியைத் தினமும் லாரிகளில் கொண்டு வருகிறார்கள். வெளி மாநிலங்களிலிருந்து ஒரு லட்சத்து 70,000 மீட்டர் துணியை 4, 5 லாரிகளில் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு நாளும் இது நடக்கிறது. அந்தத் துணியை நேராக வீவிங் விங்குக்குக் கொண்டு போகிறார்கள். அங்கேயிருந்து அது டை ஹவுசுக்குப் போகிறது. அங்கே இருந்து அதாவது டை ஹவுஸிலிருந்து எந்தப் பெயரில் எப்படி வெளியே போகிறது, எங்கே விற்கிறார்கள் என்ற விவரம் யாருக்கும் தெரியாது. அந்தத் துணி எந்தக் கணக்கில் வருகிறது என்று யாருக்குந் தெரியாது. நாம் வழங்கிய மின்சாரம் எதற்குப் பயன்படுகிறது? யாருக்கும் தெரியாது. இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் என்பவர் என்ன செய்கிறார்? இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் பேக்டரிக்குள் போய் சலாம் போடுகிறார், திரும்பி விடுகிறார். எந்தச் சட்டமும் அங்கே அமுலாவதில்லை. இதையெல்லாம் எந்த அதிகாரியும் பார்ப்பதுமில்லை.

எவ்வளவு பாரம்பரியம் மிக்க மில் அது. அந்த மில்லுக்குள் ஒரு கேன்டீன்கூட சரியாக இல்லை. அந்தக் கேன்டீனில் சோறு போடுவதை நிறுத்திவிட்டு இப்போது பொட்டலம் கொடுக்கிறார்கள். இன்னும் கொஞ்ச நாளானால் பொட்டலம் கொடுப்பதையும் நிறுத்திவிடுவார்கள் போல் இருக்கிறது. கடந்த 2½ வருஷமாக அங்கே இந்த நிலைமைதான் நீடிக்கிறது. அரசாங்க அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? ஆய்வாளர்கள் என்ன செய்கிறார்கள் என்று ஒன்றுமே நமக்குப் புரியவில்லை. இவ்வளவு மோசமான நிலைமை ஒரு தொழிற்சாலையில் இருக்கும்போது, தொழிலாளர்களுக்குக் கோபம் வருகிறது. அதனால் ஸ்டிரைக் வருகிறது. எனவேதான் சொல்லுகிறேன், அரசாங்கம் வருமுன் காக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். இப்படிப்பட்ட ஓட்டை உடைசல்களைத் திருத்துவதற்கு அரசு முன்வர வேண்டும்.

அடுத்து, சர்க்காரியா கமிஷனுக்குக் கொடுத்த ரிப்போர்ட்டில் கூட ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறோம். அதாவது இன்டஸ்ட்ரியல் டிஸ்பியூட் ஆக்ட்' 2 படி பெட்டிஷன் போடுகிறோம். யாராவது நியாயமான காரணங்களின் அடிப்படையில் அல்லாமல் வேலை நீக்கம் செய்யப்பட்டால், அல்லது ஆட்குறைப்பு செய்யப்பட்டால், அல்லது சர்வீஸ் டெர்மினேட் செய்யப்பட்டால், பெட்டிஷன் போடலாம் என்று இருக்கிறது. ஆனால் அரசாங்கத்தில் ஒரு சட்டம் இருக்கிறது. அதாவது சமரசப் பேச்சுவார்த்தை



முடிந்து, அரசுக்கு அறிக்கை போய் அரசாங்கம்தான் அதை 'ரெபர்' செய்ய வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. அதைவிட நேரடியாகவே கோர்ட்டுக்குப் போவதற்கு வழிவகை செய்து நாம் ஒரு சட்டம் போட்டோம். ஆனால் என்ன காரணத்தாலோ நமது அந்தச் சட்டத்திற்கு 1981 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை. கேட்டால் அவர்களே இதே மாதிரி ஒரு சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்றார்கள். அவர்களே ஒரு சட்டம் கொண்டு வந்தால், அது இந்தியா முழுவதற்கும் பொருந்தும் என்பதால் நாமும் சரி என்றோம். ஆனால் 1981 ஆம் ஆண்டில் நாம் நிறைவேற்றிய சட்டத்திற்கு இது வரை மத்திய அரசின் அனுமதியும் கிடைக்கவில்லை. அவர்களும் சட்டம் கொண்டு வரவில்லை. இப்போது 1986 ஆம் ஆண்டில் இருக்கிறோம். இனிமேல் நாமே இங்கே இருப்போமா இல்லையா என்று ஆகிவிட்டது. இந்த நிலைமையில் சர்க்காரியா கமிஷனுக்குக்கூட இதைத் தெரிவித்திருக்கிறோம். எனவே மத்திய அரசு இதற்கு விரைவில் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கிடையில் நான் அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோள் விடக் கடமைப்பட்டிருக்கிறேன். போன தடவை கூட நான் இதைச் சொன்னேன். நம்முடைய நோக்கம் தொழிலாளி நீதி பெறுவதில் தடை இருக்கக் கூடாது. கோர்ட்டுக்குப் போக வேண்டுமென்று தொழிலாளி நினைத்தால், அதற்கு இடையே இடைத்தரகர்கள் வேண்டியதில்லை. அரசாங்கம்தான் அதை 'ரெபர்' செய்ய வேண்டும் என்ற நிலைமையை மாற்றியாக வேண்டும். நேரடியாகவே தொழிலாளி கோர்ட்டுக்குப் போவதற்கு வழிவகை செய்யப் பட்டாக வேண்டும்.

சுந்தரம் பேசனர்ஸ் என்ற தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. அங்கே வேளாங்கண்ணி என்ற ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். 20 வருஷத்திற்கு மேலாக சர்வீஸ் செய்தவர். அவர் ஏற்கெனவே தொழிற் சங்கத்தில் இருந்தார் என்ற காரணத்திற்காக, நிர்வாகம் விரும்பாத தொழிற் சங்கத்தில் அவர் இருந்தார் என்ற காரணத்திற்காக அவரை நிர்வாகம் நியாயமில்லாமல் வேலை நீக்கம் செய்துவிட்டது. என்ன காரணம் சொன்னார்கள் தெரியுமா? அந்தத் தொழிற் சாலையில் வேலை பார்க்கும் சில தொழிலாளர்கள் லீவு எடுத்தால், அதற்காக இன்ஷூரன்ஸ் கம்பனியிடம் பணம் 'கிளெய்ம்' செய்வது வழக்கம். அப்படிச் சில தொழிலாளர்கள் பணம் 'கிளெய்ம்' செய்திருக்கிறார்கள். அதில் தவறு நடந்திருக்கிறது. அதாவது சிலர் லீவு எடுக்காமலேயே பணத்தை 'கிளெய்ம்' செய்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் பணம் 'கிளெய்ம்' செய்வதற்கு இந்தத்

[திரு. க. சுப்பு] [1986 மே 10

தொழிலாளி உடந்தையாக இருந்தார் என்று சொல்லி இவரை அந்த நிர்வாகம் வேலை நீக்கம் செய்திருக்கிறது. அதில் வேடிக்கை என்னவென்றால் அப்படிக் 'கிளெய்ம்' செய்த தொழிலாளர்கள் அதாவது எந்தத் தொழிலாளர்கள் அப்படிப் பணம் வாங்கினார்களோ, அவர்கள் எல்லாம் வேலையில் இருக்கிறார்கள். இவர் மட்டும் ஏற்கெனவே ஒரு தொழிற் சங்கத்தில் கமிட்டி மெம்பராக இருந்தார் என்ற காரணத்திற்காக இவரை மட்டும் நிர்வாகம் டிஸ்மிஸ் செய்துவிட்டது. அண்மையில் சுப்ரீம் கோர்ட்டு கூட ஒரு வழக்கில் தீர்ப்பளிக்கும்போது, டிஸ்மிசல் மற்றும் சஸ்பென்ஷன் என்னும் தண்டனைகள் மிகவும் அதிகபட்சமான தண்டனைகள், 'எக்ஸ்ட்ரீம்

(முற்பகல் 10-55)

பனிஷ்மென்ட்' என்று சொல்லியிருக்கிறது. அப்படிப்பட்ட தண்டனை கொடுக்கக் கூடாது. ஆனால் கொடுத்திருக்கிறார்கள். அந்த வழக்கை ஏன் நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை? பிறகு நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போய் ஏதாவது பண்ண வேண்டும் என்று சொன்ன பிறகு, "பணம் வாங்கிக் கொடுக்கிறோம் அல்லது வேலை வாங்கிக் கொடுக்கிறோம்" என்று சொன்னார்கள். இப்போது அந்த அமைச்சர் இல்லை. இன்னொரு அமைச்சர் வந்திருக்கிறார்கள். அவர் இதைப் பரிவோடு பார்த்து, இந்த வழக்கை கோர்ட்டுக்கு அனுப்ப வேண்டும். கோர்ட்டுக்கு அனுப்பும்போது, நீதிபதியே பார்த்து நிர்வாகத்தோடு அவரும் சேர்ந்தால், பிறகு ஆண்டவன் விட்ட வழி. அது வேறு விஷயம். நமமைப் பொறுத்த வரையில், நாம் கோர்ட்டுக்கு 'ரெபர்' பண்ணினால் போதும். அது நம்முடைய கடமை. அதைச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஓட்டல் தொழிலாளர்கள். ஓட்டல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்திருக்கிறோம். சிலர் அதிகமான ஊதியத்தை வழங்குகிறார்கள். ஓட்டல் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க இந்தச் சட்டத்தை மறுபடியும் திருத்த வேண்டும். 1983-இல் இந்த ஊதியத்தை நிர்ணயித்தோம். இப்போது 1986 ஆம் ஆண்டு. மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. ஆகவே இதைத் திருத்தியமைக்க வேண்டும்.



1986 மே 10] [திரு. க. சுப்பு]

தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் வழங்கப்பட வேண்டும். வேலை ஏதும் கிடைக்காததால், தற்காலிகமாக ஓட்டல் வேலை தேடி வருகிறார்கள். பிறகு நிரந்தரமாகிவிடுகிறார்கள். அவர்களுக்குப் படி ரூபாய், 3.75 கொடுக்கிறோம். அதிலே அந்தத் தொழிலாளி ஒரு வேளை கூட சாப்பிட முடியாது. உணவகங் களிலே வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு அந்த ஓட்டல்களில் உள்ள ரேட்டுக்கேற்ப ஊதியம் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களுக்குச் சோறு போட வேண்டும் என்று அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அதற்கேற்ப ரூபாய் கொடுங்கள் என்று கட்டாயப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால், ஸ்டார் ஓட்டல்களில் வேலை செய்பவர்கள் வாடகை கொடுத்துவிட்டு சும்மாதான் இருக்க வேண்டும். இது ரொம்பவும் பாவம், அநியாயம். இதனால் குற்றச்சாட்டுக்கு நாம்தான் ஆளாக வேண்டி யிருக்கிறது. ஆகவே ரூ. 3.75 என்பதை மாற்ற வேண்டும். இதை உயர்த்த வேண்டும். 450 புள்ளிகளுக்கு மேல் போனால் பஞ்சப்படி 2 பைசா என்று போட்டிருக்கிறோம். இதையும் மாற்ற வேண்டும். இப்படி அவர்களுக்குப் பாதுகாப்பற்ற தன்மை இருக்கிறது. மேலும் பொதுமக்களின் நன்மையைக் கருதி அந்தத் தொழிலாளர்களுக்குக் கட்டாய மெடிக்கல் செக்-அப் இருக்க வேண்'ம். அவர்கள் என்ன கண்டிஷனில் இருக்கிறார்கள், அவர்கள் என்ன பதார்த்தம் செய்கிறார்கள், அவர்களுக்கு நோய் இருக்கிறதா என்பதைப் பற்றி முதலாளிகள் கவலைப்படுவதில்லை. அதனால்தான் பல நோய்கள் வருகின்றன. நமக்குத் தெரிந்த நோய் 'எய்ட்ஸ்' என்றால், தெரியாத நோய் 'அன்-எய்ட்ஸ்' என்று இருக்கலாம். ஆகவே அரசாங்கச் செலவில் அந்த ஓட்டல் தொழிலாளர்களுக்கு 'கம்பல்சரி மெடிக்கல் செக்-அப்' இருக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். அவர்கள் எங்கே வேலை பார்க்கிறார் கள் என்றாலும், நிச்சயமாக அவர்களுக்கு வேலை இருக்க வேண்டும். நினைத்த மாத்திரத்தில் அவர்களை வீட்டுக்கு அனுப்பக் கூடாது. 'இம்ப்பீரியல் ஓட்டலில்' அப்படித்தான் நடந்தது. ஆகவே அந்தத் தொழிலாளர்களுக்கு, அவர்கள் நிரந்தரமானவர்கள் என்பதற்காக ஒரு அடையாள அட்டையை வழங்க வேண்டும், இலவச மெடிக்கல் செக்-அப் இருக்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களை ஆடு மாடுகளைப் போல கொட்டகையில் அங்கே அடைத்து வைக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இளைஞர்கள். அந்த இளைஞர்கள் படாத பாடு படுகிறார்கள். இவற்றையெல்லாம் நிச்சயமாகச் சீர்திருத்த வேண்டும்.

அடுத்து, ரிக்ஷா தொழிலாளர்கள். ரிக்ஷா தொழிலாளர்கள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரிடம் ரொம்ப ஈடுபாடு கொண்டவர்கள். சென்னை, மதுரை போன்ற இடங்களில் எங்களைப் போன்ற சாதாரண மனிதர்களுக்கு உதவியாக இருப்பவர்கள் ரிக்ஷா தொழிலாளர்கள்தான்,

வேறு எவனும் உதவ வரமாட்டான். பத்தாயிரம் ரிக்ஷா தொழிலாளர்கள் மதுரையில் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்களா, லைசென்ஸ் வாங்கியிருக்கிறார்களா என்றால், கிடையாது. கொஞ்சம் பேர் பதிவு செய்து வைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களை காவல் துறையினர் எப்போது வேண்டுமானாலும் பிடிக்கலாம். அவர்கள் தினந்தோறும் 20 ரூபாய் சம்பாதிக்கிறார்கள். அதில் ஐந்து ரூபாய் ரிக்ஷா வாடகையாகக் கொடுக்கிறார்கள். மீது பதினைந்து ரூபாய் வைத்திருக்கிறார்கள் ; அவர்களைப் பிடித்துக்கொண்டுபோய், காவலர்கள் "பத்து ரூபாய் கொடு, இல்லாவிட்டால் கோர்ட்டுக்கு அனுப்பி விடுவேன்" என்று மிரட்டுகிறார்கள். கோர்ட்டுக்குப் போனால் 75 ரூபாய் அபராதம் கட்டுகிறார்கள். இந்த 75 ரூபாய் அபராதம் கட்டுவதற்காக 100 ரூபாய் கடன் வாங்குகிறார்கள் என்றால், அதில் 20 ரூபாயை வட்டியாகப் பிடித்துக்கொண்டு மீதி 80 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதில் 75 ரூபாயை அபராதமாகக் கட்டுகிறார்கள். "இதுதான் எங்களுடைய சோகமான நிலை" என்று மதுரையில் உள்ள ரிக்ஷா தொழிலாளர்கள் சொல்லுகிறார்கள். மதுரையில் உள்ளவர்கள் பூராவும் அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள். அரசாங்கத்திலிருந்து அவர்களுக்கு எந்த விதப் பயனும் கிடைக்கவில்லை. ஆனால் அரசாங்கம் அமைய அடிப்படையாக இருந்தவர்கள் அவர்கள். இளைஞர்கள், பரிதாபத்திற்குரியவர்கள், அவர்களுடைய குடும்பங்கள் நடுத்தெருவில் இருக்கின்றன. இப்படி பத்தாயிரம், இருபதாயிரம் ரிக்ஷா தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பெரும்பாலும் ரிக்ஷாக்களை காவல் துறையினர்தான் வைத்திருக்கிறார்கள். போலீஸ் கான்ஸ்டேபிள்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு 'அடிஷனல் இன்கம்' இது. இப்படி எல்லா ஊரிலும் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களைப் பதிவு செய்ய வேண்டும். தொழிலாளர்களுக்கு கம்பல்சரியாக லைசென்ஸ் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு லைசென்ஸ் இல்லாவிட்டால், 'புராசிகியூஷன்' பண்ண வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அப்படி 'புராசிகியூஷன் செய்யும் நிலைமையை ரத்து செய்ய வேண்டும். அவர்கள் நடைபாதையில் குடியிருக்கிறார்கள். அவர்கள் வயதைக் கேட்டால், "தெரியாது" என்று சொல்லுகிறார்கள். "எனக்கு எதற்கு இதெல்லாம்" என்கிறார்கள். அவர்களுக்கு ஓட்டு இருக்கிறதா என்றால், இல்லை. அவர்களும் இந்த நாட்டின் குடிமக்கள்தான். "ஸ்ரீலங்கா ஸ்டேட்லெஸ் சிட்டிசன்'" பற்றி நாம் பேசுகிறோம், நம் ஊரிலேயே ஸ்டேட்லெஸ் ரிக்ஷா தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஓட்டு கிடையாது. ஜனாதிபதி வந்தால், அவர்களை இடத்தை விட்டு காலி செய்வார்கள். அவ்வளவுதான். அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும். ரிக்ஷாவை ஓட்டுபவர்களுக்கே ரிக்ஷாவை சொந்தமாக்க வேண்டும். அவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை அங்கீகரிக்க வேண்டும். புராசிக்



(முற்பகல் 11-00)

கூஷன் இருந்தால் அதிலிருந்து விடுதலை அளிக்க வேண்டும். சைக்கிளில் 2 பேர்கள் போகக் கூடாது என்று வந்துவிட்டது. அதற்குமுன் கேஸ் போடுவார்கள். நம் ஆள்கள் 4 பேர்கள்கூட போகின்றார்கள். அது வேறு விஷயம். ரிக்ஷா ஓட்டுவதற்கு லைசென்ஸ் தேவையில்லை. அது எதற்காக? அதைப் பதிவு செய்ய வேண்டும். அதிலே போலீஸ் ஒன்றும் பண்ண வேண்டியதில்லை. "லேபர் டிப்பார்ட்மென்ட்" கையிலே ஒப்புவிக்க வேண்டும். அவர்கள்தான் அதைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

கடைசியாக, நான் சொல்லிக்கொள்கிறேன். கட்டிடத் தொழிலாளர்களுக்காக நாம் சட்டங்கள் போட்டிருக்கிறோம். இந்தியாவிலே நம்மைத் தவிர வேறு யாரும் அப்படிப் போடவில்லை. அதனாலே மத்திய அரசு சந்தோஷப்பட்டு மாநில அரசுக்கு அனுமதி கொடுக்கவில்லை. அது வேறு விஷயம். "நாம் நான் இந்தியாவிலேயே முதலிலே" என்று சொல்கிறோம். அவர்கள் என்ன சொல்கின்றார்கள்? "நீங்கள் ஏன் முதலில் இருக்கின்றீர்கள்? கடைசியிலே நாங்கள் கொண்டு வருவோம்" என்றுதான் அவர்கள் கொண்டுவரவில்லை. இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த பிறகு இரண்டு ஹவுசும் பாஸ் பண்ணி அனுப்பினோம். அதைப்பற்றி சர்க்காரியா கமிஷன் ரிப்போர்ட்டிலே சொல்லியிருக்கிறோம். அதற்கு அங்கீகாரம் கேட்டிருக்கிறோம். கொடுக்க வேண்டும். இடையிலே என்ன வருகிறது என்றால். . .

**திரு. எஸ். இராகவானந்தம் :** மத்திய அரசும் ஒரு ',டிராப்ட் பில்" அனுப்பினார்கள் அதற்குப் பின்னர் மத்திய அரசாங்கமும் கொண்டுவரும் என்று எதிர்பார்த்தோம். அவர்கள் செய்யாத காரணத்தினால், இந்த மாநில அரசு கட்டிடக் கட்டுமானத் தொழிலாளர்கள் சட்டம் கொண்டுவந்தது. அதிலே மத்திய அரசாங்கம் கான்ட்ராக்ட் மூலமாகத் தொழில் செய்தால் 'This Act will apply' 'திஸ் ஆக்ட்' என்று சொல்லியிருக்கின்றது. அதனாலேயே என்னவோ President's assent வர காலதாமதம் ஆகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னதுபோல, இந்தியாவிலேயே மத்திய அரசாங்கம் கொண்டுவராமல், இந்த மாநில அரசு தான் அதைக் கொண்டு வந்து President's assent -க்கு அனுமதி கேட்டு ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. எனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதற்காகவாவது டெல்லிக்குச் சென்று அந்தச் சட்டத்திற்கு ஜனாதிபதி ஒப்புதல் வாங்கிவர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : நாம் அதைப் படித்தால்தான் அது என்ன காரணம் என்று தெரியும். எல்லாத் தொழிலாளர்களுக்கும் இது "அப்ளை" ஆகும் என்று சொல்லியிருக்கிறோம். 'எசன்சியல் சர்வீஸ்', 'மெயின்டினன்ஸ் சர்வீஸ்' இவைகளுக்கு விதிவிலக்கு தரவேண்டும் என்று இருக்கலாம். அதையாவது முதலிலேயே சொல்லியிருக்கலாம். அதுவும் இல்லை. அதிலே விதிகளைப் போடவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதையாவது, போட்டிருக்கலாம். இதற்கிடையிலே நான் ஒன்று சொல்லிக்கொள்கிறேன், இந்தச் சட்டத்தின்படி இந்த கட்டிடத் தொழிலிலே உள்ளவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு கட்டிடத் தொழிலாளர் இறந்தால் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 10,000 நாம் கொடுக்கிறோம். முதலிலே ரூ. 5 ஆயிரம் என்று சொன்னோம். அவர்கள் போதாது என்று சொல்லி, 10,000 ரூபாய் கொடுக்கவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு. கொடுக்கவில்லை என்றால் அவர்கள் புரொசீஜரில் தவறு இருக்கின்றது. அந்த 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க அதற்குரிய ஆள் யார் என்று 'ஐடன்ட்டிஃபை' பண்ணுவது யார்? அது ரெவின்யூ டிப்பார்ட்மெண்டிலேதான் இருக்கின்றது. வில்லேஜ் அட்மினிஸ்ட்ரெட்டிவ் ஆபீசர், இன்ஸ்பெக்டர், தாசில்தார், கலெக்டர் அப்புறம் இங்கே வரவேண்டும். இவ்வளவு இடங்களைச் சுற்றி வந்த பிறகு, செயலாளருக்கு வந்து, முதலமைச்சர் லெவலுக்கு வர வேண்டும். இதிலே ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கோ அல்லது தாசில்தாருக்கோ அதிகமான அக்கறை இருக்க முடியாது. அவர் கட்டிடம் கட்டினால் என்ன, கட்டாவிட்டால் என்ன? அதனாலே அவருக்கும் ஒன்றும் கிடையாது. இதிலே யாருக்கும் அக்கறை இல்லை. இந்த புரொசீஜரிலே இருக்கின்ற குறையைத் தவிர்க்க வேண்டும். ஆகவே தொழிலாளர் நலத் துறையிலே இதை ஏற்றுக் கொள்ள வேண்டும். கட்டிடத் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்றால், அவர்கள் எல்லாம் 'ரிஜிஸ்டர்' செய்ய வேண்டும். மொத்தமாகவே செய்ய வேண்டும். முதலாளி தொழிலாளி இருவரும் 'ரிஜிஸ்ட்டர்' பண்ண வேண்டும். அவர்களைப் பதிவு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான், ரெக்கார்டிலே வருவார்கள். இல்லையென்றால், யார் தொழிலாளி என்று சொல்ல முடியாது. தொழிலாளி மாறிக்கொண்டே இருப்பார். முதலாளி மாறிக்கொண்டே இருப்பார். இதை எல்லாம் மாற்றி முறைப்படுத்த வேண்டுமென்றால், ஒரு போர்டு போட்டு செய்யலாம். மகாராஷ்டிராவிலேகூட ஒரு போர்டு இருக்கிறது. இங்கே 'டாக் லேபர் போர்டு' என்று போட்டிருக்கின்றார்கள். இதிலே தொழிலாளர்கள் நிர்வாகம் இரண்டுக்கும் ஈக்குவல் ரெபரசன்டேஷன் இருக்கின்றது. லேபர் டிப்பார்ட்மென்டைச் சேர்ந்த அதிகாரி சேர்மென் ஆக இருக்கின்றார். இதிலே





தொழிலாளிக்கும் முதலாளிக்கும் நேரடியாகப் பொறுப்பு இருக்கக் கூடாது. சம்பளம் பூராவையும் போர்ட்டுக்குக் கொடுக்க வேண்டும். போர்டுதான் தொழிலாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். போர்டின் கீழ் இருவரும் இருக்க வேண்டும். அதுதான் 'டாக் லேபர் போர்டு'. அப்படிப்பட்ட ஒரு போர்டை உருவாக்கியிருந்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராது. நல்ல சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். நடைமுறையிலே ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். வருவாய்த் துறையிலேயிருந்து அதை எடுத்துவிட வேண்டுமென்பது அவர்களுடைய நோக்கம். இன்னொன்று கட்டுமானப் பணிகளில் இருப்பவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் பண்ணியிருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். குறைந்தபட்சம் ஊதியம் நிர்ணயம் பண்ணியிருந்தாலும்கூட, நாம் அதைக் கொடுக்க முடியவில்லை என்றார். பல இடங்களிலே கொடுக்க முடியவில்லை. அதற்கு நாம் 'கேஸ்' போட வேண்டும். எங்கே போக வேண்டும்? லேபர் கோர்ட்டுக்குப் போக வேண்டும். இந்த அரசில் ஒரு மாற்றத்தைச் செய்திருக்கின்றார்கள். அது வரவேற்கத்தக்கது. அதிலே கோர்ட்டுக்குப் போக வேண்டியதில்லை. டி.சி.எல். பார்த்துக் கொள்கின்றார். இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தை அமல்படுத்தாத இடத்தில் அதை அமல்படுத்த டெபுடி லேபர் கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையிலே ஒரு எக்ஸ்பிரியன்சும் இருக்கும். அந்த அடிப்படையிலே கட்டிடத் தொழிலாளர்களுக்கு இருக்கக் கூடிய சிக்கல்களைத் தீர்த்து வைத்தால், அவர்கள் நன்றி உடையவர்களாக இருப்பார்கள்.

(முற்பகல் 11-05)

கடைசியாக, குழந்தைத் தொழிலாளர்கள். 14 வயது வந்த குழந்தைகள் குழந்தைகளுக்குக் கட்டாய இலவசக் கல்வி என்று சொல்லும்போது, அவர்கள் வேலைக்குப் போகக்கூடாது. ஆனால் இன்றைக்கு இருக்கின்ற சமுதாய திலே வேலை பார்க்காமல் இருக்க முடியாது. அப்படி பல குடும்பங்கள் இரு கின்றன. இராமநாதபுரம் போன்ற எங்கள் பகுதிகள் மிகவும் பரிதாபகரமா அளவில் இருக்கின்றன. அவர்கள் குறைகளை நீக்க வேண்டும் அவர்க முன்னேற்றத்திற்கு ஹர்பான் சிங் அவர்கள் தலைமையிலே ஒரு கமிட் போடப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு அந்தக் கமிட்டியின் சிபாரி அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அங் கரிக்கப்பட்ட முடிவுகள் எப்படி அமுலாகியிருக்கின்றன என்பதற்கு திரு. ஹ

பாஸ்கர் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. அதற்குப் பிறகு இன்றைய தினம் மாண்புமிகு நாவலர் அவர்களும், மத்திய அமைச்சர் திரு. சர்மா அவர்களும் 'நேஷனல் சைல்ட் வெல்பேர் பிராஜக்ட்' என்று தொடங்கி வைத்தார்கள். பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவையெல்லாம் யானைப் பசிக்கு சோளப் பொறியாகத்தான் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் பேரவையில் அறிவிக்கும்போது, இவர்களுக்கு இன்ஸ்யூரன்ஸ் திட்டம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். எல்லாக் குழந்தைகளையும், எல்லாத் தொழிலாளர்களையும் இன்ஸ்யூரன்ஸ் கவர் பண்ண வேண்டும். அதற்கு பிரிமியம் மேனேஜ்மென்ட் செலுத்த வேண்டும், சர்க்கார் செலுத்த வேண்டும். தொழிலாளர்கள் போட வேண்டுமென்று நிர்பந்திக்கும நேரமில்லை இது. அவர்கள் அந்த அடிப்படையிலே பதிவு செய்யப்பட வேண்டும். அவர்கள் 'தொழிலாளர்கள்' என்று பதிவு செய்ய வேண்டும். குழந்தைத் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்ட அனுமதிக்காமல், அவர்களுக்கு 2 மணி நேரம் கல்வி அங்கே அளிக்க வேண்டும் என்று இருக்கிறது ஆனால் இது எவ்வளவு தூரம் அமுலாகியிருக்கிறது என்றால், குறைந்த அளவுக்குத்தான் அமுலாகியிருக்கிறது. அதற்கு பேக்டரியில் இருக்கிறவர்கள் 'இன்ட்ரஸ்ட்' எடுப்பதில்லை. அவர்கள் இதற்காக பஸ் சலுகையில் வாங்கிக் கொண்டு, அதிலே குழந்தைகளை மூட்டை அடைப்பதுபோல அடைத்து, அழைத்து வருகிறார்கள். பேக்டரிக்கு வந்துவிட்டால், அவர்கள் எழுந்து போக முடியாது. ஒரு தடவை, இரண்டு தடவை எழுந்திருக்கலாம். காலை 8 மணிக்கு ஒரு தடவை சாப்பிடுகிறார்கள். அதிலே பாதி மீதி வைத்துக் கொண்டு, அதை மத்தியானம் சாப்பிடுகிறார்கள். அதுவும் கஞ்சிதான் மேனேஜ்மென்டில் ஊறுகாய்கூட தர மாட்டார்கள். அவ்வளவு வள்ளல்கள் அவர்கள். மறுபடியும் மாலை 6 மணிக்கு அவர்களை அந்த பஸ்சில் அடைத்து, வீட்டிலே கொண்டு வந்து விடுகிறார்கள். 8 மணிக்குப் படுக்கிறார்கள். இதிலே எந்தத் தொழிற் சங்கத் தலைவரும் 'இன்ட்ரஸ்ட்' எடுக்க முடியாது. இதற்கு ஒரு 'செக்-அப் வரப்போவதில்லை. பெரிய தலைவர்கள் இங்கே எல்லாம் சுற்றிப் பார்ப்பதில்லை. எனவே அரசாங்கம்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். குழந்தை தொழிலாளர்களைப் பாதுகாக்க, அவர்கள் சீரழிந்து கொண்டிருப்பதைத் தடுக்க வேண்டும். ஒவ்வொரு மையத்திலும் பள்ளி இருக்க வேண்டும். அங்கே இவர்களுக்குக் கல்வி சொல்லிக் கொடுக்க வேண்டும். அதை ஆமை வேகத்தில் செய்யக் கூடாது. அவசர உணர்வோடு செய்ய வேண்டும். அப்போதுதான் அவர்களைப் பாதுகாக்க முடியும். அரசு இலவசமாகப் புத்தகம் தருகிறது. சத்துணவு போடுகிறது, இலவசச் சீருடை தருகிறது. இவ்வளவு கொடுத்தும், அந்தக் குழந்தைகள் வரவில்லை என்றால்,



அவற்றை வாங்கும் நிலைமையில் அந்தக் குழந்தைகள் இல்லை. அதை விட்டுவிட்டு, இதில் கூலி கிடைக்கிறதென்று வருகிறார்கள். நாம் அந்தக் கூலியைக் கூட்டியிருக்கிறோம். 7 ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் என்று சட்டம் போட்டிருக்கிறோம். டி.ஏ. கொடுக்க வேண்டுமென்று சட்டம் போட்டிருக்கிறோம், அது ரூ. 1.10 அல்லது ரூ. 2.10 வருகிறது. ஆக மொத்தம் -8 ரூபாய் கொடுக்கும் அளவுக்கு சட்டம் போட்டிருக்கிறார்கள். அதை அமுலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே இந்த அடிப்படையில் குழந்தைகள் தொழிலாளர்களைப் பாதுகாக்கும் சட்டம் கொண்டுவர வேண்டும். வெடி மருந்துத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், மத்திய அரசின் கன்ட்ரோல் இருக்கிறது. அவர்கள் ஏதாவது தவறு செய்தால், லைசன்சை 'வித்டிரா' செய்கிறார்கள். ஆனால் நம்முடைய ஆய்வாளர்களுக்கு அந்த அதிகாரமில்லை. அப்படிப்பட்ட அதிகாரங்கள் இருக்க வேண்டும். அவை தொழிலாளர்களைப் பாதுகாக்கப் பயன்பட வேண்டும். அந்த அடிப்படையில் சட்டத் திருத்தம் வேண்டுமென்றால், அதைக் கொண்டுவர வேண்டும். அமைப்பு ரீதியாக இல்லாத கட்டிடத் தொழிலாளர்கள், சைக்கிள் ரிக்ஷா தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள்—யாராக இருந்தாலும், அவர்களைப் பாதுகாக்க முனைப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குரிய முறையிலே திருத்தச் சட்டங்களைக் கொண்டுவர வேண்டும். இப்போது 'பேமென்ட் ஆப் வேஜஸ் ஆக்ட்'படி நடவடிக்கை எடுத்தால், 2 வருடங்கள் ஆகிறது. ஆறு மாதங்களுக்குள் அவற்றை 'டிஸ்போஸ்' பண்ண விதிமுறைகளைத் திருத்த வேண்டும். அப்படிப்பட்ட திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று கூறி, வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன்.

திரு. அ. மாயவன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தொழிலாளர் நிலைமை பற்றிய கொள்கைக் குறிப்பில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொழிலாளர்களைப் பாதுகாக்க பல சட்டங்கள் இருக்கின்றன. சட்டங்கள் ஆயிரம் இருக்கலாம். ஆனால் அந்தச் சட்டங்கள் எல்லாம், பல தொழிற்சாலைகளிலே சட்டப் புத்தகங்களிலேதான் இருக்கின்றன. அவற்றைச் சரியாக அமுல்படுத்துவதில்லை. அவற்றை அமுல்படுத்துகிறார்களா என்று லேபர் கமிஷனர், மற்ற அலுவலர்கள் எல்லாம் சரியாகக் கண்காணிப்பதில்லை. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் இந்தச் சட்டங்களைச் சரியாக அமுல்படுத்துகிறார்களா என்று கண்காணிக்காததால், தொழிலாளர்களுக்கு பல இன்னல்கள்

ஏற்படுகின்றன. மேலும் பல சட்டங்கள், பல தொழிற்சாலைகளின் கதவுகளுக்கே போவதில்லை. ரைஸ் மில்கள், தையல் கடைகள், மோட்டார், ஸ்கூட்டர் பழுது பார்க்கும் தொழிற்சாலைகள், பாத்திரம் செய்யக்கூடிய தொழிலகங்கள், ஐஸ் பேக்டரிகள், சோடா பேக்டரிகள் எல்லாம் இருக்கின்றன. இந்த இடங்களில் எல்லாம் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

ஆனால் தொழிலாளர் நலச் சட்டங்கள் அந்த இடங்களில் அமுல்படுத்தப்படவில்லை. குறைந்தபட்ச ஊதியம்கூட தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இது வேதனை தரக்கூடிய ஒன்று. அங்கே எல்லாம் யார் வேலை செய்கிறார்கள் என்று பார்த்தால், அனைவருமே சமுதாயத்திலே மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையிலுள்ளவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள். இப்படிப்பட்ட மக்கள் பணியாற்றக்கூடிய தொழிற்சாலைகளிலே எல்லாம் தொழிலாளர் நலச் சட்டங்களை கராராக அமுல்படுத்த வேண்டும். அப்படிச் செய்து அவர்கள் குறைந்தபட்ச ஊதியம் பெற வழிவகை செய்ய வேண்டும். இதற்கு அமைச்சர் ஆவன செய்ய வேண்டும். ஐஸ் பேக்டரி, சோடா பேக்டரி, அச்சகங்கள், தையல் தைக்கும் இடங்கள் போன்ற தொழில்களில் எல்லாம் 1 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அங்கேயெல்லாம் கடந்த 15 வருடங்களாக தொழிலாளர் நலச் சட்டங்கள் அமுல்படுத்தப்படவில்லை. அவர்களுக்கும் இதனை அமுல்படுத்தி, குறைந்தபட்ச ஊதியத்தைப் பெற ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, ஒப்பந்தத் தொழிலாளர்கள், கான்ட்ராக்ட் லேபரர்ஸ் ஏராளமான பேர் இருக்கிறார்கள். மின் வாரியத்தில் மட்டும் 15 ஆயிரம் பேர்களுக்கு மேல் இவர்கள் இருக்கிறார்கள். அதுபோல போக்குவரத்து இலாகாவில் ஏராளமான பேர் இருக்கிறார்கள். இப்படியே இவர்கள் எல்லாம் வருடக்கணக்கில் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்க வேண்டுமா? இனியும் காலம் தாழ்த்தாமல் இவர்களை எல்லாம் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டும். இன்றைக்கு இவர்களுடைய உழைப்பைச் சுரண்டுகிறார்கள். அவர்களுக்குச்



சரியாகக் கூலி கொடுப்பதில்லை. கூலியையும், உழைப்பையும் சுரண்டுகிறார்கள். ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்கிற நிலைமை இல்லாமல் ஒழிக்க வேண்டும். அனைவரையும் நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்க வேண்டும்.

குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. இன்றைக்கு கிராமப்புறத்திலே விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனாலும் அவர்களுக்குச் சரியாக அது அமுல்படுத்தப்படவில்லை. அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை முன் வைத்துப் போராடும்போது மட்டும்தான், அரசுக்கே விவசாயத் தொழிலாளர்களைப் பற்றிய எண்ணம் வருகிறது. அப்போதுதான் அரசு "ஒரு நாளைக்குக் கூட சரியான முறையில் கூலி பெறாமல் இருக்கக்கூடிய, வாடக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்களே, இப்படிப்பட்ட நிலையில் உங்களுக்கு ஊதிய உயர்வு வேண்டுமா?" என்று கேட்கிறார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தைக் கொடுப்பதற்கு குறுக்கே எந்த அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இல்லை. ஆனால் நியாயமான கோரிக்கைகளுக்காக நாங்கள் போராடுகிறபோது மட்டும்தான், அரசுக்கு அவர்களைப் பற்றிய எண்ணமே வருகிறது. இப்படிப்பட்ட எண்ணத்திற்கு மாறாக, உள்ளபடியே கிராமப்புறத்தில் வாழ்கிற விவசாயத் தொழிலாளர்களின் நலனுக்காக, நிரந்தரமாகக் குறைந்தபட்சக் கூலியைக் கொடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு நிலச்சுவான்தார்கள் குறைந்தபட்ச ஊதியத்தை எந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கவில்லை.

இன்னொன்று. இன்றைக்கு நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற தொழிலாளர்கள் போராடுகிறபோது, போராட்டத்தை நசுக்கக்கூடிய வகையிலே அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. உதாரணத்திற்கு மின் வாரியத்தில் இருக்கிற தொழிலாளர்கள் அகில இந்திய மின் தொழிலாளர்களுக்கு ஆதரவாக ஒரு நாள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அதற்காக ஒரு நாள் சம்பள வெட்டு செய்திருக்கிறார்கள். அது போல அரசு ரப்பர் பிளான்டேஷன் நியாயமான கோரிக்கையை முன் வைத்து தொழிலாளர்கள் போராடினார்கள். உண்ணாவிரதம் இருந்ததை அனுமதிக்கவில்லை. அதற்காக ஒரு நாள் சம்பளம் 'கட்' பண்ணப்பட்டிருக்

கிறது. இப்படி தொழிலாளர் நலச் சட்டங்களையும், குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டுமென்ற சட்டத்தையும் யாருமே சரியாகக் கடைப்பிடிக்கவில்லை.

அடுத்து, இங்கே தரப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பிலே முதல் பாராவில் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்திலுள்ள தொழில் அதிபர்கள் தங்களுடைய பணியைத் தொடர்வதற்கு, தொழில் அமைதியை ஏற்படுத்தித் தருவதுதான் இந்த அரசின் தலையாய கடமை என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால், நியாயமான வேலை நிறுத்தத்தை அனுமதிக்க மாட்டோம், தொழிலாளர்கள் உரிமையுடன் போராட அனுமதிக்க மாட்டோம் என்றுதானே அர்த்தம். அந்த வகையில் தொழிற்சாலைகளை மூட விட மாட்டோம், அமைதி ஏற்படுத்துவோம் என்றுதானே அர்த்தம். அப்படிப்பட்ட நிலைமையை ஏற்படுத்துவதுதான் அரசின் கடமை என்று சொல்வதன் மூலம், போலீஸ் துறையை இதிலே உட்படுத்தி ஸ்ட்ரைக்கை உடைக்க அரசே முயன்று வருகிறது என்றுதானே அர்த்தம். தொழிலாளர்கள் தொழிற் சங்க உரிமையை முழுமையாகப் பயன்படுத்தாமல் இருக்க பாதுகாப்பு என்றுதானே அர்த்தம். ஒரு தொழிற்சாலையில் ஸ்ட்ரைக் நடக்கிறது என்றால், அங்கே போலீசுக்கு வேலையே இல்லை. 'லா அன்ட் ஆர்டர் பிராப்ளம்' ஒன்றும் அங்கே இல்லை. போலீஸ் அங்கே தேவையில்லை.

(முற்பகல் 11-15)

அங்கே இருக்கக்கூடிய முதலாளிகளின் செய்கையின்பேரில், அங்கே போலீஸ் வந்து, தொழிலாளர்கள் மத்தியில் பதட்ட நிலை ஏற்படுகிறது. பொதுவாக ஸ்டிரைக் என்று வந்தால், காவல்துறை தலையிடாமல் தள்ளியே இருக்க வேண்டும். முன்பு ஒருமுறை முதலமைச்சர், "இந்த அரசு, தொழிலாளர்கள் ஸ்டிரைக் போன்ற பிரச்சினைகளில் ஈடுபட்டிருக்கும்போது, காவல் துறையினர் தலையிடமாட்டார்கள் என்று கொள்கை வைத்திருக்கிறது" என்று சொன்னார். அது இப்போது இல்லை. போலீசார் எடுத்ததற்கெல்லாம் முதலாளிகளின் அழைப்பின்பேரில் தொழிற் சங்க நடவடிக்கைகளில் அனாவசியமாகத் தலையிடுகிறார்கள். இந்த 'பாலிசி' சரியில்லை. இதனால் தொழில் அமைதி கெடுகிறது. போலீசார் தலையிடுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.



அடுத்ததாக, செய்திப் பத்திரிகைகளில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்குச் சரியாக ஊதியம் கொடுக்கவில்லை. காரணம் பல செய்திப் பத்திரிகைகள் அரசியல் சார்பாக வருகின்றன. என்னைப் பொறுத்த வரையில், 'விடுதலை', 'தீக்கதிர்', 'ஜனசக்தி' போன்ற பத்திரிகைகள்தான் அரசியல் கட்சி சார்புடையதாக இருக்கின்றன. மற்ற பத்திரிகைகளும் கட்சி சார்புடையவை என்று சொல்லலாம். ஆனால் அவைகள் தனித்தனிக் குழுக்களாகவேதான் வருகின்றன. அங்கே வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்குச் சரியாகச் சம்பளம், ஊதிய உயர்வு, லீவு வசதிகள் கொடுக்கப்படவில்லை. இங்கே உள்ள 'கமிஷனர் ஆப் லேபர்' போன்ற அதிகாரிகள் அது போன்ற பத்திரிகைகளைக் கேட்கப் பயப்படுகிறார்கள். அங்கே போனால் அரசியல் கட்சிகளின் கோபத்துக்கு ஆளாவோமோ என்று பயப்படுகிறார்கள். இது குறித்து பலேகர் கமிஷன் பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரை அமல் செய்யப்படுகிறா என்று கூட பார்ப்பதில்லை. மத்திய அரசு எல்லா மாநிலங்களுக்கும் தாக்கீது அனுப்பி, பலேகர் கமிட்டியின் பரிந்துரைகளை பத்திரிகைகள் பின்பற்றுகின்றனவா என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் மாநிலத் தொழிலாளர் நல அதிகாரிகள் அந்தப் பத்திரிகைகளைக் கண்டு அரசியல் காரணமாக பயப்படுகிறார்கள். ஆகவே பலேகர் கமிட்டியின் பரிந்துரைகளை அமல்படுத்த இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலும் பிற இடங்களிலும் நர்சரி பள்ளிகள் அதிக அளவில் தோன்றுகின்றன. இதைத் தவிர மத்திய போர்டு உள்ள சி.பி.எஸ்.ஐ. பள்ளிகளும் அதிக அளவில் இருக்கின்றன. அங்கே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு சரியான முறையில் ஊதியம், ஊதிய உயர்வு, லீவு வசதிகள் கொடுக்க மறுப்பதாகத் தெரிகிறது. பொதுவாக இப்போது நர்சரி பள்ளிகள் ஒரு 'இன்டஸ்டிரி' மாதிரி ஆகிவிட்டது. இப்படிப் போனால், இத்தகைய பள்ளிகளுக்கும் தமிழ்நாட்டின் கல்விக் கொள்கைக்கும் சம்பந்தம் இல்லை. பள்ளிகளைத் தொழில் (இண்டஸ்ட்ரி) போன்று நடத்தி வருகிறார்கள். ஆகவே இவர்களுக்கும் ஐ.டி. ஆக்ட்-ஐ அமல்படுத்த வேண்டும். உதாரணமாக, ஆவடியில் வைஜயந்தா ஃபாக்டரி நடத்தும் செகண்டரி பள்ளி இருக்கிறது. அங்குள்ள பள்ளி ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை. ஊதிய உயர்வு கேட்டால் வேலை நீக்கம், பேறுகால விடுப்பு கேட்டால் வேலை நீக்கம் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அந்த வைஜயந்தா செகண்டரி பள்ளியின் நிர்வாகிகள் (சேர்மன்) கிட்டத்தட்ட இந்தக் காரணங்களுக்காக மூன்று பள்ளி ஆசிரியர்

களை வேலை நீக்கம் செய்து பணி பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகவே, பள்ளி ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பைக் கருதி, ஐ.டி. ஆக்ட் படி தொழிற் சங்கங்களுக்கு இருப்பதுபோல், தொழிலாளர் நலச் சட்டங்களை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் தியாகராயர் நகரில் 1943 ஆம் ஆண்டு முதல் மகளிர் தொழில் பயிற்சி நிலையம் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையம் மகளிருக்காக இன்றையதினம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது.

(முற்பகல் 11-20)

ஆனால் என்னைப் பொறுத்தவரையில், சென்னையில் மூன்று அல்லது நான்கு மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்களாவது ஏற்படுத்த வேண்டும். ஆனால் இப்போது, ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு என்று ஒன்றுதான் இருக்கிறது. அதையும் சென்னையிலிருந்து செங்கல்பட்டுக்கு மாற்றக்கூடிய நடவடிக்கை களை அதன் நிர்வாகம் மேற்கொண்டிருக்கிறது. அதற்காக "நோட்டீஸ்" எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். மேற்படி தொழிற் பயிற்சி நிலையம் அதே இடத்தில் தொடர்ந்து நடைபெறுவதற்கு அருள்கூர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மகளிர்க்கு என்று பல தொழிற் பயிற்சி நிலையங்களை சென்னையிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தும் நிலையை உருவாக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர்களுக்கான வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைகள் கிடைக்கப் பெற வழிவகை களைக் காண வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இன்னும் ஓரிரு நிமிடங்களில் முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. அ. மாயவன்:** அதேபோல் நல்லாசிரியர் விருது வழங்கும்போது, இந்தத் தொழிற் பயிற்சி ஆசிரியர்களையும் கவனத்தில் கொள்ள வேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள்கூட சொன்னார்கள். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதிக்கக் கூடாது; கண்டிப்பாகத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அவர்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு வசதிகளைக் கெடுக்கக்கூடாது. தீப் பெட்டித் தொழிற்சாலை, ஹோட்டல் மற்றும் பெட்ரோல் பங்குகள் முதலிய இடங்களிலும், மற்றும் பாத்திரங்கள் செய்யுமிடங்களிலும் அவர்கள் வேலை செய்கிறார்கள். இன்னும் பல வீடுகளில் வீட்டு வேலைகளுக்குச் சிறுவர் களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டும். அவர்களைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு, கட்டாயக் கல்வி போதிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் வேலை செய்வதை எக்காரணத்தைக்கொண்டும் அனுமதிக்கக் கூடாது.

இவ்வாறு சிறுவர்கள் வேலைக்குப் போவதற்குக் காரணமே, அவர்கள் வீடுகளில் உள்ள வறுமை நிலைதான். வறுமை நிலையை நாம் போக்குவோ மானால்—அவர்களது தாய் தந்தையருக்கு இந்த அரசு ஏதேனும் வேலை கொடுக்குமானால், தமிழ் நாட்டில் இருக்கும் அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்குமானால்—சிறுவர்கள் வேலைக்குப் போக வேண்டிய அவசிய மிருக்காது. ஒவ்வொரு வீட்டிலும் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ வருமானம் தேடித் தரக்கூடிய வேலை ஒன்று கொடுப்போமானால், இவ்வாறு சிறுவர்கள் வேலைக்குப் போவதைத் தடுத்து நிறுத்த முடியும். அதைச் செய்யாத வரைக்கும் சிறுவர்களை வேலைக்குப் போவதைத் தடுத்து நிறுத்துவது மிகவும் கடினம். எனவே ஒவ்வொரு வீட்டிற்கும் வருமானம் வரக்கூடிய வசதி வாய்ப்புகளை அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, இப்போது ஒவ்வொரு தொழிற்சாலையில் ஏராளமான தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. ஆளும் கட்சியைச் சார்ந்த தொழிற் சங்கங்களும் இருக்கின்றன; எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த தொழிற் சங்கங் களும் இருக்கின்றன. இந்நிலையை மாற்ற வேண்டும். ஒரு தொழிற் சாலைக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்க வேண்டும். அந்தத் தொழிற் சங்கத்தைத் தொழிலாளர்கள் இரகசிய வாக்கெடுப்பு மூலம் (சீக்ரட் பேலட் மூலம்) தேர்ந்தெடுக்க வழிவகைகளைச் செய்ய வேண்டும். அப்போதுதான் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு தொழிற் சங்கம் செயல்படுவது சாத்தியம். அப்போதுதான் தொழிற்சாலைகளில் தொழில் அமைதி நிலவு வதும் சாத்தியமாகும். எனவே இதைக் கறாராக அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரகசிய வாக்கெடுப்பு மூலமாக தொழிலா

ளர்கள் தொழிற் சங்கங்களைத் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொண்டுவர வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுக்கும் தொழிற் சங்கங்களை அரசும் நிர்வாகமும் அங்கீகரிக்க வேண்டும். இப்போதுள்ளதுபோல பல தொழிற் சங்கங்களை அங்கீகரிப்பதைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பல இடங்களில் தொழிலாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. ஆனால் அரசாங்கமோ அல்லது நிர்வாகமோ அச்சங்கங்களின் தலைவர்களை அழைத்துப் பேசமாட்டார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த தொழிற் சங்கத் தலைவர்கள் மைனாரிட்டியாக இருந்தாலும் அவர்களைத்தான் அழைத்துப் பேசுகிறார்கள். இதையெல்லாம் தடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதெல்லாம் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்கள் குறைவாகத் தான் இருக்கின்றன. ஆனால் நிர்வாகங்கள் 'லே ஆப்' கொடுப்பதும் 'லாக் அவுட்' செய்வதும் அதிகமான அளவில் இருக்கின்றன. தமிழ் நாட்டில் மிக அதிகமான அளவில் இப்போக்குகள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலைமையில் தொழில் அமைதி கெடுவதற்கு யார் காரணம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தொழிலாளர்களா அல்லது நிர்வாகமா யார் காரணம் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமைகளைத் தடுக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசின் கொள்கை தொழிலாளர்களைப் பாதுகாக்கக்கூடிய அளவில் இல்லை. உதாரணமாக தலைமைச் செயலக ஊழியர்கள் இன்றைக்குப் பல பேர் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். நான் அரசை மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 11-25)

அவர்கள் எந்தத் தவறையும் செய்யவில்லை. அவர்கள் ஜெயிலுக்குப் போக வில்லை. தலைமைச் செயலகத்தில் இருந்து அவர்கள் கோஷம் போட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களை இவ்வளவு நாட்களாகத் தற்காலிக வேலை நீக்கத்தில் வைத்திருப்பது சரியல்ல. இது எதைக் காட்டுகிறது என்றால் அரசாங்கத்தினுடைய தொழிலாளர் நலக் கொள்கையை





டப்பட்டமாகப் பறைசாற்றுகிறது. அரசாங்கம் தொழிலாளர்கள் பக்கம் இல்லை; தொழிலாளர்களுக்கு விரோதமாக இருக்கிறது என்பதைப் பட்ட வர்த்தனமாகப் பறைசாற்றக்கூடியதுதான் இது. ஆகவே . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, அவர்கள் கோஷம் மட்டும்தான் போட்டார்களா? வேறு எதுவுமே செய்ய வில்லையா? அவர்கள் சட்டவிரோதமாக நடக்கவில்லையா? அவர்கள் உள்ளே இருப்பவர்களை எல்லாம் வெளியே இழுத்து வரவில்லையா? சட்டத் திற்கு விரோதமாக, கூடக் கூடாது என்ற விதிக்கு மாறாகக் கூடவில்லையா? உண்ணாவிரதம் இருக்கக் கூடாது என்ற சட்டத்தைச் சொல்லியும், அவர்கள் உண்ணாவிரதம் இருக்கவில்லையா? ஆக அவர்கள் வெறும் கோஷம் மட்டும் தான் போட்டார்களா ?

**திரு. அ. மாயவன்:** துணைத் தலைவரவர்களே, உண்ணாவிரதம் என்பது ஒரு பெரிய சட்ட விரோதச் செயலல்ல என்பதை . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, உண்ணாவிரதம் என்பது சட்டவிரோதச் செயலல்ல. எத்தனையோ பேர்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களையெல் லாம் சட்டவிரோதம் என்று சொல்லி அத்தனை பேர்களையும் அரசு கைது செய்து கொண்டிருக்க முடியுமா ?

**திரு. அ. மாயவன்:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல மைச்சர் அவர்கள் கூட பல கோரிக்கைகளை வலியுறுத்தி இரண்டு முறை உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அவர்கள் அந்த உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கும்போது . . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, மீண்டும் மீண்டும் சொல்கிறேன், அது உண்ணாவிரதத்தைப் பொறுத்ததல்ல. அலுவலர்கள் தலைமைச் செயலகத்தில் உண்ணாவிரதம் இருக்கக்கூடாது. ஆனால் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பது வேறு. அரசு அலுவ லர்கள் வேலைக்குச் சேரும்போதே, அவர்கள் தலைமைச் செயலகத்தில் உண்ணாவிரதமோ, ஸ்ட்ரைக்கோ, கெரோவோ செய்வதில்லை என்று 'கான்

டக்ட் ரூல்ஸ்க்கு' உட்பட்டுத்தான் வேலை செய்கிறார்கள். அதை அவர்கள் மீறுவது நியாயம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. அ. மாயவன்:** துணைத் தலைவரவர்களே, நான் மீண்டும், மீண்டும் அதைத்தான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன வாசகங்களே அந்த உரிமைகளை அந்தத் தொழிலாளர்களுக்கு, ஆசிரியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு இந்த அரசாங்கம் தரத் தயாராக இல்லை என்பதைத்தான் காட்டுகின்றன என்றுதான் நானும் சொல்ல விரும்புகிறேன், நியாயமான உரிமைகளை, போராடக்கூடிய உரிமைகளை இந்த அரசாங்கம் பறிக்கிறது என்றுதான் நானும் சொல்கிறேன். அதுபோல் மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொல்கிறார்கள் . . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** துணைத் தலைவரவர்களே, அரசாங்கம் பறிக்கிறதா, இல்லையா என்பதை நாடு அறியும்; நல்லவர்கள் அறிவார்கள்; நடுநிலையில் உள்ளவர்கள் அறிவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாயவன் ஒப்புக்கொண்டாலும் சரி, ஒப்புக்கொள்ளாவிட்டாலும் சரி, புறக்கணித்தாலும் சரி, அதைப்பற்றிக் கவலை இல்லை. ஆனால் இந்த அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளை நாடு ஒப்புக்கொண்டுள்ளது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. மாயவன்:** துணைத் தலைவரவர்களே, ஆகவே அந்தப் பிரச்சினைக்குள் நான் அதிகமாகப் போக விரும்பவில்லை. அரசு அந்த அலுவலர்களை இதுவரை தற்காலிக வேலை நீக்கத்தில் வைத்தது போதும்; அவர்களைத் தண்டித்தது போதும். ஆகவே அருள்கூர்ந்து அரசு அவர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டும். அதிகாரிகள் நம்முடைய அரசாங்கத்தின் பெயரைக் கெடுப்பதற்கு பல வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் பலியாகிவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆகவே அந்த அலுவலர்களை மீண்டும் பணியில் அமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** உறுப்பினரவர்கள் அதோடு முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. அ. மாயவன்:** துணைத் தலைவரவர்களே, முடித்துக்கொள்கிறேன்





**திரு. மு. செ. சங்கரலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, தொழிலாளர் நலம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், குறிப்பிட்ட ஒரு கொள்கை நிறைவேற்றப்படவில்லை என்பதோடு, நான் ஒரு சிறு உதாரணத்தைக் காட்டிச் சொல்ல விரும்புகிறேன். தமிழக அரசு பிறப்பித்த ஆணை எண் 2274, கட்டிடத் தொழிலாளர்கள் விபத்தில் இறந்தால் முதலமைச்சர் நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறது. என்ன காரணமென்று எனக்குத் தெரியவில்லை, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில், கட்டிடத் தொழிலாளர்களுக்கு விபத்து நேர்ந்தால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை. ஆகவே அதைக் கொள்கை அளவிலே இந்த அரசு ஒப்புக்கொள்ளவில்லையா என்ற சந்தேகம் வரும்போது, கட்டிடத் தொழிலாளர்கள் ஒரு வாரத்திற்கு முன்னால் உண்ணாவிரதம் இருந்தார்கள்; அவர்கள் இறந்தபோது 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கவில்லை என்பது இங்கே குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. 22 தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவையொட்டி கொள்கை அறிவிக்கப்பட்டு, ஆணை பிறப்பிக்கப்பட்டு, கொள்கை விளக்கக் குறிப்பிலே சேர்க்காமல் இருந்து, இதுவரை இறந்த கட்டிடத் தொழிலாளர் யாருக்குமே 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கவில்லை. ஆனால் கொள்கை அதுபற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது ஏன் கொடுக்கப்படவில்லை என்பதை நான் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறேன். தமிழகத்தில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் இறந்து போனால், 20 ஆயிரம் ரூபாய் அரசு கொடுக்கிறது. ஆனால் கட்டிடத் தொழிலாளர்கள் இறந்து போனால், 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதில்லை. உண்ணாவிரதம் இருந்த அந்த 22 பேர்களைப்பற்றிக் கூட இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் இறந்துபோன மீனாட்சிசுந்தரம், கோவில்பட்டி மற்றும் கிருஷ்ணையா, சென்னை, ஊட்டியில் 12 பேர்கள் ஆகிய

[திரு. மு. செ. சங்கரலிங்கம்] [1986 மே 10

(முற்பகல் 11-30)

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

இவர்களுக்கெல்லாம் ரூ. 10,000 நட்ட ஈடு கேட்டும் கொடுக்கப்படவில்லை, இன்றைக்கும் அதைக் கேட்டு அலைந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அரசாங்கம் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசே அதற்காக ஒரு ஆணை போட்டு, அதை அஃதே செயல்படுத்தவில்லை என்றால், எப்படி நியாயமாகும் என்பதை மாற்றுத் தலைவர் அவர்கள் மூலமாகப் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். நிர்வாகம் தொழிலாளர்களைப் பழி வாங்குவது என்பது இயற்கை. தமிழக அரசும் ஒரு பெரிய நிர்வாகமாகும். நிறைய முதல் போட்டு நடத்தப்படும் பெரிய நிர்வாகம். தொழிலாளர்களை நிர்வாகம் பழி வாங்கினால், தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு பெற்ற பிறகும் கூட, அந்தத் தீர்ப்பை அரசு நிறைவேற்ற மறுப்பதும், தொழிலாளியை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள மறுப்பதும் சரியல்ல. குறிப்பாக ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திரு. கே. சுந்தரராஜன் என்பவர் அரசாங்கத்திற்குச் சொந்தமான கால்நடைப் பண்ணையான அபிஷேகப்பட்டியில் பணியாற்றி வந்தார். அவர் 2—11—1976-ல் வேலைக்கு நியமனம் செய்யப்பட்டார். 12—9—1980-ல் பணிநீக்கம் செய்யப்பட்டார். அவ்வாறு பணி நீக்கம் செய்யப்பட்டது தவறு என்று சொல்லி, அவர் தொழிலாளர் நல நீதிமன்றத்திற்கு முறையீடு செய்து கொண்டார். அதை விசாரித்த நீதிபதி அவரைப் பணிநீக்கம் செய்தது தவறானது, என்று தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறது. நீதிபதி அளித்த தீர்ப்பை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

"மனுதாரரை வேண்டுமென்றே, அவர் தொழிற்சங்க நடவடிக்கைக்காகப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே நிர்வாகம் வேலை நீக்கம் செய்துள்ளது. மனுதாரர் பணியின்றி இருத்தல் முறையானதல்ல. தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் அவருக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும். ஆகவே நிர்வாகம் மனுதாரருக்கு மீண்டும் வேலையைக் கொடுக்க வேண்டும். 12—9—1980 முதல் முன்தேதியிட்டு அவருக்குச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். இதர சலுகைகளும் தரப்பட வேண்டும்" என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. 1985 ஆம் ஆண்டில் இந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டது. அதாவது ஓராண்டுக்கு முன்னாலே அளிக்கப்பட்டது. அரசாங்கத்தால்



1986 மே 10] [திரு. மு. செ. சங்கரலிங்கம்]

நியமிக்கப்பட்ட நீதிபதி இந்தத் தீர்ப்பை அளித்திருக்கிறார். ஆனாலும் அவர் அளித்த தீர்ப்பை இந்த அரசு இதுவரை அமுல்படுத்தவில்லை. ஓராண்டாகியும்கூட, அந்தத் தொழிலாளிக்கு வேலை கொடுக்கப்படவில்லை. இது வேண்டுமென்றே பழிவாங்கும் முறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று நீதிபதி தன் தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார். அப்படி இருந்தும், அந்தத் தொழிலாளிக்கு மீண்டும் வேலை அளிக்கப்படவில்லை. தொழிலாளர் நல அரசு என்று கூறிக் கொண்டே, தொழிலாளர் நலத்துறையின் நீதிபதி அளித்த தீர்ப்பை இந்த அரசு நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை என்றால், நாட்டில் உள்ள மற்ற நிர்வாகங்கள் தொழில் கோர்ட்டு அளிக்கும் தீர்ப்புகளை எவ்வாறு அமுல்படுத்தும் என்றுதான் கேட்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிர்வாகங்களை இந்த அரசு எப்படித் தட்டிக் கேட்க முடியும் என்று கேட்க விரும்புகிறேன். எனவே அரசு இதில் உடனடியாகத் தலையிட்டு அவருக்கு நிவாரணம் அளிப்பதோடு இதுபோன்ற நிலைமையில் தீர்ப்பளிக்கப்பட்ட பின்னரும், இனியாவது தொழிலாளர்களைப் பழி வாங்க வேண்டாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தொழிலாளர்களுக்குச் சம்பள நிர்ணயச் சட்டம் ஒன்று இயற்றப்பட்டிருக்கிறது. அதுபற்றி ஒரு அரசாணை வெளியிடப்பட்டது. அரசாணை எண் 1568. அந்த அரசாணைப்படி குறைந்தபட்ச கூலி தமிழகத்தில் அமுல்படுத்தப்பட வேண்டும். அதாவது நகரத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ரூ. 16, ரூ. 17.50 மற்றும் ரூ. 24 என்று அளிக்கப்பட வேண்டும். கிராமப்பகுதிகளில் பணியாற்றுகிறவர்களுக்கு ரூ. 25 மற்றும் ரூ. 16-50 என்றும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் இருக்கிறது. ஆனால் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற தொழிலாளர்களுக்குக்கூட இந்தக் கூலி கொடுக்கப்படுவதில்லை. அதாவது அரசாங்கம் ஆணையைப் போட்டுவிட்டு. தானே அதை நிறைவேற்றாமல் இருப்பது எப்படிச் சரியாகும் என்றுதான் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, ஆண்டுதோறும் 455 புள்ளிக்கு மேல் விலைவாசி ஒவ்வொரு புள்ளிக்கும் 3 பைசா வீதம் அந்தக் கூலியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு ஜனவரி மாதமும் ஆண்டின் தொடக்கத்தில் கூலி நிர்ணயம் செய்ய வேண்டும். இவ்வாறு அரசாங்கமே ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் இந்த ஆணையை அரசாங்கம் கடைப்பிடிக்கிறதா என்றால், இல்லை.

Employees shall be paid Dearness Allowance as indicated below: The Dearness Allowance shall be linked to 455 points in the Madras City Consumer Price Index. For every increase of one point over and above 455 points, three paise shall be paid every day as Dearness Allowance."

அப்படிச் சொல்லப்பட்ட பின்னாலே 1984 ஆம் ஆண்டு ஜனவரியிலோ அல்லது 1985 ஆம் ஆண்டு ஜனவரியிலோ அந்த அடிப்படையில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. 1986 ஆம் ஆண்டு ஜனவரியில் கூட அந்த அடிப்படையில் கூலி நிர்ணயிக்கப்படவில்லை. இவ்வாறு அரசாங்கத்தின் ஆணையை அரசே செயல்படுத்தாதன் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன். 1983 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட கூலியின் அடிப்படையில் தொழிலாளர்கள் வாழ்க்கையை நடத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன். இந்த நிலையில் தமிழக அரசு கண்டிப்பாக கூலி நிர்ணயச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு என்ன கூலியைத் தர வேண்டுமோ அந்தக் கூலியை கண்டிப்பாக நிர்ணயிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-35)

சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுவது பற்றி 1975 ஆம் ஆண்டு ஹர்பான்சிங் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. அந்தக் கமிட்டியின் அறிக்கை 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையைப் பற்றி அமைச்சரவையில் விவாதிக்கப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டு, அந்த முடிவுகளை வெளியே அறிவிக்காமல், அந்த முடிவுகளின் மீது மேலும் ஒரு கமிட்டியை திரு. ஹரிபாஸ்கர் தலைமையில் அரசு அமைத்தது. 1984 ஆம் ஆண்டு ஹரிபாஸ்கர் கமிட்டி ஆய்வு செய்து, 1985 ஆம் ஆண்டு தன்னுடைய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறது. வெடி மருந்து, பட்டாசு, வாணவேடிக்கை, தீப்பெட்டித் தொழிற்சாலைகள் பற்றி ஓர் அறிக்கை 1985 ஆம் ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு கமிட்டிகளும் கொடுத்த அறிக்கைகள் மக்கள் மன்றத்திலே இதுவரையில் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே தொழிலாளர்களுக்கு ஆதரவாகக் கூறப்பட்டதால்தான், இங்கே அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லையோ



என்ற சந்தேகம் எங்களுக்கு எழுகிறது. ஆகவே இந்த அறிக்கைகளை பேரவைக்கும், மேலவைக்கும்—மேலவை இருந்தால் மேலவைக்கும்—அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடைக்கானலில் கொத்தடிமைகள் ஒழிக்கப்பட்டதாக சொல்லப்பட்டிருக்கிறது. கோடைக்கானலில் மார்ச் மாதம் கொத்தடிமைகள் இருப்பதாகப் புகார் செய்யப்பட்டு, அந்தப் புகாரின் மீது நடவடிக்கை எடுத்த உதவி கலெக்டர் அவர்களின் வேலைக்கே ஆபத்து வரும் நிலைமையில் சுப்ரீம் கோர்ட்டிலிருந்து ஒரு தடையுத்தரவு வந்திருக்கிறது. அவரை வேலை மாற்றம் செய்யக்கூடாது என்று அரசாங்கத் தடை வந்திருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. 'டாண் இந்தியா நிறுவனம்' கான்ட்ராக்ட் மூலமாக ஒரு டன்னுக்கு இரண்டாயிரம் ரூபாய் வாங்கிக்கொண்டு, கூலித் தொழிலாளர்களுக்கு 200 ரூபாய் மட்டும் கொடுத்து மிகவும் மோசமான நிலையில் அவர்களை நடத்தி வருகிறது. ஸ்ரீலங்கா தமிழர்கள் அங்கே குடியமர்த்தப்பட்டிருக்கின்ற நிலைமையில் நாம் அவர்களுக்கு உதவி செய்வதில் அக்கறை காட்டுகிறோமா என்றால், இல்லை. என்பதையும், அவர்களுக்கு ஆதரவாக இருந்தவர்களுக்கே ஆபத்தும் வந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்): ஏற்கெனவே பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன. ஆகவே சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கொத்தடிமைகளைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். இது முக்கியமான பிரச்சினை. இதிலே அரசாங்கத்திலிருந்து பல்வேறு தலையீடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கொடுக்கப்படாமல் அவர்களுடைய கூலி நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே ஏப்ரல் மாதமும், மே மாதமும் சம்பளம் இல்லாமல் வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளியேயிருந்தும் பணம் கொடுக்கப்படவில்லை. அந்த உதவி கலெக்டர் அந்த ஃபாரஸ்டுக்குள் வரக்கூடாது என்று கட்டளையிட்டிருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. அவர் ஃபாரஸ்டுக்குள் வரக்கூடாது என்று டிஸ்ட்ரிக்ட் ஃபாரஸ்ட் ஆபீசர் எழுதிய.

[1986 மே 10

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தப் பிரச்சினையைத் தொடங்கியதிலிருந்தே வெளியே தெருவிலே பேசுகிறவர்கள் பேச்சைக் கேள்விப்பட்டு, செய்திகளைச் சேர்த்தும் குழைத்தும் சொல்லுவதைப் போல கூறுகிறார். அவரிடத்திலே ஏதாவது திட்டவட்டமாகத் தகவல் இருந்தால், அதைத் தெளிவாக இந்தச் சபைக்குத் தெரிவித்தால், அதற்கு அரசுத் தரப்பிலே பதில் சொல்ல முடியும். மாதச் சம்பளம் இப்போது கொடுக்கவில்லை என்று சொன்னார். அவர்கள் எல்லாம் காண்ட்ராக்ட் முறையில் தொழில் செய்கிறவர்கள். இந்த அளவிற்கு பட்டை உரித்தால் சம்பளம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். பட்டை உரிக்கவில்லையென்றால் அவர்களுக்குச் சம்பளம் கிடைக்காது. வனத் துறைக்குள் துணை கலெக்டர் போகக் கூடாது என்று ஆணையிட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அது எப்படி நடக்க முடியும்? ஆகவே தகவலைச் சரியாக இந்த அவைக்குத் தெரிவித்தால், அரசின் தரப்பிலேயிருந்து அதற்குப் பதில் கொடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதாரபூர்வமாக அறிவித்தால், "எங்கேயிருந்து திருடினீர்கள், யாரிடத்திலேயிருந்து வாங்கப்பட்டது?" என்று இங்கே கேட்கப்படுகிறது. ஆகவே தனிப்பட்ட முறையில் அமைச்சரிடம் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** அரசாங்கத் தரப்பைப்பற்றி அவையில் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, தயவு செய்து ரகசியம் தேவையில்லை. உறுப்பினர் அவர்களிடத்திலே ஆதாரம் இருந்தால், தெளிவாக தலைவர் அவர்களுடைய அனுமதியோடு இங்கே தெரிவிக்கலாம். அந்த ஆதாரங்கள் எல்லாம் சரியான ஆதாரங்களாக இருந்தால், அப்படி நடைபெற்றிருந்தால், அரசு அதிலே தலையிட்டு அந்தத் தவறைத் தவிர்க்கும். அப்படித் தவறான தகவல்கள் உறுப்பினர் அவர்களுக்கு அவர்கள் தந்திருந்தால், அந்தத் தகவலையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிப்போம்.

**திரு. மு. செ. சங்கரலிங்கம் :** இதுபோன்ற நிலைமைகள் கோடைக்கானலிலே இருந்துகொண்டிருக்கின்றன. மாதச் சம்பளம் இல்லாவிட்டாலும், தினக்கூலி தரப்பட வேண்டும். நீதிபதி பகவதியின் தீர்ப்புப்படி,





குறைந்தபட்சம் சம்பளம் கொடுத்தால், அவர்கள் கொத்தடிமைகள். அப்படியானால் அங்குள்ள ஒரு நிறுவனத்தில் ஒரு போர்சில், குறைந்த சம்பளம் கொடுத்ததற்காக கொத்தடிமைகள் என்று அவர்கள் கருதப்பட்டு, அவர்கள் விடுவிக்கப்பட்டு, அவர்கள் சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கின்றது. காண்ட்ராக்ட் மூலமாக அது தினக்கூலியாக இருந்தாலும், மாதக்கூலியாக இருந்தாலும், குறைவாகக் கொடுக்கப்பட்டிருப்பது உண்மை.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** ஆனால் கூலி குறைவாகக் கொடுக்கப்பட்டிருந்தால், அது கூலிப் பிரச்சினையே தவிர, அது எப்படி கொத்தடிமைப் பிரச்சினையாகும்? கூலி கூடத் தரவேண்டும் அல்லது குறைவாக இருக்கின்றது என்பது ஒரு தொழிலாளர் பிரச்சினை. தொழிலில் வேலை செய்பவருக்கும் வேலை வாங்குபவருக்கும் இடையில் இருக்கின்ற கூலிப் பிரச்சினையே தவிர, அது எப்படி கொத்தடிமைப் பிரச்சினையாக இருக்க முடியும்?

**திரு. மு. செ. சங்ரகலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் நீதிபதியின் தீர்ப்பின் பேரில் சொல்கிறேன். பகவதி அவர்கள் தீர்ப்பு, குறைந்த சம்பளம் வாங்குகின்றவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கொத்தடிமைகள் என்பது. எ.சி.எ. போர்சில் வந்த தீர்ப்பில் அப்படித்தான் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதுபோன்று கோடைக்கானலில் 'இப்படி தொழிலாளர் குடும்பங்களில் பெண்களுக்கு டெலிவரிக்குக்கூட வசதி செய்யப்படாமல் இருக்கின்றது. இதனால் நிறைய பெண்கள் இறந்துபோயிருக்கின்றார்கள். அங்கே சாப்பாட்டிற்கு இல்லாமல் கஞ்சி குடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அடிப்படை, ஆதாரம் இல்லாமல் இங்கே குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அதனாலேயே நிறைய பேர்கள் அங்கே இறந்துகொண்டிருக்கின்றார்கள் என்கின்றார்கள். எப்போது இறந்தார்கள்? எதனாலே இறந்தார்கள்? மனிதர்கள் தினசரி இறந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் எல்லாம் கொத்தடிமைகளாக இருக்கின்ற காரணத்தினால் இறந்துகொண்டிருக்கின்றார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகின்றார்களா என்ன என்பது தெரியவில்லை. அப்படி அவர்கள் வேலை செய்து, அந்த

வேலைக்காகக் கூலி கிடைக்காமல் பட்டினி கிடந்துசெத்தார்களா? அவர்கள் கூலியை மறுத்தார்களா அல்லது அவர்கள் நோய்வாய்ப்பட்டு தகுந்த வைத்தியம் செய்யவில்லை என்பதால் செத்தார்களா? இந்த விவரங்களை எல்லாம் இந்த அவையிலே தெரிவிக்கவேண்டுமே தவிர, இங்கே தெருவிலே நிற்கின்றவர்கள் பேசுவது போன்று அருள்கூர்ந்து இந்த அவையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பயன்படுத்திக்கொண்டிருப்பது சரியாக இல்லை. தயவுசெய்து விவரங்கள் இருந்தால், எடுத்துச்சொல்லட்டும். அது அரசுக்கும் பயன் உடையதாக இருக்கும். இந்த அவைக்கும் பயன் உடையதாக இருக்கும்.

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம் முன்னவர் அவர்கள் ஓர் உறுப்பினர் பேசியதைக் குறிப்பிட்டு 'தெருவில் பேசுவோரைப் போல பேசுவதா என்று குறிப்பிட்டுப் பேசுவது இந்த அவையினுடைய கவுரத்திற்குச் சரியல்ல என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, தெருவிலே பேசுகின்றவர்கள்தான், இங்கே அப்படிப் பேசுகின்றார்களா, இங்கே அப்படிச் சொல்கின்றார்களா, இங்கே அப்படி நடந்ததா, இங்கே அப்படி போனார்களா என்பதைப்போல் சொல்லிக்கொண்டிருப்பார்கள். இந்த அவையிலே பேசும்போது இப்படி ஒரு தொழிலாளி இறந்தார் அல்லது நோய் வாய்ப்பட்டார், இன்ன தவறு நிகழ்ந்தது, இந்தக் காரணத்தினாலே நிகழ்ந்தது என்று சொல்வதற்குத்தான் நாம் எல்லாம் இங்கே இருக்கிறோம். அதைக் களையத்தான் அரசும் இருக்கிறது. ஆகவேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டுக்கள் இருந்தால், சொல்லட்டும். ஆனால் தெளிவாக, திட்டவட்டமாக ஆதாரத்தோடு சொல்லட்டும். அப்போதுதான் யாருக்காக வாதாடுகிறோம் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றார்களோ அவர்களுக்குப் பலன் கிடைக்கும். இந்த நாட்டிற்கும் பலன் கிடைக்கும்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று ஆதாரம் கேட்டு, அவர் மறுத்துவிட்டு, தொடர்ந்து உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டே போகின்றார்கள். அவருக்கு 15 நிமிடங்கள் பூர்த்தியாகிவிட்டது. தொடர்ந்து அடுத்த உறுப்பினர் பேசுவார்.





**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அத்தோடு நான் நிறுத்திக்கொள்ள விரும்பவில்லை. அவர்கள் தெளிவாக அதிலே ஆதாரம் தர முயலவில்லை. ஆனால் அவர்கள் இதுவரையில் இந்தப் பிரச்சினையிலே ஏதேதோ குற்றங்கள் நடந்ததாக, தவறுகள் நடந்ததாக, வனத்துறைக்குள்ளே ஒரு துணைக் கலெக்டரை செல்லவே அனுமதி மறுப்பது என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கின்றார்களே, அவைகளைப் போன்ற குறிப்புகள் சபைக் குறிப்பிலே இருக்கக் கூடாது என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். இதைப் பத்திரிகைகளிலே வெளியிட்டு வருவதற்காகவும், பத்திரிகையிலே செய்திகளைப் போட்டு இந்த நாட்டிலே ஒரு பரபரப்பான அரசியலை நடத்திக்கொண்டு அரசு மீது பழியைச் சுமத்தலாம் என்ற ஒரு புதிய முறை இப்போது கையாளப்படுகிறதே, அதற்கு இந்த அவை நமக்குத் துணையாக இருந்துவிடக்கூடாது என்பதை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே உறுப்பினர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறைபாடுகளை, மாண்புமிகு அமைச்சர் கூறுவதுபோல, குற்றச்சாட்டுகளை இங்கே எடுத்துச்சொன்னார்கள். அதற்கு அமைச்சர் தனக்குள்ள பொறுப்பின் காரணமாக மறுப்பு வழங்கியிருக்கிறார். இரண்டுமே இந்த அவை நடவடிக்கைக் குறிப்பிலே ஏறியிருக்கின்ற காரணத்தினால், அதை நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

(முற்பகல் 11-45)

(மாண்புமிகு மேலவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, நடவடிக்கைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் தங்கள் மூலமாக ஒரு உத்தரவைப் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். நடைபெற்ற இந்த விவாதங்களை உறுப்பினரவர்கள் சொன்னதும், அதற்கு நான் மறுப்பு அறிவித்ததும், இரண்டையும் வெளியிடுகிற பத்திரிகைகள், சம அளவில் அவற்றை வெளியிட அருள்கூர்ந்து நீங்கள் அந்த உரிமையைப் பெற்றுத் தந்தால், நீங்கள் எடுக்கிற முடிவுக்கு நான் கட்டுப்படுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** என்னுடைய உரிமையே எத்தனை நாளைக்கு என்று தெரியவில்லை. (பலத்த சிரிப்பு)

**திரு. ப. மாணிக்கம்:** தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை, கொடைக்காவல் பகுதியில் உள்ள புதிய கொத்தடிமைகள் சம்பந்தமான பிரச்சினை. இதில் நிர்வாகப் பிரச்சினைகள், கூலி சம்பந்தமான பிரச்சினைகள் எல்லாம் வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள், கிடைத்த தகவல்களை அவர்கள் பேசுகிற பாணியில் சொன்னார்கள். Style of speaking differs from Member to Member. அதனாலே உறுப்பினருக்கு உறுப்பினர் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில் வித்தியாசமுண்டு. அந்த முறையில் சில விவரங்களை, அழுத்தமான விவரங்களை அவர் வைத்திருந்தபோதும், அதைத் தனியாகச் சொல்கிறேன் என்று சொல்லுகிறார்கள். அதை இப்போது சொல்வதால் அது இந்த அவையின் மரபுக்கு உகந்ததாக இருக்கிறதோ என்று சந்தேகத்தில் சொல்கிறார். மேலும் உறுதியான ஆதாரத்தைச் சொன்னால், மேலும் சில பிரச்சினைகள் கிளம்பும். நிர்வாகம் சம்பந்தமான ஆதாரங்கள் அவரிடம் இருக்கின்றன. இது எப்படிக் கிடைத்தது என்ற பிரச்சினை எழும். இந்தப் பிரச்சினை நிரடலான பிரச்சினை. இந்தப் பிரச்சினை தமிழ்நாட்டிலே சமவெளியிலே நடந்தால், சுலபமாகப் பார்க்கலாம். மலைப் பகுதியில், உள்ளடங்கிய பகுதியில் இது நடந்திருக்கிறது. அப்படிப்பட்ட விவரங்களைத் தந்தால், அரசுத் தரப்பிலிருந்து பதில் சொல்லலாம் என்று அவை முன்னவர் அவர்கள் சொன்னார்கள். ஆதாரம் என்றால், அழுத்தமான ஆதாரத்தைக் கேட்டுக்கொண்டு, அந்த ஆதாரம் சரியாக இருந்தால், அவை முன்னவர் அவர்கள் அதைப் பரிசீலிக்கலாம். அதுதான் சரியாக இருக்கும். ஒவ்வொரு உறுப்பினரும் திட்டவட்டமான ஆதாரங்கள் சொல்லி, அவற்றை அத்தாட்சிபூர்வமாகக் கொண்டுவரலாமென்றால், அதைச் செய்யலாம். அவையிலே ஒரு உத்தரவாதம் வேண்டும். நிர்வாகம் சம்பந்தமான பிரச்சினைகள் வந்தால், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரிகள் மீது எடுக்கப்பட மாட்டாது என்ற உத்திரவாதம் வேண்டும்.

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இதிலே முக்கியமான பிரச்சினை ஒன்றும் இருக்கிறது. அதையும் மீறித்தான் அவையிலே விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. சுப்ரீம் கோர்ட்



நீதிபதி அவர்கள் ஒரு குழுவை நியமித்து, ஒரு கமிஷனை நியமித்து, அதிலே முதலிலே மூன்று பேரை நியமித்து, அதற்குப் பிறகு ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதியையும், ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் அந்தஸ்தில் இருந்த அதிகாரியையும் இப்போது அந்தக் கமிஷனில் நியமித்து, விசாரணை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த விசாரணையின் முடிவு வெளியாக வேண்டும். அதறகுப் பிறகு உச்ச நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி என்ன கருத்து கொண்டிருக்கிறார் என்பது தெரிந்தாக வேண்டும். இதற்கிடையிலே இதைப் பிரச்சினையாக மாற்றி, பத்திரிகையிலே வந்துள்ளதற்குத் தொடர்பாக இந்த அவையைப் பயன்படுத்திக்கொண்டு, இந்த அவையின் உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு, எந்தவிதமான ஆதாரமும் தர முடியாதோ என்று எண்ணுகிற வகையிலே, ஒரு விவாதத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் குறிப்பிட்டேன். அவர்களிடம் ஆதாரங்கள் இருந்து, தந்தால், அதைப் பார்த்து நடவடிக்கை எடுக்க முடியும். வெளியிலே சொல்லக்கூடிய ஆதாரம் என்றால், அதையும் சொல்ல முடியும். எப்படியானாலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் சொல்லுவது போல, விவரங்களை எப்படி எடுத்துச் சொல்லுவது என்பதிலே உறுப்பினர்களிடையே மாறுபாடு இருக்கலாம். அதை அழகாகச் சொல்லுகிறார்களா, ஆவேசமாகச் சொல்லுகிறார்களா என்பதுபற்றி அல்ல பிரச்சினை. இங்கே பல குற்றச்சாட்டுகளை தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் கமிஷன் விசாரணையில் உள்ள குற்றச்சாட்டுகள். அவைகளில் எல்லாம் விசாரணைக் கமிஷன் முடிவு எப்படி வரும் என்பது தெரியாத சூழ்நிலையில், இங்கே பேசி, பத்திரிகையில் வரும் சூழ்நிலை வரும்போது, அரசாங்கத்தின் மீது பெரிய குற்றச்சாட்டு சுமத்துவதுபோல அவை வரக்கூடாது என்பது என்னுடைய கருத்து. தொழிலாளர்களுக்கு என்ன பாதகங்கள் நடக்கின்றன என்று அவர்கள் அந்த அளவிலே எடுத்துச் சொன்னால், அதைப் போக்க என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுக்கும் என்பதுபற்றி மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் சொல்ல முடியும். அதையும் தாண்டி, கமிஷன் விசாரணையில் உள்ள ஒரு பொருளுக்குள் நுழைந்து, தேவையில்லாமல்கூட என்று நான் சொல்லமாட்டேன், அவர்கள் விரும்புகிற ஒரு பிரச்சினையில், வரம்புகளை மீறி, சட்டத்தை மீறி, இங்கே எந்தவிதமான ஆதாரங்களும் கொடுக்க முடியாத சூழ்நிலையில் அல்லது கொடுக்க விரும்பாத சூழ்நிலையில் கூறிக் கொண்டிருப்பது அவைக்கு நல்லதல்ல என்பது என்னுடைய கருத்து.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அடுத்த சட்டமுன்வடிவுக்குப் போக வேண்டும். இதிலேயே பேசிக் கொண்டிருந்தால் அடுத்த சட்ட முன்வடிவுக்கு எப்போது செல்வது? இன்றைய அவை நடவடிக்கைகளைத்தான் சொல் கிறேன். இதிலேயே பேசிக் கொண்டிருக்க வேண்டாம். அடுத்த விஷயத் திற்கு உறுப்பினர் போகலாம்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : நான் இந்த அவைக்கு ஆதாரத்தைக் காட்டு கிறேன். ஒரு அதிகாரிக்கு பழி வாங்கும் தன்மை வர வேண்டாம் என்பதற் காக தலைவர் அனுமதியோடு சில ஆதாரங்களைக் கூற விரும்புகிறேன். திரு. மாதவன் நம்பியார் என்பவர் அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர்.

"From: Thiru Madhavan Nambiar, Collector . . . .The District Forest Officer, Kodaikanal, in his letter to the Chief Conservator of Forests, a copy of which is marked to me . . . ."

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தலைவரிடம் முதலிலேயே உறுப்பினர் காட்டினாரா?

டாக்டர் மு. கருணாநிதி : அவர்கள் ஆதாரத்தைப் படிப்பதாக இருந்திருந் தால் காட்டியிருப்பார். ஆனால் இங்கே அமைச்சரே துருவித் துருவிக் கேட்டதால், அவர் படிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது ஒரு நிபந்தனை ஆகாது. இப் பொழுது கூட நேரிலே உறுப்பினர் காட்டியிருக்கலாம். காட்டித்தான் தீர வேண்டிய பேப்பரா என்பது வேறு விஷயம்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : நான் ஆதாரத்தை வாசித்திருக்க மாட்டேன். பொறுப்புள்ள உறுப்பினர் என்கிற முறையில் ஆதாரத்தைச் சொல்ல வேண்டா மென்று தான் இருந்தேன். ஆனால் அமைச்சர் அவர்களே வற்புறுத்தியதால் இப்போது அதனை வாசிக்கிறேன்.

". . . . has complained that you have been unnecessarily visiting the Reserve Forest areas and creating tension between the contractors and the labourers working there."

வாசிப்பதை முழுவதையும் வாசிக்க விரும்பவில்லை. ஆகவே, இத்துடன் நிறுத்துகிறேன். நீங்கள் தேவையில்லாமல் டென்சனை "கிரியேட்" பண்ணுகிறீர்கள் என்று சொல்வது எப்படி நியாயம்? அரசுக்கு இதுபற்றித் தெரியும். அந்த வகையில்தான் கடிதம் இருக்கிறது.



மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : இந்தக் கடிதத்தைப் பற்றிய இப் போதைய பிரச்சினையைச் சொல்லிவிடுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர், அவருக்குக் கீழே பணியாற்றுகிற ஒரு சப்-கலெக்டருக்கு கடிதம் எழுது கிறார். ஒரு நிர்வாகத்திலே ஒரு முதலமைச்சர் கீழே இருக்கிற அமைச்சர் களுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ ஆணை பிறப்பிக்கிறார் என்றால், அது நிர்வாக நடைமுறை. ஆகவே, இந்தப் பிரச்சினைகள் எல்லாம் சரியா, தவறா என்பது வேறு பிரச்சினை. இதிலே கொத்தடிமை இல்லை. ஏதோ ஒரு நிர்வாகத்திற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருப்பவர் மாவட்ட ஆட்சித் தலைவர். அவருக்குக் கீழே இருக்கிறவர் ஒரு சப்-கலெக்டர். எல்லோரை யும் அவர் தாண்டி நடந்துகொண்டிருக்கிறாரா இல்லையா என்பது விசார ணையில் இருக்கிறது. ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் தனக்குக் கீழே இருக்கிற ஒரு சபார்டினேட் ஆபீசருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் என்றால், அது வரம்பு மீறியதா, சட்டத்திற்கு விரோதமானதா? எப்படி அது தவறானதாகும்? ரெசர்வ் பாரஸ்டுக்கு உள்ளே நுழையக்கூடாது என்று வனத் துறை தடை விதித்ததாக இங்கே உறுப்பினர் சொன்னார். அதனால் தான் நான் இதிலே குறுக்கிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. மற்றபடி எனக்கு இதிலே சம்பந்தமே இல்லை. எந்த முடிவு வந்தாலும் நான் அது பற்றிக் கவலைப்படப் போவதும் இல்லை. ஆனால் வனத் துறை அதிகாரி ஒரு சப் கலெக்டரை ரெசர்வ் பாரஸ்டுக்கு உள்ளே வரக் கூடாது என்று தடுத் திருக்கிறார்கள் என்று சொன்னார்களே, அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று தான் நான் கேட்டேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நேரம் போய்க்கொண்டிருக்கிறது. சீக்கிரம் முடிவுக்கு வாருங்கள்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : கொத்தடிமை பிரச்சினையால் விவாதம் நீடித்துக்கொண்டேயிருக்கிறது" என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது.

"Letter No. 1326/86, dated 19th April 1986.

Letter written by the District Forest Officer to the Sub-Collector, Kodaikanal with copy to the Collector and all the Rangers.

Contents: The District Collector has directed the Sub-Collector that he should not enter the coupes which are located in the forest area."

என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலேதான் நான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : அதையும் தெளிவாக்குகிறேன். டி.எப்.ஓ. என்பவர் வனத்தைப் பொறுத்தவரையில், மாவட்டத்தில் பொறுப் பேற்றுக் கொண்டிருப்பவர். அதுபோல நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர் மாவட்ட ஆட்சித் தலைவர். இவருக்குக் கீழே இருப் பவர் தான் சப் கலெக்டர். ஒரு சப் கலெக்டர் ஒரு ரெசர்வ் பாரஸ்டுக்கு உள்ளே நுழைந்து, சில நடவடிக்கைகளுக்காக போக வேண்டுமென்றால், வனத் துறை உயர் அதிகாரிக்குத் தெரிவித்து, அவருடன் உள்ளே சென்று நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். திடீரென்று உள்ளே நுழைந்தால், அவர் சப் கலெக்டரா அல்லது மரம் வெட்ட வந்தவரா என்று தெரியாது. அது போல கொத்தடிமை மக்களை மீட்க வந்திருக்கிறாரா அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காக வந்திருக்கிறாரா என்றும் தெரியாது. ரெசர்வ் பாரஸ்டுக்கு உள்ளே செல்வதற்கும் சில முறைகள் இருக்கின்றன. டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட் ஆபீசருக்குத் தெரியாமல் போகக் கூடாது. ரெசர்வ் பாரஸ்டுக்கு உள்ளே நுழைந்து சில காரியங்களில் ஈடுபட வேண்டுமென்றால், அதற்குரிய தகவலை அந்தக் காட்டுக்குப் பொறுப்பாக, பாதுகாப்பாக இருக்கின்ற அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற வகையில் அவர் கருத்து தெரிவித் திருக்கின்றார்.

(முற்பகல் 11-55)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினர் பேசியதையடுத்து, நீங்கள் இரண்டு பேரும் இப்படி மாறி மாறிப் பேசிக்கொண்டிருந்தால் அவை நடவடிக்கை என்ன ஆவது? நான் சொன்னது தவறல்ல. நடப்பது, தொழிலாளர் நலக் கொள்கைக் குறிப்பு பற்றியது. இதில் அரசியல் கட்சித் தலைவர்கள்தான் நிறையப் பேசுவார்கள். அவர்களுக்கு அதிக வாய்ப் பளிக்க வேண்டும். ஆசிரியர் தொகுதி பிரதிநிதிகள் இதில் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டால், எப்படி அவையை நடத்துவது?

திரு. மு. செ. சங்கரலிங்கம் : ஆசிரியர்களும் தொழிலாளர்கள் தான் ஒரு வகையில், கட்சித் தலைவர்கள் பேசுவதில் நான் குறுக்கே நிற்கவில்லை. கருத்துக்களைச் சொல்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இடையிலே ஒரு விளக்கம் சொல்லிவிடுவது நல்லது. பாண்டட் லேபர் என்ற பொருள், 1—4—1986 லிருந்து சமூக நலத்துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது. அது என் கையிலும் இல்லை. என் பார்வைக்கும் வராது. ஏற்கெனவே இதுகுறித்து பப்ளிகேஷன் வந்துவிட்டது. இருந்தாலும், இங்கே அத்தகைய கருத்துக்கள் சொல்வதில் தவறில்லை.

திரு. ப. மாணிக்கம் : நீங்கள் இங்கே இருப்பதால் அதுபற்றியும் பேச வேண்டிய அவசியம் உறுப்பினருக்கு ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதற்கும் ஒரு நேரம் உண்டு. சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சொன்னேன்.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. சங்கரலிங்கம் இங்கே இவ்வளவு விளக்கமாகப் பேசியதன் மூலமாக, மாற்றப்பட்ட ஒரு துறை பற்றி நாவலர் அவர்கள் விளக்கம் அளிக்க வாய்ப்பு ஏற்பட்டது. அதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : அடுத்து, தொழிலாளர் நலக் கொள்கைக் குறிப்பில், அடுத்த ஆண்டு பேச வாய்ப்பிருக்காது, ஏனென்றால் இந்த அவையே இருக்காது என்பதால், இப்போதே பேசிவிடலாம் என்று கருது கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : நீங்கள்தான் போகப்போகிறீர்களா, எல்லோரும்தான் போகப்போகிறோம். போங்க, சார். என்ன ஆவதோ ஆகட்டும்.

திரு. மு. செ. சங்கரலிங்கம் : ஆகவேதான் நீண்ட நேரம் பேசவேண்டு மென்று சில கருத்துக்களைக் கூறுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதனால்தான் நானும் சொல்கிறேன், உறுப்பினர் அவர்களே பேசிவிட்டால் எப்படி, மற்றவர்களும் இப்போதே பேச வேண்டாமா? உறுப்பினர் அவர்களே நேரத்தை எடுத்துக்கொண்டால் எப்படி, மற்றவர்களுக்கும் இப்போதே நேரம் கொடுத்துவிடலாமே என்று சொன்னேன்.

*திரு. மு. செ. சங்கரலிங்கம்* : அங்கே பிரச்சினை இருந்தது உண்மை. இதை அரசுத் தரப்பிலும் மறுக்கவில்லை. ஆகவே அந்தப் பிரச்சினையில் அரசு தலையிட்டு அந்தக் குழு அங்கே வருகிற நேரத்தில் அவர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

*திரு. பி. பார்த்தசாரதி* : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலிலேயே ஆசிரியர்கள் தரப்பிலிருந்து தொழிலாளர் நலன் பற்றிய கணிப்புக்களை வைக்க விரும்புகிறேன். ஆசிரியர் பிரதிநிதி என்றாலே ஆசிரியர்களைப் பற்றித்தான் பேசுவார்கள், மற்றவைகளைப் பற்றிப் பேசமாட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டு எங்கள் மீது நீண்டகாலமாக இருந்தது. இப்போது மற்ற தொழிலாளர்களைப் பற்றியும் ஆசிரியர்கள் பேசுகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்* : திரும்பவும் சொல்கிறேன். ஆசிரியர்களை தடைப்படுத்துவது என்பது இல்லை. அவர்களுக்குப் பேசத்தெரியாது என்றல்ல. மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் இதில் பேச இருக்கிறார்கள், நேரம் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும். யார் எந்த நேரத்திலும் பேசுவது என்ற முறை வேண்டாமா? அதே மாதிரி ஆசிரியர் பிரச்சினை, கல்வி மானியம் போன்றவைகள் வரும்போது இதே ஆலோசனையை அவர்களுக்கும் சொல்வேன். அந்தக் கோரிக்கைகளில் உங்களுக்கு அதிக நேரம் கொடுக்க வேண்டியதும் என் கடமை.

*திரு. பி. பார்த்தசாரதி* : ஒரே ஒரு முக்கியமான கருத்தை மட்டும் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பை முழுமையாகப் பார்க்கும்போதும், இதிலே அரசு தன்னை தொழிலாளர் நல அரசாக அறிவித்து, தொழிலாளர் நலத்தைப் பாதுகாப்பதன் மூலமாகவும் அங்கே ஒரு தொழில் அமைதிச் சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலம், உற்பத்திப் பெருக்கத்துக்கு வழி ஏற்படுத்துவதாக இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதிலே எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன. உண்மையைச் சொல்லப்போனால், நாங்கள் வேண்டுவது தொழிலாளர் அரசு வேண்டுமென்பது தான். தொழிலாளர் நல அரசு என்ற ஒன்று இருப்பதாக இங்கே சொல்கிறார்கள். இதே தொழிலாளர் அரசாக இருந்தால் நல்லது. தொழிலாளர் நல அரசு என்று சட்டபூர்வமாகவும் எழுத்து பூர்வமாகவும் நல்ல திட்டங்கள்



வரையறுக்கப்பட்டு சொல்லப்பட்டிருந்தாலும், நடைமுறையில் அமைதி ஒன்றை மட்டுமே கணக்கில் வைத்துக்கொண்டு. கொக்கு தலையில் வெண்ணையை வைத்து அது தலையில் வழிந்து கண்ணை மறைக்கும்போது, அந்தக் கொக்கைப் பிடிப்பது போல், தொழிலாளர் நலத்தைப் பாதுகாப்பதற்காக உருவாகிற சட்டங்கள் எல்லாம் முதலாளிகளின் நலத்தைப் பாதுகாப்பது போல் இருக்கின்றன என்ற சந்தேகம் தான் ஏற்படுகிறது. ஏனென்றால் இங்கே சில நிகழ்ச்சிகளை நாம் பார்க்கவேண்டியிருக்கிறது.

(நண்பகல் 12-00)

ஆசிரியர்கள் தங்களுடைய போராட்டத்தை நடத்தும்போது, அவர்களுக்கு ஆதரவாக அன்றைக்கு 11 ஆம் தேதியன்று பல தொழிற்சங்கங்கள் இணைந்து ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்தார்கள். ஆசிரியர்கள் பிரச்சினையெல்லாம் நீக்கப்பட்டு விட்டன. ஆனால் வேலைநிறுத்தத்தில் ஈடுபட இருந்த தொழிலாளர்கள்—வேலைநிறுத்தத்தில் ஈடுபடாமல் தடுக்கப்பட்ட தொழிலாளர்கள்—பெற்ற பாதிப்பு இன்னும் சரி செய்யப்படவில்லை. உதாரணமாக சாத்தூரிலே ஓட்டுநர் ஒருவர். அவர் வேலை நிறுத்தம் செய்வதற்கு முன்பே தடுப்பு நடவடிக்கையாக கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டார். அவருக்கு எந்த விதமான சம்பளமும் இல்லை. இவ்வாறு தொழிலாளர்களைப் பாதிப்புக்குள்ளாக்கும் அரசை தொழிலாளர் நல அரசு என்று எப்படி நாம் கூற முடியும் என்று கேட்க விரும்புகிறேன். அவர்கள், மற்ற பகுதி தொழிலாளர்கள் தங்கள் போராட்டத்தை நடத்தும்போது, ஆதரவு காட்டி வேலை நிறுத்தம் செய்தார்கள். இதற்காகப் பழி வாங்கும் நிலையை எடுக்கும்போதுதான், இந்த அரசு தொழிலாளர் நல அரசா என்கிற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது.

அதைப்போலவே தலைமைச் செயலக ஊழியர்கள், ஆசிரியர்களாகிய நாங்கள் போராடிக்கொண்டிருக்கும்போது, எங்களுக்கு ஆதரவாகவும், அதே சமயத்தில் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்தும் போராடினார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், அவர்கள் குற்றம் செய்யவில்லையா என்று கேட்டார்கள். ஆசிரியர்கள் சார்பாக நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காக தங்கள் போராட்டத்தை நடத்தினார்கள். அது நியாயம்தான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அரசின் பார்வையில் எப்படி இருந்தாலும், அவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்காகவும், ஜனநாயக உரிமைகளுக்காகவும்தான் அவ்வாறு போராட்டம் நடத்தினார்கள் என்பதுதான் எங்களுடைய கருத்து.

[திரு. பி. பார்த்தசாரதி] [1986 மே 10

அடுத்தாற்போல் இங்கே இந்த அரசுதான் இன்றைக்கு இருக்கிற employer களிலேயே மிகப்பெரிய employer ஆகும். இது இன்றைக்கு model employer ஆக இருக்க வேண்டும். தொழிலாளர் நலனைப் பாதுகாப்பதில் இவர்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலைமை அதற்கு நேர்மாறாக இருக்கிறது. தொழிலாளர்களை எப்படிப் பழிவாங்குவது என்பதை அரசிடமிருந்து தனியார் முதலாளிகள் கற்றுக்கொள்கிறார்கள். உதாரணமாக ஓர் அரசு ஊழியரை ஓய்வுபெறும் நாளைக்கு முதல்நாள் சஸ்பெண்ட் செய்வது என்பதை அரசுதான் செய்துவந்தது. இதைப்பார்த்து புவனகிரியில் ஒருவரை இதுபோல் தனியார் முதலாளி ஓய்வு பெறுவதற்கு முதல்நாள் சஸ்பெண்ட் செய்திருக்கிறார்.

அதுபோல் நீதிமன்றத் தீர்ப்புகளின்கீழ் புதுப் புது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவை எல்லாம் அமுல்லாக்கப்படுகின்றனவா என்றால் இல்லை. இவைகுறித்து கேட்டால், பதில் கிடைப்பதே இல்லை.

போக்குவரத்துத் துறையில் இதற்கு நிறைய சான்றுகள் இருக்கின்றன. அவை அந்தத் துறை மானியத்தின்மீது அங்கே விவாதிக்கப்பட்டிருக்கும் என நம்புகிறேன். போக்குவரத்துத் தொழிலாளர்கள் 9 ஆண்டுகளாக ஒரு வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறார்கள். "ஸ்பெஷல் அலவன்ஸ்" கோரி வழக்கு நடத்திக்கொண்டிருந்தார்கள். அதைப் பெறுவதில் சிக்கல்கள் இருந்ததால், அவர்கள் லேபர் கோர்ட்டிலிருந்து சுப்ரீம் கோர்ட் வரை சென்றார்கள். இப்போது அவர்களுக்கு வெறும் 250 ரூபாய் ஸ்பெஷல் அலவன்ஸாகக் கிடைத்திருக்கிறது. இதை இந்தத் தொழிலாளர்கள் பார்க்கும்போது, இந்த அரசைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள்?

அதைப்போலவே புதிதாக ஆட்களை வேலைக்கு அமர்த்தும்போது, சாதாரணமாக மற்ற இடங்களில் எவ்வளவு குறைச்சலான சம்பளத்திற்கு ஆட்களைப் போடலாம் என்றுதான் பார்ப்பார்கள். ஆனால் அந்தப் போக்கு அரசிடமும் இப்போது காணப்படுகிறது. 'அப்ரெண்டிஸ்' என்றும், 'ஸ்டைபெண்ட்' என்றும், 'டெயிலி வேஜஸ்' என்றும் அடிப்படையில் நிறைய பேர் அரசுத் துறைகளில் சேர்க்கப்படுகின்றனர். அவர்களுக்கு மற்றவர்களுக்கு உள்ள உரிமைகள் மறுக்கப்படுகின்றன. தற்காலிகமாக நிறைய பேர் பல ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றனர். அவர்கள் வேலை நிரந்தரமாகுமா



1986 மே 10] [திரு. பி. பார்த்தசாரதி]

என்றே தெரியவில்லை. இவற்றை மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்கள் கூட சுட்டிக் காட்டினார்கள். எல்லாப் பகுதியினர் மத்தியிலும் நிரந்தரம் இல்லாத நிலை இருக்கிறது. இவ்வாறு இருக்கின்ற தொழிலாளர் மத்தியில் இது தொழிலாளர் நல அரசுதானா என்கிற சந்தேகம் எழுந்தால், எந்தவிதத்தில் நாம் அதை மாற்ற முடியும்? இவர்கள் பிரச்சினைகளிலும் அரசு கவனம் செலுத்தி அவர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலில் 'அப்ரெண்டிஸ்' என்று சொல்லி, பிறகு புரபேஷன் என்று சொல்லி, பல ஆண்டுகள் கழித்து, பின் 'கன்ஃபர்மேஷன்' என்ற நிலை இப்போது இருந்து வருகிறது.

(பிற்பகல் 12-05)

அந்த அடிப்படையில் வேலைக்கு எடுக்கக்கூடிய நிலையில் இது முரண்பட்ட கருத்தாக இருக்கிறது. 'ஹையர் அண்டு ஃபயர் பாலிசி' சில தொழிலாளர் நிறுவனங்களில் இருக்கிறது என்று நாம் பேசுகிறோம். ஆனால் மதுரையில் உலகத் தமிழ்ச் சங்க விழா நடந்தபோது, 176 பேர்கள் மதுரை மாநகராட்சி ஈ.பி. யிலிருந்து எடுத்தார்கள். அவர்களை நிரந்தரம் செய்யாமல் அந்த வேலை முடிந்தவுடன் வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்கள். திரும்ப வேலை காலி ஏற்படும்போது, அவர்களை எடுப்பதாக முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கு எதுவும் செய்யவில்லை. அங்குள்ள வேலைப் பளுவைப்பற்றி தீர்மானம் போட்டிருக்கிறார்கள். 1,200 பேர்கள் வேலை செய்ய வேண்டிய இடத்தில் 300 பேர்கள்தான் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். மூன்றாவது குழந்தை பிறந்தால், தாய்க்கு உடல் நலக் கேடு என்று அரசு சொல்கிறது. அதை மறுக்கவில்லை. ஆனால் 3 ஆள் பார்க்கும் வேலையை ஈ.பி. யில் ஒரு ஆள் பார்த்துக் கொண்டிருக்கிறாரே, அந்தத் தொழிலாளியினுடைய கஷ்டத்தையோ, உடல் நலத்தையோ இந்த அரசாங்கம் கவனிக்கிறதா என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். தொழிலாளர்களுடைய நலன்களைக் காக்கின்ற அளவிலே, வேலைப் பளுவிற்கேற்ற தொழிலாளர்கள் இருக்கின்றார்களா என்பதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரித் தொடக்கப் பள்ளியிலும் கூட அதே நிலைமைதான் இருக்கிறது. அந்த நிலைமை எல்லா இடங்களிலும் பரவி இருக்கிறது. 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்னால் "நான்-டீச்சிங் ஸ்டாஃப்" எந்த நிலையில் இருந்ததோ அதே நிலைமைதான் இப்போதும் இருக்கிறது. வேலைப் பளுவை அடிப்படையாக வைத்து விஞ்ஞான ரீதியான முறையில் அவர்களிடமிருந்து வேலை பெற

[திரு. பி. பார்த்தசாரதி] [1986 மே 10

வதற்கு, தொழில் நிறுவனங்கள் தங்களுடைய லாபத்தை மட்டுமே கருதி எப்படி வேலை வாங்குகிறதோ அதுபோல் இந்த அரசு நிறுவனங்களுக்கும் வேலை வாங்கினால், இந்த அரசு எப்படி ஒரு மாடல் எம்பிளாயராக இருக்க முடியும்? அப்படி இந்த அரசு ஒரு மாடல் எம்பிளாயராக இல்லாதபோது, எப்படி தொழிலாளர்களின் நலத்தைக் காக்கும் அரசாக நாம் கணிக்க முடியும் என்பதுதான் நான் இங்கே வைக்க விரும்பும் விவாதம்.

அடுத்து, குழந்தைகள், பெண்கள் இவர்களுடைய தொழில் நிலைகளைப் பற்றி நாம் பேசுகிறோம். நான் 'கன்ஸ்ட்ரக்டிவ்' வாக வைக்க விரும்புகிற 'சஜெஷன்',—மாண்புமிகு திரு. சுப்பு அவர்களும் சொன்னார்கள்—அவர்கள் காலை 5 மணிக்கு தீப்பெட்டித் தொழிற்சாலைக்குப் போனால், இரவு 8 மணிக்குத்தான் வீட்டிற்கு வருகிறார்கள். அவர்களின் நிலைமை அப்படி இருக்கும்போது, எந்த "நான்-ஃபார்மல் எடுகேஷனாலும்" அவர்களை நாம் 'எடுகேட்' பண்ண முடியாது. இது ரொம்ப சாதாரண நிகழ்ச்சிதான். இவர்களையெல்லாம் நாங்கள் நினைக்கும்போது, எங்களுடைய மனதில் ஏற்படும் கருத்து என்னவென்றால், இவர்களுக்கு அவர்களுடைய வேலை நேரத்திலேயே ஒரு மணி நேரத்தை ஒதுக்கி அந்த நேரத்தில் ஆசிரியர்கள் சொல்லித் தரக்கூடிய ஒரு ஏற்பாட்டை அரசு செய்யக்கூடாதா? அது தொழிலாளர்களுக்குச் சொல்லித் தரும்போது, நிர்வாகமும் அவர்களைப் படிக்க வைக்க ஏற்பாடு செய்ய முடியும். தொழிலாளர்களும் கற்றுக்கொள்ள முடியும். அவர்களுடைய வேலை நேரத்திற்கு உட்பட்டு அவர்கள் படிக்கக்கூடிய வேலை நேரத்திலேயே இருக்க வேண்டும். அப்போதுதான், ஆசிரியர்கள் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இல்லையென்றால், அந்தச் சமுதாயம் தங்களுடைய அத்தனை உரிமைகளும் இல்லாதவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய கைகள் எல்லாம் சல்பர் அரித்து மிகவும் பயங்கரமான நிலையில் இருக்கிறது. அவர்கள் தொடர்ந்து பின்தங்கியவர்களாகவே இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்றைக்குமே நாம் அவர்களோடு இருப்பவர்களாக ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் வாழும் பகுதி புறக்கணிக்கப்பட்ட பகுதிகளாகவே இருக்கிறது. அவர்களுடைய வேலை நேரத்திலேயே குறைந்தது ஒரு மணி நேரம் கல்வி கற்றுத் தருவதற்கான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டும். இதிலே இன்னொரு சின்ன விஷயமும் இருக்கிறது. சிவகாசியில் ½ மில்லியன் ஸ்கீம் என்று சொல்லி ஒரு பள்ளிக் கூடத்தை வைத்துவிட்டு, 200 அல்லது 300 ஆசிரியர்களைப் போட்டார்கள். இப்போது அங்கே என்ன பிரச்சினை என்றால், புதிதாக ஆசிரியர்களைப்



986 மே 10] [திரு. பி. பார்த்தசாரதி]

போடும்போது, செகண்டரி கிரேடு படித்திருக்கும் தங்களையும் புரமோட் பண்ணினால் என்ன, புதிதாக வருகின்ற இளைஞர்களையும் சேர்த்துக் கொண்டால் என்ன என்று கூட ஆசிரியர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் மனதில் வைத்து சரியான திட்டத்தை உருவாக்கி இளம் தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள், பெண் தொழிலாளர்கள் ஆகியோர் நலனில் இந்த அரசு அக்கறை வைத்திருக்கிறது என்பதை நிரூபிக்கும் வகையிலே, அவர்களுடைய வேலை நேரத்திலேயே ஒரு மணி நேரத்தை ஒதுக்கி, படிப்பதற்கு அந்த நிர்வாகத்தினுடைய செலவிலேயே ஏற்பாடு செய்தால், இன்னும் அது மிகச் சிறப்பாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான யோசனை. அதை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, தொழிலாளர்கள் ஒரு பக்கம் தங்களுடைய கோரிக்கையை வைத்து போராட்டத்தைத் தொடங்கும்போதே, நிர்வாகத் தரப்பிலேயிருந்து கோரிக்கைப் பட்டியல் வைத்து பேச்சுவார்த்தை நடத்துவோமென்ற நிலை இப்போது ஏற்பட்டிருப்பதை நான் பார்க்கிறேன். ஆக இந்த நிர்வாகங்களும் கோரிக்கை வைத்தால்தான், தொழிலாளர்கள் இறங்குவார்கள் என்ற அடிப்படையில் இந்த அரசு எப்படி அவர்களை ஊக்குவிக்கிறது என்பதை நான் கேட்க விரும்புகிறேன். கொஞ்ச நாளைக்கு முன்பு 'டெக்ஸ்டைல் ஓர்க்கர்ஸ்' ஸ்டிரைக் நடத்தும்போது அவர்கள் ஒரு பக்கம் கோரிக்கை வைத்தார்கள். வேலைப் பளுவைப்பற்றி அவர்கள் பேசினார்கள். தொழிலாளர்களையும், நிர்வாகத் தரப்பையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, அரசு சரியான நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்றால், இல்லை. அப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால், அரசுத் தரப்பிலிருந்து அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன். 24 ஆம் தேதியன்று ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மற்ற தொழிலாளர்கள் எல்லாம் சேர்ந்து அனைத்து தொழிற் சங்கங்கள் சார்பாக பல இடங்களில் ஒரு மாலை வேளையில் ஒரு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அதற்காக அவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று 17 (பி) என்ற ரூலைக் காண்பித்து நடவடிக்கை எடுப்பதற்காக தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-10)

இதைப் பார்க்கும்போது, எங்களையெல்லாம் தொழிலாளர்கள் என்றே ஏற்றுக் கொள்ள மறுப்பதைப்போல் இருக்கிறது. ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களையும் தொழிலாளர்கள் என்று ஏற்றுக்கொள்ள முடியாது என்று அரசு

[திரு. பி. பார்த்தசாரதி] [1986 மே 10

ஒதுக்கிவிட்டாலும்கூட, நாங்கள் மீண்டும் மீண்டும் எங்களின் அந்தக் கோரிக்கையைத்தான் அழுத்தந்திருத்தமாக வைக்க விரும்புகிறோம். எங்களையெல்லாம் தொழிலாளர்கள் என்று உச்ச நீதிமன்றமே அறிவித்திருக்கும்போது, அந்த அடிப்படையில் அரசு ஏன் எங்களைத் தொழிலாளர்களாக ஏற்றுக்கொண்டு எங்களுக்குள்ள உரிமைகளை வழங்க மறுக்கிறது என்றுதான் எனக்குப் புரியவில்லை. எனவே எங்களையும் தொழிலாளர்களாக ஏற்று எங்களுக்கு அவர்களுக்கான உரிமைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதினம் தொழிலாளர்களுக்கு இருக்கிற கொஞ்ச நஞ்ச உரிமைகள்கூட எங்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது. அதுமட்டுமல்ல, தொழிலாளர்களுக்கு என்று சில உரிமைகளையும் சலுகைகளையும் அரசு சொல்லியிருந்தாலும், அவற்றையெல்லாம் இன்றைக்கு அரசு அளிக்காத நிலைமை இருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கொள்கைக் குறிப்பைப் பார்க்கும்போது, பல்வேறு உரிமைகள் சட்ட வடிவத்திலேயே இருக்கின்றன என்பதைத்தான் காண முடிகிறதே தவிர, அவை உண்மையிலேயே அமுலுக்கு வந்திருக்கின்றனவா, என்றால், பல இடங்களில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மதுரையில் பி.ஆர்.சி. தொழிலாளர்களுக்குச் சாப்பிடுவதற்கான 'ஷெட்' கூட கிடையாது. தொழிலாளர்களுக்கு என்னென்ன உரிமைகள் கொடுக்க வேண்டும், என்னென்ன வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றெல்லாம் தொழிலாளர் நலச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறு சட்டத்திலேயே சொல்லப்பட்டிருந்தாலும்கூட, ஒரு 'மாடல் எம்ப்ளாயர்' என்கிற முறையில் செயல்படுகிற அரசு தன்னுடைய நிறுவனங்களில்கூட இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை என்றால், நாட்டில் உள்ள மற்ற நிறுவனத்தில் உள்ள அதிபர்கள் எங்கேயிருந்து செய்து கொடுக்கப் போகிறார்கள் என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் சொன்னதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அத்தகைய நிறுவனங்களில் அரசிடமிருந்து ஏதேனும் தாக்கீது வந்தால், நிர்வாகத்தில் இருப்பவர்கள் அரசு சொல்லும் காரியத்தைச் செய்யவில்லை என்றால், நடவடிக்கை ஏதாவது எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறதா என்று பாருங்கள். அப்படி இருந்தால் மட்டும் செய்யுங்கள், இல்லை என்றால் தூக்கி வைத்து விடுங்கள் என்று சொல்வார்களாம். எனவே



1986 மே 10] [திரு. பி. பார்த்தசாரதி]

இன்றைக்கு அப்படிப்பட்ட நிலைமையில்தான் அரசின் ஆலோசனைகள், ஆணைகள் போன்றவை மதிக்கப்படுகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றையதினம் நாடெங்கும் நேற்று கொண்டாடப்பட்ட ரவீந்தரநாத் தாகூரின் நினைவு நாளைப்பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. அவர் ஒருமுறை ஒரு பாடலைச் சொன்னார். அதாவது:

I am spending my time in stringing and un-stringing. The song I came to sing has never been sung.

அதாவது நான் எந்தப் பாடலைப் பாட வந்தேனோ அந்தப் பாடலைப் பாடாமல் என்னுடைய வீணையின் தந்தியை முறுக்கிக் கொண்டிருப்பதிலேயே காலத்தைக் கழித்திருக்கிறேன் என்று அவர் குறிப்பிட்டார். அதைப்போலவே தொழிலாளர்களுக்கான அரசு, தொழிலாளர்களின் நலன் காக்கும் அரசு என்று மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டே வந்தாலும், திரும்பத் திரும்ப இதே பிரச்சினைகள் தொடர்ந்து இருப்பதன் காரணமாக நாம் இன்னும் வீணையின் தந்தியை முறுக்குவதிலேயே காலத்தைச் செலுத்தியிருக்கிறோமே தவிர, தொழிலாளர்களின் நலனைக் காக்கத் தவறிவிட்டோம் என்றுதான் நினைக்கிறேன். எனவே இந்த நிலைமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கெங்கே தொழிலாளர்களின் நலனுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறதோ அங்கெல்லாம் அரசு தலையிட்டு அத்தகைய நிர்வாகங்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று, கேட்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின் மீது முக்கியமான சில பிரச்சினைகளை எடுத்து விளக்குவதற்கு முன்னால் மொழி பெயர்ப்பில் ஏற்பட்டிருக்கிற ஒரு திருத்தத்தை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதாவது கொள்கைக் குறிப்பின் 4வது அத்தியாயத்தில் 27 ஆம் பக்கத்தில் "மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள் ஷ்ரம்வீர்" என்று தமிழில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதையே ஆங்கிலத்தில் சொல்லும்போது State Safety Awards and Shram Vir Awards.

என்று போட்டிருக்கிறது. 'ஷ்ரம்வீர்' என்பது சம்ஸ்கிருத வார்த்தை. தமிழில் அதற்கு உழைப்பு என்பது சரியான மொழி பெயர்ப்பு. சிரமம் என்கிறோம். அதன் அடிப்படையில் வந்ததுதான் 'ஷ்ரம்வீர்'. எனவே உழைப்புக்கான அரசின் பரிசு என்று போட்டிருந்தால், அழகாக இருக்கும். புரியும்படியும் இருந்திருக்கும் என்பதை மட்டும் சொல்லி வருங்காலத்திலாவது இத்தகைய முறையில் வார்த்தைகளைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பத்திரிகையாளர் சம்பந்தமாக முக்கியமான ஒரு கருத்தை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். பக்கம் 38-ல் "செய்தித்தாள் பணியாளர்களுக்காக பலேகர் நடுவர் மன்றம் தெரிவித்த பரிந்துரைகளைச் செயல்படுத்துதல்" என்ற தலைப்பின் கிழ் ஒரு கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே செயல்படுத்துவதற்கு ஒன்றுமே இல்லை. காரணம் பலேகர் அவார்டு போய் பச்சவா என்பவரைப் போட்டு அவரும் இடைக்கால நிவாரணம் இவ்வளவு தர வேண்டும் என்று சொல்லி, அதனைக் கோரி உழைக்கும் பத்திரிகையாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், ஒரு டிரைப்பார்டைட் கமிட்டியாவது போட்டு நடவடிக்கை எடுக்க முனைப்பு காட்டியிருக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். இது ஒரு புறம்.

இன்னொன்று, பலேகர் பரிந்துரைகள் செயல்படுத்தப்படவில்லை என்று சொல்லி, 'மெட்ராஸ் லா ஜர்னல்' மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு தமிழ்ப் பத்திரிகையும் அப்படி அந்தப் பரிந்துரைகளைச் செயல்படுத்தவில்லை. அதன்மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர்கள் சொன்ன காரணம் நவீன இயந்திரங்களைக் கொண்டு வந்ததால், வெளியேற்றி இருக்கிறோம் என்பதாகும். நான் பத்திரிகையின் பெயரைச் சொல்வது அவையினுடைய மரபுக்குச் சரியாக இருக்காது என்பதால் சொல்லவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் ஏற்பட்டிருக்கிறது. அந்தத் தொழிலாளிகள் எல்லாம் ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள், அரசிடம் முறையிட்டிருக்கிறார்கள், உழைக்கும் பத்திரிகை தொழிலாளர் சங்கத்தில் முறையிட்டிருக்கிறார்கள். அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(பிற்பகல் 12-15)

இந்தக் குறிப்பைப் படித்துப் பார்த்தால், பல்வேறு காரியங்கள் நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் நடப்பிலே அப்படி இல்லை என்பதைச் சொல்லி சில பிரச்சினைகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், ஒன்று, சட்டங்களை நிறைவேற்றுவது. நீண்ட



நாட்களாக உள்ள பால் பண்ணை தொழிலாளர்கள் 1,500 பேர் பிரச்சினையில்; அப்போதிருந்த அமைச்சர் அவர்கள், முதல்வரிடம் பேசி இது சம்பந்தமாக முடிவுக்கு வரலாம் என்று சொல்லியிருக்கிறார். அதை நம்பி அவர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்று வரை ஒன்றும் நடக்காமல் இருக்கிறது. அவர்களுக்குப் பதிலாக தற்காலிக ஊழியர்கள் என்று போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஐந்து வருடங்கள் சர்வீஸ் ஆகிவிட்டது. அவர்கள் இப்போது நிரந்தர ஊழியர்களாக மாறிவிட்டார்கள். ஆகவே அந்த 1,500 பேர் சந்தியில் நிற்கிறார்கள். அது மட்டுமல்லாமல், 3 வருடங்கள் கழித்து 'ரெபரென்ஸ்'க்கு அனுப்பப்பட்டது. ரெபரென்ஸ்க்கு அனுப்பி ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. எந்தவிதமான விசாரணையும் நடக்கவில்லை. ஆகவே 1,500 பேர் சந்தியில் நிற்கிறார்கள். நாம் இயற்றிய சட்டங்களை நாமே செயல்படுத்தாவிட்டால், அந்தச் சட்டங்களுக்கு மரியாதை போய்விடும். நான் நடைமுறையைச் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகள் இன்னும் நீடிக்கின்றன. இதற்கு என்ன காரணம்? கொள்கை நிலையா அல்லது நிர்வாகத் துறை கவனம் செலுத்தவில்லையா என்றால், இது கொள்கை நிலைதான். காரணம், 1,500 பேர் சந்தியில் நிற்கக் கூடிய நிலைமை வந்ததால், அரசே முடிவு எடுத்து அதை நிறைவேற்றவில்லை என்றால், அதை அலட்சியப் போக்கு என்று சொல்லமாட்டேன், தவறான கொள்கை நிலை என்று சொல்வேன்.

இரண்டாவது, மற்றொரு சட்டம். அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் எழுப்பினார். அவர் குறிப்பிட்ட வார்த்தை வேறாக இருக்கலாம். Status of permanency on workers தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் ஒரு சட்டம். இரண்டாண்டுகளில் 480 நாட்கள் வேலை செய்தால், நிரந்தரம் என்பது ஒரு சட்டம். அந்தச் சட்டம் அநேகமாக எங்கேயும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இப்படிப்பட்ட நல்ல சட்டங்களை வகுத்துவிட்டு, அதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை என்றால், என்ன பிரயோசனம்? பிரயோஜனம் இல்லை. வேண்டுமானால் அழகிய சிலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். கலை நயத்தோடு சிலைகளைப் பார்க்கலாம். அதைப்போல சட்டங்களைப் போட்டுவிட்டு எந்தவிதமான பயனும் இல்லாமல் செயல்படாமல் இருந்தால், அழகிய சிலைகளைப் பார்த்து ரசிக்க முடியாது. இந்தச் சட்டங்களைப் பார்த்து, தொழிலாளர்கள் வெந்து சாவதைத் தவிர, வேறு ஒன்றுமில்லை. இதனுடைய விளைவு விபரீதமாக முடியும்.

[திரு. ப. மாணிக்கம்] [1986 மே 10

பீடி தொழிலாளர்கள் மூன்று இலட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் குறைந்த ஊதியத்தில் இருக்கிறார்கள். அவர்கள் செய்யும் தொழிலால் டி.பி. நோய், பிராங்கியல் ஆஸ்துமா போன்ற நோய்கள் வரும். அப்படிப்பட்ட தொழில் செய்பவர்களுக்கு என்று ஒரு சட்டம். அவர்களுடைய வேலை நிரந்தரம், சம்பளம் நிர்ணயம் என்பதற்கு ஒரு சட்டம். இந்தச் சட்டம் 1980 இல் நிறைவேற்றப்பட்டு இன்னும் அமுல்படுத்தப்படவில்லை. கிட்டத்தட்ட 6 வருடங்கள் ஆகின்றன.

'அன்-அர்கனைஸ்ட் லேபர்'. அந்தத் தொழிலாளர்கள் தாழ்ந்த நிலைமையில் இருப்பவர்கள். பீடி தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கு இந்த அரசு பல காரியங்களைச் செய்வதாக அறிவிப்புகள், நல்ல அறிவிப்புகள், மனம் குளிர வைக்கும் அறிவிப்புகள் கொடுத்துவிட்டு பிறகு காரியங்களை நிறைவேற்றவில்லை என்றால், அந்த அறிவிப்புகளைக் கண்டு குளிர்ந்த மனம், வெந்து வேதனைக்குள்ளாகி வேகப்பட்டு எழக்கூடிய நிலைமை வருகிறது. சட்டங்களை நிறைவேற்றுவதில் சங்கடம் வரலாம். அவற்றை எப்படி சமாளிப்பது என்பதுபற்றி அரசு தன்னுடைய இலாக்காக்களின் மூலமாக யோசிக்க வேண்டும்.

சுற்றுலாத் துறையில் பணிபுரியும் ஊழியர்கள் சங்கம் வைத்து தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள். இதிலே பல்வேறு பிரச்சினைகள் நடந்து முடிந்துவிட்டன. இதற்காக சங்கம் இருக்கிறது, அதிலே பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தத் துறையிலே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் சங்கம் வைத்து முறையாகச் செயல்படக்கூடிய நிலையில் அச்சங்கத்திற்கு அங்கீகாரம் கிடைக்காமல் இருக்கிறது. இது அரசாங்கத்தின் மற்றொரு இலாக்கா. இந்த அரசாங்கத்தின் கொள்கை தொழிலாளர்கள் துறையில் சரியாக இல்லை. அரசாங்கத்தின் மற்றொரு அங்கமாக இருப்பதால், அரசு இதைச் செய்ய தவறுகிறது. இதையும் காலம் தாழ்த்தாது கவனிக்க வேண்டும். அடுத்தபடியாக, சமீபத்தில் வந்த ஒரு நிகழ்ச்சி, அதைத் தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததன் காரணமாக அது எப்படி எப்படியோ சுற்றி வந்து கொண்டிருக்கின்றது. அதற்குள்ளே நான் போக விரும்பவில்லை.

(பிற்பகல் 12-20)

மீனம்பாக்கத்தில் உள்ள பின்னி ஆலையில் வேலை பளுவைக் குறைப்போம் என்றும் ஆட்களைக் குறைப்போம் என்றும் சொல்லி, அதை தொழிற் சங்கம் எதிர்த்து, உச்ச நீதி மன்றத்திற்குச் சென்றது. அரசு சட்டத்தின் பிரிவு 10 பி-யின் கீழ் தீர்க்க வேண்டும் என்று ஒரு உத்தரவைப் போட்டார்கள். அந்த



1986 மே 10] [திரு. ப. மாணிக்கம்]

உத்தரவின்படி திறக்கவில்லை. அந்த உத்தரவைப் போடும்போது, அமைச்சரும் இல்லை. அதனாலேதான் அதற்குள்ளே நான் போகவில்லை. என்ன நிலைமை ஏற்பட்டிருக்கின்றது? அந்தத் தொழிலாளர்களுக்கு விடிவு காலம் இல்லாமல் இருக்கின்றது. அரசு உத்தரவின்படி, 'பேக்டரி' திறக்கப் படவில்லை. அதனால் தொழிலாளர்களுக்குப் பெருத்த இடைஞ்சல். இப்படிப் பல்வேறு வகைகளிலே தமிழ்நாட்டில் சில முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. சட்டத்தை அமுல் நடத்துவதிலேயும் இப்படி ஊனங்கள் இருக்கின்றன. அது மட்டுமல்ல. அதன்படி உத்தரவை நிறைவேற்ற முடியாமல் இருக்கின்றது. வேலைவாய்ப்புகளைப்பற்றி இந்தத் துறை கவனிக்க வேண்டும். குறிப்பாக 9 மில்கள் கோவையிலே மூடப்பட்டிருக் கின்றன. 65 ஆயிரம் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அரசுத் தரப்பிலே இந்தப் பிரச்சினை மீது தலையிட்டு கருத்து சொல்லப்பட்டது. அதை ஆதாரங்களோடு சொல்ல தொழிற் சங்கத் தலைவர்கள்தான் வரவேண்டும். அதிலே அவசியம் என்று சொன்னால், அவர்களை வந்து சொல்லச்சொல்கிறேன். இப்படி 9 மில்கள் மூடப்பட்டிருக் கின்றன. ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தார்கள். எந்த நடவடிக்கையும் இல்லை. கடைசியாக இதைச் சொல்ல விரும்புகிறேன். புதுக்கோட்டையிலே பல இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. பல தொழிற்சாலைக் கட்டடங்கள் கட்டிக்கொண்டிருக்கின்றார்கள். பல ஆண்டுகளாக நடந்துகொண்டிருக் கின்றது. இன்னமும் தொடங்கப்படவில்லை. அதுபோல காவேரி மில்ஸ் இன்று மூடப்பட்டிருக்கின்றது. ஏற்கெனவே சில ஆண்டுகளாக துயர் தணிப்புப் பணிபோல துயர் துடைப்புத் திட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மில்லை நடத்திய முதலாளி பல லட்சங்கள் கடன் வாங்கியிருந்தார்கள். அதற்குப் பிறகு அரசு பொறுப்பேற்று நடத்தியது. அப்படி ஏற்று நடத்தி ஏறத்தாழ 75 லட்சம் ரூபாய் கட்டியாகி விட்டது. மேலும் வட்டி என்றெல்லாம் சொல்கின்றார்கள். பல ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. அதனாலேயே இன்னும் கடன் பாக்கி இருக்கின்றது. கட்ட முடியாத என்ற அளவிலே நடத்த முடியாது என்று மூடப்பட்டிருக் கின்றது. 75 லட்சம் ரூபாய் வரையில் கட்டிய பிறகு அரசே எடுத்து நடத்துவதால், அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டு, அதற்கான முயற்சிகளை எடுத்திருக்கலாம். அசலைப் போல பல மடங்கு கட்டியாகிவிட்டது. வட்டி என்று சொல்லும்போது, பல நாள் வட்டி கட்டி யிருக்கின்றதால், அந்த வட்டியை ரத்து செய்யலாம் என்று கேட்டுக் கொள்ளலாம். இதனால் எவ்வளவு பேர்கள் வேலை இழந்திருக்கின்றார்கள்? அதனாலேதான் தொழிலாளர்பற்றிக் கவலைப்படாமல், நிர்வாகத்தினர் பணம்

[திரு. ப. மாணிக்கம்] [1986 மே 10

இல்லை என்று சொல்லி முதலாளி மூடிவிட்டார்கள். இதுதான் நாட்டிலே நடக்கக்கூடிய விஷயம். தொழிலாளர் துறையிலே ஏற்படக்கூடிய துன்பங்கள் ஒவ்வொன்றாக வரும்போது, அதிலே தீர்வு காண சட்டம் இருக்கின்றது. அது வரும் ஆனால் அமுலாக்கப்படுவதில்லை. அதிலே அரசாங்கக் காரியங்கள் இந்தக் காரணங்களுக்காகத் தாமதம் ஆகும் என்று விளக்கங்கள் சொல்வதை விட, அரசு உறுதியான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். உறுதியான நடவடிக்கைகள் மூலம் மூடப்பட்ட மில்களைத் திறக்க வேண்டும். துரித நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று சொன்னால், தொழிலாளர்களுக்கிடையே அமைதி இராது. ஆகவே தொழிலாளர் நலத் துறை அந்தக் குறைகளை நிவர்த்திக்க வேண்டும். தொழிலதிபர்கள் அவர்கள் பொறுப்பிலேயிருந்து விடுபட்டுக்கொண்டு விடுகின்றார்கள். அதனாலேதான் அரசாங்கம் என்ன உத்தரவு போட்டாலும் நிறைவேறாத நிலை ஏற்பட்டு விடுகின்றது. இத்தகைய நிலைமைகளில் சட்டங்கள் நிறைவேறுவதற்கும் வேலை வாய்ப்பைப் பறிக்கக்கூடிய நிலைகளை மாற்றுவதற்கும், முதலாளி இஷ்டம்போல் மூடினால், அதை அனுமதிக்காமல் அரசு அதிலே தலையிட்டு காரியங்கள் செய்ய முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால், தமிழகத்திலே எப்படி தொழில் துறை முன்னேற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் சொல்லியிருக்கின்ற கொள்கைகளைக்கூட எந்த வகையில் நிறைவேற்றுவீர்கள்? எனவேதான் இந்த மாதிரி பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-25)

கடைசியாக, இரண்டு அம்சங்களை வலியுறுத்தி பேச்சை முடித்துக் கொள்கிறேன். 'பப்ளிக் அன்டர்டேகிங்ஸ் கமிட்டி' இப்போது ஓர் அறிக்கை சமர்ப்பித்து, அதிலே 13 தொழில்கள் லாபகரமாக இல்லை, நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறது. வாஸ்தவம். பொது நிறுவனங்களில் சில லாபகரமாக நடக்காமல் இருக்கலாம். நஷ்டத்தில் நடக்கலாம். அவற்றை நஷ்டத்தில் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று நான் வலியுறுத்தவில்லை. எப்படி அந்த நஷ்டம் ஏற்பட்டது என்று ஆய்ந்ததற்குப் பிறகுதான் அவற்றை மூடுவது பற்றி அரசு யோசிக்க வேண்டும். இப்போது 'பப்ளிக் அன்டர்டேக்கிங்ஸ் கமிட்டி' சிபாரிசு செய்திருக்கிறது என்று அவசரப்பட்டு, அவற்றை மூடக்கூடாது. சில மாதங்களுக்கு முன்னால் நான் பேசும்போது, டான்சியில் நடைபெற்ற மோசடிபற்றிச் சொன்னேன். அதிகாரிகள் செய்த தவறின் காரணமாக டான்சி பாக்டரி மூடப்பட்டது. பிறகு அரசுத் தரப்பில் விசாரணை செய்து, அதிகாரி மீது நடவடிக்கை



1986 மே 10] [திரு. ப. மாணிக்கம்]

எடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட சிறிய தொழில் நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் நஷ்டத்திற்கு வருகின்றனவென்றால், அதற்கு என்ன காரணம் என்று ஆய்ந்து பார்த்து, எவை எவைகளைக் காப்பாற்றலாம் என்று பார்க்க வேண்டும். பப்ளிக் அன்டர்டேக்கிங்ஸ் கமிட்டியின் சிபாரிசை நிராகரிக்க வேண்டுமென்று நான் வாதாட மாட்டேன். அவற்றை அரசு ஆய்ந்து பார்த்து, எங்கே எப்படி, எதனால் ஏற்பட்டது என்று பார்த்து, வேலை வாய்ப்புகள் இழக்காமல் இருக்கும் வகையில், அந்தத் தொழில்களைக் காப்பாற்ற அரசு முன்வர வேண்டும்.

இன்றைக்கு 'சைல்ட் லேபர்' பற்றிப் பேசினார்கள். ஏற்கெனவே ஹார்பான்ஸ் சிங் கமிட்டி ரிப்போர்ட். அந்த ரிப்போர்ட்டைப் பார்க்க முடியாது. அந்த அறிக்கையை அவையில் சமர்ப்பிக்க முடியுமா என்று கேட்டபோது, அப்போது இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த அவை உறுப்பினர் திரு இராகவானந்தம் அவர்கள், அதை அவையில் சமர்ப்பிக்க முடியாது, அது 'கான்பிடன்ஷியல் ரிப்போர்ட்' என்று சொன்னார்கள். அதன்மீது அமைச்சரவை முடிவு செய்திருக்கிறது. அமைச்சரவை முடிவு செய்த பிறகு, அதை எப்படி நிறைவேற்றினார்கள் என்பதற்கு இன்னொரு கமிட்டி. அது ஹரிபாஸ்கர் கமிட்டி. அதைப் பற்றி 4 உறுப்பினர்கள் பேசினார்கள். ஒரு அரசியல் பழமொழி உண்டு

If you want to shelve an issue put a number of Committees.

அரசாங்கம் ஏதாவது ஒரு பிரச்சினையை மூலையிலே தூக்கிப் போட வேண்டுமென்றால், அது குறித்து ஒரு ஆய்வுக் குழு, சிபாரிசுக் குழு போட வேண்டியதுதான். அப்படி நாம் குழுக்களைப் போட்டு, அவை அறிக்கைகளைச் சமர்ப்பித்தாலும், அதன்மீது என்ன நடவடிக்கை என்று பார்க்க வேண்டும். 'சைல்ட் லேபர்' என்பது சமூகப் பிரச்சினை என்று உணர்ந்துதான் சொல்கிறேன். நல்ல முறையில் பல யோசனைகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அங்கே கடுமையான சுரண்டல் நடைபெறுகிறது. அதை எப்படிக் குறைப்பது என்று அரசு பார்க்க வேண்டும். குழுக்கள் போட்டு, குழுக்களின் அறிக்கைகளை வாங்கி என்ன பயன்? இதில் அரசு கால தாமதமின்றி நடவடிக்கை எடுத்து, குழந்தைகளுக்கு நியாயம் கிடைக்க வழி செய்ய வேண்டும். நல்ல திட்டங்கள், பள்ளிக்கூடத் திட்டம் இருக்கிறது, குழந்தைகளுக்குப் படிப்பு தருகிறோம் என்று சொல்லலாம். இதையெல்லாம்

[திரு. ப. மாணிக்கம்] [1986 மே 10

அவர்களுக்குக் கொடுப்பதற்குள் வெடி மருந்தாலும், தீப்பெட்டி மருந்தாலும் பல குழந்தைகள் இறந்துவிடும் சூழ்நிலை ஏற்படுவதால், காலந்தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடைசியாக ஒன்றை வலியுறுத்துகிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பிலே இல்லாவிட்டாலும்; அரசு இந்த விஷயத்திலே கவனம் செலுத்த வேண்டும். இந்த அவையிலே இதை இரண்டாம் முறையாகச் சொல்கிறேன். ஏற்கனவே பொது விவாதத்தில் சொன்னேன். இப்போதும் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனக்கு முன்னால் பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியபோது, நம்முடைய நிதி அமைச்சரவர்கள் தலையிட்டு, சில கருத்துக்களைச் சொன்னார்கள். நான் ஒன்றை வலுவாகக் குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஊழியர்கள் சட்ட ரீதியாக நடந்து கொண்டார்களா, சட்ட விரோதமாக நடந்து கொண்டார்களா என்று பார்ப்பது பிரச்சினையைத் தீர்க்க உதவாது. சட்ட விரோதமாக நடந்துகொண்டார்கள் என்றால்; ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த வளாகத்திற்குள், தலைமைச் செயலகத்திற்குள்ளே சட்ட ரீதியாக நடந்துகொண்டால், பலர் நடமாட முடியாது. சட்டத்திற்கு விரோதமாக எவ்வளவோ காரியங்கள் நடக்கின்றன. பல பேர் தெரிந்தே சட்டத்தை மீறுகிறார்கள். எனவே சட்டத்தை மீறினார்களா என்பது பிரச்சினையல்ல. அவர்கள் அரசு ஊழியர்கள். ஒரு வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டார்கள். யாரும் கேட்காமல்; அந்த வேலை நிறுத்தத்தை நிறுத்தினார்கள். ஆசிரியர்கள் போராடும்போது, இவர்களும் சேர்ந்து போராடினார்கள். அவர்களுக்கும்

(பிற்பகல் 12-30)

கோரிக்கைகள் இருந்தன. அவர்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கலாம். கோரிக்கைகளை அரசிடம் முறையிட்டிருக்கலாம். போராடியிருக்கலாம். எந்த நாட்டில் இன்றைக்கு ஊழியர்கள் போராடவில்லை? பிரான்ஸ், அமெரிக்கா, ஜெர்மனி போன்ற எல்லா நாடுகளிலும் இன்றைக்கு ஊழியர்கள் போராடுகிறார்கள். காரணம் அரசு ஊழியர்கள் நடுத்தரப் பிரிவினர். அவர்கள் பிக்சட் இன்கம் குரூப்பினர். அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்த முடியாத நிலையில், அரசிடம் கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அதனால் அரசுக்கு சங்கடம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ஒரு ஜனநாயக நாட்டிலே அரசு தன்னுடைய ஊழியர்கள் விஷயத்தில் தாராள மனதுடன் நடந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு பொதுவாழ்க்கையில் ஈடுபட்டிருப்பவர்களை எடுத்துக்கொண்டால், போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக படிப்பு போயிற்று. பிறகு நாட்டுக்காக உழைத்ததால், தங்களையே நாட்டுக்காகத் தந்திருக்கிறார்கள்.



1986 மே 10] [திரு. ப. மாணிக்கம்]

ஆனால் அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், தங்களுக்காகவே அவர்கள் போராடினார்கள். 26 பேர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வேலையில் சேர்ந்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு இன்னும் அரசு வேலை கொடுக்கவில்லை. போராட்டம் நடத்தி முடிந்த அன்றைக்கே இவர்களுக்கும் வேலை கொடுத்திருக்க வேண்டும். இப்பொழுதும் காலம் தாழ்த்தாமல் மற்றவர்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும். அரசு ஊழியர்கள் நல்லெண்ணத்தைக் காட்டும்போது அரசும் பதிலுக்கு தன்னுடைய நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும். அது தான் பரஸ்பரம் ஒத்துழைப்புக்கு உதவியாக இருக்கும். அவர்கள் சட்டத்தை மீறினார்கள் என்றால், அரசு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு, கோட் ஆப் கான்டக்டுக்கு ஏற்ப எச்சரிக்கை செய்யலாம். ஆனால் போராடிய ஒரே காரணத்திற்காக, 4 பேர் ஏதோ சட்டத்தை மீறியிருக்கிறார்கள் என்று சொல்லி, பல குடும்பங்கள் பட்டினி கிடக்கும் நிலையை உருவாக்குவது சரியல்ல. இம்மாதிரி பிரச்சினைகளில் அரசு தாராள மனதுடன் நடந்துகொள்ள வேண்டும். ஒழுங்கைக் கடைபிடிப்பது என்று சொன்னால், அதன் எல்லை எங்கே முடிகிறது என்று பார்க்க வேண்டும். அது பழி வாங்குதலில் போய் முடியக்கூடாது. அரசு ஊழியர்களிடம் ஒழுங்கு கட்டுப்பாடு இருக்க வேண்டும் தான். அதற்காக அவர்களுடைய உரிமையை விட்டுக் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை முன் வைத்து தங்களுக்காகப் போராடியவர்கள். ஆகவே அரசு இதிலே தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்டு உடனடியாக எல்லோரையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். அரசு தன்னுடைய ஊழியர்கள் விஷயத்தில் எப்படி நடந்துகொள்கிறது என்பது மற்றவர்களுக்கு முன் உதாரணமாக இருக்கும். தலைமைச் செயலக ஊழியர்கள் திறமையானவர்கள். அவர்கள் கோஷம் போட்டதற்காக இப்படிப்பட்ட நடவடிக்கை என்பது சரிதானா? வேலையில் மோசம், பழுதாகச் செய்தார்கள், நாசம் செய்துவிட்டார்கள் என்றால், அதற்காக நடவடிக்கை எடுப்பது வேறு. ஆனால் தங்களுடைய உரிமைக்காகப் போராடினார்கள் என்பதால், அரசு இவ்விஷயத்தில் தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும். 1965 ஆம் ஆண்டு தபால் தந்தி ஊழியர்கள் நாடு தழுவிய முறையில் போராட்டம் நடத்தினார்கள். அனைவரையும் அப்போது 'சஸ்பென்ட்' செய்தார்கள். ஊழியர்கள் கோர்ட்டுக்குக் கூட போனார்கள். பிறகு எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள்.

[திரு. ப. மாணிக்கம்] [1986 மே 10

இன்றைக்கு, தொழிலாளர்களுடைய நலனுக்காக, உரிமைக்காக போராடி, தொழிற் சங்கங்கள் ஏற்பட்டதற்குப் பிறகு நூறாவது ஆண்டு விழா நடந்துகொண்டிருக்கிறது. 10 நாளைக்கு முன்பு நூறாவது ஆண்டு விழாவை உலகம் பூராவும் கொண்டாடினார்கள். அந்த வகையில் தலைமைச் செயலக ஊழியர்களைப் பொறுத்தவரையிலும் அவர்கள் மூளையாக கருத்தாக உழைக்கக் கூடிய தொழிலாளர்கள்தான். ஆகவே, தொழிலாளர் களின் நூறாவது உரிமை ஆண்டு விழா நடந்துகொண்டிருக்கும் இவ்வேளையில் அரசு பெருந்தன்மையுடன் நடந்துகொண்டு தலைமைச் செயலக ஊழியர்கள் அனைவரையும் வேலையில் உடனடியாக அமர்த்த வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

Thiru N. C. RAGHAVACHARI: Hon. Deputy Chairman, I thank you very much for giving me this opportunity. I know your time is precious and, therefore, I will try to be very brief. I read the Policy Note relating to Labour Welfare Department and in all humility, I heartily welcome the various suggestions and proposals mentioned therein. But, one or two points are there, which I wish to bring to the notice of the Hon. Minister.

(பிற்பகல் 12-35)

Normally when there is a wrongful termination of service of a worker, he has got two remedies open to him. One is : A workman who comes within the definition of the Industrial Disputes Act can raise a dispute—either an individual dispute or a dispute through the Union — and the Government, on the basis of the Conciliation Report, may refer the matter to the Tribunal. But he has also got another remedy under the Tamil Nadu Shops and Establishments Act, under section 41. Oftentimes I find the workman in the case of termination of service goes to both the forums. There arises a conflict of judicial opinion in that matter. The Shops and Establishments Act applies not only to workmen within the definition of the Industrial Disputes Act but also to other workers. I would humbly suggest an amendment to section 41 in the form of a proviso saying that that section will not apply to a workman coming within the definition of the Industrial Disputes Act. Alternatively, we can provide in the Act that where any workman exercises the option to get the remedy provided under the Industrial Disputes Act, he is not entitled to invoke section 41 of the Shops and Establishments Act,



1986 மே 10] [Thiru N. C. Raghavachari]

The second suggestion I would like to make is this: Whenever a dispute is raised, the Conciliation Officer calls for discussion. Oftentimes I find that the Management takes a long time by taking several adjournments before the Conciliation Officer and sometimes they do not appear at all. Then the Conciliation Officer is forced to refer the matter to the Government. Very rarely I come across an instance where the Conciliation Officer is able to effect a compromise. I would respectfully suggest that whenever a Conciliation Officer is appointed, the Government may appoint a judicial officer in the rank of a Subordinate Judge or there may be a panel of three Subordinate Judges. If they are appointed, I am sure that they will be able to effect a conciliation without the matter being referred to the Industrial Tribunal. A considerable number of disputes could be settled by Judicial officers if they are appointed. Now what happens is that the Conciliation Officer is not able to bring about a compromise and the Government refers the matter to the Tribunal. Before the Tribunal, there is a regular hearing, like a suit, and the hearing goes on and on. Then there is a Writ Petition and the Writ Petition is pending for five years. Then there comes a Writ Appeal and it is pending for another five years. Then the matter goes before the Supreme Court and it is kept pending there for five more years. The net result is that both the workmen and the management do not know where they stand. Therefore, I would request the Government to consider the appointment of Judicial Officers of the rank of Subordinate Judge as Conciliation Officers. There may be a single officer or committees each consisting of two or three officers. From my experience, I feel that the Judicial Officer will be able to tackle the situation because he will be able to effect a compromise.

With these suggestions, I thank you very much for giving me this opportunity.

திரு. எம். பி. சுப்ரமணியம் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் கொள்கை குறித்து சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன். தொழிலாளர்களின் நலனைப் பேணவும், அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கவும் இந்தியாவில் ஏராளமான சட்டங்கள் இயற்றி

[திரு. எம். பி. சுப்ரமணியம்] [1986 மே 10

சொல்லப்போனால், 1947 க்குப் பிறகு இந்தியாவிலே இயற்றப்பட்ட சட்டங்களைப் போல, உலகத்தில் எந்த நாட்டிலும் தொழிலாளர் நலன்களுக்காக சட்டங்கள் இயற்றப்படவில்லை என்பதுதான் உண்மை. இருப்பினும்கூட, இந்தச் சட்டங்களில் உள்ள சந்து பொந்துகளைப் பயன்படுத்தி, தொழிலாளர்களின் உரிமைகளை தொழில் அதிபர்கள் மறுக்கிறார்கள் என்ற காரணத்தால், அரசும் தொழிலாளர்களின் சார்பாக தலையிடவேண்டியிருக்கிறது என்பதை இந்தக் கொள்கைக் குறிப்பில் பார்க்கிறேன்.

தொழிலாளர்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் நல்லிணக்கமும், சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான நலன் கருதியும், தொழில் அமைதியைக் கருதியும் பல்வேறு கொள்கைகளை இந்த அரசாங்கம் கடைபிடித்து வருகிறது என்று இங்கே கூறப்பட்டிருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் அதேநேரத்தில், அரசு மற்ற தொழில் அதிபர்களைப்போல இல்லாமல், ஒரு மாடல் எம்ப்ளாயராக இருக்க வேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிச் சொல்வதன் நோக்கம், அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, அரசாங்கம் மேற்கொண்டிருக்கிற கொள்கையையும் நடவடிக்கைகளையும் பற்றி நான் குறிப்பிட்டாக வேண்டும். இந்தக் கருத்துக்களை இந்தத் தரப்பில் பல பேர் பல நேரங்களில் பேசிவந்திருக்கிறோம். அவர்கள் பிரச்சினைகள்பற்றி

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் அரசாங்கத்தின் பதில் எதுவாக இருக்கிறதென்று சொன்னால், அவர்கள் வேலை நிறுத்தம் செய்த காலத்திலே அவர்களில் யாரோ சில பேர் எழுப்பிய கோஷங்கள், எழுப்பிய சத்தங்கள் தனிப்பட்ட முறையில் தலைவரை,, முதலமைச்சரைப் புண்படுத்தியிருக்கிறது என்று சொல்வதுதான். இவ்வாறு பிரச்சினைகளை மிகவும் உணர்ச்சிவசப்பட்டு பார்க்கிற போக்கு இருப்பது சரியல்ல என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். தனி நபர் ஒருவர் உணர்ச்சி வசப்படலாம். ஆனால் அரசு உணர்ச்சி



1986 மே 10] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

வசப்படுவது எந்தவிதத்திலும் நியாயமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் இடையில் நல்லுறவு இருக்க வேண்டுமென்று விரும்புகிற இந்த அரசு, நல்லமுறையிலே செயல்பட வேண்டுமென்றால், அரசாங்கத்திற்கும் தலைமைச் செயலக ஊழியர்களுக்குமிடையிலும் ஒரு நல்ல சுமுகமான உறவு இருக்க வேண்டியது அவசியமென்பதைச் சொல்லத் தேவையில்லை. இவர்கள் விஷயத்தில் அரசு பெருந்தன்மையாக நடந்துகொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இவர்கள் விஷயத்தில் அரசு இந்த அளவுக்கு உணர்ச்சிவசப்படுவதற்கு எந்தவிதமான காரணமுமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். உணர்ச்சி வசப்படுவது தனி நபருக்கு இருக்கலாம், அரசுக்கு இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குறைந்தபட்ச ஊதியச் சட்டம் போட்டிருக்கிறோம். ஆனால் அவற்றின்மூலம் பலன்களை யார் பெற முடிகிறதென்றால், எங்கே தொழிற் சங்க அமைப்புகள் ஏற்பட்டிருக்கின்றனவோ, அங்கேதான் அவர்களால்தான் குறைந்தபட்ச ஊதியத்தையே பெற முடிகிறது. இவ்வாறு அமைப்பு இல்லாத இடங்களில் அந்தக் குறைந்தபட்ச ஊதியத்தைப் பெற முடியவில்லை என்பதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது என்பதை நாம் பார்க்கிறோம். இன்றைக்கு தமிழ்நாட்டில் 60 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று பல்வேறு கட்சிகளின் அமைப்புகள் இருந்தாலும், அவர்களில் ஒரு சதவீதத்தினர் கூட இந்தக் குறைந்தபட்ச ஊதியத்தைப் பெறவில்லை என்பதை இந்த அரசும் அறியும், நாமும் அறிவோம்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டுமென்பதை அரசு கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருந்தாலும், இப்போதுள்ள குறைந்தபட்ச ஊதியச் சட்டம் 1983 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டதாகும். அதற்குப் பிறகு இதுவரை அது மாற்றப்படாமலேயே இருப்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இவ்வாறு குறைந்தபட்ச ஊதியச் சட்டம் இருப்பது விவசாயத் தொழிலாளர்களுக்குத் தெரிகின்ற அளவுக்கு இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆலையிலே இருப்பவர்களுக்குத் தெரிவதுபோல, தொழிற்

சாலைகளிலே இருப்பவர்களுக்குத் தெரிவதுபோல, சாதாரண கிராமப் புற நிலமற்ற விவசாயத் தொழிலாளிகளுக்கு தங்களுக்கு என்ன என்ன உரிமைகள் அரசால் வழங்கப்பட்டிருக்கின்றன என்று தெரியாத நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியச் சட்டத்தை எடுத்துக் கூறுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல் 1983 ஆம் ஆண்டு போடப்பட்ட இச்சட்டம் 1986 வரைக்கும் திருத்தி அமைக்கப்படாமலிருப்பதும் எந்தவிதத்திலும் நியாயமில்லை. எனவே இதை உடனடியாகத் திருத்தி அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், விவசாயத் தொழிலாளர்களில் வயதடைந்தவர்களுக்கு ஓய்வூதியம் (ஓல்ட் ஏஜ் பென்ஷன்) கொடுக்கும் திட்டம் ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய திட்டமாக இருக்கிறதென்றாலும், அரசுக் கொள்கை எப்படி இருக்கிறதென்று சொன்னால், அவர்கள் ஆதரவற்றவர்களாக, அநாதைகளாக (Destitute) இருந்தால்தான் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்கும் என்று நியதியை வைத்திருக்கிறார்கள். இப்போதுள்ள விதிகளின்படி, ஒரு விவசாயத் தொழிலாளிக்கு, 60 வயது அடைந்துவிட்டால் கூட, அவனுக்கு மகன் இருந்தால், இந்த ஓய்வூதியம் கிடையாது. இவரே நிலமற்ற விவசாயக் கூலி. இவன் மகனும் நிலமற்ற விவசாயக் கூலியாகத்தான் இருப்பான். அவன் தன்னையே காப்பாற்ற முடியாத நிலையில் இருப்பான். அவன் எப்படி இன்னொரு விவசாயக் கூலியை வைத்துக்கொண்டு வாழ்க்கையை நடத்த முடியும்? எனவே 60 வயதான ஒரு விவசாயத் தொழிலாளிக்கு அவனுக்குப் பிள்ளைகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஓய்வூதியம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவில் அத்தகையதொரு சட்டம் கொண்டுவரப்பட்டு, அது தற்போது நல்லமுறையில் அமுல் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்குள்ள விவசாயத் தொழிலாளிக்கு, அவனுக்குக் குழந்தைகள் இருந்தாலும், ஓய்வூதியம் மறுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே கொள்கையை இந்த அரசும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டுகிறேன்.

(சிறிது நேரங்கழித்து மீண்டும்)

உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டுகிறேன்.





(பிற்பகல் 12-45)

**திரு. எம். பி. சுப்பிரமணியம்:** அதைப்போலவே விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு விவசாயிகளுக்கும் குறைந்தபட்ச நிலம் வைத்திருப்பவர்களுக்கும் பல்வேறு திட்டங்களை அரசாங்கம் அறிவித்திருந்தாலும், அவர்களுக்குப் போதிய அளவுக்கு விளம்பரம் செய்யாத காரணத்தினாலே அவர்கள் முழுமையாக அத்திட்டங்களைப் பயன்படுத்த முடியவில்லை. அவையெல்லாம் அவர்களுக்குத் தெரியும் அளவிலே அந்தத் திட்டங்களைப்பற்றி அவர்களுக்கு விவரித்துக் கூறுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு வட்டாரத்திலே அதற்காக ஒரு தாசில்தார் நியமிக்கப்பட்டிருப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. ஆனால் அவர்கள் கடந்த 2 ஆண்டுக் காலத்தில் என்ன பணி செய்திருக்கிறார்கள்? எந்த அளவுக்கு மக்கள் அதைப் பயன்படுத்த முன் வந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குழந்தைத் தொழிலாளர்கள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசினார்கள். சில தினங்களுக்கு முன்பாக மத்தியத் தொழில் அமைச்சர் அவர்களும், நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களும் சிவகாசியில் ஒரு விழாவில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார்கள். அப்போது நான் பத்திரிகைச் செய்தியைப் பார்க்கும்போது, குழந்தைத் தொழிலாளர்கள் குறித்து ஒரு விரிவான சட்டத்தை மத்திய அரசு கொண்டுவர இருப்பதாக நான் பார்த்தேன். அதை ஆதரித்து தமிழக அரசு சார்பாகவும் நம்முடைய அமைச்சர் அவர்கள் பேசியிருப்பதை நான் பார்த்தேன். இதிலே ஒரு அடிப்படையான கருத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன். குழந்தைத் தொழிலாளர்கள் இருக்கக்கூடாது என்று அரசியல் சாசனத்தில் 24-வது விதியில் இருக்கிறது. (Child labour is prohibited) ஆகவே எந்தக் காரணத்தை முன்னிட்டும் 15 வயதிற்குக் குறைவான குழந்தைகளை எந்தத் தொழிலிலும் ஈடுபடுத்தக்கூடாது என்று ஒரு விதியை நாம் ஏற்றுக்கொண்ட பிறகு, சட்டத்தின் மூலமாக பல்வேறு சலுகைகளை அவர்களுக்கு நாம் கொடுப்பதாகச் செய்வோமானால் You are legalising one which is already illegal என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். நிச்சயமாக எந்தக் காரணத்தை முன்னிட்டும் 15 வயதிற்குக் குறைவாக உள்ள குழந்தைகளை எந்தத் தொழிலிலும் ஈடுபடுத்துவதை அரசு தடை செய்ய வேண்டும். ஒரு வேளை மத்திய அரசு சட்டம் கொண்டு வருவதாக இருந்தாலும், அதை இந்த அரசு ஆட்சேபிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். குழந்தைகளுக்கு 15 வயது வரையில் இலவசக் கட்டாயக் கல்வி கொடுப்பதாக அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. 14 வயது வரையிலே இலவசக்

[திரு. எம். பி. சுப்பிரமணியம்] [1986 மே 10

கல்வி கட்டாயமாகக் கொடுக்க வேண்டிய குழந்தைகளை எந்தக் காரணத்தை
முன்னிட்டும், அவர்களுடைய வருமானத்தைப் பெறுவதற்காக பெற்றோர்கள்
தொழிற்சாலைகளுக்கு அனுப்புவதை எந்தவிதத்திலே நாம் ஏற்றுக்கொள்ள
முடியும் என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். பெற்றோர்கள் தங்க
ளுடைய குழந்தைகளுக்குக் கல்வி கொடுக்க முடியவில்லை என்ற காரணத்
தால்தான், அரசாங்கம் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது.
ஆனால் பெற்றோர்கள் குழந்தைகளை அனுப்பி, அவர்களைச் சுரண்டுவதன்
மூலமாக வருமானத்தைப் பெற்று ஒரு குடும்பத்தை நடத்த வேண்டிய கேவல
மான நிலைமை தமிழகத்தில் இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட
விரும்புகிறேன். குறிப்பாக சிவகாசியிலுள்ள பட்டாசுத் தொழிற்சாலை, தீப்
பெட்டித் தொழிற்சாலை, பீடித் தொழிற்சாலை ஆகியவைகளில் வேலை செய்
பவர்களைப்பற்றி கதை கதையாகப் புத்தகங்கள் வந்திருக்கின்றன என்பதை
அரசாங்கத்திற்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். 3 ஆண்டுகளுக்கு முன்பு
ஒரு பஸ்சில் ஏறிய குழந்தைகள் 10 அல்லது 20 மைல்கள் தொலைவில் ஒரு
ஆற்றைக் கடக்கும்போது, ஆற்றிலே அடித்துச் செல்லப்பட்ட செய்தியை
எல்லோரும் பத்திரிக்கையில் பார்த்திருப்பார்கள். அது இந்த அரசின் கவனத்
திற்கும் வந்திருக்கிறது. காலையிலே 5 அல்லது 6 மணிக்கு குழந்தைகளை
பஸ்சில் ஏற்றி சிவகாசிக்குக் கொண்டுவந்து, பிறகு இரவு 7 அல்லது 8
மணிக்குத்தான் குழந்தைகள் திரும்பவும் வீட்டுக்குச் செல்கின்றன என்று
சொன்னால், ஏறக்குறைய 12 அல்லது 13 மணி நேரம் அவர்கள் வேலை
செய்ய வேண்டிய ஒரு மோசமான நிலைமை அங்கே நிலவுகிறது என்று
சொன்னால், இதை எந்தக் காரணத்தை முன்னிட்டும் நிச்சயமாக அனுமதிக்கக்
கூடாது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் குழந்தை
கள் வேலை செய்வதைப்பற்றி ஹர்பன்ஸ் சிங் கமிட்டி ரிப்போர்ட் 1974-லே
கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் எனக்குத் தெரிந்த
வரையில், அந்தக் கமிட்டி 1976-ல்தான் நியமிக்கப்பட்டது. 1974-ல் அல்ல.
1974தான் உண்மையென்று வைத்துக்கொண்டாலும்கூட, 12 ஆண்டுக்காலம்
அதனுடைய அறிக்கையைப் பரிசீலிப்பதற்கு அரசு காலம் கடத்தி, பிறகு
ஹரிபால்கர் தலைமையிலே மற்றொரு கமிட்டியைப் போட்டு, அதனுடைய
அறிக்கை குறித்தும் அரசு முடிவு செய்யவில்லை என்று சொன்னால்,
குழந்தைத் தொழிலாளர்கள் நலனில் இந்த அரசு எந்த அளவுக்கு அக்கறை
யோடு இருக்கிறது என்பது புலனாகிறது என்பதைத்தான் நான் இங்கே
குறிப்பிட விரும்புகிறேன். எந்தவிதக் காரணத்தை முன்னிட்டும் குழந்தைத்
தொழிலாளர்களை வேலை வாங்குவதை அரசு அனுமதிக்கக்கூடாது என்பதை
நான் குறிப்பிட விரும்புகிறேன். எட்டுக்கு எட்டு அடி இருக்கிற சாதாரண



1986 மே 10] [திரு. எம். பி. சுப்பிரமணியம்]

ஒரு அறையிலே 15 அல்லது 16 குழந்தைகள் வேலை செய்ய வேண்டிய
நிலைமை இருக்கிறது. அவர்களை உணவிற்குக் கூட அரை மணி நேரத்திற்கு
மேல் வெளியே விடுவதில்லை. அந்த அளவுக்கு மோசமான நிலைமை அங்கே
நிலவுகிறது என்று சொன்னால், எந்தக் காரணத்தை முன்னிட்டும், அவர்
களைப் பணிபுரிய அனுமதிக்கக்கூடாது என்பதை நான் குறிப்பிட விரும்பு
கிறேன். அங்குள்ள பட்டாசுத் தொழிற்சாலை அதிபர்கள், தீப்பெட்டித்
தொழிற்சாலை அதிபர்கள் கொள்ளை அடிப்பதற்கு அந்தக் குழந்தைகளைப்
பயன்படுத்துகிறார்களே தவிர, வேறு ஒன்றுமல்ல. அங்கு வேலை இல்லாமல்
நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதி ஒரு வறண்ட பகுதி. தீப்
பெட்டித் தொழிற்சாலையிலும், வேறுபல தொழிற்சாலைகளிலும் வேலை
செய்வதற்கு ஏராளமான கூலி ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் குழந்தை
கள் மலிவான கூலிக்கு வருவதால், அவர்களை அந்தத் தொழிற்சாலை அதிபர்
கள் பயன்படுத்துவதற்கு அரசு அனுமதிக்கக்கூடாது என்பதை நான் குறிப்பிட
விரும்புகிறேன்.

இன்னும் பல்வேறு துறைகளிலேகூட 'அன்-ஆர்கனைஸ்டு லேபர்' குறித்து
அரசாங்கம் பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிக்கையிலே பார்த்தேன். கேரள
விலே சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்
கிறார்கள். அதன் மூலம் ஒரு தொழிலாளிக்கு மாதம் ஒன்றுக்கு 700

(பிற்பகல் 12-50)

ரூபாய்க்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு சாதாரண
தொழிலாளிகள் பஸ்-ஸ்டாண்டு போன்ற இடங்களில் சுமை தூக்குகிறவர்கள்
தகராறு எதும் செய்து கொள்ளாமல் மாதம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம்
ரூ. 700 சம்பாதிக்கும் அளவுக்கு உத்தரவாதம் செய்கிற வகையில் சட்டத்தை
நிறைவேற்றி, அந்தச் சட்டத்தை அமுல்படுத்தும் பொறுப்பை லேபர் டிபார்ட்டு
மெண்டுக்கு கொடுத்திருக்கிறார்கள். இதற்காக ஒரு தனியான வாரியமே
அமைத்திருக்கிறார்கள். எனவே தமிழக அரசும் அந்த முன்மாதிரியைப் பின்
பற்றி இங்கே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி என்
வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத்
துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நிலைமைபற்றிய கொள்கை
விளக்கக் குறிப்பின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய
கருத்துக்களை விரிவாகவும் சொன்னார்கள், விளக்கமாகவும் சொன்னார்கள்

என்றாலும், அவை அத்தனைக்கும் பதில் உரைக்கும் சூழ்நிலை இப்போது இல்லை. என்றாலும் ஒரு சிலவற்றிற்கு மட்டும் இங்கே விளக்கங்களை அளிக்க முற்படுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

தொழிலாளர் நலத் துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கிற பல் வேறு பணிகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே குறிப் பிட்டுச் சொல்லியிருப்பது மட்டுமல்லாமல், தொழிலாளர் நலத் துறையின் பணிகள் எப்படியெல்லாம் மேம்பாடடைய வேண்டும் என்பதற்கான காரண காரியங்களையும் விளக்கங்களையும் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார் கள். அரசின் சார்பாகத் தொழில் துறை என்று ஒன்று இருப்பது தொழிற் சாலைகளை ஊக்குவிப்பதற்கும் புதிய புதிய தொழிற்சாலைகளை உருவாக்கு வதற்கும், அதன் காரணமாகத் தமிழகத்தில் புதிய புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும், அதன் மூலமாகப் பொருளாதார வளம் பெருகவும் தொழி லாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், அதன் காரணமாகத் தனி மனிதர் களின் வாழ்க்கைத் தரம் உயரவும் ஆகும். அந்த அடிப்படையில்தான் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர வேண்டும் என்று தொழிற் துறை பணி யாற்றி வருகிறது. அவ்வாறு தொழிற் துறையின் சார்பில் பணியாற்றும் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும், அவர்களுடைய உரிமை களைப் பாதுகாக்க வேண்டும், அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் தொழிலாளர் நலத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது. தொழில் துறை தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் தருகிற வகையில், தன்னுடைய பணிகள் முழுவதையும் கவனித்துக் கொண் டிருக்கிறது. ஆனால் தொழிலாளர் நலத் துறையோ அவர்களுடைய நலனைப் பற்றி கவனிப்பதற்காக அவர்களுக்குத் தேவையான உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதற்காக, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான வசதிகளை, வாய்ப்புகளைப் பெற்றுத் தருவதற்காக தன்னுடைய பணிகளை ஆற்றி வருகிறது. அதற்காகத்தான் தொழிலாளர் நலத் துறையை நாம் அமைத்திருக்கிறோம். அந்த வகையில்தான் அரசு தொழிலாளர்களுக்கு நலம் பயக்கிற பல்வேறு சட்டங்களை இயற்றி அவை களை நடைமுறைப்படுத்துவதில் முனைப்புள்ளத்தோடு பாடுபட்டு வருகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசும்போது, உணர்ச்சி வசப்பட்டு பல கருத்துக்களை எடுத்துச் சொன்னாலும்கூட, தொழிலாளர்கள் சார்பாக இந்த அரசு இல்லை, முதலாளிகள் சார்பாக இந்த அரசு இருக்கிறதோ என்று ஐயப் படக் காரணம் இருக்கிறது என்றெல்லாம் குறிப்பிட்டாலும்கூட, தொழிலாளர்



களுடைய நலனைக் காப்பதற்குத்தான் இந்த அரசும் தொழிலாளர் நலத் துறையும் இருக்கின்றன என்று குறிப்பிட விரும்புகிறேன். அதற்காகத்தான் பல கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்கி, இந்தத் துறையை இயக்கிக் கொண் டிருக்கிறோமே தவிர, எந்த ஒரு முதலாளியையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. எந்த ஒரு முதலாளியும் தம்முடைய பாதுகாப்பில் இருக்க வேண்டுமென்று எண்ணுவதும் இல்லை. ஒவ்வொரு முதலாளியும் 8, 9 அல்லது 10 தலைமுறைக்கு வாழத் தக்க அளவுக்குத்தான் பொருளாதார வசதி யோடு திட்டமிட்டியாக இருக்கிறார்களே தவிர, வேறு எந்த நிலைமையிலும் அவர்கள் இல்லை. எனவே எந்த ஒரு முதலாளியையும் காப்பாற்ற வேண்டிய அவசியத்தில் அரசு இல்லை.

தொழில்களை மட்டுமல்லாமல், தொழிலாளர்களையும் நாம் காப்பாற்ற வேண்டிய கட்டப்பாடு உடையவர்களாக இருக்கிறோம். தொழில்களைக் காப்பாற்றுகிற முயற்சிகளில் அரசு ஈடுபடும்போது, உடனே முதலாளிகளைக் காப்பாற்றுவதற்கு அரசு முன் வந்துவிட்டதைப் போல் பிறர் எண்ணிக் கொள் கிறார்கள். தொழிற்சாலைகள் காப்பாற்றப் பட்டால்தான், அதில் பணி யாற்றும் 5,000 அல்லது 8,000 அல்லது 500 தொழிலாளர்களின் வாழ்வும் காப்பாற்றப்படும். அப்போதுதான் தொழில்கள் எந்த நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறும். அதன் மூலமாக தொழில்கள் அமைதியாக நடைபெறுவதன் மூலமாக தொழிலாளர்களின் நலன்களும் பேணிக் காப்பாற்றப்பட வேண்டும். தொழிற்சாலைகள் தமிழகத்தில் உருவாவதற்கு அப்படிப்பட்ட ஒரு சுகாதாரமான சூழ்நிலை ஏற்பட வேண்டும். அந்த வகையில் தொழில் உறவு நிலைமைகள் நிலவ வேண்டும் என்றுதான் மீண்டும் மீண்டும் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சொற்களைப் பார்த்தாலே, நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம். மிகச் சிறப்பான வார்த்தைகளை, சொற்களை உருவாக்கியிருக்கிறார்கள். தொழிலை ஆளுபவர்கள்தான் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். முதலை ஆளுபவர்கள்தான் முதலாளியாகிறார்கள். எழுத்தை ஆளுபவர்கள் எழுத் தாளர்கள் ஆகிறார்கள். அதைப் போலவே பேச்சை ஆளுபவர்கள்தான் பேச்சாளர்களாகிறார்கள். எனவே தொழில்களை இயக்கி வைக்கும் பெரும் பொறுப்பைத் தொழிலாளர்கள் தான் ஏற்றுக்கொள்கிறார்கள். அதனால்தான் அவர்கள் தொழிலை ஆள்பவர்களாக இருக்கிறார்கள். அந்த முறையிலே அவர்

(பிற்பகல் 12-35)

களுக்கு அதிக ஊக்கமும், ஆக்கமும் தருகிற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலை ஆள்பவர் கள் தொழிலாளிகள் என்ற முறையில் ஆசிரியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள்,

மேலவை உறுப்பினர்கள் ஆகிய அனைவரும் தொழிலாளர்கள் தான். அந்த வகையில் அமைச்சர்களும் தொழிலாளர்கள்தான் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு சட்டங்களை நாம் கொண்டு வந்திருக்கிறோம் என்றாலும், அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் கொண்டு வந்திருக்கிறோம். 1981 ஆம் ஆண்டு தமிழ் நாடு தொழிற்சாலை நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கான நிலையான தகுதி அடிப்படைச் சட்டம்) கொண்டு வந்து நிறைவேற்றியதற்குக் காரணம் நிலையான தகுதியைக் கொடுக்க உதவுகிறது என்பதால்தான். 1981 ஆம் ஆண்டு தமிழ் நாடு பிழைப்பூதியச் சட்டத்தை நிறைவேற்றினோம். இந்தச் சட்டம், விசாரணை நிலையில் உள்ள தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் பிழைப்பூதியம் பெற வழிவகை செய்கிறது. 1981 ஆம் ஆண்டு கைத்தறி நெசவாளர்கள் (பணி நிலைமை மற்றும் பல்வேறு விதித் துறைகள்) சட்டத்தை நிறைவேற்றினோம். அமைப்பு ரீதியாக வராத தொழிலாளர்களின் பணி நிலைமையை ஒழுங்குபடுத்தவும் அவர்கள் நல்ல வசதிகளைப் பெறவும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. 1982 ஆம் ஆண்டு தமிழ் நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (பணி நிலைமை முறைப்படுத்தல்) சட்டம் நிறைவேற்றியதற்குக் காரணம், பாது காப்பாற்ற உடல் உழைப்பு தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்கு படுத்துவதற்காகத்தான்.

தமிழ் நாடு கட்டுமானப் பணி (தொழிலாளர்கள்) சட்டத்தை 1984-இல் நிறைவேற்றினோம். இந்த மசோதா சட்டமன்றப் பேரவையிலே ஏற்கப்பட்டு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அமைப்பு ரீதியில் வராத கட்டுமானப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு நன்மை தரக்கூடிய சட்டம் இது. இதைப்பற்றி திரும்பத் திரும்ப மத்திய அரசுக்கு நாம் வலியுறுத்தி எழுதிக் கொண்டு வருகிறோம். விரைவிலே அதற்கான ஒப்புதல் கிடைத்தால், இந்தச் சட்டத்தின் நோக்கத்தை சிறப்புற நிறைவேற்ற வழிவகை கிடைக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தொழில் தகராறு திருத்தச் சட்டம் 1982 ஆம் ஆண்டு நிறைவேற்றப் பட்டது. தொழில் நடுவர் மற்றும் தொழில் தீர்ப்பாயங்களிலிருந்து தீர்ப்புகள் வழங்கப்படும் வரை தொழில் நிறுத்தப்படாமல் தொடர்ந்து நடைபெற இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. அவற்றை நடைமுறைப்படுத்தும் பெருமுயற்சி களில் இந்த அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். ஆகவே சிலபல வகைகளில் தீர்ப்புகள் ஏற்படாத வகையில், தீர்ப்புக்கு விட்டால்தான் தீர்ப்பு கிடைக்கும் என்பதற்காக இந்த



அரசு பின் தங்காமல் 1983 ஆம் ஆண்டில் 1,032 வழக்குகள் தீர்ப்புக்கு விடப் பட்டுள்ளன. 1984 ஆம் ஆண்டு 646 வழக்குகளையும், 1985 ஆம் ஆண்டு 655 வழக்குகளையும் தீர்ப்புக்கு விட்டிருக்கிறோம். எந்த ஒரு முதலாளியையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நீதி கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இந்த முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம். பல்வேறு பேச்சுவார்த்தைகளை நடத்துவதன் மூலம் பல்வேறு தொழிற்சாலைகளில் சென்ற ஆண்டு மிகச் சிறப்பாக பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை பல்வேறு எடுத்துக்காட்டுகளின் மூலமாக நான் எடுத்துச் சொல்ல முடியும் என்றாலும், நேரம் இல்லாத காரணமாக அவற்றையெல்லாம் விரிவாக எடுத்துச் சொல்ல நான் விரும்பவில்லை. பேச்சு வார்த்தை மூலமாக இரு தரப்பினரையும் வைத்துப் பேசுகின்ற நிலை ஏற்படுகிறபோது, அந்தப் பேச்சு வார்த்தையில் உடன்பாடு ஏற்பட்ட பிறகு—கணிசமான உடன்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன—பல முக்கியமான பிரச்சினைகளில் வெற்றி காண முடிந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

பஞ்சாலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், 1984-85 ஆம் ஆண்டு போனஸ் கோரிக்கை வைத்து 9-11-1985 அன்று வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டனர். 25-11-1985 அன்று முன்னாள் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் தலையிட்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டார். சட்டப்படி போனஸ் நிலையான தொழிலாளர்களுக்கு ரூபாய் 300 கூடுதலாகவும், இதர தொழிலாளர்களுக்கு ரூபாய் 200 கூடுதலாகவும் அளிப்பது என்ற முடிவின் பேரில் 25-11-1985-லிருந்து படிப்படியாக வேலை நிறுத்தம் கைவிடப்பட்டு 28-11-1985 அன்று பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை அறவே கைவிட்டனர்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** என்.டி.சி. ஆலையைப் பொறுத்தவரையில், நேரடிப் பேச்சு வார்த்தை நடத்தி வேலைநிறுத்தம் முடியும் அளவுக்கு வந்தது. 7-12-1985 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை திருத்தினார்கள். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடு பட்டிருந்த வேலை நிறுத்தம் ஒரு முடிவுக்கு வந்தது. அப்படி முடிவுக்கு வந்தது மாத்திரமல்லாமல், நல்லதொரு பணப்பயன் ஏற்படும் அளவுக்கு முடிவுகள் ஏற்பட்டன. டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரியைப் பொறுத்தவரையில், 14-7-1985-ல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர் 15-7-1985 ...

தொழிலாளர்கள் தொழில் தகராறு சட்டப்படி 10-பி யின் கீழ் இடைக்காலத் தொகையை தொழிலாளருக்கு வழங்கிட வழி செய்தது. அது சரியாக அறிவிக்கப்படாததன் காரணமாக, அதிலே மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் தலையிட்டு அதன் காரணமாக 25-7-1985-ல் இயல்பான நிலை திரும்பியது. பஞ்சாலை தொழில் சட்டத்தின் கீழ் எழுந்த புதிய கோரிக்கைகள் பற்றி தொழில் தகராறுகளை நீதிமன்றத்திற்கு விட அரசு ஆணை பிறப்பித்தது.

சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு பிரச்சினையை வைத்தார்கள். அது தொடர்பான ஒப்பந்தம் 31-3-1985-ல் முடிவடைந்தது. தொழிற் சங்கங்களின் கூட்டுக்குழு 25-11-1985 முதல் வேலை நிறுத்தம் செய்யப்போவதாக அறிவிப்பு கொடுத்தனர். ஆகவே வேலை நிறுத்தம் ஏற்படுவதற்கு முன்னாலே அதைக் கொடுத்து நிறுத்த வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலே தொழில் துறை ஆணையாளர் தலையிட்டு சமரசப் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். தொழிலாளர் சட்டத்தின் கீழ் 12-பி யின் கீழ் 30-11-1985-ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

தமிழ் நாட்டில் சர்க்கரைத் தொழிலாளர்கள் ஒரு 20 ஆயிரம் பேர்கள் அதன் மூலமாக பயன் அடையவும் செய்கின்றார்கள். இப்படிப்பட்ட தொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக முயற்சி எடுக்கப்பட்டு தொழிலாளர்கள் 1985 ஏப்ரல் திங்களில் தொழில் துறை ஆணையர் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். 3-7-1985 அன்று தொழில் தகராறு சட்டத்தின் கீழ் 12(3)-ன் கீழ் வடஆற்காடு. சென்னை, செங்கை, திருச்சி வட்டாரங்களைப் பொறுத்தவரையில், ஒரு உடன்பாடு ஏற்பட்டு, அதிலே ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டது. இதை ஏன் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன் என்றால், எந்த ஒரு தகராறும் தீர்க்கப்படவில்லை என்பதல்ல. தீர்க்கப்பட்டிருக்கிறது. ஆகவே எல்லாத் தொழிலாளர்களும் கஷ்டப்படுகின்ற நிலை இருக்கின்றது என்ற நிலை இல்லை என்பதைச் சுட்டிக்காட்டத் தான் இதை எல்லாம் நான் குறிப்பிடுகிறேன்.

தோல் பதனிடும் தொழிற்சாலை பிரச்சினையும் ஒரு முக்கியமான பிரச்சினையாக இருந்தது. சம்பளம், பஞ்சப்படி பற்றிய பிரச்சினையை அவர்கள் எழுப்பினார்கள். பெரிய அளவில் இருந்தது. நிர்வாகம், தொழில்துறை ஆணையாளருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். 6-2-1986-ல் உடன்பாடு ஏற்பட்டு அதன் மூலம் ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 100 அல்லது 8( அளவுக்குப் பயன் கிடைத்தது. 40 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் அடையும் நிலைமைகள் ஏற்பட்டன.



தமிழ் நாடு சிறு தொழில்கள் கார்ப்பரேஷன். டேன்சி பற்றி எடுத்துச் சொல்கின்றபோது, தொழிலாளர்கள் சம்பள உயர்வு, பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி போன்ற கோரிக்கைகளை வைத்து தகராறு எழுப்பினார்கள். முன்னாள் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். தொழில் இணை ஆணையர் நிர்வாகம் இவர்களிடையே ஒரு பேச்சுவார்த்தை நடத்தி 10-6-1985-ல் ஒரு உடன்பாடு ஏற்பட்டதன் விளைவாக ரூ. 85 முதல் ரூ. 100 வரை பணப்பயன் ஏற்பட்டது. 20 ஆயிரம் பேர்கள் பயன் பெற்றார்கள். தமிழ் நாடு மின்சார வாரியத் தொழிலாளர்கள், கிராக்கிப் படி, வீட்டுவாடகைப் படி போன்ற கோரிக்கைகளை வைத்து, ஒரு தொழில் தகராறினை அவர்கள் எழுப்பினார்கள். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். தொழில் துறை ஆணையரும் நிர்வாகம் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்தி 10-6-1985-ல் தொழில் தகராறு சட்டத்தின் கீழ் உடன்பாடு ஏற்பட்டதன் விளைவாக, 56 நிறுவனங்களைச் சார்ந்த நாலாயிரம் தொழிலாளர்களுக்கு சம்பளத்தில் ரூ. 85 முதல் ரூ. 100 வரை பணப்பயன் கிடைக்க வழிவகை ஏற்படுத்தப்பட்டது. குடும்ப வைப்பு நிதி ரூ. 10 ஆயிரம் என்பதை ரூ. 20 ஆயிரமாக உயர்த்தும் நிலை ஏற்பட்டது.

தமிழ் நாடு மின்சார வாரியத் தொழிலாளர்கள் 1985-ல் ஊதிய உயர்வு கிராக்கிப்படி, வீட்டு வாடகைப் படி முதலிய கோரிக்கைகளை வைத்து ஒரு தொழில் தகராறை எழுப்பினார்கள். தொழில் துறை அதிகாரிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். 25-10-1985 அன்று தொழில் தகராறு சட்டத்தின் கீழ் 12(3)-ன் கீழ் தனியாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தில் ஒரு 82 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் அடையவும் செய்தார்கள்.

நெய்வேலி லிக்னைட் தொழிலாளர்கள் பிரச்சினை 1985-85-ம் ஆண்டுக்கான போனஸ் பிரச்சினையைக் குறித்து தொழில் தகராறு எழுப்பினார்கள். தொழிலாளர் நலத் துறை இணை ஆணையாளர் நிர்வாகம் முன்பு பேச்சு வார்த்தை நடைபெற்றது. பேச்சு வார்த்தை நடந்து 1-11-1985-ல் தொழில் தகராறு சட்டத்தின் 12(3)-ன் கீழ் ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன் பயனாக 20 பர்செண்ட் போனஸ் ரூ. 220 வெகுமதியாக உதவித் தொகையாகவும் வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் மூலமாக 12 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் அடைந்தார்கள். சேஷசாயி பேப்பர் மில்ஸ் லிட், ஈரோடு, நிறுவனத்தில் தொழிலாளர் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்து, பல

தொழிற்சங்கங்கள், நிர்வாகங்கள், தொழில் துறை இணை ஆணையாளர் இவர்களின் பேச்சுவார்த்தைகள் நடந்ததனால் 28-12-1985-ல் தொழில் தகராறு சட்டத்தின் 12 (3)-ன் கீழ் இரண்டு ஒப்பந்தங்கள் முடிவாக்கப்பட்டன. 1983-84, 1984-85, 1985-86. 1986-87, 1987-88 ஆகிய ஆண்டுகளுக்கான போனஸ் பிரச்சினை உள்ளடங்கியவை. இந்த ஒப்பந்தங்களால் 2 ஆயிரம் தொழிலாளர்கள் பயன் அடையவும் முடிந்தது.

(பிற்பகல் 1-05)

இதைப்போல, திருவொற்றியூர் விம்கோ தீப்பெட்டித் தொழிற்சாலையில் பெரும் பிரச்சினை ஏற்பட்டது. ஊதிய விகித மாற்றம், அகவிலைப் படி மற்றும் பணி நிலைமைகள் குறித்து கோரிக்கைகள் வைத்து, தகராறு எழுப்பினார்கள். இது குறித்து சென்னை தனி துணை ஆணையர் இரு தரப்பினரிடையே பேச்சு வார்த்தை நடத்தி, சமரசப் பேச்சு நடத்தினார். கடைசியாக 14—10—1985 அன்று தொழில் தகராறு சட்டப் பிரிவுப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதனால் 720 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர். ஒவ்வொரு நிரந்தரத் தொழிலாளருக்கும் மாதம் ஒன்றுக்கு 160 ரூபாய் அதிகப்படியான பணப் பயன் ஏற்பட்டது. மேலும் ஒட்டு மொத்தமான தொகையாக 1,100 ரூபாய் வழங்கப்பட்டது. தொழிலாளர்களின் வாரிசுதாரர்களான 37 பேர்கள் நிரந்தரம் செய்யப்பட்டார்கள். தாரங்கதாரா கெமிகல்ஸ் லிமிடட், சாயர்புரம், ஆறுமுகநேரியில் தொழில் தகராறு ஏற்பட்டபோது, சம்பளம், படி முதலியவற்றைத் திருத்தி அமைக்கக் கோரி, 4 தொழிற் சங்கங்கள் ஒன்றாக இணைந்து போராட்டம் நடத்த முயன்றபோது, பேச்சு வார்த்தைகள் மூலமாக பிரச்சினை தீர்க்கப்பட்டு, உடன்பாடு ஏற்பட்டது. இதனால் 800 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

அடுத்து, நமனசமுத்திரம் லட்சுமி ஷண்முகா ஸ்பின்னிங் மில் நிதிப் பற்றாக்குறை காரணமாக 17—5—1985 முதல் இயங்காமல் இருந்து வருகிறது. பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. திருச்சி தொழிலாளர் துறை தனி ஆணையர் முன்பு 3—7—1985 அன்று உடன்பாடு ஏற்பட்டது. இதனால் 4—7—1985 அன்று தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். மறுபடியும் அங்கே தகராறு ஏற்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதையும் ஆணையாளர் சொல்லுகிறார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மூடப்பட்ட ஆலைகளைப் பற்றி எல்லாம் குறிப்பிட்டார்கள். சென்ற திங்கள் 11 ஆம் நாள் அன்று எல்லாத் தொழிற் சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசினோம். மூன்று தரப்



பினரும் தங்களால் ஆன உதவிகளைச் செய்தால்தான், ஆலைகளைத் திறக்க முடியுமென்று சொன்னோம். எந்த அளவுக்கு முதலாளிகள், உரிமையாளர்கள் இறங்கி வர முடியுமோ அந்த அளவுக்கு இறங்கி வர வேண்டும் என்றும், தொழிலாளர்கள் எந்த அளவுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய வேண்டுமென்றும், அப்போதுதான் ஓராண்டாக, இரண்டு ஆண்டுகளாக மூடிக் கிடக்கும் தொழிற்சாலைகளைச் திறக்க முடியுமென்றும் சொன்னபோது, தொழிற்சங்கத் தலைவர்கள் அத்தனை பேரும் ஒத்துழைப்பு தருவதாகச் சொன்னார்கள். அரசுத் தரப்பில் 5 ஆண்டுகளுக்கு விற்பனை வரிக்கு வட்டியில்லாமல் கடன் கொடுத்து, சிக் மில்களைத் தொடங்கி நடத்துவதற்கு உதவி செய்ய முடியுமென்றும், மின்சார வெட்டு இல்லாத அளவுக்குச் செய்து, அந்த ஊக்குவிக்க முடியுமென்றும் சொன்னோம். இதைப் போன்றே, தொழிலாளர்களும் தங்களுடைய சம்பளத்தில் ஒரு பகுதியைக் குறைத்துக்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்றும், அதை 'டெபர்ட் பேமென்ட்' என்ற முறையில் பின்னால் வசதி, வாய்ப்பு ஏற்படும்போது திருப்பித் தரப்படும் என்ற அடிப்படையை ஒப்புக்கொண்டால், சிலபல நிலைமைகளை உருவாக்க முடியுமென்றும், சொன்னோம். அதை அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கேற்ற முறையில் ஆணை பிறப்பிக்கவும், நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளவும் செய்யலாம். சிலபல மில்களை அரசு ஏற்றுக்கொண்ட போது, அரசின் பொறுப்பாளர்கள் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டபோது, தனியார் நடத்தியதைவிட, நல்ல முறையில் நடத்த, நிர்வாகத்தை செம்மைப் படுத்தி நடத்த வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த முறையில் ஜோதி மில்லை உதாரணமாகக் காட்டலாம். அரசே மில்களை ஏற்று, அங்கே அரசுப் பொறுப்பாளர்கள் இருப்பார்களானால், எந்தவிதமான ஒத்துழைப்பு தரவும், வேலைப் பளுவைக் கூடுதலாக்கிக்கொண்டு ஆலைகளை சிறப்புறச் செய்யவும் தயாராக இருக்கிறோம் என்று தொழிலாளர்கள் சொன்னார்கள். அந்த வகையிலே அவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பின்னி ஆலையைப் பற்றியும், பின்னி இன்ஜினியரிங் ஆலையைப் பற்றியும் சொன்னார்கள். பேச்சு வார்த்தைகள் நடத்தும்படியாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அதனுடைய உரிமையாளர்களைக் கண்டு பேசினேன். தொழிற் சங்கத் தலைவர்களைக் கண்டு பேசினேன். ஆணையர் இரு தரப்பினரிடமும் பேசி, ஒரு சுமுகமான முடிவுக்கு வாருங்கள்; மூன்று தரப்பினரும்—தொழிலாளர்கள், தொழில் அதிபர்கள், அரசு ஆகிய மூன்று பிரிவினரும் சேர்ந்து, எப்படியேனும் தொழிற்சாலையை இயங்க வைக்க வேண்டும், அவை சங்கடம் இல்லாமல் நடக்க என்ன செய்ய முடியுமோ

அதைச் செய்வதற்கு உதவி செய்யலாமென்று சொல்லியிருக்கிறோம். ஆணையர் மட்டத்திலே முடியவில்லை என்றால், அமைச்சர் மட்டத்தில் 3 தரப்பினரும் உட்கார்ந்து பேசி, முடிவு செய்யலாமென்று நான் சொல்லியிருக்கிறேன். அந்த வகையிலே தொழிற் சங்கத் தலைவர் திரு சிந்தன் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போன்று பி. & சி. மில்லைப் பொறுத்தவரையில், தொழிற் சங்கத் தலைவர் திரு குசேலர் அவர்கள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சு வார்த்தை விரைவிலே முடிந்ததற்குப் பிறகு, ஒருவிதமாக அந்தப் பிரச்சினை முடிவுக்கு வருமென்று கருதுகிறேன்.

சிம்சன் பிரச்சினைபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அது பற்றி 2 நாட்களுக்கு முன்பு திரு குசேலரோடு பேசியிருக்கிறேன். அதைச் சுமுகமாகத் தீர்க்க முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. விரைவிலே தீர்க்கப்படுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

ஆலைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், குறைந்தபட்ச மாத வருமானம் என்று பார்த்தால், இந்திய அளவில் ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழகத்தைப் பொறுத்தவரையில், தொழிலாளர்கள் நல்லமுறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பேச்சு வார்த்தையின் அடிப்படையில் இப்பொழுது சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தூரைப் பொறுத்தவரையில், சராசரி வருமானம் ரூபாய் 710.56, டெல்லி ரூபாய் 768.37, மேற்கு வங்கம் ரூபாய் 811.81, பம்பாய் ரூபாய் 891.84. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், தொழிலாளர்களின் சராசரி வருமானம் ரூபாய் 928.84. இது சென்ற ஆண்டைய நிலவரம். ஆனால் இப்பொழுது இது ரூபாய் 1,025.08 என்கிற அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதையும், மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது. நம்முடைய தொழிலாளர்களின் சராசரி வருமானம் சிறப்பாகத்தான் இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே உறுப்பினர்கள் சிலர் சில பிரச்சினைகளை எழுப்பினார்கள். 480 நாட்கள் தொடர்ந்து தற்காலிகமாக வேலை செய்தவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற சட்டம் 1982 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. 1—1—1982 ஆம் நாளிலிருந்து இது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதன் காரணத்தால், சென்ற ஆண்டுவரை 3,366 தொழிற்சாலைகளில் பணிபுரியும் 23,189 தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதுபோல் அரசு சார்பான பல நிறுவனங்கள் இருக்கின்றன. அங்கேயெல்லாம் பணியாற்றுகின்ற தற்காலிக



ஊழியர்களையும் இச்சட்டத்திற்கு உட்படுத்த வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். இந்தச் சட்டத்தை நல்லமுறையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உறுப்பினர்கள் சொல்லியதற்கு ஏற்ப அதற்கான முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, அரசு அறவே இச்சட்டத்தை நிறைவேற்றவில்லை என்று சொல்வது சரியல்ல. 23,189 தொழிலாளர்களை நாம் இச்சட்டத்தின் மூலமாக நிரந்தரப்படுத்தியிருக்கிறோம்.

தொழிற் சங்கங்களை அங்கீகரிக்கும் வகையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் நல்லது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு சொன்னார். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக்கொண்டு வருவது நல்லது என்று நானும் கருதுகிறேன். மகாராஷ்டிரத்தில் அப்படி ஒரு சட்டம் இருப்பதாகச் சொல்கிறார்கள். தொழிற் சங்கத்தை அங்கீகரிப்பதைப் பொறுத்தவரையில், ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்கிற அடிப்படையில் 'சீக்ரட் பாலட்' முறையில் வழிவகை செய்தால், உறுப்பினர்கள் சொல்லியதுபோல, தொழிற் சங்கத் தகராறுகள் எதுவும் எழ வழியிருக்காது. உறுப்பினர்கள் இங்கே சொல்லிய கருத்துக்களின் அடிப்படையில் மகாராஷ்டிராவில் இருக்கும் சட்டத்தைப் பார்த்து, அதைவிட நல்ல முறையில் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி, நோக்கங்களை எல்லாம் நல்லமுறையில் நிறைவேற்றுகின்ற அளவில் ஒரு முழுமையான சட்டத்தைக் கொண்டுவர இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே பலேக்கர் அவார்டு பற்றியும் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 42 நிறுவனங்கள் இருக்கின்றன. இதில் 39 நிறுவனங்களில் அவார்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. மூன்றில் மட்டும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஒன்று 'மெட்ராஸ் லா ஜர்னல்' ஆகும். மற்றொன்று பேசும் படம். இந்த இரண்டு பேரும் உயர்நீதி மன்றத்திற்குப் போய், தங்களைப் பொறுத்தவரையில், நடைமுறைப்படுத்தக் கூடாது என்று ஆட்சேபணை தெரிவித்து 'ரிட்' மனு போட்டிருக்கிறார்கள். தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றொன்று, கிராம ராஜ்யம் என்பது. இவர்களும் தங்களுக்கு இதிலிருந்து விதிவிலக்கு வேண்டுமென்று சொல்லி மத்திய அரசையும் மாநில அரசையும் கேட்டிருக்கிறார்கள். இது சாதாரணமாக லாபம் தர முடியாத ஒரு பத்திரிகை. அந்த வகையில் மூன்றைத் தவிர மற்ற 39 பத்திரிகைகளைப் பொறுத்தவரையில், இது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அடுத்து, கட்டுமான தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இறந்துபோன கட்டுமான தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கின்ற

திட்டத்தினைப் பொறுத்தவரையில், வந்திருக்கக்கூடிய மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு, ஆராயப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தச் சட்டத்தின் அடிப்படையில் நிவாரணம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-15)

தொழிலாளர் சட்டங்கள் அடிப்படையில் மேற்பார்வை செய்து, தண்டனை வழங்குவதில் நாம் கவனம் செலுத்திவருகிறோம் என்பதை குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 1985 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மூன்று திங்களில் மட்டும் கிட்டத்தட்ட 1,82,356 நிறுவனங்கள் மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்யப்பட்டு, அவைகளில் 12,726 வழக்குகள் தொடரப்பட்டு, 3,993 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டங்களை பல இடங்களில் மீறுகிறார்கள் என்று சொல்கிற நேரத்தில், அப்படி மீறுதலைத் தடுத்து மீண்டும் தண்டனை வழங்கும் அளவுக்கு தொழிலாளர் நலத்துறை ஆணையாளருக்கு அதிகாரம் இல்லை என்ற குறைபாடும் இருக்கிறது. ஏனென்றால், தொழிலாளர் நலத்துறை ஆணையாளர் பேச்சுவார்த்தைக்கு அழைத்தால், தொழிலாளர்கள் மட்டும் வருகிறார்கள், தொழில் அதிபர்கள் வருவதில்லை, அதன் காரணமாக பல வழக்குகள் வருவதே இல்லை என்ற நிலைமையும் இருக்கிறது. பேச்சு வார்த்தைக்கு அழைக்கும்போது, முதலாளிகள் கட்டாயம் வரவேண்டும், பேசி சுமூகத் தீர்வுக்கு இடம் தர வேண்டுமென்ற அளவில் சட்டத்திலே மாற்றம் அல்லது திருத்தம் கொண்டுவர முடியுமா என்று அரசு ஆலோசித்து வருகிறது என்பதையும் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்கள் பிரச்சினைபற்றி விசாரிக்க ஆங்காங்கு நீதிமன்றங்கள் இருப்பதைப் பரவலாக்கி, அதிக இடங்களில் அத்தகைய தொழில் நீதிமன்றங்களை அமைக்கலாம் என்பது பற்றிய செயற்குறிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப்போது சென்னையில் மட்டும் முதன்மை தொழிலாளர் நீதிமன்றமும், கூடுதல் நீதிமன்றமும் இருக்கின்றன. இரண்டாவது தொழிலாளர் நீதிமன்றம், மூன்றாவது தொழிலாளர் நீதிமன்றம் ஆகியவவையும் சென்னையில்தான் இருக்கின்றன. இவைகளை விரிவுபடுத்தி, முதன்மை தொழிலாளர் நீதிமன்றத்தையும், கூடுதல் நீதிமன்றத்தையும் பல்வேறு இடங்களில் அமைக்கவும் செயற்குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதுரை, கோவை மாநகரங்களில் இருப்பவைகளையும் பரவலாக ஆக்கலாமா என்பது பற்றியும் யோசிக்கிறோம். இனி பிரின்சிபல் தொழில் நீதி மன்றம், கூடுதல் நீதிமன்றம் ஆகிய இரண்டையும்



சென்னையில் வைத்து, தஞ்சை, தென்னாற்காடு மாவட்ட பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்கிற அளவிலும், வேலூரில் இதுபோன்ற நீதிமன்றத்தை அமைத்து வடாற்காடு, தர்மபுரி மாவட்டங்களைக் கவனித்துக்கொள்கிற அளவிற்கும், சேலத்தில் தொழிலாளர் நீதிமன்றத்தை அமைத்து, சேலம், பெரியார் மாவட்டப் பிரச்சினைகளைக் கவனித்துக் கொள்வதற்கும், கோவையில் ஒரு தனி நீதிமன்றம் துவக்கி, கோவை, நீலகிரி போன்ற மாவட்டங்களின் தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கும், திருச்சியில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி, திருச்சி, புதுக்கோட்டை, முத்துராமலிங்கம் மாவட்டத்தைப் பார்த்துக்கொள்வதற்கும், மதுரையில் துவக்கப்பட்டு, மதுரை, இராமநாதபுரம், காமராஜர், அண்ணா போன்ற மாவட்டங்களின் தொழிலாளர் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கும், திருநெல்வேலியில் அமைக்கப்படும் தனி நீதிமன்றம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களின் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கும், முயற்சிகள் மேற்கொண்டு, இரண்டு தொழில் நீதிமன்றங்கள் கூடுதலாக அமைத்து, பரவலாக ஆக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மற்றொன்று, சிவகாசியில் சிறுவர் தொழிலாளர்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், திரு. எம். பி. சுப்பிரமணியம் அவர்களும் குறிப்பிட்டார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், ஏழ்மை நிலைமை, வறுமை நிலை ஆகியவைகளைப் பார்த்தால், எட்டு வயது, ஒன்பது வயது, பத்து வயது சிறுவர்களை வேலைக்கு அனுப்பி, அந்தக் குடும்பம் பிழைக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது. எவ்வளவு சட்டங்கள் போட்டும், அதை மாற்ற இயலவில்லை என்ற அளவுக்கு மத்திய அரசும் நினைத்து, மாநில அரசும் அந்த முடிவுக்கு கிட்டத்தட்ட வந்துவிட்ட நிலைதான் இப்போது இருக்கிறது. ஆகவே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, நிலைமையை ஒட்டி, அவர்கள் பார்க்கும் வேலையோடு, அவர்களுக்குக் கல்வி வசதியும் மற்றவைகளும் தந்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். மத்திய அரசும் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில், சென்ற மாதம் 20 ஆம் தேதி, சிவகாசியில் சிறுவர் தொழிலாளர் நலத் திட்டம் என்ற சில திட்டங்களுக்கு மத்திய அரசும் அனுமதி அளித்திருக்கிறது. முதலாவதாக உத்திரப்பிரதேசத்தில் இதுபோன்ற திட்டம் கொண்டுவரப்பட்டது. பிறகு தமிழ் நாட்டில் சிவகாசியில் இரண்டாவதாக இருக்கலாம் என்று தேர்ந்தெடுத்தார்கள். இது நல்ல திட்டம். இந்தத் திட்டம் சிவகாசியில் துவக்கிவைக்கப்பட்டது. இதற்கு 13 கோடியே லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது

143557

மூன்றாண்டுக் காலத்தில் செயல்படுவதாக திட்டம். அவர்கள் கல்வி கற்பதோடு மற்ற வேலை வாய்ப்புக்கும், இது வழி வகுக்கும் என்பதால், திட்டவட்டமாக முதல் கட்டமாக 9 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில், முறை சாராக் கல்வியின் அடிப்படையில் குடும்ப நலத்திற்கு 29 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும் மருத்துவத்திற்காக, 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் வழங்கவும், சிறுவர் தொழிலாளர்களுக்கு ஒரு வேளை சத்துணவு தருவதற்காக 4 கோடியே 85 லட்சம் ரூபாய் அளவுக்கு தரலாம் என்றும் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த வகையிலும் இப்போது முறை சாராக் கல்வி மூலமாக தொழிலாளர்களுக்கு . . .

(பிற்பகல் 1-20)

**திரு. ப. மாணிக்கம்:** தலைவர் அவர்களே, பாதுகாப்பு உத்தரவாதம் Safety measures தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் இருக்கிறது. அத்தொழிற்சாலைகளில் வெடி மருந்தெல்லாம் உபயோகப்படுத்துவதால் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே அங்கே செய்யப்பட்டுள்ள பாதுகாப்புக்கான விவரங்கள் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போன்ற தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணியாற்றும் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பதற்காக முறைசாராக் கல்வி நிலையங்கள் கிட்டத்தட்ட சிவகாசிப் பகுதியில் 90 அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறுவர்கள் இத்தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றபோதே கல்விக்காக 2 மணி நேரம் ஒதுக்க வேண்டுமென்றும், இந்த இரண்டு மணி நேர இழப்பை முதலாளிகள் ஈடு கட்ட வேண்டுமென்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புபற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் குறிப்பிட்டார். இது தொடர்பாக அண்மையில் நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி நல்லதொரு திட்டத்தைக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசோடு இரண்டு வார காலத்திற்கு முன்னாலே பேசினார்கள். அது மிகவும் ஊக்கம் தருவதாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறோம். அவர்களே ஏற்று நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலாளரும் ஓராண்டுக்கு, ரூபாய் பத்து செலுத்த வேண்டும். மேற்படி தொகையை முதலாளியோ அல்லது தொழிலாளியோ யாராவது ஒருவர் செலுத்த வேண்டும். இந்தச் சூழ்நிலை ஏற்படுமானால், நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு ஓராண்டுக்கு



பத்து ரூபாய் பிரிமியம் செலுத்திக்கொண்டு வர வேண்டும். அவர்கள் வேலை செய்கின்ற இடத்தில் ஆபத்து ஏற்பட்டாலும் சரி, வெளியிலே ஆபத்து ஏற்பட்டாலும் சரி, அவர்களுக்கு 16,000 ரூபாய் ரொக்கப் பணமாகத் தருகின்ற வகையிலே வகைமுறை செய்யப்பட்டிருக்கிறது.

அதுபோல் அவர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கின்றபோது, இரு அங்கங்களை இழந்தாலும், ஒரு கண், ஒரு அங்கத்தை இழந்தாலும் அல்லது முற்றிலுமாக செயலற்றுப் போனாலும் அவர்களுக்கும் 16,000 ரூபாய் தருவதென்றும், ஒரு கண்ணை அல்லது ஒரு அங்கத்தை இழந்தால் 8.000 ரூபாய் தருவதென்றும், விபத்தில் நிலையான ஊனம் ஏற்பட்டால் 16.000 ரூபாய் தருவதென்றும் வகைமுறை செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. ப. மாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, Safety against occupational hazards, தான் செய்கின்ற தொழில் காரணமாக அதில் வரக்கூடிய ஊனம், ஆபத்து குறித்தும், அதைத் தடுக்கும் விதத்தில் சட்டங்கள், உத்தரவுகள் இருக்கின்றனவா என்றுதான் கேட்டேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இந்தத் தொழிற்சாலைகள் பற்றி ஏற்கனவே பாதுகாப்புச் சட்டங்கள் இருக்கின்றன. முழு விவரம் என்னிடம் இப்போதில்லை. வேண்டுமானால் தனியாகக் கேட்டால் சொல்கிறேன். இவற்றில் குறைபாடிருக்குமானால், அவற்றைக் களைந்து மேலும் செம்மையாகச் செயல்படுத்த அரசு ஆயத்தமாக இருக்கும் என்பதையும் எடுத்துச்சொல்லி, மேலும் பல பிரச்சினைகள்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். என்றாலும் அவற்றையெல்லாம் இந்த அரசு எடுத்துச்சொன்ன கருத்துக்களை அடிப்படையாக வைத்து அவற்றைச் சிந்தித்து நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடும் என்பதை எடுத்துச்சொல்லி இந்தக் கொள்கை அறிக்கையைப் பொறுத்து வரையிலும், எடுத்துச்சொன்ன கருத்துக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

## 8. அரசின் சட்ட முன்வடிவு.

### தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 10

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1986-ம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986) @பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36 1986) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

(பிற்பகல் 1-25)

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டுள்ள இந்த நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் குறுகிய நேரத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சற்றொப்ப 3,400 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதி ஒதுக்கீட்டிற்கான சட்ட முன்வடிவு இந்த அவையிலே வைக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றி விவாதிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள நேரம் மிகக் குறைவாக இருக்கிறது என்பது மாத்திரமல்ல, இதிலே பல உறுப்பினர்களும்—ஆளும் கட்சி சார்பிலேயும், எதிர்க் கட்சி சார்பிலேயும்—கருத்துக்களை எடுத்துக் கூறுகின்ற வாய்ப்பும் இன்றைக்கு அனைவருக்கும் கிட்டவில்லை . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவின் மீது யாரும் அதிகம் பேசுவதில்லை. அது அவர்களுக்கே தெரியும். எப்போதும் சாதாரணமாகப் பேசுபவர்கள் அப்படியே பேசினாலும், 5 நிமிடத்திற்கு மேல் யாரும் பேசுவதில்லை. நம்முடைய நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு உறுப்பினர்களுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது; பிறகு சப்ளிமென்டரி பட்ஜெட்டில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. நிதி ஒதுக்க மசோதா மீது யாரும் அதிகமாகப் பேசுவதில்லை. அதுவும் இன்றையதினம் மற்றவர்கள் யாரும் பேசவில்லை. எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்தான் பேசுகிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தேவையான நேரத்தை அவர்கள் எடுத்துக்கொள்ளலாம்.

**டாக்டர் மு. கருணாநிதி:** எப்படியோ முன்னாள் நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த நானும், இந்நாள் நிதியமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிற நாவலர் அவர்களும் இந்த நிதி ஒதுக்கீடு குறித்து விவாதித்து அதற்

@ 224-226 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1986 மே 10] [டாக்டர் மு. கருணாநிதி]

குரிய விளக்கங்களைப் பெறுகின்ற நிலையில் இந்த அவையின் நிகழ்ச்சிகள் அமைந்திருப்பது குறித்து நான் மிக்க மகிழ்ச்சியுடையவனாகவிட்டாலும், ஆறுதல் அடைகின்றேன். இந்த நிதி ஒதுக்கீடு எவ்வாறெல்லாம் உரிய முறையில் நோக்கங்களுக்கு ஏற்ப மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும், திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற கருத்துக்களை நான் இங்கே எடுத்துக் கூறுகிற நேரத்தில், கடந்த காலத்தில் எவ்வாறெல்லாம் இப்படி ஒதுக்கப்பட்ட நிதிகள் உரிய காரியங்களுக்கு அல்லது உரிய நேரத்தில் செலவழிக்கப்படவில்லை என்பதை எடுத்துக் காட்டவும் நான் கடமைப்பட்டிருக்கிறேன். முதல் கட்டமாக அண்மையிலே தமிழ் நாட்டில் குதிரைப் பந்தயம் ஒழிந்தது என்கின்ற ஒரு நல்ல செய்திக்குப் பிறகு, இந்த அவையில் நான் பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே அதுகுறித்து சில வார்த்தைகளை இங்கே நான் கூற விரும்புகிறேன்.

1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கான சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிலையில், அது பேரவையிலே நிறைவேற்றப்பட்டு, அதற்குப் பிறகு குதிரைப் பந்தய சங்கத்தினர் உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடர்ந்து, குதிரைப் பந்தய ஒழிப்பு ஏற்றுக்கொள்ளக்கூடியது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு அளித்த பிறகு, 1975-ல் அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். உச்ச நீதிமன்றத்திலே அந்தக் குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டத்திற்கு ஒரு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. அதன் காரணமாக மீண்டும் குதிரைப் பந்தயம் தமிழ் நாட்டிலே தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. ஆனால் ஏறத்தாழ 10 ஆண்டுக் காலமாக உச்ச நீதிமன்றத்திலே இருந்த அந்த வழக்கை விரைவுபடுத்துகின்ற முயற்சியிலே இந்த அரசு முற்படவில்லை என்பதையும், எனவேதான் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படாமல் தொடர்ந்து நடைபெற்று வந்தது என்பதையும் நாட்டு மக்கள் மிக நன்றாக அறிவார்கள். அதற்குப் பிறகு திடீரென்று—நான் காரணங்களில் நுழைய விரும்பவில்லை—அரசாங்கம் குதிரைப் பந்தயத்தை தேசிய உடைமை என்ற நிலையில் அரசாங்கமே ஏற்று நடத்துவது என்கின்ற முடிவை அறிவித்து அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் முனைப்பாக முடிவுற்ற, அதன் பின்னர் 1975-ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்திலே போய் இடைக்காலத் தடை உத்தரவை இந்தச் சட்டத்திற்குப் பெற்றிருந்த குதிரைப் பந்தய சங்கத்தினர் அவர்களாகவே அந்த வழக்கை திரும்பப் பெற்றுக்கொண்ட காரணத்தால், பிறகு குதிரைப் பந்தயம் ஒழிந்திருக்கிறது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 மே 10

(பிற்பகல் 1-30)

பேரவையிலே, சட்ட அமைச்சர் என்று கருதுகிறேன்—அவர்கள் வைத்த அறிக்கையில், அண்ணா வழியில் நின்று குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படுகிறது என்று கூறியிருந்தாலும், அண்ணா வழி நின்று குதிரைப் பந்தயத்தை ஒழிக்கிற முயற்சிகள் கடந்த 10 ஆண்டுகளாக எடுத்துக் கொள்ளப்படாமல் இருந்து, அரசாங்கமே அந்தப் பந்தயத்தை நடத்தலாம் என்ற கருத்துக்கும் ஆட்பட்டு, அந்த முயற்சியில் ஈடுபட்டு பிறகு, வழக்குத் தொடர்ந்தவர்களே தங்கள் வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொண்ட காரணத்தால்தான், குதிரைப் பந்தயம் ஒழிந்திருக்கிறது என்ற உண்மையை யாரும் மறைத்துவிட இயலாது.

அதுமட்டுமல்ல. இதிலே ஒரு வேதனை என்னவென்றால், வழக்குத் தொடர்ந்த குதிரைப் பந்தயச் சங்கத்தினர் தங்கள் வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ள உச்ச நீதிமன்றத்தை நாடியபோது, நம்முடைய மாநில அரசின் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய திருவாளர் சாந்தி பூஷன் அவர்கள் எத்தகைய கருத்தை எடுத்துச் சொன்னார் என்பதைப் படிக்கும் போதுதான் எனக்கு வியப்பு ஏற்படுகிறது.

நியூஸ் டுடே என்கிற ஆங்கிலப் பத்திரிகையில் வந்த வாசகம் இது :

"Shanti Bhushan, Senior Counsel who appeared for the State before the Supreme Court said that the application for the withdrawal of 1975 appeal was not maintainable".

என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி அரசாங்கத்தின் தரப்பில் ஒரு கருத்து வழக்கில் எடுத்துக் குறிப்பிடும்போது, எந்த அளவுக்கு குதிரைப் பந்தய ஒழிப்பில் இந்த அரசாங்கத்திற்கு ஒரு அக்கறையற்ற தன்மை இருந்தது என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

இதே உச்ச நீதிமன்றம்தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பேருந்துகளையெல்லாம் தேசிய மயமாக்க வேண்டும் என்று கொண்டு வந்த சட்டம் செல்லாது என்று பேருந்துகளின் அதிபர்கள் வழக்குத் தொடுத்தபோது, அந்த வழக்கும் கடந்த 10 ஆண்டுக் காலமாக உச்ச நீதிமன்றத்தில் இருந்து, அது விரைவுபடுத்தப்படாமல், ஆனால் இறுதியாக உச்ச நீதிமன்றம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட பஸ்களைத் தேசிய மயமாக்கும் சட்டம் செல்லும்; இது ஒரு சரியான சட்டம் என்று அறிவித்தது. ஆனால் உச்ச நீதிமன்றத்தினுடைய அந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு ஆளும் கட்சி, தமிழக அரசு பஸ்களை தேசியமய மாக்கும் அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தவில்லை என்பதையும் நான் இங்கே வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்



1986 மே 10] [டாக்டர் மு. கருணாநிதி]

இப்படி அரசாங்கத்தின் சார்பாக, அரசாங்கத்துடைய சட்டம் அல்லது முடிவுகளைக் குறித்து சுப்ரீம் கோர்ட்—உச்ச நீதிமன்றம்—தீர்ப்புக்களைக் கொடுத்த நிலையில்கூட அவைகளை நடைமுறைப்படுத்துவதில் அரசாங்கத்திற்கு ஏன் தயக்கம் ஏற்பட்டுவிடுகிறது.

இதுவும் மற்றொரு உதாரணம். ஸ்டீல் ரீ-ரோலிங் மில்ஸ் அரசாங்கத்திற்குத் தரவேண்டிய வரி ஏறத்தாழ ரூ. 20 அல்லது ரூ. 30 கோடி அளவுக்கு இருந்தது. அதை வசூலிக்க வேண்டும் என்று கழக ஆட்சிக் காலத்தில் கேட்டபோது, அதை எதிர்த்து அவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்றார்கள். உச்ச நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால், "கழக ஆட்சி கூறுவதைப்போல் அந்த வரி தரப்பட வேண்டிய ஒன்றுதான்". இவ்வாறு ஸ்டீல் ரீ-ரோலிங் மில் சார்பாக வாதாடியபோது, உச்ச நீதிமன்றம் தன்னுடைய முடிவை அறிவித்தது. அந்த முடிவை அரசாங்கம் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ளாமல் அதற்கு மாறாக இந்த அரசு அந்த வரியை வஜா செய்து கொடுத்தது. அப்படி வரி வஜா செய்து கொடுக்கப்பட்டது என்று பேரவையில் கணக்குக் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றிருந்த அருமை நண்பர் திரு. என். எஸ். வி. சித்தன்—இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கூட—தன்னுடைய கணக்குக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். உச்ச நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்கிய பிறகும் அதை நடைமுறைப்படுத்தாமல் அரசு தயங்குவது ஏன் என்று அதிலே எழுப்பியிருந்தார். இவைகளை நான் சொல்வதற்குக் காரணம் குதிரைப் பந்தய வழக்கு திரும்பப் பெறப்பட்ட காரணத்தால், இன்றைக்கு அது தானாகவே ஒழிந்திருக்கிறது.

(பிற்பகல் 1-35)

ஆனால் உச்சநீதிமன்றம் அரசாங்கத்திற்குச் சாதகமாக பஸ் தேசியமயமாக்கும் கொள்கையிலும், ஏறத்தாழ 30 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய வரியை பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலையிலும் வழங்கப்பட்ட தீர்ப்புகளை இந்த அரசாங்கம் ஏற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்ற என்னுடைய வருத்தத்தை இங்கே தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் முதலிலேயே குறிப்பிட்டதைப்போல, நல்ல நோக்கத்திற்காக, ஒதுக்கப்படுகிற நிதியை சரியாகச் செலவிட வேண்டும் என்பதற்காக சில எடுத்துக்காட்டுகளை இந்த மாமன்றத்திலே நம்முடைய நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய கையில் இருப்பது report of the Comptroller and Auditor-

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 மே 10

1985 ஜூலை 23 ஆம் தேதி வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் இந்த ஆண்டு மார்ச் திங்கள் 20 ஆம் தேதி அவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் குடிநீர் வாரியம் எந்த அளவிற்குச் செயல்பட்டிருக்கிறது என்பதைக் குறித்த குறிப்புகள் காணப்படுகின்றன. இப்போது தமிழ் நாட்டிலே இருக்கின்ற வறட்சியைத் தீர்ப்பதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து மாநாடு கூட்டி, இத்தனை கோடி ரூபாய் அதற்காகச் செலவிடப்படுகிறது என்று கூறிய செய்திகளை பத்திரிகைகளில் படிக்கிறோம். இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவிலே கூட, குடிநீருக்காக ரூபாய் 127 கோடி ஒதுக்கப்படுகிறது என்ற குறிப்பு இருப்பதை நாம் காண்கிறோம். ஆனால் நான் இங்கே எடுத்துக் காட்டிய இந்த ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அறிக்கையில் குடிநீர் வாரியம் எப்படி செயல்படுகிறது என்பதைப்பற்றி குறிப்பிட்டிருப்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1980-81 ஆம் ஆண்டு ஓப்பனிங் பேலன்ஸ் 4 கோடியே 44 இலட்சம் ரூபாய் குடிநீர் வாரியத்திலே இருந்தது. அரசாங்கம் 13 கோடியே 21 இலட்சம் ரூபாய் தருகிறது. ஆக மொத்தம் 1981 ஆம் ஆண்டு 17 கோடியே 65 இலட்சம் ரூபாய். ஆனால் அந்த ஆண்டு குடிநீர் வாரியம் செலவழித்த தொகை ரூபாய் 7 கோடியே 43 இலட்சம்தான். அந்த ஆண்டு இறுதியில் மிச்சம் 10 கோடியே 22 இலட்சம் ரூபாய். அந்த பேலன்ஸோடு 1981-82 ஆம் ஆண்டு ஆரம்பம் ஆகிறது. அதாவது 10 கோடியே 22 இலட்சம் ரூபாயோடு 1981-82 ஆம் ஆண்டு தொடங்குகிறது. அப்போது அரசாங்கம் 18 கோடியே 91 இலட்சம் ரூபாய் குடிநீர் வாரியத்திற்கு வழங்குகிறது. ஆக மொத்தம் 29 கோடியே 13 இலட்சம் ரூபாய் ஆகிறது. மொத்தம் 29 கோடியே 13 இலட்சம் ரூபாய் கையில் இருந்தும், அந்த ஆண்டு குடிநீர் வாரியம் செலவழித்தது 6 கோடியே 30 இலட்சம் ரூபாய்தான். ஆகவே அந்த ஆண்டு இறுதியில் மிச்சம் 22 கோடியே 82 இலட்சம் ரூபாய் என்ற அளவிற்கு இருந்தது. பிறகு 1982-83 ஆம் ஆண்டு இந்த வாரியத்தின் ஓப்பனிங் பேலன்ஸ் 22 கோடியே 82 இலட்சம் ரூபாய். அரசு மேலும் 22 கோடியே 26 இலட்சம் ரூபாய் வழங்குகிறது. ஆக மொத்தம் கிட்டத்தட்ட 45 கோடி ரூபாய் அந்த ஆண்டு. இதிலே 1982-83 ஆம் ஆண்டு குடிநீர் வாரியம் செலவழித்தது 6 கோடியே 12 இலட்சம் ரூபாய்தான். ஆகவே அந்த ஆண்டு இறுதியில் மிச்சம் 38 கோடியே 96 இலட்சம் ரூபாய்.



1986 மே 10] [டாக்டர் மு. கருணாநிதி]

பிறகு 1983-84 ஆம் ஆண்டில் 38 கோடியே 96 இலட்சம் ரூபாய் ஓப்பனிங் பேலன்ஸோடு தொடங்குகிற குடிநீர் வாரியத்திற்கு அரசு 25 கோடியே 69 இலட்சம் ரூபாய் தருகிறது. இவை இரண்டையும் சேர்த்தால் மொத்தம் 64 கோடியே 65 இலட்சம் ரூபாய் வருகிறது. இங்கே விசித்திரம் என்னவென்றால், 64 கோடியே 65 இலட்சம் ரூபாயை கையில் வைத்துக்கொண்டு இந்த வாரியம் செலவழித்தது ஒரு கோடியே 85 இலட்சம் ரூபாய்தான். ஆக 62 கோடியே 78 இலட்சம் ரூபாய் 1983-84 ஆம் ஆண்டில் மிச்சப்படுகிறது. 1980-81, 1981-82, 1982-83, 1983-84 ஆகிய இந்த ஆண்டுகளில் மொத்தமாக இந்த வாரியத்திலே 80 கோடி ரூபாய் அதற்காகக் கொடுத்தும்கூட, ஓப்பனிங் பேலன்ஸோடு 4 கோடி ரூபாய் சேர்த்து அரசு கொடுத்த பிறகு, செலவழிக்காமல் மிச்சம் இருப்பது 63 கோடி ரூபாய்.

(பிற்பகல் 1-40)

ஆக இந்த 3 ஆண்டுகளுக்கு 17 கோடி ரூபாய்தான் செலவழிக்கப்படுகிறது. இந்த 80 கோடி ரூபாயில் இவ்வளவுதான் செலவழித்திருக்கிறது என்று சொன்னால், இந்த வாரியம் எந்த அளவுக்கு விரைவாகச் செயல்பட்டிருக்கின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியாது. 1984, 1985 ஆகிய ஆண்டுகளைப் பற்றி ஆய்வு அறிக்கை என்னிடத்திலே இல்லை. காரணம் ஆய்வறிக்கை கொடுக்க முடியாத காரணத்தினாலே மன்றத்திலே வைக்கப்படவும் இல்லை. இது குடிநீரைப் பொறுத்தவரையில். அது மாத்திரமல்ல, யூட்டிலைசேஷன் சர்டிபிகேட். இந்த போர்டின் சார்பாக ஒரு நற்சான்றிதழ் தருவது என்பது வாடிக்கை. பயன்படுத்தப்பட்டது இவ்வளவு ரூபாய் என்பதற்காக நற்சான்றிதழ் தருவது வாடிக்கை. எந்தெந்த ஆண்டுக்கு எவ்வளவு என்று கொடுக்க முடியாது. நேரம் இல்லை என்பதாலே மொத்தமாகவே சொல்ல விரும்புகிறேன். 1982, 1983, 1984, 1985 இந்த நான்கு ஆண்டுகளில் நிலைமை பற்றி எழுதுகின்றார்கள்.

It would be seen that an amount of Rs. 27.57 crores not actually spent was certified as utilised by the Watter Board.

27 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகை செலவழிக்கப்படாமலேயே அது பயன்படுத்தப்பட்டது என்ற தவறான சான்றிதழ் தரப்பட்டிருக்கின்றது என்று சொல்கின்றார்கள். முடிவுரையாக இந்த ஆய்வறிக்கையிலே பக்கம் 67-ல் சொல்லப்பட்டிருக்கின்றது.

Maintenance works were carried out without estimates; accounts of materials were not maintained; expenditure was not recorded in proper registers; there was thus no control over materials and expenditure or maintenance works.

1983 அக்டோபரில் 252 கிராம் புளியும், 1983 மார்ச்சில் 480 கிராம் புளியும் தந்தார்களா என்றால் இல்லை. தந்ததாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது கணக்கு. அதைப்போல எண்ணெய். எண்ணெய் குழந்தைகளுக்கு அதிக மாகத் தரலாமா, அது குழந்தைகளுடைய ஆரோக்கியத்திற்குப் பொருந்துமா என்று ஆராய்ச்சி நடைபெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர்கள்—கலெக்டர்கள்—ஓரிடத்தில் ஒன்றுகூடி பேசி, அதற்குப் பிறகு அரசு தலைமைச் செயலாளர் மட்டத்தில் ஒரு முடிவு எடுக்கப்பட்டது. 7 கிராம் எண்ணெய் தரத் தேவையில்லை, 1 கிராம் என்று அதைக் குறைத்துவிடலாம், 5 கிராம் தந்தால் போதும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அப்படி முடிவு எடுக்கப்பட்டது 1982 ஜூலை மாதம். ஆனால் அந்த முடிவு அரசு ஆணையாக என்றைக்கு உருவாகிறது என்றால் ஒரு வருடம் கழித்து. எடுக்கப்பட்ட முடிவு உடனடியாக நிறைவேற்றப்படாமல், அரசு ஆணையாக உருப் பெறாமல், ஓராண்டுக் காலம் தாமதமாக அரசு ஆணையாகப் பிறப்பிக்கப்பட்டது. இந்தக் கால தாமதத்தின் காரணமாக அரசுக்கு இழப்பு 3 கோடியே 11 இலட்சம் ரூபாய் என்று அறிக்கை குறிப்பிடுகிறது. நான் மேலவையினுடைய துணைத் தலைவரவர்களின் அனுமதியோடு நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு விவரத்தைத் தர விரும்புகிறேன்.

மணப்பாறை நகராட்சி மன்றத் தலைவர் எனக்கு அனுப்பியுள்ள ஓர் அறிக்கை இது. இது ஒருவேளை அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டிருக்கலாம். நகல் என்று குறிப்பிட்டு. எனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. "7—4—1986-ல் மணப்பாறை நகராட்சிப் பள்ளியில் சத்துணவை சோதனை செய்த ரிப்போர்ட் தங்களின் மேலான கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். எஸ்.எம். கணேசன், நகர் மன்றத் தலைவர், மணப்பாறை நகராட்சி" என்று இருக்கிறது. இதிலுள்ள கருத்துக்களை மாத்திரம் நிதி அமைச்சரவர்களுக்குத் தெரிவித்து, இந்தக் கடிதத்தை அவரிடம் கொடுக்க விரும்புகிறேன், ஏனென்றால் நல்லது நடக்க வேண்டுமென்பதற்காக.

7—4—1986 ஆம் தேதி, பகல் 12½ மணி அளவில் நகராட்சி நடுநிலைப் பள்ளி சத்துணவு மைய அமைப்பாளர் திரு. எஸ். சந்திரன் மையத்தில் ஆஜர் இல்லை. இது ஒரு குற்றச்சாட்டு. 267 மாணவ மாணவிகளுக்கு சத்துணவு வழங்கப்பட்டது. உணவு உண்ண வாய்ப்பெற்ற குழந்தைகள் பெரும்பாலோரிடம் தட்டுக்கள் இல்லை.



(பிற்பகல் 1-50)

அவர்கள் தாங்களே கொண்டு வந்த பாத்திரங்களில் உணவைப் பெற்று உண்டார்கள். பிற்பகல் சரியாக 1-12 மணிக்குத்தான் அமைப்பாளர் சந்திரன் அந்த மையத்திற்கு வந்தார். ஆனால் வருகைப் பதிவேட்டைப் பார்வையிட்டதில் 350 மாணவ மாணவியர்களுக்கு சத்துணவிற்காக உணவுப் பொருள்களை அவர் எடுத்திருந்தார், சாப்பிடுவதற்காகத் தரப்பட்டது 267 பேர்களுக்கு. ஆனால் சத்துணவை 350 மாணவ மாணவியர்களுக்காக அவர் எடுத்திருந்தார். இன்று, 7-4-1986 ஆம் தேதி 267 மாணவ மாணவியர்களுக்கு மட்டுமே உணவு வழங்கப்பட்டது. 350 பேர்களுக்கு உணவு எடுக்கப்பட்டு, 267 மாணவ மாணவியர்களுக்கு உணவு வழங்கப்பட்ட பின்னர், அமைப்பாளரால் உணவு சமைக்க எடுத்துக் கொடுத்த கணக்கின்படி, 83 பேர்களுக்கு உணவு மீதம் இருக்க வேண்டும். ஆனால் உணவு எதுவும் மீதம் இல்லையென்று தெரிய வந்தது. அதற்குப் பிறகுதான் மிக முக்கியமானது. 7 ஆம் தேதி தினசரி வரவு செலவுக் கணக்குப் புத்தகம் ஆய்வு செய்யப்பட்டது. 1-4-1986-ல் அலுவலகத்திலிருந்து 1,850 ரூபாயை மதிய உணவு வகைக்காக திரு. சந்திரன் என்கிற அமைப்பாளர் பெற்றுள்ளார். மேற்படி தொகை ரூபாய் 1,850 1-4-1986 அன்று வரவு வைக்கப்படவில்லை. அன்னவரால் பராமரிக்கப்பட்டு வரப்படும் வரவு செலவுக் கணக்குகளின்படி, 7-4-1986 அன்று ரூபாய் 532-50 கையிருப்பு இருக்க வேண்டும். ஆனால் மேற்படியாரிடம் ரொக்கம் ரூபாய் 102-50 மட்டுமே இருப்பு இருந்தது. ரூபாய் 1,430 கைவசம் இல்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதை அவரே எழுதிக் கொடுக்கிறார். "7 ஆம் தேதி 12-30 மணிக்கு நகர மன்றத் தலைவர் அவர்கள் என் மையத்தைப் பார்வையிட்டபோது, நான் மையத்திலே இல்லை. குழந்தைகளின் வருகையை வகுப்பில் சென்று குறிக்கவில்லை."

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** கூடுமானவரை எந்த அமைப்பாளருடைய பெயரையும் குறிப்பிடாமல்தான் பேசலாம். ஏனென்றால் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது. அதிலே அமைப்பாளருடைய பெயர் போடப்பட்டிருக்கிறது. அது உண்மையோ தவறோ நமக்குத் தெரியாது. ஆகவே குறைபாடு அவருடைய பெயருக்கு களங்கம் விளைவிப்பதாக அமைகிறது. இந்த நிலையில் அவர் தன்னைத் தானே எப்படி காப்பாற்றிக் கொள்வது? அதற்குள் அது பத்திரிகையில் வந்துவிடும். அது உண்மையா தவறா என்பது நமக்குத் தெரியாது. ஆகவே தான் கூடுமானவரை பெயரைக் குறிப்பிடாமல் பேசுமாறு சொல்கிறேன். எதிர்க்

கட்சித் தலைவருக்குத் தெரிந்திருக்கும் என்பதால், நான் அதுபற்றி சொல்லத் தேவையில்லை. பெயரைக் குறிப்பிடாமல் அமைப்பாளர் என்று சொல்வதிலே தவறில்லை. ஏனென்றால் ஒருவருடைய பெயருக்குக் களங்கம் கற்பிக்கக் கூடிய வகையிலே ஒரு நிகழ்ச்சியை நாம் அவையிலே பேசக் கூடாது.

**டாக்டர் மு. கருணாநிதி:** மணப்பாறை நகராட்சிப் பள்ளியினுடைய சத்துணவு மையத்தின் அமைப்பாளர் மையத்தில் இல்லை. அவரே இதுபற்றி கடிதம் எழுதிக் கொடுத்திருக்கிறார். "குழந்தைகளின் வருகையை வகுப்புகளுக்குச் சென்று குறிக்காமல் 350 குழந்தைகளுக்கு ரேஷன் கொடுத்துள்ளேன். அலுவலக வரவு ரூபாய் 1,850. கையிருப்பு ரூபாய் 102. வங்கியில் இருப்பது ரூபாய் 10. இன்று முடிய வரவு ரூபாய் 515-30. மீதி இருக்க வேண்டிய ரூபாய் 1,430 என் கையிருப்பில் இல்லை. இப்படிக்கு அமைப்பாளர்.' மேற்படி சொல்லி அதில் அவர் கையெழுத்தும் போட்டுள்ளார். அந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களும், தலைமை ஆசிரியரும் கூட கையெழுத்து போட்டிருக்கிறார்கள். தங்களிடத்தில் காட்டி விட்டுத்தான் இங்கே படித்தேன். அதை நடவடிக்கை எடுப்பதற்காக நம்முடைய நிதியமைச்சரிடத்தில் கொடுக்கிறேன்.

(மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்தில் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள்.)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அனுமதி கொடுத்ததில் ஒன்றும் தவறில்லை. உள்ளே இருப்பது பூராவையும் நான் படிக்கவில்லை. எதிர்க் கட்சித் தலைவருக்கே தெரியும், அவர்கள் பெயரைச் சொல்ல மாட்டார்கள் என்பதால் தான் அனுமதி கொடுத்தேன்.

**டாக்டர் மு. கருணாநிதி:** அடுத்து, மத்திய அரசு National Programme for control of blindness என்கின்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மாநில அரசுக்கு உதவி செய்து வருகிறது. அப்படி செய்யப்பட்ட உதவி 1979 முதல் 1984 வரை பணமாகவும், பொருள்களாகவும் 62 லட்சம் ரூபாய் மாநில அரசுக்குத் தரப்பட்டது. ஆனால் 1979 முதல் 1984 வரை ஏறத்தாழ 4, 5 ஆண்டுக் காலத்தில் தரப்பட்ட 62 லட்சம் ரூபாயில், இந்தத் திட்டத்திற்காக இந்த அரசு செலவழித்தது 7½ லட்சம் ரூபாய்தான் என்பதை இந்த ஆய்வு அறிக்கை எடுத்துக்காட்டுகிறது. ஆக, மத்திய அரசு இந்த 'நேஷனல் புரோகிராம் பார் கன்ட்ரோல் ஆப் பிளைன்ட்னெஸ்' என்ற திட்டத்திற்காக ஒதுக்கிய தொகையில், 20 சதவிகிதத்தைத் தான் மாநில அரசு செலவிட்டிருக்கிறது என்று அரசு ஆய்வு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்



(பிற்பகல் 1-55)

கிறது என்றால், மிகப் பெருமளவுக்கு செயலற்ற ஒரு தன்மை குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே வெளியிடுவதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

இன்னொன்று. லட்சம், 10 ஆயிரம், 20 ஆயிரம் என்ற அளவில் கூட சேதாரம் ஏற்பட்டாலும், சிறு துளி பெரு வெள்ளம் என்பதைப் போல இந்த நிதி ஒதுக்கீடு பற்றிய சட்ட முன்வடிவின் மீது விவாதம் நடைபெறும்போது, அதை எடுத்துக்காட்டி, அந்தக் குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று வாதாடுவதில் அல்லது சுட்டிக்காட்டுவதில் தவறில்லை என்று நான் கருதுகிறேன்.

1981 ஆம் ஆண்டு மதுரையில் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் ஆராய்ச்சிக் கட்டுரை என்ற பெயரால் ஆயிரம் கட்டுரைப் புத்தகங்கள் தனியார் அச்சகத்தில் ரூ. 3.32 லட்சம் செலவில் அச்சடிக்கப்பட்டன. ஆனால் அந்தத் தனியார் அச்சகம், ஆயிரம் பிரதிகள் அச்சிட்டுத் தருவதாகச் சொல்லி, 3.32 லட்ச ரூபாய் பெற்றுக்கொண்டு, அச்சிட்டுத் தந்தது 850 கட்டுரைப் பிரதிகள்தான். 150 வரவில்லை. அப்படி வராத அந்தக் கட்டுரைத் தாள்களின் மொத்த மதிப்பு 50 ஆயிரம் ரூபாய். அது குறித்து, 31-1-1984 அன்று ஆய்வுப்படி, கூறுகிற குற்றச்சாட்டு "வந்த 850 பிரதிகளிலும் 722 பிரதிகள் விற்பனையாகவில்லை. அப்படி விற்பனையாகாத பிரதிகளின் மதிப்பு 2.89 லட்ச ரூபாய்' என்று அதிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

மாநாட்டுக்கு வந்திருக்கும் பிரதிநிதிகளுக்கு பரிசு வழங்க ஆயிரம் பரிசுப் புத்தகங்கள் வழங்கினார்கள். ஆனால் அதில் உள்ள குறிப்பின்படி, "அப்படி வழங்கப்பட்ட புத்தகங்களைத் திருப்பிக் கொடுங்கள்" என்று திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். வாங்கப்பட்ட புத்தகங்கள் தமிழா, ஆங்கிலமா என்று பார்க்காமல் வாங்கிவிட்டார்கள். வாங்கிய பிறகு பார்த்தால், அது ஆங்கிலப் புத்தகங்கள். அதன் காரணத்தால், அவைகளையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். அதிலே பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று ஆய்வறிக்கை கூறுகிறது.

அந்த மாநாட்டில் காட்டுவதற்காக குமரிக்கண்டம் என்ற திரைப்படம் எடுக்கப்பட்டது. எத்தனை அடி என்று எனக்குத் தெரியாது. அதன் செலவு 9.25 லட்சம் ரூபாய். 11 பிரதிகள் எடுக்கப்பட்டன என்று கூறப்பட்டது. அதற்கு 1.29 லட்சம் ரூபாய் செலவாகியிருக்கிறது. ஆனால் ஒரே ஒரு பிரதி தான் போட்டுக் காட்டப்பட்டது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டு, இது 'லார்ஜ்லி அன் ஃபிரூட்ஃபுல்' என்று அந்த ஆய்வு அறிக்கை எடுத்துக் காட்டு

கிறது. இப்படி சேதாரம் இல்லாமல் அரசின் சார்பில் நல்ல நோக்கங்களுக்காக என்று சொல்லப்பட்டு செலவிடப்படுகிற தொகை, முறையாகச் செலவிடப்பட வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் எடுத்துக் காட்டுகிறேன்.

மின்வாரியத்தைப் பொறுத்தவரையில், ஆடிட்டர் ஜெனரல் ஆஃப் இந்தியா அவர்கள், 1983-84 ஆம் ஆண்டு அளித்துள்ள அறிக்கையில், சொல்லியிருக்கிறார்கள்; அதில் ஒன்றை மட்டும் சொல்கிறேன், பல இருக்கின்றன. ஒன்றை மட்டும் சொல்கிறேன். "தெர்மல் பிளாண்ட்-டின் சீஃப் இன்ஜினியர், தரமில்லாத நிலக்கரியை வாங்கிய காரணத்தால், 1982-83-ல் 19.7 கோடி ரூபாயும், 1983-84-ல் இதே போன்று தரமில்லாத நிலக்கரி வாங்கியதால் 23.9 கோடி ரூபாயும் மின் வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டது என்று, ஆடிட்டர் ஜெனரல் தனது அறிக்கையில் தெரிவித்து, தரமில்லாத நிலக்கரியை பயன்படுத்தியதால் பாய்லர் கூட பழுதடைந்து போகின்றது, அவ்வாறு பழுதடைவதால் ஆகின்ற செலவுகள் எவ்வளவு என்ற கணக்கை அந்தப் பொறியாளர் தெரிவிக்கவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி கோடிக் கணக்கில், லட்சக்கணக்கில், ஆயிரக்கணக்கில் நஷ்டம் ஏற்படுகிற வகையில், நாம் இந்தச் சட்ட முன்வடிவின் மூலமாக அரசின் சார்பாக ஒதுக்கப்படுகிற இந்தத் தொகை வீணாகச் செலவழிக்கப்பட்டு, நல்லமுறையில் பயன்படுத்தப்பட முடியாமல், யார் யார் பைகளுக்கோ போகிற நிலைமை இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இவைகளை இங்கே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதி ஒதுக்கீடு சட்ட முன்வடிவில் ஒன்றை நான் கவனப்படுத்த விரும்புகிறேன். கிருஷ்ணா தண்ணீர் நம்முடைய சென்னை நகருக்கு மூன்றாண்டுக் காலத்தில் வரும் என்று 1983 ஆம் ஆண்டு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் ஒரு அறிக்கையை வைத்தார்கள். 26-4-1983 அன்று அறிக்கையைப் படித்தார்கள்; அந்த அறிக்கை படித்தபோதே, கிருஷ்ணா தண்ணீர் கொண்டு வருவது என்பதைவிட, முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்னென்ன காரியங்களைச் செய்யவில்லை என்ற பட்டியல்தான் படித்துக் காட்டப்பட்டது. அந்த அறிக்கையின்மீது விவாதம் நடத்த வேண்டுமென்று கேட்டபோது, அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த விவாதத்திற்கு ஏற்பாடு செய்யப்படவே இல்லை. 18-4-1983 அன்று தமிழக அரசுக்கும் ஆந்திர அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி அறிக்கையில் இடம் பெறவில்லை. மேலும் முன்பிருந்த கழக அரசு 1973 ஆம் ஆண்டு



இருந்தபோது எடுத்த நடவடிக்கையை 1969-ல் எடுத்திருந்தால், சென்னைக்குத் தண்ணீர் வந்திருக்கும் என்று அப்போது சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் மூன்றாண்டு காலத்திற்குள்ளே கிருஷ்ணா தண்ணீர் சென்னைக்குக் கிடைக்கும் என்று சொன்ன உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை. நான் அரசுக்கு ஏற்பட்டுள்ள இடையூறுகளை, இன்னல்களை உணருகின்றேன். அதைப்போலவே வீராணம் திட்டம் நிறைவேறுவதற்கு இருந்த இடையூறுகளை, இன்னல்களை உணர்ந்து முன்பு பேசியிருந்தால், நலமாக இருந்திருக்கும். அதை உணராமல் ஏதோ வீராணம் திட்டம் பாழாய்ப்போன திட்டம் என்றெல்லாம் கூறிவிட்டு, "நாங்கள் கிருஷ்ணா தண்ணீர் கொண்டு வருகிறோம் என்று கூறிவிட்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும் அதன் முதல்கட்ட நிலையிலேயே இருக்கிறதென்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவிக்கிறபோது, நாட்டு மக்கள்—அதிலும் குறிப்பாக சென்னை மக்கள்—வேதனைப் படாமல் இருக்க முடியாது.

(பிற்பகல் 2-00)

அப்போதே இதற்காகக்கூடிய செலவாக, ஆந்திரா எல்லைக்கு 334 கிலோ மீட்டர் வாய்க்காலுக்கு 500 கோடி ரூபாயும், தமிழகத்திலே 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு 236 கோடி ரூபாயும் செலவாகும் என்று குறிப்பிடப்பட்டது. தமிழக அரசு தமிழகத்திலே செலவழிக்கக்கூடிய 236 கோடி ரூபாய் அன்னியில் ஆந்திராவிலும் செலவழிக்கக்கூடிய 500 கோடி ரூபாயில் 200 கோடி ரூபாய் தர வேண்டுமென்றும் அப்போது தெரிவிக்கப்பட்டது. அப்போதே நான் கேட்டேன். 15 டி.எம்.சி. தண்ணீரைப் பெறக்கூடிய தமிழகம் மொத்தத்திலே 436 கோடி ரூபாயும், வழியிலே சுமார் 100 டி.எம்.சி. தண்ணீரைப் பாசனத்திற்காகப் பெறப்போகும் ஆந்திரா வெறும் 300 கோடி ரூபாயும் செலவழிப்பது எந்த வகையில் நியாயம் என்று கேட்டேன். அதற்கு அரசுத் தரப்பில் பதில் கூறப்படவில்லை.

ஒப்பந்தம் நிறைவேறிய பிறகு, சில நாட்களில் 30—4—1983 இல் ஹைதராபாத்தில் மைய அரசின் மாண்புமிகு பாசன அமைச்சர் திரு. ராம் நிவாஸ் மிர்தா அவர்கள் தெலுங்கு கங்கை திட்டத்திற்காக திட்ட அறிக்கையை மத்திய அரசு எதிர்நோக்கியுள்ளது, இந்தத் திட்டத்தைப் பற்றிய தொழில் நுட்ப, பொருளாதார சாத்தியக் கூறுகளைப் பரிசீலிக்க மத்திய அரசு, தமிழக அரசிடமிருந்தும் ஆந்திர அரசிடமிருந்தும் திட்டம் பற்றிய அறிக்கையை எதிர்நோக்கியுள்ளது என்று குறிப்பிட்டார், அறிக்கையை மத்திய அரசு மிகத் தீவிரமாகப் பரிசீலித்தபின், திட்டக்

கமிஷனுக்கு அதன் ஒப்புதல் பெறவும், தேவையான நிதி உதவி வழங்கவும் அனுப்பும் என்றும் கூறினார். ஆனால் இதுவரையில் எதுவும் நடைபெற வில்லை. அதுமாத்திரம் அல்ல, இன்றைக்கு வேறு மாநில அமைச்சர்கள் இதிலே சில எதிர்ப்புகளைக் கிளப்புகிறார்கள். மத்திய அரசு கூட அதற்குத் தலையாட்டுவது போன்று இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது.

ஆனால் 25—5—1983 அன்று பல இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற மிகப் பிரம்மாண்டமான விழாவில் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களும், மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களும் ஆந்திரா முதல் அமைச்சர் அவர்களும், கர்நாடக முதல் அமைச்சர் அவர்களும், மராட்டிய முதல் அமைச்சர் அவர்களும், தமிழக முதல் அமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு, அன்றைக்கு ஆந்திரா முதல்வரிடத்திலே 30 கோடி ரூபாய்க்கான காசோலையும் தமிழக முதலமைச்சரால் தரப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் தரப்பட்டிருக்கின்ற கணக்கை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றார். இவ்வளவுக்குப் பிறகும் அந்தத் திட்டம் ஒரு கேள்விக் குறியாக இன்றைக்கு இருப்பதற்கு என்ன காரணம்?

ஆந்திரா முதலமைச்சர் சமீபத்தில் தமிழகத்திற்கு வந்தபோது கூட, மதுரையில் நிருபர்களைச் சந்தித்தபோது, தெலுங்கு கங்கை திட்டம் நிச்சயமாக நிறைவேறியே தீருமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள், சென்னைக்குத் தண்ணீர் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிக் குறிப்பிட்டிருப்பது எந்த அளவு சரியானது? அதற்காகத் தமிழக அரசு என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது? இப்போது மூன்று மாநில அரசுகள் இதற்கு ஒத்துவராமல் இருப்பதற்குத் தமிழக அரசு தெரிவிக்கின்ற கண்டனம் என்ன? ஏன் இவற்றைப்பற்றி உரத்த குரலில் உரிமையோடு தமிழக அரசு பேசக்கூடாது? மத்திய அரசிடத்திலே ஏன் வாதிடக் கூடாது? இவைகளையெல்லாம் இந்த நேரத்திலே இந்த மன்றத்தின் சார்பாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு இந்தச் சட்ட முன்வடிவின்மீது என்னுடைய கருத்துக்களை நிறைவு செய்கின்றேன்.

வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே; 1986-87-க்கான வரவு செலவுத் திட்ட அடிப்படையில் 3419 கோடியே 11 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய்க்கு மேற்





படாத தொகையை நிதி ஒதுக்கீடாக அளிக்க வேண்டுமென்று சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்கின்ற வகையில் இந்த மேலவையில் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றது. காலம் போதுமான அளவுக்கு அமையாததன் காரணமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் சார்பாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களே சிலபல கருத்துக்களை இங்கே வழங்கியிருக்கின்றார். இதிலே அதிகமான அளவுக்குப் பதிலுரை சொல்ல வேண்டிய அவசியம் இல்லாத அளவுக்கு அவர்கள் உரை அமைந்திருக்கிறது. ஏனென்றால் இங்கே பல கருத்துக்களையும் அவர்கள் இங்கே எடுத்து தெரிவித்திருக்கின்றார்கள்.

குதிரைப் பந்தய ஒழிப்பைப் பொறுத்தவரையிலும், குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டுமென்கிற எண்ணத்தைத்தான் இந்த அரசு கொண்டிருந்தது; கொண்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கக்கூடிய வழக்குகளை நாம் எவ்வளவு விரைவுபடுத்த வேண்டுமென்று எண்ணினாலும்கூட, நம்முடைய எண்ணத்தினுடைய அடிப்படையிலே விரைவுபடுத்துகின்ற சூழ்நிலை ஏற்படவில்லை என்பதைப் பல வகையிலே

(பிற்பகல் 2-05)

நாம் காணலாம். மத்திய அரசில் இருப்பவர்கள்கூட விரைவுபடுத்த வேண்டு மென்று அதைப்போன்று பல வகைகளிலே நாம் எண்ணினாலும்கூட, எண்ணு கின்ற அளவுக்கு விரைவுபடுத்த முடியவில்லை. ஆகவே குதிரைப் பந்தயம் இருக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்குமேயானால், உள்ளபடியே இந்தச் சட்டத்தை மறுபடியும் விடுவித்துவிட்டு அமென்ட்மென்ட் கொண்டு வந்திருக்க வேண்டும். குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டிருந்த வகையில், திராவிட முன் னேற்றக் கழகமானாலும் சரி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, அந்தக் கருத்தை ஒப்ப முடிந்த முடிவில்தான் நாங்கள் இருக்கிறோம் என்பதையும், 1948-ல் அந்தக் கருத்தை அவர்கள் முனைப்பு உள்ளத்தோடு கொண்டிருந்தாலும்கூட, அதைச் சட்ட வடிவிலே கொண்டு வந்து, அதை நிறைவேற்றி, அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முறையில் 1974-ல் கொண்டு வரப்பட்டது என்று மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துத் தெரி வித்ததற்கிணங்க, அது உயர்நீதிமன்றத்திற்குச் சென்று தீர்ப்புப் பெற்று, பின் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றதற்குப் பிறகு தடை விதிக்கப்பட்டது. எப்படியோ நல்லதொரு சூழ்நிலையின் அடிப்படையில் அது ஒழிக்கப்படுகின்ற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 10

சூழ்நிலை ஏற்பட்டிருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது என்பது தான். ஆனால் செய்தித் தாள்களில் வந்திருக்கின்ற மற்றொரு செய்தி, அந்தக் குதிரைகளுக்குச் சொந்தக்காரர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களின் ஒரு பகுதியினர் தங்களைக் கேட்காமலே அதைத் திரும்பப் பெற்றுவிட்டார் கள் ஒரு சாரார், ஆகவே தாங்கள் அதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்று அவர்கள் ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அதனுடைய விளைவு என்னவாகுமென்று தெரியவில்லை. ஆனால் தமிழக அரசைப் பொறுத்தவரையிலும், குதிரைப் பந்தய ஒழிப்பு என்ற கருத்தை வலியுறுத்துகின்ற அளவுக்குத்தான் தமிழக அரசு முனைப்பு உள்ளத்தோடு பாடுபடும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

இந்தியாவினுடைய தணிக்கை அதிகாரி அவர்கள் (ஆடிட்டர்-ஜெனரல் ஆப் இந்தியா) மாநில அரசின் வரவு செலவுக் கணக்கில் ஏற்பட்டிருக்கிற குறை பாடுகள், குற்றங்கள், மற்றவற்றை எல்லாம் தன்னுடைய அறிக்கையிலே குறிப் பிட்டிருப்பதை மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டினார்கள். அப்படிச் சுட்டிக்காட்டப்பட வேண்டுமென்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். ஆகவே பல்வேறு துறையினருக்கும் அது எச்சரிக்கையாக அமைய வேண்டும்; அமையும் என்கின்ற நம்பிக்கை எனக்கும் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடைபெறக்கூடாது என்பதுதான் அரசினுடைய நோக்கம். குறிப்பாக நிதி அமைச்சர் என்ற முறை யில் என்னுடைய நோக்கமும் கூட. ஆடிட்டர் ஜெனரலே அதைக் குறிப் பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இதற்கு சமாதானம் சொல்லித் தீரவேண்டும். ஆடிட்டர் ஜெனரல் இப்படிக் குறிப்பிடுவது இந்த அரசைப் பொறுத்து மட்டு மல்ல. வேண்டுமென்றால் ஆரம்ப காலத்திலே இருந்தும் நான் எடுத்துச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். அது அவ்வப்போது வருவதுமுண்டு. எல்லா அரசியலிலும் உண்டு, எல்லாக் காலத்திலும் உண்டு. தணிக்கை அதிகாரிகள் குற்றங்கள் கண்டுபிடிப்பதும், ஏன் இதற்குச் செலவழிக்கவில்லை என்று சொல்வதும், ஏன் இதற்குக் கூடுதலாகச் செலவழிக்கப்பட்டது என்றும், ஏன் அது முறை தவறிச் செலவழிக்கப்பட்டது என்றும் இப்படிப்பட்ட குறிப்பு களை ஒரு 40 அல்லது 50 ஆண்டுக் காலத்திற்குக் கூட நாம் புரட்டிப் பார்க்க லாம். அந்த இடங்களுக்கெல்லாம் நான் போகவில்லை. ஆகவே அதற் கெல்லாம் துறையினர் பதில் சொல்லியே தீரவேண்டும். பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கு முன்னால் எல்லாக் கட்சியைச் சேர்ந்திருக்கின்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவின் முன்னாலும் சமாதானம் சொல்லியே தீரவேண்டும். அதற் குப் பிறகு அவ்வளவு பேரும் சேர்ந்து ஒப்புக்கொள்கின்ற முடிவை அந்தந்தத் துறையினர் ஏற்கவும் வேண்டும். இப்படிப்பட்ட குறைபாடுகளுக்கும், குற்றங்



1986 மே 10] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

களுக்கும் காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை இன்னின்ன வகையிலே எடுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்வதற்குக்கூட பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்கு முழு உரிமை இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட குற்றங்கள் எல்லாம் நடைபெறலாமென்று நான் வாதிட வரவில்லை இப்படிப்பட்ட குற்றங்கள் இருக்கலாமென்று நான் சொல்ல வரவில்லை.

எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குடிநீர் பற்றியெல்லாம் எடுத்துச் சொன் னார்கள். அதனுடைய முழு விபரம் பற்றி இப்போது சொல்லும் சூழ்நிலை இல்லை. ஏன் அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது என்பதை வேறு ஒரு வாய்ப்பிலே வேண்டுமானால், அத்தகைய நிலைமைகளை விளக்க முயன்றால், நான் முயலுகிறேன். இல்லாவிட்டால் பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியின் முன்னால்கூட அந்தத் துறையினர் விளக்குவார்கள் என்பதையும் குறிப்பிட்டுக் கூறிக்கொள்கிறேன்.

சத்துணவுத் திட்டம் பற்றியும் அவர்கள் சொன்னார்கள். நோக்கம், நல்ல தொரு நோக்கம்தான். 163 கோடி ரூபாய் என் கையை விட்டு அல்லது அரசை விட்டுப் போகிறது என்பது உண்மைதான். ஆக போனதற்குப் பிறகு எப்படியெல்லாம் போகிறது என்று அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். சுட்டிக் காட்டிய நிலைமைகள் ஒரு எச்சரிக்கையாக அமையவும், இப்படிப்பட்ட கோளாறுகள் 3 மாவட்டங்களில் மட்டுமல்ல, இது எடுத்துக்காட்டாக இருக் கின்ற காரணத்தால், பல்வேறு மாவட்டங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நிலவுகின்றன என்பதை அரசுத் தரப்பிலே இருப்பவர்களும், துறையைச் சேர்ந் தவர்களும், கண்டுபிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். இதற்கான கண்காணிப்பு முறையையும். இதனைச் செம்மைப் படுத்துகின்ற முறையையும், இதனைச் சீராக்குகின்ற முறையையும் தீர்மானிக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டமாதிரி கோடிக் கணக்கான ரூபாய் இதிலே வீணாகும் அளவுக்கு, நோக்கமும் நிறை வேறாத அளவுக்கு, யாருக்குப் போய்ச் சேர வேண்டுமென்று கருதுகிறோமோ அவர்களுக்குப் போய்ச் சேராமல், இடையிலே இருப்பவர்களுக்குச் சேருகின்ற அளவுக்கு இருக்கின்ற நிலைமைகள், அந்த சந்து பொந்துகள் எடுக்கப்பட்டு, அது சீராக நடைபெறுவதற்கான வழிமுறைகளை எல்லாம் நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். அதற்கான முறைகளை அரசு தீர்மானிக்கும்.

(முற்பகல் 2-10)

தணிக்கை அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டபடி, மணப்பாறை நக

ராட்சி மன்றத்தின் தலைவர் அவர்கள் அங்கே இருக்கிற சத்துணவுக் கூடத்தை சென்று பார்வையிட்டபோது இருந்த சூழ்நிலையைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கேகூட அப்படிப்பட்ட ஒரு எண்ணம் உண்டு. அதை நான் அவையில் முதலிலேயே சொல்லியிருக்கிறேன். இப்போதிருக்கிற சட்டத்தில் அதற்கான முறையில் இடம் இல்லை என்றாலும்கூட, அதற்கு நாம் வழிவகை செய்வது நல்லது. தமிழகத்தில் ஏறத்தாழ 12,610 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. 382 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. 96க்கும் மேற்பட்ட நகராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் அங்கம் வகிப்பவர்கள் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்தவர்கள். அப்படி அந்தந்தப் பகுதியைச் சார்ந்தவர்களே உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அவர்களுக்கு அந்தப் பகுதியில் நடக்கும் நிலைமைகள் நன்கு தெரிந்திருக்க வாய்ப்புண்டு. அதோடு அவர்களுக்கு மற்றவர்களைக் காட்டிலும் மிகுந்த அக்கறை உண்டு. அவர்கள் எந்தக் கட்சியினைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. அவர்களெல்லாம் ஆங்காங்கே காங்கே இருக்கிற சமையற்கூடங்களில் இருக்கிற நிலைமைகளை நேரில் சென்று கண்காணிக்க இயலும். அந்தப் பணியை மற்றவர்களைவிட அவர்கள் நன்றாகச் செய்ய முடியும். தமிழகத்தில் ஏறத்தாழ 60,000 சமையற் கூடங்கள் இருக்கின்றன. அரசின் நிதியிலிருந்து ரூ. 162 கோடிக்கு மேலாக நாம் இந்தத் திட்டத்திற்காகச் செலவு செய்து கொண்டிருக்கிறோம். எனவே இந்த நிலைமையில் அவர்களேகூட இதையெல்லாம் கண்காணிக்கிற அளவுக்கு ஒரு நிலைமையை உருவாக்கினால் நன்றாக இருக்கும். ஒரு நாளைக்கு இவ்வளவு பேர் வந்தார்கள், இவ்வள்வு கணக்கு எழுதப்பட்டிருக்கிறது என்ற குறைகளையும் குற்றங்களையும் எடுத்துச் சொல்லுகிற அளவுக்கு மட்டுமாவது அவர்களுக்குக் கண்காணிக்கிற அதிகாரத்தைக் கொடுக்கலாம். இப்போதிருக்கிற சட்டம் அத்தகைய வகையில் அதிகாரம் வழங்குவதற்கான முறையில் இடமளிக்கவில்லை. எனவே இப்போது இருக்கிற சட்டத்தை மாற்றுகிற அளவுக்கு சூழ்நிலை ஏற்பட வேண்டும் என்று கூட நான் நினைக்கிறேன். ஏற்கெனவே ஒருமுறை நான் பதில் சொல்லும்போதும், இந்தக் கருத்தைக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தக் கருத்து எனக்கு இன்னமும் உண்டு. நாம் சிலபல அதிகாரிகளைத்தான் நியமிக்கிறோம். அவர்கள் செல்லுகிறார்கள், பார்க்கிறார்கள். அவர்களெல்லாம் அக்கறையோடு அந்தப் பணியைச் செய்கிறார்களா என்று சொல்ல முடியாது. அவர்களைக் காட்டிலும் அந்தந்தப் பகுதியில் உள்ள இத்தகைய பிரதிநிதிகளைப் போட்டு, அவர்களுக்குக் கண்காணிக்கிற அதிகாரத்தை வழங்கினால், இந்தப் பணி இன்னும் செம்மையாக நடைபெறுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளும்



என்று மட்டும் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். அதாவது கணக்குப் பார்க்கிற வேலையை மற்றவர்கள் பார்த்துக் கொண்டாலும்கூட, குற்றங் குறைகளைச் சுட்டிக்காட்டி கண்காணிக்கிற அளவுக்கு அவர்களுக்குப் பொறுப்பை அளிக்கலாம். இவ்வளவு பேர்கள் வந்தார்கள், இவ்வளவு பேர் என்று எழுதப்பட்டிருக்கிறது, இவ்வளவு கிராம் காய்கறி இருக்க வேண்டும், இவ்வளவுதான் இருக்கிறது. எண்ணெய் இவ்வளவு இருக்க வேண்டும், ஆனால் இவ்வ்ளவு தான் இருக்கிறது என்று சொல்லுகிற அளவுக்கு அவர்கள் கண்காணிக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், 1,50,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட 12,210 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அவர்களையெல்லாம் 'டர்ன்' அடிப்படையில் கூட போட்டு இந்த சமையற்கூடங்களைப் போய்ப் பார்த்து கண்காணிக்கச் சொல்லலாம். ஒருவரையே போடுவதைவிட எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கும் வகையில்கூட இதைச் செய்யலாம். காரணம் 60,000 அளவுக்குச் சமையற்கூடங்கள்—பள்ளிக்கூடங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால்—இருக்கின்றன. அவைகளையெல்லாம் அவர்கள் கண்காணிக்கிற நிலைமை ஏற்பட்டால், நல்லதாக இருக்கும். எனவே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டியதன் அடிப்படையில், இப்போது இருக்கிற நிலைமைகளை அறியவும், இனி மற்றவர்களுக்கும் இது ஒரு எச்சரிக்கையாக அமையவும் உதவியாக இருக்கும் என்பதற்காக அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் . . . . .

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்கள் போன்றவர்கள் சமையற்கூடங்களைச் சென்று பார்வையிடுவதற்கு வழி செய்து 15—1—1986 அன்று உத்தரவிடப்பட்டிருப்பதாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் சொல்லும்போது, மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏதோ இனிமேல்தான் அத்தகைய ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்பதைப்போல் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே இதில் யாருடைய கருத்து சரியானது, உண்மையானது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அன்றைக்கு ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்போதிருக்கிற சட்டத்தில் அவர்கள் சேர்க்கப்படவில்லை என்று சொன்னார்கள் . . . . .

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இரண்டு நாட்களுக்கு முன்பாக அவையில் எழுப்பப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றிற்குப் பதில் அளிக்கும்போது, 15—4—1986 முதல் அத்தகைய ஆணை ஒன்று பிறப்பிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி உத்தரவு போடப் பட்டிருந்தால் நல்லது. நான் ஏற்கெனவே அவரிடம் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே இந்த அவையிலும் நான் சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்தின் அடிப்படையில் அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்குமானால், நல்லது. 2 நாட்களுக்கு முன்னால் அப்படி அறிவிக்கப்பட்டிருந்தால் நல்லது; வரவேற்கத் தக்கது. போடாமல் இருந்தால் அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்று குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உலகத் தமிழ் மாநாட்டில் உருவாக்கப்பட்ட நூலைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அந்த விவரக் குறிப்பு என்னிடம் இல்லை. அது பற்றி ஆராய்ந்து அதற்குக் காரணமானவர்கள், யார் என்று பார்த்து அத்தகைய குறைபாடுகள் ஏற்படுவதற்குக் காரணம் யார் என்று அறிந்து அதன் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 2-15)

சென்னைக்கு கிருஷ்ணா நதி நீர் கொண்டு வருகிற முயற்சி பற்றி எடுத்துச் சொன்னார்கள். மூன்றாண்டு காலத்திற்குள் கொண்டு வர வேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருந்தாலும், பல்வேறு இடர்ப்பாடுகள் இப்போது வந்திருக்கின்றன. அதையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அப்போது போட்டிருக்கிற திட்டத்தின் அடிப்படையில் 720 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அதிலே 520 கோடி ரூபாயை ஆந்திர அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், நம்முடைய எல்லையிலேயிருந்து கொண்டுவர நாம் 200 கோடி ரூபாயை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், இதற்கும் மேலாக 250 கோடி ரூபாய் இங்கே கொண்டு வருவதற்காக ஆகும் என்ற அளவிற்குக் கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி இன்றைக்குள்ள நிலைமை, எந்த அளவிற்கு ஆகியிருக்கிறது, எந்த அளவிற்கு ஆகும் என்ற முழு விவரங்களையெல்லாம் ஆந்திர முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் பேசினால்தான் தெளிவாக முடிவு ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு, சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் விளக்கம் கூறப்பட்



டிருக்கிறது. இதிலே பணம் கொடுப்பது பற்றி, பணம் வாங்குவது பற்றி சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டும் என்ற நிலை இருப்பதால், எதிர்க் கட்சித் தலைவர் கூறிய மாதிரி, விரிவான அறிக்கை இந்தத் துறையைச் சேர்ந்தவர்களால் இந்த அவையிலோ அல்லது அந்த அவையிலோ எடுத்து வைக்க அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக ஒதுக்கப்படுகிற தொகைகள் அந்தந்த இனத்திற்காக அந்தந்த ஆண்டுகளிலேயே செலவிடப்பட வேண்டும் என்பதும், அதன் மூலமாக நிறைவேற்றப்படுகிற திட்டங்கள் முறையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதும் தான் அரசின் முக்கிய நோக்கம். பல்வேறு கைகளுக்கு மாறுகின்றன என்பதால் கண்காணிப்புக்காக பல்வேறு இடங்களில் அதற்கான செக்-வால்வு வைத்திருந்தாலும், இதையும் மீறி குறைபாடுகள் நிகழ்கின்றன என்பதை நாம் நன்கு அறிவோம். அத்தகைய குறைபாடுகள், குற்றங்கள் நிகழக்கூடாது என்பது அரசின் நோக்கம். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சுட்டிக்காட்டினார்கள். இவைகளை மனதிலே வைத்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை எடுத்துச் சொல்லி இந்த நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவைத் திருப்பியனுப்ப ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பரிந்துரை செய்வதற்காக, ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 10

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவை முன் உள்ள பிரச்சினை:

"சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு, 1986 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986) திருப்பியனுப்பப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் 12—5—1986 திங்கட் கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்தி வைக்கப்பட்டது.

(பிற்பகல் 2-18)

## 9. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

212. தமிழ்நாடு 1962 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 6—3—1986 ஆம் நாளிட்ட 339 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

213. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 5—3—1986 ஆம் நாளிட்ட 217 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

214. ராஜபாளையத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சென்னை சிப் போர்டு நிறுவனத்தாரால் தயாரிக்கப்படும் சிப் போர்டுகளுக்கு செலுத்தக்கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின்



1986 மே 10]

1—11—1985 ஆம் நாளிட்ட 1006 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

215. தஞ்சாவூர், சாக்கோட்டையைச் சேர்ந்த 'சேக்ரட் ஹார்ட் மறுவாழ்வு மையத்தினரால்' தயாரிக்கப்படும் பொருட்களுக்குச் செலுத்தக்கூடிய வரியினின்று விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 7—11—1985 ஆம் நாளிட்ட 1033 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

216. தமிழ்நாடு அரசு பற்றிய இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984-85 ஆம் ஆண்டிற்கான (வருவாய் வரவினங்கள்) அறிக்கை. [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

217. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1983 ஆம் தேதி வரையிலான ஐந்தொகை கணக்குகள். (ஆங்கிலம்). [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (a) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

218. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1984 ஆம் தேதி வரையிலான ஐந்தொகைக் கணக்குகள். (ஆங்கிலம்). [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (a) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

219. 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் எஸ்டேட்ஸ் (ஒழித்தல் மற்றும் ரயத்வாரி முறையில் மாற்றுதல்) சட்டத்தில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 2—1—1986 ஆம் நாளிட்ட 1 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜன்மம் எஸ்டேட்ஸ் (ஒழித்தல் மற்றும் ரயத்வாரி முறையில் மாற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1969) 60 (5) (a) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

220. மேல்மருவத்தூரில் உள்ள ஆதிபராசக்தி சமய மருத்துவம் கல்வி மற்றும் பண்பாட்டு அறக்கட்டளைக்கு (மகளிர் பிரிவு) சொந்தமான சில மோட்டார் வண்டிகளுக்கு செலுத்தக்கூடிய வரியில் சலுகை அளிப்பது குறித்து உள்துறையின் 6—1—1986 ஆம் நாளிட்ட 26 ஆம் எண் அரசாணை

யில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

221. சென்னை, கால்நடை நல வாரியத்திற்குச் சொந்தமான ஜி.டி.எப். 2933 எண்ணுள்ள ஆம்புலன்ஸ் வண்டிக்கு செலுத்தக்கூடிய வரியில் சலுகை அளிப்பது குறித்து உள்துறையின் 8—1—1986 ஆம் நாளிட்ட 41 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

222. சென்னை நில அளவை மற்றும் நிலத்தீர்வை இயக்குநருக்கு அதிகார ஒப்படைப்பு தருவது குறித்து வணிக வரிகள்-அறநிலையத் துறையின் 27—9—1985 ஆம் நாளிட்ட 864 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை மற்றும் எல்லைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

223. பூதான வாரியத்தின் தனி அலுவலரை எஸ்டேட் அதிகாரியாக நியமனம் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 3—2—1986 ஆம் நாளிட்ட 108 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு பொது வளாகச் (அனுமதியின்றி குடியிருப்போரை வெளியேற்றல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1976) 20 (4) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

224. தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் 20—9—1985 ஆம் நாளிட்ட 2377 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு ஊர்க்காவல் படை சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1963) 15 (4) பிரிவின் அவைமுன் வைக்கப்படுகிறது.]

225. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் 9—12—1983 முதல் 31—3—1985 வரையிலான முதலாம் ஆண்டு அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்). [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 (A) பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

*19. கோரிக்கை எண் 39—சாலைகளும் பாலங்களும் மற்றும் கோரிக்கை எண் 54—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் மீதான தமிழ்நாட்டில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய 1985-86 ஆம் ஆண்டிற்கான ஆய்வும், 1986-87 ஆம் ஆண்டிற்கான திட்டங்களும். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).



*199. 'ஊரக வளர்ச்சியில் பட்டுத் தொழில்' என்கிற புத்தகம். (தமிழ்).

*200. 'சிறு தொழில் வளர்ச்சியில் சிட்கோவின் பங்கு' என்கிற புத்தகம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

@201. தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

202. வனத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

203. சின்கோனாத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

204. 1986-87 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத்துறை பற்றிய சாதனைத் திட்டம். (ஆங்கிலம்).

205. 1986-87 ஆம் ஆண்டிற்கான சின்கோனாத்துறை பற்றிய வணிக சம்பந்தமான வரவு-செலவுத் திட்டம். (ஆங்கிலம்).

206. சுற்றுலாத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

207. அகதிகள் தாயகம் திரும்பியோர் குடிபெயர்ந்தோர் துயர்தணிப்பும் மறுவாழ்வும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

208. 1986-87 ஆம் ஆண்டிற்கான மறுவாழ்வுத் துறை பற்றிய சாதனைத் திட்டம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

209. வேலைவாய்ப்பு-பயிற்சி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

210. மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள் நிர்வாகம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

211. நிறுவன நிதித்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

212. ஓய்வூதியம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

213. சிறுசேமிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986-87. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

214. மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

215. 12 முதல் 14 வரையிலான உடுக்குறியிடப்படாத வினாக்களுக்கான பதில்கள்.

216. மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவுத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

217. தமிழ்நாடு காவல் துறை பற்றிய ஆய்வுரை, 1985-86. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

† 218. சட்டமன்றப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 36/1986).

* 3—5—1986 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

@ 7—5—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது.

† 9—5—1986 அன்று மேலவை உறுப்பினர்கள் அனைவருக்கும் சுற்றோட்ட முறையில் அனுப்பப்பட்டது.

## இணைப்பு

(6 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சேலம் நகராட்சியில் ஆசிரியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களாக சுமார் 720 நபர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்கள் குடும்ப நலப் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வருகிறார்கள். அந்நகராட்சியில் குடும்ப நல பாதுகாப்பு தொகை (Group Insurance Scheme) மே 1985 முதல் ஆகஸ்டு 1985 வரை முழுவதுமாக செலுத்தப்பட்டு விட்டது. அவர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்து வந்த ஆயுள் காப்பீட்டு சந்தா தொகைகள் 1985 செப்டம்பர் முதல் மார்ச் 1986 முடிய கணக்குகள் சரி செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு ரூ. 58,903.25-ஐ 2—5—1986-ல் செலுத்தப்பட்டு விடும்.

| | |
|---|---|
| செப்டம்பர் 1985 | 10,901.20 |
| அக்டோபர் 1985 | 9,938.70 |
| நவம்பர் 1985 | 2,092.10 |
| டிசம்பர் 1985 } ஜனவரி 1986 } | 26,666.40 |
| பிப்ரவரி 1986 | 9,688.70 |
| மார்ச் 1986 | 516.15 |
| மொத்தம் | 58,903.25 |

ஆயுள் காப்பீட்டு அலுவலகத்திலிருந்து கேட்பு பட்டியல்கள் பெறப்படாமலிருந்து வந்தன. அவ்வப்போது ஆயுட் காப்பீட்டு கழகத்திடமிருந்து பெறப்படும் பட்டியல் சரிவர இல்லாததால், பிடித்தம் செய்யப்பட்ட தொகை செலுத்தப்படாமல் தாமதம் ஏற்பட்டது. தற்சமயம் 24—4—1986 அன்று பெறப்பட்ட கேட்பு பட்டியல்களைச் சரிபார்த்து, மேற்படி சந்தாதொகை பிடித்தம் செய்யப்படும் ஆசிரியர்களின் பெயர் மற்றும் கணக்கு எண்களுடன் கூடிய பட்டியல்களுடன் ஆயுள் காப்பீட்டு அலுவலகத்திற்கு 2—5—1986 அன்று செலுத்தப்பட்டு விடும்.

[9ஆம் பக்கத்தில் இனம் 4 (3)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

[1986 மே 10

## தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

### தமிழ்நாட்டில் தொழிலாளர் நலன்.

### அத்தியாயம் 1.

### பொது.

நமது மாநிலத்தில் தொழிலாளர் நலத் துறையின் தலையாய பொறுப்பு, இங்கு தொழில் அமைதி நிலவும் சூழ்நிலையை நிலை பெறச் செய்வதாகும். இத்தகைய தொழில் அமைதிச் சூழ்நிலையில் தொழிலாளர்களுக்குரிய சட்டப்பூர்வ உரிமைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவர்கள் முறையிடுகின்ற குறைகள் களையப் பெறும். மேலும், அத்தகைய அமைதிச் சூழ்நிலையில்தான் தொழிலதிபர்கள் அல்லது வேலை அளிப்பவர்கள் பொதுவாக சமுதாய நலனில் அக்கறை கொண்டு, தொழில் வளர்ச்சிக்கென எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி சுதந்திரமாகத் திட்டமிட்டு உழைக்க இயலும். அதே சமயத்தில், சமுதாயத்தின் பொது நலனில் அக்கறை காட்டுகின்ற அதே அளவிற்கு, அவர்கள் தொழிலாளர் நலனிலும் அக்கறையும் ஆர்வமும் எடுத்துக் கொள்ள வேண்டும். சமுதாயத்தின் ஒட்டு மொத்தமான பொது நன்மையைக் கருதி, தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் இடையே சுமூகமான நல்லுறவு நிலைநிறுத்தப் பாடுபடுவதையே துறை தனது நடவடிக்கைகளிலும் பணிகளிலும் வழி காட்டும் அடிப்படை நெறியாக மேற் கொண்டிருந்தது. ஒரு புறம் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இந்தத் தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலக வாழ்வின் இன்றியமையாத கூறுகளைக் குறித்து இயற்றப்பட்டவையாகும். அவையாவன—வேலை, நிபந்தனைகள், வழங்கப்பட வேண்டிய ஊதியம், தொழிலாளர்கள் வேலையின்போது ஏற்படுகின்ற விபத்துகளினின்று அவர்களுக்கு உடலுக்கும் உயிருக்கும் ஊறு நேராமல் பாதுகாப்பளித்தல், அன்றியும், அவர் வேலையை விட்டு வீடு திரும்பிய நிலையில், அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் சமுதாய வகையிலும் பொருளாதார வகையிலும் நெருக்கடிகள் சுமத்தப்படாமல் பாதுகாப்பளித்தல் ஆகியவை ஆகும். இன்னொரு புறம் இத்துறை முன் உணர்வோடு பல நல நடவடிக்கைகளை எடுத்தும் செயற்படுத்துகிறது. இத்துறை இவ்விருவகை நடவடிக்கைகளாலும் (சட்டப்படி எடுக்கும் நல நடவடிக்கைகள், தானாக, முன்னுணர்ந்து எடுக்கும் நல நடவடிக்கைகள்) நாட்டில் ஒரு சுமூகமான நல்லிணக்கச் சூழ்நிலையை உருவாக்க முயன்று வருகிறது. இந்த நல்லிணக்கச் சூழ்நிலையில், தொழிலாளர்களும் சரி, தொழிலதிபர்களும் சரி நாட்டின் பொது



1986 மே 10]

வான நலனைக் கருத்திற் கொண்டு அவர்கள் ஒருவருக்கொருவர் ஆற்ற வேண்டிய கடப்பாடுகளை அவர்கள் தாமே அறிந்து செயல்படத் தூண்டப்படுகின்றனர்.

இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ள, செயற்படுத்த உறுதிபூண்டுள்ள தொழிலாளர் நலக் கொள்கை பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களையும் செயற்படுத்துவது, அவற்றை மீறத் தலைப்படுவோரைத் தடுத்து அவர் மீது நடவடிக்கை எடுப்பது என்பதுடன் நின்று விடவில்லை. மாறாக இவ்வாறு நலச் சட்டங்களைச் செயற்படுத்தி அவற்றை மீறுபவர் மீது நடவடிக்கை எடுக்கின்ற அதே சமயத்தில், வேறு பல ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளிலும் நிலையான ஆர்வத்தை உருவாக்கி வளர்ப்பதும், இவ்வரசின் தொழிலாளர் நலக் கொள்கைகளில் ஒன்றாகும். இவ்வாறு குறை குன்றாத உருவாக்கி வளர்க்க விரும்புகின்ற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் பின் வருவன—ஒரு தொழிலகத்தைத் திறமையுடன் நிருவகிப்பது; தொழிலாளர்களை நிர்வாகத்தில் பங்கேற்கச் செய்தல்; பல்வேறு பயிற்சித் திட்டங்கள் மூலமாகத் தொழிலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்; தொழிற்சாலை சுகாதாரம்-பாதுகாப்பு வழி முறைகளில் ஆழ்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்; தொழிற்சங்கங்களில் தரக்குறைவான போட்டி, பகைமை நிலவுவதை ஒழித்தல் ஆகியவை; சுருங்கக் கூறின், இந்த அரசு எப்போதுமே தொழிலாளர் நலன் காக்கும், தொழிலாளர் மீது கனிவு காட்டும் கொள்கையை எப்போதும் பின்பற்றி வந்துள்ளது. இத்தகைய தொழிலாளர் நலன் காக்கும் கொள்கையின் மூலம், தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் தாங்கள் ஆற்றல் வாய்ந்த இருபெரும் அணிகள் என்பதைப் புரிந்து கொண்டுள்ளதோடு, இந்த இரு அணிகளும் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டு எதிர்த்து செயல்படுவதால், அவர்களுக்கு எந்த நன்மையும் கிட்டாது என்பதையும் புரிந்து கொண்டுள்ளனர். அத்துடன், அவர்கள் ஒன்றுபட்டு நின்றால், அவர்கள் ஒரு மாபெரும் சக்தியாக உருவாக முடியும்; உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவற்றை உயர்த்தி, அதனால் கிட்டும் விளைவுகளையும், வெற்றிக்கனிகளையும் பகிர்ந்து உண்ண முடியும்; இச்சமுதாயத்திற்குப் பொது வகையில் நன்மையைப் பெற்றுத் தரமுடியும் என்பதையும் அறிந்து வைத்துள்ளனர்.

இத்தகைய ஆக்க பூர்வமான நெறியில் இந்த அரசு தொழிலாளர் நலனுக்காகப் பல்வேறு நல நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. இந்த நல நடவடிக்கைகள் பற்றி, இந்த அறிக்கையில் வருகிற அத்தியாயங்களில் சுருக்கமாக விளக்கிக் கூறப்பட்டு உள்ளது.

[1986 மே 10

தொழிலாளர் நல ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட பல்வேறு சட்டப்படிக்
கான பணிகளையும், பிற பணிகளையும் நிருவகிப்பதில் அவருக்கு தலைமை
யிடத்திலும், வட்டாரங்களிலும் முழுநிலை அதிகாரிகள் உதவி புரிகின்றனர்.
தொழிலாளர் நலப் பிரிவில், சமரச தரப்பில் அவருக்கு தொழிலாளர் நல இணை
ஆணையாளர்கள் நால்வரும் (தலைமையிடத்தில் இருவர், மதுரையில் ஒருவர்,
கோவையில் ஒருவர்) தொழிலாளர் நலத் தனி துணை ஆணையாளரும்,
தொழிலாளர் நல உதவி ஆணையாளரும் (தலைமையிடம்) உதவி புரிகின்றனர்.
நிருவாகத்தில், தொழிலாளர் நல ஆணையாளருக்கு, தொழிலாளர் நல இணை
ஆணையாளர் ஒருவர் (நிருவாகம்) தவிர, தொழிலாளர் நல உதவி ஆணை
யாளரும் (பணியாளரமைப்பு-பொது) நிருவாக அதிகாரிகள் இருவரும் [இவர்
களில் ஒருவர் நிருவாக அதிகாரி (பொது) என்றும், இன்னொருவர் மக்கள்
தொடர்பு அதிகாரி (பொது) என்றும், இன்னொருவர் மக்கள் தொடர்பு
அதிகாரி என்றும் அழைக்கப்படுகிறார்] உதவி புரிகின்றனர் எடைகள்-அளவை
கள் சட்டத்தை செயற்படுத்துவதில், தலைமையிடத்திலுள்ள தொழிலாளர்
நலத் துணை ஆணையாளர்களில் ஒருவர் 'எடைகள்-அளவைகள் கட்டுப்பாடு
அதிகாரி' என அழைக்கப்படுகிறார். இவருடைய பணிகளில், நிருவாக
அதிகாரி ஒருவர் இவருக்கு உதவி புரிகிறார். தலைமையிடத்தில், 1948
ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டத்தைச் செயற்படுத்துவதற்காகத்
தொழிலாளர் நல ஆணையாளருக்கு துணை ஆணையாளர் உதவி புரிகிறார்.
இவர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் (குறைந்த அளவு ஊதியங்
கள்) என அழைக்கப்படுகிறார். இவருடைய பணிகளில் நிருவாக அதிகாரி
ஒருவர் இவருக்கு உதவி புரிகிறார். அட்டவணையிடப்பட்ட பல்வேறு
தொழில்களில் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களை
நிர்ணயிப்பதில், திருத்துவதில் ஆலோசனை அளிப்பதற்காக 1948 ஆம் ஆண்டு
குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்படி அவ்வப்போது அரசால் நிய
மிக்கப்படுகிற ஆலோசனைக் குழுக்களின் தலைவராக இத்தொழிலாளர் நலத்
துணை ஆணையாளர் அறிவிக்கப்பட்டு வருகிறார். மேலும், மேற்சொன்ன
சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள முத்தரப்பு மன்றமான குறைந்த அளவு
ஊதியங்கள் (மாநில) ஆலோசனை வாரியத்தின் செயலாளராகவும் இவர்
செயல்பட்டு வருகிறார்.

கடைகள்-நிறுவனங்கள் சட்டத்தின்கீழும், பணிக்கொடை வழங்கல்
சட்டத்தின்கீழும் வழக்குகளை விரைந்து முடிவு செய்வதற்காகத் தொழி
லாளர் நலத் துணை ஆணையாளர் ஒருவர், இவர் தொழிலாளர் நலத்



1986 மே 10]

துணை ஆணையாளர் (மேல் முறையீடு) என்று அறிவிக்கப்பட்டுள்ளார்.
தலைமையிடத்தில் உள்ள இவருக்கு செங்கற்பட்டு மாவட்டத்திலும், சென்னை
யிலும் தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின்
41 ஆம் பிரிவின்கீழ் தாக்கல் செய்யப்படுகிற வழக்குகளை விசாரிக்கவும், 1972
ஆம் ஆண்டு பணிக் கொடை வழங்கல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ்
செய்யப்படும் மேல் முறையீடுகளை முடிவு செய்யவும் அதிகாரம் அளிக்கப்பட்
டுள்ளது. சென்னையிலுள்ள தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணை
யாளர்கள் I & II ஆகிய இருவரின் பணிச் சுமைகளைக் குறைக்கும்
நோக்குடன் இத்தனி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால், தொழிற்
சாலைகள் பெருமளவில் உள்ள சென்னை, செங்கற்பட்டு மாவட்டங்களில்
உள்ள பெருத்த தொழில் பிரிவுகளில் ஏற்படும் தொழில் தகராறுகளை
சமரசம் செய்து தீர்த்து வைக்கவும் அவர்களுக்குப் போதிய கால அவகாசம்
இருக்கும்.

நிருவாக வசதியின் பொருட்டும், தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ்
வழக்குகளை விரைந்து திறம்பட முடிவு செய்யவும், பல்வேறு தொழிலாளர்
நலச் சட்டங்களைச் செயற்படுத்தவும் இம்மாநிலம் 7 வட்டாரங்களாகப்
பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வட்டாரமும் தொழிலாளர் நலத் துணை
ஆணையாளர் பொறுப்பின்கீழ் செயற்படுகிறது. தலைமையிடத்தில் இவருக்கு
தொழிலாளர் நல உதவி ஆணையாளர்களும், சமரசப் பிரிவில் தொழிலாளர்
நல அதிகாரிகளும், சட்டங்களை செயற்படுத்தும் பிரிவில் தொழிலாளர் நல
ஆய்வாளர்களும், மலைத் தோட்டத் தொழிலாளர் நல ஆய்வாளர்களும் உதவி
புரிகின்றனர். தொழிலாளர் நலச் சட்டங்களைச் செயற்படுத்துவதிலும்,
எடைகள், அளவைகள், சட்டத்தை நிருவகிப்பதிலும் தொழிலாளர் நல
ஆய்வாளருக்கு தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்களும், தொழிலாளர்
நல உதவி ஆய்வாளர்களும், முத்திரையிடும் ஆய்வாளர்களும் (இப்பதவி
இருக்குமிடங்களில்) உதவி புரிகின்றனர்.

மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய வட்டாரங்களில் உள்ள தொழி
லாளர் நலத் துணை ஆணையாளர்கள் மதுரையிலுள்ள தொழிலாளர் நல
இணை ஆணையாளர்களின் மேற்பார்வையில் செயற்படுகின்றனர். கோயம்
புத்தூர், சேலம் ஆகிய வட்டாரங்களிலுள்ள தொழிலாளர் நலத் துணை
ஆணையாளர்கள், கோயம்புத்தூரிலுள்ள தொழிலாளர் நல இணை ஆணை
யாளரின் மேற்பார்வையில் செயற்படுகின்றனர். இது போலவே சென்னை
யிலும், சென்னை தொழிலாளர் நல துணை ஆணையாளர் I & II

ஆகியோர் மற்றும் அவர்களுடைய சார் நிலை அலுவலர்களின் பணிகளை மேற்பார்வையிடுவதற்காகச் சென்னையிலும் (தொழிலாளர் நல இணை ஆணையாளர் பதவிப் பொறுப்பில் அமையும்) வட்டாரத்தை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

மலைத் தோட்டத் தொழிலாளர் நலச் சட்டத்தை நிருவகிப்பதில், மலைத் தோட்ட ஆய்வாளர்கள் தவிர, உதகமண்டலத்தில் ஒருவர், நகர்கோயிலில் ஒருவர் என மருத்துவ அலுவலர்கள் இருவர் உள்ளனர். இந்த அலுவலர்கள் மலைத்தோட்ட ஆய்வாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டத்தின்கீழும், அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளின் கீழும் அளிக்கப்படும் மருத்துவ வசதிகள் தொடர்பான அலுவலர்களைக் கவனிப்பது இவர்களின் பொறுப்பாகும். மலைத் தோட்ட ஆய்வாளர்களும், மருத்துவ அலுவலர்களும் சட்டங்களைச் செயற்படுத்தும் பிரிவிலுள்ள வட்டாரங்களுடன் இணைக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் தொழிலாளர் நல இணை ஆணையாளரின் (நிருவாகம்) கட்டுப்பாட்டின்கீழ் பணி புரிகின்றனர். இவர் மலைத் தோட்டத் தலைமை ஆய்வாளராவார். இது போன்று, மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டத்தையும், 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தையும் செயற்படுத்துவதில் தொழிலாளர் நல ஆணையாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் ஆகியோர் தொழிலாளர் நலத் துணை ஆணையாளரின் (ஆய்வு) வழிகாட்டுதலுக்கிணங்க பணிபுரிகிறார்கள். இவர் அந்தந்தச் சட்டங்களின் கீழ் செயற்படுகிற தலைமை ஆய்வாளருமாவார்.

முன்னாள் இராமநாதபுரம் மாவட்டம், காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கம், இராமநாதபுரம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டு, முறையே விருதுநகர், சிவகங்கை, இராமநாதபுரம் ஆகியவற்றைத் தலைமையிடமாகக் கொண்டு 3 புதிய மாவட்டங்கள் அமைக்கப்பட்டன. இதைப்போல மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்ட அண்ணா மாவட்டம் அமைக்கப்பட்டது. அரசு இந்த வகையில் புதிதாக 3 தொழிலாளர் நல அலுவலர்கள், 4 தொழிலாளர் நல ஆய்வாளர் பதவிகளையும், அவர்களுக்கான துணைப் பணியாளர் பதவிகளையும் ஏற்படுத்த அனுமதி வழங்கியது.

அமைப்பின்கீழ் வாராத தொழிலாளர்களுக்கு தொகுதிப் பணிக் கொடை திட்டத்தைக் கொண்டுவர அரசிற்கு உதவும் வகையில் அவர்களைக் குறித்த புள்ளிவிவரத் தகவல்களைச் சேகரிப்பதற்காக அரசு தலைமையிடத்தில் தொழிலாளர் நல உதவி ஆணையாளர் ஒருவர், தொழிலாளர் உதவி ஆய்



வாளர் ஐவர் ஆகியோரும், உரிய துணைப் பணியாளரும் அடங்கிய தனிப் பணியாளர் அமைப்பை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது. சென்னை நீங்கலாக மற்ற வட்டாரங்களில் இவை தொடர்பான மதிப்பீட்டில் ஆய்வை மேற்கொள்வதற்காக (அந்தந்த வட்டாரங்களில் உள்ள தொழிலாளர் ஆய்வாளர்களின் உதவியைப் பெற்று இப்பணி மேற்கொள்ளப்படும்) இதற்கென அனுமதிக்கப்பட்ட மேற்சொன்ன தொழிலாளர் நல உதவி ஆய்வாளர் ஐவரும் முகமையில் அனுப்பப்பட்டுள்ளனர். வட்டாரங்களில் மதிப்பீட்டு ஆய்வு முடிந்த பின்னர் இந்த 5 தொழிலாளர் உதவி ஆய்வாளர்களும் சென்னை வட்டாரங்களிலுள்ள தொழிலாளர் ஆய்வாளர்களுடன் சேர்ந்து சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் அமைப்பின்கீழ் வாராத தொழிலாளர் குறித்த மதிப்பீட்டு ஆய்வுப் பணியைச் செய்வார்கள்.

தொழிற்சாலைகளுக்குப் பொருந்தும் தொழிற்சாலைகள் சட்டத்தையும், ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களையும் நிருவகிப்பதில் தொழிலாளர் நல ஆணையாளருக்கு தலைமையிடத்தில் தொழிற்சாலைககளின் தலைமை ஆய்வாளர்கள் இருவர் உதவி புரிகின்றனர். ஒருவர் சுகாதாரத்தையும், பாதுகாப்பையும் கவனித்துக் கொள்கிறார். மற்றவர் பொது நிருவாகத்தையும், ஆய்வுகளையும் கவனித்துக் கொள்கிறார். தொழிற்சாலைகள் பிரிவு முழுவதற்கும் பொறுப்பு வகிக்கும் இந்தத் தலைமை ஆய்வாளர் இருவரும் தொழிலாளர் நல ஆணையாளருக்கு 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்படி துணை புரியும் வகையில் பணி புரிகிறார்கள். தொழிற்சாலைகள் பிரிவு தொழிலாளர் நலத் துறையின் ஓர் அங்கம் ஆகும்.

தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (நிருவாகம்-ஆய்வு) தொழிற்சாலைகள் சட்டத்தையும் இது தொடர்பான மற்ற சட்டங்களையும் செயற்படுத்துவதற்குப் பொறுப்பாவார். தொழிற்சாலைகள் சட்டத்தையும் இது தொடர்பான மற்ற சட்டங்களையும் நிருவகிப்பதில் அவருக்கு தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர்கள் ஐவரும் பல்வேறு வட்டாரங்களில் 13 துணைத் தலைமை ஆய்வாளர்களும் 44 தொழிற்சாலை ஆய்வாளர்களும் 30 தொழிற்சாலை உதவி ஆய்வாளர்களும் உதவி புரிகின்றனர். தலைமையிட அளவில், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு (நிருவாகம்-ஆய்வுகள்) தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர் ஒருவரும் தொழிற்சாலைகள் ஆய்வாளர் ஒருவரும் (இவர் நிருவாக அதிகாரியெனப்படுகிறார்) உதவி புரிகின்றனர்.

[illegible] [1986 மே 10

தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளர்களின் வட்டார அலுவலகங்கள், சென்னை (4 வட்டங்கள்) வேலூர், சேலம், திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சிவகாசி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் செயற்படுகின்றன.

தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர்களின் வட்டார அலுவலர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், பணி நிலைகளுக்குப் பொறுப்பாவார். தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளர் (சுகாதாரம்-பாதுகாப்பு) பொறுப்பின்கீழ், சென்னையில் தொழில் சுகாதாரம்-உடல் நலப் பிரிவு இணைந்த ஆய்வுக்கூடம் ஒன்று செயல்படுகிறது. இப்பிரிவு தலைமை மருத்துவரும் (தொழிற்சாலைகள்) சான்றளிக்கும் மருத்துவர்கள் (மருத்துவ அதிகாரிகள்) (தொழிற்சாலைகள்) ஆறுபேரும் நிருவகிக்கின்றனர். இவர்கள் சென்னை, வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி, சிவகாசி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ளனர். இம் மருத்துவ அதிகாரிகள் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 10-ஆம் பிரிவின்படியும், தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளின்படியும் சான்றளிக்கும் மருத்துவர்களின் கடமைகளைப் புரிகின்றனர்.

மருத்துவப் பணிகள் உதவி இயக்குநரின் பதவித் தரத்திலுள்ள தலைமை மருத்துவ அதிகாரி, சென்னையிலுள்ள தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட தொழில்-சுகாதாரம்-உடல்நலப் பிரிவு இணைந்த ஆய்வுக் கூடத்திற்கும் பொறுப்பு வகிக்கிறார். இவர் அபாயகரமான தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை மருத்துவ சோதனை செய்வதையும் உயிர்மங்கள் மாதிரிகளை ஆய்வுக்கூடத்தில் ஆய்வு செய்யும் பணியையும், தொழிலில் ஏற்படும் அபாயங்கள் குறித்து ஆய்வு நடத்துவதையும் மேற்கொள்கிறார். அமைப்பின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு இது போன்று மருத்துவ பரிசோதனை செய்வதற்கு மதுரையில் மருத்துவப் பிரிவு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. மதுரையிலுள்ள இந்நிலையம் தொழிலாளர் அரசுக் காப்புறுதி திட்டத்தின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு சிகிச்சையளிப்பதுடன் நோய் தடுப்பு மருத்துவப்பணி வசதியும் அளிக்கிறது.

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் தொழிற்சாலை தலைமை ஆய்வாளரின் (சுகாதாரம்-பாதுகாப்பு) கட்டுப்பாட்டின்கீழ் மூன்று பாதுகாப்பு பிரிவுகள் இயங்குகின்றன.



1986 மே 10]

இந்தப் பாதுகாப்புப் பிரிவுகளின் பணிகளை மேம்படுத்தும் நோக்குடன், இப்பிரிவுகளுக்கு பொறுப்பு வகித்த தொழிற்சாலைகள் உதவி ஆய்வாளர் பதவிகள் தொழிற்சாலை ஆய்வாளர் பதவிகளாக உயர்த்தப்பட்டன. இது தவிர இந்த பாதுகாப்புப் பிரிவுகளின் அலுவலர்களது பணிகளை மேற்பார்வையிடுவதற்காக தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் (சோதனை செய்தல்-பாதுகாப்பு) பதவி ஒன்றையும் அவருக்குரிய துணைப் பணியாளர் பதவிகளையும் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த பாதுகாப்புப் பிரிவுகளின் பணிகளைக் குறித்து இவ்வறிக்கையின் 4 ஆம் அத்தியாயத்தில் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

தலைமையிட அளவில், குழந்தை, பெண் தொழிலாளர் தொடர்பான பாதுகாப்பு-சுகாதாரம் பற்றிய விதித்துறைகளைச் செயற்படுத்துவதில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளருக்கு (சுகாதாரம்-பாதுகாப்பு) தொழிற்சாலை பெண் ஆய்வாளர் ஒருவர் உதவி புரிகின்றனர்.

மேற்சொன்னவை தவிர, தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரின் (சுகாதாரம்-பாதுகாப்பு) மேற்பார்வையின்கீழ் காற்றழுத்த சாதனங்கள் பிரிவு செயல்படுகிறது. இப்பிரிவின் கீழ், சென்னை (இரு அதிகாரிகள்), மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள நான்கு துணைத் தலைமை ஆய்வாளர்கள், துறை மேற்பார்வையின்கீழ் உள்ள தொழிற்சாலைகளில், இந்தியத் தர நிறுவனம் நிர்ணயித்த தரத்தின்படி, காற்றழுத்த சாதனங்களைச் சோதனை செய்யும் பணியைக் கவனிக்கின்றனர். இம்மாநிலத்திலுள்ள காற்றழுத்த சாதனங்களைச் சோதனை செய்யும் நடைமுறையில், இத்துணைத் தலைமை ஆய்வாளர்களுக்கு தொழிற்சாலை ஆய்வாளர் ஒவ்வொருவரும் உதவி புரிகின்றனர்.

இந்த ஆண்டில் புதிதாக தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் (சோதனை செய்தல்-பாதுகாப்பு) பதவி ஒன்றை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியது. இவர் தொழிற்சாலைகள் துணைத் தலைமை ஆய்வாளரின் (காற்றழுத்தச் சாதனங்கள்) பணியை மேற்பார்வை செய்கிறார். இவ்விரு அலுவலர்களும் தமது துணைப் பணியாளரிடம் சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றார்கள். இவர்களது பணி, சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு அமைந்துள்ள காற்றழுத்தச் சாதனங்கள் சோதனைக் கோட்டம், பளு தூக்கிகள் சோதனைப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றை திறம்பட மேற்பார்வை செய்து வழி நடத்துவதாகும். நடப்பாண்டில் புதிதாக சென்னையில் ஒருவரும் மதுரையில் ஒருவருமாக, தொழிற்சாலைகள் வட்டார இணைத் தலைமை ஆய்வாளர்கள் இருவர்,

துணைப் பணியாளர்களுடன் நியமிக்கப்பட்டனர். தொழிற்சாலைகள் இணைத் தலைமை ஆய்வாளர் (உற்பத்தித்திறன் குழு) பதவி ஒன்றும் அவருக்குரிய துணைப் பணியாளர்கள் பதவிகளும் ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது இவர்களது பணியாகும். இந்த உற்பத்தித் திறன் குழு முற்றிலும் ஆலோசனை வழங்கும் குழு ஆகும். இக்குழு உற்பத்தித்திறனை மேம்படுத்தல், கூடுதல் வளவாயில்களை, கண்டறிதல் உற்பத்தி நடைமுறையில் பொருட்கள் வீணாவதைத் (கழிவு ஆவதை) தடுத்தல், கா லஆய்வு, இயக்க ஆய்வு ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம், வேலைக்கான அடிப்படை அளவீடுகளை ( (Work Norms) வரையறுத்தல், வேலை பகுப்பாய்வு, வேலைப்பாதுகாப்புப் பகுப்பாய்வு முதலியவற்றைச் செய்தல், பரிசு வழங்கும் திட்டத்தை ஏற்படுத்துதல், தொழிலாளர்கள், மேற்பார்வையாளர்கள் முதலியோருக்கு முறையான பயிற்சி அளித்தல் முதலான பணிகளை இது கவனிக்கும்.

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தில் தொழிலாளர் நிருவாகத்தில் தொழில் முறை பட்டப் படிப்பு வகுப்பு தொடங்குதல் போன்ற புதிய பயிற்சி செயற்குறிப்புகள் கொண்டு வரப்பட்டுள்ள காரணத்தால், அதற்கேற்பட்டுள்ள கூடுதல் பொறுப்பினை நிறைவேற்ற இயலும் வகையில், நிலையப் பணியாளர்களின் எண்ணிக்கை கூடுதலாக்கப்படுகிறது. இந்நிலையம் இயக்குநர் ஒருவரைத் துறைத் தலைவராகக் கொண்டு தனித்துறையாகச் செயல்படுகிறது.

## அத்தியாயம் 1[illegible]

## தொழில் உறவுகள்.

### 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டம்.

இந்த ஆய்வு ஆண்டில் தகராறுகள் சம்பந்தப்பட்ட மொத்த வழக்குகள் 9,369-ல் 7,401 வழக்குகளில் இணக்க அதிகாரியால் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் விவரங்களை இணைப்பு 1-ல் காண்க.

### பணி நிறுத்தங்கள்.

1985 ஆம் ஆண்டில், ஏற்பட்ட 212 வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் காரணமாக, வீணான உழைப்பு நாட்கள் 35,05,226 ஆகும். முந்தைய ஆண்டுடன் ஒப்பிட்டு இவ்வாண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்





கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் எண்ணிக்கை இணைப்பு 11-ல் கொடுக்கப்பட்டுள்ளது. வேலை நிறுத்தத்தின் காரணமாக, வீணான உழைப்பு நாட்கள் 35,05,226-ல் பின்வரும் முக்கியமான இரண்டு வேலை நிறுத்தங்களின் காரணமாக வீணான உழைப்பு நாட்களின் எண்ணிக்கை 19,09,932.

1. தமிழ்நாடு முழுவதிலுமுள்ள துணி ஆலைகளில் ஊதியம், பிற கோரிக்கைகள் தொடர்பாக 1,42,367 தொழிலாளர்கள், 16—7—1985 முதல் 25—7—1985 வரை பங்கு கொண்ட வேலை நிறுத்தம்.

2. கோயம்புத்தூர், பெரியார், திருநெல்வேலி, செங்கல்பட்டு, சேலம், கன்னியாகுமரி, பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் உள்ள 92 துணி ஆலைகளில் ஊதியக்கொடை கோரிக்கைகள் தொடர்பாக 9—11—1985 முதல் 14—12—1985 வரை 55,000 தொழிலாளர்கள் பங்கு கொண்ட வேலை நிறுத்தம்.

1985 ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள் கதவடைப்புகள் ஆகியவை குறித்து துறை அலுவலர்களால் தீர்வு காணப்பட்ட விவரங்கள் இணைப்பு 3-ல் காணலாம்.

1984, 1985 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் பற்றிய தொழில்வாரியான விவரங்கள் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

இம்மாநிலத்திலுள்ள தொழில் நடுவர் மன்றத்திற்கு தொழிலாளர் நீதி மன்றங்களுக்குத் தீர்ப்புக்காக அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, 33-சி(2) பிரிவின் கீழ் தொழிலாளர் நீதிமன்றங்கள் முடிவு செய்த வழக்குகளின் எண்ணிக்கை ஆகியவை பற்றிய விவரங்களைக் காட்டும் அறிக்கை, இணைப்பு 4-லுள்ள இக்குறிப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

### இந்த ஆய்வு ஆண்டில் தீர்வு காணப்பட்ட முக்கிய விவகாரங்கள்.

துறை அலுவலர்களின் முயற்சியால் 7,404 தொழில் தகராறுகள் தீர்த்து வைக்கப்பட்டன. இது பற்றிய விவரங்களை இணைப்பு 3-ல் காணலாம். தொழிலாளர் நல ஆணையாளரும், துறையின் ஏனைய முதுநிலை அதிகாரிகளும் மேற்கொண்ட முயற்சியின் பயனாக பின்வரும் தொழில் தகராறுகள் தீர்வு செய்யப்பட்டன.

## துணித் தொழில்.

**1. ஊதிய உயர்வு அகவிலைப்படி முதலிய பொதுவான கோரிக்கைகள் :**

ஊதிய உடன்பாடு 1984 இல் காலாவதி ஆனதையடுத்து, ஊதிய உயர்வு, அகவிலைப்படி முதலிய பொதுவான கோரிக்கைகள் தொடர்பாக, தமிழ்நாடு துணித் தொழில் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு 16—7—1985 முதற்கொண்டு வேலை நிறுத்தம் செய்யப்போவதாக தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலைகளின் நிருவாகிகளுக்கு வேலை நிறுத்த அறிவிப்புக் கொடுத்தனர். இது தொடர்பாக தொழிலாளர் நல தனித்துணை ஆணையாளர், தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தைகளின்போது தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் சார்பாக நிருவாகத்தினர் அறிவியல் முறையில் வேலைக்கான அடிப்படை அளவுகளை நிர்ணயித்தல், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி முதலியவற்றின் அமைப்பை மாற்றியமைத்தல், போன்ற எதிர் கோரிக்கைகளை முன் வைத்தனர். ஆனால், தொழிற்சங்கங்களோ ஊதிய உயர்வு பிரச்சனை குறித்து மட்டுமே பேச்சு வார்த்தை நடத்தி, தொழில் வாரியான அடிப்படையில் எவ்வித நிபந்தனையுமின்றித் தீர்வு காண வேண்டுமென வலியுறுத்தின. இவ்வகையில் உடன்பாடு காண இயலாததால், தொழிலாளர் நல ஆணையாளர் அவருடைய இணக்க அறிக்கையை அரசிற்கு அனுப்பினார். தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் சிலவற்றையும், நிருவாகத்தினரின் எதிர்க் கோரிக்கைகளையும் தனி தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்பிற்கு விட்டது. தொழிலாளர்களுக்கு இடைக்காலத் தொகைகள் வழங்க தொழில் தகராறுகள் சட்டத்தின் 10-பி பிரிவின் கீழ் துணி ஆலை நிருவாகத்தினருக்கு அரசு உத்தரவுகள் பிறப்பிக்கவும் செய்தது. ஆனால், துணி ஆலைத் தொழிலாளர்களோ, ஏற்கனவே திட்டமிட்டபடி 16—7—1985 முதல் கொண்டு வேலை நிறுத்தம் மேற்கொண்டனர். அதன் பின்னர், மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதின் பேரில், துணி ஆலைத் தொழிலாளர்கள் அவர்களுடைய வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்று, 25—7—1985 அன்று வேலைக்குத் திரும்பினர். அத்துடன் கழிவு பஞ்சாலைகள் தொடர்பான தகராறையும் அரசு நடுவர் தீர்ப்பிற்கு விட்டது. மேலும், முதலில் நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விட மறுத்த தகராறுகள் குறித்து அரசு மறுபரிசீலனை செய்தது. சில தகராறுகள் பின்னர் நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு விடப்பட்டது.

**2. 1984 (1984-85) ஆம் ஆண்டிற்கு துணி ஆலை தொழிலாளர்கள் ஊதியக் கொடை கோரிக்கை :**

தமிழ்நாட்டிலுள்ள துணி ஆலைத் தொழிலாளர்களுக்கு 1984 (1984-85) ஆம் ஆண்டிற்கு ஊதியக்கொடை வழங்கும் விவகாரத்தைப் பொறுத்தவரை கோயம்புத்தூர் வட்டாரம் நீங்கலாகப் பிற பகுதிகளிலுள்ள துணி ஆலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு ஊதியக்கொடை வழங்கும் பிரச்சனைக்கு சுமூகமான தீர்வு காணப்பட்டது. கோயம்புத்தூர் வட்டாரத்தில் சட்டப்படிக்கான ஊதியக் கொடையுடன், முந்தைய ஆண்டுகளில் இதுவரை பின்பற்றி வந்த அடிப்படையிலேயே கூடுதல் தொகைகள் வழங்கப்பட வேண்டுமென தொழிற்சங்கங்கள் கோரின. ஆனால், நிருவாகத்தினரோ ஊதியக் கொடை வழங்கல் சட்டத்திற்கு இணங்க அல்லாது, கூடுதல் தொகை ஏதும் வழங்கத் தயாராக இல்லை. இது குறித்து கோயம்புத்தூர் தொழிலாளர் நல இணை ஆணையாளர் முதல்நிலைப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். தொழிலாளர் நல சிறப்புத் துணை ஆணையாளர், தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர் முன்னிலையில் மேற்கொண்டும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இடை நிகழ்வாக, 1982-83 ஆம் ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட கூடுதல் தொகைகளை முந்தைய உடன்பாடுகளின்படி சரிக்கட்டும் விவகாரம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. இதுகுறித்து இறுதியான உடன்பாடு ஏதும் காணப்படாததால், தொழிலாளர் நல ஆணையாளர் சில ஆலோசனைகள் கூறினார், அவை :—

(1) 1984 (1984-85) ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை 1965 ஆம் ஆண்டு ஊதியக் கொடை வழங்கல் சட்டத்தின்படி வழங்கப்பெறலாம்.

(2) முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட கூடுதல் தொகைகளை சரிக்கட்டும் விஷயம் குறித்து தனியே விவாதிக்கப்பட்டு தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் தீர்வு காணப்படலாம்.

(3) தொழிலாளர்கள் விவகாரத்திற்குட்பட்ட ஊதியக் கொடையைப் பெற்று இதுகுறித்து பின்னர் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

கூடுதல் இடைக்காலத் தொகையொன்று வழங்குவது குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் 21—11—1985-இல் ஆலோசனை கூறினார்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் ஆலோசனைக்கு மாறாக தேசிய துணைத் தொழில் நிறுவன ஆலைகள் 10-ல் உள்ள தொழிலாளர்கள் நீங்கலாகப் பிற தொழிலாளர்கள் 25—11—1985 முதற்கொண்டு படிப்படியாக வேலைக்குச் செல்லத் தொடங்கினர். 28—11—1985 முதற்கொண்டு எல்லா ஆலைகளிலுமே வேலை மீண்டும் தொடங்கியது. இருதரப்பினருக்கு இடையே நடைபெற்ற பரஸ்பர பேச்சு வார்த்தைகளையடுத்து தேசியத் துணித் தொழில் நிறுவனத் தொழிலாளர்கள் 7—11—1985 முதற்கொண்டு மீண்டும் வேலைக்குத் திரும்பினர்,

3. தமிழ்நாடு துணித் தொழில் நிறுவனம் கிருஷ்ணாபுரம் விசைத்தறி ஆலை, மதுரை :

மதுரை, கிருஷ்ணாபுரம் விசைத்தறி ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, தற்காலிக தொழிலாளர்களின் பணியை முறைப்படுத்தல் முதலானவை தொடர்பான அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தி, 29—8—1985 முதற்கொண்டு வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கினர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையர் (இணக்கம்) பல்வேறு நாட்களிலும், இறுதியாக 11—10—1985-லும் பேச்சு வார்த்தைகள் நடத்தியதின் விளைவாக தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்படி உடன்படிக்கை கையெழுத்தாகியது. இந்த உடன்படிக்கையின்படி தொழிலாளர்கள் 4—11—1985-இல் வேலைக்குத் திரும்பினர்,

4. லட்சுமி சண்முகா நூற்பாலை, நமணசமுத்திரம், புதுக்கோட்டை :

புதுக்கோட்டை மாவட்டம் நமணசமுத்திரத்திலுள்ள லட்சுமி சண்முகா நூற்பாலை செயற்படுவது 17—5—1985 முதற்கொண்டு நின்றுவிட்டது. அதற்கு முன்னர், நிதித் தொல்லைகள் காரணமாக இந்த நூற்பாலை ஒழுங்காக செயற்பட்டுவரவில்லை. தொழிலாளர்களுக்கு 1985 மார்ச்சு, ஏப்ரல், மாதங்களுக்குரிய ஊதியங்கள் வழங்கப்படவில்லை. ஆகவே, இவ்வாலைத் தொழிலாளர்கள் (சுமார் 600 பேர்) ஊதியம், ஊதியக் கொடை முதலானவை வழங்கக் கோரி நேரடி நடவடிக்கையில் இறங்கினர். இவ்விவகாரம் குறித்து முதலில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையிலும், பின்னர், திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நல துணை ஆணையர் முன்னிலையிலும், பேச்சு வார்த்தை நடைபெற்றது. ஆனால் உடன்பாடு காண இயலவில்லை. இந்த ஆலையில் விரைவில் வேலைமீள மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டார். அதையடுத்து, சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிர்வாகம்) இதுகுறித்துப் பேச்சு வார்த்தை நடத்தி உடன்பாட்டிற்கு ஒருவழி வகுத்தார். இதன் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி தொழிலாளர் நலத்துணை ஆணையர் இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடத்தி 3—7—1985-ல் உடன்பாடொன்று கண்டார். அந்தவுடன்பாட்டின் விளைவாக தொழிலாளர்கள் 4—7—1985 முதற்கொண்டு வேலைக்குத் திரும்பினர்.



பொறியியல் தொழில்.

5. அசோக் லேலண்ட் நிறுவனம், ஓசூர் :

தொழிலாளர்களின் கோரிக்கை மனுவை பைசல் செய்வது தொடர்பாகத் தொழிலாளர் நலத்துறையில் பேச்சு வார்த்தைகள் நடக்க வேண்டியிருந்த சூழ்நிலையில், தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் குறைவாக இருக்கிறதென்று காரணங்காட்டி இத்தொழிற்சாலையில் உற்பத்திப் பணிகளை நிர்வாகத்தினர் தற்காலிகமாக நிறுத்தினர். இதுகுறித்து தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் அடுத்தடுத்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தலையிட்டதின் பேரிலும், தொழிலாளர் நல ஆணையரின் ஆலோசனையின்பேரில் இருதரப்பினருக்கிடையேயும் ஒருமித்த கருத்து உருவானதையடுத்தும், தொழிலாளர் நல தனித்துணை ஆணையர் முன்னிலையில் தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்கீழ் 9—8—1985-இல் உடன்பாடொன்று காணப்பட்டது. அதையடுத்து இந்நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 12—8—1985-ல் வேலைக்குத் திரும்பினர்.

இவ்வுடன்பாட்டின் காரணமாக, 1,400 தொழிலாளர்கள், பயனடைந்தனர். இது தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ஒட்டுமொத்த உடன்பாட்டு அனுகூலத் தொகையாக ரூ. 800 பெறவும், அத்துடன், ஊதியம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, வாகனப்படி உயர்வு முதலான வகைகளில் ஒவ்வொரு வருடைய சம்பளமும் மாதமொன்றிற்கு ரூ. 160 உயர்வும் வழிவகுத்தது. ரூ. 100 ஊக்கத் தொகை பெறக் கூடிய வகையில் உற்பத்தித் திறன் அளவை குறைந்தபட்சம் 50 சதவீதமாகப் பேணிவரத் தொழிலாளர்கள் உத்திரவாதம் அளிக்கவும் இந்த உடன்பாடு வகை செய்கிறது.

6. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு, பொது; தனியார் துறை சர்க்கரை ஆலைகள் :

19—3—1982 இல் செய்துகொண்ட முந்தைய உடன்பாடு காலாவதியான பிறகு, சர்க்கரைத் தொழிலில் ஊதிய உயர்வு குறித்துத் தொழில் தகராறு ஏற்பட்டது. கோரிக்கைகள் மனுவின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டனர். சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்) பேச்சு வார்த்தைகள் நடத்தினார். பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வந்தபோது, சர்க்கரைத் தொழிலுக்கான மூன்றாம் ஊதியக்குழு அமைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது. அத்தகைய சூழ்நிலைகளில், ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு அல்லது இடைக்கால நிவாரணம் குறித்து ஊதியக்குழுவின் அறிவிப்பிற்கு பொறுத்திருப்பது முறையானதாக

இருக்குமென சர்க்கரை தொழில் நிருவாகத்தினர் ஒரு முடிவிற்கு வந்தனர். மாறாக, ஒவ்வொரு விவகாரம் குறித்தும் தனித்தனியே இறுதி உடன்பாட்டை அவர்கள் காண்பது கடந்தகால வழக்கமாக இருந்ததால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இது குறித்து ஓர் உடன்பாடு காண நிருவாகத்தினர் முன் வருவதுதான் உகந்ததாக இருக்குமென தொழிற்சங்கங்கள் வாதிட்டன.

தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்) முன்னிலையிலும், பின்னர் தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையிலும் நடந்த பேச்சு வார்த்தைகளின் பலனாகத் தற்காலிகமாக இடைக்கால நிவாரணம் அளிக்க நிர்வாகத்தினர் ஒப்புக்கொண்டனர்.

சர்க்கரைத் தொழில் குறித்த மூன்றாம் ஊதியக் குழு இறுதி முடிவு எடுப்பதை எதிர்பார்த்து 30—11—1985-ல் ஓர் உடன்பாடு காணப் பட்டது.

7. தமிழ்நாட்டிலுள்ள பீடித் தயாரிப்பு நிறுவனங்கள் :

(i) தமிழ் நாட்டிலுள்ள பீடித் தயாரிப்பு நிறுவனத் தொழிலாளர்களின் பிரதிநிதித் தொழிற்சங்கங்கள், பல ஊதியம், அகவிலைப்படி, முதலிய வற்றை உயர்த்தக்கோரி 1985 ஏப்ரல் இறுதியில் புதிய கோரிக்கை மனுவை முன்வைத்தனர். சென்னை தொழிலாளர் நலத் தனி துணை ஆணையர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் அடுத்தடுத்துப் பேச்சுவார்த்தைகள் நடத் தினார். இறுதியாக (1) வட ஆற்காடு, (2) சென்னை, செங்கற்பட்டு, (3) திருச்சி வட்டாரங்கள் தொடர்பாக தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின் கீழ் 3—7—1985-ல் உடன்பாடுகள் கண்டார்.

இந்த உடன்பாடுகளின்படி 1,000 ஜாடி பீடிகள் சாதா பீடிகள் சுற்ற ரூ. 1.50 ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. சுற்றப்படுகின்ற 1,000 பீடிகளுக்கு ஊதியக் கொடை 10 காசு உயர்த்தப்பட்டது. இந்த உயர்வுகள் 10—7—1985 அன்றிலிருந்து வழங்கப்பட்ட மூலப் பொருட்களுக்கு பொருந்துவதாக இருந்தன.

(ii) இம்மாநிலத்திலுள்ள பீடித் தொழிலாளர்களின் பிரதிநிதித் தொழிற் சங்கங்கள் பல இந்திய உச்ச நீதி மன்றத்தின் உத்தரவுகளின்படி யும் பீடி-சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்ட விதித் துறை களின்படியும் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தை செயற்படுத்தக் கோரி, தொழிலாளர் நல ஆணையரிடம் முறையீடுகள் செய்தன. தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் பல்வேறு நாட்களில் பேச்சுவார்த்தைகள்



நடத்தி, இறுதியாக 23—12—1985-ல் ஓர் உடன்பாடு கண்டார். அதன் அடிப் படையில் இவர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிப்பு வெளி யிட்டார்.

8. தமிழ்நாடு சிறு தொழில் கழகம் (டான்சி), சென்னை:

பொதுவாக ஊதிய உடன்பாடு 1981-ல் முடிவுக்கு வந்ததையடுத்துத் தமிழ் நாட்டிலுள்ள டான்சி நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர் பிரதிநிதி தொழிற்சங்கங்கள் பல ஊதியம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி முதலியவற்றின் உயர்வு குறித்துக் கோரிக்கை மனு ஒன்றை முன்வைத்தன.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர், ஊரகத் தொழில் அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றன. அவர் களுடைய நன் முயற்சிகளின் பயனாக கருத்து வேறுபாடுகளும் கோரிக்கை களும் இவையென இனங் கண்டறியப்பட்டன. இதையடுத்து, தொழிலாளர் நல இணை ஆணையர் (நிர்வாகம்) முன்னிலையில் 10—6—1985-ல் இறுதி யாக இணக்கப் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. மாண்புமிகு அமைச்சர் களின் ஆலோசனையின் பேரில் தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்கீழ் உடன்பாடொன்று ஏற்பட்டது.

இந்த உடன்பாட்டின்படி, இம்மாநிலத்திலுள்ள, டான்சி உற்பத்திப் பிரிவுகள் 56-லும் பணியாற்றி வந்த 4,000 தொழிலாளர்கள் நன்மையடைந் தனர். அதாவது தொழிலாளர் ஒவ்வொருவருடைய மாத சம்பளமும் ரூ. 65 முதல் 100 வரை உயர்ந்தது. அது மட்டுமின்றி குடும்ப நல நிதித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற ரூ. 10,000, ரூ. 20,000 ஆக உயர்ந் துள்ளது.

9. தமிழ்நாடு சிமெண்ட்ஸ்:

தமிழ்நாடு சிமிட்டி நிறுவனத்தைச் சேர்ந்த அரியலூர் சிமிட்டி ஆலை, ஆலங்குளம் சிமிட்டி ஆலை, ஆலங்குளம், மாயனூர், தமிழ்நாடு ஆஸ்பெஸ் டாஸ் தொழிற் பிரிவுகள் ஆகியவற்றின் தொழிற் சங்கங்கள் 1984—85 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை விவகாரம் குறித்து வேலை நிறுத்த அறி விப்புக் கொடுத்தன. தொழிலாளர் நல தனித் துணை ஆணையர் இதில் தலையிட்டதின் பேரில், வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டு இரு தரப்பினருக் கிடையேயும் அவர் முன்னிலையில் 6—11—1985-ல் தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்கீழ் உடன்பாடொன்று காணப்பட்டது. 1984-85 ஆம் ஆண்டிற்கு குறைந்தபட்ச ஊதியக் கொடையாக 8.33 சத

வீதமும் ஒரு மொத்தத் தொகையாக ரூ. 550-ம் வழங்கப்பெறும் வகையில் உடன்பாட்டில் வழி காணப்பட்டது. இந்த உடன்பாட்டின் பயனாக 3,000 தொழிலாளர்கள் நன்மை அடைந்தனர்.

*10. தமிழ்நாடு மின்சார வாரியம்:*

தமிழ்நாடு மின்சார வாரியத்தைச் சேர்ந்த தொழிலாளர்களின் பிரதிநிதி தொழிற்சங்கங்களால் நிர்வாகத்திற்கு எதிராக ஊதிய விகிதம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி முதலானவற்றை உயர்த்தக் கோருவது உள்ளிட்ட பல கோரிக்கைகள் அடங்கிய தொழிற் தகராறு எழுப்பப்பட்டது. சென்னை தொழிலாளர் நல ஆணையர் இவ்விவகாரத்தில் ஈடுபட்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். சென்னை தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் 21—10—1985-ல் நடைபெற்ற இணக்கப் பேச்சு வார்த்தைகளின் விளைவாக தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்படி சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே ஓர் உடன்பாடு காணப்பட்டது. அதே நாளில், பணிச்சுமை அளவு நிர்ணயம் தொடர்பாகவும் தொழிலாளர் நல ஆணையர் முன்னிலையில் தொழிற் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்படி சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே தனியே ஓர் உடன்பாடு காணப் பட்டது. இந்த உடன்பாடுகளின் காரணமாக, இம்மாநிலம் முழுவதிலுமுள்ள சுமார் 82,000 தொழிலாளர்கள் நன்மை அடைந்தனர்.

*11. விம்கோ தீப்பெட்டி நிறுவனம், சென்னை:*

தி வெஸ்ட்டர்ன் இந்தியன் மேச் பேக்டரி தொழிலாளர்கள் தொழிற்சங்க மானது ஊதியம், அகவிலைப்படி உயர்வு, பணி நிலைமைகள் குறித்த கோரிக்கைகளுக்காக 24—4—1985-க்குப் பிறகு தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்போவதாக வேலை நிறுத்த அறிவிப்புக் கொடுத்தது. தொழிலாளர் நலத் தனித் துணை ஆணையாளர் முன்னிலையில் சமரச பேச்சு வார்த்தைகள் நடைபெற்றதின் பலனாக, தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்படி 14—10—1985-இல் உடன்பாடொன்று காணப் பட்டது. இந்த உடன்பாட்டினால், 720 தொழிலாளர்கள் பயன் அடைந்தனர். இதன் காரணமாக, நிரந்தர தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றிற்கு ரூ. 160 சம்பள உயர்வும், ஒட்டு மொத்தத் தொகை ரூ. 1,100-ம் பெறுகின்றனர். தொழிலாளர்களின் வாரிசுகள் 37 பேர் நிரந்தரமாக்கப்படவும், வகை செய்யப்பட்டுள்ளது.





*12. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகம், நெய்வேலி:*

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத் தொழிலாளர்கள் சார்பாக, பல்வேறு தொழிற்சங்கங்கள் 1984-85 ஆம் ஆண்டிற்கான ஊதியக் கொடை சம்பந்தமாக அவர்களுடைய நிருவாகத்திற்கெதிராக தொழில் தகராறு எழுப்பினர். அதையடுத்து சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்) சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். 1—11—1985 இல் நடைபெற்ற சமரசப் பேச்சு வார்த்தையின் போது 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12 (3) பிரிவின்படி, அவர் முன்னிலையில் ஓர் உடன்பாடு காணப்பட்டது. அதன்படி, தொழிலாளர் ஒவ்வொருவரும் 20 சதவீத ஊதியக் கொடை பெறுவர். நல்லெண்ணத்தின் அடையாளமாக, அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 260 இடைக்காலத் தொகை வழங்கப்படும். இந்த உடன்பாட்டின் விளைவாக சுமார் 12,000 தொழிலாளர்கள் பயன் அடைவர்.

*13. சென்னை ரப்பர் தொழிற்சாலை:*

சென்னையிலுள்ள, சென்னை ரப்பர் தொழிற்சாலை (திருவொற்றியூர்) பிரிவு நிருவாகத்தினர் தங்கள் நிறுவன தொழிலாளர்களின் தொழிற்சங்கம் முறையிடு செய்து கொண்ட தகராறைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு சுமூகமானதொரு தீர்வு காணும்படி சென்னை தொழிலாளர் நல ஆணையாளரை 16—5—1985 ஆம் நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக் கொண்டனர். அதன் பின்னர், தொழிலாளர் நல ஆணையாளர் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். 16—5—1985 இல் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் போது தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3) பிரிவின்படி இருதரப்பாரிடையேயும் அவர் முன்னிலையில் ஓர் உடன்பாடு காணப்பட்டது. இந்த உடன்பாட்டினால் சுமார் 961 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

*14. அரசு ரப்பர் கழகம், பாளியாறு கோட்டம், கன்னியாகுமரி மாவட்டம்:*

அரசு ரப்பர் தோட்டக் கழகத்தைச் சேர்ந்த நாகர்கோவில் பாளியாறு கோட்டத் தொழிலாளர்கள் வசூல்முனை ஏற்பாட்டை ரத்து செய்ததை ஆட்சேபித்தும், ஏனைய குறைகளைத் தீர்க்குமாறு வலியுறுத்தியும் 11—5—1985-லிருந்து வேலைநிறுத்தம் மேற்கொண்டனர். முதலில் நாகர்கோவில் தொழிலாளர்கள் நல உதவி ஆணையாளர் (இணக்கம்) இத் தகராறை பேச்சு வார்த்தைக்கு எடுத்துக்கொண்டார். அவருடைய நிலையில்

உடன்பாடு காண இயலாததால். அவர் தம்முடைய இணக்க அறிக்கையை 21—6—1985 இல் சமர்ப்பித்தார். திருநெல்வேலி தொழிலாளர் நலத் துணை ஆணையாளர் முன்னிலையில் தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தையும் தோல்வியுற்றதால், சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்) முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பல்வேறு தேதிகளில் விவாதம் நடைபெற்ற பிறகு, 22—8—1985 இல் 1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3) பிரிவின்கீழ் உடன்பாடொன்று ஏற்பட்டது. அந்த உடன்பாட்டின் வரையறைகளின்படி இரு தரப்பாரும் சேகரிப்பு நிலை குறித்த விவகாரம் பற்றிய நேரடிப் பேச்சு வார்த்தை நடத்த ஒப்புக்கொண்டனர். வேலை நிறுத்தம் 26—8—1985-இல் திரும்பப் பெறப்பட்டது.

15. சேஷசாயி காகித-அட்டைகள் தயாரிப்பு நிறுவனம், ஈரோடு:

(i) 1983-88 ஆண்டுகளுக்கான ஊதியக்கொடை தகராறு.

இந்நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர் பிரதிநிதி தொழிற்சங்கங்கள் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஊதியக்கொடை தொடர்பாக, தொழில் தகராறு ஒன்றைக் கிளப்பியது. தொழிலாளர் நல ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற சமரச பேச்சு வார்த்தைகளின் பலனாக 1983-84, 1984-85, 1985-86, 1986-87, 1987-88 ஆம் ஆண்டுகளுக்குரிய ஊதியக் கொடை தொடர்பாக, தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3) பிரிவின்கீழ் 28—12—1985 அன்று இரண்டு உடன்பாடுகள் காணப்பட்டன. உற்பத்தித் திறன் அடிப்படையில் ஊதியக் கொடை வழங்கவும், அந்த உடன்பாட்டில் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த உடன் பாட்டின் பயனாக 2,000 தொழிலாளர்கள் பயனடைந்தனர்.

(ii) ஊதியம், படிகள் :

பதவித் தரங்கள், அகவிலைப் படி உயர்வும் தளவாட செயல்பாட்டு சீரமைப்பு, ஊதியக் கொடை, வீட்டு வாடகைப் படி முதலானவற்றின் உயர்வு ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி 17—8—1984-லிருந்து அல்லது அதற்குப் பிறகு வேலை நிறுத்தம் மேற்கொள்வதாக சேஷசாயி காகித-அட்டைகள் தயாரிப்பு நிறுவனத் தொழிலாளர் பிரதிநிதி தொழிற் சங்கங்கள் அறிவிப்பு



கொடுத்தன. சேலம் தொழிலாளர் நல அதிகாரி, சேலம் தொழிலாளர் நலத் துணை ஆணையாளர், தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்), தொழிலாளர் நல ஆணையாளர் ஆகியோர் முன்னிலையில் பல்வேறு நாட்களில் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் பலனாக, வேலை நிறுத்தம் தவிர்க்கப்பட்டது. தொழிலர்ளர் நல ஆணையாளர் முன்னிலையில் 10—7—1985 இல் நடைபெற்ற இறுதிப் பேச்சு வார்த்தையின்போது தொழில் தகராறுகள் சட்டத்தைச் சேர்ந்த 12(3) பிரிவின்கீழ் ஓர் உடன்பாடு காணப்பட்டது. இதன் விளைவாக 2,090 தொழிலாளர்கள் பயனடைந்தனர். இந்த உடன்பாட்டின் மூலம் தொழிலாளர்களுக்கு ரூ. 76-க்குக் குறையாமல் ஊதிய உயர்வு அளிக்கப்பட்டது. சலுகை வீதங்களில் அவர்களுக்கு உணவு வசதிகளும், இலவச சீருடையும் அளிக்கப்பட்டன. இந்த உடன்பாடு ஐந்தாண்டுகளுக்குச் செயலில் இருக்கும்.

வழக்கு தொடருதல் :

1985 ஆம் ஆண்டிலும், இந்நாள் வரையிலும் பின்வரும் இனங்களில் வழக்குகள் தொடர அரசு அனுமதியளித்துள்ளது.

1. ஸ்ரீ ரங்காராஜ் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், சிதம்பரம்—தீர்ப்பைச் செயல்படுத்தாமை.

2. திருவாளர்கள் ஸ்ரீதேவி ப்ராடக்ஸ், சென்னை—தீர்ப்பைச் செயல்படுத்தாமை.

3. ஸ்பியர்ட் பேக்ட் எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை—உடன்பாட்டினைச் செயல்படுத்தாமை.

4. சி. எம். கணேசன் அண்ட் கம்பெனி, சென்னை—தீர்ப்பைச் செயல்படுத்தாமை.

5. கெண்ட் செராமிக்ஸ் டைல்ஸ் அண்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட், சென்னை—தீர்ப்புகளைச் செயல்படுத்தாமை.

6. திருவாளர்கள் ஸ்வீட் புட்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை—உடன்பாட்டினைச் செயல்படுத்தாமை.

[1986 மே 10

**முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி:**

பின்வரும் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் 1985 ஆம் ஆண்டிலும் இந் நாள் வரையிலும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு ஒப்புதலளித்துள்ளது.

| | நிறுவனத்தின் பெயர்கள். | தொழிலாளர்களின் எண்ணிக்கை. | ஒப்புதலளிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | ஸ்ரீஹரி மில், கோயம்புத்தூர் .. | 657 | 1,31,400 |
| 2 | இந்தியா போர்ஜ் அண்ட் டிராப் ஸ்டேம்பிங் எக்குப்மெண்ட்ஸ் லிமிடெட், சென்னை .. | 498 | 99,600 |
| 3 | வசந்தா மில்ஸ், கோயம்புத்தூர் .. | 1,351 | 2,70,200 |
| 4 | இராமகிருஷ்ணா இண்டஸ்டிரீஸ் பிரைவேட் லிமிடெட், கோயம் புத்தூர் .. .. .. | 400 | 80,000 |
| 5 | மினி சிமெண்ட் பேக்டரி, மதுவத் தூர், திருச்சி மாவட்டம் .. | 72 | 14,400 |

**மூடப்பட்ட தொழில் பிரிவுகளை மீண்டும் திறப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை:**

மூடப்பட்ட தொழில் பிரிவுகளின் தொழிலாளர்களுக்கு ரொக்க நிவாரணம் வழங்குவதைத் தவிர, இம்மாநிலத்தில் மூடப்பட்ட துணி ஆலைப் பிரிவுகளையும், ஏனைய தொழில் பிரிவுகளையும் மீண்டும் திறப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது.



1986 மே 10]

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தொழிலாளர் நிருவாகம், நிதியுதவி நிறுவனங்கள் ஆகியவற்றுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளுடன், பின்வரும் அரசு ஆணையாளர் செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டு அரசு 1986 ஆம் ஆண்டு ஜனவரியில் ஒரு குழுவை அமைத்துள்ளது.

1. அரசு ஆணையாளர்-செயலாளர், நிதித்துறை.
2. அரசு ஆணையாளர்-செயலாளர், தொழில் துறை.
3. அரசு ஆணையாளர்-செயலாளர், கைத்தறித் துணி கதர்த் துறை.
4. அரசு ஆணையாளர்-செயலாளர், தொழிலாளர் நலத்துறை.

மூடப்பட்ட பொறியியல் துணி ஆலைப் பிரிவுகளை மீண்டும் திறப்பதற்கான வாய்ப்புகளைக் கண்டறிவதற்காக இக்குழு விரைவாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

1947 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் அத்தியாயம் 5-பி இன் கீழ் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்கள்.

இந்த அத்தியாயத்தின்கீழ் தாக்கல் செய்யப்படும் விண்ணப்பங்களை விசாரித்து முடிவு செய்வதற்கான அதிகாரிகளாக பின்வரும் அதிகாரிகளை அரசு நியமித்துள்ளது:—

25-M (தற்காலிக தொழில் நிறுத்தம்):

இப்பிரிவின் செயல் நோக்கத்திற்காக தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்) அதிகாரியாவார்.

25-N (ஆட்குறைப்பு):

இப்பிரிவின் செயல் நோக்கத்திற்காக தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் அதிகாரியாவார்.

25-O (கதவடைப்பு):

ஆய்வு அதிகாரம், தீர்ப்புக்காக நடுவர் மன்றத்திற்குத் தெரிவிக்கும் அதிகாரம் ஆகியவை நீங்கலாக இப்பிரிவின்கீழ் மாநில அரசு செலுத்தத் தக்க அதிகாரங்கள் தொழிலாளர் நல ஆணையாளரும் செலுத்தத் தக்கதாகும் என்று தமிழ்நாடு அரசு கட்டளையிட்டுள்ளது.

[1986 மே 10

1985 ஆம் ஆண்டில் இவ்வதிகாரி பின்வரும் விண்ணப்பங்களை முடிவு செய்துள்ளார் :—

| விண்ணப்பங்களின் தன்மை. | வரப் பெற்ற விண்ணப் பங்களின் எண் ணிக்கை. | முடிவு செய்யப் பட்ட விண்ணப் பங்களின் எண் ணிக்கை. | முடிவு செய்யப் படாத விண்ணப் பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 25-M பிரிவின் கீழ் தற்காலிகமாகத் தொழிலை நிறுத்துவதற்கு அனுமதி கேட் கும் விண்ணப் பம். | 5 | 3 | (முறையே 8—1—86 அன்றும் 13—2—86 அன்றும் முடிவு செய்யப் பட்டன. |
| 25-N பிரிவின் கீழ் ஆட்குறைப்பு செய்வதற்கு அனுமதி கேட்கும் விண்ணப்பம். | 2 | 1+1* | இல்லை (* ஒரு விண்ணப்பம் திரும்பப் பெறப்பட்டது). |
| 25-O பிரிவின் கீழ் தொழில் கத வடைப்பு செய் வதற்கான அனு மதி கேட்கும் விண்ணப்பம். | 2 | 1 | 1 (இவ்விண்ணப் பம் 27—1—86 அன்று முடிவு செய்யப் பட்டது). |



1986 மே 10]

தொழிற் சங்கங்கள் :

1—1—85 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 4,104. இவ்வாண்டில் 532 தொழிற் சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டன. 313 தொழிற்சங்கங்கள் பதிவு ரத்து செய்யப்பட்டது. ரத்து செய்யப்பட்ட 8 தொழிற்சங்கங்களின் பதிவு திரும்ப அளிக்கப்பட்டது. இரண்டு தொழிற்சங்கங்கள் கலைக்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டு இறுதியில் இருந்த நிலவரப்படி, பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் சங்கங்களின் எண்ணிக்கை 4,329 ஆகும்.

சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம் :

தொழில் நிறுவனங்களில் நிருவாகத்திற்கும், அவர்களால் நியமிககப்பட்ட தொழிலாளர்களுக்குமிடையே சுமுகமான தொழிலுறவு தொடர்ந்து நிலவு வதையும், தொழிற்சாலையில் அமைதி நிலவுவதையும் ஊக்குவிக்கும் பொருட்டு, அரசு "சுமுகமான தொழிலுறவுக்குப் பரிசு வழங்கும் திட்டம்" என்று அழைக்கப்படும் திட்டம் ஒன்றை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வோராண்டும் பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுக்க தொழிலதிபர், தொழி லாளர் பிரதிநிதிகளுடன் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தலைமை யின் கீழ் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழு பரிந்துரைத்ததன் அடிப் படையில் 1981 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டு முதல் பரிசாக சுழற்கேடயம் ஒன்றையும், நிலையாக வைத்துக் கொள்ளக் கூடிய கேடயம் ஒன்றையும், இரண்டாம் பரிசாக, தகுதிச் சான்றிதழ் ஒன்றை யும், இதற்கென சென்னையில் 24—1—1984 அன்று நடத்தப்பட்ட விழாவில் 1982 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரியவர்களை அரசு தெரிந்தெடுத்து ஒப்புதலளித்துள்ளது. 1983, 1984 ஆம் ஆண்டுக்கு பரிசு பெறுவதற்குரிய வர்களைத் தெரிந்தெடுப்பதற்காக நிருவாகங்களும் தொழிற்சங்கங்களும் அனுப்பிய விண்ணப்பங்களை குழு பரிசீலித்து வருகிறது.

முக்கியமான ஆய்வுக் குழுக்கள் :

1. சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதைத் தடை செய்வது குறித்து ஹரிபாஸ்கர் குழு.

பல்வேறு நிறுவனங்களிலும் தொழிற்சாலைகளிலும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது பற்றிய பிரச்சினைகளை ஆய்ந்து ஆய்வு செய்வதற் காக முன்னாள் வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் திரு. ஹர்பன்சிங், ஐ.ஏ.எஸ். அவர்களை அரசு 1974 ஆம் ஆண்டில் நியமித்தது. திரு. ஹர்பன்சிங் ஐ.ஏ.எஸ். அவர்கள் தீப்பெட்டி தயாரிப்பு, பட்டாசு வாணவெடிகள் தயாரிப்பு

ஆகிய பல்வேறு தொழிற் சாலைகளைப் பார்வையிட்ட பின்னரும் அதிகாரிகள், பணியாளர்கள், தொழிற் சங்க பிரதிநிதிகள், சிறு குழந்தைகளின் பெற்றோர்கள் ஆகியோருடன் விரிவாக விவாதங்கள் நடத்திய பின்னரும் 1976 செப்டம்பரில் தன்னுடைய அறிக்கையை அளித்தார்.

இவ்வறிக்கை 8—2—1979 அன்று மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப்பட்டது. அக்கூட்டத்தில் சில முடிவுகள் எடுககப்பட்டன.

மாநில அமைச்சரவை முடிவுகளை சம்பந்தபட்ட துறைகள் எந்த அளவுக்குச் செயல்படுத்தியுள்ளன என்பதைக் கண்டறியும்பொருட்டு, அரசு நிலச் சீர்திருத்த ஆணையாளர் திரு. ஹரி பாஸ்கர், ஐ.ஏ.எஸ். அவர்களைத் தலைவராகவும் தொழிலாளர் நல இணை ஆணையாளர் (இணக்கம்) சமூக நலத் துறை கூடுதல் இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டும் தொழிலாளர் நலத்துறையின் 19—3—1984 ஆம் நாளிட்ட 618 ஆம் எண் அரசாணையில் குழு ஒன்றை அமைத்துள்ளது.

மேற்சொன்ன குழு, தொழிற்சாலைகளை நேரில் சென்று பார்வையிட்டு விசாரணை செய்த பின்னர் 31—7—85 அன்று அரசுக்கு தன்னுடைய அறிக்கையை அளித்தது. குழுவின் அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

2. தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கான துணைக்குழு :

25—4—1985 அன்று புதுடில்லியில் தோல் தொழிலாளர்களுக்கான முக்கூட்டு ஆய்வுக்குழு முதல் கூட்டத்தில் தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறைச் செயலாளர், விஞ்ஞானிகள், மையத் தோல் ஆராய்ச்சி தொழிற்சாலை, தொழிலதிபர்கள் பிரதிநிதி ஒருவர், தொழிலாளர்கள் பிரதிநிதி ஒருவர் ஆகியோர் அடங்கிய தமிழ் நாட்டுக்குழு தோல் தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றி கருத்தை அளிப்பதற்காக தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை விசாரணை செய்து பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை அனுப்ப வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

அதன்படி தோல் தொழிலாளர்களின் வேலை வாழ்க்கை நிலைமைகளை ஆய்ந்து ஆய்வு செய்வதற்காக மேற்சொன்ன உறுப்பினர்கள் அடங்கிய ஒரு துணைக்குழுவை தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறையின் 11—6—85 ஆம் நாளிட்ட 1173 ஆம் எண் அரசாணையில் நியமித்தது. மேற்சொன்ன துணைக்குழு தோல் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள பகுதிகளை பார்வை



யிட்டு விசாரணை செய்த பின்னர் அரசுக்கு தன்னுடைய அறிக்கையை அனுப்பியது. முக்கூட்டு ஆய்வுக்குழு. பரிசீலிப்பதற்காக அதன் முன் வைப்பதற்கு இவ்வறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அத்தியாயம் 4.

தொழிற்சாலைகள் நிருவாகம் :

1985 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் 12,562 தொழிற்சாலைகள் இருந்தன. 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் இறுதியில் 530 தொழிற்சாலைகள் நீக்கம் செய்யப்பட்டு, 979 தொழிற்சாலைகள் புதிதாகப் பதிவு செய்யப்பட்டதுடன் சேர்த்து தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 13,011 ஆக உயர்ந்தது. 31—12—1985 அன்றுள்ளவாறு இச்சட்டத்தின்கீழ் வரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 8,07,239 ஆகும்.

இச்சட்டத்தின்கீழ் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணங்கள், மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகளின் விவரங்கள் முறையே இணைப்புக்கள் 5, 6, 7-இல் தரப்பட்டுள்ளன.

கடைசியாக 1975 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட உரிமக் கட்டணம் திருத்தப்பட்டது. உயர்த்தப்பட்ட உரிமக் கட்டணம் 1986 ஆம் ஆண்டுக்காக வசூலிக்கப்பட்டது.

விபத்துக்கள்.

தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துக்களின் விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு. (1) | உயிரிழப்பு ஏற்பட்ட விபத்துக்கள். (2) | உயிரிழப்பு ஏற்படாத விபத்துக்கள். (3) |
|---|---|---|
| 1983 .. .. .. | 45 | 20,547 |
| 1984 .. .. .. | 46 | 15,638 |
| 1985 .. .. .. | 30 | 18,226 |

**அனைத்து நாட்டு தொழிலாளர் நல அமைப்புக்கள் :**

மத்திய அரசு தொழிலாளர் நலம் மறுவாழ்வு அமைச்சகம் தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறை ஆகியவற்றின் உடனுழைப்புடன் அனைத்து நாட்டு தொழிலாளர் நல அலுவலகம், பணி நிலைமை-சூழ்நிலையை மேம் படுத்துவதற்கான அனைத்து நாட்டு திட்டத்தின்கீழ் 1985 செப்டம்பரிலும் அக்டோபரிலும் சென்னையில் இரு பயிற்சி பணிகளைத் தொடங்கியது. சிறு நடுத்தர நிறுவனங்களிலும் பணி நிலைமையை உற்பத்தித் திறனையும் மேம் படுத்துவது குறித்து தீவிரமாகப் பயிற்சி அளிப்பதே இதன் முக்கிய பணி யாகும். இத்திட்டங்கள் சென்னையில் 1985 செப்டம்பர் 25 முதல் 1985 அக்டோபர் 17 வரை நடைபெற்றன. இவற்றில் உள்ளூரிலுள்ள மூன்று தொழில் பேட்டைகளிலிருந்து 29 பேர் பங்கு கொண்டனர். பயிற்சித் திட்டத் தின் பயன்களைப் பரப்பும் பொருட்டு, அக்டோபர் 15 முதல் 17 வரை குறுகிய பயிற்சி வகுப்பும் நடத்தப்பட்டது. இதில் தமிழ் நாட்டின் பல் வேறு பகுதிகளிலுள்ள தயாரிப்பு நிலையங்களிலிருந்து 45 பேர் பங்கு கொண்டனர். அனைத்து நாட்டு தொழிலாளர் நல அமைப்பு வல்லுநர் ஒருவர் மாவட்ட அளவிலான பயிற்சித் திட்டத்தை மதுரையில் 1986 ஜனவரி 20, 21 அன்றும் திருநெல்வேலியில் 23—1—1986 அன்றும் நடத்தினார். இதில் 26 பேர் பங்கு கொண்டனர்.

உரிமையாளர்கள்/தொழில் முனைவர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் பணிநிலைகளை ஆராயவும், மேம்பாடுகளைத் தெரிவிக்கவும், குறிப்பிட்ட காலத்திற்குள் அக்கருத்துக்களை மேற்கொள்ளவும் அவர்களுக்கு வழி காட்டிக் குறிப்புகள் அளிக்கப்பட்டது. இது சட்டத்தைச் செயற்படுத்தும் அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பணி நிலைமைகளையும், பாதுகாப்பையும் மேம்படுத்த அவர்களுக்கு உதவியுள்ளது.

**ஐக்கிய தேசிய மேம்பாட்டுத் திட்டம் :**

மத்திய அரசின் ஐக்கிய தேசிய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் பிரிவுகளில் பொதுவாக பணி நிலைமைகளை மேம்படுத்தவும், குறிப்பாக பாதுகாப்பு சுகாதார அளவை மேம்படுத்தவும், தொழிற்சாலை சுகாதாரத்தில் வசதிகளை அவர்களே செய்து கொள்ளுமாறு ஊக்குவிக்கவும் கருதப்படு கிறது.

மாநிலப் பாதுகாப்புப் பரிசுகள் ஷரம்வீர்.

நிருவாகிகள், தொழிலாளர்கள் ஆகிய இரு தரப்பினரின் நலனையும் பேணி வரும் வகையில் தொழிற்சாலைகளில் பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறந்த முறையில் நடைபெறுவதைப் பாராட்டுவதற்காக 1966 ஆம் ஆண்டில் கொண்டு



வரப்பட்ட மாநிலப் பாதுகாப்புப் பரிசு வழங்கும் முறை அண்மையில் சிறிது மாற்றியமைக்கப்பட்டுள்ளது. சுழற்கேடயம் வழங்கும் நடைமுறை நிறுத்தப் பட்டுள்ளது. பரிசு பெறுபவர்களுக்கு தற்போது தனித் தனியாக கேடயம் வழங்கப்படுகிறது. இவற்றை அவர்களே வைத்துக் கொள்ளலாம். இது தவிர, தொழிற்சாலையில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் உற்பத்தித் திறனையும் திறமையையும் அதிகரிப்பதற்கும், புதிய கண்டு பிடிப்புகளும், பணி முறைகளை மேம்படுத்தவும் கழிவுப் பொருள்களைக் குறைத்தல் முதலியவை குறித்தும் கருத்துத் தெரிவிக்கும் தொழிலாளர்களை ஊக்கு விக்கும் வகையில் அவர்களுக்குப் பாதுகாப்புப் பரிசுகளும் ஷரம்வீர் பரிசு களும் வழங்கப்படுகின்றன.

- 1982, 1983 சாதனை ஆண்டுகளுக்கு மாநில பாதுகாப்பு பரிசுகளுக்கும் ஷரம்வீர் பரிசுகளுக்கும் விண்ணப்பங்கள் வரப்பெற்று பரிசீலிக்கப்பட் டுள்ளன. பரிசுபெறும் தொழிற்சாலைகளுக்கும் பரிசு வழங்குவதற்கான விழா இவ்வாண்டில் நடைபெற உள்ளன.

பாதுகாப்புப் பிரிவுகளின் பணிகள் :

சென்னை, மதுரை, கோயம்பத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மூன்று பாது காப்பு பிரிவுகளும் தொழிற்சாலை ஆய்வாளர் ஒருவரால் நிருவகிக்கப்படு கிறது. பாதுகாப்புப் பிரிவுகளின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :—

1. விபத்து பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றைத் தொகுத்தல் ;

2. பாதுகாப்பு ஆய்வுகள், தொழில் சுகாதார ஆய்வுகள் நடத்துதல் ;

3. தீ, தூசு. நச்சு வாயு, புகை முதலியவற்றால் ஏற்படும் தனி அபாயங் களை ஆய்வு செய்தல்:

4. சிறப்பு வகை பாதுகாப்பு முறைகளை வடிவமைத்தல் ;

5. பாதுகாப்பு வகுப்புகளை நடத்துதல்.

6. சாதாரணமாகப் பயன்படுத்தும் எந்திரங்கள், நடைமுறைகள் குறித்து கையேடுகளை வெளியிடுதல் ;

7. தொழிற்சாலைகளிலிருந்து தொழில் கழிவுகள், வெளியேற்றப்படு வதால் ஏற்படும் சுற்றுப்புறத் தூய்மைக் கேடு, காற்றுத் தூய்மைக் கேடு தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து, அவை தீங்கு விளைவிக்காமலிருப்

பதற்கு வழிவகைகளை வகுத்தல், மூன்று பாதுகாப்புப் பிரிவுகளும் தொழிற்சாலை தலைமை ஆய்வாளரின் (சுகாதாரம்-பாதுகாப்பு) கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.

இப்பாதுகாப்பு பிரிவுகளுக்குத் தலைமை வகிக்கும் உயர்நிலைமையிலுள்ள அதிகாரிகள் திறம்பட இப்பிரிவுகளின் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள பாதுகாப்புப் பிரிவுகளின் தொழிற்சாலை ஆய்வாளர் பதவிகள் தொழிற்சாலைத் தலைமைத் துணை ஆய்வாளர் பதவிகளாக நிலை உயர்த்தப்பட்டன. மேற்சொன்ன பிரிவுகள் ஒவ்வொன்றிலும் உள்ள தொழிற்சாலை உதவி ஆய்வாளர் பதவி தொழிற்சாலை ஆய்வாளர் பதவியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள பாதுகாப்புப் பிரிவை தொழிற்சாலை ஆய்வாளர் ஒருவரும், தொழிற்சாலை உதவி ஆய்வாளர் ஒருவரும் துணைப் பணியாளர்களும் நிருவகித்து வருகின்றனர்.

பாதுகாப்புப் பிரிவுகள் தொழிற்சாலைப் பாதுகாப்பு குறித்து செய்திப் படங்களைத் திரையிடுவது, தவிர பாதுகாப்பு ஆய்வுகள் கருத்தரங்கு கலந்தாராய்வு ஆகியவற்றையும் நடத்துகின்றன. இவ்வாண்டில் 332 பாதுகாப்பு வகுப்புகள் நடத்தப்பட்டன. இதனால், 9,965 தொழிலாளர்கள் பயனடைந்தனர். அதிக விபத்துக்கள் தொழிற்சாலைகளில் நடைபெற்றதாகத் தெரிவிககப்பட்ட இவ்வாண்டில் 36 பாதுகாப்பு ஆய்வுகள் நடத்தப்பட்டன. ஆய்வுகளின் முடிவுகள் நிருவாகத்தினர் பின்பற்றுவதற்காக அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு வருகின்றன. தொழிற்சாலைப் பாதுகாப்புக் குறித்த காலாண்டு பத்திரிகையை பாதுகாப்பு பிரிவுகள் வெளியிட்டு வருகின்றன. தொழிலாளர்களுக்கும், நிருவாகத்தினருக்கும் பாதுகாப்புப்பற்றி எடுத்தியம்பும் பொருட்டு இப்பத்திரிகைகளில் பாதுகாப்பு, விபத்து பற்றிய விரிவான கட்டுரைகள் கருத்துப் படங்கள் ஆகியவை இடம் பெறுகின்றன.

உற்பத்தித் திறன் குழுவை ஏற்படுத்துதல்.

உற்பத்தித் திறன் 20 அம்சத் திட்டத்தின் கீழ் வரும் ஒரு முக்கிய அம்சமாக இருப்பதால் நாட்டில் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதில் இந்திய அரசு மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது.

இத்திட்டத்தைத் திறம்படச் செயற்படுத்துவதற்காகத் தொழிற்சாலைகள் தலைமை இணை ஆய்வாளர் (உற்பத்தித் திறன் குழு) பதவி ஏற்படுத்தப் பட்டுள்ளது.



ஆலோசனை நல்கும் அமைப்பான உற்பத்தித் திறன் குழு உற்பத்தித் திறனை மேம்படுத்தல் அதிக ஆதாரங்களை பயன் படுத்துதல், வீணாவதை நீக்குதல் கால ஆய்வு/இயக்க ஆய்வு நடத்துவதன் மூலம் பணி கோட்பாடுகளை வரையறுத்தல், வேலை பகுப்பாய்வு, வேலை பாதுகாப்பு பகுப்பாய்வு நடத்துதல், பரிசு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வருதல், தொழிலாளர்களுக்கும் மேற்பார்வையாளர்களுக்கும் முறையாகப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளைப் புரியும். இந்த ஆண்டில் அரசு இப்பிரிவுக்காக ரூ. 1.19 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

அழுத்தக் கருவிகளைச் சோதிக்கும் பிரிவு :

தொழிற்சாலைகளில் நிறுவப்பட்டுள்ள அழுத்தக் கருவிகள் கலன்கள் ஒவ்வொன்றும் தகுதி வாய்ந்த அதிகாரிகளால் முழுவதுமாக சோதனை செய்து, அவை செயல்படுவதற்குகந்த முறையில் நல்ல நிலையில் சான்றிதழ் வழங்க வேண்டுமென்று, 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டமும், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளும் வரையறுக்கின்றன. இதற்கு முன்னர் இந்த ஆய்வுகளையும் சோதனைகளையும், தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் (சுகாதாரம்-பாதுகாப்பு) தகுதி வாய்ந்தவர்களென சான்றளிக்கப்பட்டுள்ள தொழிற்சாலைப் பொறியாளர்களால் அல்லது வெளி முகவரமைப்புகளால் நடத்தப்பட்டன. அழுத்தக் கருவிகளை/கலன்களை ஆய்வு செய்து சோதனையிடும் இம்முக்கிய பணியை தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகத்தில் உள்ள தகுதி வாய்ந்த பொறியாளர்கள் மேற்கொள்ள வேண்டுமென்றும் அரசு தற்போது தீர்மானித்துள்ளதால் சென்னை வடக்கு, தெற்கு, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் அழுத்தக் கருவிகள் சோதிக்கும் பிரிவுகளை அரசு ஏற்படுத்தி, இப்பிரிவுகளை நிருவகிக்க தொழிற்சாலை தலைமை துணை ஆய்வாளர் நால்வரை நியமித்துள்ளது.

இம்மாநிலத்தில் சுமார் 5,409 அழுத்தக் கருவிக் கலன்கள் உள்ளன.

1985 ஆம் ஆண்டில் சோதனை செய்யப்பட்ட கலன்களின் எண்ணிக்கை வருமாறு—

| | |
|---|---|
| வெளியார் கலன்கள் | 3,159 |
| துறை கலன்கள் | 316 |
| நீர்மத்தின் அழுத்த ஆற்றல் | 6 |
| மொத்தம் | 3,481 |

மாநிலப் பாதுகாப்பு ஆய்வாளர் அலுவலகத்தில் தொழிற்சாலை சுகாதாரத் துப்புரவு சூழல் ஒருங்கிணைந்த பிரிவும், ஆய்வகமும்.

இம்மாநிலத்தில் தொழில் வழியாக ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், தடுக்கவும், 1971 ஆம் ஆண்டில் தொழிற் சாலை சுகாதார துப்புரவு சூழல் ஒருங்கிணைந்த பிரிவிற்கும், ஆய்வு கூடத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டது. இப்பிரிவு சென்னையில் செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு மாநில தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அபாயகரமான பணிகளில் ஈடுபட்டுள்ள அங்கொன்றும், இங்கொன்றுமான தொழிலாளர்களை ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனைக் கூடத்தில் ஆய்வு செய்வதற்காக தொழிலாளர்களிடமிருந்து ரத்தம், சிறுநீர் முதலியவற்றின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன; தொழில் வகையில் ஏற்படும் சுகாதாரக் கேடுகளை குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை ஆய்வு செய்வதற்கான பணியும் மேற்கொள்ளப்பட்டது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முறையான சிகிச்சை அளிப்பது குறித்தும், பணி புரியும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளை மேம்படுத்துவது குறித்தும், தொழில் வகையில் ஏற்படும் சுகாதாரக் கேடுகளைத் தவிர்ப்பதற்கு தொழிலாளர்கள் அனைவருக்கும் பாதுகாப்பு சாதனங்கள் வழங்க வேண்டிய அவசியம் குறித்தும் தேவையான அறிவுரையுடன், பரிசோதனைகளின் முடிவுகள் நிருவாகத்தினருக்கு அனுப்பப்பட்டன.

1985 ஆம் ஆண்டில், சுற்றுப்புறச் சூழல் குறித்து பின்வரும் ஆய்வு சென்னை, தலைமை மருத்துவ அதிகாரியால் (தொழிற் சாலைகள்) நடத்தப்பட்டது—

| | |
|---|---|
| 1. மைக்கோ ஃபாம் கெமிகலஸ் லிமிடெட், மேட்டூர் அணை. | தொழிற்சாலையில் பயன்படுத்தப்படும் குளோரின் பென்சேன் நைட்ரசன் சல்பைட், B.H.C. (திரவம்), B.H.C. (திட்டம்) ஆகியவை காணப்படும். பல்வேறு இடங்களிலிருந்து காற்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. |
| 2. சேஷசாயி பப்பர் வாரியங்கள் லிமிடெட், பள்ளிப்பாளையம், ஈரோடு. | தொழிற்சாலையிலிருந்து 17 காற்று மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. |
| 3. தாரங்கதார கெமிகல் ஒர்கஸ் லிமிடெட், சாகுபுரம். | சுற்றுப்புறச் சூழல் மருத்துவ ஆய்வும நடத்தப்பட்டு, அறுபகுறிய மாதிரிகளும சேகாிக்கபபட்டன. |



வடஆற்காடு மாவட்டத்தில் ஆரணியிலுள்ள பட்டுத் தொழிற்சாலைகள் சிலவற்றில சப்தம் பற்றிய ஆய்வு நடததபபட்டன. தொழிற்சாலைகளில் 39 இடங்களில் சப்தங்களின் அளவு கணக்கிடப்பட்டது.

தொழிலாளர் சுகாதார நலனிற்கான மருத்துவப் பிரிவு.

மதுரையில் இயங்கும் மருததுவப் பிரிவு தொழிலாளா்கள் செறிந்துள்ள பகுதிகளான பசுமலையில் ஒன்றும், செல்லூரில் ஒன்றும் என இரு சிறு மருந்தகங்களை கொண்டுளளது. இவை, அமைப்பு ரீதியின் கீழ் வராத தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதிகள் அளித்து வருகின்றன. இந்த ஆண்டில் இந்நிலையங்களில் 2,471 பேருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ அதிகாரிகள் (தொழிற்சாலைகள்).

தொழிற்சாலைகளில் பணிபுரிய இளைஞர்களுக்குத் தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்கும், குறிப்பிட்ட சில அபாயம் நிறைந்த பணிகள், பணி முறைகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களைச் சட்டத்தில் கோரப்பட்டுள்ள வாறு குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை மருத்துவப் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்குவதற்கும் சென்னை, வேலூர், சேலம், சிவகாசி, திருச்சி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் சான்றிதழ் வழங்கும் 6 அறுவை சிகிச்சை மருத்துவர்கள் பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

தொழிற்சாலைகளிலுள்ள மருத்துவ அதிகாரிகள், முனைப்பாக தங்களுடைய பணிகளை ஆற்ற ஏதுவான வகையில், அவர்களை தொழிற்சாலைகளின் கூடுதல் ஆய்வாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில், இம் மருத்துவ அதிகாரிகள், 4,030 தொழிலாளர்களை பரிசோதித்துள்ளனர். வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் ரூ. 57,702 ஆகும்.

[1986 மே 10

**இரசாயனத் தொழிற்சாலைகள் குறித்த பணிக்குழு.**

போபாலில் **நடைபெற்ற பெரு விபத்திற்கு** [illegible] அபாயம் விளைவிக்கக் கூடிய அபாயகரமான தொழிற்சாலைகளின் பாதுகாப்புக் கூறுகளை ஆய்வு செய்யுமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கோரியுள்ளது. மத்திய அரசு அளித்த வழிகாட்டுக் குறிப்புகளின் அடிப்படையில் தொழிலில் முறையல்லாத சுகாதாரக் கேடுகள் நிறைந்த தொழில்கள் குறித்தும் இரசாயனத் தொழிற்சாலைகளிலுள்ள பாதுகாப்பு; வழித் துறைகளை செயல்படுத்தவும், அபாயம் விளைவிக்கும் ஏனைய தொழில்கள், அதிகளவில் நச்சுப் பொருள் அடங்கிய பணிமுறைகள் குறித்தும், நாளது வரையிலான தகவல்களை அளிக்கும் பொருட்டு, தொழிற்சாலைகளின் தலைமை ஆய்வாளரான (நிருவாகம்—ஆய்வுகள்) திரு. எம். டி. தண்டபாணி அவர்களை உறுப்பினர்-செயலாளராகவும் கொண்டு சென்னை பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் டாக்டர் சாந்தப்பா அவர்கள் தலைமையின் கீழ் பணிக்குழு (உயர் அதிகாரக் குழு) ஒன்றை 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் மாநில அரசு அமைத்தது. மணலியிலும், அதற்கருகாமைப் பகுதிகளிலுமுள்ள இரசாயனத் தொழிற்சாலைகளை ஆய்வு செய்தது பற்றிய இடைக்கால அறிக்கையை பணிக்குழு 1985 ஆம் ஆண்டு செப்டம்பரில் அரசுக்கு அளித்தது. பணிக்குழுவின் பதவிக் காலம் 1986 ஆம் ஆண்டு மார்ச் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. பணிக்குழு, தங்களுடைய ஆய்வுப் பணியை முடித்து, முடிவான அறிக்கையை விரைவில் அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## அத்தியாயம் 5.

பயன்தரும் ஏனைய தொழிலாளர் நலச் சட்டங்களை செயல்படுத்துவது குறித்த விவரங்கள் இந்த அத்தியாயத்தில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன :—

**தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்—நிறுவனங்கள் சட்டம்.**

1985 ஆம் ஆண்டில் இச்சட்டத்தில் கீழ் செயல்பட்ட கடைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை, அவற்றின் பணியமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| இச்சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள் | 2,77,370 |
| **பணியமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை** | 2,74,000 |



1986 மே 10]

**நிரந்தர, தற்காலிக விதிவிலக்குகள்.**

இந்த ஆண்டில், தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள்-நிறுவனங்கள் சட்டம் செயல்படுவதிலிருந்து, ஓர் இனத்திற்கு நிரந்தரமாகவும்; 2 இனங்களுக்கு தற்காலிகமாகவும் (பொருட் காட்சிகள், திருவிழாக்கள் தவிர ஏனையவை) அரசு விதிவிலக்கு அளித்துள்ளது. தொழிலாளர் நல ஆணையாளர் பொருட்காட்சிகள், திருவிழாக்கள் உட்பட 28 தற்காலிக விதிவிலக்குகளை அளித்துள்ளார்.

தொழிலாளர் நலத் துணை ஆணையாளர், 71 இனங்களில் தற்காலிக விலக்களிப்பு அளித்தவுடன், 6 இனங்களில் இச்சட்டம் செயல்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் அனுமதி வழங்கியுள்ளார்.

இச்சட்டத்தின் 51 ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்று ஆண்டின் தொடக்கத்திலேயே நிலுவையாக இருந்தது. இந்த ஆண்டில் 2 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2 இனங்களில் தொழிலாளர் நல ஆணையாளர் ஆணைகளைப் பிறப்பித்துள்ளார். ஆண்டு இறுதியில் விண்ணப்பம் ஒன்று நிலுவையாகவுள்ளது.

இந்த ஆண்டில், இச்சட்டத்தின் விதித் துறைகள் "சேத்தியா தோப்பு" பேரூராட்சிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளன.

இச்சட்டத்தின் 41 ஆம் பிரிவின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடித்து வைக்கப்பட்ட இனங்கள் குறித்த விவரங்கள் முறையே 5, 7, 8 ஆம் எண்களுள்ள இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம்.**

இச்சட்டத்தின் கீழ், 1985 ஆம் ஆண்டில், 26,144 நிறுவனங்கள் இருந்தன. அவற்றில் 74,926 தொழிலாளர்கள், பணிபுரிந்தனர். ஆய்வு ஆண்டில், பதிவுக்கட்டணம்/புதுப்பித்தலுக்குரிய கட்டணம்/கூடுதல் கட்டணம் என்ற வகையில் 5,18,625.55 ரூபாய் கிடைத்தது.

இவ்வாண்டில், இச்சட்டத்தின் விதித்துறைகள் 'சேத்தியா தோப்பு' பேரூராட்சிக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடித்து வைக்கப் பட்ட மேல் முறையீடுகள் ஆகியவை பற்றிய விவரங்கள் 5, 7, 8 ஆம் இணைப் புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

விதிவிலக்குகள் :

குறிப்பிட்ட சில பதிவேடுகள், ஆவணங்கள் ஆகியவற்றை பராமரித்து வருவதில் இருந்து குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இச்சட்டத் தின் விதித்துறைகளிலிருந்து சென்னை-34, வருமான வரி—மத்திய ஆயத் தீர்வைத் துறைப் பணியாளர்கள் கூட்டுறவு சிற்றுண்டிச் சாலைக்கு அரசு இவ்வாண்டில் முற்றிலும் விலக்களித்துள்ளது. மேலும், சில நிபந்தனை களுக்குட்பட்டு, பல்லாவரம் ஓட்டல் உடுப்பி, ஸ்ரீ கிருஷ்ணா பவனுக்கும், சென்னை, வாலாஜா சாலை, அன்னபூர்ணா கேஃபிடீரியாவிற்கும் சில பதிவே டுகள், ஆவணங்கள் வைத்து வருவதிலிருந்து ஓரளவு அரசு இவ்வாண்டில் விலக்களித்துள்ளது.

**1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத்தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகள்.**

இம் மாநிலத்தில் பீடி, சுருட்டு தயாரிக்கும் தொழில் வளாகங்கள் 1,313 உள்ளன. இவற்றில், சுமார் 10,800 தொழிலாளர்கள் பணியில் அமர்த்தப்பட் டுள்ளனர். வணிகக் குறி உரிமையாளர்கள் 361 பேர் உள்ளனர். பீடித் தொழிலில் வீட்டில் தங்கி பணிபுரியும் சுமார் 2,00,000 தொழிலாளர்கள் பணி யில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மேற்கூறிய இக் கால அளவில் உரிமக் கட்டணமாக 37,680.00 ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளர்களால் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப் பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.



பீடித் தொழிலாளர் நலம்:

பீடித் தொழிலாளர்கள் நலனுக்காக மத்திய அரசு செஸ் வரி வசூலிக் கிறது. மேலும், நல நடவடிக்கைகளுக்காக அமைப்பு ஒன்றையும் ஏற் படுத்தியுள்ளது. இந்த அமைப்பு, இத்துறை அதிகாரிகளின் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் இவ்வாண்டில் தமிழ் நாட்டில் கீழ்க்காணும் நல நட வடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

வீட்டு வசதி :

இதுவரையில் வட ஆற்க்காடு மாவட்டம் வேலூருக்கு அருகே சத்துவாச் சாரியில் 150 வீடுகள் கட்டப்பட்டு, பீடித் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட் டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவல்பட்டியிலும், திருநெல்வேலி மாவட்டம் முக்கூடம், மேலப்பாளையம் ஆகிய இடங்களிலும், பெரியார் மாவட்டம் ஈரோட்டிலும் பீடித் தொழிலாளர்களுக்காக 150 வீடுகளைக் கட்டு வதற்குரிய செயற்குறிப்புகள் பரிசீலனையில் உள்ளன. இது குறித்து, வருவாய் துறை அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதாரம் :

முக்கூடலில் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டுதல் :

முக்கூடலில் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்காக நிலத்தைக் கையகப் படுத்துமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏற்கெனவே கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். இது பற்றி, வருவாய்த் துறை அதிகாரிகளுடன் கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சென்னை, குடியாத்தம் ஆகிய இடங்களிலுள்ள நிலையான மருத்தகங் களை இயங்கும்-நிலையான மருந்தகங்களாக மாற்றுவது குறித்து செயற் குறிப்புகள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன. இயங்கும்-நிலையான மருந்தகத்தை அமைக்க மேல்விஷாரத்தில் தகுந்த கட்டிடம் ஒன்றைப் பெறு மாறு வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரை ஹைதராபாத் தொழிலாளர் ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்மாநிலத்தில் தற்போதுள்ள அனைத்து மருத்துவ நிலையங்களும் பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தொடர்ந்து மருத்துவச் சிகிச்சை அளித்து வருகின்றன.

விரிவான சுகாதார பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ள மருத்துவ நிலையங்களும், பீடித் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் தொடர்ந்து மருத்துவ சிகிச்சை அளித்து வருகின்றன.

சென்னையில் 1-10-1985 ஆம் நாளன்று நடைபெற்ற பீடித் தொழிலாளர்கள் பற்றிய மாநில ஆலோசனைக்குழுக் கூட்டத்தின் பரிந்துரைகளையொட்டி திருச்சிராப்பள்ளி, வேலூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனைகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளுமாறு ஹைதராபாத், தொழிலாளர் நல ஆணையாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**படிப்புதவித் தொகைகள் :**

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு படிப்புதவித் தொகைகள் வழங்கிய வகையில் 3,88,806.50 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

1976 ஆம் ஆண்டு பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்காக மத்திய அரசு அமைத்த ஆலோசனைக்குழு சென்னையில் 1-10-1985 ஆம் நாளன்று கூடி, இம்மாநிலத்திலுள்ள பீடித் தொழிலாளர்களுக்குரிய நல நடவடிக்கைகளை அதிகரிப்பதற்குரிய பல்வேறு நடவடிக்கைகள் பற்றி விவாதித்தது.

**1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள்—பிற செய்தித்தாள் பணியாளர்கள் (பணி நிலைமைகள்—பல்வேறு விதித்துறைகள்) சட்டம்.**

இச்சட்டம் வெளியூர்களில் தொழிலாளர் நல ஆய்வாளர்களாலும், சென்னை மாநகரில் தொழிலாளர் நல (சென்னை) அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அதிகாரியாலும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இச்சட்டத்தின் கீழ் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகளின் எண்ணிக்கை 7 ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது,



**செய்தித்தாள் பணியாளர்களுக்காக 'பலேகர்' நடுவர் மன்றம் தெரிவித்த பரிந்துரைகளைச் செயல்படுத்துதல்.**

112 வெளியீடுகளை (செய்தித்தாள்கள்—பத்திரிக்கைகள்) 39 செய்தித்தாள் நிறுவனங்கள் 'பலேகர்' நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்தியுள்ளன. 'பலேகர்' பரிந்துரைகளைச் செயல்படுத்தாதற்காக சென்னை-4 "மதராஸ் லா ஜர்னல்" அலுவலகத்தின் நிர்வாகத்தினர் மீது வழக்குத் தொடர தொழிலாளர் நலத் துறையின் 23—9—1985 ஆம் நாளிட்ட 2047-ஆம் எண்ணுள்ள அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

உழைக்கும் பத்திரிக்கையாளர்களைப் பொறுத்தமட்டில் ஊதிய விதங்களை நிர்ணயிக்கவும், திருத்தியமைக்கவும் 'ஊதியக் குழு ஒன்றை' மத்திய அரசு அமைத்து மேற்கூறிய இக்குழுவின் தலைவராக மத்திய பிரதேச உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. யு. என். பச்சாவட் (Bachowat) அவர்களை நியமித்துள்ளது. (S.O. 527 E) நாள் 17—7—1985.)

**1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்.**

1961 ஆம் ஆண்டு மோட்டார் ஊர்திப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித்துறைகளும், இச்சட்டத்தின்கீழ் இயற்றப்பட்ட விதிகளும் இத்துறை அதிகாரிகளால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆய்வு ஆண்டில், 1,551 மோட்டார் ஊர்திப் போக்குவரத்து நிறுவனங்கள் உள்ளன. இவற்றில் 68,764 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இந்த ஆய்வு ஆண்டில் 98,085.38 ரூபாய் பதிவுக் கட்டணமாக வசூலிக்கப்பட்டது.

ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வுகள், விதித்துறைகளை மீறியவர்கள் மீது ஆய்வாளர்கள் தொடுத்த வழக்குகள் ஆகியவை பற்றிய விவரங்கள் 6, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

**விதிவிலக்கு :**

தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலதிபர்களுக்கு, மோட்டார் ஊர்திப் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டத்தின் விதித்துறைகள், இச்சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட விதிகள் ஆகியவற்றிலிருந்து 3 ஆண்டு காலத்திற்கு முற்றிலுமாக இந்த அறிக்கை ஆண்டில் விலக்களிக்கப்பட்டுள்ளது.

**1976 ஆம் ஆண்டு விற்பனை வளர்ச்சிப் பணியாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம்—**

மருந்தாக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்ட இச்சட்டம், சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆய்வாளர்களால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் :**

இந்த ஆண்டின் தொடக்கத்தில் 460 தோட்டங்கள் இருந்தன. இவற்றில், சுமார் 92,301 தொழிலாளர்கள் பணி புரிந்தனர். இவ்வாண்டில் 31 தோட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. இவற்றில் 1,030 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். 579 தொழிலாளர்கள் பணிபுரியும் 6 தோட்டங்கள் பட்டியலிருந்து நீக்கப்பட்டன. இவ்வாண்டின் இறுதியில் 485 தோட்டங்கள் பட்டியலில் இடம் பெற்றிருந்தன. 31—12—1985 ஆம் நாள் நிலவரப்படி தோட்டத் தொழிலாளர்களின் தோராயமான எண்ணிக்கை 92,752 ஆகும்.

சென்னை தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்) தோட்டங்களின் தலைமை ஆய்வாளராவார். இச்சட்டத்தின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதில் இவருக்கு உதவி புரிய தோட்ட ஆய்வாளர்கள் 7 பேர் உள்ளனர். அவர்களின் தலைமையிடங்கள் உதகமண்டலம், குன்னூர், கூடலூர், வால்பாறை, ஏர்க்காடு, திண்டுக்கல், நாகர்கோவில் ஆகிய இடங்களில் உள்ளன. இவைகளைத் தவிர, நாகர்கோவில், உதகமண்டலம் ஆகிய இரு இடங்களிலும் பணிபுரியும் மருத்துவர் இருவர் இச்சட்டத்தின் கீழ் மருத்துவ வசதி அளிப்பதோடு, தோட்டப் பகுதிகளிலுள்ள மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றையும் ஆய்வு செய்கின்றனர். இவ்வாண்டில் இம் மருத்துவ அதிகாரிகள், 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் சட்டத்தின் தொடர்புடைய விதித் துறைகளின் கீழ் வழக்கமான 441 ஆய்வுகளையும், 5 தனி ஆய்வுகளையும், 9 திடீர் ஆய்வுகளையும் மேற்கொண்டனர்.

இச்சட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் தொழிலாளர் நல நீதி மன்றம், தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர்கள் விதிகளில் விதி 51 (2)-ன் கீழ் தொடுக்கப்பட்ட நான்கு மனுக்களை முடித்து வைத்தது.



**தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனைக் குழு :**

அரசு, தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதி ஆலோசனைக் குழுவை, தொழிலாளர் நலத்துறை அரசு ஆணையாளர்-செயலாளர் தலைமையின்கீழ் 2—5—1985 ஆம் நாளன்று மாற்றி அமைத்தது. இக்குழுவின் முதல் கூட்டம் 27—5—85 ஆம் நாளன்று, உதகமண்டலத்தில் நடைபெற்றது. தோட்டத் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி அளித்தல், ஏனைய தொடர்புடைய வசதிகள் அளித்தல் ஆகியவைகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைபற்றி இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்காக வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவது குறித்த கருத்து பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேற்கொண்டும் பரிசீலனை செய்வதற்காக இக்குழுவிற்கு அவசியமான செயற்குறிப்புகளை அளிக்க இது பற்றி தொழிலாளர் நல இணை ஆணையாளர் (நிருவாகம்) ஆய்வு செய்து வருகிறார்.

**1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர்கள் (முறைப்படுத்தல்-நீக்குதல்) சட்டம் :**

இச்சட்டம், இம்மாநிலத்தில், தொழிலாளர் நல-தொழிற்சாலைகள் ஆய்வாளர் அலுவலகத்தால் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டில், இச்சட்டத்தின்கீழ், பதிவு செய்யும் அதிகாரிகள் 76 பேர்களை முதன்மைத் தொழிலதிபர்கள் என்று பதிவு செய்துள்ளனர். உரிமம் வழங்கும் அதிகாரிகள் 765 ஒப்பந்தக்காரர்களுக்கு உரிமங்களை வழங்கியுள்ளனர்.

இக்கால அளவில் 9,100 ரூபாய் பதிவுக் கட்டணமாகவும், 15,570.66 ரூபாய் உரிமக் கட்டணமாகவும் வசூலிக்கப்பட்டுள்ளன.

செய்யப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள், முடிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகியவை குறித்த விவரங்கள் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஆலோசனைக் குழு :**

1977 ஆம் ஆண்டு முதல் ஒப்பந்தத் தொழிலாளர் நல மாநில ஆலோசனைக் குழு செயல்பட்டு வருகிறது. இக் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் பல்வேறு தொழில்களில் உள்ள ஒப்பந்தத் தொழிலாளரை முறைப்படுத்த/நீக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த ஆய்வாண்டில் இக் குழு இரு முறை 8—7—85, 28—8—85 அன்று கூடியது.

மனலி, சென்னை உர நிறுவனத்தில் ஒப்பந்தத் தொழிலாளர் முறை இருப்பது பற்றி ஆராய ஏற்கெனவே அமைக்கப்பட்ட இராசயனத் தொழில் குறித்து துணைக் குழுவை மீண்டும் அமைக்க அரசு இந்த ஆண்டில் ஆணையிட்டுள்ளது.

**1946 ஆம் ஆண்டு தொழிற்சாலை வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டம் :**

1985 ஆம் ஆண்டில், சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள் 226 நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்குச் சான்றிதழ் வழங்கினர் ; 51 இனங்களில், நிலை ஆணைகளின் திருத்தங்களுக்குச் சான்றிதழ் வழங்கினர். இவ்வாண்டில் மேல் ஆணைகளின் திருத்தங்களுக்குச் சான்றிதழ் வழங்கினர். இவ்வாண்டில் மேல் முறையீட்டு அதிகார மன்றங்கள் என்ற முறையில் தொழிலாளர் நல நீதிமன்றம் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் 2 மேல் முறையீடுகள் மீது தீர்ப்பு வழங்கியது. இச் சட்டத்தின் 13-ஏ எனும் பிரிவின் கீழ் வரப்பெற்ற 3 மனுக்களின் மீது இந் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்தன.

**தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம் :**

இவ்வாண்டில், தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள், ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வுகள் ஆகியவை குறித்த விவரம் 5, 7 ஆகிய இணைப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ளது. இச்சட்டம், இத்துறையின் மூலம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாநிலத் தொழிலாளர் ஆலோசனை குழு தெரிவித்தபடி, தேர்தல் நாட்கள் அனைத்தையும் தேசிய விடுமுறை நாட்களாகச் சேர்க்க அரசு இச்சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வர இருக்கிறது.

**தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்கட்கு நிலையான அந்தஸ்து வழங்கல்) சட்டம் :**

இச்சட்டம், 24 திங்கள்களில் 480 நாட்கள் தொழிலாளர்கள் தொடர்ந்து பணியாற்றியிருந்தால் அவர்களுக்கு நிலையான அந்தஸ்து அளிக்க வகை செய்கிறது. இச்சட்டம், இம்மாநிலத்தில், தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும் 1—1—1982-லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் நிறுவன அதிபர்கள் சிலர் இச் சட்டத்தின் விதித்துறைகளை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு





தொடுத்தனர். மேற்சொன்ன சட்டத்தின் செயல் திறனைச் சரி என்று கூறி உயர்நீதி மன்றம் அந்த ரிட் மனுக்களுக்குத் தீர்ப்பளித்தது. அவ்வாறு தீர்ப்பளித்தபோது—

(a) தொழிற் பயிற்சி பெறுபவர்கள் பதிலிகள் (Badlies) ஆகியோருக்கு இச்சட்டம் பொருந்தாது என்றும்,

(b) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனை செயல் திறனற்றது என்றும் தெரிவித்தது.

இத்தீர்ப்புக்கெதிராக உச்சநீதிமன்றத்தில் அரசு மேல்முறையீடு செய்துள்ளது. உயர்நீதி மன்றம் 5918/82 ஆம் எண் ரிட் மனுவில் அளித்த தீர்ப்பினால் ஏற்பட்ட சில இடையூறுகளை நீக்கவும் தொழிலாளர்களுக்குப் பயன் ளிக்கவும் இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவை அரசு இவ்வாண்டில் திருத்தியுள்ளது.

**வீட்டு வாடகைப்படி வழங்க புதிய சட்டம் :**

மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக்குழு தெரிவித்தபடி. இங்குள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்க புதிய சட்டம் ஒன்றை விரைவில் அரசு கொண்டு வர இருக்கிறது.

## அத்தியாயம் VI—

### ஊதிய நிர்ணயச் சட்டங்கள்.

**1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் :**

1985-86 ஆம் ஆண்டில் அரசு கீழ்க்காணும் வேலைகளைப் பொறுத்த மட்டில் குறைந்த அளவு ஊதிய வீதத்தை திருத்தியமைத்துள்ளது :—

(1) யாதொரு மலைத் தோட்டத்தில் வேலை (தேயிலை, காப்பி, ரப்பர், சின்கோனா).

(2) தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலும், தோல் பொருள் தயாரிப்பிலும் வேலை.

(3) சலவை நிலையங்கள், துணி வெளுப்பு தொழிலில் வேலை (கம்பளி உட்பட).

(4) நார்ப்பொருள் தயாரிப்பில் வேலை.

(5) அரிசி, மாவு, பருப்பு ஆலைகளில் வேலை.

(6) மூக்குப்பொடி தயாரிப்புத் தொழிலில் வேலை.

(7) அச்சகத்தில் வேலை.

(8) செங்கல், ஓடு தயாரிப்புத் தொழிலில் வேலை.

பின்வரும் தொழில்களைப் பொறுத்தமட்டில் குறைந்த அளவு ஊதிய வீதங்களை அரசு முதல் தடவையாக நிர்ணயித்துள்ளது :—

(1) கொள்கலன்கள் (பாத்திரங்கள்) தயாரிப்புத் தொழிலில் வேலை.

(2) ஆட்டோ ரிக்ஷாக்கள் வாடகை மோட்டார் வண்டிகளில் வேலை.

பின்வரும் வேலைகளைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு ஊதிய வீதத்தை நிர்ணயித்தல், குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரைகள் பரிசிலனையில் உள்ளன :—

(1) அரசு மோட்டார் போக்குவரத்தில் வேலை.

(2) தேயிலைத் தொழிற்சாலையில் வேலை.

(3) பீடி சுற்றும் வேலை.

பின்வரும் வேலைகளைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு ஊதிய வீதத்தை நிர்ணயித்தல்/திருத்தியமைத்தல் ஆகியவற்றிற்காக குறைந்த அளவு ஊதிய ஆலோசனை குழுக்களை அமைப்பதற்கான செயற்குறிப்புக்கள் பரிசீலனையில் உள்ளன :—

(1) கழிவுப் பஞ்சாலையில் வேலை (நிர்ணயித்தல்).

(2) வனத் தொழிலில் வேலை (நிர்ணயித்தல்).

(3) டின் தயாரிப்புத் தொழிலில் வேலை (நிர்ணயித்தல்).

(4) கடைகள், வணிக நிறுவனங்களில் வேலை (திருத்தியமைத்தல்).

(5) காப்பி பதப்படுத்தும், தொழிலில் வேலை திருத்தியமைத்தல்).

(6) திரைப்படத் தொழிலில் வேலை (திருத்தியமைத்தல்).

(7) செயற்கை வைரம் அறுப்பதில் வேலை (திருத்தியமைத்தல்).

(8) திரைப்படத் தயாரிப்பு தொழிலில் வேலை (திருத்தியமைத்தல்).



கள் இறக்குதல், பதனீர் இறக்குதல் போன்ற வேலைகளைக் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் அட்டவணையில் அரசு சேர்த்துள்ளது. மேற்சொன்ன வேலைக்குக் குறைந்த அளவு ஊதிய வீதங்களை நிர்ணயிக்க இயலும். அமைப்பு ரீதியில் இராத மேலும் பல வேலைகளை 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் கீழ் கொண்டு வர அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கீழ்க்காணும் புதிய வேலைகளை மேற்படி சட்டத்தின் அட்டவணையில் சேர்க்கக் கருதியிருப்பது குறித்து அரசு தொடக்க அறிவிக்கை வெளியிட்டு அதற்கு மறுப்புரைகளையும் கருத்துக்களையும் கேட்டுள்ளது :—

1. கடல் வாழ் உயிரின் உணவுப் பொருள் தொழிலில் வேலை.

2. காலணி தயாரிப்புத் தொழிலில் வேலை.

3. இரசாயனத் தொழில், வடிசாலை ஆகியவற்றில் வேலை.

4. தோல் பொருள் தயாரிப்புத் தொழிலில் வேலை.

5. சோடா, கலர் தயாரிப்புத் தொழிலில், மதுபானம் தயாரிப்பு ஆலை ஆகியவற்றில் வேலை.

6. சேர்க்கை உறுப்புக்கள் உட்பட வானொலி தயாரிப்புத் தொழிலில் வேலை.

7. பாலிதீன் தயாரிப்பு, நரைப்பல் செய்முறைப்படுத்துதல், பிளாஸ்டிக் தயாரிப்புத் தொழில் ஆகியவற்றில் வேலை.

8. பேக்கரி, பிஸ்கட் தயாரிப்புத் தொழிலில் வேலை.

9. பட்டு இழை முறுக்கேற்றும் ஆலையில் வேலை.

வேளாண்மைத் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் 1983-இல் திருத்தியமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய வீதங்கள் இன்னும் நடைமுறையில் உள்ளன. தமிழ்நாட்டில் கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்தில் 11 வட்டங்கள் தவிர, ஏனைய எல்லாப் பகுதிகளிலும் இந்த ஊதிய வீதங்கள் நடைமுறையில் உள்ளன. மேற்படி 11 வட்டங்களில் தமிழ்நாடு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம் செயலில் இருக்கிறது. இந்த ஊதிய வீதங்களை மேலும் திருத்தியமைப்பது குறித்து விசாரித்து ஆலோசனை கூற ஒரு குழுவை அமைக்க அரசு கருதியுள்ளது. வேளாண்மைத் துறையில் குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தை வருவாய் நிருவாகத்தினர் செயல்படுத்துகின்றனர். 1985 இல் ஆய்வாளர்கள் 7,664 தடவை சோதனை நடத்தியுள்ளனர். 557 கோரிக்கைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

[1986 மே 10

தமிழ்நாடு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டத்தின் படிக்கான குறைந்தளவு ஊதியவிதங்கள் 1985 ஜூன் மாதத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. நியாய ஊதியச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக குறைந்தளவு ஊதியங்கள் அறிவிக்கையைக் கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலும் கொண்டு வரத் திட்டமிடப்படுகிறது.

இந்த ஆண்டில் குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனைக் குழு இருமுறை 11—3—1985, 7—8—1985 ஆம் நாளில் கூடியது.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி அதிகாரிகள் என்ற முறையில் தொழிலாளர் நல நீதிமன்றங்களில் நீதிபதிகள் குறைந்த அளவு ஊதியம் வழங்க வேண்டுமெனக் கோரி 1985 இல் வரப்பெற்ற 5 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பளித்தனர்.

தொழிலாளர் நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்குப் பதிலாக தொழிலாளர் நல துணை ஆணையாளர்களை (பணியாளர் இழப்பீட்டு ஆணையாளர்) குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படிக்கான அதிகாரிகளாக அரசு இப்போது அறிவிக்கை வெளியிட்டு தொழிலாளர் நலத் துறையின் 9—1—1986 ஆம் நாளிட்ட 82 ஆம் எண் ஆணையில் உத்தரவிட்டுள்ளது. மத்திய அரசின் கீழ் வரும் வேலைகளுக்கும் இது போன்ற அறிவிக்கை அரசு வெளியிட்டுள்ளது. மேற்சொன்ன அரசாணையில் 3 ஆம் எண் அறிவிக்கையை காண்க. இதனால் அட்டவணையிடப்பட்ட வேலையில் உள்ள தொழிலாளர்கள் 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்படி தங்களுக்குச் சேர வேண்டிய ஊதியத்தைக் கேட்டுப்பெற உரிமை கோரிக்கை அதிகார மன்றங்களை எளிதில் அணுக முடியும்.

### திருத்தங்கள்.

தொகையைப் பிடித்தம் செய்வதற்கான நடைமுறையை எளிமைப்படுத்த 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான புதிய சட்ட முன்வடிவு.

தற்போது அதிகாரிகள் மாஜிஸ்டிரேட் விதித்துள்ள அபராதத்தைப் போலவே தொகையை பிடித்தம் செய்யுமாறு சம்பந்தப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு விண்ணப்பம் செய்து கொள்கின்றனர். மாஜிஸ்ட்ரேட்டுக்கள் சிலர் அவ்வாறு நேரடியாக தொகையை பிடித்தம் செய்வதற்குப் பதிலாக அந்த இனத்தின் தகுதிகளையும் விசாரிக்கின்றனர். இதனால் தான் இத் திருத்தம் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



1986 மே 10]

28—1—1986 அன்று மாநிலச் சட்டப் பேரவையில் சட்ட முன்வடிவு வரப்பட்டு அதன்மூலம் தமிழ்நாட்டுக்குப் பொருந்துகிற 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டத்தின் 15 ஆம் பிரிவு திருத்தப்பட்டுள்ளது. இத் திருத்தத்தின் பயனாக இச்சட்டத்தின் கீழ் உத்திரவிடப்பட்ட தொகைகளை நிலவரி பாக்கியைப் போலவே வசூலிக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு சான்றிதழ் வழங்க ஊதியம் வழங்கல் அதிகாரிகள் (தொழிலாளர் நலத்துறை ஆணையர்) அதிகாரம் பெறுகின்றனர்.

இச்சட்ட முன்வடிவு மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு குடியரசு தலைவரின் இசைவு பெறவிருக்கிறது.

### வணிக நிறுவனங்களுக்கு இச்சட்டத்தை நீட்டித்தல்:

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் 2(3) பிரிவில் கூறியுள்ளபடி 20 பேரும் அதற்கு மேலும் வேலைக்கு அமர்த்தியுள்ள வணிக நிறுவனங்கள் இச்சட்டத்தின் வரம்பின் கீழ் கொண்டு வந்து 24—1—1986 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணையை அரசு பிறப்பித்துள்ளது.

### 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம் :

இச்சட்டம், தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும், ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும் செயல்படுத்தப் படுகிறது.

நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரம் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் :

தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் போது, அவர்களுக்கு தொழிற்சாலை நிருவாகத்தினர் வாழ்க்கைப்படி வழங்குவதை இச்சட்டம் கட்டாயமாக்குகிறது.

வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தில் 4 ஆம் பிரிவின்படி இவ்வாண்டு தொடக்கத்தில் வாழ்க்கைப்படி வழங்கக் கோரி வரப்பெற்ற 130 கோரிக்கை மனுக்கள் குறித்து முடிவு செய்யப்படாமல் இருந்தன. இவ்வாண்டில்

தமிழ்நாடு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டத்தின்படிக்கான குறைந்தளவு ஊதியவிதங்கள் 1985 ஜூன் மாதத்தில் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. நியாய ஊதியச் சட்டத்தை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாக குறைந்தளவு ஊதியங்கள் அறிவிக்கையைக் கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்திலும் கொண்டு வரத் திட்டமிடப்படுகிறது.

இந்த ஆண்டில் குறைந்த அளவு ஊதியங்கள் (மாநில) ஆலோசனைக் குழு இருமுறை 11—3—1985, 7—8—1985 ஆம் நாளில் கூடியது.

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி அதிகாரிகள் என்ற முறையில் தொழிலாளர் நல நீதிமன்றங்களில் நீதிபதிகள் குறைந்த அளவு ஊதியம் வழங்க வேண்டுமெனக் கோரி 1985 இல் வரப்பெற்ற 5 மனுக்களை விசாரணை செய்து தீர்ப்பளித்தனர்.

தொழிலாளர் நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்குப் பதிலாக தொழிலாளர் நல துணை ஆணையாளர்களை (பணியாளர் இழப்பீட்டு ஆணையாளர்) குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படிக்கான அதிகாரிகளாக அரசு இப்போது அறிவிக்கை வெளியிட்டு தொழிலாளர் நலத் துறையின் 9—1—1986 ஆம் நாளிட்ட 82 ஆம் எண் ஆணையில் உத்தரவிட்டுள்ளது. மத்திய அரசின் கீழ் வரும் வேலைகளுக்கும் இது போன்ற அறிவிக்கை அரசு வெளியிட்டுள்ளது. மேற்சொன்ன அரசாணையில் 3 ஆம் எண் அறிவிக்கையை காண்க. இதனால் அட்டவணையிடப்பட்ட வேலையில் உள்ள தொழிலாளர்கள் 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின்படி தங்களுக்குச் சேர வேண்டிய ஊதியத்தைக் கேட்டுப்பெற உரிமை கோரிக்கை அதிகார மன்றங்களை எளிதில் அணுக முடியும்.

### திருத்தங்கள்.

தொகையைப் பிடித்தம் செய்வதற்கான நடைமுறையை எளிமைப்படுத்த 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கான புதிய சட்ட முன்வடிவு.

தற்போது அதிகாரிகள் மாஜிஸ்டிரேட் விதித்துள்ள அபராதத்தைப் போலவே தொகையை பிடித்தம் செய்யுமாறு சம்பந்தப்பட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்கு விண்ணப்பம் செய்து கொள்கின்றனர். மாஜிஸ்ட்ரேட்டுக்கள் சிலர் அவ்வாறு நேரடியாக தொகையை பிடித்தம் செய்வதற்குப் பதிலாக அந்த இனத்தின் தகுதிகளையும் விசாரிக்கின்றனர். இதனால் தான் இத்திருத்தம் கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



28—1—1986 அன்று மாநிலச் சட்டப் பேரவையில் சட்ட முன்வடிவு வரப்பட்டு அதன்மூலம் தமிழ்நாட்டுக்குப் பொருந்துகிற 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கும் சட்டத்தின் 15 ஆம் பிரிவு திருத்தப்பட்டுள்ளது. இத்திருத்தத்தின் பயனாக இச்சட்டத்தின் கீழ் உத்திரவிடப்பட்ட தொகைகளை நிலவரி பாக்கியைப் போலவே வசூலிக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு சான்றிதழ் வழங்க ஊதியம் வழங்கல் அதிகாரிகள் (தொழிலாளர் நலத்துறை ஆணையர்) அதிகாரம் பெறுகின்றனர்.

இச்சட்ட முன்வடிவு மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு குடியரசு தலைவரின் இசைவு பெறவிருக்கிறது.

### வணிக நிறுவனங்களுக்கு இச்சட்டத்தை நீட்டித்தல்:

1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள், நிறுவனங்கள் சட்டத்தின் 2(3) பிரிவில் கூறியுள்ளபடி 20 பேரும் அதற்கு மேலும் வேலைக்கு அமர்த்தியுள்ள வணிக நிறுவனங்கள் இச்சட்டத்தின் வரம்பின் கீழ் கொண்டு வந்து 24—1—1986 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணையை அரசு பிறப்பித்துள்ளது.

### 1936 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம் :

இச்சட்டம், தொழிற்சாலைகளைப் பொறுத்தமட்டில், தொழிற்சாலை ஆய்வாளர் அலுவலகத்தாலும், ஏனைய தொழில் நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் நல ஆய்வாளர் அலுவலகத்தாலும் செயல்படுத்தப்படுகிறது.

நடத்தப்பட்ட ஆய்வுகள், தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய விவரம் 5, 7 ஆம் இணைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் :

தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் போது, அவர்களுக்கு தொழிற்சாலை நிருவாகத்தினர் வாழ்க்கைப்படி வழங்குவதை இச்சட்டம் கட்டாயமாக்குகிறது.

வாழ்க்கைப்படி வழங்கல் சட்டத்தில் 4 ஆம் பிரிவின்படி இவ்வாண்டு தொடக்கத்தில் வாழ்க்கைப்படி வழங்கக் கோரி வரப்பெற்ற 130 கோரிக்கை மனுக்கள் குறித்து முடிவு செய்யப்படாமல் இருந்தன. இவ்வாண்டில்

அத்தகைய 272 மனுக்கள் துறை அலுவலர்களால் பெறப்பட்டன. இவற்றுள் 266 மனுக்கள் குறித்து முடிவு செய்யப்பட்டது. இவ்வாண்டின் இறுதி நிலவரப்படி 143 மனுக்கள் குறித்து முடிவு செய்யப்படவில்லை.

மேற்படி சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி அதிகாரி பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்து கொள்ள வகை செய்து தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கல் விதிகளை அரசு திருத்தியுள்ளது. மேல்முறையீட்டு மனுவின்மீது அதிகாரி பிறப்பித்த உத்தரவால் பாதிக்கப்பட்டவர் இரண்டாவது மேல்முறையீட்டை அரசுக்கு கொடுக்கவும் இந்த விதிகள் வகை செய்கின்றன. இந்த விதிகளுக்கிணங்க தொழிலாளர் நல துணை ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள தொழிலாளர் நல உதவி ஆணையாளர்களை 7 ஆம் பிரிவின்படிக்கான அதிகாரியாக அறிவித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், தொழிலாளர் நல உதவி ஆணையாளரின் ஆணையை எதிர்த்து செய்து கொள்ளப்படும் மேல்முறையீடுகளை விசாரிக்க தொழிலாளர் நல துணை அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 7.

## சமூகப் பாதுகாப்பு.

**1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித்துறைகள் சட்டம்:**

இச்சட்டத்தின் விதித்துறைகள் 1985 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி 173 தொழிற்சாலைகளுக்கு அல்லது குறிப்பிட்ட வகைத் தொழில் நிறுவனங்களுக்குப் பொருந்துமாறு செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் விதித்துறைகளின்படி வருங்கால வைப்புநிதி, குடும்ப ஓய்வூதியம், காப்புறுதி ஆகியவற்றிற்காக மூன்று திட்டங்கள் செயலில் உள்ளன.

இந்த ஆண்டில், இச்சட்டம் புதிய தொழில்கள் எதற்கும் நீட்டிக்கப்படவில்லை.





**நிறுவனங்களையும், சந்தாதாரர்களையும் இத்திட்டத்தின் கீழ் கொணருதல்:**

1985 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இச்சட்டத்தின் கீழ் கொணரப்பட்ட நிறுவனங்கள், சந்தாதாரர்கள் ஆகியோர் தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | விலக்களிக்கப் பட்டவை. | விலக்களிக்கப் படாதவை. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| நிறுவனங்களின் எண்ணிக்கை. | 414 | 18,120 | 18,534 |
| சந்தாதாரர்களின் எண்ணிக்கை, (தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி). | 3,41,676 | 12,73,006 | 16,14,682 |

**1971 ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதிய திட்டத்தின் கீழ்வரும் சந்தாதாரர்கள்.**

1985 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிவரை இத்திட்டத்தின் கீழ் வந்துள்ள சந்தாதாரர்களின் எண்ணிக்கை—12,14,510 ஆகும்.

**1976 ஆம் ஆண்டு பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித் திட்டத்தின்கீழ் உறுப்பினராதல்.**

1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை நிதித்துறைகள் சட்டத்தின் கீழ் வருகின்ற தொழிற்சாலைகள் அல்லது வகை நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் இத்திட்டத்தில் தாமாகவே 1—8—1976 முதல் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தொழிலதிபர் தான் வேலைக்கமர்த்தியுள்ள ஒவ்வொரு பணியாளருக்கும் அவருடைய அடிப்படை ஊதியம், அகவிலைப்படி, வேலையில் வைத்துக் கொள்வதற்கானபடி ஏதேனும்) ஆகியவற்றில் 0.5 சதவீதத்தை சந்தா தொகையாகக் கொடுக்க வேண்டும். பணியாளர் இந்த நிதித்தொகை எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

ஆயினும், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தில் கூட்டு காப்புறுதித் திட்டத்தின் மூலம் கூடுதல் பயன்பெறும் ஏற்பாட்டைத் தொழிலதிபர்கள் செய்திருக்கும் போழுது, அவர்கள் பணியாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதித்

திட்டத்தில் சேருவதிலிருந்து மேற்படி சட்டத்தின் 17 (2)(எ) பிரிவின்படி விலக்களிக்கப்படுகிறது. இதுவரை 56,134 பணியாளர்கள் சம்பந்தப்பட்ட 166 நிறுவனங்களுக்கு இந்த விலக்களிக்கப்பட்டுள்ளது.

**கேட்பு, வசூல், நிலுவை :**

மேற்சொன்ன மூன்று திட்டங்களின் கீழ் 1985 ஆம் ஆண்டிற்கான கேட்பு, வசூல், நிலுவை விவரம் வருமாறு :

| | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. | தொழிலாளர் குடும்ப ஓய்வூதியம். | தொழிலாளர் வைப்பீட்டுடன் இணைந்த காப்புறுதி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்). | | |
| கேட்பு .. .. | 7,725.71 | 1,331.42 | 275.37 |
| வசூல் .. .. | 7,256.33 | 1,299.11 | 264.81 |
| நிலுவை .. | 469.38 | 32.31 | 10.56 |

மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகையில் பெரும் பகுதி பின்வரும் வகைத் தொழில் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படாது முடங்கிக் கிடக்கின்றன :—

| | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி. (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1. தேசிய துணி ஆலை நிறுவனம் மேற்கொண்ட நலிந்த துணி ஆலைகளைப் பொறுத்த மட்டில் நிலுவைகள். | 57.1[illegible] |
| 2. மேற்கூறிய திட்டம் பொருந்துவதை எதிர்த்து ரிட் மனுக்களைத் தாக்கல் செய்து, தடையாணை பெற்றுள்ள நிறுவனங்கள். | 82.9[illegible] |
| 3. கலைக்கப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள் | 100.74 |
| 4. மூடப்படும் நிலையிலுள்ள நிறுவனங்கள் | 37.0[illegible] |
| மொத்தம் | 277.9[illegible] |



நாட்டுடைமையாக்கப்பட்ட ஆலைகளிடமிருந்து அவை நாட்டுடைமையாவதற்கு முன்பிருந்த காலத்திற்குரிய நிலுவைத் தொகையை வசூலிப்பது பற்றி மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

பணியாளர் வருங்கால வைப்பு நிதி கணக்கு 1-ல் மிகுதியாக உள்ள ரூ. 191.48 இலட்சத்தில் வசூலிக்க சட்ட திட்டங்களில் வகை செய்துள்ள தண்டனை விதித்துறைகளை கைகொண்டு வரி வசூல் சான்றிதழ்களை பிறப்பித்தும், நீதிமன்றங்களில் குற்றங்களைத் தாக்கல் செய்தும் திறம்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பணியாளர்கள் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை முடித்து தொகை கொடுத்து தீர்த்தல்.**

1985 ஆம் ஆண்டில் 57,128 இனங்களைப் பொறுத்த மட்டில் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளை இறுதியாக்கித் தொகை வழங்கித் தீர்ப்பது தொடர்பான 3,037.12 இலட்ச ரூபாய் வழங்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகள், தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை, திருப்பி அனுப்பப்பட்டவை, தொகை கொடுத்து தீர்க்கப்படாமலுள்ள உரிமை கோரிக்கைகள் ஆகியவை குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| (அ) 31—12—1984 ஆம் நாள் நிலவரப்படி தொகை கொடுத்து தீர்க்கப்படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 5,425 |
| (ஆ) 1985 ஆம் ஆண்டில் வரப்பெற்ற உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 71,274 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட வேண்டியிருந்த உரிமைக் கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கை. | 76,699 |
| (ஈ) 1985 ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமை கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 57,128 |
| (உ) குறைபாடுகளைச் சரி செய்வதற்காகத் திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 14,806 |

| | |
|---|---|
| (ஊ) 31—12—1985 ஆம் நாள் நிலவரப்படி தீர்க்கப் படாமலிருந்த உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,765 |

1985 ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் பற்றிய பகுப்பாய்வு :

| | எண்ணிக்கை. |
|---|---|
| (அ) இறப்பு | 2,944 |
| (ஆ) வயது முதிர்வு பெற்றமை | 7,540 |
| (இ) நிரந்தரமாக இயலாமையுற்றது | 396 |
| (ஈ) பதவியை விட்டு விலகியது | 40,103 |
| (உ) ஆட்குறைப்புச் செய்யப்பட்டது | 5,334 |
| (ஊ) இடம் பெயர்தல் | .... |
| (எ) பணியிலிருந்து நீக்கப்பட்டது | 55 |
| (ஏ) பல்வகை | 756 |
| மொத்தம் | 57,128 |

1971-ஆம் ஆண்டு தொழிலாளர் குடும்ப நல ஓய்வூதிய திட்டத்தின்கீழ் தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்டவை :—

| | |
|---|---|
| (அ) 31—12—1984-ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப் பெறாமலிருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 5,890 |
| (ஆ) 1985-ஆம் ஆண்டு வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 33,289 |
| (இ) தொகை கொடுத்துத் தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 39,179 |
| (ஈ) 1985-ஆம் ஆண்டு தொகை கொடுத்துத் தீர்க்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 23,121 |



| | |
|---|---|
| (உ) குறைபாடுகளை சரிசெய்து அனுப்பி வைக்குமாறு கூறி திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக் கைகளின் எண்ணிக்கை. | 10,354 |
| (ஊ) 31—12—1985 ஆம் நாள் நிலவரப்படி முடிவுறா மல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 5,704 |

1985 ஆம் ஆண்டில் தொகை கொடுத்து தீர்க்கப்பட்ட 46,561 கோரிக்கை களுக்காக வழங்கப்பட்ட தொகை ரூ. 1,41.61 இலட்சமாகும்.

1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் நாள் நிலவரப்படி ஓய்வூதியம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 1,715 ஆகும்.

197P ஆம் ஆண்டு தொழிலாளர்கள் வைப்பீட்டுத் தொகை இணைந்த ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் தொகை கொடுத்து தீர்க்கப்பட்டவை :

| | |
|---|---|
| (அ) 31—12—1984-ஆம் நாள் நிலவரப்படி முடிக்கப் படாமல் இருந்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 775 |
| (ஆ) 1985-ஆம் ஆண்டில் வரப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,102 |
| (இ) தொகை கொடுத்து தீர்க்கப்பட உள்ள மொத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 4,877 |
| (ஈ) 1985-ஆம் ஆண்டில் தொகை கொடுத்துத் தீர்க்கப் பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,170 |
| (உ) திருப்பி அனுப்பப்பட்ட உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை. | 2,146 |
| (ஊ) 31—12—1985-ஆம் நாள் நிலவரப்படி நட வடிக்கை எடுக்காமல் நிலுவையாக இருந்த உரிமைக் கோரிக்கை மனுக்களின் எண்ணிக்கை. | 561 |

தொகை கொடுத்துத் தீர்க்கப்பட்ட கோரிக்கைகளைப் பொறுத்தமட்டில் வழங்கப்பட்ட தொகை ரூ. 1,15,44 இலட்சமாகும்.

முன்பணங்கள் :

89,980 இனங்களைப் பொறுத்தமட்டில், சந்தாதாரர்களுக்கு மொத்தம் ரூ. 15.48 கோடி முன்பணமாக வழங்கப்பட்டது.

1985-ஆம் ஆண்டில் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணங்கள் பற்றிய விவரங்கள் அட்டவணை 9-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1985-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் நாளன்று உள்ளபடி பொதுத் துறை நிறுவனங்களில் 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்-பல்வகை விதித்துறைகள் சட்டத்தைச் செயல்படுத்துதல்/செயல்படுத்தாமல் இருத்தல் பற்றிய விவரம் இணைப்பு 10-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

1985-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ஆம் நாளன்றுள்ளபடி 159 பிரிவுகள் 3 சட்டதிட்டங்களின் விதித்துறைகளைச் செயல்படுத்தத் தொடங்க வேண்டும். 1952-ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்-பல்வகை விதித்துறைகள் சட்டம் அதன்கீழ் துறை நிறுவனங்கள் இயற்றிய திட்டப்பணி ஆகியவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளைப்பற்றி அறிந்துகொள்வதற்காக தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலத்துறை செயலாளரின் தலைமையில் கூட்டம் ஒன்று 20—12—1985 அன்று கூட்டப்பட்டது. இதில் பங்கேற்றவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் 17(1) (ஏ)/17(1)(பி) பிரிவுகளிலிருந்து விலக்களிக்குமாறு கேட்டுக்கொள்ள கடைசி நாள் 31-1-1986 என தொழிலாளர் நலத்துறை செயலாளர் நிர்ணயித்தார்.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்:

இம் மாநிலத்தில் தொழிலாளர் நல காப்புறுதித் திட்டம் 1955 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மின் சக்தியை பயன்படுத்துகின்ற 10 பேரும் அதற்கு மேற்பட்டும் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் மின் சக்தியைப் பயன்படுத்தாத 20 பேர் அல்லது அதற்கு மேல் பணியாளர்களைக் கொண்ட தொழிற்சாலைகளுக்கும் இத்திட்டம் பொருந்தும். புதிய துறைகளில் 20-ம், அதற்கு மேலும் பணியாளர்கள் உள்ள கடைகள், ஓட்டல்கள், உணவகங்கள், பத்திரிகைகள், நிறுவனங்கள், திரையரங்குகள் உட்பட திரைப்பட நிறுவனங்கள், தனியார் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள் ஆகியவையும் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 1,000 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறும் ஊழியர்கள் தொழிலாளர் நலக் காப்புறுதிச் சட்டத்தின்கீழ் பயன்பெறுவர். இந்த ஊதிய உச்சவரம்பு 27—1—198[illegible] முதல் ரூ. 1,600-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம், தமிழ்நாடு மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்பட்டு பின்வருமாறு வகை செய்கிறது :—

(1) மருத்துவ உதவி—மருத்துவப் பொருட்களாக வழங்கப்படுகிறது.

(2) உடல் நலமின்மைக்கான உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.



(3) தற்காலிகமாக ஏலாமையுற்றோருக்கு உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(4) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(5) பேறுகால உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(6) இறுதிச் சடங்குக்குரிய செலவுத் தொகை—பணமாக அளிக்கப்படுகிறது.

(7) நிரந்தரமாக ஏலாமையுற்றோருக்கு உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(8) நீடித்த உடல் நலமின்மைக்கான உதவி—பணமாக அளிக்கப்படுகிறது.

(9) சார்ந்துள்ளவர்கள் நல உதவி—பணமாக அளிக்கப்படுகிறது. காப்புறுதி செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை தொடர்பான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | |
|---|---|
| (அ) தொழிலாளர்களின் எண்ணிக்கை | 5,10,000 |
| (ஆ) காப்புறுதி செய்துகொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை | 5,65,000 |
| (இ) இதில் அடங்கிய குடும்பங்களின் எண்ணிக்கை | 5,65,000 |
| (ஈ) பயனடைவோரின் மொத்த எண்ணிக்கை | 21,92,200 |

மருத்துவ வசதிக்காகச் செலவிடப்படும் மொத்த தொகையை மாநில அரசும் தொழிலாளர் நலக் காப்புறுதிக் கழகமும் 1:7 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுகின்றன. இக்கழகம் மருத்துவ செலவிற்காக செலவிடப்படும் தொகைக்கு உச்சவரம்பு நிர்ணயித்துள்ளது. தற்போதுள்ள உச்சவரம்பு தொழிலாளரின் குடும்பம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 130 ஆகும். (காப்புறுதி செய்துகொண்டவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் முழு மருத்துவ வசதி).

மேற்சொன்ன உச்சவரம்பிற்கு மேற்பட்டு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஆண்டொன்றுக்கு மருந்துகள், மருத்துவப் பொருட்கள் வாங்குவதற்காக ரூ. 25-க்கு மேற்பட்டு ஆனால் ரூ. 55-க்கு உட்பட்டு தொகை தொடர்ந்து வழங்கப்படும்.

தொழிலாளர் நல காப்புறுதித் திட்டத்தின் கீழ் அயன்புரம் (சென்னை), கே. கே. நகர் (சென்னை), மதுரை, கோயம்புத்தூர், வேலூர் (வட ஆற்காடு மாவட்டம்), ஆகிய இடங்களுக்கு ஐந்து மருத்துவ மனைகளும், 130 நிலையான மருந்தகங்களும், நடமாடும் மருந்தகங்களும், 2 பயன்பாட்டு மருந்தகங்களும், 1 பகுதி நேர மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. மேற்கூறிய ஐந்து தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை வருமாறு :—

| | படுக்கைகள் |
|---|---|
| 1. தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, அயன்புரம், சென்னை. | 616 |
| 2 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கே. கே. நகர், சென்னை. | 234 |
| 3 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, மதுரை. | 209 |
| 4 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, கோயமுத்தூர். | 540 |
| 5 தொழிலாளர் நல ஈட்டுறுதி மருத்துவமனை, வேலூர், வட ஆற்காடு மாவட்டம். | 50 |

1983 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம்.

1923 ஆம் ஆண்டு தொழிலாளர்களுக்கு இழப்பீடு வழங்கல் சட்டம் பின் வரும் தேர்வுகளில் இழப்பீடு வழங்க வகை செய்கிறது :—

(அ) தொழிற்சாலைகளில் பணியில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்படும் விபத்து :

(ஆ) தொழிலால் நோய் ஏற்பட்டு மரணமடைதல் அல்லது ஏலாமை யுறுதல், இச்சட்டம் தொழிற்சாலைகள், சுரங்கங்கள், மலைத் தோட்டங்கள், போக்குவரத்து நிறுவனங்கள், கட்டிடப் பணியாளர்கள், இரயில்வே பணியாளர்கள், குறிப்பிட்ட சில தீங்கு விளைவிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு (தொழிலதிபர்களின் வர்த்தக அல்லது வணிக காரியங்களுக்காக அன்றி வேறு காரியங்களுக்கு நியமிக்கப்பட்டு உள்ள நாட் கூலி பெறும் பணியாளர்கள் நீங்கலாக) ஆகியோருக்கு பொருந்தும்.

தொழிலாளர் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் ஆணையாளரால் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் இணைப்பு 8-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



தொழிலாளர் விபத்துத் துயர் தணிப்பு நிதி :

ரூ. 15,000 தொடர் மானியத்துடன் இந்த நிதியை அரசு ஏற்படுத்தியுள்ளது. 1923 ஆம் ஆண்டு தொழிலாளர்கள் இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்குவதற்குத் தொழிலதிபர்களிடம் நிதி வசதி இல்லாதிருந்தால் அல்லது வேறு காரணங்களை முன்னிட்டு தொழிலாளர்கள் அல்லது அவர்களைச் சார்ந்துள்ளோர் அச்சட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகை பெற இயலாது போனால் இந்நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படும். இழப்பீடு வழங்கப் போதுமான நிதி வசதி இல்லாத சிறிய ஒப்பந்தக்காரர்களிடம் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் மரணமடைந்தால் அல்லது காயமடைந்தால் அவர்களும் நிதியிலிருந்து உதவித் தொகை பெறுவர். இவ்வாண்டில் இந்நிதியிலிருந்து 3 இனங்களில் ரூ. 6,500 தொகை வழங்க சென்னை தொழிலாளர் நல ஆணையாளர் அனுமதித்துள்ளார்.

1972 ஆம் ஆண்டு பணிக் கொடை வழங்கல் சட்டம் :

இச்சட்டம் 1972 செப்டம்பர் முதல் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்கள் அலுவலகத்தைச் சேர்ந்த உதவி ஆணையாளர்களும், தொழிலாளர் நல வட்டாரத் துணை ஆணையாளர்களும் அவரவர் அதிகார வரம்புப் பகுதியில் இச்சட்டத்தின் கீழ் முறையே கட்டுப்பாட்டு அலுவலர்களாகவும், மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இந்த அலுவலர்கள் இச்சட்டத்தின் கீழ் 1985 ஆம் ஆண்டில் பெற்று, தீர்த்து வைத்த வழக்குகளின் விவரங்கள் 8-ஆம் இணைப்பில் உள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களுக்கான தொகுப்புப் பணிக்கொடை நிதித் திட்டம் :

விரிவான ஆய்வுப் பணியை மேற்கொண்ட பின்னர் வறிய நிலையிலுள்ள மக்களுக்குப் பாதுகாப்பும் உதவியும் அளிக்கும் நோக்குடன் தொகுப்புப் பணிக் கொடைத் திட்டம் ஒன்றை அமைப்பு ரீதியில் வராத தொழிலாளர்களின் நலனுக்காக அரசு முடிவு செய்துள்ளது. தொழிலாளர் நல உதவி ஆணையாளர் தலைமையில் ஐந்து தொழிலாளர் நல உதவி ஆய்வாளர்கள் அடங்கிய தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்-தொழில் நிறுவனங்கள் பற்றி ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது.

## அத்தியாயம் 8.

### தொழிலாளர் நலப் பணிகள்.

**தொழிற்சாலைத் தொழிலாளர் சகாய வாடகை வீட்டு வசதித் தனியார் துறை தொழிலதிபர் திட்டம்.**

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழ் வரும் தொழிலாளர்களின் பயனுக்காக வீடுகள் கட்ட தனியார் தொழிலதிபர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

சிறிய இரு அறைகளைக் கொண்ட (இரு மாடிகள்) வீடுகள் கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 5,350-ம் சிறிய இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 6,050-ம் முறையான இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (இரு மாடிகள்) கட்டுவதற்கு உச்சவரம்புத் தொகையாக ரூ. 7,600-ம் முறையான இரு அறைகளைக் கொண்ட வீடுகள் (பல மாடிகள்) கட்டுவதற்கு உச்ச வரம்புத் தொகையாக ரூ. 8,500-ம் இத் திட்டத்தின் கீழ் வழங்க வரையறை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தை இந்திய அரசு தற்போது நிறுத்தி விட்டது. மாநில அளவில் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கென புதிய திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 1,370 வீடுகள் தனியார் தொழிலதிபர்களால் கட்டப்பட்டுள்ளன. இது வரை செலவிட்ட தொகை ரூ. 54.32 இலட்சமாகும்.

**மலைத் தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு வசதித் திட்டம் :**

குடியிருப்பு ஒன்றுக்கு 4,000 ரூபாய் என்ற உச்சவரம்புச் செலவு அடிப்படையில், தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட, மலைத் தோட்ட உரிமையாளர்களுக்கு நிதி உதவி அளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இத்தொகையில் 50 சதவீதம் கடனாகவும் 37.50 சதவீதம் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது.



அறிக்கையாண்டில் வீட்டு வசதி-நகர்ப்பகுதி வளர்ச்சித் துறையின் மூலம் பின்வரும் புதிய திட்டங்களுக்கு அரசு அனுமதிவழங்கியுள்ளது :—

| | வீடுகளின் எண்ணிக்கை | கடன் | உதவித் தொகை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 திருவாளர்கள் சேர்வராயன் எஸ்டேட், ஏர்க்காடு. | 15 | 30,000 | 22,500 |

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இது வரை ரூ. 28.30 இலட்சம் செலவில் 1,107 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் :**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர்களின் நன்மைக்காக தொழிற்சாலைப் பணியாளர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோருக்கு நல்வாழ்வு வசதிகள் செய்து கொடுக்கும் வகையிலான பல பணிகளை மேற்கொண்டுள்ளது. பல திட்டங்களை அண்மையில் நிறைவேற்றவும் கருதியுள்ளது. தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் மேலும் நலம் பயக்கும் பல திட்டங்களையும் அண்மையில் நிறைவேற்றவும் கருதியுள்ளது.

1985-ம் ஆண்டில் பின்வரும் நிலையங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன :—

1. அரியமங்கலத்திலுள்ள குழந்தைகள் காப்பு இல்லம், தொழிலாளர் நல நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

2. நாகர் கோயிலில் தொழிலாளர் நல நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாரியம் செயல்படுத்திய நலத் திட்டங்கள் அவற்றின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரம் வருமாறு :

| தொழிலாளர் நல நிலையங்கள் | 1984—85 | 1985—86 |
|---|---|---|
| (1) தையல் பயிற்சி நிலையங்கள் : | | |
| (i) நிலையத்தின் மொத்த எண்ணிக்கை | 44 | 47 |
| (ii) பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை | 1,572 | 1,572 |
| (2) பாலர் பள்ளிகள் : | | |
| (i) நிலையங்களின் மொத்த எண்ணிக்கை | 37 | 39 |
| (ii) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை | 1,927 | 1,601 |
| (3) குழந்தைக் காப்பகங்கள்— | | |
| (i) காப்பகங்களின் மொத்த எண்ணிக்கை | 6 | 5* |
| (ii) பயனடைந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை | 287 | 287 |
| (4) படிப்பகங்கள்— | | |
| (அ) படிப்பகங்களின் மொத்த எண்ணிக்கை | 10 | [illegible] |
| (ஆ) பயன் பெறும் தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை | 61,167 | 67,167 |

*இரண்டு நிலையங்கள் மகளிர் மன்றங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

(5) ஏனைய திட்டங்கள் :

| (1) | பயனடைந்தோரின் எண்ணிக்கை. 1984—85. (2) | 1985—86. (3) |
|---|---|---|
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் | 1,030 | 826 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு சுருக்கெழுத்துப் படிப்பு கட்டணங்கள் | 917 | 2,059 |
| (இ) புத்தக வங்கி | 51,361 | 41,765 |
| (ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள் | [illegible] | [illegible] |





| | தொகை ரூபாய். 1984–85. (4) | 1985–86. (5) |
|---|---|---|
| (அ) தொழிலாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிக்கான செலவுத் தொகையைத் திருப்பிக் கொடுத்தல் | 60,187.00 | 48,140.00 |
| (ஆ) தொழிலாளர் குழந்தைகளுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்துப் படிப்பு கட்டணங்கள் | 1,06,710.00 | 1,41,938.00 |
| (இ) புத்தக வங்கி | 17,28,583,70 | 11,57,859.60 |
| (ஈ) ஈமச் சடங்கிற்குரிய செலவுகள் | 1,27,600.00 | 1,30,600.00 |

(6) படிப்புதவித் தொகை :

பின்வரும் படிப்புகளுக்காக வாரியம் நிதியுதவியும் அனுமதித்துள்ளது:—

(6) படிப்புதவித் தொகை :

பின்வரும் படிப்புகளுக்காக வாரியம் நிதியுதவியும் அனுமதித்துள்ளது :—

| (1) | பயனடைந்தோரின் எண்ணிக்கை. 1984–85. (2) | 1985–86. (3) |
|---|---|---|
| (அ) சட்டத்தில் பட்டப் படிப்பு | 2 | 6 |
| (ஆ) பொறியியல் பட்டப் படிப்பு | 23 | 89 |
| (இ) பொறியியல் பட்டயப் படிப்பு | 59 | 254 |
| (ஈ) மருத்துவப் பட்டப் படிப்பு | 9 | 22 |
| (உ) மருத்துவப் பட்டயப் படிப்பு | .. | 4 |
| (ஊ) தொழிற் பயிற்சி நிலையங்கள் | 31 | 66 |
| (எ) மேல்நிலைப் பள்ளி கல்வி | 24 | 46 |

| | தொகை ரூபாய். | |
|---|---|---|
| | 1984–85. | 1985–86. |
| | (4) | (5) |
| (அ) சட்டத்தின் பட்டப் படிப்பு | 2,000.00 | 6,000.00 |
| (ஆ) பொறியியல் பட்டப் படிப்பு | 22,561.80 | 89,000.00 |
| (இ) பொறியியல் பட்டயப் படிப்பு | 32,032.15 | 1,52,200.00 |
| (ஈ) மருத்துவப் பட்டப் படிப்பு | 9,000·00 | 22,000·00 |
| (உ) மருத்துவப் பட்டயப் படிப்பு | .. | 2,400.00 |
| (ஊ) தொழிற் பயிற்சி நிலையங்கள் | 9,596.00 | 19,800.00 |
| (எ) மேல்நிலைப் பள்ளி கல்வி | 12,000.00 | 2,300.00 |

விடுமுறை இல்லம் :

தொழிற்சாலைத் தொழிலாளர்கள் அவர்களுடைய குடும்பத்தினர் ஆகியோரின் பயனுக்காக, குறைந்த வாடகைக்கு விடுமுறை இல்லம் (Holiday ஒன்று திருநெல்வேலி மாவட்டம் குற்றாலத்தில் கட்டப் பட்டுள்ளது, ஒரே சமயத்தில் 58 பேர் இதில் தங்கலாம்.

மாமல்லபுரத்தில் மற்றொரு விடுமுறை இல்லம் ரூ. 21.80 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது. இது விரைவில் முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களிலும் விடுமுறை இல்லம் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.





வார்டு :

சென்னை, தாம்பரம், காசநோய் நலம்பேண் மருத்துவ மனையில் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கென்று 1978 ஆம் ஆண்டில் ரூ. 3.64 இலட்சம் செலவில் 26 படுக்கை வசதிகளுடன் கூடிய காசநோய் தனி வார்டு ஒன்று கட்டப்பட்டது.

ஓய்வு இல்லம்:

கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லம் ஒன்று வாடகைக் கட்டிடத்தில் நடத்தப்பட்டு வருகிறது. ஒரே சமயத்தில் 15 பேர் வரை இதில் தங்கலாம். பெயரளவு வாடகையே வசூலிக்கப்படுகிறது.

தொழிற்சங்கத் தலைவர்களுக்கான ஓய்வு இல்லம் :

தொழிற்சங்கத் தலைவர்கள் தங்குவதற்காக, சென்னை-6, தேனாம் பேட்டையில் ரூ. 10 இலட்சம் செலவில் ஓய்வு இல்லம் (ஜீவா இல்லம்) ஒன்றை வாரியம் கட்டியுள்ளது.

போட்டி விளையாட்டுகள் :

தொழிலாளர்களையும் அவர்களைச் சார்ந்துள்ளோரையும் ஊக்கப் படுத்துவதற்காக தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ஒவ்வோராண்டும் மாவட்ட, மண்டல, மாநில அளவில் ஆண்டுப் போட்டி விளையாட்டுக்களை நடத்தி வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் மாநில அளவிலான ஆறாம் ஆண்டுப் போட்டி விளையாட்டுக்கள் 1985 செப்டம்பரில், சென்னையில் நடைபெற்றன.

ஏலாமையுற்ற தொழிலாளர்களுக்கும் செயற்கை உறுப்புகள் வழங்குதல் :

ஏலாமையுற்ற தொழிலாளர்கள் 33 பேர்களுக்கு இவ்வாண்டில் ரூ. 7,472 செலவில் செயற்கை உறுப்புகளை வாரியம் வழங்கியுள்ளது.

செவிக் கருவிகள் ; மூன்று சக்கர வண்டிகள் :

தேவைப்படும் தொழிலாளர்களுக்குச் செவிக் கருவிகளையும் மூன்று சக்கர வண்டிகளையும் வாரியம் வழங்கி வருகிறது.

| | பயனடைந்தோர் எண்ணிக்கை | தொகை ரூபாய் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| மூன்று சக்கர வண்டிகள் | [illegible]5 | 7,800.00 |
| செவிக்கருவிகள் | 11 | 5,088.00 |

**வாரியம் செயல்படுத்தவிருக்கும் புதிய திட்டங்கள் :**

(1) பின்வரும் இடங்களில் தொழிலாளர் நல நிலையங்களைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது :—

தண்டையார்பேட்டை (சென்னை), ஈரோடு, அருப்புக்கோட்டை (காமராஜர் மாவட்டம்), ஓசூர் (தர்மபுரி மாவட்டம்), கள்ளக்குறிச்சி (தென்னாற்காடு மாவட்டம்), ஒண்டிப்புதூர் (கோயம்புத்தூர் மாவட்டம்), குமாரபாளையம் (சேலம் மாவட்டம்), ஆலங்குளம்.

(2) தூத்துக்குடியில் மேலும் ஒரு குழந்தை நல நிலையத்தை ஏற்படுத்த வாரியம் முடிவு செய்துள்ளது.

(3) பின்வரும் இடங்களில் தையல் பயிற்சி நிலையங்களைத் தொடங்க வாரியம் முடிவு செய்துள்ளது :—

மாஞ்சோலை (திருநெல்வேலி மாவட்டம்), கீழ் கோதையாறு (கன்னியாகுமரி மாவட்டம்), வால்பாறை (அருவி), சோலையாறு (கோயம்புத்தூர் மாவட்டம்), பந்தலூர் (நீலகிரி மாவட்டம்).

(4) வால்பாறையில் படிப்பகம் ஒன்றை நிறுவ வாரியம் தீர்மானித்துள்ளது.

(5) தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக சிவகாசியில் காமராஜர் மாவட்டம்) 20 படுக்கைகள் கொண்ட குழந்தை சிகிச்சை தனி மருத்துவ நிலையத்தைக் கட்டுவதற்கு வாரியம் முடிவு செய்துள்ளது.

(6) திருவொற்றியூர் (செங்கற்பட்டு மாவட்டம்), மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், ஈரோடு ஆகிய இடங்களில் தையற் பயிற்சி நிலையம், பாலர் பள்ளி, படிப்பகம், நூலகம், மனையக விளையாட்டுகள் (Indoor games) ஆகியவற்றுடன் பல்நோக்கு தொழிலாளர் நல நிலையத்தைத் தொடங்கவும் வாரியம் முடிவு செய்துள்ளது.

(7) தொழிலாளர்களுக்கான காசநோய் சிகிச்சை வார்டுகளை வேலூர், ஆச்சாரிபள்ளம் (கன்னியாகுமரி மாவட்டம்), ஆண்டிப்பட்டி (மதுரை) ஆகிய இடங்களில் உள்ள காசநோய் நலம் பேண் மருத்துவமனையிலும், திருப்பூர் (கோயம்புத்தூர் மாவட்டம்), ஈரோடு (பெரியார் மாவட்டம்) ஆகிய இடங்களிலுள்ள அரசினர் மருத்துவமனைகளிலும் கட்டுவதற்கு திட்டமிடப் பட்டிருக்கிறது.



(8) உடல் ஊனமுற்ற தொழிலாளர்கள், தொழிலாளர்களின் உடலூனமுற்ற முற்ற குழந்தைகள் ஆகியோருக்கு செயற்கைக் கால்களை வழங்குதல்.

(9) உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்குதல்.

(10) தொழிலாளர்கள் அவர்களுடைய குழந்தைகள் ஆகியோருக்குச் செவிக் கருவிகள் வழங்குதல்.

**சட்ட உதவி :**

உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்பாக, தொழிற்சங்கங்களுக்கு ஆகும் சட்டச் செலவுகளுக்காக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு ரிட் மனு ஒன்றுக்கு அல்லது ரிட் மேல் முறையீடு ஒன்றுக்கு ரூ. 150 என்ற விகத்தில் நிதியுதவி அளிப்பதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சட்ட உதவிக்கு அனுமதி வழங்க, தொழிலாளர் நல ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர்கள் இழப்பீட்டுத் தொகைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரும் ஏழ்மை நிலையிலுள்ள தகுதி வாய்ந்த தொழிலாளர்களுக்கு அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு மாநில அரசுச் செலவில் சட்ட உதவி அளிப்பதற்காக அரசு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 ஒதுக்குகிறது. காயம் அடைந்த தொழிலாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்கள் பிறப்பித்த ஆணைகளை எதிர்த்து நிருவாகத்தினர் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து கொள்ளும்போது சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் உயர் நீதிமன்றத்தில் தங்கள் தரப்பில் எடுத்துரைத்து வழக்காட சட்ட உதவி பெறத் தகுதியுடையவராவர். இவ்வாறு உதவி பெற, இழப்பீட்டுத் தொகை கூடுதல் ஆணையாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற சட்ட நடவடிக்கைகளின்போது அவர்களுக்கு அத்தகைய சட்ட உதவி அளிக்கப்பட்டது.

**தொழிலாளர் நல சட்ட ஆலோசனைக் குழுக்கள் :**

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று இடங்களில் மூன்று சட்ட ஆலோசனைக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றை ஓய்வு பெற்ற நீதிபதிகளும், ஓய்வு பெற்ற தொழிலாளர் நல அதிகாரிகளும் நிருவகித்து வருகின்றனர். ஏழ்மை நிலையிலுள்ள மக்களுக்குச் சட்ட உதவி அளிப்பது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட தனி நபர் குழு அளித்த

பரிந்துரைக் கிணங்க, அரசு இச்சட்ட ஆலோசனைக் குழுக்களை அமைத்துள்ளது. இக்குழுக்கள் தொழிலாளர்களிடமிருந்து வரும் மனுக்களை கருணை உணர்வோடு பரிசீலனை செய்து, அவர்களுடைய துயரை நீக்குவதற்காக அவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும் வகையில் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் தொழிலாளர் நலன் தொடர்புடைய ஏனைய நடைமுறைகள் ஆகியவற்றின் கீழ் அவர்கள் அணுக வேண்டியவர்களைப் பற்றியும் அவர்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளைப் பற்றியும் ஆலோசனை வழங்குகிறது. இக்குழுக்கள் இவ்வாண்டில் 240 முறையீடுகளை முடித்து வைத்துள்ளன.

## அத்தியாயம் 9.

## பயிற்சி

### தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தின் பணிகள்.

தமிழ்நாடு அரசால் 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையந்தான் தென்னிந்தியாவின் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட தொழிலாளர் கல்வி நிலையமாகும். மாநில அரசு இந்நிலையத்தை 30-3-1978 ஆம் நாளிலிருந்து முதல் நிலை நிலையமாக தரம் உயர்த்தியது. பின்வரும் பணிகளை ஆற்றுவதற்காகத் தமிழ்நாடு அரசு தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தை ஏற்படுத்தியது. அவையாவன:—

(1) நல்ல தொழிற் சங்கங்களை ஏற்படுத்துதல், (2) தொழிலாளர்கள் நிருவாகத்தினருக்குமிடையே சுமுகமான உறவை ஏற்படுத்துதல், (3) தொழிலாளர் நலத் துறை அதிகாரிகளின் திறமையினை வளர்த்தல், (4) வெளியீடுகள் மூலம் கல்வி அறிவைப் பரப்புதல். 1978-ல் இந்த நிலையம் முதல் நிலை நிலையமாக தரம் உயர்த்தப்பட்டது.

பயிற்சித் திட்டங்கள் :—

1. தொழிற் சங்க தலைமைத் திட்டம் :

(i) இந்நிலையம் இதுவரையிலும் 15 பயிற்சி வகுப்புகளை நடத்தி 369 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது.

(ii) கூட்டுறவு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்களிலிருந்து வரும் அதிகாரிகளுக்குத் தொழிலாளர் சட்டங்களில் புத்தறிவும் பயிற்சி வகுப்புகள் ; இவ்வாண்டில் 4 பயிற்சி வகுப்புகள் நடத்தியது. 59 அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. இதுவரை, இத்தகைய 40 புத்தறிவு பயிற்சி வகுப்புகள் நடத்தி 596 அதிகாரிகளுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.



(iii) தொழிலாளர் நல அதிகாரிகள், தொழிலாளர் நல துணை ஆய்வாளர், தொழிற்சாலைகள் ஆய்வாளர்கள் ஆகியோருக்கு நினைவுகூர் பயிற்சி அளித்தல் :

இந்நிலையம் இதுவரை 17 பயிற்சி வகுப்புகள் நடத்தி 204 அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்துள்ளது.

(iv) பொதுத் துறை நிறுவனங்களிலுள்ள அலுவலக உதவியாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கும் திட்டம்:

இந்நிலையம் இதுவரையிலும் 6 பயிற்சி வகுப்புகள் நடத்தி பொதுத் துறை நிறுவனங்களின் 166 அலுவலக உதவியாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

(v) மேற்பார்வையிடும் திறனை வளர்க்கும் திட்டம் :

இதுவரையிலும் 30 வகுப்புகள் நடத்தப்பட்டு 929 மேற்பார்வையாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(vi) கடைகள், வணிக நிறுவனங்களும் தொழிலாளர் நலச் சட்டங்களும் என்பது குறித்த கருத்தரங்கு :

இந்நிறுவனம் இதுவரையிலும் 52 கருத்தரங்குகளை நடத்தி 6,150 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சி கிட்டத்தட்ட தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட தலை நகரங்களிலும், முக்கிய தலை நகரங்களிலும் நடத்தப்பட்டுள்ளது.

(vii) தொழிலாளர் நலச் சட்டங்களின்கீழ் பதிவேடுகள், படிவங்களை வைத்துவருவது குறித்த கருத்தரங்கு :

இதுவரையிலும் இந்நிலையம் 13 பயிற்சி வகுப்புகள் நடத்தி 609 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது.

(viii) பீடி, சுருட்டு தொழிலாளர்களுக்குப் பயிற்சித் திட்டங்கள் :

சென்னை, தூத்துக்குடி, திருச்சி, சேலம், ஈரோடு, வேலூர், இராணிப்பேட்டை, மேலப்பாளையம், அம்பாசமுத்திரம் ஆகிய 9 இடங்களில் இவ்வகுப்புக்கள் நடத்தப்பட்டன. 1984 ஆம் ஆண்டில் 7 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 326 பேருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

(ix) தொழிலாளர் நல உதவி ஆய்வாளர், கண்காணிப்பாளர்களுக்கு நினைவுகூர் பயிற்சி :

இந்நிலையம் 20 பயிற்சி வகுப்புகள் நடத்தி 440 பேருக்குப் பயிற்சி அளித்துள்ளது.

(x) முக்கியத் தொழிலாளர் பிரச்சினைகள் குறித்த கருத்தரங்கு :

நிர்வாகப் பணியாளர்கள், தொழிலாளர் தலைவர்களுக்காக இந்த நிறுவனத்தில் பல்வேறு தலைப்புகள் மீது கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. அதுபோன்ற சில திட்டங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

அ. ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் நடத்துவது குறித்த கருத்தரங்குகள் :
398 பேர்கள் அடங்கிய 9 கருத்தரங்குகள் இதுவரை நடத்தப்பட்டன.

ஆ. பல தொழிற் சங்கங்கள் பற்றிய பிரச்சினைகள் :

1984-ல் கோயம்புத்தூரில் இதுவரை இரண்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதில் 103 பேர் கலந்து கொண்டனர்.

இ. வேலைநிறுத்தமும் கதவடைப்பும் :

இதுவரை 173 நபர்கள் கொண்ட கருத்தரங்கு நான்கு நடத்தப்பட்டது.

3. உழைப்பவர் உலகம்.

1978 ஆம் ஆண்டு முதல் நீதித் துறையின் முடிவுகள் தொழிலாளர் நலச் சட்டங்கள், திருத்தங்கள், அறிவிக்கைகள் முதலியன குறித்து தொழில் உறவுகள் குறித்து சம்பந்தப்பட்ட மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு "உழைப்பவர் உலகம்" என்ற மாதாந்திர தமிழ்ப் பத்திரிகை வெளியிடப்படுகிறது. இந்த பத்திரிகையில் உள்ள வினா-விடை பகுதியை மக்கள் விரும்பி படிக்கின்றனர். வாழ்க்கை செலவுப் புள்ளி பற்றிய புள்ளி விவரங்கள் அரசு அறிவிக்கைகள் ஆகியன இந்தப் பத்திரிகையில் இடம் பெறுகின்றன.

4. தொழிலாளர் நல நிருவாகத்தில் பட்ட மேற்படிப்பு பட்டயக் கல்வி :

இதுவரை 161 பேர்களுக்குத் தொழிலாளர் நல நிருவாகத்தில் பட்டயம் வழங்கப்பட்டுள்ளது.



5. ஆராய்ச்சிப் பிரிவு :

1981-82 ஆம் திட்டப்பணியில் தொழில் உறவுகள், தொழிலாளர் நிருவாகம், தொழிலாளர் நலன் ஆகிய துறைகளில் ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டி இந்நிருவனத்தில் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை அரசு உருவாக்கியது. "நடுவர் மன்றம் தீர்ப்பளித்ததில் ஏற்படும் கால தாமதம்" மீதான ஆய்வு முடிவடைந்துவிட்டது. இந்த ஆண்டு இந்த ஆராய்ச்சிப் பிரிவு தமிழ்நாட்டில் தொழிலாளர் நல நிர்வாகம் என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளது. தற்போதுள்ள துணை ஆய்வாளர் பதவியுடன் ஒரு புள்ளி விவர ஆய்வாளர் ஆராய்ச்சி அதிகாரி பதவிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

6. தொழில் கல்வி பட்டப் பாடமுறைகள் :

1984-85 ஆம் ஆண்டுத் திட்டப் பணிகளில் "பேசிலர் ஆப் லேபர் மானேஜ்மெண்ட்" (B.L.M.) என்றழைக்கப்படுகிற தொழிலாளர் நல நிர்வாகத்தில் பட்டப் பாடமுறையை நடத்துவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. தொழிலாளர் நல நிர்வாகத்தில் பட்டப் பாடமுறைக்குப் பிறகு இரு ஆண்டு பட்ட மேற்படிப்பு தொடங்கப்படும். பல்கலைக் கழக இணைப்பு பெற்றவுடன் இந்தப் பட்டப் பாடமுறை தொடங்கப்படும். பிளஸ் 2 கல்வி நிலைக்குப் பிறகு, தொழிலாளர் நல நிர்வாகப் பணியில் உரிய ஆர்வமுள்ள மாணவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு ஐந்தாண்டுத் தீவிரப் பயிற்சி அளிக்கப்படும். இதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். மேலும். தொழில் கல்வி முறையில் நன்கு பயிற்சி பெற்றவர்களைத் தொழிலாளர் நல நிர்வாகத் துறையில் கொண்டுவர இது வகை செய்யும். நலப் பணிக்கும் தொழிலமைதிக்கும், தொழில் வளத்திற்கும் இது வழி கோலும். துணைப் பணியாளர்களுடன் பேராசிரியர்கள் பதவி ஒன்றுக்கும் உதவிப் பேராசிரியர் பதவி இரண்டுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

7. நூலகம் :

இந் நிறுவன நூலகத்தில் 3,120 புத்தகங்களும் 40 பருவ வெளியீடுகளும் உள்ளன.

அத்தியாயம் 10.

எடைகள்—அளவைகள்—

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்—அளவைகள்—(செயற்படுத்தல்) சட்டம் :

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு எடைகள்-அளவைகள் (செயற்படுத்தல்) சட்டம், குறைவாக எடை போடுதல் அளவையிடும் சட்டம் ஆகியவற்றின் விதித்துறைகள் எடைகள், அளவைகள், கட்டுப்பாட்டு அதிகாரியின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவர் தொழிலாளர் நல இணை ஆணையாளரும் (ஆய்வு) ஆவார். இவருக்கு உதவியாக இம்மாநிலத்திலுள்ள தொழிலாளர் நல ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் நலத் துறை உதவி ஆய்வாளர்கள், சென்னை மாநகர், செங்கற்பட்டு, மதுரை-கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள எடை அளவைகளில் முத்திரையிடும் ஆய்வாளர்கள் (Stamping Inspectors) சென்னை, செங்கற்பட்டு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் மூன்று தொழிலாளர் நல துணை ஆய்வாளர்கள் (பிரிவு) ஆகியோர் இவருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.

எடை-அளவைகள் குறைவாக போடப்படுதல், தவறான எடைகள்—அளவைகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்காக அடிக்கடி ஆய்வுகள் நடத்துதல், திடீர் சோதனை நடத்துதல், கிராமங்களில் ஆய்வுகளை நடத்துதல் உட்பட கூட்டாக அடிக்கடி சோதனை இடுதல் தமிழ்நாடு எடைகள்-அளவைகள் சட்டத்தின் கீழ் குற்றமிழைப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற தீவிர நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டுள்ளது.

1985 ஆம் ஆண்டில் எடைகள்-அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை மீறியதற்காக 17,599 வழக்குகள் போடப்பட்டன. கடந்த ஆண்டில் போடப்பட்டு தீர்ப்பளிக்கப்படாமலிருந்த 15,464 வழக்குகளுக்கும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ரூ. 11,00,964 அபராதத் தொகை விதிக்கப்பட்டது. எடை-அளவைகளில் முத்திரையிடுவதற்குரிய கட்டணமாக 1985 ஆம் ஆண்டில் ரூ. 63,11,524.46 பைசே வசூலிக்கப்பட்டது.



1984-85 ஆகிய ஆண்டுகளில் இச்சட்டத்தின் கீழ் எடை-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, எடை—அளவைகள் உதவிக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் பழுது பார்ப்பவர்கள், விற்பனையாளர்கள், தயாரிப்பாளர்கள், ஆகியோருக்கு வழங்கிய உரிமங்கள் (புதிய, புதுப்பித்தல்) அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் பற்றிய விவரம் வருமாறு :—

| ஆண்டு. | பழுது பார்ப்ப வர்கள். | விற்பனை யாளர்கள். | தயாரிப் பாளர்கள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1984 | 293 | 606 | 136 |
| 1985 | 310 | 655 | 156. |

1985-ல் விற்பனையாளர், தயாரிப்பாளர், பழுதுபார்ப்பவர் ஆகியோரிடமிருந்து 1985-ம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட உரிமக் கட்டணம் ரூபாய் 2,05,596.00 ஆகும். எடைகள்-அளவைகள் கட்டுப்பாட்டு அதிகாரி, மாவட்டங்களிலுள்ள சார்பு அதிகாரிகள் கூட்டத்தை அவ்வப்போது கூட்டி மேற்சொன்ன சட்டத்தின் விதித்துறைகளைச் செயற்படுத்தும் பணித் தொடர்பாக மறு ஆய்வு செய்கிறார். தவறிழைக்கும் வணிகர்களை திருத்துவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, அவர் கூட்டாக திடீர் சோதனைகள் நடத்துகிறார்.

1985-ம் ஆண்டில் மாநிலம் முழுவதிலும் உள்ள வணிகர்களைச் சோதனையிடும் பொருட்டு இத்துறை 3,18,990 ஆய்வுகள் மேற்கொண்டது. எடைகள்—அளவைகள் சட்டம், விதிகள் ஆகியவற்றை கிராமப்பகுதிகளில் தீவிரமாக செயற்படுத்தும் பொருட்டு சார்நிலை அதிகாரிகள், கிராமங்களில் முறையான வாலாயமான ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். 1985 ஆம் ஆண்டில் 12,164 கிராமங்களில் 76,234 வணிகர்களை சார்நிலை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

1985-ம் ஆண்டில் 20, 21, 22—2—1985 ஆம் நாட்களில் மாநிலம் முழுவதிலும் சமையல் எரிவாயு சிலிண்டர்களைத் திடீர் சோதனை செய்வதற்கு தொழிலாளர் ஆய்வாளர் ஏற்பாடு செய்திருந்தார். விற்பனை செய்யும் கடைகளில் வைத்து 2,666 சமையல் எரி வாயு சிலிண்டர்களும், அவை

கொடுக்கப்படுமிடங்களில் 267 சிலிண்டர்களும், சோதனையிடப்பட்டதில் பின்வரும் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. இக்குறைபாடுகளை நீக்கு வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1. விற்பனையாளரிடமிருந்த 267 சிலிண்டர்களில் அளவு குறைவாக இருந்தது.

2. அவை கொடுக்கப்படும் இடங்களில் 26 சிலிண்டர்களில் அளவு குறை வாக இருந்தது.

1985 ஆம் ஆண்டில் கூட்டாக நடத்தப்பட்ட திடீர், தீவிர சோதனைகளின் போது கைப்பற்றப்பட்ட தவறான முறைபாடாக உள்ள அல்லது மீண்டும் சரிபார்க்கப்படாத பல்வேறு எடைகள் அளவைகள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| எடைகள் | 20,331 |
| கொள்ளவுக் கருவிகள் | 15,429 |
| நிலுவைக் கருவிகள் | 598 |
| அளவைக் கருவிகள் | 582 |
| தராசுகள் (பீம் ஸ்கேல்ஸ்) | 2,858 |

கைப்பற்றப்பட்ட கருவிகள், நீதிமன்ற நடைமுறைக்கு உட்பட்டு நீதிமன்ற ஆணைகளின்படி முடிவு செய்யப்படும். கைப்பற்றப்பட்ட ஏனையவற்றைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு எடைகள், அளவைகள் சட்டத்தின் கீழ் அவற்றை பறிமுதல் செய்து அரசிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தந்த வட்டார சார்நிலை பணியாளர்கள் ஒத்துழைப்புடன், காலாண்டுக்கொருமுறை இச்சட்டத்தின் கீழ் வட்டாரத் துறை ஆய்வாளர்கள் திடீர் சோதனை நடத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர். இது, எடைகள்-அளவைகளில் வணிகர்கள் வியாபாரிகளுக்கு பொறுப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

எடைகள், அளவைகள் தரம் (சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள்) குறித்த விதிகள் :—

இருபது அம்சத் திட்டத்தின் கீழ் நுகர்வோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக எடைகள், அளவைகளின் தரம் (சிப்பம் கட்டப்பட்ட பொருட்கள்) குறித்த விதிகள் இம்மாநிலத்தில் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன.



மேற்சொன்ன விதியின்படி பொருட்கள் சிப்பம் கட்டி விற்கப்படுமானால், அதன் எடை, சில்லறை விலை, உள்ளூர் வரி ஆகியவை குறித்த விவரங்கள் அச்சிப்பத்தின் மேலேயே தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும். சில்லறை விற்பனையாளர்கள் அவர்கள் விற்பனை செய்யும் ஒவ்வொரு சிப்பம் கட்டப்பட்ட பொருட்களின் மீதும் உள்ளூர் வரியைக் குறிப்பிட இயலாதென்று தெரிவித்தனர். ஏனெனில், உற்பத்தியாளர்கள் ஒவ்வொரு சிப்பத்தின்மீதும் உள்ளூர் வரியைக் குறிப்பிடுவதில்லை. இந்த இடர்பாட்டினை நீக்கும் வகையில் ஒவ்வொரு பொருளின் மீது செலுத்த வேண்டிய உள்ளூர் வரி பற்றிய விவரங்களை நுகர்வோர் கண்ணில் நன்குபடும் இடத்தில் எழுதி வைத்து நுகர்வோரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சில்லறை விற்பனையாளர் செயல்படத் தக்கவாறு இவ்விதியினைத் திருத்துமாறு தெரிவித்த ஆலோசனையை இந்த அரசு பரிசீலித்து வருகிறது. இது இப்பிரச்சினையை எளிதாகத் தீர்க்கும்.

சில்லறை சிகரெட்டு விற்பனையாளர்கள் நுகர்வோரிடம் கூடுதல் விலை பெற்று ஏமாற்றாதிருக்கும் வகையில் இவ்விதிகளைச் செயல்படுத்தும் அதிகாரிகளை கடைகளைச் சோதனையிட்டு தவறிழைக்கும் கடைக்காரர்கள் மீது அபராதத் தண்டனை நடவடிக்கை எடுக்குமாறு இத்துறை தேவையான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

**ஆயுள் காப்புறுதி—பணி ஓய்வு நல சிறப்புத் திட்டம் :**

சிறிய ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், உழவுத் தொழிலாளர்கள், கிராமக் கைவினைஞர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், சுமை ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், கைவண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள் ஆகியோரை இதற்கென தொடங்கப்பட்ட சிறப்புத் திட்டத்தில் சேர்த்து, அவர்களிடமிருந்து திங்கள் தோறும் சிறு சந்தாத் தொகையை வசூலிப்பதன் மூலம் அவர்களுக்கு ஆயுள் காப்புறுதியும் பணி ஓய்வுப் பலன்களும் கிடைக்கச் செய்யும் திட்டம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு சுதந்திரத் தினக் கொண்டாட்டத்தின்போது அறிவித்த மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றுள் ஒன்றாகும். இதன்படி, ஆயுள் காப்புறுதி பணி ஓய்வு நல சிறப்புத் திட்டத்தை அரசு அனுமதித்தது.

2. இம்மாநிலத்தில் 18 வயது முதல் 58 வயது வரையுள்ள உழவுத் தொழிலாளர்கள், சிறு—ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள், சுமை ஏற்றியிறக்கும் தொழிலாளர்கள், கைவண்டி இழுப்பவர்கள், துணி வெளுப்பவர்கள், முடி திருத்துபவர்கள், லாரி

ஓட்டுநர்கள், லாரி துடைப்பவர்கள், டாக்ஸி ஓட்டுபவர்கள், ஆட்டோ ஓட்டுபவர்கள், சைக்கிள் ரிக்ஷா ஓட்டுபவர்கள், காய்கறிகள், பழங்கள், உப்பு முதலியவற்றை விற்பவர்கள் ஆகியோர் இத்திட்டத்தின் மூலம் பயனடைவர்.

3. இத்திட்டத்தில் சேர விரும்புவோர் திங்கள் தோறும் 10 ரூபாய் வீதம் அவர்கள் 58 வயதடையும் வரை செலுத்த வேண்டும். இத்திட்டம், ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் உடனுழைப்புடன் செயற்படுத்தப்படும். உறுப்பினர் ஒவ்வொருவரும் ஆண்டொன்றுக்குப் பிரிமியத் தொகையாக 45 ரூபாயை ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடம் செலுத்துவர். ஒருவர் இறக்க நேர்ந்தால், தொழிலாளரின் நேமகதாரருக்கு ஆயுள் ஈட்டுறுதி கழகம் 5,000 ரூபாய் வழங்கும். அதனுடன், அவ்வுறுப்பினர் செலுத்திய தொகையைப் பொறுத்து சரகம் ஓரளவு தொகையை வழங்கும்.

4. 58 வயது முடிவடைந்தவுடன், அவர் தொகை செலுத்திய கால அளவிற்கேற்ப, பணி ஓய்வுப் பலனாக அவ்வுறுப்பினருக்குத் தொகை வழங்கப் படும். 10 ஆண்டுகள் தொகை செலுத்திய உறுப்பினர் 1,200 ரூபாயும், 20 ஆண்டுகளுக்கு 4,300 ரூபாயும் 25 ஆண்டுகளுக்கு 7,400 ரூபாயும், 30 ஆண்டுகளுக்கு 12,400 ரூபாயும், 35 ஆண்டுகளுக்கு 20,400 ரூபாயும், 40 ஆண்டு களுக்கு 33,500 ரூபாயும் பெறுவார்.

5. இத்திட்டத்தில் சேர்ந்த பின்னர் இறந்துவிட்ட 215 பேருக்கும் அதிகமானவர்களுக்கு ஈட்டுறுதித் தொகை 5,000 ரூபாயை இந்தியா ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் இதுவரை வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்குப் பொது மக்களிடமிருந்து நல்ல வரவேற்பு கிட்டியுள்ளது.

**விபத்து நிவாரணத் திட்டம்:**

இத்திட்டம் உழவுத் தொழிலாளர்கள், சிறு—ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமம் கைவினைஞர்கள் ஆகியோருக்கான "விபத்து நிவாரணத் திட்டம்" எனப் பெயர் பெறும். நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள், 2, 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருக்கும் சிறு—ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், கிராமக் கைவினைஞர்கள் ஆகியோர் தொழிலில் ஈடுபட்டிருக்கையில் விபத்து காரணமாக உயிரையோ அல்லது கை—கால்களையோ இழக்க நேரிட்டால் நிவாரணம் அளிக்கும் வகையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. வெள்ளம், வறட்சி, ஏனைய இயற்கைச் சீற்றங்கள் ஆகியவற்றின் காரணமாக உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்குவதன் மூலம் நிவாரணம்





அளிப்பதுடன், தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் இறந்து விட்டால் அவருடைய குடும்பத்திற்கு அல்லது தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்தில் சிக்க நேர்ந்தால் அத்தொழிலாளருக்குக் காயத்தின் தன்மையைப் பொறுத்து 5,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரை தொகை வழங்கப்படும். இத்திட்டம் தமிழ் நாடு மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும். இத்திட்டம், அறிஞர் அண்ணா பிறந்த நாளான 15—9—1984 அன்று செயலுக்குக் கொண்டு வரப்பட்டது.

2. இத்திட்டத்தின் கீழ் வரும் விபத்துக்களும் அவற்றிற்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையும் வருமாறு :—

| விபத்தின் தன்மை. | இழப்பீட்டுத் தொகை ரூபாய் |
| --- | --- |
| 1. தொழிலாளர் வேலை செய்து கொண்டிருக்கையில் விபத்து காரணமாக இறத்தல். | 10,000 |
| 2. தொழிலாளர் வேலைசெய்துக் கொண்டிருக்கையில் விபத்து காரணமாக கைகால்கள் இரண்டையும் அல்லது இரு கண்களை அல்லது கை கால்களில் ஒன்றையும் கண் ஒன்றையும் இழத்தல். | 10,000 |
| 3. தொழிலாளர் வேலை செய்துக்கொண்டிருக்கையில் விபத்து காரணமாக கைகால்களில் ஒன்றை அல்லது ஒரு கண்ணை இழத்தல். | 5,000 |

1984 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களிலிருந்து இத்திட்டத்தின்கீழ் 71 பேர் பயனடைந்தனர். முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 4,26,000 ரூபாய் அனுமதிக்கப்பட்டு உள்ளது.

**தொழிலாளர் விபத்து சமூகப் பாதுகாப்புத் திட்டம்:**

ஏழை குடும்பங்களுக்காக, மத்திய அரசு, விபத்து ஈட்டுறுதிச் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை 1985-86 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட கூட்டத் தொடரில் அறிவித்தது. ஆயுள் ஈட்டுறுதித் திட்ட உறுப்பினர் ஒருவர் விபத்தில் இறந்துவிடின், அவருடைய குடும்பத்திற்கு ஈட்டுறுதி நிறுவனம் 3,000 ரூபாய் வழங்கும். பிரிமியத் தொகையை மத்திய அரசு செலுத்தும்.

[1986 மே 10

2. இத்திட்டத்தின் மூலம் நிலமற்ற உழவுத் தொழிலாளர்கள் சிறு—ஓரளவு நிலம் வைத்திருக்கும் உழவர்கள், பாரம்பரைக் கைவினைஞர்கள் ஆகியோர் பயன்பெறுவர்.

3. இத்திட்டம், இம்மாநிலத்தில் ஏழு மாவட்டங்களில் செயற்படுத்தப் படும். அவை தருமபுரி, கன்னியாகுமரி, மதுரை, வட ஆர்க்காடு, திருச்சிராப் பள்ளி, இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களாகும்.

4. மத்திய அரசு தெரிந்தெடுத்த ஏழு மாவட்டங்களில், விபத்து நிவாரணத் திட்டத்துடன் இத்திட்டத்தையும் செயற்படுத்த இவ்வரசு, மத்திய அரசுக்குத் தங்கள் இசைவைத் தெரிவித்துள்ளது. முதல் நிலையில், அரசு 10,000 ரூபாயை அனுமதிக்கும். பொது ஈட்டுறுதி நிறுவனம் பெயர் குறிப்பிடுகிற ஈட்டுறுதி நிறுவனத்திடமிருந்து 3,000 ரூபாய் பின்னர் திரும்பப் பெறப்படும்.

**தமிழ் நாட்டில் கொத்தடிமை ஒழிப்புத்திட்டம்.**

1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்புச்) சட்டம், தமிழ் நாட்டில் 1976 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1976 ஆம் ஆண்டிலிருந்து, 33,132 கொத்தடிமைகள் கண்டறியப்பட்டு விடுவிக்கப் பட்டுள்ளனர். இவர்களில் 32,578 கொத்தடிமைகளுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில், 24,945 கொத்தடிமைகள், தென் ஆர்க்காடு மாவட்டம் கல்ராயன் குன்றுகளைச் சேர்ந்த ஜாகிர்தார்களிட மிருந்து விடுவிக்கப்பட்டு, அவர்களுக்கு அவ்விடத்திலேயே புதுவாழ்வு அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

இந் நிதியாண்டில், 1,100 கொத்தடிமைகளுக்குப் புதுவாழ்வு அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இவ்வரசு, 1,112 கொத்தடிமைகளுக்கு 9.30 இலட்சம் ரூபாய் செலவில் புதுவாழ்வு அமைத்துக் கொடுத்து இலக்கை எய்தியுள்ளது. இத்திட்டத்திற்காக, இவ்வரசு, இதுவரை 44.50 இலட்சம் ரூபாய் செலவுத் தொகைக்கு அனுமதித்துள்ளது. மத்திய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களின் கீழ் கொத்தடிமை ஒவ்வொருவருக்கும் 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாய் வரை செலவுத் தொகையின் உச்சவரம்பைத் தற்போது மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

இம்மாநிலத்தில், இச்சட்டத்தை மேலும் கவனமாகச் செயற்படுத்துமாறு இவ்வரசு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அனைவரையும் முடுக்கியுள்ளது.



1986 மே 10]

## இணைப்புகள்

## இணைப்பு I.

### தொழில் தகராறுகள்.

| விவரம். | 1984 (1984 ஜனவரி முதல் 1984 நாளிலிருந்து டிசம்பர் 31 ஆம் நாள் வரை.) | 1985 (1985 ஜனவரி முதல் 1985 நாளிலிருந்து டிசம்பர் 31 ஆம் நாள் வரை.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| (அ) ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த புகார்கள் மற்றும் தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 1,954 | 1,900 |
| (ஆ) இந்த ஆண்டில் வரப்பெற்ற புகார்கள்/எழுந்த தகராறுகளின் எண்ணிக்கை .. | 7,871 | 7,469 |
| (இ) முந்தைய ஆண்டுகளில் முடிவுறாதிருந்த புகார்கள், தகராறுகள் உட்பட புலன் விசாரணை செய்யப்பட்ட புகார்கள், தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 7,925 | 9,369 |
| (ஈ) சமரச அலுவலர்களின் உதவியுடன் தீர்வு காணப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை. | 6,277 | 7,404 |
| (உ) தொழிலாளர்கள் நீதி மன்றங்கள் மற்றும் தொழில் நடுவர் நீதிமன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 1,646 | 1,655 |
| (ஊ) நடுவர் நீதிமன்ற தீர்ப்பிற்கு விடப்பட்ட தகராறுகளின் எண்ணிக்கை .. .. | 2 | 2 |
| (எ) ஆண்டு இறுதியில் முடிவுறாமல் இருந்த தகராறுகளின் எண்ணிக்கை .. | 1,900 | 1,965 |

## இணைப்பு 2.

1985ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்களும் கதவடைப்புகளும்.

| விவரம். | 1984 (1984ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாளிலிருந்து 1984ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாளன்று முடிய). | 1985 (1985ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாளிலிருந்து 1985ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் நாளன்று முடிய). |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை .. .. | 211 | 212 |
| 2 வீணான உழைப்பு நாட்கள் | 37,08,409 | 35,05,226 |

## இணைப்பு 3.

1985ஆம் ஆண்டில் நடந்த வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவை குறித்து தீர்வு காணப்பட்ட வழி முறைகள்.

| | | |
|---|---|---|
| (1) | நேரடி பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு காணப்பட்டவை .. .. .. | 25 |
| (2) | தாங்களாகவே முன்வந்து வேலை தொடங்கியவை .. .. .. | 22 |
| (3) | தொழிலாளர் நலத்துறை அலுவலர்களாலும் அரசாலும் தீர்த்து வைக்கப் பட்டவை .. .. .. .. | 141 |
| (4) | மூடப்பட்டவை .. .. .. | 3 |
| (5) | தீர்ப்பு வழங்குதல் .. .. .. | 1 |
| (6) | ஆண்டு இறுதியில் பேச்சு வார்த்தையில் இருந்தவை .. .. .. .. | [illegible] |





## இணைப்பு 4.

தொழில்வாரியாக வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் குறித்த விவரங்கள்.

| தொடர் எண்ணும், தொழிலும். | வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் எண்ணிக்கை. | | ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை. | | இழந்த உழைப்பு நாட்கள். | |
|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1984 | 1985 | 1984 | 1985 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1. துணி நெசவு .. .. | 109 | 85 | 62,093 | 2,19,353 | 24,81,381 | 26,70,879 |
| 2. பொறியியல் .. .. | 50 | 84 | 19,496 | 12,840 | 6,18,585 | 4,92,574 |
| 3. தோல் பதனிடும் தொழிற்சாலைகள் .. | 3 | 1 | 245 | 55 | 15,829 | 715 |
| 4. புகையிலை, பீடித்தொழில் | 2 | 1 | 295 | 650 | 3,536 | 52,000 |
| . மலைத்தோட்டங்கள் .. | 9 | 12 | 12,090 | 2,111 | 1,93,430 | 67,620 |
| 6. ஏனையவை .. .. | 38 | 29 | 18,093 | 11,875 | 3,95,648 | 2,21,438 |
| மொத்தம் .. | 211 | 212 | 1.12,312 | 2,46,884 | 37,08,409 | 35,05,226 |

ii **தீர்ப்பு வழங்குதல் :**

| (1) | தீர்ப்புக்கு அனுப்பப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1984 (2) | 1985 (3) | தீர்ப்புகள் வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. 1984 (4) | 1985 (5) |
|---|---|---|---|---|
| (அ) சென்னை தொழில் நடுவர் மன்றம் .. | 104 | 97 | 58 | 45 |
| (ஆ) தொழிலாளர் நீதிமன்றங்கள் .. .. | 1,542 | 1,558 | 1,194 | 1,203 |
| (இ) நடுவர் தீர்ப்புக்கு அனுப்பப்பட்டவை .. | 2 | 2 | 1 | .. |
| (ஈ) தொழிலாளர் நீதிமன்றங்கள் முன்பு 33சி (2)ஆம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப் பட்ட விண்ணப்பங்களில் முடிவு செய்யப்பட்டவை .. .. .. | 1,823 | 3,260 | 1,942 | 2,291 |

(iii) தொழில் தகராறுகள் சட்டத்தின் 33சி (1) ஆம் பிரிவின் கீழ் பாக்கித் தொகைகளை வசூலிப்பதற்கான அரசு ஆணை பிறப்பித்த விவரங்கள்—

| ஆண்டு. (1) | இனங்களின் எண்ணிக்கை. (2) | தொகை. (3) ரூ. பை. |
|---|---|---|
| 1984 .. .. .. .. | 28 | 1,03,376.74 |
| 1985 .. .. .. .. | 20 | 7,12,279.24 |



## இணைப்பு 5.

### பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் தொடரப்பட்ட வழக்குகள், முடிக்கப்பட்ட வழக்குகள் குறித்த விவரங்கள்.

| (1) | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. (2) | இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை. (3) | முடிக்கப் பட்டவை. (4) | தண்டனை அளிக்கப் பட்டவை. (5) |
|---|---|---|---|---|
| (1) 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம் | 2,308 | 2,519 | 2,344 | 2,183 |
| (2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் .. | 5,905 | 25,228 | 23,115 | 22,926 |
| (3) தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் .. .. .. .. | 1,481 | 3,106 | 3,050 | 3,006 |
| (4) 1961ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்துத் தொழிலாளர் சட்டம் .. | 164 | 269 | 244 | 233 |
| (5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதலும் நீக்குதலும்) சட்டம். | 44 | 140 | 101 | 99 |
| (6) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடு முறை நாட்கள்) சட்டம் .. .. | 2,157 | 6,742 | 6,499 | 6,437 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத்தோட்ட தொழிலாளர் சட்டம் .. .. .. | 56 | 118 | 85 | 82 |

| சட்டத்தின் பெயர். | விடுதலை பெறப் பட்டவை. (6) | தண்டிக்கப் பட்டவை. (7) | திரும்பப் பெறப் பட்டவை. (8) | தள்ளிப் விடப் பட்டவை. (9) | முடிவுறாமல் உள்ளவை (10) | பெறப்பட்ட அபராதத் தொகை. (11) ரூ. பை. |
|---|---|---|---|---|---|---|
| (1) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் .. | 45 | 14 | 102 | .. | 2,483 | 5,69,990,00 |
| (2) தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம் .. | 14 | 118 | 49 | 8 | 8,018 | 9,49,797,00 |
| (3) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு உணவகங்கள் சட்டம் .. | 18 | 12 | 14 | .. | 1,537 | 1,90,604.00 |
| (4) 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர் சட்டம், | 1 | 8 | 2 | .. | 179 | 35,720.00 |
| (5) 1970 ஆம் ஆண்டு ஒப்பந்த தொழிலாளர் (முறைபடுத்தலும்) நீக்குதலும்சட்டம். | | .. | 2 | .. | 83 | 14,940.00 |
| (6) தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறை நாட்கள்) சட்டம். | 19 | 29 | 17 | .. | 2,400 | 2,10,755.00 |
| (7) 1951 ஆம் ஆண்டு மலைத் தோட்ட தொழிலாளர் சட்டம். | 1 | 2 | .. | .. | 90 | 15,795.00 |



இணைப்பு 5—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் சட்டத்தின் பெயரும். (1) | தொடக்கத்தில் முடிவு பெறாமல் இருந்தவை. (2) | இந்த ஆண்டில் அனுமதிக்கப் பட்டவை. (3) | முடிக்கப் பட்டவை. (4) | தண்டனை அளிக்கப் பட்டவை. (5) |
|---|---|---|---|---|
| (8) 1936 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம். .. .. .. | 609 | 1,229 | 1,207 | 1,183 |
| (9) 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் .. .. | 996 | 2,011 | 1,986 | 1,961 |
| (10) 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் .. .. .. | 43 | 94 | 103 | 103 |
| (11) 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் .. .. | 2 | .. | 1 | .. |
| (12) 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் .. | 97 | 238 | 248 | 246 |
| (13) 1938 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுதல் சட்டம் .. | .. | 2 | 1 | [illegible] |
| (14) 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஏனைய செய்தித்தாள் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம் .. .. | .. | 1 | .. | .. |
| (15) தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வாழ்க்கைப் படி வழங்குதல் சட்டம் .. .. | [illegible] | .. | – | [illegible] |

## இணைப்பு 5—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும், சட்டத்தின் பெயரும். | விடுதலை பெறப் பட்டவை. (6) | தண்டிக்கப் பட்டவை. (7) | திரும்பப் பெறப் பட்டவை. (8) | தள்ளி விடப் பட்டவை. (9) | முடிவுறாமல் உள்ளவை. (10) | பெறப்பட்ட அபராதத் தொகை. (11) |
|---|---|---|---|---|---|---|
| (8) 1936ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்குதல் சட்டம் | 5 | 8 | 11 | .. | 621 | 73.820.00 |
| (9) 1948ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் | 7 | 13 | 5 | .. | 1,021 | 1,49,280.υ0 |
| (10) 1961ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் .. | .. | .. | .. | .. | 34 | 7,685.00 |
| (11) 1972ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் .. .. | .. | .. | 1 | .. | 1 | .. |
| (12) 1936ஆம் ஆண்டு பீடி சுருட்டுத் தொழிலாளர் (பணி நிலைமை) சட்டம் | 2 | .. | .. | .. | 87 | 33,330.00 |
| (13) 1938ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ளுதல் சட்டம் .. | .. | .. | .. | .. | 1 | 200.00 |
| (14) 1955ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஏனைய செய்தித்தாள் தொழிலாளர்கள் (பணி நிபந்தனைகள் பல்வகை விதித்துறைகள்) சட்டம்.. | .. | .. | .. | .. | 1 | .. |
| (15) தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு வாழ்க்கைப்படி வழங்கும் சட்டம் .. | .. | .. | .. | .. | 1 | 2,000.00 |



## இணைப்பு 6.

தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் வரும் நிறுவனங்கள், தொழிலாளர்கள், வசூலிக்கப்பட்ட உரிமம தொகை ஆகியவை பற்றிய விவரம்.

| ஆண்டு. (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | அமர்த்திக்கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை. (3) | வசூலிக்கப்பட்ட உரிம பதிவுத் தொகை. (4) |
|---|---|---|---|
| அ. அமைப்பு ரீதியான தொழில்கள்— | | | |
| 1. 1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம்— | | | |
| 1984 .. .. | 12,562 | 7,93,769 | 64,51,572 |
| 1985 .. .. | 13,011 | 8,02,749 | 1,01,05,413 |
| 2. 1951ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர் சட்டம்— | | | |
| 1984 .. .. | 460 | 92,301 | இதற்கு அவசியமில்லை. |
| 1985 .. .. | 485 | 92,752 | |
| 3. 1961ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் சட்டம்— | | | |
| 1984 .. .. | 1,592 | 58,843 | 80,981.88 |
| 1985 .. — | 1,551 | 68,764 | 98,085.38 |

(ஆ) அமைப்பு ரீதியில்லாத தொழில்கள்—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் | | | | | |
| 1984 | .. | .. | 1,218 | 11,993 (வீட்டிலிருந்து பணி புரிவோர் 2 இலட்சம்) | 23,656.00 |
| 1985 | .. | .. | 1,313 | 12,791 (வீட்டிலிருந்து பணி புரிவோர் 2 இலட்சம்) | 37,680.00 |
| 2. 1947 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம்— | | | | | |
| 1984 | .. | .. | 2,80,769 | 2,65,292 | இதற்கு அவசியமில்லை |
| 1985 | .. | .. | 2,77,370 | 2,74,000 | |
| 3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம்— | | | | | |
| 1984 | .. | .. | 25,900 | 74,238 | 2,92,771.00 |
| 1985 | .. | .. | 26,133 | 74,926 | 3,18,625.55 |



## இணைப்பு 7

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின்கீழ் ஆய்வாளர்கள் ஆய்வு செய்த விபரம்

| சட்டத்தின் பெயர். (1) | முறையான ஆய்வு. (2) | விடுமுறை ஆய்வு. (8) | சிறப்பு ஆய்வு. (4) | திடீர் ஆய்வு. (5) | இரவுநேர ஆய்வு. (6) | சோதனை ஆய்வு. (7) |
|---|---|---|---|---|---|---|
| 1 1948-ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (URF ஆய்வு) .. .. | 20,599 3,495 | 1,978 | 3,101 | 803 | 1,408 | 3,655 |
| 2 தமிழ்நாடு 1947 ஆம் ஆண்டு கடைகள் நிறுவனங்கள் சட்டம் .. .. | 3,49,112 | 38,888 | 8,027 | 13,251 | 10,923 | — |
| 3. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஓட்டல் நிறுவனங்கள் சட்டம் .. .. | 42,185 | 837 | 620 | 543 | 108 | .. |
| 4 1961 ஆம் ஆண்டு மோட்டார் போக்கு வரத்து தொழிலாளர்கள் சட்டம் | 3,718 | 23 | 163 | 101 | — | 24 5 |
| 5 1955 ஆம் ஆண்டு உழைக்கும் பத்திரிகை யாளர்கள், பத்திரிகைத் தொழிலாளர் கள் (பணி நிலைமைகள் பல்வகை விதித் துறைகள்) சட்டம் .. .. | 30 | .. | .. | .. | .. | .. |
| 6 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலா ளர்கள் (முறைப்படுத்துதல் நீக்குதல்) சட்டம் .. .. .. | 1,207 | .. | .. | .. | .. | .. |
| 7 தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம் .. .. | 1,58,406 | 3,211 | 1,772 | 1,254 | 1,408 | .. |
| 8 1954 ஆம் ஆண்டு மலைத் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம் .. .. | 2,153 | 278 | 54 | 97 | .. | .. |
| 9 1937 ஆம் ஆண்டு ஊதியம் வழங்கல் சட்டம் .. .. .. | 53,673 | 258 | 63 | 170 | .. | .. |
| 10 1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியச் சட்டம் .. .. .. | 68,148 | 617 | 168 | 1,946 | .. | .. |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 11 1966 ஆம் ஆண்டு பீடி, சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம் | 2,242 | 29 | 66 | 45 | .. | .. |
| 12 1968 ஆம் ஆண்டு சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் சட்டம் | 145 | 39 | 19 | 4 | .. | .. |
| 13 1961 ஆம் ஆண்டு மகப்பேறு பயன் சட்டம் .. | 12,158 | 86 | 21 | 35 | .. | .. |
| 24 தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களை நிரந்தரப்படுத்துதல்) சட்டம் .. .. .. .. .. | 7,849 | 86 | 26 | 23 | .. | .. |
| 15 1976 ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டம் .. | 7,120 | .. | .. | .. | .. | .. |

## இணைப்பு 8.

(அ) பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் துறை அலுவலர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| தொடர் எண்ணும் விவரங்களும். | தமிழ்நாடு உணவகங்கள் சட்டம். | | தமிழ்நாடு கடைகள் நிறுவனங்கள் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1984 | 1985 | 1984 | 1985 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகள் | 46 | 9 | 175 | 171 | 340 | 348 |
| 2 இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 82 | 106 | 187 | 180 | 1,393 | 2,239 |
| மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | 128 | 115 | 362 | 351 | 1,723 | 2,578 |
| 4 நடப்பு ஆண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 119 | 106 | 191 | 231 | 1,385 | 1,226 |
| 5 ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை, | 9 | 9 | 171 | 120 | 218 | 1,861 |



(ஆ) தொழிலாளர் நலத்துறைத் துணை ஆணையாளர்களால் முடிவு செய்யப்பட்ட வழக்குகள்.

| விவரங்கள். | தொழிலாளர் இழப்பீட்டு சட்டம். | | ஊதியம் வழங்கல் சட்டம். | | பணிக்கொடை வழங்கல் சட்டம். | |
|---|---|---|---|---|---|---|
| | 1984 | 1985 | 1984 | 1985 | 1984 | 1985 |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 ஆண்டு தொடக்கத்தில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை .. .. | 360 | 413 | 317 | 497 | 75 | 120 |
| 2 இவ்வாண்டில் வரப்பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. .. | 980 | 845 | 706 | 1,016 | 373 | 177 |
| 3 மொத்தம் .. .. .. .. | 1,340 | 1,258 | 1,023 | 1,513 | 448 | 297 |
| 4 இவ்வாண்டில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை .. .. .. | 927 | 868 | 526 | 650 | 328 | 190 |
| 5 ஆண்டு முடிவில் முடிவுறாமல் இருந்த வழக்குகளின் எண்ணிக்கை.. .. .. .. | 413 | 420 | 497 | 863 | 120 | 107 |

## இணைப்பு 9.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் சந்தாதாரர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணம் பற்றிய விவரங்கள்.

| நோக்கம். (1) | இனங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| (அ) ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தின் பாலிசிகளுக்குத் தொகை கொடுக்க (P65) .. .. .. | 11,688 |
| (ஆ) குடியிருப்பு மனை அல்லது வீடு அல்லது தனிக் குடியிருப்பு வாங்க அல்லது வீட்டுமனை வாங்கவும், அரசு முகவரமைப்புகளின் கடனைத் தீர்க்க (P68B&68BB) .. .. .. | 9,122 |
| (இ) 15 நாட்களுக்கு மேல் கதவடைப்பு செய்யப்பட்ட அல்லது மூடப்பட்ட நிறுவனங்களின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட முன் பணம் (P68R) .. .. .. .. | 7,883 |
| (ஈ) உறுப்பினருக்கு அவருடைய குடும்பத்தில் உள்ளவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு அவர்களின் மருத்துவ சிகிச்சைக்கான செலவிற்காக (P68J) .. .. .. .. | 358 |
| (உ) உறுப்பினர்களின் திருமணத்திற்கு, உறுப்பினரின் மகள்கள், மகன்கள், சகோதரிகள் சகோதரர்கள் திருமணத்திற்கு உறுப்பினரின் மகன், மகள் ஆகியோரின் உயர் கல்விக்கு (P68K) .. .. | 91,496 |
| (எ) பத்தி 68-Lன்படி வழங்கப்பட்ட முன் பணம் .. .. .. .. | 41,737 |
| (ஏ) மின்வெட்டு காரணமாகத் தொழிற்சாலைகளில் லே-அப் இருக்கும்போது ஊதியத்தில் குறைவு ஏற்பட்டு அவதியுறும் தொழிலாளர்களுக்கு (பத்தி 68M) .. .. .. .. | .. |
| ( ) உடல் ஊனமுற்றவராக உள்ள சந்தாதாரர்கள் இடர்பாட்டைக் குறைக்க கருவிகள் வாங்குவதற்கு (பத்தி 68N) .. .. .. .. | 1 |



## இணைப்பு 10.

31—12—85 ஆம் நாள் நிலவரப்படி, அரசுத் துறை நிறுவனங்கள், 1952 ஆம் ஆண்டு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி பல்வகை விதித் துறைகள் சட்டத்தைச் செயல் படுத்துவதில் தற்போதைய நிலையைக் காட்டும் விவர அட்டவணை.

| நிறுவனங்களின் வகை. | இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை. | | | இத்திட்டத்தைச் செயற் படுத்தும் நிறுவனங்களின் எண்ணிக்கை. | | | இத்திட்டத்தைச் செயற் படுத்தாத நிறுவனங்களின் எண்ணிக்கை. | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | விலக்களிக்கப்பட்டது. | விலக்களிக்கப்படாதது. | மொத்தம். | விலக்களிக்கப்பட்டது. | விலக்களிக்கப்படாதது. | மொத்தம். | விலக்களிக்கப்பட்டது. | விலக்களிக்கப்படாதது. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| மத்திய அரசின் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் பொது நிறுவனங்கள்/கழகங்கள் .. .. | 24 | 10 | 34 | 24 | 7 | 31 | .. | 3 | 3 |
| மாநில அரசின் கட்டுப் பாட்டின் கீழ் இயங்கும் பொது நிறுவனங்கள்/கழகங்கள் .. .. | 115 | 74 | 189 | 65 | 74 | 139 | 50 | .. | 50 |
| மாநில அரசு துறை வகையில் நடத்தும் நிறுவனங்கள் .. | 67 | 84 | 151 | 24 | 21 | 45 | 43 | 63 | 106 |
| நகராட்சி/மாநகராட்சிகளின் கீழ் வரும் உள்ளாட்சி மன்ற அமைப்புகள் .. .. | 5 | 11 | 16 | 5 | 11 | 16 | .. | .. | . |
| மொத்தம் .. | 211 | 179 | 390 | 118 | 113 | 231 | 93 | 66 | 159 |

[1986 May 10

இணைப்பு III

(104 ஆம் பக்கத்தில் இனம் 7-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

## L.A. BILL No. 36 OF 1986.

(As passed by the Assembly.)

*A Bill to provide for the appropriation of moneys out of the Consolidated Fund of the State for the service of the financial year commencing on the 1st April 1986.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Thirty-Seventh Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Appropriation (No. 4) Act, 1986.

2. *Appropriation out of the Consolidated Fund for the financial year commencing on the 1st April* 1986.—The State Government may appropriate out of the Consolidated Fund of the State for the financial year commencing on the 1st April 1986, a sum not exceeding three thousand four hundred and nineteen crores eleven lakhs and eighty-seven thousand rupees [which shall be inclusive of the sum of eight hundred and fifty-four crores seventy-eight lakhs and thirteen thousand rupees specified in section 2 of the Tamil Nadu Appropriation (Vote on Account) Act, 1986 (Tamil Nadu Act 23 of 1986)] being moneys required to meet—

(*a*) the grants made by the Tamil Nadu Legislative Assembly for the year, as set forth in column (3) of the Schedule ; and

(*b*) the expenditure charged on the Consolidated Fund of the State for that year, as set forth in column (4) of the Schedule.



1986 மே 10]

## THE SCHEDULE.

(See section 2)

| *Demand number.* | *Services and purposes.* | *Sums not exceeding* — *Voted by the Legislative Assembly.* | *Charged on the Consolidated Fund of the State.* | *Total.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 1 | Land Revenue Department .. | 18,87,18,000 | .. | 18,87,18,000 |
| 2 | State Excise Department .. | 5,26,43,000 | .. | 5,26,43,000 |
| 3 | Motor Vehicles Acts—Administration .. .. .. | 3,48,86,000 | .. | 3,48,86,000 |
| 4 | General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. | 16,99,20,000 | 10,000 | 16,99,30,000 |
| 5 | Stamps—Administration .. | 1,19,60,000 | .. | 1,19,60,000 |
| 6 | Registration .. .. .. | 7,51,62,000 | 1,000 | 7,51,63,000 |
| | *Debt Charges* .. .. | .. | 1,85,25,15,000 | 1,85,25,15,000 |
| 7 | State Legislature .. .. | 1,81,26,000 | 4,34,000 | 1,85,60,000 |
| 8 | Elections .. .. .. | 57,86,000 | .. | 57,86,000 |
| 9 | Head of State, Ministers and Headquarters Staff .. .. | 34,98,91,000 | 2,04,31,000 | 37,03,22,000 |
| 10 | Milk Supply Schemes .. .. | 1,81,89,000 | .. | 1,81,89,000 |
| 11 | District Administration .. | 43,48,35,000 | 66,000 | 43,49,01,000 |
| 12 | Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 .. .. .. .. | 3,92,21,000 | 25,000 | 3,92,46,000 |
| 13 | Administration of Justice .. | 16,26,55,000 | 1,88,81,000 | 18,15,36,000 |
| 14 | Jails .. .. .. .. | 10,59,97,000 | 1,000 | 10,59,98,000 |
| 15 | Police .. .. .. .. | 1,06,23,53,000 | 1,01,000 | 1,06,24,54,000 |
| 16 | Fire Services .. .. .. | 8,34,06,000 | 1,000 | 8,34,07,000 |
| 17 | Education .. .. .. | 5,50,66,38,000 | 6,000 | 5,50,66,44,000 |
| 18 | Medical .. .. .. .. | 1,29,98,72,000 | .. | 1,29,98,72,000 |
| 19 | Public Health .. .. .. | 68,50,36,000 | .. | 68,50,36,000 |
| 20 | Agriculture .. .. .. | 1,15,56,79,000 | 6,000 | 1,15,56,85,000 |
| 21 | Fisheries .. .. .. | 6,12,13,000 | 10,000 | 6,12,23,000 |
| 22 | Animal Husbandry .. .. | 29,62,68,000 | 1,000 | 29,62,69,000 |
| 23 | Co-operation .. .. .. | 14,93,72,000 | .. | 14,93,72,000 |
| 24 | Industries .. .. .. | 3,43,76,000 | .. | 3,43,76,000 |
| 25 | Cinchona .. .. .. | 3,88,27,000 | .. | 3,88,27,000 |
| 26 | Handlooms and Textiles .. | 19,36,45,000 | .. | 19,36,45,000 |
| 27 | Khadi .. .. .. .. | 3,30,71,000 | .. | 3,30,71,000 |
| 28 | Community Development Projects and Municipal Administration .. .. | 1,77,32,61,000 | 1,000 | 1,77,32,62,000 |
| 29 | Labour including Factories .. | 14,50,07,000 | .. | 14,50,07,000 |
| 30 | Social Welfare .. .. .. | 76,04,25,000 | .. | 76,04,25,000 |
| 31 | Welfare of the Scheduled Tribes and Castes, etc. .. | 47,89,44,000 | 3,000 | 47,89,47,000 |
| 32 | Welfare of the Backward Classes, etc. .. .. .. | 12,89,61,000 | 1,000 | 12,89,62,000 |

THE SCHEDULE—*cont.*

(See section (2))

| Demand number. | Services and purposes. | *Sums not exceeding* Voted by the Legislative Assembly. | Charged on the Consolidated Fund of the State. | Total.* |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | RS. | RS. | RS. |
| 33 | Housing .. .. .. | 31,91,74,000 | .. | 31,91,74,000 |
| 34 | Urban Development .. .. | 40,02,82,000 | .. | 40,02,82,000 |
| 35 | Civil Supplies .. .. .. | 1,45,23,45,000 | *2,000* | 1,45,23,47,000 |
| 36 | Irrigation .. .. .. | 64,86,31,000 | *12,000* | 64,86,43,000 |
| 37 | Public Works—Building .. | 4,04,53,000 | *51,000* | 4,05,04,000 |
| 38 | Public Works—Establishment and Tools and Plant . | 22,78,64,000 | .. | 22,78,64,000 |
| 39 | Roads and Bridges .. .. | 88.36,89,000 | .. | 88,36,89,000 |
| 40 | Road Transport Services and Shipping .. .. | 5,18,45,000 | *2,000* | 5,18,47,000 |
| 41 | Relief on account of Natural Calamities .. .. .. | 40,67,000 | *8,75,00,000* | 9,15,67,000 |
| 42 | Pensions and Other Retirement Benefits .. .. .. | 74,94,83,000 | *1,38,09,000* | 76,32,92,000 |
| 43 | Miscellaneous .. .. .. | 1,04,41,92,000 | *13,73,000* | 1,04,55,65,000 |
| 44 | Stationery and Printing .. | 18,95,95,000 | *2,40,000* | 18,98,35,000 |
| 45 | Forest Department .. .. | 14,98,49,000 | *1,000* | 14,98,50,000 |
| 46 | Compensation and Assignments .. .. .. .. | 27,43,57,000 | *22,53,000* | 27,66,10,000 |
| 47 | Information, Tourism and Film Technology .. .. | 3,07,72,000 | .. | 3,07,72,000 |
| 48 | Rural Industries .. .. | 11,78,52,000 | .. | 11,78,52,000 |
| 49 | Water-Supply .. .. | 1,27,13,94,000 | .. | 1,27,13,94,000 |
| 50 | Capital outlay on Agriculture | 2,28,12,000 | *1,000* | 2,28,13,000 |
| 51 | Capital Outlay on Industrial Development .. .. | 13,65,17,000 | *1,000* | 13,65,18,000 |
| 52 | Capital Outlay on Irrigation .. | 63,89,13,000 | .. | 63,89 13,000 |
| 53 | Capital Outlay on Public Works—Buildings .. .. | 42,38,18,000 | *4,02,000* | 42,42,20,000 |
| 54 | Capital Outlay on Roads and Bridges .. .. .. | 25,43,62,000 | *1,000* | 25,43,63,000 |
| 55 | Capital Outlay on Road Transport Services and Shipping .. | 2,88,85,000 | .. | 2,88,85,000 |
| 56 | Capital Outlay on Forests .. | 18,16,12,000 | .. | 18,16,12,000 |
| 57 | Capital Outlay on Rural Industries .. .. .. .. | 1,63,01,000 | *2,000* | 1,63,03,000 |
| 58 | Miscellaneous Capital Outlay. | 8,04,07,000 | *5,000* | 8,04,12,000 |
| 59 | Loans and Advances by the State Government .. .. | 4,01,22,92,000 | .. | 4,01,22,92,000 |
| | *Public Debt - Repayment* .. | .. | *2,98,69,32,000* | 2,98,69,32,000 |
| | **Grand Total** .. | 29,20,61,06,000 | *4,98,50,81,000* | 34,19,11,87,000 |

1046/85 (242)

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

# செயலக வெளியீடு
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 12, 1986-தொகுதி 226 எண் 2.
Monday, 12th May 1986-Volume 226 No. 2.

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.00]

(242)

பொருளடக்கம்.


பக்கங்கள்

1. இரங்கல் தீர்மானம்—

சட்டமன்றப் பேரவை உறுப்பினர் பாளை திரு. எஸ். நாராயணன் மறைவு குறித்து 227—228

2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். 228—230



143557

D

V211,32'N86

N86.226.1-3


42 C 33—1

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

திங்கட்கிழமை; 1986 மே 12, சித்திரை 29,
அட்சய, திருவள்ளுவராண்டு—2017.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10.00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. இரங்கல் தீர்மானம்.

### சட்ட மன்றப் பேரவை உறுப்பினர் பாளை திரு. எஸ். நாராயணன் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, 1984 ஆம் ஆண்டு திருநெல்வேலி சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர் பாளை திரு. எஸ். நாராயணன் அவர்கள் 11—5—1986 அன்று மாரடைப்பால் திடீரென இயற்கையெய்தியதைக் குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது.

பாளை திரு. நாராயணன் அவர்கள் 1934 ஆம் ஆண்டு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். அவர் 1969 முதல் 1976 வரை பாளையங்கோட்டை நகராட்சியின் தலைவராக விளங்கினார். கதர் வாரியத்தின் துணைத் தலைவராகவும், தொழில் முதலீட்டுக் கழகத்தின் இயக்குநர்களில் ஒருவராகவும், அறநிலையத் துறையின் வட்டாரத் தலைவராகவும் விளங்கினார்.

அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னாரது மறைவிற்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

பாளை திரு. எஸ். நாராயணன் மறைவு குறித்து

[1986 மே 13

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இன்று எடுத்துக் கொள்வதாக இருந்த தனி உறுப்பினர் அலுவல்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

மறைந்த பேரவை உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் இந்த அவை இத்துடன் ஒத்தி வைக்கப்பட்டு மீண்டும் 13-5-86 செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(10.03)

## 2. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### அ.சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

*226. தமிழ் நாடு அரசு தேர்வாணையகத்தின் 1979-80 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

227. தமிழ் நாடு 1978 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (துணைத் தலைவர் தேர்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 3—3—1986 ஆம் நாளிட்ட 148 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 35/1958) 199. (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

228. அண்ணா மாவட்டம், வேடசந்தூர் தாலுகாவைச் சார்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 17—12—1985 ஆம் நாளிட்ட 883 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ் நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 15/1958) 28 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது).

229. தமிழ் நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 2—7—1985 ஆம் நாளிட்ட 1592 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

* 10—5—1986 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.



1986 மே 12]

230. தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [தமிழ் நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கல் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 4/1971) 47 (2) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

231. தமிழ் நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

232. வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 26—3—1981 ஆம் நாளிட்ட II (1)/ CTRE/164 [C] 81 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 3—1—1986 ஆம் நாளிட்ட 11 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது).

233. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 6—9—1977 ஆம் நாளிட்ட II (1) CTRE/ 203/77 ஆம் எண் அறிவிக்கையில் திருத்த மொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 20—11—1985 ஆம் நாளிட்ட 1051 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின்கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

234. பூந்தமல்லி, ஊரக வேலைவாய்ப்பு திட்ட சங்கத்தினரால் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு செலுத்தக் கூடிய வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 16—12—1985 ஆம் நாளிட்ட 1102 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

235. மதுரை மாவட்டம், வேடசந்தூர் தாலுகாவைச் சார்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 18—10—1985 ஆம் நாளிட்ட 780 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ் நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 15/1958) 28 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய ஏடுகள்.

இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ் நாடு
# சட்டமன்ற மேலவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE COUNCIL DEBATES

## செயலக வெளியீடு
## OFFICIAL REPORT

செவ்வாய்கிழமை, 13 மே 1986-தொகுதி 226 எண் 3.
Tuesday, 13th May 1986-Volume 226 No. 3

சட்டமன்ற மேலவைச் செயலகம்.
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

LEGISLATIVE COUNCIL SECRETARIAT.
Fort St. George, Madras-600 009.

விலை ரூ. 2.00]

## பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்—விடைகள் .. .. .. | 231—247 |
| 2 ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| மேலவையை ஒழிப்பது குறித்து கொள்கையளவில் அரசு முடிவு எடுத்திருப்பது குறித்து | 247—285 |
| 3 அறிவிப்புகள்— | |
| (1) அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல் .. .. | 286 |
| (2) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் .. .. .. | 288 |
| (3) உரிமைக்குழு மற்றும் அவைக் குழு ஆகியவற்றிற்கான வேட்புத்தாள் வந்து சேரவேண்டிய நாள் பற்றி .. .. | 317 |
| 4 கவன ஈர்ப்பு— | |
| செவலபிரை கிராம சத்துணவு மையத்தில் உணவருந்திய குழந்தைகள் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது குறித்து.. .. .. .. | 286 |
| 5 அரசின் தீர்மானம்— | |
| வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் | 287 |
| 6 தனி உறுப்பினர் அலுவல்— | |
| (1) சட்ட முன் வடிவு. | |
| 1986 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலை கழக (திருத்த) சட்ட முன்வடிவு .. | 289 |
| (2) தீர்மானங்கள்— | |
| மத்திய அரசு திறக்கவிருக்கும் மாதரி பள்ளிகளில் கட்டாய இந்தி திணிப்பு | 289—317 |
| 7 அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள். .. | 318—320 |


143557



D
V21,32'N86
N86,221.1-3

# தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 13 மே 1986.

செவ்வாய்க்கிழமை, 13 மே 1986,

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 10-00 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 243 மற்றும் 244 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

### சென்னை—பாண்டிச்சேரி வழித்தடத்தில் புதிய பேருந்துகள்.

* 245 வினா.—**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் (திரு. எல். ஜெயச்சந்திரன் சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்குச் செல்லும் அரசு போக்கு வரத்துக் கழக சர்வீஸ், சொகுசு மற்றும் சாதாரண பேருந்துகள் மோசமான நிலையில் உள்ளன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், அந்தத் தடத்தில் புதிய பேருந்துகள் விடும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) மற்றும் (இ) இத்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் ஐந்து சாதாரணப் பேருந்துகளும் ஒரு குளுமை வசதியுடன் கூடிய பேருந்தும் இயக்கப்பட்டன. இப்பேருந்து களில் ஐந்து பழைய பேருந்துகளை மாற்றி 10—9—1985 முதல் புதிய பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும் இத்தடத்தில் இயக்கப்பட்ட குளுமை வசதியுடன்கூடிய ஒரு பேருந்தை செப்பனிடும் பணிக்கு ஆகும் செலவு மிகவும் அதிகமாக இருந்ததால், இப்பேருந்திற்கு பதிலாக சாதாரணப் பேருந்து ஒன்று ("Semi Deluxe Bus") 1—12—1985 முதல் இயக்கப் படுகிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்:** தலைவரவர்களே, சென்னையிலிருந்து பாண்டிச்சேரி வழியாக கடலூருக்கு சொகுசுப் பேருந்து முன்பு விடப்பட்டு வந்தது. என்ன காரணத்தாலோ அது ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

பாண்டிச்சேரிக்கு அருகாமையிலுள்ள, தென்னாற்காடு மாவட்டத்தினுடைய தலைநகரான கடலூரையும், சென்னையையும் இணைக்கும் வகையில் சொகுசுப் பேருந்து விடும் கருத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் ஆய்ந்து, முடிவு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே விடப்பட்ட பேருந்து நிறுத்தப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். அதுபற்றிய தகவல்கள் இல்லை. அவசியத்தைப் பொறுத்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சி. இராமலிங்கம்: தலைவரவர்களே, சென்னையிலிருந்து பண்ருட்டிக்கு ஒரு பேருந்து விடப்பட்டு வந்தது. அந்தப் பேருந்தை நீட்டி, சென்னப்பநாயக்கன் பாளையம், குறிஞ்சிப்பாடிவரை சென்றும், மீண்டும் சென்னைக்கு வரும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பண்ருட்டி பெரிய வியாபார ஸ்தலம். அங்கிருந்து கிளம்பி, காலையிலே சென்னைக்கு வர வசதியாக இருந்தது. இப்போது குறிஞ்சிப்பாடியிலிருந்து வருவதால், அங்கேயே நிரம்பி விடுகிறது. இதனால் பண்ருட்டி, அரசூர், புதுப்பேட்டை, ஆனத்தூர் போன்ற இடங்களிலுள்ள மக்கள் எல்லாம் சென்னைக்கு வர இடமில்லாமல் தவிக்கிறார்கள். எனக்கே அந்த நிலை ஏற்பட்டது. எனவே மீண்டும் பண்ருட்டிக்கு தனிப் பேருந்து விடப்படுமா?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: பாண்டிச்சேரிக்குப் பேருந்து விடுவது பற்றித்தான் கேள்வி.

(முற்பகல் 10-05)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இது பாண்டிச்சேரி சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் பண்ருட்டியைப் பொறுத்தவரையில், வேறு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் அந்தப் பேருந்தை இயக்க முடியும். எனவே தனியாக இது பரிசீலிக்க வேண்டியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நந்தனம்—கோட்டூர்புரத்தை இணைக்கும் பாலம்

*246 வினா.—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில், நந்தனத்தையும் கோட்டூர்புரத்தையும் இணைக்கும் பாலம் கட்டு பணி, தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

(இ) அது எப்போது கட்டி முடிக்கப்படும்?



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) அடித்தளம், இடைத்தள கட்டிட உறுப்புக்கள் மேல்தளத்தின் கீழ்மட்ட அளவில் (Bottom of Detckslab) முடியும் தருவாயில் உள்ளது. வலுவேற்றிய கம்பிகள் பொருத்திய உத்திரங்கள் (Prestressed conerete Girders) 5 எண்கள் முடி பொருத்தும் ஏற்பாடுகள் (Launching of girder நடைபெற்று வருகின்றன. மீதம் உள்ள 25 உத்திரங்கள் கல்கலவை வேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(இ) மேற்கண்ட பால வேலை இன்னும் சுமார் எட்டு மாத அளவில் முடிக்கப்படுமென்று தமிழ் நாடு கட்டுமானக் கழகம் உறுதியளித்துள்ளது.

திரு. ஆர். டி. சீத்தாபதி: இந்தப் பணி துவக்கப்பட்ட நாள் எது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 5—1—1981-லே அனுமதி கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு டெண்டர் போன்ற காரியங்களுக்காக நாட்கள் எடுக்கப்பட்டிருக்கும். ஆக, 5—1—1981-ல் அரசு இதனைக் கட்ட அனுமதி தந்திருக்கிறது. இப்பொழுது வேலை நடந்துகொண்டிருக்கிறது.

திரு. ஆர். டி. சீத்தாபதி: இப்பொழுது சொன்ன அந்த உறுதிமொழியை நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நிறைவேற்ற வேண்டுமென்ற உணர்வோடு தான் அரசு உறுதி தந்திருக்கிறது.

ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தித் திட்டம்.

*243 வினா.—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தித் திட்டத்திற்கென, ஒதுக்கப்பட்ட நிதியில் ஏதேனும் ஒழுங்கீனங்கள் நடைபெற்றதாக, அரசுக்கு ஏதேனும் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கன்னியாகுமரி, இராமநாதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் மட்டும், ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியில் ஒழுங்கீனங்கள் நடைபெற்றுள்ளதாக புகார் வந்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் குறும்பனை கிராமத்திற்கு வழங்கப்பட்ட கடன்கள் சில இடைத் தரகர்களின் தலையீடு காரணமாக திட்டபலன் மக்களுக்கு கிடைக்கவில்லை எனத் தெரியவந்தது. அந்த இடைத் தரகர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறை கண்காணிப்பாளருக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கமுதி ஊராட்சி ஒன்றியத்தில் இராம சாமிப்பட்டி என்ற கிராமத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட அமுலாக்கம் குறித்துவந்த புகார்களின் மீது தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** புகார் வந்து இதைப்பற்றி நடைபெறாமலிருக்க, இப்படிப்பட்ட புகார்கள் இனிமேல் வாராமலிருக்க ஆவன செய்யும் அளவுக்கு அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** புகார் வந்து இதைப்பற்றி விசாரணை செய்து சிலர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். குற்றம் புரிகிறவர்கள் சமுதாயத்தின் எல்லா நிலையிலும் எப்போதும் இருக்கத்தான் செய்வார்கள். அதுபற்றிப் புகார் வந்த பிறகு, நடவடிக்கை எடுப்பதைத் தவிர, வேறு வழியில்லை. இருந்தாலும் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுடைய பட்டியலைத் தயாரிப்பதிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று ஆங்காங்குள்ள ஊராட்சி ஒன்றியங்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** இப்பொழுது ஒவ்வொரு துறையும் தனியாகக் காவல் துறையை வைத்திருக்கின்றன. உதாரணமாக மதுவிலக்குக்கு என்று தனியாகவும், புட் செல்லுக்கு என்று தனியாகவும் காவல் துறை இருக்கிறது. அதுபோன்று இதற்காகவும் தனியாகக் காவல் துறையை ஏற்படுத்த அமைச்சர் முன்வருவாரா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இப்பொழுது அந்த யோசனை இல்லை.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** எதிர்காலத்திலாவது இதனைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று கூறும் அளவிற்கு நான் ஜோதிடர் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



## அண்ணா நகர், புதுக்கோட்டை நகராட்சி.

*244 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட, திருக்கோணம் புதுத் தெரு அருகில் உள்ள அண்ணா நகருக்கு, பல ஆண்டுகளாக சாலை, குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் எதுவும் செய்யப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆம், எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) மற்றும் (இ) புதுக்கோட்டை நகராட்சியில் அரசு நத்தம் புறம்போக்கு நிலத்தில் 60 வீடுகள் உள்ள அண்ணாநகர் பகுதிக்கு, முறையான மனைப்பிரிவு நகர் ஊரமைப்புத் துறையின் அங்கீகாரம் பெறப்படவில்லை; சாலைகள் நகராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை. இப்பகுதியை நகரத்தின் பிரதானசாலையுடன் இணைக்கும் வண்டிப்பாதையில் குறுக்கிடும் தனியார் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குடிநீர் பொதுக்குழாய் போட குடிநீர் வடிகால் வாரியக்கண்காணிப்பு பொறியாளரின் அனுமதி பெற நகராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆட்சேபனை இல்லாத இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு கழிப்பிடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** புதுக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட அண்ணா நகர் பகுதியில் பல ஆண்டுக் காலமாக சாலை வசதி இல்லை, கழிப்பிட வசதியில்லை, குடிநீர் வசதி இல்லை. இப்பொழுது நில ஆர்ஜிதம் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நீண்டகாலமாகவே இப்படிப்பட்ட நிலைமை இருந்து வருகிறது. இதற்காக முன்னதாகவே திட்டமிட்டு முன்பு இருந்த நகராட்சி ஆணையாளர்கள் நடவடிக்கை எடுக்காத காரணம் என்ன? இப்போது எடுக்கப்பட்டுள்ளது எப்போது முடிவுக்கு வரும்? அதனால் எப்போது அந்த மக்கள் பயன் பெறுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

[1986 மே 13

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, தனியார் மனைகளைப் பிரித்து விற்று விடுகிற நேரத்தில், தலைவர்களின் பெயரை வைத்து விற்றுவிடுவதால் பல்வேறு சங்கடங்கள் வருகின்றன. அதை மீண்டும் பொதுமக்கள் வாங்குவதால், ஏற்கெனவே தனியார் மனைகளாக இருந்த காரணத்தால், அபிவிருத்திப் பணிகளுக்காகப் பணம் கட்டியும், முறையான முன் அனுமதி பெற்றும் இருந்தால், சங்கடங்கள் இருக்காது. தனியார் மனைகளை விற்றுவிடுகிற நேரத்தில், அவர்களாகவே அரசைக் கேட்காமல் விற்றுவிட்டு, பணத்தைப் பெற்றுக்கொண்டு போய்விடுகிறார்கள். பிறகு அங்கே குடியேறிய மக்கள் வந்த பின்னால், சங்கடப்படுகிறார்கள். அங்கே பாதைகள் ஏற்படுத்த வேண்டுமென்றால், வேறு தனியாருக்குச் சொந்தமான மனைகளைத்தான் ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருக்கிறது. அதனால் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இருந்தாலும் இதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மற்ற பணிகள் தாமதமடைந்தாலும், குடிநீர்ப் பிரச்சினை என்பது மிகவும் முக்கியமானது. அதற்கு சிரமம் ஏற்படாமல் தடுக்க, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவாவது சிறப்பு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். தனியார் அங்கீகாரம் பெறாத இடம் என்று இருந்தாலும் அங்கே இருக்கிற மக்களுக்குக் குடிநீர் தருவதற்கான முயற்சி களில் இப்போதுள்ள நகராட்சித் தலைவர்கள் ஈடுபட்டால், அதைச் செய்து கொடுக்க முன்வந்தால், அரசு பரிசீலித்து உதவி செய்யும்.

**சத்துணவுக் கூடங்களுக்கு பாமாலின் எண்ணெய், பருப்பு வழங்குதல்**

* 247 வினா.—திரு. ஜேப்பியார் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சத்துணவுக் கூடங்களுக்கு வழங்கப்படும் பாமாலின் எண்ணெய், பருப்பு போன்றவற்றை, "தமிழக அரசு" என முத்திரையிடப்பட்ட டின்களில் வழங்க அரசு முன்வருமா?



1986 மே 13]

**மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன்:** சத்துணவு மையங்களுக்கு தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், அரிசி, பருப்பு மற்றும் பாமாலின் எண்ணெய் ஆகியவற்றை வழங்கி வருகிறது. அரிசி மற்றும் பருப்பைப் பொறுத்தவரையில், இப்பொழுது கூட அப்பொருட்கள் தரப்படுத்தப்பட்டு (Standardised) 100 கிலோ, 50 கிலோ, 20 கிலோ, 10 கிலோ என்ற அளவுகளில் கோணிப்பைகளில் தைத்து வழங்கப்படுகின்றன.

சமையல் எண்ணெய் தற்போது பீப்பாய்களில் எடுத்துச் செல்லப்பட்டு நூறு சதவீதம் எடை அடிப்படையில் வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு அளவுகள் கொண்ட டின்களில் மூடி முத்திரையிட்டு அவைகளை சத்துணவு மையங்களுக்கு வழங்குதல் என்பது நடைமுறையில் இயலாது. மூடி முத்திரையிட்ட டின்களில் வழங்க வேண்டுமென்றால், எண்ணெயின் விலை உயரும். ஏற்படக்கூடிய கூடுதல் செலவினை இப்போதுள்ள நிதிநிலையில் ஏற்க இயலாது.

**திரு. ஜேப்பியார்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு மாதாமாதம், நவதானியங்களான பருப்பு, அரிசி, எண்ணெய் போன்றவைகள் எவ்வளவு தரப்படுகின்றன? 1982 லிருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு உணவுப் பொருட்கள் தரப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன்:** தலைவர் அவர்களே, இரண்டு வயது முதல் 4 வயது வரை உள்ள பாலர் மையங்களுக்கு, அரிசி 5,842 டன்னும், பருப்பு 750 டன்னும், எண்ணெய் 219 டன்னும் மாதமொன்றுக்கு வழங்கப் படுகின்றன. 5 வயது முதல் 9 வயது வரை உள்ள பள்ளிக் குழந்தைகள் உள்ள மையங்களில் 11,952 டன் அரிசியும், 1,793 டன் பருப்பும், 359 டன் எண்ணெயும் வழங்கப்படுகின்றன. 10 வயது முதல் 15 வயது வரை உள்ள பள்ளிக் குழந்தைகள் உள்ள மையங்களுக்கு 4,104 டன் அரிசியும், 582 டன் பருப்பும் 116 டன் எண்ணெயும் வழங்கப்பட்டு வருகின்றன.

முதியோர்களுக்கு 1,578 டன் அரிசியும், 118 டன் பருப்பும், 24 டன் எண்ணெயும் வழங்கப்படுகின்றன. இது ஒரு மாதத்திற்கு ஆகும் செலவாகும்.

1982 ஆம் ஆண்டு முதல் கணக்குகள் கேட்டிருக்கிறார்கள். 1982-83-ல், அரிசி 1,68,410 டன்னும், பருப்பு 25,061 டன்னும், எண்ணெய் 12,289 டன்னும் வழங்கப்பட்டன.

1983-84 ஆம் ஆண்டு, அரிசி 1,93,873 டன்னும், 27,185 டன் பருப்பும், 11,145 டன் எண்ணெயும் வழங்கப்பட்டன.

1984-85 வரை, 2,24,471 டன் அரிசியும், 31,919 டன் பருப்பும், 8,718 டன் எண்ணெயும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஏப்ரல் 1985 வரை 15,999 டன் அரிசியும், 2,229 டன் பருப்பும், 5,003 டன் எண்ணெயும் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவர் அவர்களே, இந்த உணவுப் பொருட்கள் வரும் கவர்களில் ' தமிழக அரசு ' முத்திரை இடுவதில் அதிகச் செலவாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த பாலிதீன் பைகளோ, டின்களோ, அவைகளில் எங்கே பொருட்கள் அடைக்கப் படுகின்றனவோ, அங்கேயே இந்த முத்திரையைப் போட ஏற்பாடு செய்தால், செலவும் குறையும், கலப்படப் பொருட்களைக் கலப்பதும் தடுக்கப்படும். ஆகவே, அந்த அடிப்படையில் **தமிழ் நாடு** நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு உத்திரவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-15)

**மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மையத்திற்கும் வருகிற குழந்தைகளினுடைய எண்ணிக்கை வேறு படுகிறது. எனவே மாதா மாதம் தேவைப்படுகின்ற எண்ணெயினுடைய அளவும் மாறுபடுகிறது. ஆகவே குறிப்பிட்ட அளவு டின்களில் பெறுவ தென்பது இயலாது. அதன் அளவை அவ்வப்போது மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அப்போது அதிகமான செலவு ஏற்படுவதற்கும் வாய்ப்பு இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**சத்துணவு மையங்கள்.**

* **248 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—10—1985 அன்றுள்ளபடி, சத்துணவு மையங்கள் எத்தனை உள்ளன?

(இ) அம்மையங்களில் பணியாற்றும் அமைப்பாளர்கள் எத்தனை பேர்?

(உ) அவர்களுக்கு தற்போது வழங்கப்படும் மாத ஊதியம் எவ்வளவு?

(எ) அவ்வூதியத்தை உயர்த்தும் உத்தேசம் ஏதும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன் :** (அ) 66,504 **சத்துணவு மையங்கள் உள்ளன.**





(இ) ஒரு மையத்திற்கு ஒரு அமைப்பாளர் வீதம் 66,504 பேர் பணியாற்றுகின்றனர்.

(உ) ஒவ்வொரு மாதமும் குழந்தைகள் நல அமைப்பாளருக்கு ரூ. 195-ம் சத்துணவு அமைப்பாளருக்கு ரூ. 170-ம் மதிப்பூதியம் அளிக்கப் படுகிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, சத்துணவு அமைப்பாளர்களுக்கு 170 ரூபாய் என்றும், குழந்தைகள் நல அமைப்பாளர் களுக்கு 195 ரூபாய் என்றும் மதிப்பூதியம் அளிக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த 170 ரூபாய் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தத் தொகையை குழந்தைகள் நல அமைப்பாளர் களுக்குத் தருகின்ற 195 ரூபாய் அளவுக்காவது தற்காலிகமாக உயர்த்து வதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா? அடுத்து நான் கேட்ட கேள்வியின் இறுதிப் பகுதிக்கு அமைச்சர் அவர்கள் விடையளிக்கவில்லையே. அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன் :** தலைவர் அவர்களே, இப்போது குழந்தைகள் நல மையத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் குழந்தைகளுக்கு வெறும் உணவு அளிக்கும் பணியை மட்டும் பார்க்கவில்லை. அவர்கள் கருவுற்றிருக்கிற தாய்மார்களுக்கும், ஆறு மாதக் குழந்தைகள் வரைக்கும் கோதுமை போன்ற உணவுப்பொருள்கள் வழங்குவதிலும் கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். எனவேதான் ஏற்கெனவே இருந்த திட்டத்தின் அடிப்படையில் வழங்குகின்ற ரூ. 175 உடன் நான்காவது சம்பளக் குழு 20 ரூபாய் மேலும் உயர்த்த வேண்டுமென்று பரிந்துரை செய்யப் பட்டதை அரசு ஏற்று, இப்போது 195 ரூபாயாக வழங்கிக் கொண்டிருக்கிறது. சத்துணவு அமைப்பாளருக்கு முன்பு ரூ. 150 ஊதியம் அளித்து வந்தோம். அவர்கள் பகுதிநேர வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் 20 ரூபாய் உயர்த்த வேண்டுமென்று நான்காவது ஊதியக் குழு பரிந்துரை செய்ததால், அவர்களுக்கும் ரூ. 20 உயர்த்தப்பட்டு ரூ. 170 ஆக ஆக்கப் பட்டது. அவ்வூதியங்களை உயர்த்த தற்போது உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்களில் சத்துணவு அமைப்பாளருக்கு ரூ. 170-ம், சமையல்காரர்களுக்கு ரூ. 60-ம், அவர்களுக்கு உதவுகின்றவர்களுக்கு ரூ. 30-ம் வழங்கப்படுகிறதே, இவர்களைப் பகுதி நேர ஊழியர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள், ஆனால் வீட்டுக்கு ஒருவர் வேலைத்

திட்டத்தில் உள்ள அறிக்கையில் கண்டுள்ளபடி, இவர்களும் வேலையளிக்கப் பட்டவர்கள் என்று இருக்கிறதே. இவற்றில் எது உண்மை? இவர்கள் ஊதியம் இப்போது உயர்த்தப்படாவிட்டாலும், வருங்காலத்திலாவது அதை உயர்த்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு கிராமத்திலிருக்கின்ற ஏழை எளியவர்களும் வாய்ப்பு பெற வேண்டுமென்கிற வகையில்தான் இந்தப் பகுதி நேர ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் காலை 9 மணிக்கு வந்து மதியம் 2 மணிவரை குழந்தைகளைப் பார்த்துக்கொள்கிறார்கள். ஆயாக்கள் காலையில் வந்து சமையல் பொறுப்பை மட்டும் பார்த்துக்கொள்கிறார்கள். அமைப்பாளர்களுக்கு கல்வித் தகுதி. என்று எஸ்.எஸ்.எல்.சி.-யை நிர்ணயித்திருக்கிறோம். ஆயாக்களுக்கு வேலைக்கு எந்தக் கல்வித் தகுதியும் இல்லை. எனவே இவற்றைக் கணக்கில் கொண்டுதான் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஜேப்பியார்:** தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய துணையோடு மாநிலத்திலே நடைபெறுகின்ற ஊட்டச் சத்து மையங்களிலே பணி புரிகிறவர்களுக்கு மத்திய அரசு மாதம் ரூ. 325 சம்பளமாக 1985-ஆம் ஆண்டு நிர்ணயம் செய்திருக்கிறது. அத்தொகை நம்முடைய மாநிலத்திலே நடைமுறைப்படுத்தப்படாத நிலை இருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன்:** தலைவர் அவர்களே, இது பரிசீலனையில் இருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, குழந்தைகள் நல காப்பகத்திலே இருப்பவர்களுக்கு வேறு பணிகளும் இருப்பதால், அவர்களுக்கு 195 ரூபாய் ஊதியம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சத்துணவு அமைப்பாளர்களும் எஸ்.எஸ்.எல்.சி. கல்வித் தகுதியைப் பெற்றவர்கள். அவர்களும் குழந்தைகளுக்கு திருக்குறள் சொல்லித்தர வேண்டுமென்ற திட்டத்தை வகுத்து அவ்வாறு சொல்லித் தருகிறார்கள். எனவே இவ்வாறு இவர்களும் பல பணிகள் செய்துகொண்டிருக்கிற காரணத்தினால், இவர்களுக்காக ரூ. 195 என்ற உயர்த்தி, இவர்களிருவரிடையே இருக்கிற வேறுபாட்டையாவது களைவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. இரா. சௌந்தரராஜன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நான் மதிக்கிறேன். இந்தத் திட்டத்திற்குப் பிறகு ஏற்படுகின்ற செலவை நாம் பார்க்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். நான்காவது ஊதியக் குழு பரிந்துரை செய்த அளவுக்கு அரசு உயர்த்தித் தந்திருக்கிறது. அவர்களுக்கு மேலும் ஊதியத்தை உயர்த்தும் எண்ணம் பரிசீலனையில் இல்லை.

வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்ட கட்டிடம் இடிந்து விழுதல்

*249. **திரு. ஆர். டி. சீத்தாபதி:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், நாராயணநகர் வெள்ளக்குட்டை ஏரிப்பகுதியில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்டு வந்த மாடி கட்டிடம் ஒன்று, 29-7-1985 அன்று, இடிந்து விழுந்ததா?

(இ) ஆம் எனில், இதனால் மரணமடைந்தவர்கள் மற்றும் காயமுற்றவர்கள் பற்றிய விவரங்கள் யாவை?

(உ) விபத்திற்குரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** (அ) ஆம்.

(இ) மரணமுற்றவர்—ஒருவர்.

காயமுற்றவர்கள்—13 நபர்கள்.

(உ) "சிமெண்ட் ஸ்லாப்" போடுவதற்கு கொடுக்கப்பட்ட முட்டுகள் குறித்த காலத்திற்கு முன் அசைக்கப்பட்டு எடுக்கப்பட்டதும், "சிமெண்ட் ஸ்லாப்" பகுதியில் கட்டுமானப் பொருட்கள் குவிக்கப்பட்டதும் அதற்குக் காரணங்களாகக் கருதப்படுகிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி:** தலைவரவர்களே, அது ஏரிப் பகுதியில் கட்டப்பட்டதால்தான் அப்படி ஒரு சரிவு, ஏற்பட்டதாகத் தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட இடத்தை ஆர்ஜிதம் செய்து கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்று சொல்லிய அதிகாரிகள் யார் என்று தெரிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி:** தலைவரவர்களே, அந்தக் குறிப்பிட்ட விபத்தைப் பொறுத்தவரை, அதை ஏரிக் கரையில் கட்டியதால், அந்த விபத்து ஏற்படவில்லை, முட்டுக் கொடுக்கப்பட்ட கட்டைகளை 21 நாட்களுக்குப்

பிறகு அகற்றுவதற்குப் பதிலாக, 10 நாட்களுக்கு முன் அகற்றியதால், அந்த விபத்து ஏற்பட்டது. அதன்காரணமாக 13 பேர்கள் காயமடைந்தும், ஒருவர் இறந்தும் இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரி தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டு, வாரியப் பணி விதி பிரிவு 37 (பி)-ன்படி குற்றப் பத்திரிகை தயாரித்து தனி அதிகாரி மூலமாக அவருக்கு அனுப்பி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவரவர்களே, வீடு கட்டுகின்ற பிரச்சினையில் மிக ஜாக்கியதையாக நம்முடைய அரசு நடந்துகொள்ள வேண்டுமென்பது நியதி. யாரோ சில அதிகாரிகளின் தவறு காரணமாக இந்த அரசின் மீது குற்றம் சாட்டப்படுவதைத் தங்களின் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் இப்படிப்பட்ட அதிகாரிகளைத் தற்காலிக வேலை நீக்கம் செய்வதைவிட, அவர்களின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தலைவரவர்களே, கடுமையான நடவடிக்கை என்ற முடிவின் காரணமாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க முதலில் தற்காலிக வேலைநீக்கம் செய்து, பின்னர் சட்ட ரீதியாக அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது. இப்படிப்பட்ட விபத்துக்களுக்கு அதிகாரிகள் மட்டும் காரணமல்ல. ஒப்பந்தக்காரர்கள் அந்தச் சட்டதிட்டங்களுக்குட்பட்டு நடக்காத காரணத்தால்தான், அந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது. எது எப்படி இருந்தாலும், விபத்தைத் தடுப்பது அரசின் கடமையாக இருக்கின்ற காரணத்தால்தான், அந்த விபத்து நடந்த அன்றே உடனே வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் சேலத்திற்குச் சென்று அதற்குரிய நடவடிக்கை எடுத்து அந்த அதிகாரி தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தலைவரவர்களே, இறந்தவர் குடும்பத்திற்கு 2 ஆயிரம் ரூபாய் உதவித் தொகையும், காயமடைந்தவர்கள் 13 பேர்களுக்கு தலா 500 ரூபாயும் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். டி. சீத்தாபதி :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சென்று பார்த்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் இறந்து போனவர்கள் குடும்பத்திற்கு அரசு ஏதாவது நிதி உதவி வழங்கியிருக்கிறதா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.



## சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு கட்ட கடனுதவி

*250 வினா.—**திரு. எல். ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சட்டமன்ற உறுப்பினர்கள் வீடு கட்ட, அரசு கடனுதவி அளிக்கும் கருத்து ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** இல்லை.

**திரு. எல். ஜெயச்சந்திரன் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீடு கட்டுவதற்குக் கடனுதவி இல்லையென்று கூறியிருக்கிறார்கள். வீடு கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் சில குறிப்பிட்ட கொள்கையைக் கொடுத்தாலும், அரசிடம் தனியாக இதுபோன்ற கடனுதவி அளிக்கும் திட்டம் இல்லையென்றாலும், இப்போது கூட்டுறவுத் துறை மற்றும் வீடுகட்டும் சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்படும் கடன் தொகையை அதிகரித்துக் கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தலைவரவர்களே, தற்போது சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தில் குடிமக்கள் என்ற அடிப்படையில் வீடு கட்டுவதற்கு வீட்டுவசதி சங்கத்தின் மூலமாகக் கடனைப் பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. அவைகள் 60 ஆயிரம் ரூபாய் வரை உத்தேசமாகக் கொடுத்தன. இப்போது 60 ஆயிரம் ரூபாய்க்குப் பதிலாக 80 ஆயிரம் ரூபாய் தருவதற்கு அரசு முடிவு எடுத்திருப்பதால், பொது மக்கள் என்ற அடிப்படையில் சட்டமன்ற உறுப்பினர்களும் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் சொள்ளலாம்.

**திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் :** தலைவரவர்களே, வடமாநிலங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் வீடுகள் கட்டுவதற்கு வட்டியில்லா கடனுதவி தந்து, மாதந்தோறும் அவர்கள் பெறுகின்ற ஊதியத்திலேயே அந்தக் கடனைத் திருப்பி அளிக்கின்ற வசதியை அந்த மாநில அரசுகள் செய்திருக்கின்றன. அரியானா, பஞ்சாப், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் அப்படிப்பட்ட ஒரு திட்டம் இருக்கிறது. தமிழக அரசும் அதுபோன்ற திட்டத்தை என் கொண்டுவரக் கூடாது? அதைக் கொண்டுவருவதற்கு இடையூறாக உள்ள தடைகள் என்ன? அதிலுள்ள பிரச்சினைகள் என்ன?

**மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி :** தலைவரவர்களே, தற்போது அப்படிப்பட்ட எண்ணம் இல்லை என்ற-கருத்தைத் தவிர, தடையைப் பொறுத்தவரை, அப்படிப்பட்ட தடை எதும் இல்லை.

[1986 மே 13

(முற்பகல் 10-25)

திரு. க. மீனாட்சிசுந்தரம்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தில் தனிப்பட்ட சலுகை ஏதுமில்லை என்றாலும் —மேலவை உறுப்பினர்களுக்கு ஏதுமில்லை. இப்போதேகூட சட்டப் பேரவையில் உள்ள உறுப்பினர்களுக்கு அதிகமான நாட்கள் பேரவைக் கூட்டத்திற்கு வந்திருந்தால் இவ்வளவு பரிசு என்றெல்லாம் கொடுக்கப் படுகிறது, சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கு இல்லை—வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கப்படுகிற வீடுகளில் ஒரு குறிப்பிட்ட சதவித வீடுகளை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்று ஒதுக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. நல்லுசாமி: தற்போது அந்த எண்ணம் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 3—5—1986 அன்று ஒத்திப் போடப் பட்ட வினாக்கள் இப்போது எடுத்துக் கொள்ளப்படும்.

செயற்கை மழை

* 203 வினா.—திரு. சி. இராமலிங்கம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில், செயற்கை மழை பெய்விக்கும் முயற்சி வெற்றி பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், இதை மற்ற மாவட்டங்களுக்கும் நீட்டிக்கும் கருத்துரு ஏதும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) ஆம்.

(இ) தமிழ் நாடு முழுமையும் தேவையான இடங்களில் தேவைப்படும் போது செயல்படுத்தும் எண்ணத்துடன் செயற்கை மழைத் திட்டத்திற்குத் தேவையான தனிரக விமானம், வானிலை ராடர் கருவி மற்றும் அவற்றின் உபரி பாகங்களை விலைக்கு வாங்கி ஒரு நிரந்தரமான அமைப்பை அரசு உருவாக்கி உள்ளது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: இந்த முயற்சியில் அரசு ஈடுபட்ட பிறகு, எத்தனை முறை இவ்வாறு செயற்கை மழை பெய்விக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது? எந்தெந்த இடங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டது? அதன் காரணமாக எந்தஅளவுக்குப் பலன் கிடைத்திருக்கிறது?



1986 மே 13]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 1984 ஜூலை முதல் நவம்பர் வரையான ஐந்து மாத காலத்தில் 35 நாட்கள் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. 72.36 மணி நேரம் விமானம் பறந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் காரணமாக பூண்டி, ரெட் ஹில்ஸ், சோழவரம் போன்ற பகுதிகளில் கணிசமாக மழை பெய்தது. 1985 ஆம் ஆண்டு ஜூலை முதல் நவம்பர் வரையான ஐந்து மாத காலத்தில் 31 நாட்கள் சாதகமான மேகம் காணப்பட்ட நாட்களில் 70.53 மணி நேரம் விமானம் பறந்து இந்தத் திட்டம் செயலாக்கப்பட்டது. இந்த ஐந்து மாதங்களில் 23 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

திரு. ஆர். டி. சீத்தாபதி: அந்த விமானம் தற்போது பழுது பட்டிருப்பதாகவும் அதை ஓட்டுகிற விமானியே தற்போது இல்லை என்றும் அதன் காரணமாக அதிகமான செலவினம் ஏற்படுகிறது என்றும் சொல்லப்படுகிறதே. எனவே இத்திட்டத்தைக் கைவிடும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: கைவிடுவதாக எண்ணம் இல்லை. பழுதுபட்டதாகச் சொல்லப்பட்டதை நானே நேரில் போய்ப் பார்த்தேன். ரூபாய் 700 செலவாகும் அளவுக்குத்தான் பழுது ஏற்பட்டுள்ளது.

திரு. ஆர். டி. சீத்தாபதி: அந்த விமானத்தை ஓட்டுகிறவர் தற்போது பணியில் இருக்கிறாரா இல்லையா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இருக்கிறார்.

கடலூரில் பாதாள சாக்கடை

* 204 வினா.—திரு. எல். ஜெயச்சந்திரன் மற்றும் திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

கடலூரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இல்லை.

திரு. எல். ஜெயச்சந்திரன்: தலைவர் அவர்களே, கடலூரில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூ. 4 கோடி அளவில் திட்டம் போடப்பட்டது. அந்தத் தொகை மிகவும் அதிகமாக இருக்கிறது

என்ற காரணம் சொல்லப்பட்டு பின்னாலே அந்தத் திட்டமே கைவிடப் பட்டது. தற்போது கடலூரில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படாத காரணத்தால், கொசு போன்றவற்றின் காரணமாக பல்வேறு பயங்கரமான வியாதிகள் பரவிக் கொண்டிருக்கின்றன. இப்போது அண்மையில் நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில்கூட இந்தத் தொகை அதிகமானது என்று காரணம் காட்டி, இப்போது செயல்படுத்தவில்லை என்று சொல்லப் பட்டது. அமைச்சர் அவர்கள் இப்போது அந்தத் திட்டத்தை மேற்கொள்ள வில்லை என்றாலும் கூட, வரும் காலத்திலாவது கடலூருக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தை உருவாக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இந்தத் திட்டத்திற்காக ஆகக் கூடிய செலவு உட்பட ஆண்டுச் செலவு 25 லட்சம் ரூபாய் நகராட்சி கட்ட வேண்டியிருக்கிறது. இந்தத் தொகையைக் கட்டுவதற்கு நகராட்சி முன்வந்தால், இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : 12—4—1983-ல் கடலூரில் நிலத்தடி நீர் கழிவு நீர்த் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் என்னால் கொண்டு வரப்பட்டபோது, அமைச்சர் அவர்கள் ஒரு உறுதிமொழி அளித்தார்கள். 15—3—1985-ல் அந்த உறுதிமொழிபற்றிய பதில் வந்தது. இப்போது அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அந்தத் திட்டத்தை நகராட்சி மன்றத்தின் நிதிநிலை காரணமாக செயல் படுத்த முடியவில்லை என்று சொல்லப்பட்டது. அதன் காரணமாக அந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அப்போது சொல்லப்பட்டது. இது உறுதிமொழி அறிக்கையிலேயே சொல்லப்பட்டது. கடலூர் ஒரு மாவட்டத் தலைநகராக இருப்பது மட்டுமல்ல. அது ஒரு முக்கியமான இடமாகும். அந்த நகராட்சி மன்றம் 25 லட்சம் ஆண்டுக்குச் செலவு செய்ய வசதிபெற்றிருக்கவில்லை என்றாலும், அந்தத் தொகையைத் தமிழக அரசே மானியமாகவோ அல்லது கடன் உதவியாகவோ கொடுத்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த உதவி செய்யலாமே. எதனாலே கடலூர் ஒரு புறக்கணிக்கப்பட்ட மாவட்டத் தலைநகராக இருக்கிறது? எனவே அமைச்சர் அவர்கள் மாவட்டத் தலைநகரான கடலூருக்குத் தனிக் கவனம் செலுத்தி உதவி செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : உறுதிமொழிக் குழுவிலே தெரிவிக்கப்பட்டதைப் போல, அதை ஒத்தி வைத்திருக்கிறோம், கைவிட்டு விடவில்லை. நகராட்சி ஓரளவிற்குப் பணம் செலுத்தினால்தான், இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க முடியும். இதைப்பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேள்வியைக் கேட்டால் பயனுள்ளதாக இருக்கும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

### மேலவையை ஒழிப்பது குறித்து, கொள்கையளவில் அரசு முடிவு எடுத்திருப்பது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எல். ஜெயச்சந்திரன், திரு. அ. மாயவன், திரு. அ. மயில்சாமி, திரு. மு. செ. சங்கரலிங்கம், திரு. பி. பார்த்தசாரதி, திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன், திரு. ப. மாணிக்கம் ஆகியோர் மேல்சபை ஒழிப்பது குறித்து கொள்கையளவில் அரசு முடிவு எடுத்திருப்பது குறித்து ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எழுப்ப முன்னறிவிப்பு கொடுத்திருக் கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இது குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கும் முன்பு, நான் ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த விஷயத்தில், அவையின் தலைவர் என்ற முறையில், எனக்கும் சில கடமைகள் இருப்பதை நான் உணர்கிறேன். ஒரு கட்சி, பிரதி கட்சிப் பிரச்சினையாக நான் இதைக் கருதவில்லை. ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் இடையிலே உள்ள பலப் பிரச்சினையாக நான் இதைக் கருத வில்லை. மொத்த அவையே கலைக்கப்படுகிறது என்றால், மாநிலம் முழுவதுமாக சம்பந்தப்பட்ட பொதுப் பிரச்சினையாக நான் இதைக் கருதுகிறேன். முதலிலே இந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டபோது, நான் அனுமதிப்பதாக இல்லை. காரணம், அப்போது அந்தத் தீர்மானம் வடிவம்

பெறவில்லை. ஆதலால் இதைப்பற்றி விவாதிப்பது வீண் சர்ச்சைகளை வளர்க்கும் என்பதால் மறுத்து எழுதிவிட்டேன். இப்போது தீர்மானம் வடிவம் பெற்று அதன் நகல் எனக்கு வந்திருக்கிறது. ஆகவே அதைப் பார்த்த பிறகு, உண்மையிலேயே இதனால் பாதிக்கப்படுகிற அவை தன்னுடைய உணர்வை வெளிப்படுத்த அனுமதி மறுத்துவிட்டால், என் கடமையைச் செய்யத் தவறியவன் ஆவேன் என்பதால் இப்போது இதற்கு அனுமதிக்கிறேன். பேசுகின்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்—இதைக் கட்சிப் பிரச்சினையாகக் கருதாமல் மாநிலம் முழுவதுமுள்ள பொதுப் பிரச்சினையாகக் கருதி, இதில் உள்ள சரித்திர ரீதியான சம்பவங்களை எடுத்துச் சொன்னால், தலைவர் தன்னுடைய கடமையைச் செய்வார்கள் என்று நம்புமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுடைய பொறுப்பினை, உணர்வினை இங்கே வெளிப்படுத்தி, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வதாக அறிவித்திருக்கிறீர்கள். இந்த அவையே பாதிக்கப்படுகிற சூழ்நிலையில் அவை உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களைச் சொல்வதற்குத் தாங்கள் அனுமதித்தால், சாலச் சிறந்ததாக இருக்கும். இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அளித்தவர்கள் மாத்திரம் மட்டுமல்லாமல், ஆளும் கட்சியிலே உள்ளவர்கள், மற்ற கட்சிகளிலே உள்ளவர்கள் ஆகியவர்களையும் அனுமதித்தால், சாலச் சிறந்ததாக இருக்கும். இருந்தாலும் தங்களுடைய முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** முன்னாள் முதல்வர், பெருமதிப்பிற்குரிய கலைஞர், இந்நாள் எதிர்க் கட்சித் தலைவருக்கு ஒன்றை நினைவூட்டுகிறேன். சில தீர்மானங்களை அனுமதிப்பதற்கு என்று சில விதிமுறைகள் இருக்கின்றன. நான் எப்போதும் அதை மீறி அனுமதித்ததாக நினைப்பு இல்லை. அந்த விதிமுறைகளின்படி-தான் நான் முதலிலே சொன்னேன். நான் அனுமதி மறுப்பதற்கு நியாயம் இருந்தும்கூட, மறுக்காமல் அனுமதித்திருக்கிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பவர்களில் எல்லாக் கட்சிக்காரர்களும் இருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைத் தவிர மற்ற கட்சிக்காரர்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அது நிறைவு பெறும். கலைஞர் அவர்கள் பேசுவதிலே எனக்கு விருப்பம் உண்டு என்றாலும், அவர் பேசாததால் ஒன்றும் கெட்டுப் போகாது என்று நம்புமாறு கேட்டுக்கொண்டு, முறைப்படி தீர்மானம் கொடுத்திருப்பவர்களை அழைக்கிறேன்.

**திரு. அ. மயில்சாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த மேலவையை . . .



**திரு. எம். பி. சுப்பிரமணியம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் முக்கியத்துவம் கருதி, சபைத் தலைவர் அவர்கள் விரும்பினால், சபையினர் மொத்தமாக விவாதிக்க அரை மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் அளிக்க விதிகளில் வழிவகை இருக்கிறது என்று நினைக்கிறேன். அதைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** தாங்களே வேண்டுகோள் விட்ட பிறகு, தலைவர் மறுப்பாரா? அவசியமில்லை என்பதால்தான் விட்டுவிட்டேன்.

**திரு. அ. மயில்சாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த இரண்டு, மூன்று நாட்களாக மேலவையை ஒழிப்பது என்ற செய்தியை பத்திரிகையின் மூலமாகவும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே கொள்கை அளவில் ஒத்துக்கொண்டிருக்கிறோம் என்று கூறியதையும் பார்த்து, இந்த அவையில் இருப்பவர்கள் மட்டுமல்லாமல், தமிழகத்திலே உள்ள அத்தனை பேரும் ஒரு பதட்டமான நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. இந்த அவையினுடைய மரபைப்பற்றி அனைவரும் நன்கு அறிவார்கள். குறிப்பாக ஆசிரியர்கள் பிரதிநிதி என்ற அடிப்படையிலே நாங்களும் அறிவோம். தமிழகத்திலே கிட்டத்தட்ட மூன்று இலட்சம் ஆசிரியர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளை

(முற்பகல் 10-35)

யெல்லாம் இங்கே முழு வடிவிலே எடுத்துச் சொல்வதற்கும் ஊளவுக்குக் கோரிக்கைகளை எடுத்துச்சொல்வதற்கும் இது வாய்ப்பாக இருந்த இடம். அது மாத்திரமல்ல, பல்வேறு துறைகளிலே சிறந்தவர்கள், ஆற்றல் மிக்கவர்கள், வல்லுநர்கள் எல்லாம் இந்த அவையை அலங்கரித்துக்கொண்டிருந்தனர். அவ்வளவு சிறப்பான அவை, இன்று என்ன காரணத்தினாலேயோ திடீரென்று ஒழிக்கப்படுகின்றது என்ற செய்தி உறுப்பினர்களுக்கு மாத்திரமல்ல, நாட்டிலே இருக்கக்கூடிய நல்லவர்களுக்கெல்லாம் அபாயகரமான நிலைமைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ஒழிக்கப்படுவதற்குக் காரணம் என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்த அவை சிறந்த ஆற்றல் மிக்கவர்கள் இருந்த அவையாகும். இந்த அவை கிட்டத்தட்ட 60 ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த அவை ஜனநாயகத்திற்கு மேலும் வலுவூட்டக்கூடிய அவையாக இருந்துகொண்டிருக்கின்றது. பல பெரியவர்கள் இந்த அவையை அலங்கரித்தார்கள். அப்படிப்பட்ட ஒரு அவையை திடீரென்று காரணம் ஏதும் இல்லாமல் ஒழித்துக்கட்டுவது என்பது ஏன் என்று யாருக்கும் புரியவில்லை. இந்த அவையிலே உள்ளவர்களில் சிலர் ஒரு மாதம்கூட பதவிக் காலம் முடியாமல் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். ஆசிரியர்களாலும்

பட்டதாரிகளாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு 15 நாட்கள்கூட அவைக் உறுப்பினர்கள் எல்லாம் இருந்துகொண்டிருக்கின்றார்கள். அத்தோடு நியமனம் செய்யப்பட்டவர்கள், பல்வேறு துறைகளில் சிறந்தவர்கள் ஆகியோருடைய ஆற்றல் மிக்க சிறந்த பேச்சை இந்த அவையிலே கேட்கமுடியாத பரிதாபகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இந்த அவையை ஒழித்துக்கட்டுவது என்ற முடிவுக்கு அரசு வந்திருப்பது ஒருதலைப்பட்சமான முடிவு என்பதுதான் என்னுடைய கருத்தாகச் சொல்லிக்கொள்கிறேன். எந்த அடிப்படையிலே ஒழிக்கப்படுகின்றது என்பது தெரியவில்லை. ஒழிக்கப்படுகிறது மாத்திரம் அல்ல, இன்றைக்கு 30 லட்சம் ஆசிரியர்களின் குரலைக் கேட்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதே மாதிரி பட்டதாரிகள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியாளர்கள், போன்றவர்கள் குரல்களை, அவர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் கேட்கக்கூடிய அல்ல நிலைமைகள் தமிழகத்திலே உருவாகியிருக்கின்றன. இதைப்பற்றியெல்லாம் முழுவதும் விவாதிப்பதற்கு இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. செ. சங்கரலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, சட்டமன்ற மேலவையை அகற்றுகின்ற வகையில் தீர்மானம் பேரவையில் வர இருக்கின்ற நேரத்தில் இங்கே ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மீது பேசுவதற்காகவாவது வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள், மூதறிஞர் இராஜாஜி அவர்கள், துணைவேந்தர் டாக்டர் ஏ. எல். முதலியார் போன்ற பல பெரியவர்கள் இருந்த இந்த அவை இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களே 1981 ஆம் ஆண்டு ஒத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இடையிலே நடந்தது என்ன என்று தெரியவில்லை. இதுபோன்ற அவையின் மரபைக் காக்கின்ற அளவில், இன்றைக்கு ஒழிக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்ற அவை அமைதியாக நடந்துகொண்டிருக்கின்றது. கருத்துக்களை, ஆலோசனைகளை இந்த அவையில் சொல்ல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கின்றோம். அதை ஒழிக்க இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவருவது எப்படி நியாயம்? எப்படி ஜனநாயகமாகும்? இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேச வாய்ப்பு கொடுத்தமைக்குத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்தபட்சம் உணர்வுகளைத் தெரிவிக்க முடியாத நிலை இருக்கின்றது. எங்களுக்குக்கூட ஜீவனம் நடத்த முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் இருந்தாலும், மேலவையில் எந்தவிதமான காரசாரமான விவாதமும் இல்லை. எவ்வளவு நாகரிகமாக



இருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருந்து பேசிக்கொண்டிருக்கிறோம். எதிர்க் கட்சியிலே இருந்தாலும் ஆளுங்கட்சியினுடைய, அரசாங்கத்தினுடைய காரியங்களை, நல்ல திட்டங்களை வரவேற்றிருக்கின்றார்கள். இந்த அவையைப் பற்றி நாடு முழுக்கப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அப்பேர்ப்பட்ட அவையை இன்னும் ஓரிரண்டு தினங்களில் ஒழிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிச்சயமாக வந்த பிறகு, நாங்கள் உள்ளே நுழையும்போது, இன்னும் இரண்டு நாட்களில் போகப்போகின்றீர்களே என்று அதிகாரிகளும் இங்கே இருக்கக்கூடியவர்களும் கேட்கக்கூடிய அளவுக்கு ஒரு அவமரியாதை ஏற்பட்டிருக்கின்றது. திடீரென்று ஒழித்தால்கூட, ஒரு பிரச்சினையாக வந்திருக்கின்றது. எய்ட்ஸ் நோய் காலக்கெடு சொல்லாமல் உடலை உருக்கிக்கொண்டே இருப்பது போல, ஒழியப்போகிறது. ஒழியப் போகிறது என்று காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட அந்த நோயோடு உள்ளவர்கள் உள்ளே வரும்போது மற்றவர்கள் விலகிக்கொள்கிறார்கள். இதைக் கண்டால் பயமாக இருக்கின்றது என்ற அளவில் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறோம்.

(முற்பகல் 10-40)

நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, எங்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டும், ஆறு ஆண்டுகள் இருக்க வேண்டுமென்று நியமிக்கப்பட்டவர்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆறு ஆண்டுகள் முடியும் முன்னாலேயே, மாண்புமிகு தலைவர் அவர்கள் உட்பட, அனைவரும் வெளியே போக வேண்டுமென்று சொல்லும் போது, அதற்குக் காரணம் சொல்லலாம். மேற்கு வங்கத்தில், கேரளாவில், ஆந்திராவில் மேலவை கலைக்கப்படவில்லையா என்று சொல்லலாம். அவர்கள் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டு, மக்கள் மத்தியிலே அது வைக்கப்பட்டு, அதற்குப் பிறகு எடுத்த முடிவு அது. ஏப்ரல் 23 வரை, நியமனங்களானாலும் சரி, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களானாலும் சரி, அதனை ஒத்துக்கொண்டு, ஆறு ஆண்டுகள் முடியு முன்னாலேயே அவர்களை வெளியே போகச் சொல்வது ஜனநாயக மரபுதானா, நியாயந்தானா என்று நான் கேட்க விரும்புகிறேன். இன்னும் காலம் கெட்டுப் போகவில்லை. எங்களுடைய உணர்வுகளை, உணர்ச்சிகளைச் சொல்ல வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இங்கே இருக்கும் அரசுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்னும் காலம் கெட்டுப் போகவில்லை, அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்தைத் திரும்பப் பெற வாய்ப்பு இருக்கிறது. அதனைத் திரும்பப் பெறலாம். முடிந்துபோன காரியமல்ல. 'எய்ட்ஸ்' நோய்கூட தீர்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பிரச்சினையும் தீர்க்கப்பட வாய்ப்பு இருக்கிறது.

[திரு. மு. செ. சங்கரலிங்கம்] [1986 மே 13

இன்றைய தினம் மூன்று இலட்சம் ஆசிரியர்களின் குறைகள், பிரச்சினைகள் இந்த மன்றத்தின் வாயிலாக அரசுக்குச் சொல்லப்பட்டு, அவைகள் தீர்க்கப் பட்டிருக்கின்றன. இதனால், அந்த ஆசிரியர்கள்கூட அரசுக்கு விரோதமாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் நல்லெண்ணத்தைப் பெறக்கூட இதனைத் திரும்பப் பெறலாம். இங்கே தொழில்வாரி நியமனங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அந்த மக்களுக்குக்கூட பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்காகவும் சொல்கிறேன். அந்த வாய்ப்பை அந்த மக்கள் இழந்திருக்கிறார்கள். பட்டதாரி, ஆசிரியர்கள் மட்டுமல்ல, அனைத்துத் தரப்பு மக்களும் தங்கள் வாய்ப்புகளை இழக்கிறார்கள். சட்டமன்ற மேலவையில் காரசாரமில்லாமல் நல்ல முறையிலே பிரச்சினைகள் விவாதிக்கப்படுகின்றன என்று மக்கள் பேசுகிறார்கள். எனவே இந்த அளவில் இந்தத் தீர்மானத்தைத் திரும்பப் பெற என்ன முயற்சி எடுக்க வேண்டுமென்ற ஆலோசனைகளைக்கூட பேச இருக்கின்ற உறுப்பினர்கள் கூறலாம். டாக்டர் கலைஞர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, இந்த அவையின் மாண்பைக் காக்க வேண்டுமென்ற கடமை இருந்தாலும், அவையே இல்லாதபோது எப்படிக் காப்பாற்றுவது . . .

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* மாண்புமிகு உறுப்பினர் அவர்களே 'முற்றுப்புள்ளி' வைக்க வேண்டாம். 'கமா' ஆகவே இருக்கட்டும்.

*திரு. மு. செ. சங்கரலிங்கம்:* மாண்புமிகு தலைவரவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் கருத்துக்கள் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும். அந்த விதியைத் தளர்த்துவதால், எந்தவிதமான சேதாரமும் வந்துவிட முடியாது. விதி மக்களுக்காகத்தான், மக்களுக்காக விதியல்ல என்று கூறி, தீர்மானத்தைத் திரும்பப் பெறுவதற்கான நிலைமைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

*திரு. பி. பார்த்தசாரதி:* மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல நாங்கள் கன்னி கழிந்தே சில நாட்களாகவில்லை, அதற்குள் எங்களுக்கு ஓய்வு பெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு, எங்களுடைய கருத்துக்களாக சில விஷயங்களை வைக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதனுடைய அடிப்படையில் அவை நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 மே 13] [திரு. பி. பார்த்தசாரதி]

என்னுடைய அறிவுக்கு எட்டியவரையில் பேரறிஞர் அண்ணா அவர்களே, முதலிலே இந்த மாநிலத்திலே தன்னுடைய பணியைத் தொடங்கியபோது, சட்டப் பேரவையிலிருந்து மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையிலே தான் என்று நினைக்கிறேன் . . .

*மாண்புமிகு மேலவைத் தலைவர்:* சட்டமன்றப் பேரவையிலே எதிர்க் கட்சித் தலைவராக இருந்தார். அதற்குப் பிறகுதான் சென்னை மாநகராட்சித் தொகுதியிலிருந்து மேலவைக்கு வந்தார். அந்த அவையிலே இருந்திருக்கிறார்.

*திரு. பி. பார்த்தசாரதி:* அடுத்தது, இன்றைய முதல்வரவர்கள் தன்னுடைய பணியை முதலிலே இந்த அவையிலேயிருந்துதான் தொடங்கினார். இந்த அவையிலிருந்துதான் லெஜிஸ்லேடார் கேரீரைத் தொடங்கினார். மேலவை ஒழிப்பு என்பது முன்பு விவாதத்திற்கு வந்தபோது, அதற்கு பதில் அளிக்கையில் ஒரு கருத்து வைக்கப்பட்டது, அவர்களுடைய சார்பிலே இங்கே. தேர்தலிலே போட்டியிட, விரும்பாதவர்கள்கூட, அறிஞர்களாக இருப்பவர்களின், வல்லுநர்களாக இருப்பவர்களின் கருத்துக்களை, ஆலோசனைகளைப் பெற இந்த மன்றம் வாய்ப்பாக இருக்கிறது, ஆகவே இந்த அடிப்படையில் இதை ஒழிப்பதாக இல்லை என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் என் நினைவுக்குக்

(முற்பகல் 10-45)

கொண்டு வருகிறேன் என்றால், ஒன்றை நான் இங்கே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். மேலவை இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற சர்ச்சையை விட நான் ஒன்றை இங்கே அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட வாதங்கள் அல்லது நிகழ்ச்சிகள் ஏற்கெனவே பலமுறை எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே அவை இருக்க வேண்டுமா, வேண்டாமா என்கிற வாதத்திற்கு நான் செல்லவில்லை. ஆனால் அரசியல் நிலையில் இருந்துகொண்டு இதைப் பார்க்கும்போது, தேர்தல் காலத்தில், எலெக்ஷன் மேனிபெஸ்டோவில் கொள்கையாக வைத்து, மக்களுடைய ஆதரவைப் பெற்று, அதற்குப் பிறகு ஆட்சிக்கு வருகின்ற அரசியல் கட்சி அவர்கள் கொள்கையின் அடிப்படையில், தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில், இந்த அவையைக் கலைக்க முன் வந்திருந்தால், உள்ளபடியே நாங்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டிருப்போம். ஆனால் இங்கே அப்படி நடைபெறவில்லை. இப்பொழுது கூட நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், தயவுசெய்து மீண்டும் தேர்தல் வரும்போது, எலெக்ஷன் மேனிபெஸ்டோவில் இதனை கொள்கையாகச் சொல்லி, பொதுமக்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள் என்றால், ஆட்சிக்கு வந்த பிறகு,

இதனை தயவுசெய்து நீக்கலாம், எல்லோரும் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் வேறு கொள்கைகளைச் சொல்லி, அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வந்த பிறகு, இப்படிப்பட்ட வேறு மாதிரியான பெரிய பாலிசி டெசிஷனை எடுப்பது என்று சொன்னால், அது உள்ளபடியே மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்கிற ஒன்றல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, அடுத்த தேர்தலில் எலெக்ஷன் மேனிபெஸ்டோவில் இதனை ஒரு கொள்கையாக வைத்து, அதற்குப் பிறகு ஆட்சிக்கு வந்த பிறகு, ஒரு கொள்கையின் அடிப்படையில், மக்களுடைய ஆதரவைப் பெற்ற கொள்கை என்ற அடிப்படையில், இந்தக் காரியத்தை அரசு செய்தால், நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். அதுவரை வேறு கொள்கைகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிக்கு வந்திருக்கின்ற ஒரு கட்சி இப்படிப்பட்ட ஒரு பெரிய கொள்கை முடிவை எடுப்பது என்பது ஜனநாயக ரீதியாக சரியானது அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இதுபற்றி தீர்மானம் வருகிறதோ இல்லையோ ஆனால் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது நாம் பார்க்கிறோம். புதிய கல்வி பற்றி பொதுமக்களுடைய கருத்துக்களை அறிய வேண்டுமென்று சொல்கிறார்கள். அதுபோல இதுபற்றியும் செலக்ட் கமிட்டி மற்றும் பொது மக்களுடைய கருத்துக்களை எல்லாம் அறிய வேண்டும். அதற்கு முன்னதாக இதனைத் தீர்மானமாகக் கொண்டுவராமல் இருக்க வேண்டும். அனுமதிக்கக் கூடாது என்பதற்காக இதனை நான் கூறுகிறேன்.

மூன்றாவதாக, ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்கள் இந்த ஆட்சிக்கு எதிராகப் போராடினார்கள். அப்படிப்பட்ட ஆசிரியர்களுடைய பிரதிநிதிகள் இங்கே வராமல் இருக்கும் வகையில் தடுக்கப் படலாமோ என்கின்ற ஒரு அச்சம் முன்பு இருந்தது. அந்த வகையில் இப்பொழுது ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் இடையேயுள்ள உறவில் ஒரு சந்தேகம் இருந்தாலும், சமீபத்திலே கூட சில உறுப்பினர்களுடைய நியமனங்கள் நடைபெற்றிருக்கின்றன. நியமனத்தில் பிரச்சினை இருக்கிறது என்பது வேறு. ஆனால் இதுவரை அரசுக்கு இப்படி ஒரு 'பாலிசி' இருந்ததில்லை என்று நமக்குத் தெரிகிறது. சமீபத்தில் 10 நாட்களுக்கு முன்பு கூட அரசுக்கு அப்படிப்பட்ட ஒரு சிந்தனை இருந்ததில்லை. திடீரென்று இப்படிப்பட்ட ஒரு முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகு தான், எங்களுக்கு சந்தேகம் வருகிறது. இந்த சந்தேகங்களை எல்லாம் போக்குகின்ற வகையில், மக்களிடத்திலிருந்து இந்த அரசு அன்யோன்யமாகாது இருக்க, மக்களுடைய



எண்ணங்களை தேர்தல் காலத்தில் சொல்லிய கொள்கைகளின் அடிப்படையில் நிறைவேற்ற, வருங்காலத்தில் தேர்தல் காலத்தில் இதுபற்றி மக்களின் கருத்துக்களை அறிந்து, கொள்கை அடிப்படையில் விவாதத்திற்கு அனுப்பி, அதன்பிறகு இதுகுறித்து முடிவுக்கு வர வேண்டும். ஆகவே, முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், அவையின் இதர நடவடிக்கைகளை எல்லாம் ஒத்தி வைத்துவிட்டு இதுகுறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

*திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்* : தலைவர் அவர்களே, தாங்கள் முதலில் கருத்து கூறியபோது, பல பேர் இந்தப் பிரச்சினைபற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில், நானும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் சேர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பதால், 'எங்களை' என்று நான் குறிப்பிடுகிறேன். ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுக்கவில்லை. மேலவை விதி 57-ன்கீழ் இந்தத் தீர்மானத்தை தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த விதியைக் கூட நான் இங்கே படித்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்* : விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டதற்குப் பிறகு, அதற்கு உடன்பட்டு தானே பேசுகிறார்கள். அசல் தீர்மானப் பற்றிச் சொன்னார்கள். அது அறையுடன் போயிற்று. இப்பொழுது ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ்தான் பேசுகிறார்கள்.

*திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்* : நான் குறிப்பிட்ட விதியின் கீழ் தந்த தகவல் என்ற முறையிலே ஒன்றைச் சொல்கிறேன்.

*மாண்புமிகு மேலவைத் தலைவர்* : விதியை ஒட்டித்தான் உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள்.

(முற்பகல் 10-50)

*திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்* : தாங்கள் தலைவர் என்ற காரணத்தால், இந்த விவாதம் நடத்த அனுமதிக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறோம் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல, இந்த மேலவை ஒழிப்பு என்ற முடிவு, கொள்கை ரீதியாக, பல காலத்திற்கு முன்பே எடுக்கப்பட்டதா என்றால்,

[திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்] [1986 மே 13

இல்லை. தேர்தல் அறிக்கையிலும் இல்லை. சில வாரங்களுக்கு முன்பு கூட, பொது வாழ்க்கையில் சிறப்புப் பெற்ற மூன்று நபர்களை இந்த மேலவைக்கு இந்த ஆட்சி நியமனம் செய்திருக்கிறது. அதுமட்டுமல்ல, சட்டமன்றப் பேரவையிலிருந்து மேலவைக்குத் தேர்தல் நடத்தவேண்டுமென்று, தேர்தல் கமிஷன் இந்த அரசைக் கலந்துதான் தேர்தலுக்கான தேதியைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அதுவரையில் இந்த மேலவையை ஒழிக்கிற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அதுமட்டுமல்ல, இந்தத் தீர்மானம் அரசாங்க விதிமுறைகளின்படி முறையாகக் கொண்டு வரப்பட்டதா என்றால் இல்லை என்பதே என்னுடைய வாதம். காரணம், அரசு எப்படி நடத்தப்பட வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கிறதோ, அதேபோல் அமைச்சரவையும் எப்படி இயங்க வேண்டுமென்று விதிமுறைகள் இருக்கின்றன; இரண்டு நாட்களுக்கு முன்பு தொழிலாளர் நலக் கொள்கை விவாதத்தில் பேசிய மாண்புமிகு அவை முன்னவர் கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி, வன இலாக்கா எல்லைக்குள் போவதற்குக் கூட சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும், வன இலாக்காவின் அனுமதி பெற்றுத்தான் போக வேண்டுமென்று சொன்னார்கள். அதே அடிப்படையில் பார்த்தால், இந்த மேலவை ஒழிப்புத் தீர்மானம், அமைச்சரவையின் முடிவா என்று பார்த்தால், இல்லை.

அதற்குண்டான ஆதாரங்களை ஒரு சில நிமிடங்களில் என்னுடைய கருத்தாக இங்கே வைக்கலாம் என்று கருதுகிறேன். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு இப்படி ஒரு கருத்து இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறதா என்று கேட்ட நேரத்தில்கூட, நமது நிதியமைச்சர் அவர்கள் இல்லையென்றுதான் சொன்னார்கள். அதற்கு அடுத்த நாள், மேலவையில் நான் ஒரு விளக்கம் கேட்ட நேரத்தில், கொள்கை அளவில் எண்ணம் உருவாக்கப்பட்டிருக்கிறது, முடிவெடுக்கவில்லை என்று இங்கே நிதியமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டு, அங்கே சட்டமன்றப் பேரவையில், அப்படிப்பட்ட கருத்தைச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். எந்தச் சூழ்நிலையில் நான் கேட்டேன் என்பதை இந்த அவைக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்படிப்பட்ட கருத்து இல்லை என்று இங்கே சொல்லப்பட்டாலும், பத்திரிகைகளில் இந்த மேலவை ஒழிப்பு தீர்மானம் இரண்டு மூன்று நாட்களில் சட்டமன்றத்தில் வைக்கப்படும் என்று வந்த செய்தியைக் குறிப்பிட்டுத்தான், நான் நிதியமைச்சரிடம் விளக்கம் கேட்டேன்.



1986 மே 13] [திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்]

என்னுடைய வாதம் என்னவென்றால், எப்படி அரசாங்கம் நடப்பதற்கு விதிமுறைகள் இருக்கின்றனவோ, அதுபோல் அமைச்சரவை இல்லாமலும் முதலமைச்சர் இருக்க முடியாது. நமது அரசியல் சட்டத்தின்படி, "தி ஸ்டேட்ஸ்" என்ற தலைப்பில் 163-வது ஆர்ட்டிகிள்படி,

"There shall be a Council of Ministers with the Chief Minister at the head to aid and advise the Governor" என்று இருக்கிறது.

ஆகவே அமைச்சரவை என்பது இருந்தாக வேண்டும் ஒரு அரசுக்கு. 60 ஆண்டுகள் மரபுள்ள ஒரு மேலவை ஒழிக்கப்பட வேண்டுமென்றோ, அல்லது கலைக்கப்படவேண்டுமென்றோ முடிவெடுப்பது அமைச்சரவை முடிவாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய வாதம். மூன்று நாட்களுக்கு முன்பு நிதியமைச்சர் அவர்கள், அப்படியொரு எண்ணமே இல்லை என்று சொல்லிவிட்டு, இன்று இந்தத் தீர்மானம் வருகிறது என்று நம்மிடம் தகவல் கொடுக்கப்படுகிறது. இந்த இடைப்பட்ட நாட்களில் அமைச்சரவையும் கூட்டப்படவில்லை. ஆகவே இது அரசாங்க விதிமுறைகளுக்கு விரோதமாக, அமைச்சர்களுக்கே தெரியாமல் கொண்டு வரப்பட்ட தீர்மானம் என்பது என்னுடைய வாதம். அந்த வாதம் தவறாக இருந்தால், நமது அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்வார் என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தத் தீர்மானம் இரண்டு நாட்களுக்குள்ளே தயார் செய்யப்படவில்லை என்பதும் தெளிவாகத் தெரிகிறது. நான்கு நாட்களுக்கு முன்பு இத்தகைய தீர்மானம் சட்டமன்றப் பேரவையில் வரப்போகிறது என்று தெளிவாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. அந்தச் செய்தியை நான் நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு வந்தேன்.

ஆகவே இந்தத் தீர்மானம் அமைச்சரவைக்கும், அமைச்சர்களுக்கும் தெரியாமல் எடுக்கப்பட்ட தீர்மானம். இன்னும் சொல்லப்போனால், அரசாங்க நடவடிக்கைகளே அமைச்சர்களுக்குத் தெரியாமல் நடக்கின்றன என்று சொன்னால், அது தவறாகாது. இந்தத் தீர்மானத்தில் சில முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லி, 60 ஆண்டுகளுக்கு மேலாக மரபுள்ள இந்த மன்றத்தைக் கலைக்க வேண்டுமென்ற முடிவைக் குறித்து நீங்கள் இந்த மன்றத்தின் பாதுகாவலர் என்ற முறையிலும் தலைவர் என்ற முறையிலும் இப்போது மன்றத்தில் இருக்கிற எல்லா உறுப்பினர்களும், இதை ஆதரிப்பவர்களும் சரி, எதிர்ப்பவர்களும் சரி, அவர்களுடைய கருத்தைச் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கூறி, இறுதியாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் ஒரேயொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன்] [1986 மே 13

(முற்பகல் 10-55)

இந்த மேலவை ஒழிப்புத் தீர்மானம் என்னுடைய கட்சித் தலைவரும் தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான டாக்டர் கலைஞர் அவர்கள் முறையாக எதிர்க் கட்சித் தலைவராக உட்காரக்கூடாது என்கிற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதாகப் பலர் பேசுகிறார்கள். ஆனால் அவர்களைப் பார்த்து நான், "அந்தக் கருத்தை ஆதரிக்க முடியாது" என்று சொன்னேன். என்னுடைய சொந்தக் கருத்து, இப்படிப்பட்ட தீர்மானத்தின் மூலமாக, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்களை மீண்டும் தமிழகத்தின் முதல்வராக்க முயற்சி செய்கிறார்கள் என்கிற கருத்தைச் சொல்லியிருக் கின்றேன். அந்த அடிப்படையில் இம் மேலவை விதி 57 ஆவது பிரிவின்கீழ் இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் இத் தீர்மானத்தின்மீது கருத்து சொல்வதற்கு இது இறுதியான கூட்டமாகக்கூட இருக்கலாம். உள்ளபடியே நீங்கள் எப்படி மரபைக் காப்பாற்றினீர்களோ அதைப்போலவே இதை மரபுக்கு விரோதமான முடிவாக எடுத்துக் கொள்ள முடியாது. மேலவை விதி 57-ன்கீழ் உங்களுக்கு அதிகாரம் இருக்கிறதென்கிற காரணத்தினால், ஒரு நாளை இதற்காக ஒதுக்கி, இந்த மன்றத்திலே 40 உறுப்பினர்கள்தான் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கருத்துக்களைச் சொல்வதற்கு நீங்கள் வாய்ப்புத்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. ப. மாணிக்கம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த அவையைக் கலைப்பதற்கு, சட்டமன்றப் பேரவைக்கு குடியரசுச் சட்டப்படி தீர்மானம் கொண்டு வருகிற உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் மீது நாடாளுமன்றமும் திருப்தி கொண்டு அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தினை அங்கீகரித்தால், அது நிறைவேறும். நமக்குக் கிடைக்கின்ற தகவல்படி, நாடாளுமன்றமும் இதை அங்கீகரிக்கின்ற நிலைமையில்தான் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இந்தத் தீர்மானம் பேரவையினுடைய உரிமைக்கு உட்பட்டது. எனவே பேரவையினுடைய உரிமையின்பால் நான் கருத்துச் சொல்ல விரும்பவில்லை.

ஆனால், அவையைக் கலைப்பதற்கான காரணங்கள் என்னவென்று தெரிந்துகொள்ளவே முடியவில்லை. ஒரு நிகழ்ச்சிக்கு உரிய காரணங்கள் இருக்க வேண்டும். அந்த நிகழ்ச்சிகளுக்குரிய காரணங்கள் என்னவென்று இதுவரையிலும் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஒருகால் நாளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்போது, இதற்கான



1986 மே 13] [திரு. ப. மாணிக்கம்]

காரணங்களைச் சொல்வார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அப்படி அவர் காரணங்களைச் சொன்னாலும், நாம் அவற்றின்மீது வியாக்கியானம் செய்து பேசுவதற்கு நமக்கு வாய்ப்புகள் இருக்காது. இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில்தான் இந்தத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஒருகால் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே வாய்ப்பு இருக்காதோ என்னவோ என்று கூட நினைத்தோம். விதிகள் நேரத்திற்கேற்றவாறு மாறுபடும். ஆனால் அவ்வாறு விதிகளைக்காட்டி மறுத்துவிட்டால், சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று விரும்பினால், விதிக் குழு சில திருத்தங்களைக் கொண்டுவந்து பிறகுதான் திருத்த வேண்டுமென்று இருக்கிறது. மேலும் திருத்தங்கள் தேவை என்று நாம் முடிவெடுத்து அதை நிறைவேற்ற நினைத்தால், அப்போது அவையே இருக்காது போலிருக்கிறது. ஆகவே அப்படி ஒருகால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால், இதை உரிமைப் பிரச்சினை என்கிற முறையிலாவது பார்க்கலாமா என்று பார்த்தோம். அல்லது பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்றாவது பார்க்கலாமா என்று பார்த்தோம். இவ்வாறு இந்தப் பிரச்சினை அனைத்தையுமே உள்ளடக்கியிருக்கிறது. உரிமைப் பிரச்சினை, பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்று அனைத்துப் பிரச்சினை களும் இதில் வருகின்றன. சுருக்கமாகச் சொன்னால், இந்த அவை இப்போது கலைக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பதுபற்றி இந்த அவையில் மட்டுமல்ல, பேரவையில் மட்டுமல்ல, ஒரு பொது விவாதமாக மக்களிடமும் இதைக் கொண்டு செல்லலாம். தமிழ் நாட்டு மக்களிடையே பொதுக் கருத்து கோரி இதைக் கொண்டு சென்றால்கூட, நன்றாக இருக்கும். இதைத் தேர்தல் அறிக்கையிலே வெளியிட்டிருந்து மக்கள் ஆதரவைப் பெற்று கொண்டுவந்தால் கூட, நாம் புரிந்துகொள்ள முடியும்.

என்னுடைய கட்சிக் கொள்கை, நிலை என்னவென்றால் மேலவை மற்றும் ஆளுநர் தேவை இல்லை என்பதுதான். எனவே கொள்கைரீதியாக சில பிரச்சினைகள் கிளப்பப்படலாம். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மேலவை தொடர வேண்டுமென்கிற கொள்கையை வைத்திருக்கவில்லையே என்று சிலர் கேட்கலாம். மேலவை மட்டுமல்ல, ஆளுநர் பதவியும் தேவை இல்லை என் கிறோம். எனவே ஒரு பகுதியாகப் பிரித்து ஒரு கொள்கையை, துண்டு துண்டாகப் பிரித்தால், அது பலன் தராது என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

(முற்பகல் 11-00)

சிலவற்றை நார் நாராகப் பிரித்துத் தின்ன முடியாது. உண்ணுவதற்கும் முறையுள்ளது. அந்த அளவிலே ஒரு கொள்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்று பார்த்தாலும்கூட, மேலவையை எதற்காகக் கலைக்கிறார்கள் என்ற நிலையைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இதைக் கலைப்பது இன்றைக்குள்ள நிலையிலே பல நோக்கங்களுக்கு இடம் தரும். நான் அதற்கு நோக்கம் கற்பிக்க விரும்பவில்லை. என்னுடைய நோக்கம், சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால், நான் அதிகமாக சினிமா பார்ப்பதில்லை. பார்த்ததே கிடையாது. ஆனால் நான் பாட்டுக்களை ரசிக்கும் முறையிலே அவைகளைக் கேட்பேன். அந்தப் பாட்டினுடைய இரண்டு வரிகளை மட்டும் நான் சொல்கிறேன். "காலம் செய்த கோலமடி" என்று ஒரு பாட்டு வரும். பாடுபவர்கள் சோகமாகப் பாடுவார்கள். நான் ஒன்றும் சோக நிலையில் இல்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "காலம் செய்த கோபமடியா அல்லது கோலமடியா?"

திரு ப. மாணிக்கம் : தலைவரவர்களே, "ல"கரம்தான். எனவே இந்தக் காலத்தின் கோலம் என்ற நிலையில் இது வந்திருக்கிறது. ஆனாலும் காலம் என்ன, கோலம் என்ன என்று நான் புரிந்துகொள்ள முடியவில்லை. அதை நான் திரும்பத் திரும்பச் சொல்வதற்குக் காரணம் இன்றைக்குள்ள நிலைமையிலே, இந்த அவை எந்த வகையிலே தமிழ் நாட்டின் அரசியலைப் பாழ்படுத்திவிட்டது; நிர்வாகத்தைப் பாழ்படுத்திவிட்டது? அப்படி ஏதாவது காரணங்கள் இருந்தால், தெரிந்துகொள்ளலாம். தமிழ் நாட்டிலே அரசு செயல்படுவதற்கு இந்த அவை எந்த வகையிலே குந்தகம் விளைவித்திருக்கிறது என்று தெரிந்தால், அதுபற்றிச் சொல்லலாம். அல்லது நிர்வாகத்தைச் செயல்படுத்தவிடாமல் சீர்குலைத்தது என்று சொன்னால், அதைக்கூட புரிந்து கொள்ளலாம். எனவே கொள்கை அளவிலே அல்லது நிர்வாக அளவிலே இந்த அவை எந்த வகையிலாவது குறுக்கிட்டிருக்கிறதா? அதற்கு மாறாக நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த அவைக்கு வந்து, இந்த அவையில் பேசுவதற்கு எவ்வளவோ ஆர்வமாகவும், விருப்பமாகவும் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். காரணம் இந்த அவையிலே கருத்துக்கள் அமைதியாகப் பரிமாறப்படுகின்றன. கருத்துக்கள் ஆழ்ந்து பரிசீலிக்கப்படுகின்றன என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அவர்களே



சொல்லியிருந்த இந்த அவையைக் கலைக்க வேண்டுமென்று சொல்வதைத் தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதைத்தான் காலத்தின் கோலம் என்று சொன்னேன். இந்த அவையில் பல பேர்கள் இருக்கிறார்கள். இந்த அவைக்கு வரலாறு உண்டு. ஒரே வகையான வரலாறு என்று சொன்னால் அதில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வு, பல நிறங்கள், பல வகைகள் வந்து, இந்த அவை ஏற்பட்ட காலம், அப்போது என்ன நிலை என்பதை வைத்துக்கொண்டு பார்க்க வேண்டும். ஒரு காலத்திலே பிரிட்டிஷ் ஆட்சி நடந்தது. அப்போது அவர்களுக்குச் சார்புள்ளவர்கள் இருந்திருக்கலாம்; பிறகு ஜனநாயக ஆட்சி வந்தது. அப்போதும் அதற்குச் சார்புள்ளவர்களும் வந்திருக்கலாம். எனவே மாறி மாறி இன்றைக்கு இந்த அவையில் ஒரு கட்சி என்ற நிலையில் இல்லாமல் பல்வேறு துறையைச் சார்ந்தவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இந்த அவையின் அடிப்படை நோக்கம் எந்த அடிப்படையில் அமைந்திருக்கிறது என்று பார்த்தால், சட்ட மன்ற தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் இருக்கிறார்கள். காரணம் சட்டமன்றப் பேரவையில் ஒரு பெரும்பான்மையான கட்சி இருக்கலாம். ஆட்சி நடத்துவதை விரும்பாமல் இருந்திருந்தாலும்கூட, எதிர்க்கட்சிகள் அமர்ந்திருக்கின்றன. அரசியல் துறையிலே அனுபவம் உள்ளவர்கள் சில நேரங்களில் பொதுமக்கள் முன்னிலையில் வாக்குகளைப் பெற்று வரமுடியாத சூழ்நிலைகள் இருந்தன. அவர்கள் அந்த நேரத்தில் தேர்தலில் ஈடுபட முடியாமல் இருக்கலாம். ஆனால் அவர்களுடைய அரசியல் சேவை ஒரு குறிப்பிட்ட துறையிலே கட்டாயமாகத் தேவைப்பட்டால் அப்படிப்பட்டவர்களின் சேவை இந்த அவையின் மூலமாகத்தான் பிரதிபலிக்கப்படுகிறது. எனவே மேலவை அப்படிப்பட்ட அனுபவமுள்ளவர்களைத் தந்திருக்கிறது. சில நேரங்களில் அனுபவம் உள்ள தலைவர்கள் அல்லது ஒரு கட்சியினுடைய பொது சேவையிலே, தொண்டிலே நீண்டநாள் ஈடுபட்ட தொண்டர்கள் இருப்பார்கள். தொண்டர்களுக்கு தமிழ் நாட்டின் வரலாற்றிலும் சரி, உலக வரலாற்றிலும் சரி எப்போதும் மரியாதை உண்டு. தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் இடம் தருகிற அவை இந்த அவை. அதனால்தான் சட்டமன்றப் பேரவை மூலமாக வருகின்ற பிரதிநிதிகள், தமிழ் நாட்டில் படித்த பட்டதாரிகள், ஆசிரியர்கள், அறிவுத் துறை ஊழியர்கள் ஆகியோர்களுக்கு இங்கே பிரதிநிதித்துவம் இருக்கிறது. ஆசிரியர்கள் தங்களுடைய குறைகளைப் பேரவையிலும் சொல்லலாம். அவர்கள் தங்களுடைய குறைகளை மக்கள் பிரதிநிதிகளிடம் சொல்லி அவர்கள் அதை எடுத்துச் சொல்லலாம். அது வேறு விஷயம். ஆனால் கல்வித் துறையிலே, கல்விக் கொள்கை சம்மந்தமாக

அவர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பை அவர்களுடைய பிரதிநிதிகள் இங்கே வந்து சொல்ல வேண்டுமென்பதற்காகத்தான் அந்தத் துறைக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்டதாரிகளுடைய படிப்பிற்காக அந்தப் பிரதிநிதித்துவம் அல்ல;

(முற்பகல் 11-05)

படித்த பட்டதாரிகள், அறிவாளிகள் ஆகியோருடைய அறிவு இந்த அவைக்குத் தேவை. அவர்களின் அறிவு தமிழ் நாட்டினுடைய நிர்வாகத்திற்கும் தேவை, இங்கே அரசை நடத்துவதற்குத் தேவை என்பதால்தான், அறிவுத் துறையில் உள்ளவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இங்கே பிரதிநிதித்துவம் தரப்பட்டிருக்கிறது. அதைப் போலவே உள்ளாட்சித் துறையில் உள்ளவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களில் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. நகரங்களில் நகராட்சிகள் இருக்கின்றன. அத்தகைய உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக 21 பேர் கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக இந்த அவைக்கு வரமுடியாத நிலைமை இருந்து வந்தது. காரணம் அதற்கான தேர்தல்கள் நடக்கவில்லை. அந்தக் குறைபாடு அவையில் இருந்து வந்தது. அப்படிப்பட்ட நிலையில் இந்த அவையின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற உணர்வுதான் எல்லோர் மத்தியிலும் இருந்து வந்தது. எதிர்க் கட்சியில் இருப்பவர்களானாலும் சரி, ஆள்கிற கட்சியில் இருப்பவர்களானாலும் சரி, அந்த எண்ணம்தான் இருந்து வந்தது. பொறுப்பான அமைச்சர்களே கூட அத்தகைய கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்களெல்லாம் ஆழ்ந்து சிந்தித்துப்பார்த்துத்தான் சொன்னார்கள். இந்த அவையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்றுதான் எல்லோரும் விரும்பினார்கள். அப்போதுதான் பல துறைகளைச் சார்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் என்று தெரிந்து சொன்னார்கள். இப்போது உள்ளாட்சித் துறைக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிந்திருக்கிற நிலைமையில் 21 உறுப்பினர்கள் இந்த மேலவைக்கு வர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அந்த வாய்ப்பு இப்போதுதான் மீண்டும் ஏற்பட்டிருக்கிறது. அடைத்திருந்த கதவு இப்போதுதான் திறந்திருக்கிறது. யார் அடைத்தார்கள், யார் திறந்தார்கள் என்ற பிரச்சினைக்கு நான் போகவில்லை. காரணம் பிரச்சினைக்கு நோக்கம் வைத்துவிடக்கூடாது, அரசியல் நோக்கத்தோடு பார்த்தால் எங்கே போய் முடியும் என்று யாரும் சொல்ல முடியாது. எனவேதான் நாம் இவற்றின் விளைவுகளைப்பற்றி மட்டும் பார்க்க வேண்டும். இன்றைக்கு இந்த மேலவை கலைக்கப்பட்டால், உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக இங்கே வரக்கூடியவர்களுக்கு இனி அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடும். பஞ்சாயத்துக்கள்,



நகராட்சிகள் போன்ற அமைப்புகளின் ஒட்டுமொத்தமான நலன்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த முறையே இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு எப்படி இருக்கிறது என்பதை நாம் பார்த்து வருகிறோம். இது ஜனநாயகத்தின் வளர்ச்சி காரணமாக ஏற்படுகிறது. ஆக, அறிவுத் துறையில் உள்ளவர்கள், கிராமப்புற மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் நலன்களைக் காக்க விரும்புகிறவர்கள் எல்லோரும் இங்கே அங்கம் பெறவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அண்மையில் 'நாமினேஷன்' கூட நடந்தது. தமிழ் நாட்டில் உள்ள முக்கியமான சமூக நல ஊழியர்கள், கலைத்துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் அறிவுத் துறையைச் சார்ந்தவர்கள், நிபுணர்கள் போன்றவர்களை நியமிக்கலாம் என்று ஆளுநருக்கு அதிகாரம் இருக்கிறது. இவ்வாறு சமுதாயத்தின் முக்கியமான துறைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைப்பு முறை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு உள்ளாட்சி அமைப்புகள் மூலமாக இதுநாள் வரை வர இயலாமல் இருந்தவர்கள் இப்போது வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்போது, இந்த அவை கலைக்கப்பட வேண்டும் என்று சொன்னால், நடைமுறையில் கிராம மக்களுக்கு என்ன என்னை ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்போது இயற்கையின் மழை பெய்யவில்லை என்றால், அரசுமீது குற்றச்சாட்டைச் சொல்கிறோம். பல இடங்களில் குடிநீர் இல்லை. அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், அதற்கு இந்த அவை மிகப் பெரிய உதவியாக இருந்திருக்கிறது. அதாவது கிராம அபிவிருத்தியாக இருந்தாலும் சரி, நிதிப் பற்றாக்குறை காரணமாக உள்ளாட்சி அமைப்புகள் மக்களின் தேவையை கவனிக்க முடியாமல் இருந்தாலும், அவ்வளவு பிரச்சினைகளையும் இங்கே எடுத்துச் சொல்லி வாதாடி, வலியுறுத்த இந்த அவை மிகப் பெரிய அரங்கமாக இருந்திருக்கிறது. அந்த அரங்கம் இப்போது நீக்கப்பட இருக்கிறது என்றால், கிராமப்புற மக்களுக்கு கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பும் தட்டிப் பறிக்கப்பட இருக்கிறது என்றுதான் பொருள். எனவேதான் சொல்லுகிறேன். இந்தச் சூழ்நிலையில் மக்கள் இதைப் பார்க்கும்போது, அரசின் மீது அதிருப்தி தான் ஏற்படும். இதற்கு பதில் அரசாங்கத்திற்கு என்ன கொள்கை இருக்க வேண்டுமென்றால், இப்போது 39 பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் தமிழகத்திற்கு இருக்கிறார்கள். இன்னும் ஒன்றுகூட கிடைக்க வேண்டியது கிடைக்கவில்லை. அதைப்போலவே சட்டமன்றத்தில் இப்போது 234 பேர்தான் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இன்னும் 6 அல்லது 7 அல்லது 8 பேர் அங்கேயும் அதிகரிக்கப்பட வேண்டும். அரசு இதுபோன்ற காரியங்களைக் கவனித்தால், நன்றாக இருக்கும். அதைக் கவனிக்க வேண்டியதுதான் பேரவையின்

[திரு. ப. மாணிக்கம்] [1986 மே 13

முக்கியமான கடமை என்று நான் நினைக்கிறேன். இதைச் சொல்லுகிற காரணத்தால், நான் ஏதோ பேரவையின் கடமையைப்பற்றி விமர்சிக்கிற நிலையை எடுப்பதாகத் தவறாகக் கருதக்கூடாது. என்ன சொல்கிறேன் என்றால் எங்கெங்கே நம்முடைய நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டுமோ அவற்றின்மீது அரசின் கவனமும் இருந்தால், நன்றாக இருக்கும். அதற்கு மாறாக மேலவையைக் கலைப்பதால் எந்த நன்மையும் ஏற்படாது. ஒரு அவையின் செயல்பாடு பற்றி மதிப்பிடவும் அதன் குறைகளையும் நிறைகளையும் மதிப்பிடவும் தமிழ் நாட்டு மக்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, நிர்வாகச் சீர்திருத்தம், போன்றவற்றில் சிறந்த ஆலோசனைகளைத் தந்தும், அரசாங்கம் செம்மையாகச் செயல்பட கருத்துக்களைத் தெரிவித்தும், இந்த அவை கடந்த காலத்தில் தன்னுடைய பங்கைச் செம்மையான முறையில் ஆற்றி வந்திருக்கிறது.

(முற்பகல் 11-10)

இப்படிப்பட்ட அவையை 1986 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு தீர்மானத்தின் மூலமாக ரத்து செய்ய முயல்வது என்பது காலத்தின் கோலம். காலம் என்ன, கோலத்தின் நிலை என்ன என்பதை சம்பந்தப்பட்டவர்கள் விளக்கினால்தான் நன்றாக இருக்கும். எப்படி இருந்தபோதிலும், தமிழ் நாட்டு மக்கள் மத்தியிலே இந்த அவை இருக்க வேண்டுமா, வேண்டாமா என்று கொள்கை ரீதியாக விவாதிக்கலாம். எப்படி இருந்தாலும் தமிழ் நாட்டு மக்கள் மத்தியிலே, இது உள்நோக்கோடு செய்யப்படுகிற காரியம் என்ற எண்ணம் ஏற்கெனவே பரவிவிட்டது. அதை சம்பந்தப்பட்டவர்கள், குறிப்பாக ஆளும் கட்சியினுடைய தலைவர்கள், உறுப்பினர்கள் கவனத்திலே எடுத்துக் கொண்டு எந்தச் சூழ்நிலையிலும் ஜனநாயகத்திற்குக் குந்தகம் ஏற்படாத வகையில் முடிவு எடுக்க வேண்டும் என்ற வகையில் வலியுறுத்தி அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** எதிர்க் கட்சித் தலைவர் பேசாததால், ஒன்றும் கெட்டுவிடாது என்று நான் முதலில் சொன்னது அவருடைய மதிப்பைக் குறைத்துச் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. அவரைக் குறைத்துச் சொன்னதாக எண்ண வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அப்படிக் கருத மாட்டார் என்று எனக்குத் தெரியும். எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில் நான் அவரைப் பேச அழைக்கிறேன்.



1986 மே 13]

**டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மேலவையைக் கலைப்பது என்கின்ற தீர்மானம் சட்டமன்றப் பேரவையிலே வருகிறது என்ற இந்தப் பிரச்சினையின் மீது நான் முதலிலே ஒன்றைத் தெளிவாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இப்போது நான் எனக்காக வாதாட விரும்பவில்லை. அப்படி வாதாடப் போவதுமில்லை. எனக்காக வாதாடுவது என்னுடைய வழக்கமும் இல்லை. நான் இப்போது வாதாடுவது இந்த மன்றத்திற்காக. கடந்த 60 ஆண்டுக் காலத்திற்கு மேலாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த மரபுகளும், மாண்புகளும் தொடர்ந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான்.

அன்றொரு நாள் தாங்களே இந்த அவையிலே சொன்னீர்கள். கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, முதல்வர் பொறுப்பை ஏற்றிருந்த நான் தங்களிடம் கூறியதாகச் சொன்னீர்கள். "அந்த அவையிலே இருந்து இந்த அவைக்கு வரும்போது, ஓர் அமைதிகரமான சூழ்நிலை உருவாகிறது. இங்கு ஏற்படுகிற அமைதியும் ஆழமான சில உணர்வுகளும், அறிவிக்கப்படுகிற ஆலோசனைகளும் இந்த அவையில் மாத்திரமல்லாமல், அந்த அவையிலேயும் எங்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே, நிர்வாகத்தை மேம்படுத்தக்கூடிய நிலையிலே அமைகின்றன" என்பதை நான் தங்களிடத்திலே எடுத்துக்கூறியதை அன்றைக்குக் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது பேசிய திரு. சுவாமிநாதன் அவர்கள் ஒரு உவமையை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே பயன்படுத்திய உவமை அது என்றாலும், முன்னாள் மேலவைத் தலைவர் திரு பி. பி. சிற்றரசு அவர்கள் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். அதை அண்ணா அவர்கள்தான் மேற்கோளாக எடுத்துக் காட்டினார்கள். அமெரிக்காவில், மேலவைப் பிரச்சினை ஒன்று அங்கே எழுந்தபோது, வாஷிங்டன் தேநீர் விருந்தில் எடுத்துச்சொன்ன உவமையாகும். அந்த விருந்திலே மேலவை இருக்க வேண்டாமா என்ற விவாதம் எழுந்தபோது, 'கப் அண்டு சாசர்' வைத்துக்கொண்டு கப்பிலே இருக்கிறவரை சூடாக உள்ள தேநீர் சாசரில் ஊற்றும்போது எப்படி ஓரளவிற்கு ஆறுகிறதோ அதைப்போல மேலவை என்பது சூட்டைத் தணிக்கிற வகையில் வெப்பத்தைப் போக்கி வெளிச்சத்தைத் தருகிற வகையில் உஷ்ணத்தை நீக்கி ஒளி தருகிற வகையில் அமைகிறது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] 1986 மே 13

பல நேரங்களில் மேலவை தேவையா என்ற பிரச்சினை எழுந்திருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அப்படிப்பட்ட நேரங்களில் எல்லாம், தேவையா என்ற கேள்விக்குறி வலுப்பட்ட காலக் கட்டத்திலேகூட இறுதி முடிவாக 'தேவைதான், நீடிக்கட்டும்' என்ற முடிவுகள்தான் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் அறிவார்கள்; தாங்களும் அறிவீர்கள். தமிழகத்திலே உள்ள மேலவையைக் கலைத்துவிடுவதற்கான காரணத்தைச் சொல்லும்போது, அது குறித்து பேரவையிலே கழக உறுப்பினர் திரு. ரஹ்மான்கான் வினா எழுப்பியபோது, நிதியமைச்சர் நாவலர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அது ஏடுகளிலும் வந்திருக்கிறது.

(முற்பகல் 11-15)

"இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே மேலவை இல்லை. ஒரு 5, 6 மாநிலங்களிலேதான் மேலவை இருக்கின்றது" என்று குறிப்பிட்டார்கள். ஒருவேளை 5, 6 மாநிலங்களிலே தானே இருக்கின்றது. எனவே இதை எடுத்துவிட்டால் என்ன என்ற விவாதத்தின் அடிப்படையிலே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் துணை போவார்களானால், நான் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். நம் இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கு இல்லை. தமிழ் நாட்டிலே மதுவிலக்கு இல்லை. ஆனால் காங்கிரசார் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழி காட்டக்கூடியதாக தமிழ் நாடு இருக்க வேண்டும், எனவே மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தான் வாதாடுவார்கள். அவர்களிடத்திலே எவ்வளவு எடுத்துச் சொன்னாலும், பாண்டிச்சேரியில் இல்லையா, கர்நாடகத்திலே இல்லையா அல்லது வேறு பல காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலே இல்லையா என்றெல்லாம் கேட்கும் போது, "மற்ற மாநிலங்களைப் பற்றி ஏன் பேசுகின்றீர்கள்? இந்த மாநிலத்தைப் பற்றிப் பேசுங்கள்" என்கின்ற வாதத்தை அழுத்தந்திருத்தமாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய முக்கியத் தலைவர்கள் எல்லாம், எடுத்து வைத்திருக்கின்றார்கள். எனவே "5, 6 மாநிலங்களில்தான் இருக்கின்றது. எனவே இந்த மாநிலத்திலே அதைக் கலைத்து விடுவதிலே எந்தவிதமான சங்கடமும் இல்லை" என்ற குறிக்கோள் ஒரு நல்ல வாதமாக எனக்குப் படவில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இந்த மன்ற உறுப்பினராக பொறுப்பேற்று இந்த மன்றத்திலே அமர்ந்தார்கள். அவர்கள் அப்படி நேரடி மேலவை உறுப்பினராக வந்து அமராமலேயே ஒரு சட்ட மன்ற உறுப்பினரை



1986 மே 13] [டாக்டர் மு. கருணாநிதி]

பதவி விலகச்சொல்லிவிட்டு அந்த இடத்தில் நின்று பெரும்பான்மையான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சட்டமன்றப் பேரவையிலே பொறுப்பேற்று முதலமைச்சராக வந்திருக்க முடியும். ஆனால் மாநகராட்சி உறுப்பினர்கள் வாக்குகளைப் பெற்று மேலவையில் அண்ணா அவர்கள் அமர்ந்தார்கள். அப்போது இந்த மேலவையில் அன்பிற்குரிய திரு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையான இடங்களைப் பெற்றிருந்தது. அப்படி காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்ற எதிர்க்கட்சியாக இருக்கின்றதே என்ற எண்ணத்தில் மேலவையைக் கலைத்துவிட வேண்டும், 'நமக்கு ஒரு கண் போனாலும் எதிரிக்கு இரண்டு கண்கள் போக வேண்டும்' என்ற எண்ணம் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே வரவில்லை. அவர்கள் காலத்தில் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக காலக்கட்டத்திலேயும் இந்த நிலை ஏற்படவில்லை. அப்போது காங்கிரஸ் கட்சிக்காரர்கள், இங்கேயிருந்தபோது கூட, இந்த மேலவையிலே ஆளுங்கட்சியின் சார்பாகக் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் அல்லது மசோதாக்களிலே பெரிய மோதல்கள் ஏற்பட்டுவிடவில்லை. ஓரிரு தடை ஏற்பட்டாலும், சர்வசாதாரணமாக அரசியல் சட்ட விதிமுறைகளின்படி அவைகள் போக்கிக்கொள்ளப்பட்டன என்பதை இந்த மாமன்றத்திலே உள்ளவர்கள் அறிவார்கள்.

அடுத்தபடியாகச் சொல்லப்படுகின்ற காரணம், ஏடுகளிலேகூட வந்திருக்கின்றது இதைக் கலைப்பதன் மூலம் ஒரு பெருஞ்செலவைக் குறைக்கலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள், இங்கே 3419 கோடிக்கு நிதி ஒதுக்கீடு வைத்து அதற்கான அனுமதியை அந்த மன்றத்திலேயும் இந்த மன்றத்திலேயும் பெற்றார்கள். அப்போது எவ்வளவு பணம் எப்படியெல்லாம் விரயம் ஆகிறது என்பதையெல்லாம் நான் சொன்னேன். அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டு அதையெல்லாம சரி செய்யவேண்டும் என்று இங்கே பேசியிருக்கிறார்கள்; அது இங்கே விவாதக்குறிப்பில் பதிவாகியிருக்கின்றது. ஆகவே செலவாகிறது, அந்தச் செலவைச் சிக்கனப்படுத்துவது என்று சொன்னால், நண்பர் திரு மாணிக்கம் அவர்கள்கூட சொன்னார். கவர்னர் என்ற பதவிக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ. 30 இலட்சம், ரூ. 40 இலட்சம் என்ற அளவிலே செலவிடப்படுகிறது. ஆனால் அந்தப் பதவி இருக்கலாம். அது இருக்க நாம் அமைதியாகக்கொண்டிருக்கிறோம். அதற்காக நாம் போராட புறப்பட்டிருக்க வேண்டும். தீர்மானம் நிறைவேற்றுவதோடு, கருத்துக்களைச்

சொல்வதோடு இருக்கிறோம். அங்கே அதிகாரம் இருக்கின்ற அந்தக் காரணத் தினால், பெரும்பான்மை இருக்கின்ற காரணத்தினால், இந்த மன்றத்தைக கலைத்துவிடலாம். அந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இன்றோ நாளையோ அந்த முடிவு பற்றி பேரவையிலே பெரும்பான்மையைப் பெறு மானால், அந்த முடிவு நிறைவேற்றப்படவும் இருக்கின்றது. அதற்குப் பிறகு பாராளுமன்றத்திலே அந்த முடிவை வைத்து அதனுடைய ஒப்புதலைப் பெறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. நான் அந்த விவரங்களிலே எல்லாம் நுழைய விரும்பவில்லை. செலவு காரணமாக, சிக்கனப்படுத்துவதன் காரணமாக இந்த மேலவைக் கலைப்பு என்று சொன்னால், உள்ளபடியே நாம் மாத்திரமல்ல, இந்த மன்றத்திலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனை வரும் தங்களுடைய மனச்சாட்சிக்கு விரோதம் இல்லாமல் எண்ணிப்பார்த்தால் எத்தனையோ தேவையற்ற செலவுகள் தமிழ் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

(முற்பகல் 11-20)

மேலவை மாத்திரம்தானா தேவையில்லாத செலவு என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏறத்தாழ 25, 26-க்கு மேற்பட்ட வாரியங்கள் இருக்கின்றன. கோழி வாரியம் வரையில் இருக்கின்றன. அந்த வாரியங்கள் எல்லாம் ஏன் என்று எண்ணிப்பார்க்க வேண்டும். டெல்லிப் பட்டிணத்தில் தமிழ் நாட்டுப் பிரதிநிதி என்கிற ஒரு அலுவலாளர் நியமிக்கப்படுகிறார். இதுவரை நியமிக்கப் பட்ட எந்த அலுவலாளராவது தமிழ் நாட்டு தூதுவராக, தமிழ் நாட்டுப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர்கள் யாரிடத்தில் என்ன வாதாடினார்கள், எந்த தொழிற் திட்டத்தை தமிழ் நாட்டுக்காகப் பெற்றார்கள், எந்த வகை யிலே வாதாடி, போராடி, அங்கேயுள்ள அமைச்சர்களை, பிரதமரைச் சந்தித்து தமிழ் நாட்டின் தேவைகளைப் பெற்றார்கள் என்பதெல்லாம் கேள்விக்குறி. ஆனாலும் அதற்கு ஒரு பெரும் தொகை ஒதுக்கப்பட்டு, அந்தக் காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமாத்திரம் அல்ல. குழுக்கள், இரு அவை யும் சேர்ந்த குழுக்கள் எத்தனையோ இருக்கின்றன. அந்தக் குழுக்கள் சுற்றுப் பயணம் கூட செய்கின்றன. சில குழுக்கள்தான் சுற்றுப் பயணம் செய்ய வேண்டும். ஆனால் நம்முடைய தாராள மனப்பான்மை, அஷ்யூரன்ஸ் கமிட்டி கூட காஷ்மீர் வரையில் செல்கிறது. உறுதிமொழிக்குழு—இங்கே தரப்படும் உறுதிமொழிகள் எவை எவை என்பதும், அவை நிறைவேற்றப்பட்டதா என்பதும், இந்த அவையாலே நியமிக்கப்படுகின்ற குழுவாலே விவாதிக்கப்



பட்டு, முடிவு எடுக்கப்பட வேண்டிய விவகாரம், காஷ்மீருக்குப் போய், நீங்கள் எந்த உறுதிமொழியை எப்படி நிறைவேற்றுகிறீர்கள் என்று கேட்டு, இங்கே நிறைவேற்றத் தேவையில்லை. எல்லாக் குழுக்களும், உறுதிமொழிக் குழு உட்பட எல்லாக் குழுக்களும் காஷ்மீர் வரை செல்கின்றன. நான் நகைச்சுவைக் காகச் சொல்லவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, திரு. விநாயகம் அவர்கள் உறுதிமொழிக் குழுத் தலைவராக இருந்தார்கள். "சில குறிப்பிட்ட குழுக்கள்தான் வெளிமாநிலங்களுக்குச் செல்ல வேண்டும், எல்லாக் குழுக்களும் செல்ல வேண்டியதில்லை" என்று அண்ணா அவர்கள் எழுதினார்கள். அதற்குப் பிறகு, திரு. விநாயகம் அவர்கள் அண்ணாவைச் சந்தித்தார்கள். அண்ணாவைச் சந்தித்து, அவர்களிடத்தில் வேண்டுகோள் விடுத்தார்கள். "எல்லாக் குழுக்களும் போகும்போது, என்னுடைய தலைமையில் உள்ள குழு மட்டும் போகக்கூடாது" என்று கூறி யிருக்கிறீர்களே என்று கேட்டார்கள். பிறகு வாதாடினார்கள். அதற்குப் பிறகு அண்ணா அவர்கள் அவருக்கே உரிய நகைச்சுவையோடு "அனுபவி ராஜா, அனுபவி" என்று சொல்லி, அந்தக் குழுவும் செல்லலாம் என்று குறிப்பிட் டார்கள். இதையெல்லாம் சொல்லவதற்குக் காரணம், இப்படி ஏராளமான குழுக்கள், வாரியங்கள், டெல்லியிலே எந்தப் பணியும் ஆற்றாத தமிழ் நாட்டு பிரதிநிதி—இப்படியெல்லாம் செலவுகள் ஆகின்ற நேரத்தில், செலவின் காரண மாக, சிக்கனத்தின் காரணமாக மேலவையைக் கலைக்கிறோம் என்று வாதம் செய்வார்களானால், அதுவும் பொருத்தமான வாதமாக எனக்குத் தெரிய வில்லை. இன்னும் ஒன்று, சட்டப் பேரவைத் துறைக்கு மொத்தமாக செல வாகும் தொகை 1 கோடி ரூபாய் என்பது என்னுடைய கணிப்பு. அதற்குமேல் 10 இலட்சம், 20 இலட்சம் இருக்கலாம். அதிலேகூட சட்டமன்ற மேலவைத் துறைக்கு ஆகும் செலவு சுமார் 25 இலட்சம் ரூபாய்தான். கவர்னர் பதவிக்கு 30 இலட்சம் ரூபாய், இவ்வளவு பேர் அடங்கியுள்ள சட்டமன்ற மேலவைத் துறைக்கு ஆகும் செலவு சுமார் 25 இலட்சம் ரூபாய்தான். அதற்காக இதைக் கலைக்கிறோம் என்ற வாதம் பொருத்தமற்ற வாதமாகும்.

இன்னும் ஒன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. பார்த்தசாரதி அவர்கள் எடுத்துக் காட்டியதுபோலவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. டி. ஆர். பழனி வேல் ராஜன் அவர்கள் எடுத்துக்காட்டியது போலவும், அமைச்சரவை கூடி ஆழ்ந்து யோசிக்காமல், தேர்தல் அறிக்கையிலேகூட குறிப்பிடாமல், இது பற்றி கருத்தோட்டம் என்கின்ற வகையிலே மக்கள் மத்தியிலே இதை வைக்காமல், திடீரென்று, அமைச்சரவையிலே ஆலோசிக்காமல், பத்திரிகையிலே

[டாக்டர் மு. கருணாநிதி] [1986 மே 13

வந்த செய்தியை வைத்து மாண்புமிகு உறுப்பினர் திரு ரகுமான் கான் அவர்கள் விளக்கம், வினா கேட்க, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் "அதைப் பற்றி கொள்கை இருக்கிறது, முடிவாகவில்லை" என்று சொல்லி, "இந்த அவையிலே 2 நாட்களில் தெரியும்" என்று சொல்லி, திடீரென்று இன்றைக்கு இந்தத் தீர்மானம் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. காலையிலே செய்தியாக வந்துவிட்டது. இப்படி நிகழப் போகிறது என்று 3 நாட்களுக்கு முன்பே எனக்குத் தெரியும். முதன்முதலாக 'முரசொலி' பத்திரிகையில் செய்தி வந்தது. அந்தச் செய்தி வந்த பிறகு பேரவையிலே பிரச்சினை எழுப்பப் பட்டது. அப்போது மூடி மறைக்கப்பட்டு, பிறகு மேலவையிலே 'ஆமாம்' என்று இழுப்பறியாகச் சொல்லப்பட்டு, இன்றைக்கு தீர்மானம் வந்திருக்கிறது. திரு பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் எடுத்துக் காட்டியதுபோல, அமைச்சரவை கூடி இப்படிப் பட்ட கொள்கை முடிவை எடுக்க வேண்டுமென்ற நியதி ஏன் மீறப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை. திரு பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் அவர்கள் சொன்னார்கள். கருணாநிதி எதிர்க் கட்சித் தலைவராகிவிட்ட காரணத்தால்தான் இப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டதென்று.

(முற்பகல் 11-25)

இன்றுள்ள சூழ்நிலையில் நம்முடைய நண்பர் திரு. மாயவன் அவர்களும், திரு பார்த்தசாரதி அவர்களும், நம்முடைய நண்பர் ஆசிரியர் பிரதிநிதியாகப் பேசிய திரு. லெட்சுமிகாந்தன் அவர்களும் குறிப்பிட்டதுபோல இப்பொழுது தான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர் தொகுதிகளிலிருந்து 2 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். பட்டதாரி தொகுதிகளிலிருந்து 2 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். இந்த 4 இடங்களிலும் ஆளும் கட்சி ஆதரித்த நண்பர்கள் வெற்றி பெறவில்லை. இது ஒன்று. அடுத்து, உள்ளாட்சி மன்றத் தேர்தலில் பெரும்பான்மையான இடங்களில் . . .

திரு. எஸ். ஆர். இராதா : ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு தலைவர் அவர்கள் அனுமதித்திருக்கக் கூடாது. தயவுசெய்து பிரச்சினைகளை அரசியல் ரீதியாக அணுகுகிற நிலைமை வேண்டாம். கருத்துக்களைச் சொல்லும்போது, சுமுகமாகச் சொல்லி, சுமுகமாகத் தீர்க்க வேண்டும். அரசியலாக ஆக்கி, நாங்களும் பதில் சொல்லுகின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டாம். இது விதிக்கு மீறிய முறை. நான் பாயின்ட் ஆப் ஆர்டராகக் கூட கேட்கலாம். தலைவர் அவர்கள் பெருந்தன்மையுடன் அனுமதித்திருப்பதால், பாதிக்கப்படுகிற நோக்கிலே சட்டத்தை மீறலாம் என்று நானும் ஒத்துக் கொண்டேன். ஆனால் தயவுசெய்து எல்லாவற்றையும் மீறலாம் என்ற நிலையை உருவாக்க வேண்டாம்.



1986 மே 13]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உறுப்பினருக்குச் சொல்கிறேன். நான் இதை அனுமதிக்கவில்லையென்றால், இந்தப் பதவியில் இருக்கவே நான் தகுதியற்றவன். இந்த அவையே கலைக்கப்படுகிற நிகழ்ச்சி முன்பு எப்போதுமே நடந்ததில்லை. முன்மாதிரி இல்லாத ஒரு நிகழ்ச்சியாக இருக்கிற காரணத்தினால், நாம் கடைபிடிப்பதுதான் முன்மாதிரி. ஆகவேதான் நான் இதை அனுமதித்திருக்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி : ஆக, 4 தொகுதிகளிலிருந்தும் 4 பேர் வெற்றி பெற்று வந்திருக்கிறார்கள். ஆனால் யார் எந்தக் கட்சி என்று கூட நான் குறிப்பிட விரும்பவில்லை. நான் இந்த அவையிலே பேசுகின்ற பாணி, எடுத்துக் கொள்கின்ற முறை, அந்த அவையிலே நான் பேசியிருக்கின்ற முறை இவைகளுக்கு உள்ள வேறுபாடுகளை தலைவர் அவர்களும், உறுப்பினர்களும், அமைச்சர்களும் கூட உணர்ந்திருக்கக் கூடும். ஏனென்றால் இந்த அவை அப்படிப்பட்ட பாரம்பரியம் மிக்க ஓர் அவை. டாக்டர் ஏ. எல். முதலியார் போன்றவர்கள், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள், மூதறிஞர் ராஜாஜி போன்றவர்கள், திரு. பாலசுப்பிரமணிய ஐயர் போன்றவர்கள், ஏன் தங்களைப் போன்றவர்கள் எல்லாம் இருக்கிற இந்த அவைக்கு என்று தனி மதிப்பு இருக்கிற காரணத்தினால்தான், இந்த அவையிலே எப்படி அணுகுமுறை இருக்க வேண்டும், குற்றச்சாட்டு இருந்தாலும் எந்த அணுகுமுறையோடு சொல்ல வேண்டும் என்பதை எல்லாம் எண்ணி, மிகுந்த எச்சரிக்கையோடு இந்த அவையில் நான் பேசியிருக்கிறேன் என்பது நான் 7, 8 தடவை பேசியிருக்கின்ற பேச்சுகளை எடுத்துப் படித்துப் பார்த்தாலே, மிக நன்றாகத் தெரியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, நண்பர் திரு. மாணிக்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலும், சென்னை மாநகராட்சி மன்றம் ஒன்றைத் தவிர, ஏனைய 20 இடங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்களின் சார்பாக இந்த மன்றத்திற்கு கடந்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர் உறுப்பினர்கள் வரக்கூடிய நிலைமை. 4 பேர் வெற்றி பெற்று வந்திருக்கின்ற சூழ்நிலை. அடுத்து 20 பேர் ஸ்தல ஸ்தாபனங்களின் சார்பாக வரக்கூடிய சூழ்நிலை. அதிலே யார் பெரும்பான்மையாக வருவார்கள், யார் குறைவாக வருவார்கள் என்கின்ற பிரச்சினைக்கு எல்லாம் இடம் இல்லை. ஆனால் யார் வந்தாலும், அங்காங்கே இருக்கின்ற கிராம மக்களுக்காக, ஸ்தல ஸ்தாபனங்களின் வளர்ச்சிக்காகப் பாடுபடக்கூடியவர்கள் வரக்கூடிய சூழ்நிலை. அதுமட்டுமல்லாமல், இது கொள்கை

ரீதியாக, காலையில் அரும்பி, பகல் எல்லாம் மலராகி, மாலையில் மலர்ந்தது என்று சொல்லத் தக்க அளவில் இந்தக் கொள்கை மலர்ந்தது என்றும் யாரும் கூற முடியாது. அதற்கான எந்த அறிகுறியும் இல்லை. அப்படி அறிகுறி இருந்திருந்தால், அண்மையில் கூட 3 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்க மாட்டார்கள். ஒருவர் ராஜிநாமா செய்துவிட்டார் என்பது வேறு விவகாரம். ஆனாலும் நியமனம் செய்யக் கூடிய அளவுக்குக்கூட பரிந்துரை செய்யப்பட்டு, நியமனங்கள் செய்யப்பட்டு, நாளையதினம் விடை பெற, ஓய்வு பெற இருக்கிற உறுப்பினர்களுக்கு எல்லாம் பாராட்டு விழா என்ற அளவிலே, விருந்து, அவர்களுக்கு எல்லாம் நாளை பாராட்டு என்று எல்லாம் சொல்லக் கூடிய சூழ்நிலையில் நிகழ்ச்சி நிரல் வகுக்கப்பட்டிருக்கிறது. இதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். நாளைக்கு இவர்களை எல்லாம் பாராட்டும்போது, அவர்கள் "இன்றைக்கு எங்களைப் பாராட்டுகிறாய், நாளைக்கு எங்களோடு நீயும் வரப் போகிறாய்," என்கிற கண்ணோட்டத்தோடு தானே எங்களைப் பார்ப்பார்கள். நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். எனக்காக நான் வாதாடவில்லை. இந்த மன்றத்திற்காக நான் வாதாடுகிறேன். என்னை பத்திரிகை நிருபர்கள் சந்தித்து இப்படி ஒரு தீர்மானம் வரப் போகிறதாமே என்று கேட்டபோது கூட, நான் மிகத் தெளிவாகச் சொன்னேன். "இதைப் பற்றி கழகச் சார்பிலே எங்களுடைய பொதுச் செயலாளர் நிருபர்களிடத்திலே பேட்டி அளித்தபோது கூட கருத்துத் தெரிவித்திருக்கிறார். என்னைப் பொறுத்தவரையில், நான் இதுகுறித்து கவலைப்படவில்லை" என்று சொல்லியிருக்கிறேன். அப்படிச் சொன்னதற்குக் காரணம் இங்கே திரு. பி. டி. ஆர். அவர்கள் குறிப்பிட்டதுபோல, ஏதோ எனக்காகத்தான், நான் எதிர்க் கட்சித் தலைவன் ஆவேன் என்ற காரணத்தால்தான், இப்படி ஒரு தீர்மானம் வருகிறது என்றால், நான் இந்த மன்றம் நீடிக்க வேண்டுமென்ற அந்தக் காரணத்திற்காக, எனக்காகத்தான் இது வருகிறது என்ற ஒரு நிலை இருக்குமானால், என்னுடைய இந்தப் பதவியை இந்த மன்றம் நீடிக்க வேண்டும் என்பதற்காக நான் ராஜிநாமா செய்யத் தயாராக இருக்கிறேன். என்னால் இந்த மன்றம் நீடிக்காமல் கலைக்கப்படுகிற சூழ்நிலைக்கு ஆளாக வேண்டாம் என்ற நல்ல எண்ணத்தோடு இந்தக் கருத்தை நான் எடுத்துக் கூறுகிறேன். இதற்குப் பிறகாவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "கருணாநிதி ஒழிந்தான், அவன் இல்லாத சபை தான் இது" என்ற எண்ணத்தோடு இந்த மன்றத்தை நீட்டிப்பதற்கு முற்படுவார்கள் என்று கூறி, இந்த அளவில் அமைகிறேன்.





(முற்பகல் 11-30)

**மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையின் வரலாற்றில் இதற்கு முன்னாலே என்றைக்கும் நடைபெற்றிருக்காத ஒரு முறையில் தாங்கள் விவாதத்தையே இங்கே அனுமதித்திருக்கிறீர்கள். இங்கே பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையின் விதிகளின்படி, ஒத்திவைப்புப் பிரேரணையாகத் தந்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள், 57-வது விதியின்கீழ் ஒரு முக்கியமான நிகழ்வாகக் கருதி ஒரு விவாதமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அறிவித்திருந்தாலும், அதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளாமல் ஒத்திவைப்புப் பிரேரணை என்ற பெயராலே, இந்த அவைக்கும் இந்த அவையின் மூலம் நாட்டுக்கும் அரசுக்கும் தெரிவிக்கப்படவேண்டிய கருத்துக்கள் ஏதாவது இருப்பினும் அதை உறுப்பினர்கள் தெரிவிக்க வேண்டுமென்ற அந்த உணர்வை தாங்கள் மிக முக்கியமான உணர்வாகக் கொண்டிருந்த காரணத்தால், இங்கே அனுமதித்து ஒரு விவாதமே நடந்து முடிந்திருக்கிறது.

இதிலே அரசின் தரப்பில் எங்களுக்கு இருக்கிற ஒரு சிக்கல் மாண்புமிகு உறுப்பினர்கள், அவர்களுக்குள்ள உரிமையின் காரணமாக இங்கே பல ஐயப்பாடுகளை அல்லது அவர்கள் மனதில் தோன்றியிருக்கிற குறைகளை இங்கே எழுப்ப முடிந்தது. ஆனால் அரசின் தரப்பில் இதற்கு ஒரு தெளிவான பதில் அளிக்க முடியாத சூழ்நிலையில் நாங்கள் இருக்கிறோம். காரணம், சில நாட்களுக்கு முன்பு இந்த அவையில், இந்த அவை நீக்கப்பட இருக்கிறதாமே என்ற செய்தி குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியபோது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு கொள்கை அளவில் இது விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது, அதன் மீது கருத்துரு எதுவும் இன்னும் தோன்றவில்லை என்று இங்கே தெரிவித்தார்கள். அதைத்தான் சட்டமன்றப் பேரவையிலும் தெரிவித்தார்கள்.

ஆகவே கொள்கை அளவிலே இந்தப் பிரச்சினை விவாதிக்கப்படுகிறது என்று அரசின் தரப்பில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்ததிலிருந்து, அமைச்சர்கள் மட்டத்தில் இந்தக் கருத்து விவாதிக்கப்படுகிறது என்ற அந்தப் பொருள் உங்களுக்குப் புரிந்திருக்கும் என்றுதான் நாங்கள் எண்ணினோம். காரணம் இது அன்றைக்குக் கருத்துருவாக வரவில்லை என்று நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது கருத்து, உருப்பெற்றிருக்கிறது. அந்த உருவின் வடிவமாக அரும்பு தோன்றியிருக்கிறது.

அந்த அரும்பின் வடிவமாக அரசின் தரப்பில் ஒரு தீர்மானம் சட்டமன்றப் பேரவையில் கொண்டு வர இருக்கிறோம் என்ற அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தத் தீர்மானம், என்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்பது நிச்சயமாகவில்லை. எடுத்துக்கொள்ளப்பட இருக்கிற நேரத்தில் எல்லாக் கட்சிகளின் உறுப்பினர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்து விளக்குவார்கள். அரசின் தரப்பிலும் இந்த அவையை நீக்குவதற்கு ஏன் முடிவெடுத்திருக்கிறார்கள் என்ற விளக்கத்தை அங்கே தரவும் வாய்ப்பு இருக்கிறது. அந்த அவையில் விவாதிப்பதன் மூலம், நமது கருத்துக்களை இந்த அவையின் உறுப்பினர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் தெரிவிக்கவும், தெரிந்துகொள்ளவும் வாய்ப்பு இருக்கிறது. அந்த அவையில் விவாதிக்கப்பட்ட ஒரு செய்தி அல்லது ஒரு பொருள் குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்களும், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசுவதற்கு முடியுமே தவிர, அரசின் சார்பில் நாங்கள் பேச முடியாது.

ஆனால் ஒன்றை மட்டும் நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அன்பிற்குரிய பி. டி. ஆர். பழனிவேல்ராஜன் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களும் ஒரு அரசினுடைய நடைமுறைகளைக் குறித்து ஒரு கருத்தை இங்கே

(முற்பகல் 11-35)

தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் சொல்கிறபோது, "இது அமைச்சரவையிலே விவாதிக்கப்பட்டதா? அமைச்சரவை இதற்காகக் கூடியதாகத் தெரியவில்லையே? அமைச்சர்கள் மட்டத்திலாவது விவாதிக்கப்பட்டதாகவும் தெரியவில்லையே" என்று குறிப்பிட்டார்கள். அதையொட்டி மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், அமைச்சரவையிலே எந்தக் கொள்கை முடிவும் எடுக்காமல், இது அறிவிக்கப்பட்டிருக்கிறதென்று இங்கே தெரிவித்திருக்கிறார்கள். நான் இக் கருத்தை மறுப்பதும் அதற்கு விளக்கமளிக்கவேண்டியதும் என்னுடைய கடமையாகிற காரணத்தால், அது தொடர்பாக மாத்திரம் பதில் சொல்ல விரும்புகிறேன்.

அரசியல் சட்டத்தின்கீழ் ஓர் அரசு விரும்பினால் அல்லது சட்டமன்றப் பேரவை விரும்பினால், சட்டமன்றப் பேரவை ஒரு தீர்மானத்தை இன்னின்ன விதிகளின்கீழ் நிறைவேற்றினால், ஒரு சட்ட மன்ற மேலவை என்கிற Legislative Council உருவாகவும் முடியும் அல்லது அதை நீக்கவும் முடியும் நாடாளுமன்றத்தினுடைய ஒப்புதலோடு என்று வழங்கப்பட்டிருக்கிற அரசியல் சட்டத்தின் அடிப்படையில், இன்றைக்கு இந்த முடிவுகள் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே இந்த



முடிவுகள் எடுக்கப்படுவதற்கு முன்பு இப்படித்தான் அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டுமென்கிற எந்த நியதியும் எந்த விதிகளும் எந்த இடத்திலேயும் இல்லை. கொள்கை முடிவெடுப்பது என்பதும், அந்தக் கொள்கை அமைச்சரவையே எடுக்க வேண்டுமா அல்லது அமைச்சர்கள் விவாதித்து எடுக்க வேண்டுமா என்று முடிவெடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் சில முடிவுகளை அமைச்சரவை கூடி எடுத்தாக வேண்டும். அதை மீற முடியாது. ஆனால் ஒரு சட்டமன்றப் பேரவை, மேலவை வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானிக்க வேண்டிய ஒரு முடிவை அமைச்சரவை கூடித்தான் எடுக்க வேண்டுமென்று எங்கேயுமில்லை. அதற்காக அமைச்சரவை முடிவு எடுக்க வேண்டாமா என்று கேட்டால், அமைச்சர்களுடைய கருத்துக்களை அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டாமலேயே தெரிந்துகொள்ள முடியும். அப்படி அமைச்சர்கள் மட்டத்தில் விவாதிக்கப்படவில்லை என்றால், நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் இது குறித்து கொள்கையளவில் பேசப்பட்டு வருகிறதென்கிற கருத்தைச் சொல்லியிருக்க மாட்டார்கள். பத்திரிகைகளுக்குச் செய்தி வருகிற சூழ்நிலை இருக்கிறபோது, அமைச்சர்களுக்கு அந்தச் செய்தி கிடைக்காமல் இருக்கிறதென்று யாரும் எண்ண முடியாது. ஆகவே அருள் கூர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள்மீது ஏதோ ஒரு தவறான நோக்கத்தை உருவாக்க வேண்டுமென்கின்ற உணர்வு வந்துவிடக்கூடாது. காரணம் மாண்புமிகு தலைவர் அவர்களே, நீங்கள் எந்த அடிப்படை உணர்வோடு இந்த விவாதத்தை அனுமதித்திருக்கிறீர்களோ அதற்கே பலனற்றுப் போகக்கூடாது. ஏனென்றால் உணர்ச்சிவயப்பட்டு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் "எனக்காகத்தான் இந்த முடிவெடுக்கப்படுகிறது என்று இருக்குமேயானால், நான் வேண்டுமானால், இந்த நிமிடமே இந்த அவையின் உறுப்பினர் பொறுப்பிலிருந்து விலகிக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டதை அருள்கூர்ந்து அவர்கள் மறந்துவிட வேண்டும்; திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். காரணம், அவர்கள் இந்த நாட்டினுடைய முதல்வராக விரும்பியவர்கள் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் (கை தட்டல்) என்பதையும் நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்த நேர்ந்தமைக்கு அவர்கள் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு தலைவர் அவர்கள் எந்த உணர்வோடு இந்த விவாதத்தை அனுமதித்திருக்கிறார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் இந்த அவை நீக்கப்படுகிறது அல்லது கலைக்கப்படுகிறது என்கிறபோது, இந்த அவையிலே உறுப்பினர்களாக இருக்கிறவர்களுக்கு ஒரு வாய்ப்பு ஏற்படாமல் போய் விடுகிறது, இவர்கள் சட்டமன்றப் பேரவையில் தங்கள் கட்சியை எடுத்துச்

[திரு. இராம. வீரப்பன்] [1986 மே 13

சொல்ல முடியாது, ஆகவே இங்கே விவாதிக்கப்படுவதற்கு ஒரு சந்தர்ப்பம் இந்த மேலவையின் மூலம் அளிக்கலாம் என்று, மாண்புமிகு தலைவர் அவர்களே, நீங்கள் எண்ணினீர்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அப்படி நீங்கள் எண்ணி இந்தக் கருத்துக்கள் அரசாங்கத்திற்கு வந்து அங்கே சட்டமன்றப் பேரவையில் இந்தத் தீர்மானம் விவாதிக்கப்படுவதற்கு முன்பு, இதன்மீது அரசு வேறு ஏதாவது ஒரு முடிவு எடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக இந்த விவாதம் அமைய வேண்டுமென்று நீங்கள் கருதியிருந்தால், அந்த உணர்விற்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எந்த உணர்ச்சிகரமான முடிவும் அறிவிப்பது பாதகமாக அமைந்துவிடக்கூடாது என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். ஆகவே அரசின் தரப்பிலே இருந்து இதற்குத்

(முற்பகல் 11-40)

தெளிவான விடைகள் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படும். அதற்குப் பிறகு நீங்களும் தெரிந்துகொள்ளப் போகிறீர்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு தலைவரவர்கள் விரும்பினால், இந்த அவை உறுப்பினர்கள் அந்தக் கருத்துக்கள் குறித்து என்ன கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் சொல்வதற்கு வாய்ப்புகள் உண்டு. காரணம் இந்த அவை இருக்கும்வரை எல்லா உரிமைகளையும் உறுப்பினர்கள் பெற்றுக்கொண்டிருக்கலாம். ஆகவே இந்த அவை விவாதிப்பதிலேயிருந்து யாரும் தடுத்துவிட முடியாது. இது அரசாங்கத்தைக் குற்றம் சொல்கின்ற ஒரு காரணமாகவோ அல்லது பழி சுமத்துகின்ற காரியமாகவோ வந்து விடுவதை அரசாங்கம் என்றைக்கும் ஏற்றுக்கொள்ளாது ; அனுமதிக்காது. ஆகவே அருள்கூர்ந்து இதற்குமேல் நான் எந்த விளக்கத்தையும் இங்கே தெரிவிக்க விரும்பவில்லை.

சட்டப்படி, முறைப்படி, மரபுப்படி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் யார் யாரோடு, எந்தெந்த அமைச்சர்களோடு இதைப்பற்றிப் பேச வேண்டுமோ, எந்த அளவிலே பேச வேண்டுமோ, அதுமாத்திரமல்லாமல் இதற்குத் தொடர்பானவர்கள் யார் யாரோ அவர்களோடெல்லாம் பேசி, முறையாகத்தான் இந்தக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அருள்கூர்ந்து வேறு உணர்வுகளுக்கு இந்த விவாதம் வழிவிட்டுவிடக் கூடாது. காரணம், மாண்புமிகு தலைவரவர்களுடைய உணர்வு அப்படித்தான் இருக்குமென்று கருதுகிறேன். காரணம், இந்த அவையே கலைக்கப்பட்டிருக்கிறது, நீக்கப்பட்டிருக்கிறது என்கிறபோது, இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து, விவாதிக்கலாமென்று உறுப்பினர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள். ஆகவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நீங்கள் விரும்பினீர்கள், மாண்புமிகு தலைவரவர்களும், நம்முடைய ஆளும்



1986 மே 13] [திரு. இராம. வீரப்பன்]

கட்சித் தரப்பிலேயிருந்து அருமை சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா அவர்கள் குறுக்கிட்ட நேரத்தில், இதுவரை இவ்வளவு உணர்ச்சிவயப்பட்டு ஒரு கருத்தை எடுத்துச் சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அவர்களை மிகுந்த உணர்ச்சிவயப்பட்டு, இதை அனுமதிக்காவிட்டால், மேல் அந்த சபையில் இருந்து பலனில்லை என்று அவர்கள் தெரிவித்தார்கள். உங்களையெல்லாம் இந்தப் பதவியிலே வைத்துப் பார்க்க வேண்டுமென்றுதான் பெருந்தகை அண்ணா அவர்கள் விரும்பினார்கள். அவர்களுடைய இதயக்கனி, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரவர்களும் அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏன், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும் அந்த விருப்பத்திற்கு உள்ளானவர்கள்தான். அப்படிப்பட்ட இந்த அவையினுடைய மொத்தக் கருத்தின் சின்னமாக விளங்குகின்ற உங்களைப் போன்றவர்கள் உணர்ச்சிவயப்பட்டு முடிவுகளை அறிவிக்கின்ற சூழ்நிலைக்கு நாங்கள் என்றைக்கும் காரணமாக அமையமாட்டோம். ஆகவே இந்த விவாதத்தை அனுமதித்திருப்பது என்பது சட்டங்களுக்கு உட்பட்டுத்தான் என்றாலும், விதிகளுக்கு உட்பட்டுத்தான் என்றாலும், நல்ல மனிதன் சட்டங்களுக்கு உட்பட்டாலும், விதிகளுக்கு உட்பட்டாலும் அவன் உணர்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருப்பவன் என்பதைக் காட்டுவதற்கு, சில சந்தர்ப்பங்களை சட்டமும் அனுமதிக்கிறது, விதியும் அனுமதிக்கிறது. அப்படி மனிதனுடைய உணர்ச்சியைக் காட்டுவதற்கு அனுமதிக்காத சட்டங்கள், விதிகள் செத்தவைகளே தவிர, அந்த மனிதன் செத்துப் போகிறவனல்ல. ஆகவே அந்த உணர்வுகளுக்கு உட்பட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களை அரசாங்கம் கூர்ந்து கவனித்திருக்கிறது. ஆனால் அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள், கற்பித்த உள்நோக்கங்கள் எதுவும் அரசாங்கத்திற்கு இல்லை என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்து சபையினுடைய அலுவல்களை ஒத்திவைத்து இந்தத் தீர்மானத்தின் மீது விவாதிக்க வேண்டுமென்று இனிமேல் யாரும் கோரமாட்டார்கள். ஆகவே அது நடந்து முடிந்துவிட்டது. மாண்புமிகு தலைவரவர்களுடைய அந்த உணர்வும், அவர்கள் ஒரு சான்றோராக அந்த ஆசனத்திலே அமர்ந்திருக்கிறார்கள் என்பதற்குச் சான்றாகவும் இன்றைய நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. ஆகவே நானும் மரபுப்படி, இந்த அவையினுடைய இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டாமென்று கேட்டு அமைகிறேன், வணக்கம்.

(முற்பகல் 11-45)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இந்த அவையில் இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ள நான் அனுமதித்ததே உடனடியாக, அவசரப்பட்டு அல்ல. இதைத்தான் துவக்கத்திலும் சொன்னேன். இன்னொரு முறையும் சொல்

கிறேன். இதை அனுமதிக்க வேண்டாம் என்றுகூட ஒரு தகவலை நான் தந்தேன். திரும்பத் திரும்ப என் மனச்சாட்சி வற்புறுத்தியதால் பாதிக்கப் படுகிற ஒரு அவை, தன்னுடைய சொந்த நலத்திற்காக இல்லாவிட்டாலும்கூட இந்த அவையினுடைய வரலாற்றையும் பெருமையையும் காப்பாற்ற வேண்டும் என்று கடமைப்பட்டவர்கள், அவர்கள் எந்தெந்தத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்களோ, அந்தந்தத் தொகுதிகளிலிருந்து அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பியவர்கள் இந்த அவை கலைக்கப்படுகிற போது நம்முடைய உறுப்பினர்கள் அமைதியாக இருந்தார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு வாராதபடி தங்கள் கருத்தை எடுத்துச் சொல்லி, கடமையைச் செய்தார்கள் என்ற மனநிறைவு அவர்கள் தொகுதி மக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்—முடிவு என்ன ஆனாலும் சரி—என்று அதை நன்றாக யோசித்துக் கடைசி நேரத்தில்தான் இந்த மாதிரியான ஒரு சுத்து அதிகாரத்தைப் பயன் படுத்தி 'அனுமதிக்காமல் இருப்பது நல்லதல்ல' என்று முடிவு கட்டி, காலையில் தான் நான் அனுமதித்தேன்.

நான் இப்போதும் சொல்கிறேன், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தான் தன் பதவியைத் துறக்கவும் தயார் என்று அறிவிக்கும் அளவுக்குப் போக வேண்டாமே என்பதற்காகத்தான் நான் அவரை விவாதத்திலிருந்து ஒதுக்கி வைக்க விரும்பி, அவரை வேண்டாம் என்று முதலில் சொன்னேன். "அதனால் ஒன்றும் நஷ்டம் இல்லை", "பேசாததால் நஷ்டம் வந்து விடாது" என்று சொன்னேன். நான் இப்போதும் சொல்கிறேன். நானே உணர்ச்சிவசப்பட்டேன் என்றார்கள். நானே அப்படித் தோன்றும்போது, எதிர்க் கட்சியில் இருப்பவர்களெல்லாம் உணர்ச்சியின் பிரதிநிதிகளாகத்தான் இருப்பார்கள். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

முன்னாள் அமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதா அவர்கள் சொன்ன போது, நான் ஒன்றும் உணர்ச்சிவசப்பட்டுவிடவில்லை. உங்களுக் கெல்லாம் என்னைப் பார்த்தாலே அப்படித் தெரிகிறது. உணர்ச்சி வசப்படுகிற வனாகத் தோன்றுகிறது. அப்படியல்ல. இது ஒரு முன்மாதிரியில்லாத நிகழ்ச்சி. திரும்பத் திரும்ப நான் அதை வலியுறுத்துகிறேன். இந்த அவை கலைக்கப்படுகிறது என்பது ஒரு முன்மாதிரியில்லாத ஒரு நிகழ்ச்சியாக இருப்பதன் காரணமாக இதன் மீது வருகிற உணர்வுகளுக்கு இடம் தருவதா வேண்டாமா என்பது விதிமுறைகளிலே நான் இடம் கேட்டுத் தேடிக் கொண்டிருக்க முடியாது. எனவேதான் கொஞ்சம் நகர்ந்து கொடுத்து, கொஞ்சம் வளைந்து கொடுத்து இதை அனுமதித்திருக்கிறேன். அவ்வளவுதான்.



இதன் மூலமாக என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லிவிட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையில் அவ்வாறு சொல்லுவது தவறு அல்ல என்ற நம்பிக்கையில் சொல்ல விரும்புகிறேன்.

அரசாங்கத்திற்கு இந்த அதிகாரம் உண்டு. அரசியல் சட்ட விதிமுறை களின்படி ஒரு அவையை உருவாக்கவோ அல்லது நீக்கவோ அதிகாரம் உண்டு. விதி என்று சொல்லும்போது, இன்னொன்றையும் நான் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அரசியல் சட்டத்தை எடுத்துப் பார்த்தால், இவ்வாறு மேலவையைக் கலைப்பதற்கு மட்டும் அதிகாரம் இருக்கிறது என்று அந்த விதி சொல்லவில்லை. அதாவது ஒரு மாநிலத்தில் மேலவை இல்லாமல் இருந்தால், அங்கே அதனை உருவாக்கவும், ஒரு மேலவை ஏற்கெனவே இருக்குமானால் அது அவசியமில்லை என்று தோன்றினால் அதைக் கலைக்கவும் விதி இருக் கிறது. இப்படிச் சொல்லுவதாலே இது ஒரு பாதுகாப்புக்காகத்தான் போடப் பட்ட விதியே தவிர, அவையைக் கலைக்கும் அதிகாரத்தை வற்புறுத்தச் செய்யப்பட்ட விதியல்ல. இரண்டையும் செய்திருக்கிறார்கள். இன்னொன் றையும் சொல்லுகிறேன். இந்த மேலவையை வைக்க வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றிய விதி சம்பந்தப்பட்ட விவாதம், கான்ஸ்டிடுவென்ட் அசெம் பிளியில்—அரசியல் நிர்ணய சபையில்—வந்தபோது இதுபற்றிய இரண்டு கருத்து இருந்திருக்கிறது. அதாவது அவை வேண்டும் என்றும், வேண்டாம் என்றும் இரண்டு கருத்துக்கள் இருந்திருக்கின்றன. ஆனால், அதைப்பற்றி நன்கு விவாதித்த பிறகுதான் இப்படிப்பட்ட மேலவை வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்து எங்கெங்கே, பெரிய மாநிலங்கள் இருக்கின்றனவோ, அங்கெல்லாம் வைப்பது என்று நிர்மானித்து வைத்தார்கள்.

இப்போதும் நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்மீது நான் நம்பிக்கையை இழந்தோ அல்லது ஆளும் கட்சியின் மீது, நல்லெண்ணத்தை இழந்தோ, இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்க வில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களின் மீது எனக்கு, எப்போதும் நம்பிக்கை உண்டு. அதைப்போலவே இந்த ஆளும் கட்சியின் மீதும் எனக்கு எப்போதும் என்றென்றைக்கும் நல்லெண்ணம் உண்டு. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல், இவ்வளவு அமைதி யாக இந்த விவாதம் நடைபெற்றதே எனக்கு மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. கடைசி நேரத்தில் உணர்ச்சி வசப்பட்டிருந்தாலும் கூட—எதற்காகச் சொல்லு கிறேன் என்றால், எடுத்துக் கொண்ட காரியம் ஜெயிக்க வேண்டும் என்பதற் காகத்தான். இதில் பாதிக்கப்படுபவர்கள் என்று இருக்குமானால், அதில் நம் எல்லோருக்கும் ஒவ்வொரு சதவீதம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும் இவ்வளவு அமைதியாக இந்த விவாதம் நடைபெற்றது என்பதிலிருந்தே

(முற்பகல் 11-50)

பாதிக்கப்பட்டவர்கள் யாரும் பாதிக்கப்பட்ட காரணத்தால் ஆத்திரப்பட்டுப் பேசவில்லை. ஆனால் பொதுக் கொள்கைக்காகத்தான் நாம் இதையெல்லாம் பேசியிருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஒன்றை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லுவதற்குக் காரணம் இந்த அவையின் பின்னணி—சரித்திரத்தை நாம் பார்க்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி நமக்கு சுயாட்சி கொடுத்ததே இந்த லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் என்கிற இந்த அமைப்பின் மூலமாகத்தான். மத்தியிலிருந்து—டெல்லியிலிருந்து அப்போது நாம் அதிகாரத்தை நமக்கு மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். அப்படி மாற்றிக் கொடுத்த அதிகாரமே லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் மூலமாகத் தான். அப்போது அசெம்பிளி என்று ஒன்றில்லாத காலம். 1937-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் லெஜிஸ்லேட்டிவ் அசெம்பளி என்ற அமைப்பு ஏற்பட்டது. எனவே பழைய பெயரான லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் என்ற பெயரிலேயே அந்த அவை வழங்கப்பட்டது என்பதைக் கவனிக்க வேண்டும். அப்படி இந்த வரலாறு மாறக்கூட இல்லை. திரும்பக்கூட இல்லை, தேயக்கூட இல்லை. லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் என்ற பெயரிலேயே இந்த அவை நீடித்தது. ஆகவே தென்னாட்டுக்கு—தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல—தென்னாட்டுக்கே ஒரு பாராளுமன்ற மரபு அல்லது வரலாறு என்று ஒன்று இருக்குமானால், அது லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் மூலமாகத்தானே தவிர, வேறு ஒன்றின் மூலமாக அல்ல என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே, அந்த லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலைக் கலைத்து விடுவதால் அந்த மரபு குலைந்து போய்விடுமோ என்பதுதான் என்னுடைய மனவருத்தம். உங்களுக்கெல்லாம் என்னைத் தெரியும். தமிழ்நாடு என்ற பெயரை சென்னை இராஜ்ஜியத்திற்கு வைக்க வேண்டும் என்று போராடியதே—ஆங்கிலத்தில் சொல்வார்களே—'பிரிஸ்டிஜ்' என்று அந்த வகையில் தான். சென்னை இராஜ்ஜியம் என்பதால் சோறு தின்று விடாது. இருந்தாலும் நம்முடைய மாநிலத்திற்கும், நம்முடைய தமிழ்ப் பெயர் இருக்க வேண்டும் என்றுதான் போராடினேன் என்பது உங்களுக்குத் தெரியும்.

அதுபோல இப்போதும்கூட கலைக்கப்பட்டுவிட்டால் பாரம்பரியம் அழிந்து விடுமோ என்று எண்ணுகிறேன். இன்னுமொன்றை நினைவுபடுத்துகிறேன். இருதரப்பாரும் திராவிட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள்தான். நான் உங்களுக்குப் பகைவன் அல்ல. இன்னுமொன்று, வேறு ஒரு பாரம்பரியத்தில் வளர்ந்தவன் என்றாலும், இந்தப் பாரம்பரியத்தில் அன்பு பெற்று அமர்ந்திருப்பவன் நான், பழைய திராவிட பாரம்பரிய அரசியல் என்பது 1921-ல் இருந்து தான் ஆரம்பமாகிறது. பம்பாய், வங்காளம், சென்னை ஆகிய மூன்று



மாகாணத்திற்கும் மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தம் கவுன்சிலைக் கொடுத்தது என்றாலும், பம்பாயிலும், வங்காளத்திலும் தோற்றுப்போய் விட்டது என்பதால், மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தம் தொடர்ந்து நடைபெறவில்லை. இந்த ஒரு மாகாணத்தில் மட்டும், 1935-ஆம் ஆண்டு அரசியல் சட்டம் வருகிற வரையில் இந்தக் கவுன்சில் ஒன்றுதான் இந்தியாவி லேயே நடந்திருக்கிறது என்றால், இந்த மரபு அதைக் காத்திருக்கிறது என்றால், அந்தக் காலத்திலே இருப்பவர்கள் எவ்வளவு மாண்பு உடையவர்கள், எவ்வளவு பண்புடையவர்கள், எவ்வளவு பெருமையுடையவர்கள், படிப்படி யாகத்தான் சீர்திருத்தம் அடைய வேண்டும் என்று எண்ணிய கனவான்கள் என்ற சரித்திரம் எல்லாம் மறைந்து போகக்கூடாது என்று எண்ணுகிறேன்.

சென்னை சட்டசபை வருவதற்கு முன்பிருந்த பழைய லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில் உறுப்பினராக இருந்தவர் இறந்து போனால், அவர் ஆந்திராவைச் சேர்ந்தவராக இருந்தாலும், கர்நாடகாவைச் சேர்ந்த உறுப்பினராக இருந் தாலும், இப்போது கூட நம்முடைய சபையில் தான் அனுதாபத் தீர்மானம் போடுகிறோம். காரணம்—அந்தப் பாரம்பரியத்திற்கு இதுதான் சின்னம், ஆந்திர மேலவை அல்ல, கர்நாடக மேலவை அல்ல. அந்தப் பாரம்பரியத் திற்குச் சின்னமாக உள்ள இந்த அவை மறைந்து போய்விடுமோ என்று இந்த மாநிலப் பெருமைகளில் மயக்கமுடையவன் என்ற வகையில் நான் எண்ணு வதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்களும், மூதறிஞர் ராஜாஜி அவர்களும் இந்த அவையிலும், அந்த அவையிலும் இருந்தவர்கள். நான் அவர்களை உவமை காட்ட விரும்பவில்லை. பேரவையில் இடம் பெறாமல் மேலவையிலே மட்டும் இடம் பெற்றுவிட்டு அரசியல் வாழ்வை முடித்துவிட்ட பல பெரியவர்களுடைய சரித்திரத்திற்கு இதுதான் சின்னம். அவர்களுடைய பெருமைகளுக்கு இதுதான் சின்னம். பேசுகின்றபோது அடிக்கடி இந்த அவையிலே யார் யார் இருந்தார்கள் என்று கலைஞர் அவர்கள் சொன்னார்கள். நான் சொன்னேன், இந்த அவை கலைக்கப்பட்டுவிட்டால் இனி யார் இருக்கிறார்கள் சொல்லுவதற்கு? எங்கேயிருக்கிறது இடம் சொல்லுவதற்கு? அந்த மாண்பை, மாபை எடுத்துச் சொல்லுகிற மரபு போய்விடுகிறதே என்ற வருத்தம் எனக்கு இருக்கிறது. தென்னாட்டு வரலாற்றை உருவாக்கிய கர்த்தாவான திரு தியாகராஜ செட்டியார் இந்த லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலில்தான் இருந்தார். உலகம் முழுவதும் தமிழ் நாட்டிற்குப் பெருமை தேடிய, இந்தியாவிற்குப் புகழ் தேடிய மகாவீரர் வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரியார் இங்கேதான் இருந்தார். டில்லி சட்டசபையில் சென்று பிரிட்டிஷ் ஏகாதி பத்திய சிங்கத்தின் பிடரியைப் பிடித்து ஆட்டுகிறேன் என்று சொல்லிவிட்டுப்

போன திரு சத்தியமூர்த்தி அசெம்பிளியில் இல்லை, இங்கேதான் இருந்தார். இந்த கவுன்சில் சரித்திரத்தோடுதான் இருந்தார். அது மட்டுமல்ல. இந்தியாவிலேயே ஒரு முதல் பெண்மணி லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலில் அங்கம் பெற்றது இந்தக் கவுன்சிலில்தான். டாக்டர் முத்துலட்சுமிரெட்டி அவர்கள் லெஜிஸ்லேடிவ் கவுன்சிலின் துணைத் தலைவியாக வந்தது இங்கே தான் என்பதை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

டில்லி சட்டசபைத் தலைவராக இருந்த திரு ஆர். கே. சண்முகம் செட்டியார், அந்தப் பதவி பெற்றதற்குப் பிறகு, பெற்றுவிட்டு வந்த பிறகு, இந்த அவையிலேதான் அங்கத்தினராக இருந்தார். லெஜிஸ்லேட்டிவ் அசெம்பிளி அல்ல என்பதை நினைக்கிறேன்; எல்லா வகையிலும் வைத்துப் பார்க்கும்போது, இந்த அரசுக்கு அவையின் முன்னவருக்குத் தெளிவாகச் சொல்லுகிறேன். முதல்வர் அவர்களை நானே நேரில் பார்த்துப் பேச முடியும் என்றாலும், வலியுறுத்த முடியும் என்றாலும், இது பொதுவான ராஜ்ய விஷயம் என்பதால், சொந்த நட்புப் பிரச்சினையாக ஆக்காமல், அவர் விருப்பப்படி விட்டுவிட கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் இங்கே சொல்லுவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறேன் என்பதைத்தான் சொல்லி விடுகிறேன். அந்த ஆன்மாக்களின் பெருமைகளையெல்லாம் காப்பாற்ற, அந்தப் பெரியவர்களுடைய பெருமைகளை எடுத்துச் சொல்ல இந்த மன்றம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று எண்ணுபவர்களில் நானும் ஒருவன்.

இந்த அவை இங்கே தொடர்ந்து இருக்க வேண்டும் என்று நான் எண்ணுவதற்கு மற்றொரு காரணம்—அணுகுமுறையில் உள்ள வேறுபாட்டுக்காக, இந்த அவையைக் கலைப்பது என்ற முடிவிற்கே வந்தாலும்கூட, எப்படிக் கலைப்பது என்பது நிற்கிறது. 'செய்வன திருந்தச் செய்' என்ற வாக்குண்டு. "நன்நாற்றலினும் தவறுண்டு அவரவர்—பண்பறிந்து ஆற்றாக் கடை". நல்லது தான் செய்வது என்றாலும், நீங்களா செய்ய வேண்டும்? மாண்புமிகு உறுப்பினர்கள் ஒப்புக்கொள்கிறார்களோ என்னவோ, இருந்தாலும் ஒன்றைச் சொல்லுகிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கரம் கொடுத்துப் பழகியது, பறித்துப் பழகியது அல்ல. ஆகவே இந்த அவையைப் பறித்து பழகிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உண்மையிலேயே என்னுடைய வீட்டில் நண்பர்களோடு இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசியபோது, உங்களுக்கு ஏன் இவ்வளவு உணர்ச்சி? என்று கேட்டார்கள். "நான் தலைவராக இருக்கும் [illegible] படுகிறதே என்ற வருத்தம்தான்" என்றேன். முன்னே [illegible] கூடாதா? அல்லது பின்னே நடந்திருக்கக்கூடாதா? நான் இருக்கும்போதா



கலைக்கப்பட வேண்டும்? இந்த மாகாணத்தை மாற்றியமைத்ததில் அடியேனுக்கும் பங்குண்டு; எல்லையைத் திருத்தியமைத்துக் கொடுத்ததில் அடியேனுக்கும் பங்குண்டு; தமிழுக்கு முதலிடம் கொடுத்ததில் எனக்கும் பங்குண்டு. இதிலே இரண்டு கட்சிகளும் என்னோடு ஒத்துழைத்தன. இத்தகைய பெருமைக்குரிய நான் இருக்கும்போது, இப்படி நடக்கிறதே என்பதற்காக நான் திரும்பவும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் இருக்கும்போது, இது நடக்க வேண்டாம் என்பது என்னுடைய தனிப்பட்ட நட்புணர்ச்சி மீதுள்ள ஆணை.

(முற்பகல் 11-55)

மற்றொன்றையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் எத்தனையோ புதுமைகள் படைத்தார்கள். தமிழுக்காக உலகத் தமிழ் மன்றம் படைத்தார்கள். தமிழ் மொழிக்காகத் தமிழ் பல்கலைக்கழகம் படைத்தார்கள். பெண்களுக்கென தனிப் பல்கலைக் கழகம் படைத்தார்கள். ஆகவே இந்த சொற்பக் காலத்திலே புதிய புதிய புதிய அம்சங்களையெல்லாம் படைத்துப் படைத்து பழகியவர்களே தவிர எதையும் அழித்துப் பழகியவர் அல்ல. அவை முன்னவர் அவர்கள் எனது உணர்ச்சியைக் குரலோடு கேட்பார்களோ என்னவோ தெரியாது. அவர்கள் வார்த்தையிலேயேனும் கொடுப்பார்கள் என்று நினைக்கிறேன். எங்கள் குரலையேனும் அவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய பெரியவர்களுடைய ஆன்மா இந்த அவையிலே இருக்கின்றது. அவர்களுடைய மரபுக்கு இந்த அவைதான் அடையாளம் என்று சொல்கிறேன்.

வங்காளத்திலே ஏன் அதை எடுத்தார்கள் என்றால் அவர்கள் சொன்னதைச் செய்தார்கள். அவர்கள் கொள்கையாக வைத்து தேர்தலிலே வைத்து எடுத்தார்கள். நண்பர் திரு மாணிக்கம் அவர்கள் வருத்தப்படமாட்டார்கள் என்று நினைக்கிறேன். மேலவையிலே தங்களுக்குப் பெரும்பான்மை வராது என்ற நிலையில், பேரவைக்கும் மேலவைக்கும் ஒரு அரைகுறை ஏற்படும் தன்மையை அகற்றுவதற்காகத்தான் அதைச் செய்தார்கள். ஆந்திரத்திற்கும் அந்த நிலைதான். இந்த ஆட்சிக்கு அந்த நிலை இங்கேயில்லை. அடுத்த பொதுத் தேர்தல் வருகின்ற வரைக்கும் பெரும்பான்மையான நிலை இருக்கும். இந்தச் சூழ்நிலையில் இதைக் கலைத்து இவ்வளவு சேதத்தை ஏற்படுத்த வேண்டுமா என்ற உணர்வுக்காகத்தான் இதை நான் சொல்கிறேன்.

மற்றொன்று சொல்கிறேன். இங்கே காங்கிரஸ் கட்சியினர் இருக்கின்றார்கள். கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இருக்கின்றார். அவருக்கு

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1986 மே 13

மேலிடம் ஒன்று இருக்கின்றது. உங்களுக்கு அப்படி இல்லை. அவரை நான வேண்டுகிறேன். இதை அனைத்திந்தியக் கொள்கையாக வையுங்கள். மேலவை வேண்டாம் என்று சொன்னால் நீங்கள் ஆதரவு கேட்கின்றபோது, டெல்லியிலே இருப்பவர்களுக்காக இங்கே உள்ளவர்களைக் கேட்கிறேன். அனைத்திந்திய கொள்கையாக வைத்து அவசரச் சட்டத்தைத் திருத்த எல்லா மாகாணங்களிலும்—குறைந்துகொண்டுதான், தேய்பிறையாகத்தான இருந்து கொண்டு தானே வருகின்றது—எல்லா மாகாணங்களிலும் அவையை ஒழித்துவிடுங்கள். அப்போதுகூட சொல்வேன், சட்டப் பேரவையிலேயும், ஆசிரியர்களுக்காக சில பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். உள்ளாட்சி ஆட்சியில் உள்ளவர்களில் சில பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும். அதற்கு அரசியல் சட்டத்திலே வழிவகுத்துவிட்டு, மாநிலங்கள் முழுவதுமாகக் கலையுங்கள். ஒவ்வொன்றாய் ஒவ்வொன்றாக கலைத்துக்கொண்டு போகிறது என்பது கொள்கையாகவும் தெரியவில்லை. நடைமுறையாகவும் தெரியவில்லை. அது வேண்டாம். அனைத்திந்திய ஆட்சிக்கு, பிரதமருக்கு நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சியில் தலைவராக இருப்பவர்கள், நம்பும் முறையில் சொல்லமுடியுமானால், இதை அனைத்திந்தியக் கொள்கையாகச் செய்யுங்கள். நாளைக்கு தீர்மானம் பேரவையிலே வரப்போகிறது. அன்பர்கள் சொன்னார்கள், நாளைக்குத் தீர்மானம் வந்தபிறகு அதைச் செய்யலாமா என்று கூடச் சொன்னார்கள். திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் ஒன்று சொன்னார்கள். "அங்கே தீர்மானம் நிறைவேற்றப்படுமே, என்ன பண்ணலாம்?" என்று. நான் பேசியே இருக்கமாட்டேன். நாளைக்கு அங்கே நிறைவேறிவிட்டால், நாம் பேசுவது என்பது முறைகேடானது. உண்மையிலேயே அவைத் தலைவர் அவர்கள் அதைப் பற்றிப் பேசுவது முறைகேடானது என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன். நாம் கருத்துத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத் தான் நான் அதை இன்றே அனுமதித்தேன். அந்த அவை தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்து கிறது. அரசியல் சட்டம் அதற்கு வழங்கியுள்ள அதிகாரத்தின்படி, 'இதைக் கலைப்பதற்கு அனுமதி கொடுக்க அந்த அவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டால், "பாதிக்கப்படுகிறோம்" என்ற காரணத்திற்காக அதை மறுத்து உறுப்பினர்கள் பேசுவது முறையல்ல, அதைப்பற்றி தலைவர் பேசுவதும் முறையல்ல. ஆக முதல்வர் அவர்களிடம் நான் என் இதயம் திறந்த வேண்டுகோளை விடவேண்டும். எங்கள் நட்பின் அடிப்படையில் அவருக்கு ஒரு வேண்டுகோள் நான் விடவேண்டும். ஒருகால் பலித்தாலும் பலிக்கும் என்ற நம்பிக்கையோடு இந்த அவையைக் கலைப்பதை கைவிடுங்கள் என்ற வேண்டுகோளை விடுக்கிறேன். பழைய பெரியவர்களுடைய சின்னம்



1986 மே 13] [மாண்புமிகு மேலவைத் தலைவர்]

இது ஒன்றுதான் என்று சொல்கிறேன். மீண்டும் திரும்பச் சொல்கிறேன். சில மாநிலங்களிலே அப்படி நடந்தாலும்—ஆங்கிலத்திலே தான் இருக்கிறது, தமிழிலே அப்படி இல்லை, 'பட்' (but) என்று போட்டால், முன்னே சொன்னதெல்லாம் போயிற்று என்று அர்த்தம். அப்படி நடந்தால், நான் வேண்டுகிறேன், பல மாநிலங்களிலேயும் கலைப்பதற்கு தீர்மானம் போட்டு பிறகு அதைக் கைவிட்டிருக்கிறார்கள். எந்த மாநிலம் என்று நான் குறிப்பிட விரும்பவில்லை. தீர்மானத்தைப் போட்டு அதைக் கைவிட்டும் இருக்கிறார்கள். நாளைக்கு அதை எடுத்துக்கொண்டதற்காக நிறைவேற்றினாலும், "அவசரப் படவேண்டாம், ஆத்திரப்படவேண்டாம், யோசித்துச் செய்யுங்கள். பார்த்துச் செய்யுங்கள்" என்று சொல்லிக்கொள்கிறேன். அவைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள், நாங்கள் எதுவும் செய்வதற்கில்லை என்று. நான் மட்டும் என்ன செய்யமுடியும்? என்னை இங்கே அமர்த்துகின்றபோது, மாபெரும் தலைவர் அவர்கள் சொன்னார்கள். "தமிழனை இங்கே அமர்த்துகிறோம்" என்று சொன்னார்கள். இதை நீக்குவதால் தமிழை நீக்குகிறார் என்று நாம் சொல்லவில்லை. தமிழை எங்கே வைக்கவேண்டும் என்று அவர்களுக்குத் தெரியும். எந்த நிலையில் வைப்பது என்ற அந்த மனமும் உண்டு, அந்தப் பண்பும் உண்டு. அது எனக்குத் தெரியும். ஆனால் அது அல்ல இங்கே இருப்பது. நான் எடுத்துச்சொல்லவேண்டியது என்று கருதுவதை நான் எடுத்துச்சொல்லத் தவறிவிட்டால், என்னுடைய மனச்சாட்சிக்கே நான் துரோகம் செய்தவன் ஆவேன். ஆகவே திரும்பவும் சொல்கிறேன். அவையைக் கலைக்க அவசரப்படாதீர்கள். மேலவையைக் கலைக்க அவசரப்படாதீர்கள். நாளைக்கு தீர்மானத்தை நிறைவேற்றாமலே இருக்கலாம். நிறைவேற்றி னாலும் கொஞ்சம் பொறுமையாக அமல் நடத்த முயலுங்கள். அதனால் ஒன்றும் கெட்டுப்போகாது என்று இந்த ஆட்சிக்கு நான் இப்போது வேண்டுகோள் விடுக்கிறேன்.

இங்கே ஒத்தி வைத்து விவாதிப்பது என்று சொல்லும்போது, ஒரு வழக்கம் உண்டு. 'போதும், போதும் நிறுத்து, அது எப்படி அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை மட்டும் சொல்லி நிறுத்து' என்போம். அவரே சொன்ன மாதிரி, இதிலே எல்லோரும் பேசியாகிவிட்டது. விவாதித்து ஆகிவிட்டது. ஆகவே யாரும் வெளி நடப்பு செய்து இதைக் கட்சிப் பிரச்சினையாக ஆக்கிவிடாமல், இதற்கு மேல் வேறு தவறான உணர்ச்சிகளை வெளிப்படுத்தி, எதிர்ப்புணர்ச்சியை காட்டாமல், 'இதை நாம் நிராகரிக் கிறோம்' என்ற வார்த்தைக்கு இங்கே அது [illegible] அந்தக் கருத்துக்கு அது மாறுபாடாகிவிடும்—ஆகவே இத்துடன் இதை முடித்துவிடுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

### 3. அறிவிப்புகள்.

(1) அரசு உறுதிமொழிக் குழுவிற்கு உறுப்பினர்களை நியமித்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மேலவை விதி 175-ன் படி 1986-87 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதி மொழிக் குழுவிற்கு கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமித்துள்ளேன் :

1. திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன்.
2. திரு. சி. இராமலிங்கம்.
3. திரு. அ. ப. சிவராமன்.
4. திரு. அ. மயில்சாமி.
5. திரு. மு. மாசிலாமணி.
6. திரு. ப. மாணிக்கம்.
7. திருமதி வி. ஜெயலட்சுமி.

மேலவை விதி 176 (1)-ன் கீழ் திரு. பி. டி. ஆர். பழனிவேல் ராஜன் அவர்களை குழுவின் தலைவராக நியமித்துள்ளேன்.

### 4. கவன ஈர்ப்பு.

செவலபிரை கிராம சத்துணவு மையத்தில் உணவருந்திய குழந்தைகள் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது குறித்து.

**திரு. சி. இராமலிங்கம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்) :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு சத்துணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"செஞ்சியை அடுத்த செவலபிரை கிராம சத்துணவு மையத்தில் உணவருந்திய குழந்தைகள் ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது குறித்து"

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (மாண்புமிகு சத்துணவு அமைச்சர் சார்பில்) :** தலைவரவர்களே, விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

---

@ 89-90 ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



### 5. அரசின் தீர்மானம்.

வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே,

"இந்த அவையின் உறுப்பினர் டாக்டர் தி. இரா. சனார்த்தனம் அவர்களது சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் பதவிக் காலம் 20—4—1986 அன்று முடிவடைந்ததால் அவர் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவில் வகித்து வந்த உறுப்பினர் பதவிக் காலமும் 20—4—1986-ல் முடிவடைந்ததாகக் கருதப்படுகிறது. ஆகையால், தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டம் 1971, பிரிவு 18-ன் கீழ் உள்ள துணை பிரிவு (2)ல் அடங்கிய II -ல் வகை—ஏனைய உறுப்பினர்கள் என்ற தலைப்பின் கீழ் வரும் ( h ) உட்பிரிவின் கீழ் இந்த அவை, அந்த பல்கலைக் கழக நிர்வாகக் குழுவுக்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் குறிப்பிட்ட நாளன்று இந்த அவையின் உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"இந்த அவையின் உறுப்பினர் டாக்டர் தி. இரா. சனார்த்தனம் அவர்களது சட்டமன்ற மேலவையின் உறுப்பினர் பதவிக் காலம் 20—4—1986 அன்று முடிவடைந்ததால் அவர் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவில் வகித்து வந்த உறுப்பினர் பதவிக் காலமும் 20—4—1986-ல் முடிவடைந்ததாகக் கருதப்படுகிறது. ஆகையால் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டம் 1971, பிரிவு 18-ன் கீழ் உள்ள துணைப் பிரிவு (2) ல் அடங்கிய II ல் வகை — ஏனைய உறுப்பினர்கள் என்ற தலைப்பின் கீழ் வரும் ( h ) உட்பிரிவின் கீழ் இந்த அவை, அந்த பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு மாண்புமிகு மேலவைத் தலைவர் குறிப்பிட்ட நாளன்று இந்த அவையின் உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(2) வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வேளாண்மைப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கு உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கென கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது :

| | |
|---|---|
| நியமனத் தாள்கள் வந்து சேர கடைசி நாளும் நேரமும் | 14—5—1986 காலை 10-30 மணி |
| நியமனத் தாள்கள் ஆய்வு செய்யப்படும் நாளும் நேரமும் | 14—5—1986 காலை 11-30 மணி |
| நியமனத் தாள்கள் திரும்பப் பெற கடைசி நாளும்நேரமும் | 14—5—1986 மாலை 5-30 மணி |

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் வாக்கெடுப்பு நடைபெறும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**திரு. ப. மாணிக்கம் :** தலைவரவர்களே, சின்ன சந்தேகம். நாளைக்கு பேரவையிலே தீர்மானம் வருகிற மாதிரி இருக்கிறது. எனவே உறுப்பினர்கள் மனு தாக்கல் செய்வது என்றால், அதற்கு அவகாசம் கொடுத்தால் நல்லது. நாளை தீர்மானத்தைப் பார்த்துக்கொண்டு....

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அந்த விதிப்படி தானே வைக்க முடியும்?

**திரு. ப. மாணிக்கம் :** சூழ்நிலையை வைத்து, தலைவரவர்களே தீர்மானிக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 15 ஆம் தேதி வைத்துக்கொள்ளலாமா?

**திரு. ப. மாணிக்கம் :** சூழ்நிலைக்கேற்ப தாங்களே தீர்மானிக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 14—5—1986 என்பதற்கு பதிலாக 15—5—1986 என்று மாற்றிக்கொள்ளலாம்.



### 6. தனி உறுப்பினர் அலுவல்.

#### (1) சட்ட முன்வடிவு.

1986 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு.

**திரு. க. சுப்பு :** மேலவைத் தலைவரவர்களே, "1986 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அவை முன் உள்ள பிரச்சினை—

"1986 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்"

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 1986 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டது.

(பிற்பகல் 12-05)

#### (2) தீர்மானங்கள்.

(1) மத்திய அரசு திறக்கவிருக்கும் மாதிரிப் பள்ளிகளில் கட்டாய இந்தித் திணிப்பு.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவர் அவர்களே, "மைய அரசு 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் இந்தியா முழுவதும் 500 பள்ளிகளை திறக்க இருப்பதும், அப்பள்ளிகளில் இந்தியும், ஆங்கிலமும் மட்டுமே பயிற்று மொழியாக வைக்க இருப்பதால், பள்ளிக்குரிய பாடத்திட்டங்களை மைய அரசே நிர்ணயிக்க உள்ளதும், பிற்காலத்தில் மாநில அரசு பள்ளிகளும் அதனையே பின்பற்ற வேண்டியிருக்கும் என அறிவித்திருப்பதும், இதனால் வருங்காலத்தில் தமிழகத்தில் இருமொழிக் கொள்கைக்கு முரணாக இந்தி மொழி கட்டாயமாகத் திணிக்கப்படும் என்ற அச்சம் தோன்றியிருப்பதால் அத்திட்டத்தை மைய அரசு கைவிட பரிந்துரை செய்யுமாறு இம்மேலவை அரசுக்கு பரிந்துரை செய்கிறது"

என்று முன்மொழிகிறேன்.

திரு. மிசா. கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்..

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"மைய அரசு 7-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் இந்தியா முழுவதும் 500 பள்ளிகளை திறக்க இருப்பதும், அப்பள்ளிகளில் இந்தியும், ஆங்கிலமும் மட்டுமே பயிற்று மொழியாக வைக்க இருப்பதால், பள்ளிக்குரிய பாடத் திட்டங்களை மைய அரசே நிர்ணயிக்க உள்ளதும், பிற்காலத்தில் மாநில அரசு பள்ளிகளும் அதனையே பின்பற்ற வேண்டியிருக்கும் என அறிவித்திருப்பதும், இதனால் வருங்காலத்தில் தமிழகத்தின் இருமொழிக் கொள்கைக்கு முரணாக இந்தி மொழி கட்டாயமாகத் திணிக்கப்படும் என்ற அச்சம் தோன்றியிருப்பதால் அத்திட்டத்தை மைய அரசு கைவிட பரிந்துரை செய்யுமாறு இம்மேலவை அரசுக்கு பரிந்துரை செய்கிறது".

* திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, இப்பொழுது நம்முடைய நாட்டிலே மத்திய அரசாலே புதிய கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. அதை அமுல்படுத்த மத்திய அரசு ஈடுபட்டிருக்கும் நிலையில் சரியாக, பரவலாக கல்வியாளர்கள் மத்தியிலே, பொதுமக்கள் மத்தியிலே, அறிவார்ந்த பொதுமக்கள் மத்தியிலே, சிறப்பான மக்களின் மத்தியிலே அதை வைத்து, அவர்கள் எல்லாம் அக்கருத்தை ஏற்று, அதற்குப் பின்னாலே செயல் படுத்துகின்ற முறையிலே மத்திய அரசு ஈடுபடவில்லை. அதற்கு மாறாக மிக மிக அவசரமாக அதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். யார் யார் சொன்னால், அதை அப்படியே ஏற்று ஆட்படுவார்களோ அவர்கள் மத்தியிலே மட்டும் இதனை நடமாட வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களிடத்தில்

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

நிர்பந்தப்படுத்தி பேச வைத்து இதுகுறித்து முடிவு எடுத்ததாகச் சொல்லி இன்றைக்கு புதிய கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முயன்று கொண்டிருக்கிறார்கள். தேசிய அபிவிருத்தி கவுன்சிலிலும் அங்கே நடைபெற்ற கல்வி ஆலோசனைக் குழுவிலும் கூட அதை வைத்திருக்கிறார்கள். அங்கே இருவேறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டதாக செய்திகள் கிடைத்திருக் கின்றன. மாறுபட்ட கருத்துக்களை எல்லாம் கவனத்திலே கொள்ளாமல்; அவர்களாகவே அதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு மாதிரிப் பள்ளிகளை இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும், அனைத்துப் பகுதிகளிலும் முதல் முதலாக உருவாக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. புதிய கல்வித் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாறுபட்ட பல கருத்துக்கள்



இருக்கின்றன. புதிய கல்வித் திட்டத்தைக் கொண்டு வருவது ஏற்புடையதல்ல என்ற கருத்து நாட்டு மக்கள் மத்தியிலே பரவலாக இருக்கின்ற நிலையிலே மத்திய அரசு மாதிரிப் பள்ளிகளைக் கொண்டு வரும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருப்பது சரிதானா? தமிழகத்தைப் பொறுத்தவரையில், புதிய திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக நம்முடைய இருமொழிக் கொள்கைக்கு மாறாக மும்மொழிக் கொள்கையை அவர்கள் மறைமுகமாகக் கொண்டு வந்து புகுத்துவார்களோ என்ற அச்சம், என்னைப் பொறுத்த வரையில், இருக்கிறது. பாடத் திட்டங்களைப் பொறுத்தவரையில், அவர்களே தயாரித்து அளிப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி என்றால், புதிய பாடத் திட்டங்களை அனைத்து மாநிலங்களும் பின்பற்ற வேண்டியிருக்கும். அந்தப் பாடத் திட்டங்களிலே தமிழகத்தின் வரலாறு, பண்பாடு, மொழி, கலாச்சாரம் போன்ற அம்சங்கள் எல்லாம் அழிக்கப்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் கூட எனக்கு இருக்கிறது. ஆக, மாதிரிப் பள்ளிகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதை எப்படியும் தடுத்தாக வேண்டுமென்ற நோக்கத்தோடு அதைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக புதிய கல்வித் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் போது, அதுபற்றிய கருத்தை பல்வேறு தரப்பில் இருப்பவர்களிடமிருந்தும் அறிய வேண்டும். ஆனால் கருத்து மாறுபாடு உடையவர்கள் தெரிவித்த கருத்துக்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அண்மையில் சென்னையில் புதிய கல்வித் திட்டம்பற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. அதில் பல கருத்துக்கள் வெளியிடப்பட்டன. அக் கருத்தரங்கில் கல்விக் கொள்கையில் மத்திய அரசின் தலையீடு இருக்கிறது என்று ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. பாரதி அவர்கள் கருத்து தெரிவித்தார்கள்.

(பிற்பகல் 12-10)

"புதிய கல்வித் திட்டம் என்பது மாநிலத்தை ஆட்டிப்படைக்கும் சர்வாதிகாரமான திட்டம்" என்று பேராசிரியர் இறையன் அவர்கள் தெரிவித் திருக்கிறார். கல்விக் கொள்கையை, மாநில அளவில் கூட அல்லாமல், மாவட்ட அளவிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று, பேராசிரியர் சிவசாமி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கை, ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பேரிடி" என்று ஓய்வு பெற்ற தலைமையாசிரியர் திரு. அரங்கசாமி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது ஒரு குழப்பமான கொள்கை என்று பேராசிரியர் அறிவழகன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இது மற்றொரு

வர்ணாசிரமக் கொள்கை என்று பேராசிரியர் கமலக்கண்ணன் தெரிவித்திருக்கிறார். பெண் கல்விக்கு இந்தத் திட்டத்தில் எந்தத் தீர்வும் இல்லையென்று பேராசிரியர் சரஸ்வதி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். "மாடல் பள்ளிகளை உருவாக்க வேண்டாம், இருக்கிற பள்ளிகளில் தரத்தை உயர்த்துங்கள்" என்று நம்முடைய கல்வித் துறையில் நீண்டகால அனுபவம் பெற்றவரும், முன்னாள் கல்வித் துறை இயக்குநராகவும், முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவும் இருந்த திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் கருத்தைச் சொன்னார்கள். மாநில உரிமையைப் பறித்து, மும்மொழித் திட்டத்தைப் புகுத்தச் செய்யும் சதி என்றும், மத்திய அரசின் இந்தச் சதிக்கு மாநில அரசு அனுமதிக்கக்கூடாது என்றும் திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் திரு வீரமணி அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே இந்த நாட்டில் உள்ள பெரியவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தக் கருத்துக்கள் எல்லாம் புறந்தள்ளப்பட்டு, மத்திய அரசு தொடர்ந்து இந்தப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இது தொடர்பாக நமது முதல்வர் அவர்கள் தேசிய அபிவிருத்திக் கவுன்சிலில் பேசும்போது, சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாதிரிப் பள்ளிகளை நாங்கள் முழுமையாக எதிர்க்கவில்லை என்ற கருத்தைச் சொல்லிவிட்டு, அப்பள்ளிகளில் பிராந்திய மொழி மட்டுமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்தையும் சொல்லியிருக்கிறார். இந்தியைப் பாட மொழியாக ஆக்குவதை நாங்கள் ஆதரிக்கவில்லையென்றும் சொல்லியிருக்கிறார். அவர்கள் அப்படிக் கூறியிருந்தாலும், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், முதல்வர் இந்தப் பள்ளியை எதிர்ப்பதாக இல்லை. ஆகவே மாதிரிப் பள்ளிகளை ஏற்றுக்கொள்வதாக மறைமுகமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றுதான் தோன்றுகிறது. மொழி சிறுபான்மையினருக்காக, அவர்களுடைய நன்மைக்காக ஆங்கிலம் வேண்டுமானால் பயிற்சி மொழியாக இருக்கலாம், கல்வியைப் பொதுப் பட்டியலிலிருந்து எடுத்து, மாநிலப் பட்டியலில் கொண்டுவர வேண்டுமென்ற கருத்தையும் அங்கே முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கல்வியின் மேம்பாட்டுக்காக அகில இந்திய கல்வி சர்வீஸ் என்ற பெயரில் அகில இந்திய கல்வி சர்வீஸைப் புகுத்துவது, மாநிலங்களின் உரிமைக்கு முரணானது என்று சொல்லி, இதை ஆதரிக்க மாட்டோம் என்றும் முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படிச் சொல்லியிருப்பதிலிருந்து, பொதுப் பட்டியலில் இருக்கும் கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று சொல்லியிருப்பதை நாங்கள் முழுமையாக ஆதரிக்கிறோம்.



அதை வரவேற்கிறோம். ஆனால் மாதிரிப் பள்ளிகளை ஏற்றுக்கொண்டு, அங்கே சொல்லிக் கொடுப்பவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர்கள் சில நிபந்தனைகளைச் சொல்லியிருக்கிறார்களே அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எங்களால் மாதிரிப் பள்ளியையே ஏற்க முடியவில்லை. இதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். மாநிலப் பட்டியலிலே கல்வியைக் கொண்டுவர வேண்டும். கிட்டத்தட்ட நம்முடைய கருத்தை மாநில அரசினர் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். என்று சொன்னாலும், மாதிரிப் பள்ளியை அவர்கள் ஏற்றுக்கொள்வதை நாங்கள் ஒத்துக்கொள்ள மறுக்கிறோம். அரசு அப்படியில்லை. ஆனால் மற்ற அரசுகளைப் பொறுத்த வரையில், கல்வி மாநிலப் பட்டியலுக்குள் இருக்க வேண்டுமென்று ஆந்திர மாநில முதல்வர் திரு. என். டி. ராமராவ் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தேசியப் பாடத் திட்டம் எதையும் திணிக்க முயன்றால், அது தவறான எண்ணங்களையும் குழப்பங்களையும் உருவாக்கும் என்று மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதி பாசு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆந்திராவும் அதை வழிமொழிந்திருக்கிறது, பஞ்சாப்பும் அதை வரவேற்றிருக்கிறது. நாடு முழுவதும் சீரான கல்விக் கொள்கையை ஏற்படுத்துவது சாத்தியமும் இல்லை, தேவையும் இல்லை, மாதிரிப் பள்ளிகளை ஏற்க முடியாது என்று கர்நாடகத்தின் முதல்வர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் கேட்டதற்குப் பின்னாலே, தேசிய அபிவிருத்திக் குழுவின் தலைவரான பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள், "எந்த மாநிலத்திலும் மாதிரிப் பள்ளிகளைத் திறக்கமாட்டோம்" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே இந்த நேரத்தில் நான் வற்புறுத்த விரும்புவது மாதிரிப் பள்ளிகளைத் திணிக்க மாட்டோம் என்று திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சொல்லியிருக்கிற அந்த வாய்ப்பைப் பயன்படுத்தியாவது நம்முடைய மாநிலத்தில் மாதிரிப் பள்ளிகளைக் கொண்டுவரும் முயற்சிகளைத் தடுக்க மாநில அரசு ஏன் முயலக்கூடாது? இதை ஏற்றுக்கொண்டு பயிற்சி மொழியாக இந்தியை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சொல்வதைவிட, மாதிரிப் பள்ளிகளையே ஏற்கமாட்டோம் என்று ஏன் சொல்லக்கூடாது என்பதை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கும் சிந்தனைக்கும் கொண்டுவர விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், இங்கே சொல்லப்படுகிறது, இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லிக்கொண்டே, தொலைக் காட்சியில் திணிப்பதும், இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று சொல்லிக்கொண்டே வானொலியில் இந்தியைத் திணிப்பதைப் போல், அஞ்சல் துறை அலுவலகங்களிலேயே இந்தியைத் திணிப்பதுபோல், ரயில்வே துறையின் எல்லா இடத்திலும்

இந்தியிலேயே இருப்பதைப் போல, பிற்காலத்தில் இந்தியை இந்தப் பள்ளிகள் மூலம் எல்லா பள்ளிகளிலும் திணிக்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். ஆகவே இந்தியைத் திணிக்கமாட்டோம் என்று மேலோட்டமாகச் சொல்கிற இந்த உறுதிமொழியை நம்மாலே ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் மத்திய கல்வித் துறை துணை அமைச்சர் திருமதி சுசிலா ரோட்டகி அவர்கள், ஏழைப் பிள்ளைகள், நல்ல பிள்ளைகள் மேலும் வாய்ப்பு பெறாதவர்கள் படிக்க இத்தகைய மாதிரிப் பள்ளிகள் வழிகாட்டும் என்று சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். ஏன் பாதிப்பு இல்லை; எப்படிப் பாதிப்பு இல்லை? இந்த நாட்டிலே இருக்கக்கூடிய அனைவருக்கும் கட்டாயமாகக் கல்வியை நல்க வேண்டுமென்று அரசியல் சாசனத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைச் செய்தோமா? செய்யவில்லையே.

(பிற்பகல் 12-15)

கல்வியை, 1976 ஆம் ஆண்டு எமர்ஜன்சி சமயத்தில் மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றினார்கள். அதன்பின் 1976-லிருந்து 1986 வரைக்கும் உள்ள இந்தக் காலத்தில் அப்படி என்னதான் கல்வியை வளர்த்திருக்கிறார்கள்? கல்விக்கான செலவுத் தொகையை நாளுக்கு நாள் குறைத்துக் குறைத்து கல்வியையே பழுதடைய வைத்திருக்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் செய்யவில்லையே.

இந்தப் புதிய கல்விக்கொள்கையின் கீழ் திறக்கப்படவிருக்கின்ற மாதிரிப் பள்ளிகளின்மூலம் யாருக்கு வாய்ப்பு கிடைக்கும்? ஏழைக் குழந்தைகளுக்கு, கிராமப்புறத்திலே இருக்கிறவர்களுக்கு, விவசாயி மற்றும் தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு ஏதேனும் பயன் கிடைக்குமா? இவ்வளவு பெரிய அளவிலே கம்ப்யூட்டர் அறிவை உருவாக்குவதற்காக ரூ. 200 கோடி செலவு செய்து ஆரம்பிக்கப்படுகின்ற இப்பள்ளிகளில் எப்படி ஏழைகட்கு இடம் கிடைக்கும்? இப்பள்ளிகளில் சேர்வதற்கும் நுழைவுத் தேர்வு வைக்கவிருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படியென்றால், கிராமப்புறத்திலேயிருந்து வருகிற மாணவர்கள் எப்படி இவற்றில் சேர முடியும்? ஆகவே இதை மறைமுகமாக நம்மை ஏமாற்றுவதற்காகச் சொல்கிற வாக்கியமாகத்தான் இதைக் கொள்ள வேண்டியிருக்கிறது.

மத்திய மனித சக்தித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்கள் கூட சொல்கிறார்கள். இவர் சொல்கின்ற கருத்துக்களுக்கும் கல்வித் துறை அமைச்சர் சொல்கின்ற கருத்துக்களுக்கும் வேறுபாடு இருக்கிறது. மாதிரிப் பள்ளிகளிலே மும்மொழித் திட்டம் அமலில் இருக்கும்





என்று மாண்புமிகு திரு. நரசிம்மராவ் சொல்கிறார். ஆனால் மும்மொழித் திட்டத்தைப் புகுத்தமாட்டோம் என்று கல்வித் துறை அமைச்சர் சொல்கிறார். இவர் சொல்கிற கருத்துக்கு மாறாக மனித சக்தித் துறை அமைச்சர் சொல்கிறார். முதல் வகுப்புக்கும், இரண்டாம் வகுப்புக்கும் பிராந்திய மொழி பாடமொழியாக இருக்குமென்றும், அதற்குப் பின்னால் மும்மொழித் திட்டம் அமல்படுத்தப்படும் என்றும் அவர் சொல்கிறார் என்றால், இதிலிருந்து அவர்களின் உண்மை நிலைமை என்னவென்று நன்றாகத் தெரிகிறது.

தென்னக மாவட்டங்களில் இந்தியையும், இந்தி பேசுகின்ற மாநிலங்களில் உள்ள 200 மாவட்டங்களில் தென்னக மொழிகளையும் பாடமாக வைப்பார்களாம். நம்முடைய மொழியை அவர்கள் கற்பார்களாம். ஒரு மாணவர் தாய் மொழியைத் தவிர மற்றொரு மொழியைக் கற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறபோது, மொழியைக் கற்பதில்தான் அம்மாணவரின் நேரம் வீணாகுமே தவிர, விஞ்ஞானம் மற்றும் பாடங்களில் அறிவு வளர்ச்சி ஏற்படாது.

"இந்தியை இங்கே புகுத்துகிறபோது, மும்மொழிக் கொள்கையின்கீழ் வட மாநிலங்களில் தென்னக மொழிகளைப் பயிற்றுவிக்க ஏற்பாடுகள் செய்வோம்" என்று சொன்னார்கள். ஆனால் அங்கே ஒரு மொழிக் கொள்கைதான் இருக்கிறது. மும்மொழிக் கொள்கை பெயரளவிற்குத்தான் இருக்கிறது. மும்மொழிக் கொள்கை அங்கே அமல்படுத்தப்படவில்லை. நம்மை ஏமாற்றுவதற்காகத்தான் அவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாநில அரசுகளைக் கலந்துகொள்ளாமல் புதிய கொள்கையை உருவாக்குவது என்ற பிரச்சினையே இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் சொல்கிறார் என்றால், இந்தப் புதியக் கல்விக் கொள்கையை உருவாக்குகிறபோது மாநிலக் கல்வித் துறையைக் கேட்டா செய்தார்கள்? அவர்களாகவே இக்கொள்கையை வகுத்துவிட்டு, நாங்கள் மாநிலங்களைக் கலந்து கொள்ளாமல் புதிய கொள்கையை உருவாக்குகிற பிரச்சினையே இல்லை என்று சொல்கிறார்கள் என்றால், அவர்கள் செய்த தவறினை மூடி மறைக்கிறார்கள் என்றுதானே பொருள்.

அதேபோல், "இப்பள்ளிகளுக்கு நன்கொடை தருவது என்பது வேறு, இடம் கிடைப்பதற்குப் பணம் கொடுப்பதென்பது வேறு." இதுவும் மனித சக்தித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. நரசிம்மராவ் சொல்லியிருப்பதுதான். நன்கொடை என்பது வேறு, இடம் கிடைப்பதற்குப் பணம் கொடுப்பதென்பது வேறு. பேர் எதுவாக இருந்தால் என்ன? இலஞ்சம் என்பது அன்பளிப்பாக மாறியதுபோலத்தான். பேர்தான் வேறு. பேர்தான் மாறுமே தவிர, பணத்தை வசூலிப்பதென்பது நடை முறையில் இருக்கும்.

தொழில் நுட்ப வளர்ச்சிக்காக நன்கொடை பெறுவதென்பது வரவேற்கத் தக்கது என்று சொல்கிறார்கள் என்றால், நாம் என்ன செய்ய முடியும்? அந்தப் பள்ளிகளுக்குப் போட்டிப் பள்ளிகளாக வளரும் தனியார் பள்ளிகளும் லஞ்சம் என்று சொல்லாமல், தொழில்நுட்ப அறிவைப் பெருக்குவதற்காக, "தாருங்கள்" என்று சொல்லி கோடிக்கணக்கான ரூபாயைக் கொள்ளையடிப்பதற்கு வாய்ப்புகூட இந்த மாதிரிப் பள்ளிகள் மூலம் கிடைக்கிறதென்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-20)

மாதிரிப் பள்ளிக்குப் போட்டிப் பள்ளிகளை உருவாக்குவார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். படிக்க வேண்டிய வயதில், பிழைப்புக்கு வேலை தேடிச் செல்லக்கூடிய சிறுவர்கள் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறார்கள். கடற்கரையிலே சுண்டல் விற்பவன், முறுக்கு விற்பவன், சிவகாசியிலே தொழிற்சாலையிலே பணியாற்றுபவர்கள், ஹோட்டல்களிலே டேபிள் துடைப்பவர்கள் இப்படிப்பட்ட இடங்களில் வேலை செய்யும் குழந்தைகள் எல்லாம், படிக்கக்கூடிய வயதிலே இருப்பவர்கள் எல்லாம் இன்றைக்கு பிழைப்புக்காகச் செல்கிறார்கள் என்றால், இந்த நாட்டினுடைய நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். அதற்கு வறுமைதான் காரணம். வறுமையை ஒழித்து அனைவரையும் கல்வி கற்கச் செய்ய வேண்டிய முயற்சிக்கு மத்திய அரசுதான் என்ன செய்திருக்கிறது? எதுவும் செய்யவில்லை. கல்வி என்பது அறிவை வளர்ப்பது, ஆற்றலைப் பெருக்குவது, திறமைகளைத் தூண்டுவது, இவற்றோடு செயல் திறனையும் வளர்க்க வேண்டும். இப்போது கல்வி நம்முடைய நாட்டிலே எப்படி இருக்கிறது? பள்ளிகளுக்குக் கட்டிடம் இருக்கிறதா? வகுப்பறை இருக்கிறதா? நூலகம் இருக்கிறதா? ஆய்வகம் இருக்கிறதா? மற்ற வசதிகள் இருக்கின்றனவா? எதுவுமே இல்லை. ஆகவே கல்வித் துறையே இங்கு வளரவில்லை. கல்வித் துறை வளர முடியாத ஒரு சூழ்நிலை இங்கு இருக்கிறது. இந்தியாவில் 40 சதவீதப் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடம் இல்லை. 60 சதவீதப் பள்ளிக்கூடங்களில் குடிநீர் வசதி இல்லை. 40 சதவீதப் பள்ளிக்கூடங்களில் கரும் பலகைகளே இல்லை. 35 சதவீதப் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாக இருக்கின்றன. ஆகவே இப்படி இருக்கின்ற பள்ளிகளை எல்லாம் முன்னேற்றுவதற்குரிய வசதிகளை மத்திய அரசு செய்யாமல், பொருளாதாரத்தில் வளர்ந்துவிட்ட, சமுதாயத்தில் வளர்ந்துவிட்ட, படிப்பிலே கல்வியிலே வளர்ந்துவிட்ட ஒரு பிரிவினரை மேலும் மேல்நிலைப் படுத்த இப்போது மாதிரிப் பள்ளிகளைக் கொண்டுவருகிறார்களே தவிர, அடிப்படையிலே



கல்வித் துறையிலே இருக்கக்கூடிய வசதியற்ற பள்ளிகளை வசதியுள்ளவைகளாக உயர்த்தக் கூடிய நடவடிக்கைகளை எடுக்கிறார்களா என்றால், இல்லை. மொத்த உற்பத்தியிலே 3 சதவீதம் தான் கல்விக்கு ஒதுக்கி இருந்ததாகச் சொல்லப்படுகிறது. 36 சதவீதம்தான் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள் என்ற நிலை நாட்டிலே இருக்கிறது. இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் கிராமப்புறத்தில் படிப்பதற்கு வசதியில்லாமல் இன்னும் 54 சதவீதம் மக்கள் இருக்கிறார்களே, அவர்களைப் படிக்க வைப்பதற்குரிய நடவடிக்கையை, அவர்களுக்கு எழுத்தறிவாவது ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மத்திய அரசும், மாநில அரசும் எடுக்க வேண்டுமே தவிர, வளர்ந்துவிட்ட பிரிவினருக்காக கோடிக் கணக்கான ரூபாயைச் செலவழிக்க புதிதாக உருவாக்கியிருக்கும் கல்வித் திட்டத்தை நாம் எதிர்க்க வேண்டும். அதோடு மட்டுமல்லாமல், அந்தப் பணத்தை நம்முடைய மாநில அரசிடம் தர வேண்டுமென்று நாம் கேட்டுப் பெற்று, எழுத்தறிவு ஊட்ட வேண்டிய பிரிவினருக்கு எழுத்தறிவு ஊட்டுவதற்குரிய நடவடிக்கையை நம்முடைய அரசு எடுக்க வேண்டுமென்று சொல்வதற்காகத்தான் நான் இந்தத் தீர்மானத்தையே கொண்டுவந்து வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

இது தவிர 4 கோடி குழந்தைகள் இன்றைக்கு இடையிலே படிப்பை நிறுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்காக நாம் முறைசாராக் கல்வியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அது மாத்தடியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் முறையான கல்வி தரும் முறையிலே வசதிகளைச் செய்து தருவதற்குரிய நடவடிக்கையில் அரசு ஈடுபட வேண்டும். புதிய கல்வித் திட்டத்தைப்பற்றி நான் ஏற்கெனவே இந்த அவையிலே பேசியிருக்கிறேன். அப்போது அதிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி இருக்கிறேன். அவைகளையெல்லாம் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டுகிறேன். புதிதாக மீண்டும் நான் அதையே திரும்பச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லையென்று நான் கருதுகிறேன். அதையெல்லாம் கருத்திலே கொண்டு புதிய கல்வித் திட்ட அடிப்படையிலே கொண்டுவரப்படுகின்ற மாதிரிப் பள்ளிகளை நிறுத்தி, மாதிரிப் பள்ளிகளைக் கொண்டுவருவதன் மூலம் இங்கே இந்தியைப் புகுத்துவதற்குரிய முயற்சிகளை முறியடிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு இந்தத் தீர்மானத்தை அரசு பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அழுத்தந்திருத்தமாக வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

கல்வியை மாநிலப் பட்டியலிலே கொண்டுவருவது மிக மிக முக்கியம். அதை நெருக்கடி காலத்திலே பொதுப் பட்டியலுக்கு மத்திய அரசு கொண்டு சென்றது; அப்போது அதை மத்திய அரசே பறித்துக்கொண்டது. அதற்குப்

பிறகு ஆட்சிக்கு வந்த திராவிடப் பாரம்பரியத்திலே இருக்கக்கூடிய அ.தி.மு.க. அரசு கூட, கல்வியைப் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு போனதை எதிர்த்து திரும்பவும் மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவரக்கூடிய நடவடிக்கைகளை கடந்த 10 ஆண்டுக்காலத்திலே எடுத்து வெற்றி பெற்றிருக்க வேண்டும் . . .

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்) :** கட்சியின் பெயர் அ.தி.மு.க. அல்ல.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாற்றுத் தலைவரவர்களே, அ.இ.அ.தி.மு.க.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவரவர்களே, அகில இந்திய அண்ணா திராவட முன்னேற்றக் கழகம் என்று சொல்ல வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, சரி. அ.இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றிக்கொள்கிறேன். அதை சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்பதற்காக நான் சொன்னேன். அதில் ஒன்றும் தப்பில்லை. ஆகவே ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, அந்தக் கட்சி இவைகளை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இதில் ஒன்றும் கருத்து வேறுபாடு கிடையாது. இரண்டு கட்சிகளுக்கும் உடன்பட்ட கருத்துத்தான். இதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை . . .

**திரு. எஸ். ஆர். இராதா :** மாற்றுத் தலைவரவர்களே, சுருக்கமாக இருந்தாலும், 'அண்ணாவை' விட்டுவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, sorry, அவர்கள் ஆட்சிக்கு வந்ததுமே மத்தியப் பட்டியலிலிருந்து கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர முயன்று பெற்றிருக்க வேண்டும். இப்போது மத்திய அரசு கல்வியை மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கே கொண்டு செல்ல இருக்கிறது. இப்போது மத்திய பட்டியலிலே சேர்ப்பதற்கான முயற்சியில் அது ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அது மிகப் பெரிய ஆபத்து. மாநிலப் பட்டியலில் இருந்த கல்வியை இப்போது மத்திய அரசு தன்னுடைய தனிப் பட்டியலுக்கே கொண்டு செல்லப்போகிறது. இதிலே நாம் வாளா இருக்க இருக்க, மாதிரிப் பள்ளிகளை அனுமதிக்க அனுமதிக்க, புதிய கல்வித் திட்டத்தை நாம் ஏற்றுக்கொள்ள ஏற்றுக்கொள்ள, கல்வியை மத்திய அரசு பட்டியலுக்கே கொண்டு போய் விடும். இதனுடைய விளைவு என்ன ஆகும்



(பிற்பகல் 12-25)

என்று சிந்திக்க வேண்டும். மத்திய அரசால் கொண்டுவரப்பட இருக்கிற மாதிரிப் பள்ளியின் பெயரே "நவோதயா வித்யாலயா". தமிழ் நாட்டிற்குக் கொண்டுவரப்பட இருக்கிற மாதிரிப் பள்ளியின் பெயர் "நவோதயா வித்யாலயா". பெயரிலேயே இந்தியைக் கொண்டு வந்து இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள மக்கள் அதைப் பார்த்த உடனேயே தமிழ் உணர்ச்சி கிளரும் சூழ்நிலைதான் ஏற்படும். அப்படிப்பட்ட பெயரைப் பார்த்தாலே, மத்திய அரசு இந்த மாநிலத்திற்குள் நம்முடைய அரசின் ஒப்புதலோடு இந்தியை நுழைத்துவிட்டது என்று தான் சொல்ல வேண்டும். ஆகவே தான் இதை வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்கிறேன். எனவே அந்தப் பள்ளிகளை இங்கே அனுமதிக்கக் கூடாது. சட்ட ரீதியாக அரசு அனுமதிக்க ஆரம்பித்தால், இதற்காக என்றே ஒரு மக்கள் இயக்கம் தோன்றி, அப்பள்ளிகளின் பெயர்ப் பலகையை அழிக்கும் அல்லது உடைக்கும் சூழ்நிலை கூட ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் ஒரு எச்சரிக்கையாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிய கல்விக் கொள்கையின் ஒரு அம்சமாக இந்த மாதிரிப் பள்ளிகளைக் கொண்டுவர வேண்டும் என்று நினைத்து வெளியே சொன்னபோதே, முதன் முதலாக எதிர்ப்புக் குரல் கொடுத்ததே தமிழகம்தான். அன்று முதல் இன்றுவரை நாம் அதை எதிர்த்து வருகிறோம். நம்முடைய எதிர்ப்பு வேறு பல மாநிலங்களின் ஆதரவைப் பெற்று இன்றைக்கு தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்தில் பேசிய மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களே "எந்த மாநிலத்தின்மீதும் இந்தி திணிக்கப்பட மாட்டாது" என்ற உறுதி தந்திருக்கிறார்கள். தீர்மானம் என்று வந்துவிட்ட காரணத்தால், வேண்டுமானால் இங்கே நாம் பேசிக் கொண்டிருக்கலாம். இப்போது நாம் பிரச்சினையைத் தீர்த்துவிட்டோம். தீர்த்துவிட்ட நிலையில்தான் நாம் இந்தப் பிரச்சினையின் மீது பல்வேறு கருத்துக்களையும் சொல்லும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏதோ தமிழ்நாடு அரசு இதை ஆதரிப்பது போல், இங்கே வார்த்தைகளைச் சொல்லுவது என்பது உண்மைக்கு மாறானது. நாம் எதிர்க்கிறோம் என்பதற்கு அடிப்படைக் காரணமாகச் சொன்னதே இந்தியைத் திணிப்பதுதான். இந்தியைத் திணிக்கும் முயற்சியாக நாம் அதைப் பார்க்கிற காரணத்தால்தான், வன்மையாக நாம் அதை எதிர்த்திருக்கிறோம். எனவே இந்தியைத் திணிக்கிற முயற்சியில் நாங்கள் ஏதோ மறைமுகமாக ஆதரிப்பது என்று

சொல்வது இந்தியைத் திணிக்க விரும்பும் நண்பர்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தியாக இருக்கும். அது அவர்களைத் திருப்திப்படுத்துகிற செய்தியாக இருக்கும். இந்தியை எதிர்க்கிறவர்களுக்கு இது நல்லதல்ல. ஆகவே இந்தியை நாம் எதிர்க்கிறோம். எனவே நம்மிடையே எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை என்கிற வகையில் பேசுவது நம்முடைய கடமையாக இருக்க முடியும். எனவே அதைத் தவிர வேறு வகையில் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். சொல்லப் போனால், ஆளுகிற தரப்பானாலும் சரி, எதிர்க் கட்சித் தரப்பானாலும் சரி, ஒரே கொள்கையை உடையவர்களாக, அதாவது இந்தியை எதிர்ப்பதையே தங்களின் தலையாய நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எனக்கு இருக்கிற சங்கடம் எல்லாம் மாதிரிப் பள்ளிகளில் "இந்தி மட்டும் பயிற்சி மொழியாக இருக்கக் கூடாது. பிராந்திய மொழியும் பயிற்சி மொழியாக இருக்க வேண்டும். இந்தி மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருப்பதை நான் ஆதரிக்கவில்லை" என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்லியில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே மாதிரிப் பள்ளிகளை முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்களோ என்ற அடிப்படையில்தான் நான் இதைத் தெரிவிக்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாதிரிப் பள்ளிகளை எதிர்க்கிறோம் என்று சொல்லும்போது, புதிய கல்விக் கொள்கையையே எதிர்க்கிறோம் என்பதல்ல. எங்களைப் போன்றவர்கள் பொறுப்பில் இருக்கும்போது, அப்படிப் பேச முடியாது. புதிய கல்விக் கொள்கையைப் பொறுத்த வரையில், 100-க்கு 90 அம்சங்கள் தமிழ் நாட்டில் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மற்ற மாநிலங்களுக்கு வேண்டுமானால், அது புதிய கல்விக் கொள்கையாக இருக்கலாம். ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், புதிய கல்விக் கொள்கை என்பது நாம் ஏற்கெனவே இங்கே நடைமுறைப் படுத்திக்கொண்டிருக்கிற கொள்கையாகும்.

உதாரணமாக, 'பிரி பிரைமரி எஜுகேஷன்' என்கிறபோது, நாம் ஏற்கெனவே ஆயிரக்கணக்கான பள்ளிகளைத் தமிழகத்தில் ஆரம்பித்திருக்கிறோம். அப்படித்தான் ஏற்கெனவே நம்மிடத்தில் உள்ள இந்தப் பள்ளிகளை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. பிரி பிரைமரி எஜுகேஷனானாலும் சரி, 'பிரைமரி எஜுகேஷன்' என்றாலும் சரி, 'யுனிவர்சலைசேஷன் ஆப் எலிமெண்டரி எஜுகேஷன்'



என்றாலும் அல்லது 'கேர்ல்ஸ் எஜுகேஷன்' என்றாலும் 'அடல்ட் எஜுகேஷன்' என்றாலும், 'நான்-பார்மல் எஜுகேஷன்' என்றாலும், 'வொக்கேஷனல் எஜுகேஷன்' என்றாலும், 'டெக்னிகல் எஜுகேஷன்' என்றாலும், 'காலிஜியேட் எஜுகேஷன்' என்றாலும் அல்லது 'யுனிவர்சிடி எஜுகேஷன்' என்றாலும், இவற்றிலெல்லாம் தமிழகம் ஏற்கெனவே முன்னணியில் இருக்கிறது என்ற பெருமையை நாம் பெற்றிருக்கிறோம்.

(பிற்பகல் 12-30)

ஆக இன்னும் நல்ல முறையில் கல்வியை நடத்த வேண்டும் என்று பல வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. இதிலே நமக்குப் பிடிக்காத அம்சங்களை புதிய கல்விக் கொள்கையில் கொண்டு வருகிறார்கள் என்று சொல்லும்போது, நான் ஏற்கெனவே மேலவையிலே சொல்லியிருக்கிறேன். இந்தி மொழியைத் திணிக்கும் அடிப்படையில் மாதிரிப் பள்ளிகள் வருகின்றன என்ற காரணத்தால் மட்டுமல்ல, அவர்கள் இந்தப் பள்ளிகளை ஆரம்பிப்பதன் மூலமாக அந்த வட்டாரத்தில் இருக்கின்ற கலாச்சார உணர்வுகளை, மொழி உணர்வுகளை அழிக்க நினைக்கிறார்கள் என்ற சந்தேகம் இருப்பதால், நாம் இதை எதிர்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறேன். முழுமையாக இதை எதிர்க்கவில்லை என்று சொல்லுவதற்குக் காரணம், நல்ல பள்ளிகளை இரண்டு கோடி ரூபாய் செலவில் ஆரம்பிப்பதாகச் சொல்லும்போது, எடுத்த எடுப்பிலேயே வேண்டாம் என்று சொன்னால், ஏன் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள் என்ற நிலைமை பொது மக்கள் மத்தியிலே வரும். ஆகவே தனியாக இதை எதிர்க்கிறோம் என்பதைச் சொல்லி, அதற்கான எதிர்ப்பைத் தெரிவித்து, நம்முடைய உணர்வைக் காட்டுவது நம்முடைய கடமை. அடிப்படையிலே எல்லாவற்றையும் எதிர்ப்போம் என்றால், பொது மக்கள் மத்தியிலே இந்தி எதிர்ப்பினுடைய வலிமை குன்றும் என்பதை மனதார உணர்கிறோம். ஆகவே. இன்றும் சொல்லுகிறேன் : இந்தியை நாங்கள் எதிர்க்கிறோம், இந்தித் திணிப்பை நாங்கள் எதிர்க்கிறோம். மாதிரிப் பள்ளி என்ற பெயரில் அந்த வட்டாரத்து கலாச்சாரத்தை அழிக்கின்ற முறையில் பள்ளிகள் செயல்பட்டால், அதை எதிர்க்கிறோம். இந்தியா என்ற பெயரில் தமிழ் கலாச்சாரத்திற்கு மாறுபாடான நிலையிலே ஒரு பள்ளி நிறுவுவதை நாங்கள் எதிர்க்கிறோம். அதற்கு அப்பாற்பட்டு இரண்டு கோடி ரூபாய் செலவில் ஒரு நல்ல பள்ளியைக் கட்டித் தருவார்களேயானால், அந்த ஒரு School for talented boys என்ற அளவிலே ஏற்கிறோம். இங்கே இப்போது அது போன்ற இரண்டு பள்ளி[illegible]க் கொண்டிருக்கிறோம். அது வசதி படைத்த மாணவர்க[illegible]. அதைப்

போலவே மத்திய அரசால் இன்னுமொரு பள்ளி தரப்படுகிறது என்று சொல்லும்போது, இங்கே இரண்டு பள்ளிகளை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம் என்பதால், அதன் அடிப்படையிலே இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். நாம் இங்கே இரண்டு பள்ளிகளை நடத்துவது போல, மாவட்டத்திற்கு ஒன்று ஆரம்பித்தால், அதை நாம் ஏன் எதிர்க்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினருடைய தீர்மானம், அவர் சொல்லுகிற கருத்துக்கள் எல்லாம் இந்தி மொழித் திணிப்புக்கு எதிராக இருந்தால்தான், பயனுடையதாக இருக்கும். அந்த அடிப்படையிலே பேசித்தான் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம்.

**மாற்றுத் தலைவர் (திரு. சி. இராமலிங்கம்):** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து நான்கு உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். அவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். ஆகவே உறுப்பினர் சீக்கிரமாக முடித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், இந்த நாட்டிலே அறிமுகப்படுத்தியுள்ள புதிய கல்விக் கொள்கையில் பலவற்றை நாம் ஏற்கெனவே நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம் என்று சொன்ன கருத்தை நான் அப்படியே வரவேற்கிறேன். அதிலே தவறு இல்லை. ஆனால் இப்போது கொண்டு வந்துள்ள புதிய கல்வித் திட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளைச் சுட்டிக்காட்டுவது நம்முடைய அரசின் கடமையாக இருக்கும். நல்லவைகள் எவை என்பதை எடுத்துக்கொண்டு, அவற்றில் எவை எவற்றை ஏற்கெனவே செயல்படுத்தியிருக்கிறோம் என்பதை விளம்பரப்படுத்தி, எவையெவை நமது கொள்கைக்கு மாறாக இருக்கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். நமக்கு மாறாக உள்ளது மும்மொழித் திட்டம் என்பது மட்டுமல்ல. நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, கல்வியில் தனியார் ஆதிக்கம் அதிகரிக்கும் சூழ்நிலை இருக்கிறது; கல்விக்கும் வேலை வாய்ப்பிற்கும் இடையே தொடர்பில்லை என்ற பெயரில் படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொறுப்பைத் தட்டிக்கழித்தல்; முறைசாராக் கல்வி, தொழில்சார் கல்வி ஆகியவைகளுக்கு முறைசார் கல்வியைக் காட்டிலும் முக்கியத்துவம் அளித்தல்; ஆசிரியர், மாணவர்களது அரசியல் சிவில் உரிமைகளைப் பறித்தல்; தேசிய இனங்களின் தனித்துவத்தைப் பற்றி மௌனம் சாதித்துக் கொண்டு தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தல், மறைமுகமாக இந்தியைத் திணித்தல் என்பதையெல்லாம் சுட்டிக்காட்டி அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



இரண்டு கோடி ரூபாய் செலவில் பள்ளிகளை ஏற்படுத்தித் தருகிறார்கள் என்றால், "அந்த இரண்டு கோடி ரூபாயை எங்களிடம் கொடுத்து கல்வியைப் பெறாதவர்களுக்கு கல்வியைப் பெற வாய்ப்பை உருவாக்கித்தர எங்களுக்கு வாய்ப்புக் கொடுங்கள்" என்று இந்த அரசு கேட்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தி வேண்டாம் என்று சொல்லிவிட்டு, அதற்காகச் செலவாவதை வேறு வகையிலே எங்களுக்குத் தாருங்கள் என்று நாம் கேட்க முடியாது. அப்படிக் கேட்டால், அவர்கள் தரப்போவதுமில்லை. அது நடைபெறாத காரியம். நாம் திட்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்தத் திட்டத்தில் மாறுதல் செய்து, நம்முடைய விருப்பத்திற்கேற்ப நடத்த முன் வந்தால், அப்போது அந்தப் பணம் நமக்குக் கிடைக்கும். அப்படி இல்லாமல், வேறு வழியில் தாருங்கள் என்றால் தரமாட்டார்கள். அவர்கள் திட்டத்தை நாம் மாற்ற வேண்டும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** என்னுடைய கருத்து அது. அதை நான் வலியுறுத்திவிட்டு மேலே செல்கிறேன். மற்றவர்கள் பேச வேண்டும். இங்கே பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை விட நகராட்சிப் பள்ளிகள் நல்ல பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகளை விட தனியார் பள்ளிகள் நல்ல பள்ளிகள்; தனியார் பள்ளிகளிலே டான் பாஸ்கோ பள்ளி சிறந்த பள்ளி என்ற உணர்வுகள் இருக்கும்போது . . .

(மாற்றுத் தலைவர் திரு. மிசா கணேசன் என்கிற திரு. ஆர். கணேசன் தலைமை.)

(பிற்பகல் 12-35)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மாதிரியான எண்ணம் மக்கள் மத்தியிலே ஏன் வருகிறது? மக்கள் மத்தியிலே அந்த எண்ணம் உருவாவதற்குக் காரணம் என்ன? இப்போது டான் பாஸ்கோவாக இருந்தாலும் அல்லது கிருஸ்ட்டியன் காலேஜ் ஹையர் செகண்டரி ஸ்கூலாக இருந்தாலும், அரசுதான் சம்பளம் தருகிறது. கார்ப்பரேஷன் ஹைஸ்கூல் ஆசிரியர்களுக்கும் அரசுதான் சம்பளம் தருகிறது. ஒரே சம்பளம்தான் ஒரே மாதிரியான தகுதிதான். இருந்தாலும் கார்ப்பரேஷனிலோ அல்லது அரசுப் பள்ளியிலோ இருப்பதைவிட தனியார் பள்ளிகளிலே படிப்பு நன்றாக இருக்கின்றது என்று சமுதாயத்தில் நினைப்பு ஏற்பட்டதற்குக் காரணம் யார்?

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அரசுதான் காரணம் என்று சொல்கிறேன். நான் அதற்குரிய காரணத்தைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அரசு அல்ல அதற்குக் காரணம். பள்ளியை நடத்துகின்ற தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள்தான் காரணம். பொறுப்பை என்றைக்கு நாம் ஏற்றுக்கொள்கின்றோமோ அன்றைக்குத்தான் இந்தப் பள்ளிகள் நல்லபடியாக நடக்கும். அதை நம்பி வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கும் நல்ல கல்வி கிடைக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தம்முடைய கருத்தைச் சொன்னார்கள். தலைமையாசிரியரும் ஆசிரியர்களும்தான் காரணம் என்று அவர்கள் சொல்கின்றார்கள். அவர்களும் ஒரு காரணமாக இருக்கலாம். அவர்களே காரணம் அல்ல. அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். தனியார் பள்ளியிலே இருக்கக் கூடிய வாய்ப்பு வசதிகள், அங்கே இருக்கக்கூடிய போதனா கருவிகள் கட்டிட வசதிகள், ஆய்வக வசதிகள் மற்ற மற்ற வாய்ப்பு வசதிகளெல்லாம் அரசுப் பள்ளியிலே இருக்கின்றனவா, கார்ப்பரேஷன் பள்ளியிலே இருக்கின்றனவா? தனியார் பள்ளியிலே இருக்கின்ற ஆசிரியர்கள் பல ஆண்டுகளுக்கு அங்கேயே கவலையில்லாமல் பணியாற்றிக்கொண்டு இருக்கலாம், தொடர்ந்து பணியாற்றலாம் என்ற சூழ்நிலை இருக்கின்றது. ஆனால் அரசுப் பள்ளியிலே அரசியல்வாதிகள் நினைத்தால், 'They will be transferred என்ற நிலைதான் இருக்கின்றது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தனியார் பள்ளிகளிலே மேலாண்மை செய்யும் நிர்வாகி ஒருவர் இருக்கின்றார். ஆனால் அரசுப் பள்ளியிலே, கார்ப்பரேஷனிலே கேட்பதற்கு ஆள் இல்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அப்படியல்ல; கேட்பதற்கு பலர் இருக்கின்றார்கள். இங்கே இருக்கின்றார்கள். அங்கே தனியார் பள்ளியில் ஒருவர்தான் கேட்பார். ஒருவருக்குப் பணிந்தால் போதும். இங்கே பொதுப் பள்ளியிலே, பொதுப்பணியிலே, அரசுப் பணியிலே பணியாற்றுகின்றபோது, வெளியிலே இருக்கக்கூடிய முக்கியஸ்தர்களுக்கு, கட்சித் தலைவர்கட்கு, அதிகாரிகளுக்கு மற்ற பொதுமக்களுக்கு, அடுத்த வீட்டுக்காரருக்குக் கூட இப்படி எல்லோருக்கும் பயப்பட வேண்டும். அந்த நிலைமைதான் அங்கே வருகிறது. தனியார் பள்ளியிலே அந்த நிலைமை இல்லை. கல்வித் தர வீழ்ச்சிக்கு ஆசிரியர்கள் மட்டும் காரணம் அல்ல. ஆசிரியர்களும் காரணமாக



இருக்கலாம். ஆசிரியர்கள் திறம்படப் பணியாற்ற வேண்டும் என்பதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். நாங்கள் எங்கள் 'இன்டோர்' மீட்டிங்கில் கூட இதைப் பேசுகிறோம். இப்போது தனியார் பள்ளிகளில் இருக்கக்கூடிய வசதிகளை எல்லாம் அரசுப் பள்ளிகளில் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ரிப்போர்ட்டிலே என்ன இருக்கின்றது என்று பார்க்க வேண்டும். அது மேலவையிலே வைக்கப்பட்டிருக்கின்றது. பி.ஏ. படித்தவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள், ஹையர் செகண்டரி படித்தவர்கள் எப்படியெல்லாம் கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கின்றார்கள் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இதை யார் சொல்லிக் கொடுத்தார்கள்? இதையெல்லாம் யார் திருத்தியிருக்க வேண்டும்? அந்தக் கல்வித் தரத்திற்கு யார் பொறுப்பேற்க வேண்டும்? இந்த நிலையிலேகூட நாம் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பது என்பது தவறாகும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** இதற்குப் பொறுப்பு ஆசிரியர்தான் என்று ஒதுக்கிவிட முடியாது. ஆசிரியர்கள் சொல்லிக்கொடுத்துத்தான் அப்படி அவர்கள் பதில் சொல்கின்றார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆசிரியர்கள் மீதே எல்லாப் பழியையும் போடுவது என்பதைக்கூட ஏற்றுக் கொள்ள முடியாது. அதற்கு உரிய வசதிகளை அரசு செய்துகொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** ஜாப்-பிலேயிருந்து டிகிரியை 'டிலிங்க்' பண்ண வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் எதிர்த்தார்கள். இப்போது படிப்பிலேயிருந்து ஆசிரியர்களை 'டிலிங்க்' பண்ணுகின்ற அளவுக்கு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** ஆசிரியர்கள் மீது அமைச்சர் அவர்கள் சொல்லும் குறைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. அமைச்சர் அவர்கள் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்களா? அது எப்படி முடியும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதற்கு ஆசிரியர்கள்தான் காரணம் என்று ஏற்றுக்கொள்ள வேண்டாம். ஆனால் அந்த நிலைமைகளைச் சீர்திருத்துவோம், கல்வித் தரத்தை உயர்த்துவோம் என்ற பொறுப்பையும் கடமையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் மட்டுமல்ல. நானும் உட்பட்டுத்தான் சொல்கிறேன்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1986 மே 13

திரு. க. மீனாட்சிசுந்தரம்: இப்போதுதான் எனக்கு நிம்மதி. நாங்கள்
மட்டுமல்ல, "நானும் உட்பட" என்று அமைச்சர் அவர்களும் சொல்கின்
றார்கள்; "அரசும் உட்பட" என்ற சொல்கின்றார்கள். அதை நான்
ஏற்றுக்கொள்கிறேன். கல்வித் தரத்தின் வீழ்ச்சிக்குக் காரணம் என்ன
என்றால், அதறகு ஒரு பெரிய பட்டிமன்றமே நடத்தலாம். ஆனால் அதற்கு
ம்நரம் இல்லை. கலவித் தரத்தில் ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சிக்குக் காரணத்
மதக் குறுகிய காலத்திலே சொல்ல வேண்டுமென்றால் பெரும்பாலும்
அரசாங்கம் தான் அதற்குக் காரணம், பெற்றோர்களும் காரணம், சினிமாக்
களும் காரணம், அரசியல்வாதிகளும் காரணம், மற்றவர்களும் ஆசிரியர்களும்
கூட சில நேரங்களில் காரணமாக அமையலாம். ஆகவே இதில் ஆசிரியர்கள்
மட்டும்தான் காரணம் என்று சொல்லிவிட முடியாது. அதைத்தான் சொல்
கிறேன். ஆசிரியர்களும் கல்வித் தரத்தை உயர்த்த பொறுப்பேற்றுக்கொள்ள
வேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். அதுபோல மற்றவர்களும்
அரசும் அதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அடுத்து, ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.
மற்றவர்களும் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஒரே மாதிரியான
பாடத் திட்டத்தை மத்திய அரசு கொண்டுவருகிறது. கன்னியாகுமரி முதல்
காஷ்மீர் வரையிலே ஒரே மாதிரியான உணவு உண்டா? கன்னியாகுமரி
முதல் காஷ்மீர் வரை ஒரே மாதியான உடை உண்டா? அதைச் செய்ய
முடியுமா? அவரவர்களுக்கு என்று பண்பாடு இருக்கிறது. அவரவர்களுக்கு
என்று உணவுப் பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. அவரவர்களுக்கு என்று
அந்தந்தச் சூழ்நிலைகளுக்கேற்ப அறிவு வளர, தேய சூழ்நிலைகள் இருக்
கின்றன. எனவே அந்தந்த நிலைமைகளுக்கேற்றவாறு பாடத் திட்டத்தை
உருவாக்க வேண்டுமே தவிர, ஒரே மாதிரியான பாடத் திட்டம் என்றால் என்ன
பொருள்? தெருவிலே சர்வரோக சஞ்சீவினி என்று வைத்துக்கொண்டு,
எல்லோருக்கும் ஒரே மருந்தைத் தருவானே அதைப்போல ஒரேமாதிரியான
பாடத் திட்டம் என்று சொல்லி, இந்தியா பூராவும் கொண்டுவருகிறார்கள்
என்றால், அதை நம்மாலே எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அதைத்தான்
நான் கேட்கிறேன். மாநிலங்களின் சூழ்நிலை, அறிவு வளர்ச்சி, கலாச்சாரம்,
தொழில் வளர்ச்சி, தொழில் தேவை மற்றும் பல்வேறு நிலைமைகளுக்கேற்ப
பாடத் திட்டங்களை உருவாக்கவேண்டுமே தவிர, மத்திய அரசு ஒன்றைச்



1986 மே 13] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

சொல்லி, அப்படியே நாம் ஏற்றுக்கொள்வது என்றால், முடியுமா? மத்திய
அரசு மறைமுகமாக நம்முடைய மாநிலத்தின் கலாச்சாரம், பண்பாடு, மொழி
உணர்வு, இலக்கியங்கள் ஆகியவற்றை அழிக்க, இந்தத் திட்டத்தைக் கொண்டு
வருகிறது என்றுதான் நான் சொல்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு
மென்றால் 'காந்தி' திரைப்படம் வெளியிடப்பட்டது. அந்த 'காந்தி' சினிமாப்
படத்தில் காந்தியோடு இணைந்து நின்றவர்கள் அத்தனைபேருடைய நிகழ்ச்சி
களும் இடம் பெற்றுள்ளதா என்றால் இல்லை. வ. உ. சிதம்பரம் பிள்ளை
இடம் பெறவில்லை; பாரதியாரைப் பற்றி ஒன்றுமில்லை, வாஞ்சி ஐயரைப்
பற்றி ஒன்றுமில்லை. அதிலே பெரியார் வரக்கூடிய வாய்ப்பு வந்ததா
என்றால் இல்லை. திருப்பூர் குமரனுக்கு இடம் இருந்ததா என்றால்
இல்லை. மூதறிஞர் இராஜாஜி அதில் இடம் பெற்றாரா என்றால் இல்லை.
தென் பகுதியில் உள்ள தலைவர்களுக்கு காந்தியோடு தொடர்பில்லை என்ற
முறையில் அந்தப் படம் இருந்தது. அதைப்போல புதிய கல்வித் திட்டம்
கொண்டு வருகிறோம் என்று சொல்லி, பாடத் திட்டம் வகுப்பார்களானால்,
1 ஆம் வகுப்பிலே 'ராசு சோறு சாப்பிடுகிறான்' என்று படிக்கும் நிலைமை
இருந்தால், அவர்கள் அதிலே "பிரசாத் கோதுமை சாப்பிடுகிறான் அல்லது
சப்பாத்தி சாப்பிடுகிறான்" என்று எழுதுவார்கள். இப்படி எழுதக்கூடிய
சூழ்நிலைகளைத்தான் உருவாக்குவார்கள். அதிலே போடக்கூடிய படம்கூட
வேட்டி, சட்டையோடு போடுவார்களா என்றால் இல்லை. பஞ்சகச்சம்
கட்டி, ஜிப்பா போட்டு, தலையிலே குல்லா வைத்துத்தான் அறிமுகப்படுத்து
வார்கள். பெண்களை புடவை கட்டி அறிமுகப்படுத்துவதற்கு பதிலாக
பைஜாமா, ஷர்வானி போட்டுத்தான் அறிமுகப்படுத்துவார்கள். இதனால்
நம்முடைய மாணவர்களுக்கு நம்முடைய கலாச்சாரம், மரபு, தமிழன் என்ற
உணர்வு ஆகியவற்றை மாற்றக்கூடிய நிலைமைதான் வரும். அதிலே
அசோகனைப்பற்றி வரும். வட நாட்டில் உள்ளவர்களைப்பற்றி அதிலே
பேசப்படும். அதிலே சிலப்பதிகாரம் வருமா? திருவள்ளுவர் வருவாரா?
கம்பன் வருவாரா? 10 பாட்டு, எட்டுத் தொகை போன்ற நம் இலக்கியங்கள்
மறைக்கப்படாதா? இதெல்லாம் நடக்குமா? நடக்காதா? இதை தமிழ்
நாட்டு மாணவர்கள் படிக்கிறார்கள் என்றால், அவர்களுடைய உணர்வு
மாறக்கூடிய நிலைமை ஏற்படாதா? ஆகவே இதை இலேசாக விட்டுவிடக்
கூடாது. ஒரு பள்ளிக்கு 2 கோடி ரூபாய் மத்திய அரசு தருகிறதென்றால்,
அதை ஏற்றுக்கொள்ள முடியுமா? நமக்குப் பணம்தான் முக்கியமா?
பண்பாடு, மொழி, கலாச்சாரம் முக்கியமானவையல்லவா? இதையெல்லாம்
நினைத்துப் பார்க்க வேண்டும். பணம் கொடுப்பதால் அதை ஏற்றுக்கொள்வது

என்றால், தமிழன் என்ற உணர்வை மறக்கத் தரும் லஞ்சமாக அதை ஏற்றுக் கொண்டதாகப் பொருள்படுமென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அரசு அதை பரிசீலிக்க வேண்டும்.

கடைசியாக, ஒன்றைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இதிலே தேசிய ஒருமைப்பாடு என்று சொல்லி வருகிறார்கள். தேசிய ஒருமைப்பாடு பற்றி நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் சட்டமன்றத்திலே மொழிப் பிரச்சினை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு சொன்னதைப் படிக் கிறேன். அவர்கள் சொல்லுகிறார்கள், "குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மெம்பர்கள் 'ஒருமைப்பாடு முக்கியமா, மொழிப் பிரச்சினை முக்கியமா' என்று கேட்டார்கள். அதைத்தான் நானும் திருப்பித் திருப்பிக் கேட்கிறேன். பார்க்கிற உங்களை எல்லாம் கேட்கிறேன். என்னுடைய குரல் நெடுந்தூரம் வரைக்கும் எட்டும் என்றால் டெல்லியில் உள்ளவர்களை எல்லாம் கேட்கிறேன். தேச ஒருமைப்பாடு முக்கியமா? மொழி முக்கியமா? தேச ஒருமைப்பாடுதான் முக்கியம் என்றால், இவ்வளவு மனக்கிலேசத்தை உண்டாக்குகின்ற மொழிப் பிரச்சினையை ஏன் கிளப்பி னீர்கள்? அந்த மொழிப் பிரச்சினையை கிடங்கில் போட்டு வையுங்கள், பின்னால் பார்த்துக்கொள்ளுங்கள், ஒரு அமைதியான சூழ்நிலையில் அதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்துக்கொள்ளலாம் என்று கனம் ராஜாஜி அவர்கள் சொன்னார்களே, ஏன் நீங்கள் அதைக் கேட்கவில்லை? உண்மையிலேயே ஒருமைப்பாடு முக்கியம் என்று நீங்கள் கருதுவீர்களானால், கனடா நாட்டில் உள்ளவர்களைப் பார்க்க வேண்டும். பிரஞ்சு மொழி பேசுகின்ற மக்களும், ஆங்கில மொழி பேசுகின்ற மக்களும் இன்று அல்ல, நேற்று அல்ல, கடந்த 300 ஆண்டுகளாக அங்கே சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். 150 ஆண்டு களுக்கும் மேலாக ஒரே நிர்வாகத்தின்கீழ் ஒன்றாக இணைந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அந்த நாட்டில் க்யூபெக் பகுதியில் உள்ளவர்கள் மட்டும் தான் பிரஞ்சு மொழி பேசுகின்றார்கள். மற்ற எல்லா இடங்களிலும் ஆங்கில மொழி பேசுகின்ற மக்கள்தான் மிக அதிகமாக இருக்கிறார்கள். 150 ஆண்டு களுக்கு மேல் ஒரே நிர்வாகத்தின் கீழ் பிரஞ்சு மொழி பேசுகின்றவர்களும், ஆங்கில மொழி பேசுகின்றவர்களும் இருந்து வந்திருக்கிறபோது, இன்றைக்கு ஆங்கில மொழி பேசுகின்றவர்கள், பிரஞ்சு மொழி பேசுகின்றவர்களைப் புறக்கணிக்கிறார்கள், ஆதிக்கம் செலுத்த முன்வருகிறார்கள் என்கிறபோது, அங்கே மொழிக் கிளர்ச்சி ஏற்பட்டது, அதன் காரணமாக அந்த



(பிற்பகல் 12-45)

சர்க்கார் என்ன செய்தது? உடனே ஒரு ராயல கமிஷனை நிறுவி, அந்த ராயல் கமிஷனும் பிரஞ்சு மொழி, ஆங்கில மொழி ஆகிய இரண்டு மொழிகளுக்குமே சமஉரிமை தரப்பட வேண்டும், சம அந்தஸ்து தரப்பட வேண்டும் என்பதாகத் தீர்மானம் நிறைவேற்றியிருக் கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்வோமானால், நீங்களும் தெரிந்து கொள்வீர்களானால் நல்லது. தேச ஒருமைப்பாடுதான் தேவை என்பதை நீங்கள் மனப்பூர்வமாக நம்பினால், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வர வேண்டாமா?" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்குக் கூறியிருக் கிறார்கள். எனவே, இப்படி எல்லாம் செய்யாதீர்கள் என்று சொல்லி, மும்மொழித் திட்டத்தை எதிர்த்து, இருமொழிக் கொள்கைக்கு ஆதரவாக அன்றைக்கு கருத்துக்களை, கொள்கைகளை எடுத்துக் கூறி அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் கூறியதற்கு மாறாக, அவர்களுடைய கொள்கைக்கு மாறாக, முரணாக, அவர்களுடைய லட்சியத்திற்கு எதிராக இன்றைக்கு மாதிரிப் பள்ளிகளை அனுமதித்தால், நம் கொள்கைகளுக்கு நேர் எதிராக நிலைமைகள் வேறுபடும். ஆகவே பணத்திற்காக இத்திட்டத்தினை ஏற்றுக்கொள்ளும் நிலையை எதிர்த்து, என்னுடைய தீர்மானத்தை முன்மொழிந்து, அமைகிறேன்.

**திரு. க. சுப்பு :** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற தீர்மானத்தின் மீது ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். பாராளுமன்றத்தால் புதிய கல்விக் கொள்கை, விவாதத்திற்குப் பின், ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் தீர்மானத்தை முன்மொழிந்துவிட்டு, சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். மத்திய அரசு திறக்கவிருக்கும் மாதிரிப் பள்ளிகளின் மூலமாக இந்தி அல்லது ஆங்கிலம் வரும் என்ற அச்சம் இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக கல்வியைப் பொறுத்தவரையில், அதற்கென்று சில வரையறைகள் இருக்கின்றன. மத்திய அரசு எதைக் கொண்டு வந்தாலும், உடனே அதை சந்தேகக் கண்ணோட்டத்தோடு பார்க்கின்ற நிலை வேண்டாம் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நவோதயா வித்யாலயா என்று பெயர் வைக்கலாமா என்றும் இங்கே கேட்டார்கள். ராமகிருஷ்ணா வித்யாலயா, கலாக்ஷேத்திரா என்றெல்லாம் பெயர் வைத்திருக்கிறார்கள். அதற்காக ஒருவரும் எதிராக மறியல், போராட்டம் என்றெல்லாம் ஒன்றும் செய்யவில்லை. அந்த வகையில் ஒரு பெரிய கொள்கையை நிறைவேற்றும்போது, பெயரை மனதிலே கொண்டு

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** அதைத்தான் நானும் சொல்கிறேன். நம் முடைய கல்வித் துறையின் மூலமாக எல்லா நாட்டு வரலாற்றையும் படித்தோம். அதைப் படிக்க ஆரம்பித்த பிறகு, உடனே இந்த விவகாரத்தை ஆரம்பிக்க வேண்டுமா என்ன?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தீர்மானம் கொண்டு வந்ததன் நோக்கம் இப்போது ஏறத்தாழ நிறைவேறிய நிலையில் தான் இருக்கிறது. மாடல் பள்ளிகளைத் திணிக்கப் போவதில்லை. ஒரே மாதிரி கல்வித் திட்டத்தில், அந்தந்த வட்டார, கலாச்சார, மொழிற்கேற்ப அந்தந்த மாறுதலுக்கேற்ப அவர்கள் வைப்போம் என்று ஒத்துக்கொண்டிருக் கிறார்கள். அப்படி இல்லாவிட்டால், நாம் விடப்போவதும் இல்லை; ஆனால் அவர்கள் இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் நோக்கம், தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திற்குப் பிறகு, நிறைவேறிய நிலையில்தான் இருக்கிறோம். ஆகவே அச்சத்தோடு பேச வேண்டியதில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல் வதற்கான ஒரு வாய்ப்பாக இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம். தவிர மறு படியும் இந்தி வரப்போகிறது என்ற அச்சத்தில் பேசவேண்டாம். இந்தியை நாம் எதிர்க்கிறோம் என்ற அடிப்படையில், மாடல் பள்ளிகளை வேண்டாம் என்று நாம் சொன்னதை அவர்கள் ஏற்றுக்கொண்டுதான், பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் இந்தியைத் திணிக்கவில்லை என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், மாடல் பள்ளிகள் கிடைக்காது. இன்னொன்று, வட்டாரம், கலாச்சாரம், வரலாறு, மொழி, ஆகிய பாடத் திட்டத்தை மாற்றி அமைத்துக்கொள்ள வேண்டு மென்று, நாம் மட்டுமல்ல, வேறு பல மாநிலங்களும் சொல்லியிருக்கிறார்கள். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அச்சம் தேவை யில்லை. ஆனால் ஒரே மாதிரியாக கல்விக் கொள்கை என்று சொல்கிற போது, பாடத்திட்டத்தை மட்டும் நாம் பார்க்கிறோம். பிளஸ் 2, பிளஸ் 3 என்ற அடிப்படை நிலைமையை இந்த ஆண்டுதான் பஞ்சாப்பிலே கொண்டு வருகிறார்கள். தமிழ் நாட்டில் இருக்கிற நமக்கு இது புதியது அல்ல. நாம் ஏற்கெனவே இந்த பிளஸ் 2 போன்ற பாடத் திட்டங்களைக் கொண்டு வந்து விட்டோம். அதனால் இந்தப் புதிய கல்வித் திட்டம் நம்மைப் பாதிக்காது. நமக்குப் புதியதும் அல்ல. அவர்களுக்குத்தான் புதியது. இனிமேல் அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் அந்த மாநிலங்கள்தான் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொன்னதைப்போல், கணக்கில் வேறுபாடு இருக்க முடியாது. அங்கே கணக்கில் அதிகமான தரத் தினை வைத்துக் கொண்டிருக்கும்போது, நாம் குறைந்த தரம் வைத்திருந் தால், எதிர்காலத்தில் அவர்களுக்கும் நமக்கும் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு



வந்துவிடும். இதை நான் எல்லா சந்தர்ப்பங்களிலும் சொல்லியிருக்கிறேன். அறிவு வளர்ச்சிக்குத் தேவையான கணக்கிலும், விஞ்ஞானத்திலும் அது போன்ற வேறு சில பாடங்களிலும் எந்தவிதமான வித்தியாசமும், நமது மாணவர்களுக்கும் பிற மாணவர்களுக்கும் இருக்க நாம் அனுமதிக்கக்கூடாது. இன்னும் சொல்லப் போனால், வேறு பல வளர்ந்த நாடுகளில் என்ன தரத்தில் படிக்க வைக்கிறார்களோ அந்தத் தரத்தை நம்முடைய மாணவர்களுக்கும் பயிற்றுவிக்க வேண்டும். அப்படி ஈடுபடுகிற நேரத்தில் ஒரே மாதிரிக் கல்வித் தரததைப் புகுத்துகிறார்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. ஒரே மாதிரி தரத்தைப் புகுத்துவது நல்லதுதான். ஒரு உயர்ந்த தரத்திற்கு நாம் நமது மாணவர்களை அழைத்துச் செல்கிற முயற்சிதான் அது.

**திரு. க. சுப்பு :** அந்த அடிப்படையில்தான் நானும் சொல்கிறேன், பாடத்திட்டம் என்றால் 'ஸ்டாண்டர்டு' ஒன்றாக இருக்க வேண்டும். நம் முடைய தரம் மற்றவைகளை விடக் குறைந்ததாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அகில இந்திய ரீதியில் ஒரு தரத்தை நிர்ணயிக்கும்போது, அப்படிப் பட்ட முறைகள் வரவேண்டும். சில நேரங்களில் நமக்கு ஒரு கசப்பான நிலைமை இருக்கிறது. வடமொழி வார்த்தைகள் வரும்போது, அதை நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். இராமேஸ்வரம் என்ற வார்த்தையே வட மொழிதான். ஆனால் இராமேஸ்வரம் நம்முடைய மாநிலத்தில்தான் இருக் கிறது. காசியிலிருந்து இராமேஸ்வரம் வரை ஒரு தனி கலாச்சாரம் இருக்கத் தான் செய்கிறது. நம்முடைய தனிக் கலாச்சாரம் ஒரு பக்கம் இருக்கிறது என்றாலும், இந்தியா முழுவதற்கும் ஒரு சிறந்த கலாச்சாரம் இருக்கிறது என்பதை நாம் மறுக்க முடியாது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, எது நம்மை ஆதிக்கம் செலுத்த வருகிறதோ அதை எதிர்ப்பதில் நமக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. அதே சமயத்தில் எதைப் பார்த்தாலும், அச்சப்படுத்திக் கொண்டிருக்கவேண்டிய அவசியமும் நமக் கில்லை. இப்போது இருக்கக் கூடிய சூழ்நிலையில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த தலைவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். அதை அவர்கள் ஒத்துக்கொள்கி றார்களா என்று தெரியவில்லை. அதேமாதிரி இந்தியோடு ஆங்கிலமும் இருக்க வேண்டுமென்று கொடுக்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் நாம் எந்தவிதமான தயக்கமும் காட்டியதில்லை, அந்த அடிப்படையில் விழிப்புணர்ச்சி எப்போதும் இருந்துதான் ஆகவேண்டும். அதிலே சந்தேகமே இல்லை. எப்போதும் விழிப்புணர்ச்சியோடு இருக்க வேண்டியது நமது கடமையாகிறது.

பல நேரங்களில் மத்திய மாநில உறவுபற்றிப் பேசப்பட்டு வருவதாலும், அதுபற்றி சட்டங்கள் இருப்பதாலும், இந்தப் பிரச்சினை மாறி மாறி வரத்தான் செய்கிறது. அப்படி வரும்போது, மொழிப் பிரச்சினையாக இருந்தாலும், கல்விப் பிரச்சினையாக இருந்தாலும், அப்படிப்பட்ட பிரச்சினைகள் வரத்தான் செய்யும். காரணம் இது பொதுப் பட்டியலில் இருக்கிறது. நமக்கு அதிகமான அதிகாரம் வேண்டுமென்று கேட்கும்போது, இருப்பதையும் எடுத்துவிட்டார்களே என்று நமக்கு வேதனையாக இருக்கிறது. ஆனால் பல விஷயங்களிலும் நமக்குள்ள அதிகாரத்தை எடுத்துவிட்டார்கள். இப்போது பார்க்கிறோம், மாநிலச் சட்டமன்றத்தைக் கலைக்கலாம், மாநில அரசாங்கத்தைக் கலைக்கலாம் என்ற அதிகாரத்தை மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்த சபையைக் கலைக்கலாம் என்று சொன்னார்கள். மத்திய அரசு நேரடியாக இதைக் கலைப்பதற்கு பதிலாக, பேரவையின் மூலம் அதிகாரத்தைப் பெற்று கலைக்கிறார்கள். பேரவை இல்லாமல் இந்த அவையைக் கலைக்க முடியுமா? ஒரு வகையில் மேலவை பரவாயில்லை என்று தோன்றுகிறது. டைரக்டாக மத்திய அரசு கலைக்க முடியாது. மாநில சர்க்கார் ஒத்துக்கொண்டாலொழிய, மாநில சட்டமன்ற மேலவையைக் கலைக்க முடியாது. அசெம்பிளியை நேரடியாகவே கலைக்கலாம். அதை விட இது better அவ்வளவுதான். அந்த அடிப்படையில் சட்டங்கள் எல்லாம் பல நேரங்களில் வருகின்றன. அதைப் பயன்படுத்துவதில்தான் இருக்கிறது. நமது கொள்கை பறிபோகிறதா என்று பார்க்க வேண்டும். கலைக்க வேண்டுமென்பதை நாம் எதிர்க்கிறோம். கலைக்க வேண்டுமென்று வந்துவிட்டால், நேரடியாகக் கலைத்தால் என்ன, அவர்கள் மூலம் கலைத்தால்

(பிற்பகல் 12-55)

(மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

என்ன? கலைக்கக்கூடாது என்ற கொள்கை நமக்கு இருக்கிறபோது, அதிலே நாம் உறுதியாக இருக்க வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டம் 356 இன்படி மத்திய சர்க்கார் மாநில சர்க்காரைக் கலைக்கக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். ஆனால் மத்திய சர்க்கார் நேரடியாகக் கலைக்க முடியாத ஒன்றை, நம்மைவிட்டுக் கலைக்கிறதென்று சொன்னால், அதையும் நாம் எதிர்க்க வேண்டும்.

மொழிப் பிரச்சினையில் கூட இந்தி பேசாதவர்கள் இந்தியை விரும்பி ஏற்றுக்கொள்ளாதவரை ஆங்கிலம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அப்படியென்றால் அவர்கள் விரும்பி ஏற்றுக்கொள்வதற்கு முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று நாம் ஒத்துக் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தம்.



இந்தியை எப்படியெல்லாம் பரப்புவது என்பதை ஆராய்வதற்கு நாடாளுமன்றத்தில் ஒரு கமிட்டி இருக்கிறது. அந்தக் கமிட்டியில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரும் இருந்தார். அவரும் அந்தக் கமிட்டியில் சேவை செய்திருக்கிறார். சும்மா சொல்லக்கூடாது. இந்தியை எப்படிப் பரப்புவது என்பதற்காக ஒரு கமிட்டி. அந்தக் கமிட்டியில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர். "திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அதில் இருக்க கூடாது, இருக்க முடியாது" என்று சொல்லியிருக்கக்கூடாதா? ஆனால் சொல்லவில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் அக் கமிட்டியில் இருந்ததற்குக் காரணம் இந்தி பரப்பப்படுவதை எந்த அளவுக்குத் தடுத்து நிறுத்த முடியுமோ அதற்கு முயற்சி செய்வதற்காகத்தான்.

**திரு. க. சுப்பு:** ஆனால் அவர்கள் கமிட்டி ரிப்போர்ட்டுகளை ஒத்துக் கொண்டதாகத்தான் வரலாறு.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இந்தியைப் பரப்புவதைத் தாமதப்படுத்துவதற்காக அவர் இருந்தார்.

**திரு. க. சுப்பு:** அந்தக் கமிட்டியில் இருந்த 25 பேர்களில் அவர் ஒருவர் தான். "இந்தக் கமிட்டியில் இருக்க மாட்டேன்" என்று அவர் சொல்லவில்லை. நானும் அப்படிச் சொல்ல மாட்டேன். காரணம் அது வெளிநாடுகளுக்கு எல்லாம் போகிறது

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் கூற்றை நான் ஒத்துக்கொள்ள முடியாது. ஒரு கமிட்டி என்றால், ஒரு கருத்து வருகிறபோது, அதற்கு மாறான கருத்து நாம் கொண்டிருந்தால், அதை 'ரிக்கார்டு' செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது. அதற்காகத்தான் அவர் இருந்தாரே யொழிய, சந்தேகக் கண்கொண்டு அதைப் பார்க்கக் கூடாது.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கமிட்டியினுடைய கடமையே இந்தியை இன்னும் எப்படி எல்லாம் திணிக்கலாம் என்பதுதான். இந்தியை மேலும் நல்லமுறையில் திணிப்பதற்குப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கமிட்டிதான் அந்தக் கமிட்டி. அந்தக் கமிட்டியில் ஒருவர் உறுப்பினராக இருக்கிறார் என்றால், அதை ஒத்துக் கொண்டிருப்பதுபோல்தான் இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொல்கிறார். கமிட்டியின் நோக்கமே இந்தியைத் திணிப்பதுதான்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அக்கமிட்டியின் நோக்கம் இந்தியைத் திணிப்பதாக இருந்தாலும், அதற்கு மறுப்பு தெரிவிப்பதற்காகவே அவர் அக்கமிட்டியில் இருந்தார். இப்போது அந்தக் கமிட்டி இல்லை.

**திரு. க. சுப்பு:** துணைத் தலைவர் அவர்களே, கமிட்டி நிரந்தரமான கமிட்டிதான். திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அதிகமாக இருந்த போது ஒருவர் அக்கமிட்டியில் இருந்தார். இப்போது இல்லை. அது நிரந்தர பார்லிமெண்ட் கமிட்டி. நான் தவறாகச் சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் இந்தித் திணிப்பை மறுத்து, 'ரிக்கார்ட்' செய்ததாக வரலாறே இல்லை. இது அந்த உறுப்பினருக்கும் தெரியும். அது தவறென்று சொல்லவில்லை. வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று பார்த்து வரலாம். இல்லையா? அதற்கு ஒரு 'சான்ஸ்' இருக்கிறது. எனவே தவறே கிடையாது. "உதய சூரியன்" என்கிற பெயரை மாற்றிவிட்டோமா என்ன? உதயம், சூரியன் இரண்டுமே தமிழ் கிடையாது. . . .

**திரு. க. மீனாட்சி சுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற கருத்துக்கள் அவர் கட்சியின் கருத்துக்களா அல்லது சொந்தக் கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** ஒரு மணிக்கு முடியப் போகிறது. இன்னும் இரண்டு நிமிடங்கள்தான் இருக்கின்றன. அதற்குள் சொல்லிவிடலாம்.

**திரு. க. சுப்பு:** அதனால்தான் அவசரமாகப் போய்க்கொண்டிருக்கிறேன். அவசரமாக நாம் காலியாவதால், அவசரமாகப் போய்க்கொண்டிருக்கிறேன். அதனால் மாண்புமிகு உறுப்பினர் திரு மீனாட்சி சுந்தரம் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக் கடைசி நேரத்தில் நாம் சண்டை போட்டுக் கொள்ள வேண்டாம். இதை ஒத்தி வைத்துக்கொள்ளலாம். வெளியிலே வைத்துக்கொள்ளலாம். (சிரிப்பு) இப்படி ஒரு சந்தேகக் கண்ணோட்டத் தோடு நாம் ஏன் இருக்க வேண்டும்? இருந்துதான் என்னவாகப்போகிறது?. இன்றைக்குப் பாருங்களேன் நம் நிலையை. இதையெல்லாம் நினைத்துப் பார்த்துச் செயல்பட வேண்டும்.

ஆசிரியர் பிரதிநிதிகள் நிறைய பேர் வந்தார்கள். ஆனால் அதைத் தக்க வைத்துக் கொள்ள முடியவில்லையே. காரணம் ஆசிரியர் பிரதிநிதிகள் திரும்பத் திரும்ப அவர்களுக்கு வாய்ப்புகள் வருகிறபோது, அவர்கள் கருத்துக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்களே ஒரு



பெரிய எதிர்க் கட்சி மாதிரியாகி, இல்லாத தகாறையெல்லாம் கொண்டு வந்து, இப்போது எல்லோரையும் கூப்பிட்டுக்கொண்டு போகிற நிர்ப்பந்த நிலைமை வந்திருக்கிறது.

**திரு. அ. மாயவன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற மேலவையைக் கலைப்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் சொல்வது தான் காரணமா? இது அரசின் கருத்தா அல்லது அவரது சொந்தக் கருத்தா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு:** பொதுவாகவே இங்கு வந்து வாதாடுவதற்கு, 'ரெப்ர சன்ட்' செய்வதற்காக ஆசிரியர்களுக்கு இந்த அவையில் வாய்ப்பு கொடுக்கப் பட்டது. கட்சி அரசியல் போல அல்ல. ஆனாலும் சில நேரங்களில் இரண்டுக்கும் வித்தியாசம் இல்லாமல் எதிர்க் கட்சியை விட மோசமான அளவுக்கு மாறி, நீங்கள் செயல்படுவதென்றால், 'நேராகவே வாருங்களேன்' என்று சொல்லி இந்த முடிவுக்கு வந்துவிட்டார்கள். "இவ்வளவு எதிர்க்கிற நீங்கள் பேரவையிலேயே வந்து எதிர்த்துப் பேசுங்களேன். நன்றாக இருக்கும்." நாமும் பேரவைக்கு நின்று வரலாம். தவறு கிடையாது. மேலவை இல்லாவிட்டால் என்ன? 'ரெப்ரசன்டேஷன்'-க்குக் கொடுத்த வாய்ப்பை "அப்போசிஷன்"-க்குப் பயன்படுத்தினீர்கள். (நேரமாகிவிட்டது) இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** இந்த தீர்மானத்தின் மீதான விவாதம் அடுத்த தனி உறுப்பினர் நாளன்று தொடர்ந்து நடைபெறும்.

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (3) உரிமைக்குழு மற்றும் அவைக் குழு—ஆகியவற்றுக்கான வேட்புத்தாள் வந்து சேர வேண்டிய நாள் பற்றி.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவை உரிமைக் குழு மற்றும் அவைக் குழு ஆகியவற்றுக்கான வேட்புத் தாள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் 15-5-1986 அன்று நண்பகல் 12-00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** மேலவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை 14—5—1986 புதன்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

**(பிற்பகல் 1-00)**

## 7. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

236. தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் பட்டியலில் விவர அட்டவணையில் உள்ள தேர்வு நிலைப்-பேரூராட்சிகளின் திருநெல்வேலி மாவட்டம், நாராணம்மாள்புரத்தைச் சேர்ப்பதாக அறிவித்து, மேற்படி சட்டத்தின் II விவர அட்டவணையில் திருத்தம் செய்யப்படுவது தொடர்பாக வணிகவரிகள்-அறநிலையத் துறையில் 17—2—1986 ஆம் நாளிட்ட 170 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16 (4) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது.]

237. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு சாராயம் வழங்கல் விதிகளில் (மொத்த விற்பனை) திருத்தம் செய்யப்படுவது தொடர்பாக மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 24—3—1986 ஆம் நாளிட்ட 332 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

238. தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு அமைச்சர்கள் பயணப்படி விதிகளில் திருத்தம் செய்யப்படுவது தொடர்பாக, பொதுத்துறையின் 27—1—1986 ஆம் நாளிட்ட 147 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

239. தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 323 (5) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

240. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஐந்தாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

241. அண்ணா பொறியியல் கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச்சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].





242. தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டுக்கான கணக்குகள். (தமிழ் மற்றும் ஆங்கிலம்) [1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) ஆம் பிரிவின் கீழ் அவை முன் வைக்கப்படுகிறது].

243. தமிழ்நாடு சரக்கு போக்குவரத்து கழகத்தின் 1982-83 ஆம் ஆண்டுக்கான எட்டாம் ஆண்டு அறிக்கை. [1956 ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-எ பிரிவின் கீழ் அவைமுன் வைக்கப்படுகிறது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

* 219. கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு கிராமத்தில் கிறித்துவர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் தொடர்பாக 1—3—1982 மற்றும் 15—3—1982 ஆகிய தினங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு குறித்து ஓய்வு பெற்ற நீதிபதி திரு. பி. வேணுகோபால் விசாரணைக் குழுவின் அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

* 220. மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கும், காவல் துறையினருக்கு மிடையே ஏற்பட்ட மோதல் குறித்து விசாரிக்க மதுரை தெற்கு மாவட்ட முதன்மை செசன்ஸ் நீதிபதி திரு. வி. சேது சோலையர், விசாரணைக் குழுவின் அறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

### இணைப்பு

**(286 ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)**

தென் ஆற்காடு மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், செவலபுரி ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் 30—4—1986 அன்று 340 மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. 96 மாணவர்கள் உணவில் இறந்த பல்லி இருந்ததால் பாதிக்கப்பட்டனர்.

தகவல் தெரிந்தவுடன் தலத்துறை வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அதிகாரி மற்றும் பள்ளித்துறை ஆய்வாளரும் 96 மாணவர்களையும் செஞ்சி அரசு மருத்துவமனையில் சேர்த்து தீவிர சிகிச்சைக்கு ஏற்பாடுகள் செய்தனர். அன்று மாலை 87 மாணவர்கள் சிகிச்சைக்குப் பின்னர் வீட்டிற்கு அனுப்பப் பட்டனர். எஞ்சிய 9 மாணவர்களுக்கு மயக்கமும் வாந்தியும் ஏற்பட்டதை அடுத்து உள்ளிருப்பு நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்குப் பின்னர் மறுநாள் காலை வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். பாதிக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளும் நல்ல நிலையில் உள்ளனர்.

---

* 10—5—1986 அன்று மேலவை முன் வைக்கப்பட்டது.

[1986 மே 13

மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் மையத்திற்கு 30—4—1986 அன்று நேரில் சென்று ஆய்வு செய்தார். பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிக்கு ஏற்பாடு செய்தார்.

அந்த மையத்தில் அன்று 340 குழந்தைகளுக்கு தயாரிக்கப்பட்ட உணவு மூன்று பாத்திரங்களில் வைக்கப்பட்டிருந்தது. முதல் இரண்டு பாத்திரங்களிலே உள்ள உணவை உண்டவர்கள் பாதிக்கப்படவில்லை. மூன்றாவது பாத்திரத்தில் இறந்த பல்லி இருந்ததால் அந்த பாத்திரத்தில் இருந்த உணவை உண்டவர்கள் மட்டுமே பாதிக்கப்பட்டனர். இறந்த பல்லியைப் பார்த்ததும் உணவு வழங்குவது நிறுத்தப்பட்டது. உடனடியாக அனைவரும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இது குறித்து காவல் துறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது உணவின் மாதிரி ஆய்விற்கு அனுப்பப்பட்டுள்ளது.

அமைப்பாளர் கண்ணம்மாள், சமையலர் மண்ணம்மாள் மற்றும் உதவியாளர் லட்சுமி ஆகிய அனைவரும் உடனடியாக தற்காலிகப் பதவிநீக்கம் செய்யப்பட்டனர்.

அருகில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளி மையம் கோடை விடுமுறையினால் செயல்படவில்லை. அந்த அமைப்பாளர், சமையலர் மற்றும் உதவியாளர் ஆகியோர்களை இம்மையத்தில் பொறுப்பேற்கச் செய்து சத்துணவு வழங்குவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

143557
D
Y2 11,32 (N84
N86.2.26.1-3